# யாவும் நினதன்றோ!!!

## கோதை நப்பினை

# அத்தியாயம் 1

"**ரா**ஜாதி ராஜ, ராஜ கம்பீர, ராஜ மார்தாண்ட, தக்காணத்தை தன் வெண்கொற்றக் குடையின் கீழ் ஆண்டு கொண்டு இருக்கும் மகா கணம் பொருந்திய நவாப் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான் அவர்களே தயவு கூர்ந்து கீழே நடக்கவுள்ள மெகந்தி விழாவிற்கு எழுந்தருளுங்கள்" என்று வாயிற்காப்பான் போல் உரத்த குரலில் அறிவித்துவிட்டு "இப்படி சொன்னால் போதுமா இல்லை வேறு எதாவது சேர்த்து சொன்னால் தான் கீழே வருவிங்களா?" என்று இளக்காரத்துடன் தனக்கு எட்டு அடி தூரத்தில் கால் மேல் கால் போட்டுக்கொண்டு ஓர் கர்வத்துடன் நிமிர்ந்து அமர்திருந்தவனை பார்த்துக் கேட்டான் கார்த்திக் சச்சிதேவ்!!!

அவனின் சீண்டல்களை எந்த வித சலனமும் இல்லாமல் எதிர்கொண்ட நவாப் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான்... கார்த்திக்கின் நண்பனோ, இல்லை உடன் பிறந்தவனோ இல்லை.. சொல்ல போனால் நடக்கவிருக்கும் அந்த மெகந்தி மற்றும் சங்கீத் விழாவின் கதாநாயகனே அவன் தான்!!!

அதை விட மிக மிக முக்கியமான விஷயம் கார்த்திக்கின் தங்கையான மேக மித்ராவின் மணாளனாக போகிறவனை தான்

இப்படி நக்கலும் நையாண்டியுமாக அழைத்து வைத்தான் அந்த புண்ணியவான்!!!

மச்சானின் அழைப்பை ஏற்று எழுந்து நின்ற அந்த மகா கணம் பொருந்தியவன்.. "ராஜ குலோதுங்கவை விட்டு விட்டீங்க.. அடுத்த முறை அதையும் மறக்காமல் சேர்த்துக் கொள்ளுங்கள்" என்று முகத்தை மிக தீவிரமாக வைத்தப்படி இம்சை அரசனுக்கு மேலாக அலட்டலே இல்லாமல் பதில் அளித்ததான்!!!

இதுதான் நவாப் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான்!!!

பக்கமாக பக்கமாக எத்தனை கேட்டாலும் ஒரே ஒரு வரியில் நெற்றி பொட்டில் அடித்தாற் போல் பதில் கூறி வாயை அடைக்க வைக்கும் திறமை மிக்கவன்!!!

அவ்வளவு திமிர் மற்றும் அகங்காரத்துடன் பேசுவதற்கு காரணம் அவன் பிறந்த பரம்பரை அத்தகையது!!!

கார்த்திக் சும்மா வாய் வார்த்தைக்காக தக்காணத்தை ஆண்ட என்று கூறவில்லை.. நானூறு ஆண்டுகளாக தக்காணம் என்று சொல்லப் படுக்கின்ற ஹத்திராபாத் டெக்கானை ஆண்ட நவாப் வம்சத்தை சேர்ந்தவன் தான் இந்த ரஃபிக்!!!

ஒரு காலத்தில் உலகின் நம்பர் ஒன் பணக்கார்களின் தர வரிசையில் இருந்த அந்த நவாப் வம்சத்தை சேர்ந்தவர்கள்.. இப்போது நாட்டை ஆள வில்லை என்றாலும் கூட நவாப்

ஏளையிட் என்ற வெண் கொற்றக் குடையின் கீழ் பலதரப்பட்ட ஹோட்டல்களை நடத்தி கோலொச்சிவருகின்றனர்!!!

அதிலும் அவர்களிடம் இருந்த இருபதிற்கும் அதிகமான அரண்மனைகளை தேவையானதை மட்டும் அவர்களின் உபயோகத்திற்கு வைத்துக்கொண்டு மீதி இருந்த அரண்மனைகளை ஹோட்டல்களாக மாற்ற... ராஜாக்கள் எப்படி செல்வ செழிப்புடன் வாழ்ந்தார்கள் என்று அறிந்துக்கொள்ளவே அந்த அரண்மனைகளில் தங்குவதற்கும் அங்கு வந்து குமிந்தனர் என்றால் அது மிகை ஆகாது!!!

ஹோட்டல்கள் இப்படி என்றால் பெரும் பணக்காரர்கள் மட்டுமே வந்து சகல வசதிகளுடன் தங்க கூடிய நவாப் ஏளையிட்டின் பொட்டிக்ரீசாட்டுகளை பற்றி வெளியே தெரியாத போதும் அதற்கான புக்கிங் டைம் ஒரு வருடமாகும்!!!

ஒரு காலத்தில் பரந்த நிலத்தில் தங்கள் ராஜாங்கத்தை நிலைநிறுத்தியவர்கள்.. இன்று தொழிலில் பரந்து, விரிந்து தங்கள் ராஜாங்கத்தை நிலை நிறுக்கின்றனர் என்று அவனை பத்திரிக்கைகள்வானலாவ புகழ்ந்து தள்ளினாலும்.. வெறும் பிசினஸ் பேஜில் மட்டும்அவன் வருவதில்லை.. தினசரியில் கடைசி பக்கத்தில் வரும் ஸ்போட்ஸ் பேஜிலும் வருவான்!!!

வெற்றிகரமாக தொழிலை நடத்திக்கொண்டு வரும் நவாப் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான்.. போலோ விளையாட்டு

உலகமே தூக்கி வைத்துகொண்டாடும் தலை சிறந்த போலோ விளையாட்டு வீரனும் கூட!!!

சுயமாக நின்று இதை எல்லாம் ஜெயித்ததாக ஒரு நாளும் ரஃபிக்தம்பட்டம் அடித்துக்கொண்டது இல்லை.. இத்தனை வெற்றிக்குக்காரணம் தனக்கு எல்லா விதத்திலும் தோள் கொடுத்து உற்றதுணையாக நிற்பது சோட்டா நவாப் மிர் சித்திக் அல்வுமர் அலிகான்தான் என்று தம்பியை சேர்த்துக்கொண்டு சொல்லும் வழக்கம்உடையவன்!!!

அது நூற்றுக்கு நூறு உண்மையும் கூட.. "தம்பி உடையான்படைக்கு அஞ்சான்" என்னும் பழமொழி யாருக்கு பொருந்துகிறதோஇல்லையோ இவனுக்கு மிக சரியாக பொருந்தும்!!! அண்ணன்சொல்வதை ஏன் என்று கேள்வியே கேட்காது செய்யும் ரகம் சித்!!!

சகோதர்கள் இருவருக்குள் அத்தகைய ஒற்றுமை இருந்தாலும் உருவத்தில் இருவரும் ஒரு தாய் வயிற்று பிள்ளைகள் தானா சந்தேகம் கொள்ளும் அளவு உயரத்தை தவிர வேறு எதிலும் ஓற்றுமை படுத்தி பார்க்க முடியாது!!!

நீண்ட முகம், துளைக்கும் பார்வை, பேசாத அழுத்தமான உதடுகள், தாடி மீசை இல்லாது தினமும் ஷேவ் செய்யப்படும் கன்னம், முகத்தை எடுத்து நிறுத்தும் கூர்மையான மூக்கு, ஒட்ட வெட்டிய தலை முடி என்று ஒரு பிசினஸ் மேனிற்கே உரிய

அனைத்து லட்சனங்களும் இருந்தாலும்.. அவனின் ராஜ பரம்பரையை நிருபிக்க நடை உடை பாவனை என்று எதுவும் தேவை இல்லை... ரஃபிக்கின் ஒரு பார்வையும் அந்த பார்வையின் பொருளை பறைசாற்றும் அந்த அழுத்தமான குரலுமே போதும்!!!

நான்கு அடி தூரத்தில் இருந்தாலும் சரி... நாற்பது அடி தூரத்தில் இருந்தாலும் அவன் கண்களின் கூர்மை மனதில் ஒரு அச்சத்தை தோற்றுவிக்க தவறுவதில்லை. இதற்கே அதிகம் பேசாது கூர்மையான பார்வையை மட்டுமே கேடயமாக கொண்டு நின்றிருக்கும் அவனின் விழிகளை முதல் முறை கண்டு துனுக்குறாதவர்களே இருக்க முடியாது!!!

அவன் பார்க்கும் விதத்திலேயே விதிர்விதிர்த்து போய் உளறிக்கொட்டி கிளறி மூடுபவர்கள் தான் அதிகம்!!! அதிலும் அந்த கண்களின் கூர்மைக்கு இணையாக ஒலிக்கும் அவனின் குரலை கேட்டு பயந்து தலை தெறிக்க ஓடுபவர்கள் இன்னும் அதிகம் என்று தான் கூற வேண்டும்!!!

ரத்ததிலேயே அந்த கர்வமும் திமிரும் ஓடும் போது இப்படி பதில் சொல்வதில் என்ன ஆச்சரியம் இருக்க கூடும்!?!

கடந்த இரண்டு வாரமாக ரஃபிக்குடன் பழகியதை வைத்து.. இப்படி ஏதாவது வாயை அடைக்கும் விதமாக ஒற்றை வரி பதிலை கார்த்திக் எதிர்பார்த்தான் தான் என்றாலும் இம்முறை

அவனை வாய் அடக்க வைத்தது அவனின் பதில் அல்ல... அவன் அணிந்திருந்த உடை!!!

மாந்தளிர் பச்சையில் தங்க சரிகையிட்ட வேட்டியில்.. மிக மிக கலை நயத்துடன் ஜரிகை வேலைப்பாடு செய்யப்பட்டு இருக்க... வட இந்தியாவில் தோத்தி என்ற சொல்ல கூடிய நம்மூர் பஞ்சகஜம் கட்டிக்கொண்டு கால்களை சற்றே அகட்டி ராஜ கம்பீரமாக நின்றான்!!!

ரஃபிக்கின் உடையும், கர்வத்துடன் நின்ற விதத்தை பார்த்த கார்த்திக் மனதில் சற்று நேரத்திற்கு முன் நக்கலுக்காக வர்ணித்த எல்லா வார்த்தையும் நிஜமாகவே பொருந்தி போகிறதே என்று மனதில் தோன்றி மறைந்தது!!!

கடந்த இரண்டு வாரத்திற்கு முன்பு நிச்சயதார்த்த விழாவில் ஆரம்பித்த அவர்களின் திருமண சடங்கு இரண்டு நாளைக்கு ஒருதரம் சம்பரதாயம் என்ற பெயரில் ஊரை அழைத்து விழா அரங்கேற்றிக்கொண்டே இருக்க... கோர்ட் சூட்டில் ஆரம்பித்து எண்ணற்ற பாரம்பரிய உடையில் ரஃபிக் பவனி வந்ததை கண்டு இருக்கிறான் என்றாலும்... அப்போ எல்லாம் தோத்தி அணிந்தாலும் மேலே குர்தாவை அணிந்துக்கொண்டு ராஜ கலை சொட்ட தான் வந்து நிற்பான்.

இன்றோ வெறும் பஞ்சகஜம் மட்டும் அணிந்துக்கொண்டு மேலே ஆடை அணியாது.. தோளில் அங்கவஸ்திரத்தை

போட்டுக்கொண்டு.. தன் பறந்த வெற்று மார்ப்பில் கை அகல மரகத பதக்கத்தை கொண்ட பெரிய முத்துக்கள் கோர்த்த மாலை அணிந்து, கையிலும் தோளில் ஏதோ காப்பு மாதிரி அணிந்துக்கொண்டு நின்றவனை காண பிரமித்து நின்றான் கார்த்திக்.

எயிட் பேக்குடன் திரியும் கார்த்திக்கே "அட" என்று ஆச்சரியப்படும் அளவு உடலை கட்டுக்கோப்புடன் வைத்திருப்பதை பார்த்து அதிர்ச்சியாக தான் இருந்தது!!!

அதற்காக அவனை கார்த்திக் மாதிரி எயிட் பேக்குடன் நின்றான் என்று சொல்ல முடியாது ஆனால் போலோ விளையாட்டில் உலக அளவில் டாப் பிளேயர்களின் ஒருத்தன் என்று சொல்ல கூடிய ரஃபிக்... விளையாட்டு வீரனுக்கே உரிய முறையில் தன் ஆறு அடிக்கு மேலான உயரத்திற்கு ஏற்றவாறு உடற்கட்டுடன் இருந்தான்!!!

சும்மா இருக்கும் போதே வாலண்டிரியா போய் வம்பு வளர்ப்பான் இப்ப இந்த மாதிரி சந்தர்பம் கிடைக்கும் போது கேட்கவும் வேண்டுமா?

"உங்களை பார்த்தால் மகாபாரத நாடகத்தில் அர்ஜுனன் வேடமிட்டவன் செட்டில் இருந்து தப்பி ஓடி வந்தது போல் இருக்கு... ஒரே ஒரு சின்ன குறை... தலையில் கீரிடம் இல்லை

அவ்வளவு தான்.." என்று நக்கலாக கார்த்திக் சொல்லிக்கொண்டு இருக்கும் போதே..

"டேய்.. இதை அணிவித்து மாப்பிள்ளையை அழைத்து வா என்றால் நீ பாட்டுக்கு கையை வீசிக்கொண்டு வந்துவிட்டாயே?!?" என்று கூறியப்படி அரக்கபறக்க அறைக்குள் நுழைந்தான் கார்த்திக்கின் இரண்டாவது அண்ணன் பத்ரி சச்சிதேவ்.

பத்ரி அந்த சச்சிதேவ் குடும்பத்தின் இரண்டாவது வாரிசு. அவர்களின் பரம்பரை தொழிலான டீ ஏற்றுமதியில் தந்தைக்கு தோள் கொடுத்து சகோதரர்கள் இருவரும் உறுதுணையாக இருந்தனர். அவர்கள் குடும்ப வழக்கப்படி பத்ரி சச்சிதேவ் அலக்நந்தாவை காதல் கடிமனம் புரிந்தவன்!!!

பத்ரியின் கேள்வியை புறக்கணிக்க முடிந்த கார்த்திக்கால் அவன் கையில் இருந்த வஸ்துவை வெறித்து பார்த்தவன்... "என்னது இது?" என்றான் அரண்டுப் போய். மானசீகமாக "கடவுளே இது அதுவாக இருக்க கூடாது.." என்ற மன்றாடலுடன்.

ஆனால் அவன் திடீர் பிராத்தனையை புறக்கணித்த கடவுள் அவன் அஞ்சியதை உறுதி செய்யும் விதமாக..

"ம்ம்.. கீரிடம்.." என்று நக்கலாக மொழிந்த பத்ரி.. "இதை பார்த்தால் உனக்கு எப்படி தெரியுது?" என்று

முனுமுனுத்துக்கொண்டே அமைதியாக மாப்பிள்ளையிடம் சென்றவன் தன் கையில் இருந்த அதே பச்சை நிறத்தில் கற்கள் பதித்து வேலைப்பாடு மிகுந்த தலைப்பாகையை அவன் தலையில் வைத்துவிட்டு... மாப்பிள்ளையை பெருமிதத்துடன் பார்க்க.. கார்த்திக்கோ இந்த காட்சியை அரண்டு போய் பார்த்தான்!!!

"வாவ்!!! ஆரியா டிசைன் செய்யும் வெட்டிங் கலக்ஷனில் உங்களை இப்படியே ரேம்ப் வாக் செய்ய விடலாம் போல" என்று திருஷ்டி கழித்து கன்னத்தில் மை பொட்டு வைக்காத குறையாக அவனை புகழ்ந்து தள்ளியதை கார்த்திக்கால் வாய் விட்டு ஒப்புக்கொள்ள முடியாவிட்டாலும் மனதால் ஒப்புக்கொள்ள வேண்டியதாக தான் இருந்தது.

ஆரியா தான் அந்த சச்சிதேவ் குடும்பத்தின் மூத்த வாரிசு... அவர்களின் பரம்பரை தொழிலான ஏர்காட்டில் இருக்கும் டீ எஸ்டேட்டை பார்க்காது பேஷன் டிசைனிங் தான் ஆர்வம் என்று மும்பைக்கு சென்றவன்.. இந்தியாவின் மிக பெரிய பேஷன் டிசைனர்களின்

ஒருவனாக திகழ்பவன்!!!

தன் அத்தை மகளும், பேஷன் டிசைனருமான சௌந்தர்யாவை மணந்துக்கொண்டு மும்பையில் வசிக்க

அவர்களுக்கு ஆண் ஒன்றும் பெண் ஒன்றுமாக இரு குழந்தைகள்!!!

"சித்??" என்று கேள்வியாக பத்ரியை பார்த்து கேட்டான் ரஃபிக்.

சித் என்று அழைக்கப்படும் மிர் சித்திக் அல்வுமர் அலிக்கான் ரஃபிக்குடைய தம்பி மட்டும் அல்ல பத்ரியுடைய உயிர் நண்பன் என்றால் அதே சித்திக் கார்த்திக்கின் பிசினஸ் பார்ட்னரும் கூட!!!

பத்ரியின் தோழனாக சித்திக் சச்சிதேவ் குடும்பத்துடன் சேர்த்து ஏற்காட்டில் ஹோட்டல் தொடங்க.. அதன் தொடர்ச்சியாக கார்த்திக்குடன் சேர்ந்து இருவரும் சார்ட்டட் ப்ளைட்டில் ஈடுப்பட்டனர்.

"இன்நேரத்திற்கு ஆரியா சித்தை அழைத்து வந்திருப்பான்!!! சங்கியும் மங்கியும் நான் வரும்பொழுதே தயாராகி லாணிற்கு வந்துவிட்டார்கள்" என்று சொல்லிப்படி அவசரமாக முன்னாடி சென்றான் பத்ரி!!!

சங்கி, மங்கி வேறு யாரும் இல்லை... அந்த சச்சிதேவ் குடும்பத்தின் கடை குட்டிகள்.. பார்க்க அச்சு அசல் ஓரே மாதிரி இருக்கும் இரட்டை சகோதரிகள். சங்க மித்ரா மற்றும் மேக மித்ரா என்ற அழகான பெயரை தான் இப்படி செல்ல சுருக்கமாக அழைப்பது வழக்கம்!!!

மேக மித்ராவின் மாப்பிள்ளை தான் இந்த நவாப் என்றால் அவனின் தம்பி சித்திக்தான் சங்க மித்ராவின் மணாளன்!!!

அதாவது அலிகான் சகோதர்கள் சச்சிதேவ்வின் இரட்டையர்களை மணந்து கொள்ள விருக்கின்றனர்!!!

நட்பு என்ற உறவில் மட்டும் இருந்தவர்கள் இப்போ சங்கி மங்கியின் சகோதரிகளை அண்ணன், தம்பியை மணம் செய்துகொடுப்பதன் மூலம் மாமன் மச்சானாக உறவு மாறி இருந்தது!!!

பத்ரிக்கு விடையாக தலையை மட்டும் "ம்ம்" என்று ஆட்டியவன் அங்கே இருந்த ஆளுரய கண்ணாடியில் தன் தலைப்பாகயை சரிப்பார்த்துக்கொண்ட ரஃபிக் மெல்ல திரும்பி கார்த்திக்கை பார்த்த பார்வையில்...

"கீரிடம் கேட்ட.. இப்ப எப்படி நிற்கின்றேன் பார்" என்ற கேள்வியும்..கூடவே.. "ஹய்.. மாமா.. யூ வானா ஹேட் மீ... நான் ராஜா.. நான்ராஜா எங்கேயும் நான் ராஜா.." என்று பேக் கிரவுண்ட் மியூசிக் பாடவில்லை அவ்வளவு தான் வித்தாயாசம்!!!

மச்சான்களுக்குள் "ஹிஸ்டரி ஒர்கவுட்" ஆகவில்லை என்று தான் சொல்ல வேண்டும்!!!

பின்ன? ஒரு பெண்ணிற்கும் ஆணிற்கும் ஒத்து போகவில்லை என்றால் "கெமிஸ்டிரி ஓர்கவுட்" ஆகவில்லை என்றால்... மச்சான்கள் இப்படி கட்டி பிடித்து உருளாதாக

குறையாக அடித்துக்கொள்ள இருவருக்கும் பூர்வாங்க சரித்திரம் இருப்பதால் "ஹிஸ்டரி ஓர்கவுட்" என்று தான் சொல்ல வேண்டி இருக்கிறது!?!

அதற்குள் அவன் அருகில் வந்த பத்ரி "என்னடா வாயை பார்த்துக்கொண்டு நிற்கிறாய்?? மாப்பிள்ளையை அழைத்துக்கொண்டு கீழே வா.. எனக்கு வேற வேலை இருக்கு" என்று மடமடவென்று வெளியேறினான்.

கடந்த இரண்டு வாரமாக விழா என்ற பெயரில் மாப்பிள்ளை வீட்டாரின் வளமையை பட்டியல் இட்டு காட்டுவது போல் ஒவ்வொரு விழாவையும்.. ஹோட்டலாக மாற்றப்பட அவர்களின் அரண்மனையிலேயே விமர்சையாக கொண்டாட... பற்றிக்கொண்டு வந்தது கார்த்திக்கிற்கு!!!

இதற்கே சச்சிதேவ் ஒன்றும் சாதராண குடும்பத்தில் வந்து விடவில்லை என்ற போதிலும் இரண்டு நாளுக்கு முன் நடந்த விழாவை அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று தான் சொல்ல வேண்டும்!!!

மனதில் பொருமியதை அப்படியே வாய் வார்த்தையாக காட்டி.. "இப்ப போகலாமா? இல்லை இங்கிருந்து கீழே போவதற்கு சங்கு முழங்கி... வெண் புரவியில் அமர வைத்து ஊர்வலமாக அழைத்து போக வேண்டுமா?" என்றான் குதர்க்கமாக.

அவன் அருகில் வந்த ரஃபிக்.. "மாற்றி சொல்றிங்க" என்றான் கன அக்கரையாக.

"என்னத்தை மாற்றி சொல்கிறேன்?" என்று கேட்டபடி அவனுடன் நடத்தான் கார்த்திக்.

"வெண் புரவியில் பவனி வருவது மணமான பிறகு" என்ற அழுத்தமான பதிலால் கார்த்திக்கை கலங்கடித்தான் ரஃபிக்.

"வாட்?? யூ ஆர் கிட்டிங்??" என்றான் இம்முறை தன் அதிர்ச்சியை மறைக்க முடியாது வெடித்தவன்.. "நீங்க பண்ணறது கல்யாணம் மாதிரியா இருக்கு? நிச்சயதார்த்தம் ஆரம்பித்து அனுமார் வால் மாதிரி கடந்த இரண்டு வாரமாக சம்பரதாயம் என்ற பெயரில் அராஜகம் பண்ணிக்கொண்டு இருக்கீங்க.. ஒவ்வொரு விழாவிற்கும் கும்பமேளா மாதிரி குறைந்த பட்சம் இரண்டாரயிம் பேராவது வருகிறார்கள்.. அதுவும் நேற்று முன்தினம் நடந்தது விழாவா அது?? என்று பொருமியபடியே நடந்தவன்...

"பின்ன?" என்றான் ரஃபிக் நிறுத்தி நிதானமாக அவன் புறம் திரும்பி பார்த்து.

"நகை அணிவிக்கும் விழான்னு சொல்லி... மாநாடு மாதிரி ஊரை கூட்ட நான் கூட ஏதோ உங்க கஜானாவில் இருக்கும் நகையை எல்லாம் எடுத்து புடவையையே கட்டிக்கொண்டு நடக்க வராத மங்கிக்கு நகை கடை விளம்பரம் போல் ஆக்க

போறாங்கன்னு பார்த்தா கடைசியில் நீங்க என்ன கொடுத்தீங்க தங்கத்திலான ஒரு கொண்ட ஊசி?!? இதை கொடுக்க ஒரு விழா.. அதற்கு இரண்டாயிரம் பேருக்கு அழைப்பு வேற?? உங்க சம்பராதயத்தை மதிக்கிறேன் ஆனா அதுக்காக கொண்டை ஊசிக்கு எல்லாம் இவ்வளவு பெரிய விழா என் கற்பனைக்கு எட்டாத ஒன்று" என்று பெறிந்து தள்ளினான் கார்த்திக்.

தோளை குலுக்கிவிட்டு "நாள் நட்சத்திரம் பார்க்காமல் இரவோடு இரவாக கல்யாணம் பண்ணிக்கொள்கிறவர்களுக்கு இப்படி தான் தோன்றும்" என்றான் அமைதியாக மொழிந்தவன் கார்த்திக் அதிர்ச்சியை கண்டு காணாது போல் முன்னே நடக்கலானான்.

ரஃபிக் சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை... சச்சிதேவ் குடும்பத்தில் விசித்திரமே யாருக்கும் பத்திரிக்கை அடித்து ஊரை கூட்டி கல்யாணம் பண்ணியதே கிடையாது. அவர்கள் வீட்டில் கல்யாணம் பெரும்பாலும் இரவோடு இரவாக முடிவாகி திடீர் கல்யாணமாக நடந்து முடிந்துவிடும்.

தங்கள் காதலை உணர்ந்த பிறகு நாள் நட்சத்திரம் பார்த்து பத்திரிக்கை அடித்து ஊர் கூட்டி என்று ஜவ்வு மாதிரி மாதக்கணக்கில் இழுக்க.. அவ்வளவு பெருமை இல்லா

காரணத்தினால் சச்சிதேவ்வின் கல்யாணம் ரஃபிக் சொன்னப்படிதான் நடக்கும்.

"அதையும்தான் உடைத்து... ஊரை கூட்டி பத்திரிக்கை அடித்து கல்யாணம் பண்ணியாச்சே... நான் மட்டும் உங்களை மாற்றி கடத்தாமல் இருந்திருந்தால் எந்த பிரச்சனையும் இல்லாம் இருந்திருக்கும்!!!" என்றான் கார்த்திக் முறைப்பாக.

"ரொம்ப நன்றி" என்றான் மிக அமைதியாக!!!

தன்னை கடத்தியதற்கு நன்றி சொல்கிறவனை அப்படியே பாய்ந்து சென்று மூக்கை உடைக்க கைகள் பரபரக்க... சிரமப்பட்டு தன் கைகளை அடக்கியவனுக்கு அப்போது தான் ரஃபிக் "நன்றி" கூறியது மண்டையில் உரைத்தது!!!

எப்பயும் போல் அவனின் நக்கலான பதிலாக எடுத்துக்கொள்ள முடியவில்லை... காரணம் நக்கலுக்காக கூட "நன்றி நவிலும்" ஆசாமி இல்லை இந்த நவாப். கேட்க போனால் அவன் நன்றி கூறி இதுவரை பார்த்தது கூட இல்லை... உலகமே தனக்கு சேவை புரிய கடமை பட்டது என்னும் படியாக நடந்துக்கொள்பவனுக்கு நன்றி, மன்னிப்பு எல்லாம் அவன் டிக்ஷனரியில் இல்லாத வார்த்தைகள்!!!

அப்படி பட்டவன் நன்றி சொல்கிறான் என்றால்... இந்த நன்றிக்குள் வேறு ஏதேனும் அர்த்தம் பொதிந்து இருக்குமோ??

என்ற சந்தேகம் முதல் முறையாக தலையில் மணி அடிக்க.. ரஃபிக்கை யோசனையுடன் நோக்கினான் கார்த்திக்.

எலியும் பூனையுமாக அடித்துக்கொள்ளும் சங்கியும், சித்தும் ஒருவரை ஒருவர் காதலிக்கிறார்கள் என்ற உண்மை தன் பாட்டி நாட் நாட் செவன் மூலம் அறிந்த போது அதிர்ச்சியில் மயக்கம் வந்த போதும்... அதை விட அதிர்ச்சி தரும் விஷயமாக ஏதோ ஒரு காரணரத்திற்காக சங்கியின் காதலை சித் ஏற்க மறுக்கிறான் என்று தெரிய... இதற்கு ரஃபிக் தான் முக்கியமான காரணம் என்பதை யூகித்தவர்கள் சித்தை கடத்திக்கொண்டு வந்து மணமுடிக்க திட்டமிட்டு அந்த கடத்தலில் தம்பிக்கு பதில் அண்ணனை மாற்றி கடத்தி வந்துவிட்டார்கள் அதுவும் சச்சிதேவ்வின் பாரம்பரிய வழக்கத்தை போல!!!

அவனால் தான் சித் தன் காதலை துறந்தான் என்று யூகித்தவர்களின் எண்ணங்களை தவிடு பொடியாக்கும் விதமாக ரஃபிக்கே முன் நின்று ஏர்காட்டில் அவர்களின் காளி கோயிலில் ஊர் அறிய திருமணத்தை நடத்த ஏற்பாடு செய்ய..

விடிந்தால் திருமணம் என்ற நிலையில் சச்சிதேவ்விற்கே அதிர்ச்சி கொடுக்கும் விதமாக மங்கி என்று அழைக்கப்படும் அழுத்தக்காரி மேக மித்ராவே முன்வந்து ரஃபிக்கை மணக்க கேட்கும் படி பாட்டியிடம் கூற... வீட்டில் இருந்த அனைவருக்கும் ஹார்ட் அட்டாக் வராத குறை ஏன் என்றால்

ரஃபிக் ஏற்கனவே ஒரு பெண்ணுடன் நிச்சயம் செய்யப்பட்டு இருந்தான்.

எப்பொழுதுமே திடீர் திருமணம் செய்து உலகயே அதிர்ச்சியில் ஆழ்த்தும் சச்சிதேவ்விற்கே இந்த இரவோடு இரவு திருமண ஏற்பாடு அதிர்ச்சி தருவதாக இருந்தது என்றால் அந்த அதிர்ச்சியில் இருந்து விடுபடும் முன் எப்படி நடந்து என்றே தெரியாது... அடுத்த ஆறே மணி நேரத்தில் மேக மித்ராவின் கழுத்தில் ரஃபிக் தாலி கட்டி அவளை தன்னுடைய பேகம் ஆகி இருந்தான்!!!

கூடவே இந்த கலேபரத்திற்கு இன்னமும் கிளாமர் சேர்க்கும் விதமாக கார்த்திக் நிரல்யாவின் திருமணமும் அதே மேடையில் அரங்கேறியது வேறு விஷயம்!!!

தொழில் முறையில் சித்திக்கிடம் நெருங்கி இருந்தாலும் வாழ்க்கையில் இரண்டே முறை பார்த்த "நவாப் ரஃபிக்" சச்சிதேவ் குடும்பத்தின் மாப்பிள்ளையாக வருவான்.. அதுவும் மேக மித்ராவை கட்டிக்கொள்வான் என்று கனவிலும் எதிர்பார்த்திராத கார்த்திற்கு இவனை மாப்பிள்ளையாக ஏற்க தான் முடியவில்லை!!!

ஆக.. கடந்த இரண்டு வாரமாக இங்கே நடந்துக்கொண்டு இருப்பது நவாப் வீட்டினரின் முறைப்படி நடக்கும் வைபவமாகும்... அதுக்குதான் இந்த அக்கபோர்!!!

"ஒரு கல்யாணத்தை பன்னிரண்டு வருடத்திற்கு ஒருமுறை வரும் கும்பமேளாவை போல் நடத்த உங்களால் மட்டும் தான் முடியும்" என்றான் காட்டமாக கார்த்திக்.

"அடுத்த நவாப் கல்யாணத்திற்கு குறைந்தது இருபதைந்து வருடம் ஆகும்" என்று கும்பமேளாவையாவது பன்னிரண்டு வருடத்திற்கு ஒரு முறை பார்த்து விடலாம் ஆனால் எங்களின் கல்யாணம் பார்ப்பது அவ்வளவு சுலபம் அல்ல என்னும் ரீதியில் கர்வத்துடன் மொழிந்தான் ரஃபிக்.

இப்படிப்பட்டவன் அங்கே அவசராமாக கல்யாணம் பண்ணி வேண்டும் என்றால் ஏதோ எங்கேயோ சேராமல் இடித்தது.. இதை ஏன் இத்தனை நாளாக அவன் யோசிக்கவே இல்லை?!? அதற்கு மேல் எதுவும் பேசாது அவன் நன்றி நவின்றதற்கான காரணத்தை தீவிரமாக யோசித்தப்படி... மாப்பிள்ளை தோழனாக உடன் வர... முதல் மாடியில் இருந்து கீழே விழாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த லாணிற்கு வர கிட்ட தட்ட இருபது நிமிடம் பிடித்தது!!!

அவர்களின் அரண்மனை அத்தனை பெரியது... அதை அரண்மனை என்று சொல்லி விட முடியாது கோட்டை என்று தான் சொல்ல வேண்டும்!!!

ஊரின் வெளியே சுமார் இருபது ஏக்கர் நில பரப்பில் இருக்கும் அந்த கோட்டையை சுற்றி சின்ன சின்ன மலை

குன்றுகள் இயற்கை அறனாக பாதுகாப்பிற்கு அமைய இங்குதான் கோட்டை அமைக்க வேண்டும் என்று தீர்மாணித்து கட்டியவர்களின் புத்தி கூர்மையும் ரசனையை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது!!!

இயற்கையிலேயே சற்றே உயரமான பகுதியில் இருந்ததால் அதிக உயரம் என்று சொல்ல முடியாத மூன்று அடுக்கு மாடி கொண்டு இருந்தாலும் அதை கட்டியது பதினேழாம் நூற்றாண்டு என்று கணக்கிடும் போது அதன் வளமையை பற்றி கூறப்பட வார்த்தைகள் இல்லை!!!

ஓருவழியாக அவர்கள் லாணிற்கு வர.. நவாப் குடும்பத்தை பாதுக்காப்பை தன் வாழ்நாள் லட்சியமாக மேற்க்கொள்ளும் செக்கியூரிட்டி சீப் பீட்டரும் ரஃபிக்கை பார்த்தவுடன் வந்து சேர.. அவனை முறைத்தான் கார்த்திக்!!!

"இவன் ஒருத்தன் எப்ப பார்த்தாலும் வாலு மாதிரி" என்று முனுமுனுத்துக்கொண்டே உடன் நடந்தவனுக்கு மணமக்கள் அமர்வதற்காக சின்ன ஸ்டேஜ் அமைக்க பெற்ற இடத்திற்கு செல்ல கார்த்திற்கு அதிர்ச்சியாக இருந்தது!!!

காரணம் சின்ன குண்டு ஊசி கொடுப்பதற்கே இரண்டாயிரம் பேரை அழைத்தவர்கள் இன்று மெகந்தி மற்றும் சங்கீத் என்று சொல்ல கூடிய திருமணத்தின் மிக முக்கியமான விழா

ஏற்பாடாகி இருக்க.. அவர்கள் வீட்டு அங்கத்தினரை தவிர வேறு யாரையும் அழைக்கப்படவில்லை என்று புரிந்தது!!!

அவர்களின் குடும்ப அங்கத்தினர் மட்டுமே கிட்ட தட்ட ஐநூறு பேரை தாண்டுவார்கள் என்பது வேறு விஷயம்!!!

இவர்களை கண்டதும் மெரூன் நிறத்திலான பஞ்சகஜம் உடுத்தி, பழுப்பு நிறத்திலான குர்த்தாவை அணிந்து அதே மெரூன் நிற தலைபாகையை தாண்டி தொங்கிய முடியுடன் நின்று இருந்த சொட்டா நவாப் என்று செல்லமாக அழைக்கப்படும் மிர் சித்திக் அல்வுமர் அலிகான் புன்னைகை செய்தான்.

"அண்ணா உங்களுக்காக தான் வெயிட்டிங்" என்று அரபிக்கில் மொழிந்த சித்.. அருகில் இருந்த கார்த்திக்கை பார்த்து புன்னகை செய்தான்.

இருவரும் சேர்ந்தப்படி ஒரு அடி எடுத்து வைக்க பின்னால் இருந்து ஒரு கை ரஃபிக்கை பிடித்து நிறுத்தி செல்ல விடாது தடுத்தது நிறுத்தியது!!!

# அத்தியாயம் 2

**யா**ரோ தன் கையை பிடித்திருப்பதை உணர்ந்தவனின் உடல்.. சிறு வயது முதல் ரத்தத்தில் ஊறி இருந்த தற்காப்பு கலையின் பயிற்சியால் யோசிக்கும் முன் அவனின் கைகள் செயல்படத் தொடங்க.. லேசாக பற்றி இருந்த கையை நன்றாக பிடித்து தன் முன்னே இழுத்தான்.

இவன் இழுத்த இழுப்பிற்கு தன் மேல் மோத வந்தவனை பிடித்துநிறுத்திய ரஃபிக்... அவனைப் பார்க்க கீழே குனிய வேண்டிஇருந்தது!!!

அனுமதி இல்லாமல் அவன் கையை பிடிக்கும் தைரியம் ஒரு சச்சிதேவ் அல்லாது வேறு ஒருத்தருக்கு எப்படி வர முடியும்?? என்று நினைத்தவனின் முகம் லேசான புன்னகையின் சாயல் வந்து போக..

தன் கையை பிடித்து இழுத்தவனை கண்டு சிறிதும் பயப்படாது ஈச்ச மரம் குலை தள்ளியது போல் சுருட்டை முடியுடன், அரிசி பற்கள் தெரிய அழகாக சிரித்தான் ஆர்யாவின் மகனும் சச்சிதேவ்வின் இளைய தலைமுறையுமான துர்வா சச்சிதேவ்!!!

ஐந்து வயது மதிக்கதக்க அந்த பாலகன் அம்மாவின் அசத்தல் சிரிப்பையும் அப்பாவின் வசீகரத்தையும் கொண்டு பிறந்து இருப்பதாக பார்ப்பவர்கள் எல்லோரும் சொல்ல.. இவனுக்கு மட்டும் ஏனோ மேக மித்ராவின் சாயல் தான் பிரதானமாக தெரிந்தது!!!

இவன் பிறக்கும் போதுதான் கால்நடை மருத்தவராக இருந்த மேக மித்ரா தன் தோள்களை தட்டிக்கொண்டு அண்ணியின் பிரசவத்தை பார்க்க மனித டாக்டராக அவதாரம் எடுக்க முனைய.. ஏதோ பத்ரியின் தயவால் அது நடக்கவில்லை என்பது இங்க இருப்பவர்களில் பல பேருக்கு தெரிய வாய்ப்பில்லை என்பதை ரஃபிக் அறிவான்!!!

விலங்குளின் மேல் அபரீதமாக பிரியம் கொண்டவள் என்பதை ஊரே அறியும்... அப்படிப்பட்டவள் சுத்த சைவமாக இருப்பதும், கால் நடை மருத்துவம் படித்ததில் எந்த ஒரு ஆச்சரியமும் இல்லை!!!

ஆனால் அவைகளை பாதுகாக்க அவள் எடுக்கும் முயற்சி ஆச்சரியத்தை தாண்டி.. அதிர்ச்சி அடைய வைக்கும்!!!

அவர்கள் எஸ்டேட்டில் அடிப்பட்ட மான், நரி, முள்ளம் பன்றி என்பதை எல்லாம் கடந்து... மலை பாம்பை வீட்டிற்கு கொண்டு வந்து காப்பாற்ற முற்பட.. அதை கண்டு தலை தெறிக்க ஓடியவர்களிடம் மலை பாம்பு விஷத்தன்மை அற்றது

என்று இலவசமாக கிலாஸ் எடுத்தவள்... அவைகள் இரையை தன் பெருத்த உடம்பால் சுற்றி இருக்கி பிடித்து மூச்சு திணறடித்தது... என்று ஒரு அனோக்கோண்டா பாம்பின் கதையை கண் முன் லைல்வாக அரங்கேற்ற.. கேட்டவர்கள் மூச்சுத் திணறி.. ரத்த வாந்தி எடுக்காதது அவர்கள் செய்த பூர்வ புண்ணியம் என்று தான் சொல்ல வேண்டும்!!!

மங்கி மட்டும் அல்லாது அவளை சார்ந்தவர்களையும் விடாது.. மூத்த அண்ணியான சௌந்தர்யாவிடம் கழுகு இனத்தை சேர்த்த வல்லூரை கொடுத்தது முதல் அவளின் டிவின்ஸ் சங்கி "தனக்கு மாப்பிள்ளையை பிடிப்பதை சிம்பிக்கு பிடித்தால் தான் மணமே செய்துக்கொள்வேன்" என்று கண்டீஷன் வைக்கும் வரை வீட்டில் அங்கமாகி விட்ட செல்ல பிராணியான சிம்பான்சியை வளர்ப்பது வரை வரிசையாக அடுக்கிக்கொண்டே போகலாம்.

இப்படி சச்சிதேவ்விற்கே உரிய கிறுக்குத்தனம் மேக மித்ராவிடம் மண்டி கிடந்தாலும் சட்டென்று தன் உணர்ச்சிகளை வெளிக் கொட்டாத அழுத்தக்காரி அவள்!!!

"இரட்டையர்களான சங்கி அலை கடல் போல் ஓயாமல் பேசிக்கொண்டு இருப்பவள் என்றால் மங்கியோ ஆழ் கடல் போல் பேரமைதி" என்று இருவருக்கும் இடையிலான வேறுப்பாட்டை சித் உவமையுடன் சொல்லுவதுண்டு.

சங்கியை போல் எதையும் யோசிக்காமல் பேசும் ரகம் மங்கி இல்லை என்பதினால் அமைதியின் சொரூபமாக தெரியக்கூடும்!!!

ஆனால் அது அமைதியின் வெளிப்பாடு இல்லை அழுத்தத்தின் வெளிப்பாடு என்று பார்ப்பவர்கள் நிச்சயம் அறிய வாயப்பே இல்லை!!!

முன்பின் யோசிக்காமல் பேசும் சங்கியின் பேச்சு சரவெடி என்றால் யோசித்து பேசும் மங்கியின் பேச்சு கன்னி வெடியாகும்!!! கேட்பவர்களை ஒரு நிமிஷம் நிலைகுலைய வைக்கும் அழுத்தமும், ஆழமும் கொண்ட வல்லமை படைத்தது!!!

தன்னுள்ளே இருக்கும் உணர்வுகளை பதுக்குவதில் கூட அவள் ஆழ் கடல் மாதிரி தான். சுனாமி வந்தாலும் வெளியே தெரியாது தன்னுள் புதைத்துக்கொண்டு எதுவுமே நடக்காதது போல் வெளி தோற்றத்தில் அமைதியாக காட்சி தருபவள் என்பதை நேரடியாக அவன் கண்டு இருக்கிறான்!!!

விலங்குகளை காப்பதற்காக எந்த எல்லை வரைக்கும் போவாள் என்பதை எப்படி நேரடியாக பார்த்திருக்கிறானோ அதே போல் அவளின் அழுத்தம் எந்த எல்லை வரை போகும் என்பதையும் கண் கூடாக பார்த்திருக்கிறான்!!!

உணர்விழந்து சரியும் அளவு வலியை தாங்கிக்கொண்டது மட்டுமல்ல அதை வெளியில் காட்டாது அமைதியாக இருக்க முடியும் என்று யார் சொல்லி இருந்தாலும் நம்பி இருக்க மாட்டான்... அவளே மயங்கி தன் மார்ப்பில் சரியும் வரை!!!

இப்படி பட்டவளை ஆழ் கடல் போன்று என்று சொல்லாது வேறு எப்படி சொல்ல முடியும்??

அன்று மயங்கி விழும் அளவு வலியை தந்தது அவன் தான்... இன்று அதே போல் வலியை தந்துக்கொண்டு இருப்பதும் அவனே தான்.. ஒரே ஒரு வித்தியாசம் அன்று அவன் அதை தெரியாமல் தந்தான்.. இன்று தெரிந்தே தந்துக்கொண்டு இருக்கிறான் என்று திக்கெட்டும் சிதறி ஓடிய தன் எண்ண அலைகளை கடிவாளம் ஈட்டும்படியாக கை பிடியில் இருந்த பாலகனின் பேச்சு காதில் விழுந்தது!!!

"சித்தப்பா...." என்று என்னமோ மாத கணக்காக பார்க்காத மாதிரி அலறியப்படி ரஃபிற்கின் பக்க வாட்டில் நின்றிருந்த கார்த்திக்கை பார்த்து கையை நீட்டிக்கொண்டு தாவ்வ... தன் அண்ணன் மகனை ஆசையாக தூக்கிக்கொண்ட கார்த்திக் ரஃபிக்கை முறைத்தான்!!!

சிறுவன் கையை பிடித்ததிற்கு இப்படி ரீயாக்ட் ஆக வேண்டுமா?? என்று விழித்தவனுக்கு ஏதோ காட்சி பிழை போல் உறுத்தியது. என்னது என்று மண்டை பிரண்டியப்படி யோசித்தும்

ஒன்றும் பிடிப்படாது ஏக்க மூச்சு விட்ட கார்த்திக்.. "என்னடா?" என்றான் கையில் இருந்த தன் அண்ணன் மகனிடம்.

தன் சித்தப்பாவின் கழுத்தில் கையை மாலையாக கோர்த்துக்கொண்ட அந்த சுருட்டை முடி பாலகன் தலையை சரித்து...

"மாமா.. நீங்க தான் எங்க மங்கி அத்தையை கட்டிக்க போறிங்க?" என்றான் மழலை குரலில் கண்களை உருட்டியப்படியே ரஃபிக்கிடம் கேட்டான் அவன்.

துடுக்குத் தனம், சுட்டி தனம் என்று சச்சிதேவ்வின் எல்லாகுணாதியங்களுன் ஒரு இடத்தில் கூட நிற்காமல் துறுதுறுவென்றுதிரியும் அவனை பார்த்தவுடன் தூக்கி கொஞ்சாத ஆட்கள் ரஃபிக்மாதிரி மிக சொற்பமே!!!

அந்த பாலகன் கேட்ட கேள்விக்கு அமைதியாக "ம்ம்" என்று தலையை ஆட்டினான் ரஃபிக்.

"அப்ப.." என்று ஆரம்பித்தவன் தன் மழலை மொழியில் ஏதோ வேகமாக சொல்லிக்கொண்டே போக.. பொருள் உணர்ந்த கார்த்திக்கோ பெருமிதம் பொங்க சிரித்தப்படி கல்யாண மாப்பிள்ளைகளை இருவரையும் பார்த்தான்.

துர்வாவின் மழலையை விளங்காது ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள.. "ம்கூம்.. பேசுவதில் அப்படியே உன் சங்கி அத்தை உரித்துக்கொண்டு பிறந்து இருக்கியாடா" என்றப்படி

வாஞ்சையாக குழந்தையின் தலையை லேசாக தொட்டு கோதிய சித்.. "என்னடா சொல்றான்?" என்று கார்த்திக்கிடம் விளக்கம் கேட்டான்.

"உனக்கே தெரியும் சிம்பிக்கு அடுத்தப்படியா... இரட்டையர்களை.." என்று கார்த்திக் ஆரம்பிக்கும் போதே..

"போச்சுடா.. குழந்தையை கூட விடமாட்டிங்களாடா?" என்று எரிச்சலாக மொழிந்தான் சித்.

எதை சொல்கிறான் என்று உணர்ந்த ரஃபிக் மனதில் சிரிப்பு பொங்கிய போதும் முகத்தில் எந்த ரியாக்க்ஷனும் இல்லாமல் நின்றான்.

"அண்ணாவிற்கு தெரியும் உங்க வீட்டு வளர்ப்பு பிராணி சிம்பிக்கு அடுத்தப்படியாக நான் தான் இரட்டையர்களில் ஒருத்தரை மட்டுமே பார்த்து மற்றவர்களை அடையாளம் கண்டுக்கொண்டேன்" என்று சற்றே எரிச்சலாக முடித்தான்.

பின்ன அந்த செல்ல பிராணியான சிம்பி.. நாயோ பூனையோ அல்ல... சிம்பான்சி இனத்தை சேர்த்த மனித குரங்கு!!!

ஏற்காட்டில் அவர்கள் எஸ்டேட் சுற்றி பார்க்கும் போது மரத்தில் இருந்து தாவி அடிப்பட்டு உயிருக்கு போராடிக்கொண்டு இருந்த குட்டி சிம்பான்சியை மேக மித்ரா வீட்டிற்கு எடுத்து வர.. பின் அதுவே அவர்களின் செல்ல பிராணியாக மாறி விட்டது!!!

தன்னை பற்றி பேசிக்கொண்டிருந்த இந்த நேரத்தில் அந்த சிம்பியாகப்பட்டது.. மேக மித்ராவின் அறையில் இருந்த ஜன்னலில் தன் முகத்தை பதித்தப்படி குபானி கா மீட்டா(khubani ka meetha) எனப்படும் ஹத்திராபாத் ஸ்பெஷல் இனிப்பை கிண்ணம் கிண்ணமா கபலிகரம் செய்தப்படி ஏக்கத்துடன் விதவிதமாக விளக்குளால் அலங்கரிக்கப்பட்டுமின்னி தெறித்த லாணை வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தது!!!

ஜனத் திறல் மிகுந்த கல்யாண வீட்டில் மினி கிங் காங் மாதிரி மிரட்டலாக காட்சி தரும் சிம்பியை கண்டு பின்னங்கால் பிடரியில் அடிக்க ஓடப் போகிறார்கள் என தோன்றி அதை ரூம்மில் அடைத்தால் அவர்கள் சாதாரண மனிதர்கள்... எங்கே மனிதர்களால் சிம்பிக்கு ஆபத்து வருமோஎன்ற பயத்தின் காரணமாக அதை அறையில் பூட்டி வைத்தால் அவர்கள் சச்சிதேவ் குடும்பத்தினர்!!!

ஆக... அந்த மகானுபாவர் சிம்பியிற்கு அடுத்தப்படியாக சித்திக் தான் சகோதரிகளின் ஒருத்தியை மட்டுமே பார்த்து.. மிக சரியாக மற்றவரை அடையாளம் கண்டு பிடித்தான் என்கிறக் கதையைத் தான் அந்த பாலகன் சொல்லி இருக்கிறான்... "சித் மாமா கண்டு பிடித்த மாதிரியே... இப்ப ரஃபிக் மாமாவும் யார் மேக மித்ராவென்று கண்டு பிடிக்க வேண்டுமாம்" என்று சவால் விடுக்கும் தோரணையில் கேட்டான் கார்த்திக்.

தன் அண்ணனின் மேல் அபரிதமாக மரியாதை வைத்திருக்கும் சித்திக்.."இது என்ன பெரிய விஷயம்..." என்று ஆரம்பித்தவனின் கண்கள் அப்போதுதான் பார்வை வளையத்திற்குள் அங்கே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அலங்கார மேடையில் நின்று இருந்து சகோதரிகளின் மீது பார்வையை செலுத்தியவன் திடுக்கிட்டு நிமிர்ந்தான்.. ஏன் என்றால் அவர்கள் தலையை முக்காடிட்டு மூடி இருந்தனர்!!!

சட்டென்று தூரத்தில் இருந்து பார்பவர்கள் மரத்தில் சுற்ற வேண்டிய ஃபேரி லைட்ஸ்சை மணப்பெண்கள் மேல் சுற்றி விட்டார்களோ?!? என்று கண்களை சந்தேகம் படும்படியாக அவர்கள் உடுத்தி இருந்த லெகங்காவில் பதிக்கப்பட்டிருக்க சின்ன சின்ன கற்கள்.. திசைக்கு ஒரு நிறத்தை வாரி இறைத்து பார்பவர்களின் கண்களுக்கு மாய வித்தையை காட்டியது.

தங்கைகளின் மெகந்தி விழாவிற்காக ஆர்யாவும், சௌந்தர்யாவும் வடிவமைத்த அந்த கற்கள் பதித்த உடையை ஒருத்தி பேபி பிங்கிலும், மற்றொருத்தி வெளீர் நீலத்திலும் மிக அழகாக உடுத்தி தலையில் முக்காடிட்டு முகத்தை மறைந்திருந்தனர்!!!

"சித் ஒருவரை பார்த்து மற்றவரை கண்டு பிடித்தான்... ஆனால் ரஃபிக் இருவரையும் பார்க்காது கண்டு பிடிக்க

வேண்டும் இது தான் அவனுக்கு விடுத்திருந்த சவால்" என்றான் கார்த்திக் திருப்தியோடு.

ஆனானப்பட்ட சச்சிதேவ் கண்களை விரலை விட்டு ஆட்டியவனை சும்மா விடுவதா?!?

"ஓ!!!" என்றப்படி யோசனையுடன் மேடையில் இருந்த இருவரையும் பார்த்த ரஃபிக் முகம் எதையும் வெளியே காட்டவில்லை என்றாலும் மனதிற்குள்ஆக.. இதில் யார் என் பீவி என்று முகத்தை பார்க்காது கண்டுபிடிக்க வேண்டும் இது எல்லாம் ஒரு சவாலா? என்று நினைத்தப்படிஒரு கொட்டாவி விடாத குறையாக

"கிட்ட போகலாமா இல்ல இங்கேயே கண்டு பிடிக்க வேண்டுமா?" மிகஅலுப்பாக ரஃபிக் கேட்க... கார்த்திக் எதுவும் பேசாமல் அவனை நம்பா தன்மையுடன் பார்த்தான்.

அவன் கண்களில் இருந்த கேள்விக்கு பதில் அளிக்கும் விதமாக ஒரு நிமிடம் கூட யோசிக்காமல் வேகமாக மிக அழகாக அலங்கரித்திருந்த மேடையின் புறம் சிறு தடுமாற்றம் இல்லாமல் சென்றவன்... வெளீர் நீல நிறத்தில் உடுத்திருந்தவளின் அருகில் சென்று முகத்தில் இருந்த முக்காடை கூட விலக்காது அவளின் காதருகில் குனிந்தான்!!!

முகத்திரையை விளக்கி அது மேக மித்ரா தானா என்று அறிய விரும்பாதவனின் தன்னம்பிக்கை எத்தனை பேருக்கு

வரும் என்று தெரியா விட்டாலும்.. அதை பற்றி அக்கரை அற்றவனாக மெல்ல அவள் முன் புறம் குனிந்து.. ஏதோ பேச வாயை திறக்க... அவன் பேசுவதை கேட்க முடியாதப்படி அங்கே நடப்பதை வேடிக்க பார்த்துக்கொண்டு இருந்த அவனின் சொந்த பந்தங்கள் ஆராவரமாக கரகோஷம் எழுப்பினர்.

அந்த சிறுவன் தங்கள் நவாப்பிற்கு சவால் விட்டு இருக்கிறான் என்று உணர்ந்த நவாப்பின் சொந்தங்கள் முதல் வேலையாட்கள் வரை கைகளை தட்டி வெற்றியை கொண்டாடினர்.. ரீசல்ட்டை பார்க்காமலே!!!

ஊர் உலகம் கை தட்டிக்கொண்டு வாய் பிளந்துக்கொண்டு நிற்க.. பத்ரியோ தன் பாட்டி இருக்கும் இடத்தை தேடி சென்றவன்.. "நான் என்ன பண்ண சொன்னேன் நீங்க என்ன பண்ணி இருக்கீங்க பாட்டி??" என்று அலறினான்.

தன் மூக்கில் இறங்கி இருந்த கண்ணாடியை ஏற்றி விட்டுக்கொண்ட அவர்களின் அராஜகப் பாட்டி... "நீ சொன்னதை தான் செய்திருக்கேன்.."

"ஐய்யயோ... பாட்டி... பற்றி எரியும் ரஃபிக் கார்த்திக் இடையிலான சண்டையை அணைக்க ஏதாவது வழி செய்யுங்கள்ன்னு சொன்னால் நீங்க என்ன மங்கிக்கும் ரஃபிக்கும் சண்டைய மூட்டி விடறது மட்டுமில்லாது... மாமன் மச்சான்களுக்கு இருக்கும் பிரச்சனையை ஊதி பெரிசு பண்ண

வழி பண்ணுறிங்களே" என்றான் தலையில் அடித்துக்கொள்ளாத குறையாக.

"சோட்டா பட்சா" என்று பாட்டி பத்ரியை வினையமாக அழைக்க..

"என்னது சொக்காயில் பச்சடியா?!?" என்று அலறியப்டி தன் அண்ணன் வடிவமைத்த ஆடையை சுற்றியும், முற்றியும் அவசரமாக பார்த்தான் பத்ரி!!!

"என் ஹிந்தி ஒன்று அவ்வளவு மோசம் இல்லை... நடிக்காதடா சின்ன பயலே" என்று பத்ரியின் தலையில் லேசாக தட்ட அப்போதுத்தான் ஆரியாவும் அங்கே வந்து சேர்ந்தான்!!!

"என்ன நாடகம் இது? நீங்க தான் ஏதோ பண்ணுறிங்கன்னு புரியுது" என்ற கூறிய ஆரியா தன் நீண்ட முடியை உச்சந்தலையில் ஒரு குடுமியை இட்டு முடிந்திருந்தான்!!

"இந்த நம்பூதிரி ஹேர் ஸ்டைலை பார்த்து விட்டு எத்தனை பேர் இப்படி திரியப்போகிறார்களோ??" என்று அலுப்பாக நினைத்தப்படி "இது பாட்டி வேலைன்னு உனக்கும் தெரிந்துவிட்டதா?" என்றான் தலைக்கு மேல் போய்க்கொண்டு இருக்கும் பிரச்சனைக்கு மனதை திருப்பியப்படி.

"உனக்கு புரிந்து என்ன பயன்?? புரிய வேண்டியவனுக்கு புரிய வேண்டுமே" என்றார் அலட்சியமாக பாட்டி.

"முதல்ல எனக்கு புரிய வைங்க" என்றான் பத்ரி

"இந்த மாதிரி ஒரு டெஸ்ட் வைத்தால் ரஃபிக் சரியா கண்டு பிடித்துவிட மாட்டாரா?" என்றார் பாட்டி.

"அதே தான் நானும் கேட்கிறேன் கண்டு பிடித்துவிடுவாரா?" என்று கேட்டான் ஆர்யா சற்றே யோசனையுடன் மேடையை பார்த்து..

"ஏய் ஏன்டா இப்படி பயம் முறுத்துற?!? என்று அரண்டு போய் பாட்டியை பார்த்தவன் . "அவன் கண்டு பிடித்தது மங்கி தானே?" என்று பயத்தில் இதயம் எகிரி துடிக்க பாட்டியிடம் கேள்வி கேட்டான் பத்ரி.

"நல்லா கேட்டியே.. எனக்கு எப்படி தெரியும்? நான் என் கொள்ளு பேரனுடன் பிசியா இருந்ததால் மத்தியத்தில் இருந்து அவர்களை நான் பார்க்கவே இல்லை.." என்றார் இறங்காத கண்ணாடியை ஏற்றிவிட்டப்படி .

"பாட்டீடீடீ... இப்படியே பேசி என்னை கொலைகாரன் ஆக்காதிங்க.. ரஃபிக் சரியாக தானே கண்டுபிடித்திருக்கிறான்?" என்றான் பத்ரி படபடப்பு அதிகமாக .

"என்னடா.. உன் தங்கச்சி ஒருத்தனை கல்யாணம் பண்ணிக்கொள்கிறாள் என்றாள் இருவருக்குள்ளே உள்ள வித்தியாசத்தை கூட கண்டு பிடிக்க முடியாதவனையாக கட்டிக்கொள்வாள்?" என்று தலையில் அடித்துக்கொண்டு கேட்டவர்.. "இந்த டெஸ்ட்.. மாப்பிள்ளைக்கு எந்த அளவு

மங்கியை தெரியும் என்பதை உன் மரமண்டை தம்பிக்கு தெரிய படுத்த" என்று சொல்லிக்கொண்டு இருக்கும் போதே அங்கே அதே மரமண்டை தம்பி வந்து சேர்ந்தான்.

"ஏதோ சரி இல்லை பாட்டி" என்றான் வந்ததும் வராததுமாக.

"என்னது டா?" என்றான் பத்ரி பதறி போய்.

"இல்லை ஏதோ எங்கோ நான் மிஸ் செய்கிறேனோ.."என்று தீவிரமாக முகத்தை வைத்துக்கொண்டு சொல்லும் போதே..

"நீ மிஸ் பண்ணுவது அங்கே நடக்கும் நிகழ்வைதான்.. திரும்பி பார்டா.. மாப்பிள்ளை சரியா மங்கியை கண்டு பிடித்துவிட்டார்" என்றான் பெருமிதாக. முகத்திரையின் பின்னால் இருப்பது மங்கியாக இருக்க வேண்டும் என்ற அவசர பிராத்தனையுடன்!!!

அந்த பக்கம் தலையை கூட திருப்பாத கார்த்திக் "அது எல்லாம் கண்டு பிடித்து விடுவான் என்று தெரியும்" என்று அலட்சியமாக பதில் அளித்தவனை விசித்திரமாக பார்த்தினர் சகோதர்கள்.

"எப்படி கண்டு பிடித்து விடுவான் என்று தெரியுமா?" என்றான் ஆர்யா.

"ஒன்றை மறந்து விட்டாய் நானும் சச்சிதேவ் தான்டா... இரட்டையர்களை பிரித்து பார்க்க தெரியாதவனை மங்கி கல்யாணம் பண்ணிப்பாளா??" என்றான் மிக சாதாரணமாய்.

சகோதரர்களை ஒருவரை ஒருவர் அர்த்தம் பொதிந்த பார்வையை பகிர்ந்துக்கொள்ள "அதுதான் தெரியுது இல்லை பின்ன ஏன்டா மாப்பிள்ளையிடம் எப்ப பார்த்தாலும் சண்டைக்கு மல்லுக்கு நிற்கிற?!?" என்றான் பத்ரி.

"என் கேள்வி எல்லாம்... அவர்களுக்கு முன்பு இருந்த பழக்கத்தை பற்றியது அல்ல... அந்த பழக்கத்தை அவள் இப்ப தொடர விரும்பிகிறாளா என்பது மட்டும்தான்." என்றான் திடமாக கார்த்திக்.

அண்ணன்கள் மூவரில் கார்த்திக் தான் தங்களைகளின் பர்சனல் பாடிகாட். ரோட்டில் போகிறவன் வழி தெரியாமல் தங்கைகளிடம் விலாசம் கேட்டதை அறிந்தால் ஊருக்குள் சென்று தேடி கண்டு பிடித்து மூக்கில் குத்தி விட்டு தான் மறுவேலை பார்ப்பான் என்பது ஊர் அறிந்த ரகசியமாகும்!!!

இப்படி கார்த்திக் பஞ்சர் செய்து விட்டு வரும் மூக்கை மங்கி பஞ்சர் ஒட்டி படிக்காமலே மனித டாக்டராகி விட்டாள் என்பது வேறு விஷயம்!!!

"என்னடா உளற? பிடிக்காமலா இந்த கல்யாணத்தை முடிக்க சொன்னா?" என்றான் ஆர்யா

"அண்ணா... மங்கி நினைத்ததை நினைக்கும் நேரத்தில் செய்யும்ஆளா? வார்த்தையை கூட தவற விடும் ஆள் இல்லை..அப்படிப்பட்டவள் விடிந்தால் சங்கியின் கல்யாணம் என்னும்நிலையில் இரவோடு இரவாக நான் ரஃபிக்கை கல்யாணம்பண்ணிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.... நீங்கள் போய்மாப்பிள்ளையை கேளுங்கள் என்றால் என்ன அர்த்தம்? அப்படியேநம் வழக்கப்படி காதல் மேவிட கல்யாணம் செய்ய சொல்லி கேட்டாள் என்று வைத்துக்கொண்டாலுமே.. பின்னே ஏன் இந்த இரண்டு வாரத்தில் சங்கியின் முகத்தில் தெரியும் சந்தோஷத்தையோ, பூரிப்பையோ குறைந்த பட்சம் ஒரு சிரிப்பை கூட மங்கி முகத்தில் ஏன் காணவில்லை??" என்று தன் தரப்பு கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனான் கார்த்திக்.

அந்த கேள்வியில் இருந்த உண்மை சகோதர்கள் இருவரையும் வாய் அடைக்க செய்த போதும் பாட்டி நாட் நாட் செவனோ..

"மங்கி பேசுவதில் கூட யோசித்து பேசுபவள் என்று சொல்லி விட்டு இப்ப இப்படி ஒரு கேள்வி கேட்டால் உன் மூளை தூக்கி எங்க வைக்க??ஒன்று புரிந்துக்கொள் கார்த்திக்... மங்கி மாதிரி நின்று நிதானமாகயோசித்து செய்யும் ஆள்... கல்யாண விஷயத்தை திடுதிப்பென்றுயோசிக்காமல் செய்வாளாடா?" என்று நெற்றியில் அடித்த மாதிரி கேள்வி கேட்ட பாட்டி..

"கார்த்திக் நீ இதை பார்க்கும் முறையே தப்பு.. அவர்களுக்கு ஏதோ பிரச்சனை இருக்கு என்று நானும் ஒத்துக்கொள்கிறேன் ஆனா.. அதில் நாம் தலையிட்டோமே என்றால் சின்னதாக இருக்கும் பிரச்சனை குடும்ப பிரச்சனையாகிவிடும்... அவள் பிரச்சனை அவளே தீர்த்துக்கொள்வாள்... விணா குழப்பிக்கொள்ளாதே... அத்தோடு உனக்கே தெரியும் அவளுக்கு புடவை கட்டி நாலு அடி கூட சேர்ந்து நடக்க வராது.. அப்படி பட்டவளை கடந்த இரண்டு வாரமாக தினத்திற்கு நான்கு புடவை கட்டி அவிழ்த்து நகை மாற்றி இருபத்தி நாலு மணி நேரமும் அலங்கரத்திக்கொண்டே இருப்பது பத்தாதென்று வீட்டில் ஐநூறு பேர் எந்த நேரமும் இருந்துக்கொண்டே இருந்தால் அவள் எப்படி நார்மலாக இருக்க முடியும் என்று நினைக்கிறாய்?!?" என்று கேள்வியை அள்ளி வீச கார்த்திக் பதில் சொல்ல வழி இல்லாது தலையை தான் ஆட்ட வேண்டி இருந்தது!!!

அதை பற்றி மேலே பேசும் முன் "அங்கே பார்" என்று பாட்டி காட்ட.. தலையை குனிந்து தன் தங்கையின் காதில் எதையோ ரஃபிக் சொல்லிக்கொண்டு இருந்தான்.

ஒரு வார்த்தையில் பதிலளிப்பவன் நவாப் என்று உலகத்திற்கே தெரியும் போது... பேசா மடந்தையாக நின்றுக்கொண்டு இருந்த மேக மித்ராவிடம் இவனே வலிய

சென்று பேசுறான் என்றால்.. நம்புவதை சிரமமாக தான் இருந்தது!!!

பாட்டிக்கு மட்டுமா சிரமமாக இருந்தது அங்கே குழுமி அவனின் உறவினர்களுக்கு கூட நம்புவதற்கு சிரமமாக இருந்தது என்றால் அதை விட அப்படி என்ன காதில் குனிந்து பேசும் அளவு ரசசியம் பேசினான் என்பதை கேட்க அதை விட ஆர்வமாக இருந்தனர் அவனின் சுற்றத்தார்!!!

யார் என்ன நினைக்கிறார்கள் என்பதை பற்றி அக்கரை அற்றவனாக குனிந்த ரஃபிக் "ஆயிரம் பேருக்கு மத்தியில் மறைந்து உட்கார்ந்திருந்த உன்னை கண்டு பிடித்தவன் நான் என்று தெரிந்த பின்னும்.. இப்ப எதை நிருபிப்பதற்காக இந்த ஜோதா அக்பர் சீன்?" என்றான் பொங்கி வழிந்த அலட்சியத்துடன்!!!

"எதையும் நிருபிக்க இல்லை.. உங்களை காப்பாற்ற.." என்று மூடி இருந்த திரையின் வழியாக பதில் வந்தது மேக மித்ராவிடம் இருந்து.

"காப்பாற்றவா?? யாரிடம் இருந்து?" என்றான் வரவழைத்துக்கொண்ட சுவாரசியத்துடன்!!!

"எதுவுமே தெரியாத மாதிரி பில்டப் கொடுக்க வேண்டாம் ரஃபிக்... பத்துநாட்களாக என் கார்த்திக் அண்ணாவும் நீங்களும் கட்டி பிடித்து புரளாத குறையாக சண்டை

போட்டுக்கொள்கிறிங்கன்னு தெரியும்... உங்களுக்கு அவரை பற்றி தெரியாது... அவர் கோபம் வந்தால் மூக்கை உடைத்து விட்டு தான் காரணம் கேட்கும் ரகம்.. இத்தனை நாள் அடக்கிவாசிப்பது கூட என் அண்ணன்களினால் தான்... எனக்கு இந்த கல்யாணத்தில் இஷ்டமில்லை என்ற சின்ன சந்தேகம் வந்ததோ.. அவ்வளவுதான்..." என்று பொறிந்து தள்ளினாள் முக திரையில் அப்பால் இருந்த மேக மித்ரா!!!

அவளின் முகத்தை பார்க்காத போதும் அந்த குரலில் தெரிந்த அனலை வைத்தே அவளின் கோபத்தின் அளவை ஊகித்தவனுக்கு அவளின் ஜிவு ஜிவு என்று முகம் சிவந்து, கண்களில் தெரிக்கும் தனலையும், தலை ஆட்டி பேசும் போது கற்றையாக அவிழ்ந்து விழும் அவளின் நீண்ட கார் கூந்தலையும், காதில் அணிந்திருக்கும் மீன் கம்மலையும் காண ஆசை எழுந்த போதும்... கையை பிசைந்தப்படி நின்ற அவளை பார்த்தவனின் கண்கள் ஹாசியத்தின் சாயல் வந்து போக..

அவள் சொல்லாது விட்ட காரணத்தை மிக தெளிவாக புரிந்துக்கொண்டவன்.. "ஆக.. மச்சான் எங்கே என் மூக்க உடைத்து விடுவாரோ என்று என் மேல் கரை காண முடியாது காதலால் கசிந்துருகி தான் நீ இப்படி சீன் பண்ணி என்னை உனக்கு எவ்வளவு தூரம் தெரியும் என்று சொல்லாமல் சொல்லி

இருக்க இல்லையா??" என்று அந்த தூரத்தை வெகுவாக இழுத்து ஒரு மார்க்கமாக சொல்லி வைத்தான் ரஃபிக்.

# அத்தியாயம் 3

அவளாக வாய் விட்டு சொல்லாதக் காரணத்தையும் மிக தெளிவாக புரிந்துக்கொண்டு.. "ஆக.. மச்சான் எங்கே என் மூக்க உடைத்து விடுவாரோ என்று என் மேல் கரை காண முடியாத காதலால் கசிந்திருகி தான் நீ இப்படி ஒரு சீன் பண்ணி எனக்கு உன்னை எவ்வளவு தூரம் தெரியும் என்று சொல்லாமல் சொல்லி இருக்க இல்லையா??" என்று அந்த தூரத்தை இழுத்து ஒரு மார்க்கமாகச் சொல்லி வைத்தான்.

"காதலால் கசிந்துருகி இல்லை... உங்க மூக்கில் குருதி கசிந்திருகி ஓட.. தாலி கட்டிக்கொள்ள வேண்டாமே.." என்று அவன் முகத்தில் அடித்தாற் போல் பதில் சொல்லிக்கொண்டு இருக்கும் போதே..

"மேகி... எங்க முறைப்படி இங்க தாலி கட்டும் பழக்கம் இல்லை....என்பதை நீ மறந்துவிட்டாயா? இல்ல...." என்ற போது அவன் குரலில் எள்ளலும், கூடவே ஏதோ ஒன்று மறைந்து இருக்க அது என்னவாகஇருக்கும் என்று கண்டறியும் மன நிலையில் அவள்இருக்கவில்லை.

"ஸ்ஸ்... இதை எப்படி மறந்தாள்??" என்று தன்னை தானே திட்டிக்கொண்டு அதிர்ச்சியுடன் தலையை உயர்தியவளுக்கு

கழுத்தை இருக்கி பிடித்திருந்த சொக்கர் நெக்லஸ் தலையை சுதந்திரமாகத் திருப்பக் கூட முடியாதப்படி கவ்வி இருக்க... அதற்கு செட்டாக காதில், இடுப்பில், கையில் என்று எல்லா இடத்திலும் அணிகலன்கள் பூட்டி இருக்க.. இது போதாதென்று கண்ணை மறைக்கும் இந்த முக்காடு வேறு இட்டு இருந்தார்கள்!!!

இரண்டு அடி முன்னால் நின்று இருக்கும் ரஃபிக்கும் கூட மழமழவென்று நிழல் உருவமாக தெரிய... அவனை பார்த்து முறைக்க கூட முடியாதபடி அந்த திரை மறைக்க.... கோபத்தில் கை விரல்கள் ஒன்றை ஒன்று பிசய ஆரம்பித்தாள்!!!

அந்த சைகையை பார்த்தவனின் கண்களில் சிரிப்பு நன்றாகவே தெரிய... "கேப்பரி வேண்டுமா?" என்றான் மிக சரியாகக் கணித்து.

கோபம் வந்தால் எல்லோரும் கையை ஆட்டி ஆவேசமாக பேசுவது தானே இயல்பு.. ஆனால் மேக மித்ராவோ தன் கேப்பரி பேன்ட் பாக்கெட்டில் கையை விட்டுக்கொண்டு தான் பேசுவாள்!!! அதனால்தான் அப்படி கேட்டு வைத்தான் ரஃபிக்.

மேக மித்ராவின் உடன் பிறந்தவள் சங்கி என்றால் அவளுடன் ஒட்டிக்கொண்டு இருப்பது கேப்பரியாகும்!!!

காலை ஹாஸ்பிட்டலுக்கு போகும் போது கேப்ரி ஜீன்ஸ் அணிந்தால்.. இரவில் தூங்கும் போது கேப்பரி நயிட் பேன்ட்டாக மாறி இருக்குமே தவிர மற்றப்படி கேப்பரியை தவிர்த்து வேறு

உடை தரித்தாள் என்றாள் அவர்கள் வீட்டில் ஏதோ விசேஷம் என்று பார்ப்பவர்கள் யூகித்துக்கொள்ளலாம்!!!

இளக்காரமாக பேசியவனுக்கு முகத்தில் அறையும் விதமான பதிலை மூளையை கசிக்கி யோசித்தாள் மேக மித்ரா... இன்னும் வேகமாக விரல்களை பிசைந்தப்படி!!!

தன் பாட்டியை மிஞ்சும் அளவு ஒட்டு கேட்பதில் ஆர்வம் கொண்டவளான சங்கிக்கு.. அது எப்படி நான்கு அடி இடைவேளை இருப்பவர்களால் இப்படி ரகசியம் பேச முடிகிறது என்று அவர்களின் சம்பாஷனையை கேட்க முயன்று தோற்றுக்கொண்டு இருந்தவளின் காதில் ரஃபிக் கடைசி வார்த்தை மட்டும் காதில் விழ...

"என்ன அத்தான்... கேப்பக் களியைப் பற்றி அவளிடம் போய் கேட்கிறீங்களே??" என்று "கேப்பரியை" கேப்ப களியாகக் காதில் வாங்கிக்கொண்டு பதில் அளித்த சங்க மித்ரா தொடர்ந்து..

"குதிரை சாப்பிடும் கொள்ளுக்கும், ஓட்ஸ்சிற்கும் வித்தியாசம் கேளுங்கள், டாண் என்று பதில் சொல்லுவாள்.. ஆனா இவள் சாப்பிடும் இட்லி அரிசிக்கும், சாப்பாட்டு அரிசிக்கும் வித்தியாசம் கேளுங்க... பேந்த பேந்த விழிப்பாள்" என்று தன் உடன் பிறந்தவளின் அருமை பெருமையை அளந்தாள் சங்கி.

"அதுமட்டுமா? ஜாமூனுக்கும், திராட்சைக்கும் வித்தியாசம் தெரியாது.. பலா பழத்திற்கும், சிக்கனுக்கும் வித்தியாசம் தெரியாது" என்று சங்கிக்கு பதில் அளித்த போதும் மேக மித்ராவை பார்த்தப்படி தான் கூறினான்.

பொதுவாக இருபொருள் ஒரே மாதிரி இருக்கும் போதுதான் குழப்பம் வரும்... ஆனால் அவன் சொன்னவை ஒன்றோடு ஒன்று சம்பந்தப்படுத்தி பார்க்க கூட முடியாத தூரத்தில் இருக்க.. குழம்பி போன சங்க மித்ரா...

"ஜாமூனுக்கும், திராட்சைக்குமா??" என்று யோசித்தப்படி இழுத்தவள்.. "குலோப்ஜாமூனுக்கு திராட்சைக்குமா வித்தியாசம் தெரியாது?" என்று தன் காதில் விழுந்ததை சரி பார்க்கும் விதமாக.

"இல்லை காலாஜாமூன்னுக்கும், திராட்சைக்கும்" என்று இடக்காக தன் சகோதரிக்கு பதில் அளித்தவள்.. இவள் உண்மை தெரியாது வாயை மூட மாட்டாள் என்பதை உணர்ந்து "இந்த ஊரில் நாவல் பழத்தை ஜாமூன் என்று சொல்வார்கள்" என்றாள் அவளுக்கு விளக்கும் விதமாக.

"ஓ!!!" என்று அரை மனதாக தலையை ஆட்டியப்படி.. "சரி இது இரண்டும் கருப்பாக இருக்கும் என்று வைத்துக்கொண்டாலும்.. பலாபழத்தை எப்படி சிக்கன் என்று நினைத்தாய்? ஒரு செஃப் உன் டிவின்ஸ்சாக இருக்க... ஏன்டீ

மங்கி இப்படி மானத்தை வாங்கற?" என்றாள் சங்க மித்ரா மிகுந்த விசனமாக.

"எல்லாவற்றையும் பார்த்தவுடன் புரிந்துக்கொள்ளும் பக்குவம் இருந்திருந்தால் நான் ஏன் இப்படி ஏமாற போகிறேன்??" என்ற பதில் சங்கிக்குச் சொன்னாலும் அது ரஃபிக்கானது என்பதை அவன் நன்றாகவே அறிவான்!!!

அதற்குப் பதிலாக பேச வாயைத் திறந்த சங்கியை முந்திக்கொண்டு... "அதை பற்றி விளக்கமாக பேச நேரம் இல்லை" என்று கராராக பேச்சை முடிக்க முயற்சித்தாள்.

சட்டென்று குரலை தணித்த சங்கி... "ஏன்டீ பேச மாட்ட.... வந்திருக்கும் விருந்தினர்களை பத்து நிமிஷமாக கால் கடுக்க காக்க வைத்துவிட்டு அத்தானிடம் ரொமான்ஸ் பண்ண நேரம் காலம் இருக்குது... ஆனா என் கேள்விக்கு பதில் சொல்ல உனக்கு நேரம் இல்லையா??" என்று காதை கடித்தாள் சங்கி.

வாயை திறந்தவள் "வாட்??? எல்லோரும் நிற்கிறார்களா? ஏன்?" என்று தலையை நிமிர்த்த.. மீண்டும் அவள் கழுத்தில் இருந்த அந்த சொக்கர் நெக்லஸ் பிடித்து இழுக்க... எரிச்சலோடு கண்களை உயர்தியவளுக்கு முகத்திரை எதையும் பார்க்க விடாது தடுக்க.. இதை எப்படி மறந்தாள் என்று தன்னை தானே கடிந்தப்படி "எப்படி உனக்கு தெரியும்??" என்றாள் சந்தேகமாக.

"ம்கூம்.. அதை அப்புறம் சொல்றேன் என்று உன்னை போல பதில் சொல்ல முடியும் ஆனால் நான் அப்படி செய்ய மாட்டேன் என்று உனக்கு தெரியும்" என்று கூறியவள் "கண்களை திறந்துக்கொண்டு நடக்கும் போதே நான் தடுக்கி விழுவேன்... இப்படி முக்காடு போட்டுக்கொண்டு நடக்க சொன்னா எப்படி? அதனால் தான் சௌவியிடம் சொல்லி.. சரியாக என் முகத்திற்கு நேராக வரும் கற்களை அகற்ற சொல்லிவிட்டேன்.." என்று கிசுகிசுத்தவள்...

"மங்கி... இதுக்கு மேலயும் இந்த ஐந்து கிலோ வெயிட்டுள்ள உடையை அணிந்துக்கொண்டு பத்து கிலோ எடை உள்ள நகைகளை மாட்டிக்கொண்டு நிற்க முடியாதுடீ.. ப்ளீஸ் உன் ரொமான்ஸை அப்புறம் வைத்துக்கொள்ளேன் என்னால் நிற்க முடியவில்லை.. அங்க அத்தை கூட உங்களுக்காகதான் வெயிட்டிங்..." என்று நான்கு அடி தூரத்தில் நின்றுக்கொண்டு இருந்த சங்கி தமிழில் கிசுகிசுத்தாள் இல்லாவிட்டாலும் அங்கே இருப்பவர்களுக்கு இவள் பேசுவது புரிந்துவிடுவது போல!!!

சங்கி சொல்லியது மங்கியின் காதில் விழுந்தோ இல்லையோ அங்கே நின்றுக்கொண்டு இருந்த ரஃபிக்கின் காதில் விழ.. மெல்ல தலையை திருப்பியவனுக்கு அங்கே தன் சின்ன பாட்டி கையில் தட்டை வைத்துக்கொண்டு அவனின் அனுமதிக்காகக் காத்துக்கொண்டு

நிற்பது தெரிந்தது.

"வாங்க" என்று தலையை மட்டும் அவர்களை பார்த்து அசைத்தவன் தள்ளி நின்றான்.

இவனின் தலை அசைப்பே அவரின் அனுமதியாக எடுத்துக்கொண்டு அந்த முதியவர் சிரித்தப்படி முன்னே வந்தார்!!!

இதுதான் இவர்கள் வீட்டில் இருக்கும் வித்தியாசம்!!!

ஊர் உலகத்தில் வயதிற்கு மரியாதை கொடுத்தால்.. இவர்கள் குடும்பத்தில் தான் வகிக்கும் பதிவிக்குத் தான் மரியாதை கொடுப்பார்கள்!!! அதாவது "நவாப்" என்பதனால் அவனை விட வயது மூத்தவர்களாக இருந்தாலும் அவன் அனுமதி இல்லாமல் ஒரு துரும்பைக் கூட கிள்ளிப் போட மாட்டார்கள்!!!

ரஃபிக் என்று உரிமையாக பெயரை சொல்லி அழைப்பது கூட அவனுடைய அம்மா காயத்திரி அல்வுமர் அலிகானாக மட்டுமாகத் தான் இருப்பார்கள். அவரை தவிர வேறு யாராவது அவனின் பேரை சகஜமாக அழைப்பது விரல் விட்டு எண்ணக்கூடிய மிக சிலரே!!!

நவாப்பின் சின்ன பாட்டி என்றால் சும்மாவா என்னும் விதத்தில் அந்த வயதிலும் கையிலும், கழுத்திலும் இண்டு இடுக்கு விடாமல் நகைகளை அடுக்கிக்கொண்டு அந்த வயதான

பெண்மணி ஆடி அசைந்து மேக மித்ராவின் முன்னாடி நிற்க.. அதற்குள் சித், அவர்களின் அம்மா காயத்திரி அல்வுமர் அலிகானுடன் மேடை ஏறினான்!!!

வெளீர் சிகப்பில் பட்டு உடுத்தி கழுத்தில் ஒரே ஒரு நன்முத்து மாலை அணிந்து, காதிலும் கையிலும் அதே முத்து செட் அணிந்து முகத்தில் ஒரு புன்னகையை படற விட்டப்படி ஒரு கம்பீரத்துடன் நடந்து வந்தவரை பார்த்தவுடன் மனதில் தானாக மரியாதை தோன்றியது!!

நேராக மேக மித்ராவின் முன்னாடி வந்து நின்று.. அவள் தலையில் மூடி இருந்த அந்த பட்டு துணியை மெல்ல எடுத்தவர்... தலை குனிந்திருந்தவளின் முகவாயை பற்றி நிமிர்த்தினார்!!!

கழுத்தை மறைக்கும் குந்தன் வேலைப்பாடு கொண்ட சொக்கர் நெக்கலஸ்... நீண்டு இருந்த அவளின் கழுத்திற்காகவே பதினெட்டாம் நூற்றாண்டிலேயே செய்யப்பட்டது போல் பொருத்தமாக இருக்க... அதற்கு ஜோடியான பெரிய நெற்றிச் சுட்டியில் இருபுறமும் இருந்த ஆறு செயின்கள் அவள் தலை முழுவதும் படர, விசிறி போல் விரிந்திருந்த அந்த குந்தன் செட் கம்மல் அவளின் தலை அசைப்பினால் லேசாக ஆட... அதே குந்தன் செட்டில் டையர் போல் இருகையில் வளையலும், இடுப்பில் மூன்று அடுக்கு ஒட்டியானம், பாதத்தில் அதே முன்று

அடுக்கு சலங்கையே இல்லாத கொலுசு என்று இப்படி தலை முதல் பாதம் வரை குந்தன் செட் அணிந்திருந்தாலும்... இவை அனைத்தும் அவளின் தோற்ற பொலிவிற்கு முன்னால் நிலாவை சூழ்ந்திருக்கும் நட்சத்திரங்களாக சற்று மங்கலாகத் தான் தோன்றின!!!

பெரிய கண்கள், அளவான நெற்றி, சின்ன மூக்கு, எடுப்பான உதடு, குறுகிய முகவாய், மேடான கன்னம் என்று முதல் பார்பவர்களுக்கு அழகி என்று தோன்றுவதை விட நம் பக்கத்து வீட்டு பெண் போல் பாந்தமான அழகுடன் தோன்றும் அவளை கண்களைப் பறிக்கும் அழகியாக மாற்றுவது அவளின் தோற்றப் பொலிவு தான்!!!

மலை பிரேதசத்தில் பிறந்து வளர்ந்ததாலோ என்னவோ.. புத்தம் புதிய ரோஜா மலர் போல் இருக்கும் தோற்ற பொலிவு நூறு கூடை ஆர்கிட் மலர்களுக்கு மத்தியில் அன்று மலர்ந்த பன்னீர் ரோஜா அனைவரின் பார்வையை தட்டி செல்லுவது போல் துளி கூட மேக் கப் இல்லாது நின்றிருந்தவளின் அழகைச் சொல்ல வார்த்தைகள் இல்லை!!!

அதிலும் சகோதரிகளின் இடுப்பை தாண்டி தொங்கும் கருத்தடர்ந்த நீண்ட கூந்தலை யாரும் நிஜம் என்று நம்பவில்லை!!!

அந்த நீண்ட கூந்தலை ஒவ்வொரு பின்னலுக்கும் ஒரு குந்தன் பில்லையை வைத்து தைத்து இருக்க.. அவளின் நீண்ட முடிக்கு அது மிகவும் எடுப்பாக இருந்து என்று சொல்வதை விட.. அங்கே இருந்த பெண்களை நாவாப்பை இப்படி கடைசி நிமிஷத்தில் தட்டி செல்ல... இந்த நீண்ட முடி காரணமாக இருக்குமோ என்று பொறாமைப்பட செய்தது!!!

அவளை பார்த்து பாந்தமாக சிரித்த காயத்திரி.. "இன்று நீ அணிய வேண்டிய நகையை நான் தேர்ந்தெடுக்கும் போதே.. சிம்பிளாக இது மட்டும் போதும்மா என்று ரஃபிக் சொன்ன போது எனக்கு புரியவில்லை ஆனா இப்ப உன்னை பார்க்கும் போது.. அப்படியே அப்சரஸ் மாதிரி இருக்க..." என்று மனமார புகழ்ந்தவரின் கண்கள் பார்க்க..

"என்னது இது சிப்பிளா???" என்று மனது அலறிய போதும் அமைதியாக நின்று இருந்தவளின் காதில்

"உன்னை நிச்சயம் அவருக்கு..." என்று எதையோ ஆரம்பித்தவர் பேச வராது தொண்டை அடைத்து நிறுத்த.. அவசரமாக அவர் பக்கத்தில் வந்து தோள் மேல் கை போட்டான் ரஃபிக்.

"என்னாச்சு?" என்று மனம் கேள்வி எழுப்ப அவசரமாக அத்தையை உற்று நோக்கும் போது தான்.. அவர் முகம் சொல்லான்னாத வருத்தத்தை வெளிப்படுத்துவதை காண நேர...

இரண்டு வருடம் முன் திடுதிப்பென்று தவறிய ரஃபிக்கின் அப்பாவைப் பற்றி நினைக்கிறார் என்று புரிந்தது!!!

பட்டென்று அவரை அணைத்து ஆறுதல் படுத்தவேண்டும் என்று பரபரத்த கைகள் அடக்கிக்கொண்டு அமைதியாக நின்றாள். இவர்கள் மூவருக்குள் நடக்கும் சம்பாஷனையை யார் அறியவும் வாய்ப்பில்லை என்ற போது எதுக்கு அவரைக் கட்டி பிடித்து இதை உலகிற்கு தெரியப்படுத்த வேண்டும்?? என்று நினைத்தவள்..

"மாமா சார்ப்பாக நீங்க ஆசீர்வாதம் பண்ணுங்கள் அத்தை" என்று அவள் கீழே காலில் குனிவதற்குள் சுதாரித்துக்கொண்டு சட்டென்று தடுத்து நிறுத்திய காயத்திரி புன்னகைத்தப்படி தலையில் கை வைத்து வாழ்த்தியவர் பின்னாடி திரும்பி யாரையோ அழைக்க.. ரஃபிக்கின் சின்ன பாட்டி கையில் தங்க தாம்பால தட்டில் எதையோ எடுத்துக்கொண்டு அவர்கள் பக்கத்தில் நின்றார்.

"இப்படி வந்து நில்லுமா" என்று மேக மித்ராவை அழைத்து ரஃபிக் எதிரே நிற்க வைத்துவிட்டு பின்னால் தள்ளி நிற்க.. அந்த எழுபது வயது மதிக்கத்தக்க பெண்மணி ஏதோ பாட்டு பாடியப் படியே அவர்களை சுற்றி வந்து அவர்களின் தலையில் ஏதோ தண்ணீரை தெளிக்க.. புரியாத பாஷையில் இருந்த அந்த ராகத்தை கேட்டப்படி தலை குனிந்து நின்றாள் மேக மித்ரா!!!

அதே சமயம் பக்கத்தில் இருந்த சங்க மித்ராவிற்கு முகத்திரையை விலக்கி.. அவளையும் சித்திற்கு நேராக நிற்க வைத்த வேறு ஒரு வயதான பெண்மணி பாட்டு பாடி அங்கேயும் சம்பிரதாயத்தை செய்தனர்.

ஒரு வழியாக மூன்று சுற்று சுற்றி முடித்தவர்.. தட்டில் இருந்ததை எதையோ எடுத்து நீட்டினார்.

ரஃபிக்குக்காக இருக்கும் என்று நினைத்தவள் அமைதியாக நிற்க..

"உனக்கு தான் மேக மித்ரா வாங்கிக்கொள்" என்று அவளின் அத்தை கூறியப்படி அருகில் வந்தார்.

பெரிய தங்க பதகத்தில் இருபுறமும் கயிறு கட்டி இருந்ததை கையில் வாங்கிக்கொண்டு என்ன செய்வது என்று விழித்தவளை பார்த்த அவளின் அத்தை..

"அதை ரஃபிக் கையில் கட்டி விடும்மா" என்று விளக்கினார்.

அவர் சொன்ன அடுத்த நிமிஷம்... கையை முன்னே நீட்டினான் ரஃபிக்.

நீண்டு, திரண்ட... ரோமங்களுடன் இருந்த கையையும், மோதிரம் அணிந்த அந்த விரலை பார்த்தவளுக்கு இந்த விரல்கள் தானே அன்று முதன் முதலாக அவளின் இடையை

பிடித்தது என்று மறக்க நினைத்த நியாபகங்கள் "குபீர்" என்று கண் முன்னே வந்து... புயலை கிளப்ப...

இத்தனை நேரம் மருந்திற்குக் கூட ரஃபிக் பக்கம் தலையை உயர்த்தாதவளின் விழிகள் கட்டுப்பாட்டை மீற... தலையை உயர்த்தி அவனை நோக்கினாள்!!

இவளின் தவிப்பு மிதந்த விழிகளுடன் ரஃபிக்கின் கூர்மையான விழிகள்நேருக்கு நேராக மோதிக்கொள்ள அத்தனை நேரம் நிர்மலமாக இருந்த வானத்தில் கண்களை பறிக்கும்படியான மின்னல் ஒன்று வெட்டியது!!!

பார்த்த விழி பார்த்தபடி பூத்து இருக்க..

காத்திருந்த காட்சி இங்கு காணக் கிடைக்க..

ஊன் உருக உயிர் உருக தேன் தரும் தடாகமே..

வழிவருக வழி நெடுக ஒழி நிறைக வாழ்விலே..

என்று முன் மாலை பொழுதில் சௌவி பாடிய பாடல் வரிகள் காதில் ஒலித்தது.

அலங்காரம் செய்யும் போது இந்த வரிகைகளை பாடிக்கொண்டு இருந்த மூத்த அண்ணி சௌவியை பார்த்து.. சரியாக தமிழ் பேச வராத இரண்டாவது அண்ணி அலக்நந்தா "பாட்டு நல்லா இருக்கே என்ன பொருள்??" என்று விளக்கம் கேட்க..

அரை மணி நேரமா விளக்கோ விளக்கு என்று விளக்கிய சௌவியின் பேச்சு ஒன்றுமே புரியவில்லை என்றாலும் இந்த நொடி எதுவும் விளக்காமலே புரிந்தது...

"என்னம்மா இன்னும் காப்பை கட்டவில்லை?" என்று அத்தை கேட்டப்போது தான் தூக்கத்தில் இருந்தவளை தட்டி எழுப்பியது போல் அரண்டு போய் பார்வையை அகற்றி.... சுற்றியும் ஓட விட்டவளுக்கு தான் எங்கு இருக்கிறோம் என்று புரிய...

"இதோ... கட்டறேன்.. அத்தை" என்று முணுமுணுத்தப்படியே அவன் மணிக்கட்டிற்கு அருகே கையை எடுத்து போக..

"நேற்று நான் சொன்னதை மறந்துவிட்டாயா?? மற்றவர்களுக்கு தான் கையில் நவாப்பிற்கு இங்கே.." என்று ரஃபிக்கின் புஜத்தை காட்டினார் காயத்திரி.

அவனின் திரண்டு இருந்த புஜத்தை நோக்கியவளுக்கு அப்பொழுது தான் ரஃபிக் சட்டை அணியாமல் இருக்கிறான் என்று புரிய ஆரம்பிக்க.. அவளையும் அறியாது கண்கள் அவனின் பறந்த மார்ப்பில் அவள் தையல் போட்ட இடத்தில் நிலை குத்தி நிற்க.. அதை தொட்டு பார்க்க பரப்பரத்த கைகளை வெகு சிரமப்பட்டு அடக்கியவள் எங்கே தன் கட்டுபாட்டையும்

மீறி தொட்டு விடுவோமோ என்று அரண்டு போய் பார்வையை திருப்பி புஜத்தில் கட்ட தொடங்கினாள்!!!

அவனை தொட்ட அடுத்த நிமிடம்... சற்றே சூடான உடல் வாகை கொண்டவனின் தேகத்தில் இருந்து வரும் உஷ்ணக்காற்று கொட்டவரும் தேனீக்கள் கூட்டமாக அவளை ரீங்காரமிட்டப்படியே சூழ...

காட்டில் வாழும் புலிக்கு கூட பயமும், பதட்டமும் இன்றி சர்ஜரி செய்ய கூடியவள் இன்றோ ஒரு முடிச்சைப் போடுவதற்குள் கைகள் நடுங்க மூச்சு திணற.. இரண்டு முறை அந்த காப்பைத் தவற விட்டாள்!!!

ஒரு சாதாரண சுருக்கு போடுவதை கூட இத்தனை கஷ்டப்படும் மேக மித்ரவின் செயல்களை வைத்த கண் வாங்காமல் அலட்சியத்துடன் பார்த்துக்கொண்டு இருந்த அந்த சின்ன பாட்டியை நோக்கி இருந்தாள்....சுதாரித்துக்கொண்டு இருந்திருப்பாளோ என்னவோ.. ஆனால் அருகில் ரஃபிக் இருக்கையில் அவனின் அருகாமையும், பழைய நினைவுகளின் தாக்கம் ஒன்றன் பின் ஒன்றாக அவளை ஆட்டி படைக்க... அதில் சிக்குண்டு போய் கிடந்தவளுக்கு மற்றவர்களை பற்றி நினைக்க ஏது நேரம்??

மூன்றாவது முறையும் அந்த காப்பை தவற விட போனவளின் செய்கை கண்டவன்..

"என்னுடைய பேர் பாடி உன்னை தடுமாற செய்யும் என்று முன்பே தெரிந்திருந்தால் நாம் சண்டை போட்ட சமயத்தில் எல்லாம் என் சட்டையை கழட்டி இருப்பேன்" என்று கிசுகிசுப்பாக ரகசியம் பேசினான் ரஃபிக் அல்வுமர் அலிகான்.

அவளின் தடுமாற்றத்தை கண்டுக்கொண்டதால் வந்த ஆணவ பேச்சை கேட்டு.... விசுக்கென்று தலையை நிமிர்த்தியவளின் கண்கள் போர் முரசு கொட்டின!!!

எதுவும் பதில் சொல்லாமல் தன் திடத்தை எல்லாம் ஒன்று திரட்டி அவன் புஜத்தில் கயிற்றை கட்ட உள்ளே பொங்கிய ஆத்திரத்தை எல்லாம் அந்த முடியில் காட்டி ரத்தம் ஓட்டமே இல்லாதப்படி இருக்கமாக கட்ட தொடங்கியவளின் பார்வை ஈட்டி வீசியது!!!

அவளின் ஈட்டி பார்வையும் தாங்கியதோடு மட்டும் அல்லாது இருக்கி கட்டி இருந்த கையையும் ஒரு பார்வையை பார்த்தவன் முகத்தில் சந்தோஷத்திற்கான பிரகாசம் மின்ன...

"இந்த.. இந்த.. லுக்கை நான் பார்த்து கிட்டதட்ட மூன்று மாத்திற்கு மேலே ஆகுது" என்று ரசனையுடன் செப்பினான்.. அவள் என்னவோ காதலால் ரசம் சொட்ட சொட்ட அவனை பார்த்து மோகன புன்னகை பூத்தது போல்!!!

அவனின் பேச்சை கேட்டவளின் ஈட்டி பார்வை உக்கிர பார்வையாக மாற...

"அதெப்படி நாம் ஒவ்வொரு முறை பார்க்கும் போது.. மின்னல் வெட்டுது??" என்று அவளின் கோபத்தை அதிகமாகக்குவது எப்படி என்பதற்காக தான் இந்த கங்கணம் கட்டும் வைபவமே என்பது போல் பேசி வைத்தான்.. ரஃபிக்.

இவன் பக்கத்தில் நிற்கும் ஒவ்வொரு நொடியும் இப்படிதான் பேசுவான் என்று யூகித்தவள் பற்களை கடித்து தன் வாயில் வந்த வார்த்தகளை விழுங்கியப்படி அதை கட்டி முடித்து விட்டு அவசரமாக பின் நகர்ந்தாள்!!!

இவள் நகர்ந்த அடுத்த நொடி அந்த இடத்திற்கு வந்த சின்ன பாட்டி எதையோ நீளமாக பேசினார்..

அவர் பேசும் பாஷை எதுவும் புரியாது... மொழி பெயர்க்க எதிரில் நின்றவனை பார்க்காது அத்தையை கண்களால் தேட அவரோ சங்கியின் அருகில் நின்றிருக்க.. எப்படி அழைப்பது என்று யோசிக்கும் வேளையில் இவளின் பார்வையை கண்டு..

"முடித்துவிட்டாயா?" என்று கேட்டப்படி இருதம்பதிகளின் மத்தியில் வந்து நின்றார்.

மங்கி, சங்கிக்கும் பொதுவாக... "இப்ப நீங்க கட்டிய காப்பு.. வெறும் காப்பு இல்ல அவர்களின் பாதுகாப்பு... இனி கல்யாணம் ஆகும் நாள் வரை அவர்கள் எங்கே போய் விட்டு வந்தாலும் அவர்களை காக்கும் கவசம் இது" என்று அவர்கள் கட்டியதற்காக விளக்கம் கூறினார் காயத்திரி.

"அப்போ எங்களுக்கு??" என்றாள் சங்கி தன் கைகளை பார்த்தப்படி.

புன்னகையை பூத்த காயத்திரி "உங்களுக்கு எந்த பாதுகாப்பு அவசியம் இல்லை ஏன்னா.. இனி கல்யாணம் ஆகும் நாள் வரை நீங்க அரண்மனையை விட்டு வெளியே போக அனுமதி இல்லை.." என்று சிரிப்புடனே கூறினார் அவர்.

"அத்தோடு இனி வெளியே ஆட்கள் வீட்டிற்குள் வரவும் அனுமதி இல்லை.." என்றான் சித்.

"ஏன் அப்படி?"

"ரொம்ப சிம்பிள்.. அந்த காலத்தில் கோட்டைக்குள் புகுந்து கல்யாண பெண்ணை கடத்துவதும்.. கடைசி நிமிஷத்தில் கல்யாணத்தை தடுத்து நிறுத்த ஏதாவது சதி செய்வது வழக்கம் அதனால் இந்த பாதுகாப்பு ஏற்பாடு.. இனி கல்யாணம் முடியும் வரை தவிர்க்க முடியாத விஷயங்களுக்கு தவிர நாங்களுமே வெளியே போக மாட்டோம்" என்றான் சித் விளக்கமாக.

"ஓ!!!" என்று சங்கி வாயை பிளக்க.

"நம் வீட்டில் பந்த கால் நட்ட பிறகு மணப்பெண் வீட்டை விட்டு வெளியே போக எப்படி கட்டுப்பாடு இருக்கோ அதே மாதிரி தான் இங்கேயும்" என்றார் காயத்திரி பெருமையாக.

தீவிரமாக யோசித்த சங்கி "யாருடைய காலை நடனும்னு சொன்னீங்க அத்தை?" என்று சந்தேகமாக இழுத்தாள்.

"உன்னுடைய கால் தான் வேற யாரு??" என்று மென்று விழுங்கிய சிரிப்பை அடக்கியப்படி சித்.

"வாட் என்னுடைய காலை நடனுமா?" என்று ஒரு மார்க்கமாக சித்தை பார்க்க.. அதற்கு மேல் தாக்கு பிடிக்க முடியாத காயத்திரி சிரித்து வைக்க..

"அவன் சும்மா சொல்கிறான் சங்க மித்ரா.. பந்தகால்" என்று ஆரம்பித்து தன் விளக்கத்தை தொடங்கியவரை

"முன்ன பின்ன கல்யாணம் செய்து பார்த்திருந்தால் தானே சம்பிரதாயத்தை பற்றி தெரியும்... விடுங்கம்மா..." என்று சித் அவரின் பேச்சிற்கு முற்று புள்ளி வைத்தான்.

காயத்திரி அதற்கு பதில் பேசுவதற்குள் அங்கே இருந்த பாட்டி ஏதோ அவர் காதில் சொல்ல தலையை ஆட்டியவர்...

"நீங்க இருவரும் வாங்க.. நாம் மெகந்தி மற்றும் சங்கீத்தை ஆரம்பிக்கலாம்... இனி ரஃபிக்கு மட்டும் தான் வேலை அது எப்படியும் இருபது நிமிஷம் ஆகும்..." என்று மணப்பெண்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு அங்கே விரித்திருந்த மெத்தையில் இருவரையும் அமர செய்து "இதோ வருகிறேன்" என்று திரும்பினார்.

அவர் சென்ற திசையை நோக்கி பார்வையை திரும்பிவளுக்கு அங்கே ரஃபிக்கை நிற்க வைத்து ஒரு தாடி மீசையுடன் இருந்த வயதானவர் ஏதோ மந்திரம் சொன்னப்படி

சுற்றி வந்து ஏதோ திரவியத்தை மார்ப்பில்பூசிப்படியே ஜபிக்க.. அவன் சட்டை அணியாமல் வந்த அர்த்தம் புரிந்தது!!!

"ஏய் மங்கி.. இந்த வலையல்களை கழட்டு உன் அத்தையிடம் பத்திரமாக கொடுக்கனும் மெகந்தி வைக்க இடைஞ்சலா இருக்கும் என்று எவ்வளவு நேரம் சொல்வது??" என்று தன் தாய் மல்லிகா மூன்றாவது முறையாக கூறிய பின் தான் அங்கே நின்றிருந்த ரஃபிக்கிடம் இருந்து பார்வையை திருப்பியவள் அவசரமாக கையில் மற்றும் காலில் அணிந்திருந்தவைகளை கழட்டி நீட்டினாள்!!!

இந்த பூஜை முடிந்தவுடன் ரஃபிக்குடன் ஆண்கள் வெளியே போய் விடுவார்கள் என்று அத்தை நேற்று சொன்னது நியாபகத்திற்கு வர.. "ப்பா"ஒரு வழியாக இன்று தப்பித்துவிட்டோம்.. என்று நிம்மதி பெரு மூச்சு விட.. ஆனால் ரஃபிக்கிடம் இருந்து தப்பிப்பது சுலபமான காரியம் இல்லை என்பதை விரைவிலேயே அவன் மார்ப்பில் முகம் புதைத்து புரிந்துக்கொள்ள வேண்டி வந்தது!!!

# அத்தியாயம் 4

பூஜை முடிந்தவுடன் ஆண்கள் எல்லோரும் வெளியே போய் விடுவார்கள் என்று அத்தை நேற்று சொன்னது நியாபகத்திற்கு வர.. ஒரு வழியாக இன்று கண்டத்தில் இருந்து தப்பித்துவிட்டோம்.. என்று பெரு மூச்சு விட்டப்படி அவர்களுக்காக அமைத்துக்கொடுத்த இடத்தில் அமர்ந்தவளை ரஃபிக்கின் நூற்று எட்டு கசின்களில் இருக்கும் பெண்கள் அனைவரும் பலாப்பழத்தில் மொய்க்கும் ஈக்களாக சூழ்ந்துக்கொண்டனர்.

"என்னது நூற்றி எட்டு கசின்ஸ்சா?" என்று சங்கி சொன்ன போது மங்கியும் இப்படிதான் வாயை பிளந்தாள்.

ஆனால் உட்கார வைத்து பாடம் அடிக்காத குறையாக... "நவாப் என்றால் அண்ணன் தம்பி இருவர் மட்டும் தான். ஆனால் இந்த நவாப் குடும்பத்தை சேர்த்த அவர்களின் ஐந்து சித்தப்பாக்கள் அவர்களின் பசங்க... அப்புறம் அதற்கும் முந்தைய தலை முறையை சேர்ந்தவர்கள் அப்படின்னு ஆரம்பித்து சுற்றி வந்தால் அலிகான் வம்சத்தை சேர்ந்தவர்கள் நூறுக்கும் மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள்.. இப்ப புரியுதா ஏன் இருபத்தி நான்கு மணி நேரமும் இங்க ஜகஜகன்னு

இருக்காங்கன்னு?" என்று சித் அவனுடைய பிச்சாவரம் ரீசாட்டில் வைத்து சொல்லிய விஷயங்களை அதிசிரதையாக தெரிவித்தாள்.

"என்ன டிசைன் மெகந்தி வைக்கப் போறீங்க?" என்று பொதுவாக ஆரம்பித்த கேள்விகள் அடுத்த அரை மணி நேரத்தில் கொஞ்சம்.. கொஞ்சமாக முன்னேறி "எங்கே முதலில் நவாப்பை சந்தித்தீங்க?" என்பது வரை ஆள் மாற்றி ஆள் கேள்வி கனைகள் விடுத்தப்படி இருந்தனர்.

ரஃபிக் ஈட்டி பார்வையில் இருந்து தப்பித்தோம் என்று நிம்மதி மூச்சு விட்டால் இங்கே இவர்கள் கேள்வி கேட்டு மூச்சு திணறடித்துக்கொண்டு இருக்க... அப்பொழுதுதான் எல்லா சடங்குகளையும் முடித்துவிட்டு மேடையில் இருந்து கீழே இறங்கியவனின் புற முதுகை வெறித்தாள்!!!

இவனால்தானே.. இவர்களை வீட்டு ஆட்கள் இப்படி உட்காரவைத்து கேள்வி மேல் கேட்கிறார்கள் என்று நெஞ்சில் பற்றி எரிய...

நேர் கொண்டப் பார்வையுடன் வீரென்று சென்றுக்கொண்டு இருந்தவனின் கால்கள் ஒரு நிமிடம் தயங்க.. அடுத்த நொடி திரும்பியவனின் விழிகள் இவளுடைய பார்வையை நேரடியாக எதிர்கொண்டன!!!

ஒரு நொடி ஆராய்ச்சியுடன் அவளை வெறித்து பார்த்தவன்.. பின் தலை அசைத்து விடை பெற்றான்.

"என்ன பாபி நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாது இவ்வளவு அமைதியா இருக்கீங்களே?" என்று மங்கியை பார்த்து மீண்டும் கேள்வி எழுப்ப..

குடும்ப அங்கத்தினருக்கே சொல்லாத விஷயத்தை எப்படி முகம் அறியாத அன்னியர்களுக்கு சொல்லுவாள்?!?

எதுவும் பேசாது வாய் மூடி அமைதியாக இருக்க.. அவளை காக்கும் பொருட்டு முன்னுக்கு வந்த சங்கி...

"உங்க வைர பதக்கம் ரொம்ப நல்லா இருக்கே" என்றாள் சிரித்தப்படி.

"ம்ம்.. நல்லா இல்லாமல் எப்படி இருக்கும்..? பதினெட்டாம் நூற்றாண்டில் என் தாத்தாவின் வீர சாகசத்தால், தோற்க இருந்தப் போரை வென்று நவாப்பின் கொடியை நாட்ட.. அவரை கௌரவப்படுத்தும் விதமாக நவாப் கழுத்தில் அணிந்திருந்த இந்த வைர மாலையை போட்டு, தம்பி மகளையும் கட்டி கொடுத்ததோடு... அவரின் பெயரில் ஒரு ஊரையே சீதனமாக கொடுத்து இருக்கிறார்கள்..." என்று பெருமை பீத்திக்கொண்டு போன அந்த வைர மாலையை தடுத்தி நிறுத்தும் விதமாக ..

"விடு ஜமீலா... இப்ப போய் வரலாறு கிலாஸ் எடுக்கிறாயே.. நம்மை போல் இருப்பவர்களுக்கு அதன் பெருமை புரியும்" என்று அந்த ஜமீலாவை நிறுத்துவது போல் இவர்களை

குத்தலாக பேசினாள் பெரிய கொண்டைப் போட்டுக்கொண்டு இருந்தவள்!!!

இந்த பேச்சால் அருகில் உட்கார்ந்திருந்த சௌவிக்கு வேர்த்து கொட்டியது என்றால் அலக்நந்தாவிற்கு மூச்சு முட்டியது.

இந்த மாதிரி பேச்சை எல்லாம் அழுத்தக்காரி மங்கி வேண்டும் என்றால் அலட்சியப்படுத்தலாம் ஆனால் சங்கியால் நிச்சயம் பொருத்து போக முடியாது.. என்ன செய்து வைக்க போகிறோளோ என்று இருவரும் பதறிப் போய் உட்கார்ந்து இருக்க…

ஆனால் ஆச்சரிப்படும் விதமாக இரு சகோதரிகளும் சலனமே இல்லாது அமர்ந்திருந்தது மட்டுமல்லாது அதை ஒரு விஷயமாக கண்டுக்கொள்ளாது அமர்ந்திருக்க.. ஒன்றும் புரியாது ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்!!!

"நீங்க செப் என்று சொன்னார்கள்.. உங்களுடைய ஸ்பெஷல் டிஷ் என்ன?" என்றாள் சிரித்த முகமாக.

"லாப்… " என்று சங்கி வாயை திறந்து சொல்லிக்கொண்டு இருக்கும்போதே…

"இவங்க செப் என்றால்… அடுத்தவங்க மாட்டு டாக்டர்!!! ஜீவகாருண்யம் மிக்கங்க என்பதால் அசைவம் சாப்பிட மாட்டாங்க!!!"என்று உயர்வாக சொல்லுவது போல் இருந்தாலும்

அந்த குரலில்இழையோடிய அலட்சியத்தை மேக மித்ராவால் புரிந்துக்கொள்ளமுடிந்தது.

"அதுமட்டுமா? பாபி பிரத்தியேகமாக சமைத்து பார்க்கவென்றுஅவர்கள் தங்க போகும் சவுத் விங்கில் புது சமையல் அறையே கட்டிஇருக்காராம் நம்ம சொட்டா நவாப் என்றால்... அப்ப நவாப் நீங்கதங்க போகும் நார்த் விங்கில் என்ன கட்டி தர போகிறார்? மாட்டுஆஸ்பித்திரியா??" என்று பெரிய ஜோக் சொல்லு விட்டது போல்சிரித்தாள் அந்த வைர பதக்கம்..

"பாபி... நீங்க எப்படி வேண்டுமானாலும் இருக்க... ஆனா இங்கஇருக்கும் சமையல் கட்டிற்கு "தூங்கா அடுப்பு" என்று பெருமையாசொல்லுவாங்க.. எந்த நேரம் யார் வந்தாலும் ராஜ விருந்துஇருக்கும்... நாங்க எல்லாம் இருப்பதி நான்கு மணி நேரமும் நான்வெச் இல்லாது ஒரு பிடி உணவு கூட உள்ளே இறங்காது... இனி இங்கவந்தால் வெறும் கீரையும், சாம்பாரும்தான் போடுவீங்களா?" என்றுகிண்டலாக கேட்பதாக நினைத்துக்கொண்டு குத்தலாக கேட்டாள்.

இப்படி அடுத்து வந்த இருபது நிமிஷம் சந்தர்ப்பம் கிடைக்கும் போது எல்லாம் சிரித்தப்படி பேசினாலும் அதில் குத்தலும், குடைச்சலும் மண்டி இருந்ததை நன்றாக புரிந்தது

ஆனால் புரியாத விஷயம் சகோதரிகள் இருவருமே அதை கண்டுக்கொள்ளாது அமர்ந்து இருந்தது தான்!!!

கடவுளே இது எங்கே போய் முடியப் போகுதோ என்று நினைத்துகொண்டு படப்படப்போடு இருந்த வேளையில் தான் யாரோ வருவதாக சிறு சலசலப்பும் பின் மெகந்தி போட்டுக்கொண்டு இருந்தவர்கள் பாதியிலே தலை தெறிக்க ஒட... அந்த காரணம் கழுத்தில் ஒரு டோலக்குடன் வந்த அந்த சிகப்புப் புடவை அமர அடுத்த ஐந்தாவது நிமிஷத்தில் புரிந்தது!!!

ஐந்தே நிமிஷத்தில் காய்ந்து போக கூடிய நகப்பூச்சை கூட பூசிக்கொள்ள பிடிக்காதவளை "மெகந்தி" என்ற பெயரில் கடந்த அரை மணி நேரமாக உள்ளங்காலில் ஆரம்பித்து முழுங்கை வரையில் இண்டு இடுக்கு சந்து பொந்து விடாமல் தீட்டிக்கொண்டு இருக்க அதை கூட பல்லை கடித்துக்கொண்டு அமைதியாக உட்கார்ந்திருக்க முடிந்த மேக மித்ராவிற்கு பொருக்க முடியாது இருந்தது அங்கே "பாடுகிறேன்" என்ற பெயர் பண்ணிக்கொண்டு அவளின் காதை பஞ்சர் செய்துக்கொண்டு இருந்த அந்த சிகப்பு புடவை தான்.

இதற்கே தங்கள் வீட்டிலேயே மிகவும் பிரமாதமாக பாட கூடிய சௌவியிடம் பத்து முறை காதிலும் இருபது முறை கண் ஜாடையிலும் நீ பாடு என்று செய்கை செய்தாகி விட்டது...

ஆனாலும் அந்த சிகப்புப் புடவை விட்டால் தானே பாட முடியும்??

அடுத்து வந்த இரண்டு மணி நேரம் அழுத்தக்காரியான மங்கியை எந்த விதத்தில் சோதித்தது என்று சொல்ல வார்த்தைகள் இல்லை... விதவிதமாக விளக்குகளும் செடி கொடிகளுடன் மிக அழகாக அலங்கரிக்கப்பட்ட லாண் என்றாலும் கூட... கையையும் காலையும் நீட்டிக்கொண்டு அசையாமல் உட்காருவதே கொடுமை என்றால்... துரு பிடித்துப் போன தகர டப்பாவில் கூலாங்கல்லை வைத்து தேய்ப்பது போல் ஒரு குரலை வைத்துக்கொண்டு அதற்கு ஸ்ருதி சேர்க்க ஒரு டோலக்கை அடித்துக்கொண்டு இருந்த அந்த சிகப்பு புடவை அம்மணியை கழுத்தை நெறிக்க தூண்டியது என்றால்..

தன் பாட்டி நாட் நாட் செவன் காக்கா வலிப்பு வந்தது மாதிரி ஆடும் டேங்கோ ஆட்டத்தையே சூப்பர் என்று பாராட்டும் அளவு இங்கே அண்டங் காக்க வலிப்பு, கருங்குரங்கு வலிப்பு வந்த மாதிரி உறவினர் பட்டாளம் ஆட.. தன் போதாத நேரத்தை நொந்துக்கொண்டு அமர்ந்திருந்த மேக மித்ராவிற்கு அருகில் இருந்த சங்கியை பார்த்து பொறாமை மூச்சு விட்டாள்!!

பின்னே இந்த ரணகளத்திலும் அவளால் தூங்க முடிகிறதே என்ற பொறாமை தான்!!! கையை நீட்டியபடி பாட ஆரம்பித்த பத்தாவது நிமிஷத்தில் தூங்கி விட.. இவள் பாடுதான் கடந்த

இரண்டு மணி நேரத்தில் சகிக்க முடியாத எல்லையை தாண்டி கொலை வெறியாக மாறிக்கொண்டு இருந்தது!!

இந்த விழாவில் ஆண்கள் பங்கு பெற அனுமதி இல்லை என்பதால் இவளை வச்சு செய்வதற்காகவே சிகப்பு புடவையை அழைத்திருப்பானோ என்று ரஃபிக்கின் மேல் சந்தேகம் வர.. அப்பொது தான் விடிவெள்ளியாய்.. தன் கையில் தீட்டு தீட்டு என்று தீட்டிக்கொண்டு இருந்த அந்த மெகந்தி பெண்... தலையை உயர்த்தி ஏதோ உருது மொழியில் சொல்ல... கடந்த இரண்டு மணி நேரமாக இப்படிதான்.. ஒரு மண்ணாங்கட்டியும் புரியாத மொழியில் கேட்டு உயிரை எடுத்த போதும்.. எப்பயும் போல் அமைதியாக தலையை ஆட்ட... சிரித்தப்படி எழுந்து நகர்ந்தாள் அந்த பெண்!!!

"விடுதலை விடுதலை.." என்று கத்தி பாட வேண்டும் போல் இருந்தது!!! பின்னே அவளுக்கு மெகந்தி போட்டு முடிந்தாகி விட்டதே என்ற சந்தோஷமும், நிம்மதியும் போட்டி போட.. குனிந்து தன் கையை பார்த்தவளுக்கு அத்தனை நெளிவு சுளிவுடன் வரைந்தவளின் கலா ரசனையை கண்டு பாராட்டாமல் இருக்க முடியவில்லை!!!

அதற்கும் மேலும் அங்கே உட்கார்ந்து இருக்க பிடிக்காது சற்று தூரத்தில் அமர்ந்து யாருடனோ பேசிக்கொண்டு இருந்த அண்ணிகளிடம் கையை காட்டி இதோ வருகிறேன் என்று

சொல்லி விட்டு ஐந்து கிலோ எடை உள்ள லெகங்காவை அணிந்து கொண்டு நடக்க முடியாவிட்டாலும் கூட மெல்ல தத்தி.. தத்தி... லாணின் அலங்காரத்தை ரசிப்பது போல் அந்த தகர டப்பாவின் குரலும், டோலக்கும் காதில் விழாத தூரத்திற்கான தன் பயணத்தை தொடங்கினாள்!!!

"எங்கே போகிறாய்?" என்று முதுகிற்கு பின்னால் இருந்து கேட்ட ரஃபிக் குரலை கேட்டு திடுக்கிட்டு திரும்பியவளின் கால்களை நீண்ட பாவாடை வாரி விட... கீழே விழப்போனவளை இடையோடு பிடித்து நிறுத்தியவன்....

"இதை கட்டிக்கொண்டு உனக்கு நடக்கவே வராது இதில் மெகந்தி வேற வைத்துக்கொண்டு எங்க ஓடுற மேகி?" என்று அதட்டலாக வந்தது அவனிடம் இருந்து.

கண்கள் கனல் மின்ன அவனை முறைத்தவள்.. "ஒரு ஐந்து நிமிஷம் அங்கே உட்கார்ந்து பார்த்தால் ஏன் ஓடுகிறேன் என்று புரியும்"

"ஓ.. நூறி பாடுகிறாளா?" என்று மிக துள்ளியமாக கேட்டான்.

"அது நூறியா இல்லை பாரியான்னு எனக்கு தெரியாது.. ஆனால் அந்த நாரியமணி பேசுவதற்கு கூட வாயை திறக்காமல் இருந்தால் நாய்ஸ் பொலியூஷன் குறையும்..." என்று முனுமுனுத்துக்கொண்டு இருக்கும் போதே அவன் பிடியில்

இருந்து திமிரிக்கொண்டு ஒரு அடி பின் எடுத்து வைத்தவளின் கால்கள் மீண்டும் இடற... கீழே தலை குப்புற விழாமல் இருப்பதற்காக அருகில் இருந்த ரஃபிக்கின் மேல் சாயந்தாள்.

"ம்ம்.." என்று அலுப்புடன் பெரு மூச்சு விட்டவன்... "உன்னை எல்லாம்.." என்று முனுமுனுப்புடன் பட்டென்று குனிந்து அவளின் இடையை பிடித்துத் தூக்க..

"என்ன பண்ற ரஃபிக்?" என்று உடலை நெளித்து அவளை விடுவித்துக்கொள்ள முயலும் போதுதான்... கிட்ட தட்ட மூன்று மணி நேரம் உட்கார்ந்து போட்ட மெகந்தி அழிந்துவிடுமோ... என்று கவலையும் அப்படி அழிந்துவிட்டால் எங்கே மீண்டும் உட்கார வேண்டி வருமோ என்ற பயம் நெஞ்சை அடைக்க..

"ஐய்யோ என் மெகந்தி..." என்று அலறியப்படி தன் கையையும் காலையும் எதிலும் உரசாத வண்ணம் உயர்த்த... இப்படியும் அப்படியுமாக ஆட்டிய விதத்தில் பேலன்ஸ் இல்லாது அவன் பிடியில் இருந்து திமிரி கீழே விழப்போனவளை இருக்கி பிடித்து மார்ப்போடு அணைத்தான் ரஃபிக்.

அழுத்திய வேகத்தில் முகம் நேராக அவனின் பறந்த மார்பில் உராய.. உஷ்ண உடம்பை கொண்டவனின் தேகத்தில் இருந்து வந்த கதகதப்பு காந்த சக்தியை உணர்ந்தவுடன் எழுந்து நிற்கும் இரும்பு துகள்கள் போல் அவளின் உடம்பின் ஒவ்வொரு அணுவிலும் அவனை உணர... உச்சந்தலை முதல் உள்ளங்கால்

வரை ஒரு பரபரப்பு தொற்றிக்கொள்ள அவளையும் அறியாது முகத்தை மார்பில் அழுத்தி புதைக்க... அப்பொழுதான் ரஃபிக் சட்டையை அணியாத வெற்று மார்பில் நிற்கிறான் என்ற உண்மை தாமதாக மூளைக்கு புரிந்த அதே சமயம்.. தூரத்தில்... சௌவியின் குரல் காதில் விழுந்தது!!

**தொலைதூரம் சென்றாலும்...**

**தொடுவானம் என்றாலும் நீ...**

**விழியோரம்தானே மறைந்தாய்..**

**உயிரோடு முன்பே கலந்தாய் ...!**

**இதழ் என்னும் மலர்கொண்டு..**

**கடிதங்கள் வரைந்தாய்!**

**பதில் நானும் தருமுன்பே**

**கனவாகி கலைந்தாய் ..!**

**பிடிவாதம் பிடி !**

**சினம் தீரும் அடி!**

**இழந்தோம்.. எழில் கோலம்!**

**இனிமேல் மழை காலம்..!!**

**மறு வார்த்தை பேசாதே!**

**மடிமீது நீ தூங்கிடு!**

**இமை போல நான்காக்க..**

**கனவாய் நீ மாறிடு!!!**

மயங்கும் குரலால் செௌவியில் குரலைக் கேட்க.. குனிந்து அவளையே கண் இமைக்க மறந்து பார்த்துக்கொண்டு இருந்தவனின் முகத்தில் மிக மிக அரிதாகத் தோன்றும் அந்த பாவத்தையும் கண்ணுற்றவளுக்கு எப்பயும் போல் அந்த பார்வையில் லயித்து போய்... ரஃபிக்கின் அருகாமை உலகத்திற்கு அவர்களுக்குமான தொடர்பை அறுத்து அவனை தவிர வேறு எதுவுமே இல்லை என்னும் படியான மாய சுவற்றை எழுப்பி அவர்களுக்கு மட்டுமே இருக்கும் படியான ஒரு தனி உலகத்தை சிருஷ்டிக்க...

முதல் முறையாக அவனை பார்க்கும் போது கூட இப்படியே மார்ப்பில் சாய்ந்திருந்தோம் என்று எண்ண அலைகள் அவளை முழ்கடித்தது!!!

விலங்குகளுக்கான மருத்துவ முகாம் என்று அறிந்தாலே முதல்ஆளாக கிளம்பும் மேக மித்ராவிற்கு நடக்க விருக்கும்குதிரைகளுக்களான முகாமை பற்றி கேள்விப்பட்டவுடன் எங்கேஎன்று கூட கேட்காது எப்பயும் போல் ஊருக்கு முன்னாடி பெயரை கொடுக்க... இந்த முகாம் தன் வாழ்க்கை பயணத்தை எப்படி மாற்றி அமைக்க போகிறது என்ற உண்மை அறியாது குதூகலமாகஹைத்ராபாத்தில் புறப்பட்டாள் மேக மித்ரா!!!

பெரும் பாலும் இந்த மாதிரி விலங்குகளுக்கான முகாமை நடத்துவது தொண்டு நிறுவனமாக தான் இருக்கும் ஆனால் இந்த முறை ஒருங்கிணைத்தவர்கள் தொழில் ரீதியாக வெற்றிகரமாக "போலோ கிளப்" நடந்தி வரும் நிறுவனம் என்பதை அறிந்த போது ஆச்சரியமாக இருக்க.

அதை விட ஆச்சரியமாக ஊரை விட்டு நூறு கிலோ மீட்டர் தள்ளி, பெரும் பணக்காரர்கள் மட்டுமே உறுப்பினர்களாக இருக்க கூடிய போலோ கிளப்பில் டாக்டர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருப்பதை கேட்டு திகைத்தவளுக்கு விடை... அங்கு சென்று குதிரைகளைப் பார்த்த பிறகு புரிந்தது!!!

பத்து குதிரைகள் இருக்கும் என்று அசட்டு தனமாக நினைத்துக்கொண்டு சென்றவளுக்கு நூற்றுக்கும் மேற்பட்ட விதவிதமான குதிரைகளை கொண்ட பெரும் பண்ணையே அங்கே இருக்கும் என்று கனவிலும் எதிர்பார்க்கவில்லை!!!

மாலை வந்து சேர்ந்த போதும் ஓதுக்கப்பட்ட அறைக்கு கூட போகாது டாக்டர்களுடன் ஆர்வமாக குதிரைகளைப் பார்வையிட்டவள் மறுநாள் தங்கள் வேலையை தொடங்க என்னென்ன செய்ய வேண்டும் என்று பேசியப்படி பத்து மணி அளவில் திரும்பியவளுக்கு எத்தனை திட்டம் போட்டு கட்டம் கட்டி ஒரு செயலை தொடங்கினாலும்... அதை எல்லாம் உடைத்து எறியும் விதமாக வாழ்க்கை எப்படிப்பட்ட சவாலான

சூழ்நிலையை வீசி அவளை தலை குப்புற வீழ்த்த காத்துக்கொண்டு இருக்கிறது என்பதை அறியாது சந்தோஷ களிப்பில் தூங்கச் சென்றாள்!!!

முனுக்கு என்று சத்தம் கேட்டாலே விழித்துக்கொள்ளும் பழக்கம் உடையவள் என்பதை அறிந்த டாக்டர்கள் முடிந்தவரை வெளியூர் வந்து தங்கும் இடங்களில் இவளுக்கு மட்டும் தனி அறை ஒதுக்குவார்கள் என்பதால் களைப்பில் அயர்ந்து தூங்கி தாமதமாக எழுந்தவள்... தூக்க கலக்கத்தில் பாத் ரூம் கதவை திறப்பதாக நினைத்துக்கொண்டு பால்கனி கதவை திறக்க.. அங்கே விரிந்த காட்சி கண்களை குளிர செய்தது.

கட்டிடத்திற்கு பின்னால் கண்ணிற்கு எட்டிய தூரம் வரை பச்சை பசேல் என்று அடர்ந்த காடும்... அதற்கு மத்தியின் நடுவே திட்டு திட்டாக பாறைகளை கொண்ட ஹைத்ராபாத்தை குதூகலம் பொங்க ரசித்துக்கொண்டு இருந்தவளுக்கு.. எங்கோ சற்று தூரத்தில் பலர் கை தட்டி கூச்சல் இடும் சத்தம் கேட்க.. என்னவாக இருக்கும்? என்று எண்ணியப்படி அவசரமாக குளித்து தன் ஆஸ்தான உடையான கேப்ரியும் டிசர்ட்டையும் அணிந்துக்கொண்டு வேகமாக கதவை மூடிவிட்டு படி இறங்கி இரைச்சல் வந்த திசையை நோக்கி சென்றாள்.

புல் மைதானத்தில் இரு வீரர்கள் குதிரையில் மேல் அமர்ந்தப்படி ஆள் மாற்றி ஆள் பந்தை தட்டி சென்றப்படி

ஆடிய போலோ ஆட்டத்தை பார்த்து தான் பவுன்டரியை ஒட்டிய புல்தரையில் அமர்ந்திருந்திருந்த நூற்றுக்கணக்கான பார்வையாளர்கள் கை தட்டி ஆரவாரம் செய்தனர்!!!

இப்படி ஆரவாரம் செய்யும் அளவு என்ன நடக்கிறது என்று தலையை திரும்பி ஆட்டத்தை உன்னிப்பாக பார்த்தவளுக்கு மஞ்சள் மற்றும் நீலமும் கலந்த உடையில், போலோ காகில்ஸ் அணிந்து, நீல நிறத்தில் முக கவசம் அணிந்த நான்கு நபர் கொண்டவர் ஒரு அணியாகவும், அதே போல் பச்சை சட்டை அணிந்தவர்கள் மற்ற அணியாகவும் ஆக்கரோஷமாக மோதிக்கொள்வது புரிந்தது.

ஹாக்கி ஆட்டத்தை போல் இருக்கும் இந்த போலோ விளையாட்டை குதிரையில் அமர்ந்தப்படி விளையாடுவார்கள் என்பது தவிர மற்றப்படி இதை பார்த்தரியாதவளின் கண்களுக்கு சின்ன வெள்ளை பந்தை துரத்திக்கொண்டு... எதிரெதிரே அதிவேகமாக குதிரையின் மேல் இருந்த வீரர்கள் மோதிக்கொள்வது போல் நாலு கால் பாய்ச்சலில் பாய்ந்து வருவதை கண்டு "திக்... திக்" என்று மனது அடித்துக்கொண்டது!!!

ஓடி வரும் வேகத்தில் மோதினால் உட்கார்ந்திருக்கும் ஆட்களுக்கு என்ன ஆகும் என்ற பயத்தை விட... ராஜ கம்பிரமாக காற்றை கிழித்துக்கொண்டு துள்ளி வரும் அந்த

கருப்பு நிற அரேபியன் குதிரைக்கு என்ன ஆகுமோ என்ற பதைபதைப்புடன் தன்னையும் அறியாது குதிரையை பார்த்தப்படி நடந்தாள்!!!

ஆனால் இவள் பயந்தது போல் குதிரைக்கு எந்த வித ஆபத்தும் இல்லாமல் அந்த மூன்றாம் நம்பர் சட்டை அணிந்த வீரன் ஒருகையால் மிக லாவகமாக குதிரையை கையாண்டப்படியே மறுகையால் பந்தை அடிக்க... மீண்டும் மைதானமே அதிரும் படி கரகோஷம் எழும்பியது.

அந்த வீரனை பாராட்டியே ஆக வேண்டும் இல்லை என்றால் ஒருகையால் அத்தனை பெரிய குதிரையை சமாளிப்பது எத்தனை சவால் என்று குதிரை ஓட்டம் பயின்ற அவள் அறிவாள்!!! இவனுக்கு தான் இத்தனை ஆரவாரமா? என்று புரியத் தொடங்க...

அந்த முன்றாம் நம்பர் குதிரைக்காரனுக்கு விசிறிங்க கூட்டம் அதிகம் போல என்று நினைத்தவளுக்கு... ஒரு நொடிக்கு முன்பு கத்தி ஆரவாரம் செய்த கூட்டம் இப்போ சட்டென்று கப்சிப் என்று அடங்கி.. எல்லோர் முகமும் அவள் இருக்கும் திசை பக்கம் திரும்பியது!!!

ஏன் எல்லோரும் இந்த புறம் பார்க்கிறார்கள் என்று யோசித்தப்படி அவளும் தனக்கு பின்னாடி திரும்பி பார்க்க...

ஓரே முட்புதராக இருந்ததே தவிர வேறு ஒன்றும் வித்தியாசமாக தெரியவில்லை...

பின்னே ஏன்? என்று மூளை கேள்வி எழுப்ப.. அப்போ தான் புரிந்தது எல்லோரும் தனக்கு பின்னால் பார்க்க வில்லை... ஒரு திகலுடன் தன்னை தான் பார்க்கிறார்கள் என்று உணர... ஏன் இப்படி வெறிக்கிறார்கள்?? என்று அவள் பின் வாங்கும் போதுதான்...

அந்த மூன்றாம் நம்பர் குதிரை வீரன் தன்னை நோக்கி நாலுகால் பாய்ச்சலில் சீறிக்கொண்டு வர.... என்ன நடக்குது இங்க?? என்று உணரும் முன் நடு மண்டையில் "நங்"கென்று எங்கிருந்தோ வந்த பந்து அவள் தலையில் விழ... பட்ட பகலிலேயே கண்களுக்கு முன்னால் நட்சத்திரம் தெரிய... "வின்" என்ற தலையே தெறித்து விழும்படியான வலி அவளை ஆட்கொள்ள.. தலையை பிடித்தப்படி கால்கள் தள்ளாட கீழே விழ போனவளை பறந்து வந்த அந்த குதிரைக்காரன்... லாவகமாக அவள் புறம் சரிந்ததோடு மட்டும் அல்லாது கண் இமைக்கும் நேரத்தில் அவள் இடையை பிடித்து தூக்கி தன் குதிரையில் உட்கார வைத்தான்!!!

என்ன நடக்கின்றது என்று உணரும் முன் அவள் குதிரைக்காரனின் அருகில் அமர்ந்திருக்க.. ஹெல்மட் போட்டு மறைந்திருந்த முகத்தை கூட நிமிர்ந்து பார்க்க முடியாதப்படி

பாரமாக கணத்த தலையை அவனின் பறந்த மார்ப்பிலேயே சாய்ந்தவள் "என் முன் ஜென்மம் கூட ஞாபகத்திற்கு வரும் அளவு தலையில் அடித்து விட்ட பிறகு இப்ப தூக்கி என்ன பயன்?" என்று கிசுகிசுத்தாள்.

தலையில் பால் அடித்த போது கண்ணில் நட்சத்திரம் தெரிந்தது என்றால் அவன் சொன்ன பதிலால் கண்ணில் சூரியனே தெரிந்தது என்று தான் சொல்ல வேண்டும்.... என்று தன்னை எங்கோ இழுத்து சென்ற நினைவுகளை கலைக்கும் விதமாக..

"என்ன? நம் முதல் சந்திப்பை பற்றி நினைக்கிறாயா??" என்று மிக துள்ளியமாக கணித்து கேட்டான் ரஃபிக் அல்வுமர் அலிக்கான்.

இதுதான் அவள் அறிந்த ரஃபிக்.. பத்தடி தூரத்தில் இருந்தாலும் கூட மனதில் நினைப்பதை கணிக்க கூடிய திறம் படைத்தவன் என்று என்னும்போது அவன் மார்ப்பிலேயே ஒய்யாரமாக சாய்ந்துக்கொண்டு அவனை பற்றியே நினைத்தால் கேட்கத்தானே செய்வான்? என்று மனது பொருமிய போதும் கூட ஏனோ கதகதப்பாய் அவளை சூழ்ந்திருந்த அவனையும்.. இருவருக்கும் மத்தியில் நடந்த ஓராயிரம் விஷயங்களும் எண்ண குவியலாய் அவளை முழ்கடிக்க... அவனின் அருகாமையில் இருக்கும் வரை இப்படிதான் மூச்சு முட்டும் என்று உணர்ந்து...

திமிரிக்கொண்டு கையில் இருந்த மருதாணியை மறந்து அவன் வெற்று மார்ப்பில் தன் கையை வைத்து தள்ள.. லேசாக அவனின் பிடி தளர்ந்த நொடி கீழே குதித்து இறங்கினாள்.

"ஆர் யூ மேட்?" என்றான் முதல் முறையாக கடுப்பாக ரஃபிக்.

"நீங்க தூக்கிக்கொண்டு இருப்பதை யாராவது பார்த்தா..." என்று சுற்றி பார்க்கும் பொழுதுதான் விழா நடந்துக்கொண்டு இருந்த லானில் இருந்து அவர்களை அரண்மனைக்குள் வந்திருக்கிறார்கள் என்றே புரிந்தது!!!

"நாம் இப்ப எங்க இருக்கோம்?!?" என்றாள் மனது திக்திக் என்று அடித்துக்கொள்ள.

"வீட்டிற்குள்" என்றான் அமைதியாக.

அவன் தூக்கிக்கொண்டு வந்ததே தெரியாமல் கடந்தகாலத்தில் மூழ்கி இருந்தது ஒருபுறம் என்றால் அங்கே மணப்பெண்னை காணவில்லை என்றால் எப்படிப்பட்ட கலவரம் வெடிக்கும் என்று அறிவாள் அதுவும் அவர்கள் நாட் நாட் செவன் பாட்டி ஒன்றே போதும்.. என்று மனது பதறியது.

"அது தெரியுது ரஃபிக்.. நம்மை இப்படி பார்த்தாங்கன்னா என்ன நினைப்பாங்கன்னு யோசித்து பார்த்தியா? என்றாள் பதட்டமாக.

"இரண்டு நாளில் கல்யாணத்தை வைத்துக்கொண்டு சேர்ந்து பார்த்தா என்ன நினைப்பாங்க?" என்று குறுக்கே கைகளை கட்டியப்படி அவளை நெருங்கி நின்றான்.

"எத்தனை பேர் என் காது படவே எப்படி எல்லாம் பேசினாங்கன்னு உனக்கு தெரியாது ரஃபிக்.. அவர்கள் சொன்னதற்கும் சொல்லாதற்கும் உருவம் கொடுத்து விடாதே.." என்றாள் கோபமும் விரத்தியும் போட்டி போட பின்னால் இரண்டு அடி எடுத்து வைத்தப்படி.

மூச்சு காற்று படும் தூரத்தில் அவள் முன்னால் நகர்ந்து நின்றவன் "என்ன சொன்னாங்க?" என்றான் உணர்ச்சியே இல்லாத அடிக்குரலில்.

"என்ன எதுவுமே புரியாது மாதிரி கேட்கற?? விழாவிற்கு வந்தவங்க பாதி பேருக்கு உன் நிச்சயதார்த்தம் ஏன் நின்றது என்ற காரணம் தெரிந்துக்கொள்ள வேண்டி இருந்தது என்றால் மீதி பேருக்கு இந்த திடீர் கல்யாணத்திற்கான காரணம் தெரிய வேண்டி இருந்தது!!!" என்றாள் கண்ணில் ஏதோ வலி போல் வந்து போக அதை மறைக்க முடிந்தவளால் அவளின் குரலில் அப்பட்டமாக தெரிந்த வலியை மறைக்க வழி தெரியவில்லை.

"என் செயலுக்கான காரணத்தை சொல்லும் தைரியம் எனக்கு உண்டு மேக மித்ரா" என்றான் அசராமல்.

"அதுதான் கொடுமையே... இதை செய்த உன்னிடம் கேட்காமல் என்னிடம் தான் கேட்கறாங்க" என்று சொல்லும் போது அந்த குரலில் இருந்த துவேஷம் அவனை அலை அலையாக தாக்கிய போதும் எப்பயும் போல் அமைதியாக நின்றவன்.

"யாரோ நாலு பேர் கேட்கறாங்கன்னா நீ ஏன் பயப்படற மேக மித்ரா?" என்றான் நம்பாத குரலில்.

"நான் ரோட்டில் போற யாரோ நாலு பேர் கேட்டிருந்தா அதை பற்றி கவலை பட்டு இருக்க மாட்டேன்.. ஆனா கேட்பது உங்க நூற்றியெட்டு கசின்களில் ஒருத்தராக இருக்கும் போது? எழுபது வயது முதியவர்களாக இருக்கும் உன் சித்தப்பாவா இருக்கும் போது? என்ன பதில் நான் சொல்ல நவாப் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான்?" என்று பாயிண்ட் ப்ளாங்கில் கேள்வி கேட்டாள் மேக மித்ரா!!

# அத்தியாயம் 5

**நா**ன் தெருவில் போகும் யாரோ நான்கு பெயர் கேட்டிருந்தா அதைப்பற்றி கவலைப் பட்டு இருக்க மாட்டேன்.. ஆனால் கேட்பது உங்கள் நூற்றி எட்டு கசின்களில் ஒருத்தராக இருக்கும் போது? எழுபது வயது முதிய உங்கள் சித்தப்பாவாக இருக்கும்போது? என்ன பதில் நான் சொல்ல நவர் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான்?" என்று ப்யிண்ட் ப்ளாங்கில் கேள்வி கேட்டாள் மேக மித்ரா!!

அதிகம் பேசாத மேக மித்ரா பேசினாள் இப்படிதான் அணு குண்டாய் அதிரும்!!!

"கேள்வி கேட்பவர்களுக்கு எல்லாம் நீ பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை... ஒன்றும் தெளிவாக புரிந்துகொள் மேகி.. என்னையும் அம்மாவையும் தவிர நீ யாருக்கும் பதில் சொல்ல வேண்டிய கடமை இல்லை..." என்றான் மிகத்திடமாக.

"உங்க அம்மாவிற்கும், உங்களுக்கும் பதில் சொல்ல வேண்டிய கடமை எனக்கு இருக்கு என்றால் அப்ப யாரிடம் உங்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய கடமை இருக்கு?" என்றாள் ஆவேசமாக.

லேசாகத் தலையை சரித்து அவளை தெனாவட்டாக பார்த்தவன் "யாரிடமும் இல்லை... நவாப்பாக இருப்பதில் இருக்கும் பல சௌகரியங்களின் இதுவும் ஒன்று"

கண்களை மூடி ஒரு நிமிஷம் தன்னை நிதானித்தவள் "யாருக்கும் பதில் சொல்ல வேண்டியதில்லை என்ற திமிரில் தானே ஒரு பெண்ணை நிச்சயம் பண்ணிவிட்டு இன்னொரு பெண்ணை கல்யாணம் செய்துகொள்ள துணிந்திங்க?" என்று கத்திவீச்சாக வந்தது மேக மித்ரவாவிடம் இருந்து.

அவளின் போராட்டத்தை எதுவும் பேசாது உற்று பார்த்தபடிஅப்படியே இடித்த புளியாக நின்றான்.

"என் கேள்விக்கு பதில் சொல்லுங்க ரஃபிக்" என்றாள் அழுத்தமாக.

"ஆனாலும்.. உனக்கு இவ்வளவு மறதி கூடாது மேகி. இப்பத்தானே சொன்னேன் நான் யாருக்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.. அதில் நீயும் அடக்கம் என்பதை மறந்து விட்டாய் போல" என்றான் இடக்காக.

"ரஃபிக்... உன்னை நான் அறையும் முன் இங்கிருந்து போய் விடு" என்று அவள் குரல் திடமாகத் தெறித்து விழுந்த போதும்... முகத்திலோ அறை வாங்கியது போல் அப்பட்டமாகத் தெரிந்தவலியைக் கண்டும் காணாதது போல் நின்றான்.

"அறைய மாட்டேன் என்ற திமிர் இல்லையா?" என்றாள் கடுப்பாக..

"ம்கூம்.. உன்னால் என்னை அறைய முடியாது என்ற திமிரில் பேசுகிறேன்" என்றான் கர்வமாக.

குறிப்பாக அவளுடைய கைகளை பார்த்தபடி நிற்க... அப்பொழுதுதான் அந்த செயலின் அர்த்தம் புரிய தொடங்கியது...

"கையில் மேகந்தி இருக்கு உன்னால் அறைய முடியாது" என்றான் நக்கலும் நய்யாண்டியுமாக ஒரு வித இளிப்புடன் மொழிந்தவன் "வேண்டுமானால் ஒன்னு பண்ணு..." என்று பேசும் போதே..

"கோ டூ ஹேல்" என்று வெறுப்பாக மொழிந்துவிட்டு அவனை விட்டு இரண்டு அடி எடுத்து வைத்து நகர..

"அங்க போனாலும் உன்னையும் அழைத்துக்கொண்டு தான் போவேன் மேகி" என்றான் அவளின் வழியை மறித்து நின்றபடி.

விரத்தியாகச் சிரித்தவள் "நீ கஷ்டப்பட்டு அங்கே அழைத்துக்கொண்டு போக வேண்டிய அவசியமே இல்லை ரஃபிக்...உன்னுடன் இருக்கும் ஒவ்வொரு நிமிடமும் நரகம் மாதிரிதான் உணர்கிறேன்.. நீ பண்ணுவது எதையும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை" என்றாள் மிக மிகக் கடுப்பாக.

"நான் உன்னை ஏற்றுக்கொள்ளச் சொல்லவில்லையே..." என்றான் சவாதானமாக.

"பின் என்ன செய்ய சொல்கிறாய் ரஃபிக் ??"

"என்ன செய்ய சொல்லலாம் என்றால்..." என்றப்படி அவளை ஒரு மாதிரி மேலேயும் கீழேயும் பார்த்தவன்.. "நீ அதுக்கு எல்லாம் சரிப்பட மாட்ட... வேண்டும் என்றால் என் மேல் நல்லா கோபப்படு.. யார் வேண்டாம் என்றது??" என்றான் ஏதோ பெரிய வழி கண்டு பிடித்து சொல்வது போல்.

"எனக்கு வேண்டியதை செய்யும் திராணியின்றி இருக்கும் போது.. உனக்கு வேண்டியதைப் பற்றி எனக்கு என்ன வந்தது ரஃபிக்??" என்றாள் மேல் மூச்சு வாங்க.

"சளி பிடித்து மூச்சு விடச் சிரமமா இருக்கு என்பதால் மூச்சு விடாமல்இருந்து விடுவோமா மேகி??" என்றான் ரஃபிக் மிக சாதாரணமாக.

"நான் உன்னைப் பிடிக்க போகும் சளி இல்லை ரஃபிக் ... சாகும் வரை உன்னுடன் இருக்கப் போகும் ஆஸ்துமா.. வந்தால் போகாது" என்றாள்விடாப் பிடியா.

"பரவாயில்லை ஆஸ்துமாவோட வாழ பழகிக் கொள்கிறேன்... கண்களை மூடினால் மறையும் காட்சி போல் உன்னை மறைக்க முடிந்தால் இத்தனை தூரம் இதை வளர

விட்டு இருப்பேன் என்றா நினைக்கிறாய் மேக மித்ரா?" என்றான் எந்த உணர்ச்சியும் இல்லாதகுரலில் ரஃபிக்.

என்ன சொல்ல வருகிறான் என்ற பொருள் புரியாது "புரியலை" என்றாள் கண்கள் யோசனையில் சுருங்க.

யோசனையில் ஆழ்ந்திருந்த முகத்தைப் பார்த்தவனின் கண்கள் சொல்லொன்னாத உணர்ச்சி வந்து போக.. இப்படி வெகு அரிதாகத்தோன்றும் உணர்ச்சிகளைக் காண தவற விட்டாள் மேக மித்ரா எப்பையும் போல்!!!

"புரிவதற்கும் புரியாதவற்றுக்கும் இருக்கும் இடைவேளை தான் வாழ்க்கை..." என்றான் ரஃபிக்.

ஏற்கனவே சொன்ன வார்த்தையின் அர்த்தம் புரியாது நின்றவளை பார்த்து அவன் இன்னும் குழப்பும் விதமாகப் பதில் சொல்ல "கேள்வி கேட்டால் தத்துவம் பேசறிங்களா?" என்றாள் சுருதி ஏற.

"உனக்கு புரியாததால் தத்துவமாக தெரிகிறது.. எனக்குப் புரிந்ததால்வாழ்க்கையாக தெரிகிறது" என்று விநோதமான ஒரு பதில் கொடுத்தான் ரஃபிக்.

"ரஃபிக்..." என்று ஆத்திரமாக அழைத்தவள்.. "உனக்குத் தான் வாழ்க்கையின் தத்துவம் எல்லாம் புரியுமே.. அப்ப எதற்கு?...." என்று அவள் வாயைத் திறக்கும் முன் அவசரமாக முன்னாடி வந்து நெருங்கி நின்றவன்...

"எதற்கு என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்கிறாய் என்று தானே கேட்கிறாய்?" என்று அவள் ஆரம்பித்ததை அவன் முடித்து வைத்தான்.

அவள் கேட்க நினைத்த கேள்வியை எப்படி இவன் கேட்கிறான் என்று நெருங்கி நின்றிருந்தவனின் முகத்தைக் பார்த்தவளின் பார்வை அவனின் கூர்மையான விழியோடு கலந்தது.

எங்கோ வானத்தில் இருக்கும் நிலவின் எதிரொளியாய் பூமியில் பொங்கும் அலை கடல் போல் அந்தக் கூரிய பார்வையின் எதிரொளியாய் அவளுக்குள் அலைகள் போல் உணர்ச்சிகள் பொங்கி எழும்ப.. அதை இன்னும் அதிகப் படுத்து விதமாக...அவள் காதின் புறம் குனிந்தவன்...

"நான் கேட்கும் ஒரே ஒரு கேள்விக்கு பதில் சொல்லு... அப்புறம் உன் கேள்விக்கு நான் பதில் சொல்கிறேன்" என்றபடி நிமிர்ந்தவனின் கண்கள் அவளை விழுங்கின.

ரஃபிக்கின் அருகாமையும், காது மடலில் உரசிய பேச்சும் தொண்டையை அடைக்க.. "என்ன?" என்று பார்வையாலே கேள்விக்கணை விடுத்தாள்.

"இனி இந்த ஜென்மத்தில் என்னுடன் பேச மாட்டேன் என்று சபதம்செய்துவிட்டுப் போன பிறகு எதற்கு பத்து தடவை கால் பண்ணினாய்?" என்றான் நிறுத்தி நிதானமாக.

இதற்கு என்ன பதில் சொல்லுவாள்?

அவளின் நிலையை அறிந்தவன் போல் "சொல் மேகி.." என்று திடமாக கேட்டான்.

ஏற்கனவே நிலை தடுமாறி ஓடிக்கொண்டு இருந்த இதயம் தடம்புரள.. அவனை அரண்டு போய் தடுமாற்றத்துடன் பார்த்தவள்.. "நானா உங்களுக்கா??"

"ம்ம்.. நீயே தான்.." என்றான் அக்கரையாக.

"நான்.. நான் எதற்கு செய்யினும்?? இப்ப நீங்க தானே சொன்னிங்க பேசவே மாட்டேன் என்று சபதம் போட்டதாக பின் எதுக்கு நான் செய்ய போகிறேன்?" என்று ஒரு வழியாக சமாளித்து விடாமல் கேட்டாள்.

"அதே தான நானும் கேட்கிறேன்.. எதுக்கு?"

"என் போனில் இருந்து நான் அழைக்கவே இல்லை" என்றாள் முறைப்பாக முகத்தை வைத்துக்கொண்டு.

"நீ அழைத்தாய் என்று சொன்னேனே தவிர உன் போனில் இருந்து என்று நான் சொல்லவில்லையே.." என்றான் அரத பழசான சினிமாவை பார்க்கும் பாணியில் கைகளை குறுக்கே கட்டிக்கொண்டு... என்ன கொட்டாவி விடாதுதான் பாக்கி...

"அப்படின்னா?" என்றாள் கைகளை பிசைய முடியாத தவிப்பில்.

"ஒவ்வொரு முறையும் வேறு.. வேறு.. நம்பரில் இருந்து.."

"இது என்ன பேத்தல்.. யாரோ உங்களை கால் பண்ணினா உடனே அது என்னுடையாதா?" என்றாள்.

"உன் மொபைல் நம்பரை யார் யாரிடம் கொடுத்தாய் என்று நினைவு தெரியாமல் இருக்கலாம்.. ஆனால் என் பர்சனல் மொபைல் நம்பரை யாருக்கு கொடுத்தேன் எப்ப கொடுத்தேன் என்று எனக்கு நன்றாக தெரியும்" என்றான் கண்களில் ஹாஸ்சியம் மின்ன.

"அப்படி நான் தான் போன் பண்ணினேன் என்றால் எனக்கு தெரியாது நான் என்ன பேசினேன்??"

இம்முறை அவன் முகத்தில் நிஜமாகவே சிரிப்பு மலர.. "பேசினேன் என்று சொல்லவில்லை போன் பண்ணினாய் என்று தான் சொன்னேன். அதாவது.. என் மொபைலுக்கு போன் பண்ணி என் குரலை கேட்டவுடன் கட் பண்ணி விடுவாய்.."

"உங்களுக்கு விபத்தில் காலில்தான் அடிப்பட்டதாகச் சொன்னார்கள் இப்பதான் தெரிகிறது மண்டையிலும் சேர்த்து அடிப்பட்டிருக்கிறது போல.." என்றாள் எகத்தாளமாக.

லேசாகச் சிரித்தவன்.. "கவலைப்படாதே.. மண்டையில் அடிப்பட்டு பழசை எல்லாம் மறந்திருந்தால் அன்று நான் சொல்லியபடி.. நீயேஎன்னைத் தேடி வர வைக்கும் படி செய்திருக்க மாட்டேன்.. மேகி..." என்றான் ராஜ கர்வமும், அங்காரமும் போட்டி போட.

சித் மற்றும் சங்க மித்ராவின் திருமணம் மாப்பிள்ளையை மாற்றிக்கடத்தி வந்துவிட்டதால் தான் நடந்ததது என்று சச்சிதேவ் வீட்டில் எல்லோரும் நினைத்துக்கொண்டு இருக்க... காக்கா உட்கார பனம்பழம் விழுந்த கதையாக அந்த சூழலை தனக்கு சாதகமாக பயன் படுத்திக்கொண்டானே தவிர... அந்த திடீர் திருமணம்அரங்கேறியதற்கான சூத்திரதாரி ரஃபிக் தான் என்பதை மேக மித்ராவையும் தவிர யாரும் அறிய மாட்டார்கள்.

அதுவும் அவளால் தான் எந்த குறையும் இல்லாது அரங்கேற்றப்பட்டது என்பதை வாய் திறந்து யாரிடமும் சொல்லவும் மாட்டாள்!!!

"நீங்க நினைத்ததை சாதித்து விட்டதாக மார் தட்டிக்கொள்ள வேண்டாம் ரஃபிக். மற்றவர்களைப் பற்றிய அக்கரை எப்பஇருந்திருக்கிறது இன்று இருப்பதற்க்கு?" என்றாள் வெகுண்டு.

"உன் அக்கரையால் என்ன சாதித்து விட்டாய் என்று சொல்லு அதுஎனக்குச் சரி என்று பட்டதால் நானும் உன் பாலிசியை பின்பற்றிஅக்கரைப் படுகிறேன்.." என்றான் நக்கலாக.

"முதலில் சக மனிதர்களை மதிக்கவும், பிற ஜீவ ராசிகளுக்கு இந்தப்பூமியில் வாழம் உரிமை இருக்கு என்று நினைக்க தொடங்குங்கள் எனக்கு அதுவே போதும். கிழிந்து போனால் தூக்கி எரியும் சட்டையை போல் விலங்குகளின் அவசியம்

தீர்ந்ததும் "மூன்லைட்டை" தூக்கி எரிந்ததை போல் துரத்தாதிங்க.. அதுவே போதுமானது மற்றபடி அக்கரைப் படுவதெல்லாம் உங்களால் முடியாத காரியம்" என்று இகழ்ச்சியாகப் பேசி பின்னால் ஒரு அடி எடுத்து வைக்கும் போதே ஏதோ இடிக்க திரும்பி பார்த்தவளுக்கு....

அப்போதுதான் தெரிந்தது இது அவர்கள் செல்லும் பாதை இல்லை என்று புரிய கண்கள் அகல சுற்றி பார்த்தாள்..

"இது??"

"லாண் வழியாக வீட்டிற்குள் செல்லும் வேற்றுப் பாதை.."

"வாட்?? அப்ப சுரங்கப்பாதையா??" என்று கேட்கும் போது அவள் கண்ணும் வாயும் சேர்ந்து விரிந்தது.

"இது எல்லோருக்கும் தெரிந்த புழக்கத்தில் இருக்கும் பாதை... இந்த வீட்டில் ஏகப்பட்ட சுரங்கப்பாதை வழி இருக்க.." என்றுமொழிந்துகொண்டு இருக்கம் போதே.. யாரோ நடந்து வருவது போல் கேட்க...

"ம்.." என்று அவளை நெருங்கி நின்று அவன் திரும்பி பார்த்தான்.

பார்த்தவனின் கண்களும், அவனுக்கு அருகில் நின்று எட்டி யார் என்று திருப்பி பார்த்தவளின் கண்களும் ஒரே சமயத்தில் உரைந்தது..

அங்கே பாரம்பரிய உடை அணிந்து தலை முதல் பாதம் வரை மிடுக்காக நகை அணிந்து அரண்மனை முழுவதும் ஆங்காங்கே வைத்திருக்கும் சிலைகளில் ஒன்று உயிர் பெற்று நடந்து வந்ததை போல் அழகு பதுமையாக அமீரா நின்று இருந்தாள்!!!

அந்த அமீரா தான் நவாப் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகானிற்கு நிச்சயக்க பட்ட பெண்!!!

# அத்தியாயம் 6

**அ**ந்த அமீரா, மிர் ரஃபிக் அல்வுமர் அலிகானிற்கு நிச்சயக்கப்பட்டிருந்த பெண்!!!

அமீரா இங்கே?? அதுவும் இப்பவா?? எப்படி??? என்று மேக மித்ராவின்மனதில் கேள்விக்கு மேல் கேள்வியாய் அடுக்கிக்கொண்டு இருக்கும் போதே..

ரஃபிக்கிற்கு சலாம் வைத்த அமீரா.. அவன் பக்கத்தில் குத்துகல்லாக நின்று கொண்டு இருந்த மங்கியை பார்த்த மாதிரி கூடகாட்டிக்கொள்ளாது நின்றாள்!!!

அவளின் செய்கையை கவனித்தவளுக்கு பெரும் மூச்சு எழுந்தது.தன்னை உளமாற வெறுக்கும் கூட்டத்தின் தலைவிக்கு எல்லாம்தலைவியாக அன்னப்போஸ்ட்டாக தேர்ந்து எடுக்கப்பட்டுவிட்டாளே!!!

அமீரா இவளை பார்த்தவுடன் கட்டிப்படித்து நட்புணர்வாகபேசுவாள் என்று எதிர்பார்க்கவில்லை தான்.. அதற்காக இவள்ஒருத்தி உலகத்தில் இல்லை என்னும் படியாக முகத்தைதிருப்பிக்கொள்வாள் என்றும் எதிர்பார்க்கவில்லை!!!

பதிலுக்கு லேசாக தலையை மட்டும் அசைத்தவன்.. ஒரு இன்ச் கூடமங்கியிடம் இருந்து நகராது அப்படியே திரும்பி..

"ரீசப்ஷனுக்குவருவதாக தானே சொன்னார்கள்?!?" என்று எந்த முகமனும்இல்லாது நேரடியாக விஷயத்திற்கு தாவியது மட்டும் இல்லாது...அதிகாரமாக தமிழில் கேட்டான்.

மேக மித்ராவிற்கு அமீரா இங்கே வந்திருப்பதில் எந்த வித அதிர்ச்சியும் இல்லை ஆனால் வந்த தேதியை தான் நம்ப முடியவில்லை.

ஏன் என்றால் அவளுக்குமே அமீரா ரீஷப்ஷனுக்கு வருவதாக தான்சொல்லப்பட்டு இருந்தது.

இந்த விவரத்தை கல்யாணத்திற்கும், ரிஷப்ஷனுக்கு யார் யாரைஎல்லாம் அழைப்பது என்ற பட்டியல் தயாரிக்கும் போதே.. அவள்வருதை பற்றி அத்தை காயத்திரி தெரிவித்திருந்தார்கள்... அதுவுமேகூட்டத்தில் ஒருத்தியாக வந்துவிட்டு போய் விடுவாள் என்பதாகத்தான் சொன்னார்கள்.

அதற்கு எதுவுமே சொல்லாது அமைதியாக உட்கார்ந்திருந்தமங்கியை பார்த்த காயத்திரி அவள் உட்கார்ந்திருந்த திவான்கட்டிலில் வந்து அமர்ந்தவர்... "அமீரா ரஃபிக்யுடைய சின்னபாட்டியின் பேத்தி... இந்த குடும்பத்தில் மூத்தவர்.. அவர்முகத்திற்காவது... இதை செய்ய கடமை பட்டு இருக்கிறோம்"என்பதை விளக்கினார்.

"அத்தை... ஆமிரா வருதை அவரிடம்..." என்று இழுத்தவள் அதற்குமேல் எப்படி கேட்பது என்று தெரியாது தன் கையை பிசைந்தப்படிதடுமாற...

"கேட்டேன் மேக மித்ரா.." என்று கூறி சிறு இடைவேளை விட்டவர்ஏன் மௌனம் சாதிக்கிறார் என்று யோசனையுடன் தலையைஉயர்த்தி பார்த்த மங்கியிடம் "யாரை வேண்டுமானாலும்அழையுங்கள்மான்னு... அலட்சியமாக சொல்லிவிட்டான்" என்றுபெரூ மூச்சு ஒன்றை விட்டவர்..

"எல்லாமே அந்த விபத்தின் பின் விளைவு" என்றார் மிகவும்வருத்தமாக.

"எந்த விபத்து? அவருக்கு கால் உடைந்ததே அதுவா?" என்றாள் காயத்திரியை பார்த்து கண்கள் அகல.

"ம்ம்.. பேப்பரில் கூட இந்த விபத்தைப் பற்றி பக்கமாக.. பக்கமாக வந்ததே அது பற்றி உனக்கு தெரியாதா?" என்று கேட்டார் ஆச்சரியமாக.

"இல்லை அத்தை தெரியாது.. அப்ப நான் மருத்துவ முகாமிற்கு காட்டிற்குள் போய் இருந்தேன்.. அதனால் நாட்டில் நடந்த எதுவும் அதிகமாக தெரியாது" என்றாள் மேக மித்ரா.

அவளை விசித்திரமாக பார்த்தவர் "ஒரு சாதாரண சம்பவம் என் மகன்களில் ஒருவரை இழக்கும் அளவு பயமுறுத்திய நாளை நான் நினைத்துக்கூட பார்க்க விரும்பவில்லை மேக

மித்ரா... ஆனால் இதை சொல்லாமல் விட்டால் உன்னால் இந்த சூழ் நிலையை புரிந்துக்கொள்ள முடியாது என்பதால் சொல்கிறேன்" என்ற பீடிக்கையோடு ஆரம்பித்தவர்..

"ரஃபிக் மற்றும் அமீராவின் நிச்சயதார்த்தம் முடிந்த ஆறே மாதத்தில் திடீரென்று ரஃபிக்கின் அப்பா யாரும் எதிர்பார்க்காத சமயத்தில் இறக்க... அந்த அதிர்ச்சியில் மீண்டு வருவதற்கே சகோதரர்கள் இருவருக்கும் ஒரு வருடத்திற்கு மேலாகியது. அதற்கு பின்னும் கூட ரஃபிக் கல்யாணம் பற்றிய எண்ணமே இல்லாதது போல் அமைதியாக இருந்தான்.

"அப்ப தான் நிச்சயம் முடிந்து கிட்ட தட்ட ஒன்றரை வருடம் ஆனநிலையில் இனியும் கல்யாணம் தள்ளிக்கொண்டே போவது நன்றாக இருக்காது ஆறு மாதத்திற்குள் நல்ல நாள் பார்த்து கல்யாணம் பண்ணிவிடலாம் என்று சின்ன பாட்டியின் மூலம் அமீரா வீட்டில் கேட்க.. எனக்கு அது சரி என்று தான் பட்டது"

"தன் கல்யாணத்தை பற்றி உட்கார்ந்து பேச கூட நேரம் இல்லாது அந்த ஆண்டு போலோ ஆட்டத்திற்கான தீவிர பயிற்சியில் ஈடுப்பட்டு போலோ கிளப்பிலேயே பழியாய் இருந்த ரஃபிக்கை பார்த்து நேரில் பேசுவதற்காக அமீரா சித்துடன் கிளப்பிற்கே சென்றாள்."

எதுவும் பேசாது அமைதியாக உட்கார்ந்திருந்த மங்கியைபார்த்தவர்.. "நமக்கு ஒரு போலோ கிளப் இருக்கு தெரியுமா?"

"தெரியுமாவா?!? நாங்கள் இருவரும் முதன் முதலில் சந்தித்ததேஅங்கே தான் என்று மனதிற்குள் புலம்பியவள்.. முகத்திற்கு நேராகபொய் கூற முடியாது.. "தெரியும்" என்று போல் தலையை மட்டும்ஆட்டி வைத்தாள் மேக மித்ரா.

"நீயும் நல்லாவே குதிரை ஓட்டுவாய் என்று சங்க மித்ராசொன்னாள்.. ஆனாலும் ரஃபிக் மாதிரி யாராலும் ஓட்ட முடியாதுஎன்பது என் எண்ணம். அதுவும் அவனின் குதிரையான சேத்தக்கில்உட்கார்ந்தால் காற்றை கிழித்துக்கொண்டு பறப்பான்.. அவன்அதிகமாக சிரித்து பார்ப்பது அந்த சேத்தக் குதிரை மீது உட்காரும்போது தான்" என்று தன் மகனை நினைத்து பூரித்து போனவரின்வார்த்தையில் ஒவ்வொரு அக்ஷரத்தில் இருந்த உண்மையை அவள்அறிவாள்!!!

ஏன் என்றால் அவளும் அப்படியே தான் உணர்ந்திருக்கிறாள்!!!

சிரித்த முகம் வாட... கசப்பான மருந்தை சாப்பிட போவது போல்முகத்தை இருக்கமாக வைத்தவர்.. "அங்க அவள் சென்ற பிறகும்கூட தனியாக நின்று பேச முடியாது ரஃபிக் ஆட்டத்தில் மும்மரமாகபயிற்சியில் இருக்கும் வேலையில் கால் பிசகி விட..

வரும் வழியில்காரில் பேசிக்கொள்கிறேன் என்று காரின் சாவியை சித்திடம்அமீரா கேட்டிருகிறாள். அந்த சமயம் பார்த்து ஏதோ முக்கியமான கான் காலில் சித்திக்கும் மாட்டிக்கொள்ள... சரி என்று தலையைஆட்டியபடி சாவியை கொடுத்து விட்டு பின் சீட்டில்உட்கார்ந்திருக்கிறான்".

"எப்படி நடந்தது... என்ன நடந்து என்று யாருக்குமே தெரியாது...இன்று வரை அதை பற்றி ரஃபிக் ஒரு வார்த்தை கூட விபத்தை பற்றிபேச வில்லை.. நான் சொல்வது எல்லாமே சித் வாயில் இருந்துவந்தது தான்"

அதிக வேகமாக ஓடிக்கொண்டு இருந்த கார் கட்டு பாட்டை இழந்துதரிக்கெட்டு ஓட தொடங்கியதுமே.. பின் சீட்டில் பேல்ட் போடாமல்அலட்சியமாக இருந்த சித்தை முன்னால் அமர்திருந்த ரஃபிக் பேல்ட்போடும் படி திரும்பி பார்த்து எச்சரித்துக்கொண்டு இருக்கும்போதே... அமீராவிடம் இருந்து முற்றிலுமாக கண்டோரல் இழந்தகார்... மூன்று பல்டி அடித்து ரிங் ரோட்டின் மறுபுறம் சென்று விழ...

அந்த சமயத்திலும் "சாரி சித்" என்று ரஃபிக் கூறிய வார்த்தை தான்கடைசியாக சித்திக் கேட்டது. அது அப்புறம்.." என்று சொல்லும்போதே காயத்திரியின் தொண்டையை அடைத்தது...

"ஓட்டிய அமீராவும், பின்னால் அமர்ந்திருந்த சித்துவும் சில பலஅடிகளுடன் தப்ப.. ரஃபிக் தான் பின் மண்டையில் அடிப்பட்டு..கால் உடைந்து, ரத்தம் வீண்ணாகி.." என்று குரல் நடுங்கவிவரித்தவர்... "இனி வாழ்நாளில் அப்படி ஒரு கோர காட்சியை எந்தஅம்மாவும் பார்க்க கூடாது என்று தான் தினமும் இறைவனைவேண்டுகிறேன்.." என்றப்படி ஒரு நிமிஷம் தன்னை அமைதிப்படுத்திக்கொண்டு..

.

"அந்த சூழ்நிலையில் உயிருக்கு பிழைப்பானா??" என்ற கேள்வியில்இருபத்தி நான்கு மணி நேரம் எங்களை தவிக்க வைத்து விட்டு கைகால் முறிவுடன் உயிர் பிழைத்தான் என்றார் பெருமூச்சுடன்.

"இந்த விபத்திற்கு முழு முதற் காரணம் அமீரா ஓட்டிய முறை தான் என்று கோபக்கொண்ட சித்திக் அவளிடம் வாக்கு வாதத்தில் ஈடுப்பட.. அது பெரிய பிரச்சனையாக வெடித்து கல்யாணத்தை நிறுத்தும் அளவு வந்து விட்டது."

"அண்ணனின் கல்யாணம் தன்னால் தான் நின்று விட்டது என்று சித் குற்ற உணர்வில் தவித்து... சென்ற நான்கு மாசமாக தாடியும் மீசையும் வைத்துக்கொண்டு சுத்த.. நானும் எத்தனையோ முறை எடுத்து சொல்லிவிட்டேன்..."

"உன் அண்ணன் அமீராவை தான் கல்யாணம் பண்ணிக்க வேண்டும் என்று முடிவு செய்திருந்தால் இந்த மாதிரி சாதாரண பேச்சுக்கு எல்லாம் அவன் பின் வாங்க மாட்டான்.. நடத்தி முடிக்க வேண்டும் என்று நினைத்திருந்தால் உன் முன்னோர்கள் செய்தது மாதிரி கடத்திக்கொண்டு போயாவது காட்டில் வைத்து கல்யாணத்தை முடித்திருப்பான்.. ஏனோ அமீரா இந்த கல்யாணம் வேண்டாம் என்று சொல்வதை இவனும் ஒத்துக்கொள்கிறான் என்றால் விபத்து மட்டுமே அவர்களுக்கான பிரச்சனை இல்லை.. வேறு பிரச்சனை இருக்ககூடும் தேவை இல்லாது உன் மனதைப்போட்டு அலட்டிக்கொள்ளாதே என்று முடிந்த வரை சித்திக்கிடம் படித்து படித்து சொல்லிவிட்டேன் ஆனா இந்த சித்.. அந்த விபத்திற்கு பிறகு ரொம்பவே மாறியவன் இப்போ ரஃபிக் உன்னை கல்யாணம் பண்ணிக்கொள்ள சம்மதித்த பிறகு தான் பழையபடி அவன் முகத்தில் சிரிப்பை பார்க்கிறேன்.. நம் வீட்டில் கடந்த ஐந்து மாதம் விடமால் ஒன்று மாற்றி ஒன்றாக புயல் அடித்து எல்லாம் நல்ல முடிவாக திருமணத்தில் முடிந்துவிட்டது".

"என் இரண்டு மகன்களுக்கும் ஒரே நேரத்தில் திருமனம். அதுவும் சகோதரிகளையே திருமனம் செய்துக்கொள்கிறார்கள் என்னும் போது கடந்த வந்த ரணம் கூட மறைந்து விட்டது போல் தான் இருக்கிறது மேக மித்ரா.."

"ஆனால் அமீராவை அப்படியே விட்டு விட முடியாது இல்லையாம்மா?!? வாக்கு தவறாதவன் என்று பெயர் பெற்றவன் அமீராவை கல்யாணம் பண்ணிக்கொள்ளவில்லை என்றால் அதன் காரணம் என்னவாக இருக்கும் என்று பேசாத ஆள் இல்லை... இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவள் இங்கே வரவில்லை என்றால் அது அசிங்கமான பேச்சிற்கு வித்தாகும்"

"வாழ வேண்டிய பெண் அல்லவா?? என்று தான் சின்ன பாட்டியிடம் சொல்லி அவளை நான் தான் அழைத்து வர சொன்னேன். அழைத்தால் தப்பாக பேசுபவர்களின் பேச்சு கொஞ்சம் மட்டும் படும் இல்லையா?!?" என்று காயத்திரி இப்படி கேட்கும் போது..

அவள் மன நிலையை பற்றி என்ன சொல்வாள்?? ரஃபிக் விபத்து பற்றி எதுவுமே தெரியாது.. அவள் காட்டில் முகாமில் இருக்க.. வீட்டில் பேச்சு வாக்கில் காதில் விழுந்து விபத்தை பற்றி கேள்வி பட்டதை வைத்தே.. அன்று அவளுக்கு கண்களை இருட்டிக்கொண்டு வந்தது.. என்றால் இப்போ அத்தை சொல்வதை பற்றி கேட்க.. கேட்க.. நெஞ்சை பிளக்கும் வலியால் மூச்சு கூட விட முடியாது.. எங்கே விழிகளை சிமிட்டினால் திரண்டு இருந்த நீர் வழிந்து விடுமோ என்ற பயம் வேறு அவளை பேயாக உலுக்க.. இருகி போய் உட்கார்ந்திருந்தாள் மேக மித்ரா.

எங்கோ வெறித்த பார்வையும் அசாதாரண மௌனத்தையும் பார்த்த காயத்திரி "என்னம்மா என்ன விஷயம் யோசனையுடன் உட்கார்ந்திருக்க..?" என்றார் ஜில்லிட்டிருந்த விரல்களை பற்றி.

அடைத்த தொண்டைய செரும்பியவள் "இல்ல.. ஒன்றும்.. இல்லை அத்தை.. வந்து.. இப்ப கூட கடத்திக்கொண்டு போய் கல்யாணம் பண்ணிக்கொள்ள முடியுமா?!?பெண்ணின் சம்மதம் இல்லாமலா?" என்று வாய்க்கு வந்ததை கேட்டு வைத்தாள் மேக மித்ரா.

"அந்த காலத்தில் பெண் வீட்டார்களிடத்தில் சம்மதம் கேட்டு அவர்கள் மறுத்துவிட்டார்கள் என்றால் அந்த பெண்ணை அப்படியே குதிரையில் அலேக்காக தூக்கிக்கொண்டு போய் விடுவார்கள்.." என்று சிரித்தப்படி காயத்திரி பேசிக்கொண்டு இருக்கும் அச்சமயம் பார்த்து யாரோ முக்கிய விருந்தினர் வருவதாகத் தகவல் வர.. அந்த பேச்சு அத்தோடு நின்றது.

அப்படி தூக்கி கொண்டு போய் கல்யாணம் பண்ணிக்கொள்ள கூட தேவை இல்லாது.. அமீராவே விரும்பி வந்து மணம் செய்துக்கொள்பவள் போல் தான் ரஃபிக் மீது பார்வை பதிய... இந்த சூழ்நிலையில் ரஃபிக் ஏன் தன்னை நாடினான் என்ற கேள்வி அவளை வண்டாய் குடைய.. அப்பொழுதுதான் அவன் தமிழில் பேசியதே புத்திக்கு உரைத்தது.

அமீராவுடன் ஏன் இவன் தமிழில் பேசுகிறான்? என்று அவள் மலமலங்க விழித்தப்படி நிற்கும் போதுதான்..

நீ எல்லாம் என் இடத்திற்கு வர என்ன தகுதி இருக்கு?? என்ற முறையில் ஒரு அலட்சியத்துடன் ஒரு பார்வை பார்த்த அமீரா.. "பாட்டிதான் கல்யாணத்திகே கட்டாயம் வர வேண்டும் என்று பிடிவாதமாக அழைத்து வந்தார்கள்" என்று எந்த வித தயக்கயமும் இல்லாது சரளமாக தமிழில் பேசினாள்.

அந்த பதிலை விட அவளின் மொழிதான் மங்கியை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

பின்னே தமிழில் இவ்வளவு அழகாக பேச முடிக்கிறதே அது எப்படி என்று கேள்வி தான் அவளுக்குள் எழும்பியது.

அவளின் பதிலுக்கு லேசாக பட்டும் பாடது தலை மட்டும் ஆட்டியவன் மங்கியின் புறம் திரும்பி "இவள் அமீரா.. என் நூற்றி எட்டு கசின்களில் ஒருத்தி" என்று யாரையோ அறிமுகப்படுத்துவது போல் சொன்னான்.

ரஃபிக்கால் மட்டும் தான் மிக சாதாரணமாக இருக்க முடிந்தது. இந்த இடத்தில் வேறு யாராக இருந்தாலும் இரண்டு நாள் கழித்து கட்டிக்க போகும் பெண்ணிடம்... இரண்டு வருடம் முன்பு நிச்சயக்கப்பட்ட பெண்ணினை இப்படி அறிமுகப்படுத்த சின்ன துணுக்கமாவது ஏற்படும்.

ஆனால் ரஃபிக்கிற்கு அது போல் உணர்வு இருப்பது போல் என்ன அந்த மாதிரி தோன்ற வேண்டும் என்று யாராவது சொன்னால் கூட "எதுக்கு?" என்று எதிர் கேள்வி கேட்பவன் போல் மிக சாதாரணமாக இருந்தான் என்றால் அமீராவோ இவளை எடை போடும் பார்வையை ஒன்றை தலை முதல் கால் வரை ஒரு பார்வையை நொடிக்கு ஒரு தரம் விட்டப்படியே நின்றாள்.

இருவருக்கும் மத்தியில் தர்ம சங்கடமாக நெளிந்தது மங்கி தான். அவளால் விபத்து நேர்ந்ததோ இல்லையோ என்ற காரணத்தை தள்ளி வைத்தாலும் கல்யாணம் செய்துக்கொள்ளப் போகிறோம் என்று இரண்டு வருடமாக காத்துக்கொண்டு இருந்து விட்டு இப்போ இல்லை என்றால்அந்த பெண்ணிற்கு எப்படி இருக்கும் என்று அமீராவிற்காக வருத்தப்பட்டாள்.

அமீராவை பார்த்து லேசாக புன்னகை செய்தவள்.. "நீங்க எப்ப வந்தீங்க மெகந்தி போடும் வரை நான் உங்களை பார்க்கவே இல்லையே" என்றாள் அவளை வரவேற்கும் விதமாக.

"ஓ!! நான் வருவதை பார்த்துவிட்டு தான் இந்த பக்கம் எழுந்து வந்தீங்களோ என்று நான் நினைத்தேன்" என்றாள் ஒரு மாதிரி.

இவள் வாயை திறந்து பதில் அளிக்கும் முன்.. "அமி.. இது அவள்வீடு.." என்றான் அழுத்தமாக.

எங்க எப்ப போகவும் உரிமை இருக்கு.. அதை கேட்க நீ யார் என்றுசொன்னாமல் சொன்னது அவன் குரல்.

கன்னத்தில் அரை வாங்கிய மாதிரி பார்த்த அமீரா.. "அப்படிதான் நானும் இரண்டு வருடம் கனவு கண்டேன் நவாப்.. அது.." என்று பாதியிலேயே தேய்ந்து நின்றது.

முகத்தில் அடித்தது போல் பேசியதற்காக அவனை முறைத்தவள்... "நீங்க ஏதாவது சாப்பிட்டிங்களா??.." என்று அவள் புறம் அடி எடுத்து வைத்தாள்.

"ம்கூம் .." என்ற அவளிடம் பதில் சொல்லும் போதும் ரஃபிக் மேல் தான் அவள் பார்வை மொய்த்தது.

"இன்நேரத்திற்கு டின்னர் ஆரம்பித்து இருப்பார்கள்" என்று பொதுப்படையாக மொழிந்தவன் மங்கியின் புறம் திரும்பி "அழைத்துக்கொண்டு போ" என்று வெளிப்படையாக சொல்லாமலே அந்த வீட்டில் யாருக்கு உரிமையை என்று செயலால் நிருபித்தான் ரஃபிக்.

"வேண்டாம்.. நான் தூங்க போகிறேன்" என்று அமீரா மறுத்து பேசினாள்.

"இங்கே விருந்தினரை பட்டினியாக விடும் பழக்கம் இல்லை" என்று சொல்லியப்படியே மேக மித்ராவை பார்த்தவனின் பார்வை எதையோ சொல்ல.

அமீரா முன்பு சண்டை போட முடியாத மங்கி.. வாயில் வந்த வார்த்தை அப்படியே விழுங்கியவள் "வாங்க.. சாப்பிட போகலாம்" என்று ஒரு அடி எடுத்து வைத்து அந்த லெகங்காவில் கால்கள் மாட்ட.. சற்றே தடுமாறியப்படி அவளை நெருங்கினாள்.

அழகு மட்டும் அல்ல.. நடப்பதில் இருந்து நிற்பது, பேசுவது என்று எல்லாவற்றையும் நேர்த்தியாக ஒரு பேகத்திற்கான எல்லா தகுதியுடன் நிற்கும் அமீராவின் முன்பு கால்கள் இடற... பின் சுதாரித்து நின்றவளுக்கு ரொம்பவே அவமானமாக உணர்ந்தாள். ஒரு நிமிடம் கண்களை இருக முடி திறந்தவள்... யாரையும் பார்க்க முடியாது அமீராவின் அருகில் நின்றாள்.

இவள் நடக்க முடியாது தட்டுத் தடுமாறியதை இளக்காரமாக பார்த்துக்கொண்டு நின்ற அமீராவிடம் எதுவும் பேசாது தலையை மட்டும் ஆட்ட ரஃபிக்கை திரும்பி கூட பார்க்காது அவளோடு நடந்தாள்!!!

மங்கி புடவை கட்டி நடப்பதில் இருந்த தடுமாற்றத்தை ரசித்துவந்தாளா இல்லை பார்த்து வந்தாளா என்று எதையும்

கவனிக்கும்நிலையில் இல்லாதவள் தான் கீழே விழாது நடக்கும்முயற்சியிலேயே ஈடுப்பட்டுக்கொண்டு கொண்டு இருந்தவளுக்குதிடீர் என்று சந்தேகம் வர..

"நீங்க எப்படி இவ்வளவு சரளமாக தமிழ் பேசறிங்க??" என்றாள்.

மீண்டும் அதே அலட்சிய பார்வையை பார்த்தவள் "தமிழ் மட்டும்அல்ல.. என்னால் பத்து மொழி சரளமா பேச முடியும்... பூஅலங்காரத்தில் ஆரபித்து விருந்தினருக்கு யார் வந்தால் என்னமாதிரி மெனு போட வேண்டும், எதை எப்படி சாப்பிட வேண்டும்என்பது வரை கற்றுக்கொண்டேன்... நவாப்புடன் நிச்சயம் ஆனதில்இருந்து என் முழு நேர வேலையே இது தான் ?!? உனக்கு அதுவாக தான் இருக்கும்.. பின் இந்த சாம்ராஜத்தில் கட்டி மேய்த்து என்றால் சும்மாவா??" என்றாள் பேச்சில் அலட்சியம் தெறிக்க.

"என்னது?!?" என்றாள் தன் அதிர்ச்சியை மறைத்தப்படி.

"ஒரு புடைவை கூட கட்டிக்கொண்டு ஒழுங்காக நடக்க தெரியாதவளுக்கு எப்படி மிர் ரஃபிக் அல்வுமர் அலிகானை கட்டிக்கொள்ளும் தகுதி இருக்கு என்று புரியவில்லை.. அதை விட ஒரு மாட்டு டாக்டர்? கமான்.. ஆன்.. நான் அறிந்தவரையில் இதுவரை "பேகமாக" இருப்பவங்க அவங்க சுண்டு விரைல கூட அசைத்தது இல்லை... ஆனால் நீ எலிக்கு

பூனைக்கு வைத்தியம் பார்க்கும் ஒரு ஆளை... எதை பார்த்து உன்னை நவாப் கல்யாணம் பண்ணிக்கொள்ள தீர்மானித்தார்??" என்று கேட்டாள் அமீரா.

மேக மித்ரா பதில் சொல்லாது அவளை பார்க்க.. இவர்கள் ஒருவரை பார்த்துக்கொண்டு நிற்பதை தான் தூரத்தில் இருந்து ரஃபிக்கை சாப்பிட அழைத்து போக வந்த ஆர்யாவும் மற்றும் கார்த்திக்கின் கண்களுக்கு தெரிந்தது.

"இவள் ஏன் அண்ணா இங்க வந்திருக்கிறாள்?" என்று பற்கள் நரநரவென்று கடிக்க கேட்டான் கார்த்திக்.

"இது கல்யாண வீடு யார் வேண்டுமானலும் வரலாம்"

"இருக்கும் பிரச்சனை போதாது என்று இவள் ஏன் இப்ப வரவேண்டும்.. இவளை.." என்று ஒரு அடி எடுத்து வைக்க அவனை கை பிடித்து தடுத்து நிறுத்தினான் ஆர்யா.

"எங்கடா போற?"

"இல்ல அண்ணா அவளை..."

"டேய் இது அலிகான் குடும்ப விவகாரம் நாம் தலையிட முடியாது தலையிடவும் கூடாது.."

"அங்கே இருப்பது நம் தங்கச்சி.. இன்னைக்கும் என்றைக்கும்.."

"உன் கடமை உணர்விற்கு ஒரு அளவே இல்லையாடா??" என்று பெரு மூச்சு விட்ட ஆர்யா..

"டேய்.. நான் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்.. நான் சௌவியை கல்யாணம் பண்ணிக்கொள்ளும் முன்பு என்னை பற்றி எப்படி வரும் பேப்பரில் எப்படி வரும்.."

"நீ ஒரு ப்ளே பாய் என்று பத்தி பத்தியாக எழுதுவார்கள்" என்றான் கார்த்திக்

"அது உண்மையா? நான் எந்த மாடலை பார்த்து சிரித்து ஒரு வார்த்தை பேசினாலும் உடனே என்னை பற்றி கிசுகிசு வரும்.. அதை எப்படி நான் சமாளித்தேனோ இனி அது மாதிரி தான் நம் தங்கைகளும் குறிப்பாக மேக மித்ரா கையாள வேண்டும்"

"நீ என்னத்தை சமாளித்த?!?.. எவன் எதை பற்றி எழுதினாலும் எருமை மாட்டு மேல பேஞ்ச மழை மாதிரி இருப்ப... உன் பப்ளிஸ்ட் டீம் தான் அடித்துக்கொள்வார்கள்" என்றான் கார்த்திக் யோசனையாக.

"ம்ம்.. இப்ப அதே பாலிசியை தான் மேக மித்ராவும் ஃபாலோ பண்ண வேண்டும்..."

"அண்ணா.. அது தொழில்.. இது வீடு எந்த நேரமும் போட்டியும் போராமையும் இருந்தா அவள் சந்தோஷமா எப்படி இருக்க முடியும்?"

"அவள் குடும்பம் என்றால் அது அத்தை, சித், சங்கி, ரஃபிக் இவர்கள் தான். ஆனால் வெளியே.. அவர்களுக்கு

இருக்கும் இந்த ஐநூறு நெருங்கிய உறவினர்களும் சும்மாவா?? இவளை கண்டவுடன் வாம்மா.. என்று கையை நீட்டி வரவேற்பார்கள் என்றா நினைக்கிறாய்?!?"

"வெளியே பிசினஸ்சில் இருக்கும் போட்டி பொறாமையை விட இங்க தான் அதிகம் இருக்கும்.. கொஞ்சம் நினைத்து பார்.. இவர்களை இந்த வீட்டிற்கு வரலாமா வேண்டாமா என்று தீர்மானிக்கும் உரிமை இனி மேக மித்ராவின் கையில் தான் இருககு... அதை விட இங்கு ஆண்டு அனுபவிக்கும் உரிமை எங்கோ ஊர் பேர் தெரியாத மேகியிடம் போகிறது என்றால் அவர்களால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?"

"என்ன தான் இருந்தாலும் அந்தப் பெண்ணுடன் இவள் போவது டூமச்.." என்றான் கார்த்திக் விடாமல்...

"கார்த்திக் அவள் சின்ன குழந்தை இல்லை... இந்த அலிகான்குடும்பத்தின் மொத்த பொருப்பையும் சுமக்க போகிறவளுக்கு ஒருஆமிராவை சமாளிக்க முடியவில்லை என்றால் எப்படி?!?"

"தனக்கு எது தேவை என்று கூட தெரியாது... பிடித்த போதுஒருத்தியுடன் நிச்சயம் பண்ணிக்கொண்டு பிடிக்கவில்லை என்றவுடன் கழட்டிவிட்டு இன்னொருத்தியைக் கல்யாணம் செய்யபோகிற அவனை..." என்று ரஃபிக்யை திட்டியப்படி பல்லைகடித்தான் கார்த்திக்.

மறுப்பாக தலையை ஆட்டிய ஆர்யா.. "எல்லோருக்கும் உன்னைமாதிரி பதினாறு வயதில் இவள் தான் என் வாழ்க்கை துணைஎன்று தலையில் மணி அடித்து வயிற்றில் பட்டாம் பூச்சி பறக்க..கண்களில் பல்பு எல்லாம் எரிவது இல்லை..." என்றான் ஆர்யா தன்தம்பியிடம்.

ஆர்யா விளையாட்டிற்காக அப்படி சொல்லவில்லை..

கார்த்திக் தன் பதினெட்டாவது வயதில் நிரல்யாவை காதலிக்கிறேன் என்று பகிரங்கமாக வீட்டில் சொல்லியதோடுநிறுத்தாது நேராக அவளிடமே அதைச் சொல்லியும் வைக்க... பதின்வயிதில் இருந்த அவள் இதைக் கேட்ட அதிர்ச்சியில் மயங்கி விழ..அது போதாதன்று நிரல்யாவின் அம்மாவிடமும் இதை சென்று கூறிஅவரையும் சேர்த்து மயங்கி விழ..... இப்படியாக தன் வருங்கால மனைவியையும், வருகால மாமியாரையும் ஒரே சமயத்தில் மயங்கவிழ செய்த பெருமை கார்த்திக்கையே சாரும்.

இப்படி தன் காதலைச் சொல்லி அதிர்ச்சி அலையைஎற்படுத்தினான் என்றால்... சொன்னது சொன்னபடி நிரல்யாவின் பதினெட்டாவது வயதில் தன் அண்ணன் பத்ரிக்கு மனமாகும்முன்பே மனம் புரிந்து அடுத்த கலவரத்தை ஏற்படுத்திவிட்டு...கடந்த ஐந்து வருடமாகப் படிப்பும் என்னும் பெயரில் பிரிந்துவாழ்ந்தவர்கள்... ஊரில் நடந்த தங்கையின்

கல்யாணத்தின் போதுதான் இருவரும் ஊர் அறிய மனம் செய்துகொண்டனர்!!!.

ஆரியின் பேச்சிற்கு எதுவும் பேசாது அமைதியாக எங்கோ வெறித்துபார்த்தபடி நின்றவனின் தோளில் கையை போட்டவன்....

"அந்த வயதில் நிரல்யாவை கல்யாணம் பண்ணிக்கொள்ளப்போகிறேன் என்று நீ ஒற்றைக்காலில் நிற்கும் போதும் எனக்குஇஷ்டமில்லை என்றாலும் உன் விரும்பத்தை மதித்து அதில் நான்தலையிட வில்லை கார்த்திக்... ஆனால் படிக்க வேண்டிய வயதில்கல்யாணம் பண்ணிக்கொண்டு இப்ப சேர்ந்து வாழ வேண்டியவயதில் திடீரென்று போன மாசம் நீயும், நிரல்யாவும் டைவர்ஸ் லாயரை பார்த்த விஷயத்தை எல்லோர் முன்னிலையும் ரஃபிக்போட்டு உடைத்ததால் அவன் மேல் உனக்கு அதிக கோபம்இருக்கும் என்று யூகிக்கிறேன். ரஃபிக் இதை பற்றி சொன்ன பிறகும்கூட நாங்கள் இதுவரை ஏன் அதை பற்றி வாயை திறந்துகேட்கவில்லை??"

"நீ செய்கிறாய் என்றால் அதற்கு பின்னால் ஏதோ காரணம்இருக்கும்.. என்ற நம்பிக்கை தான். எப்படியோ நீயாக அதைசமாளித்து இப்ப ஊர் அறியக் கல்யாணம்பண்ணிக்கொண்டாய்..அதே மாதிரி தான் ரஃபிக் மற்றும் அமீராபிரிய ஏதோ காரணம் இருக்கும். தப்பே

பண்ணாமல் வாழ நாம்மகாத்மா இல்லை.. ஆனால் தப்பை திருத்திக்கொண்டு வாழப்எத்தனை பேர் பழகறாங்க சொல்லு??.. அதைத் தான் ரஃபிக் செய்திருக்கிறான் என்று தோன்றுகிறது" என்றான் திடமாகசொன்னான் ஆர்யா.

பேசி முடிக்கவும் இவர்களை கண்டுக்கொண்ட ரஃபிக்வும்அவர்களிடம் வரவும் சரியாக இருக்க... கடந்த பத்து நாட்களின்முதல் முறையாக அவனை எடுத்து எரிந்தோ இல்லைசீண்டலாகவோ பேசாது வாயை மூடிக்கொண்டு கார்த்திக்அமைதியாக நிற்க... ஒரு நொடி அவனை கூர்ந்து பார்த்த ரஃபிக்..பின் ஆர்யாவிடம் பொது படையாக பேசியப்படி உணவருந்தஉள்ளே சென்றனர்!!!

இங்கே மங்கியோ.. அமீராவிற்கு பதில் சொல்லாது அமைதியாகஅவளை பார்த்தாள்!!!

# அத்தியாயம் 7

இவள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலேதும் பேசாது வாய் அடைத்துப் போய் நின்றவளைக் கண்டதும் மனது துள்ளி குதித்தாட... முகத்தில் வெற்றிக் களிப்பு பொங்க மங்கியை நிமிர்ந்து பார்த்தாள் அமீரா!!!

"நீ எல்லாம் எனக்குப் போட்டியா??" என்று ஒரு அலட்சிய பார்வையை மங்கியின் மேல் வீசியவளுக்கு உள்ளுக்குள்ளே ஊற்று எடுத்துக்கொண்டு இருந்த களிப்பு காணாமல் போனது!!!

காரணம் அமீரா எதிர்பார்த்தது போல் மங்கி அஞ்சி நடுங்கியோ இல்லை கோபமுற்றோ குறைந்த பட்சம் வாய் அடைத்தோ அப்படி நிற்கவில்லை... அதற்கு மாறாகப் பொருள் விளங்காத ஒரு பார்வையை அவள் மேல் வீசியபடியே நிமிர்வுடன் நின்றிருந்தாள்!!!

ஏன் இப்படி பார்க்கிறாள்?? என்று துணுக்கம் முற்று மூளை கசக்கி யோசிக்கையில் தான்.. முதன் முதலாக லேப்பில் விலங்குகளை வெட்டி டைசெக்ஷன் செய்யும் போது.. இப்படி தான் ஒரு அருவருப்பு கலந்த ஆர்வத்துடன் பார்ப்பார்கள்.. அது போல தான் மங்கியும் தன்னை பார்த்துக்கொண்டு

இருந்தாள்.. அதாவது தன்னை விலங்கினத்திற்கு இணையாக என்று மூளை எச்சரித்தது!!!

எவ்வளவு திண்ணக்கம் இருந்தால் இப்படிச் செய்வாள் என்று கட்டுக்கடங்காத கோபம் ஆர்ப்பரிக்க.. தன் கைகளை நீட்டி அவள் கண் முன்னாடி சொடக்கு போட்டு...

"இவ்வளவு அமைதியாக எப்படி உன்னால் நிற்க முடிகிறது?? செல்ப் ரெஸ்பக்ட் என்று ஒரு சொல் இருக்கு... அதன் பொருளை டிக்ஷரியில் போய் பார்த்து தெரிந்துகொள்" என்றாள் எரிச்சலாக அமீரா. அவளின் வாயை எப்படியாவது பிடுங்கியே தீர வேண்டும் என்று வெறிக்கொண்டு.

சரியாக அந்தச் சமயம் பார்த்து சற்று தூரத்தில் நின்று இருந்த நிரல்யாவின் கண்கள் இவள் மேல் விழ.. லேசாகத் தலை ஆட்டி இங்கே வருமாறு செய்கை செய்தாள் மங்கி.

மணப்பெண் அழைக்கிறாள் என்றால் சும்மாவா? என்னவோ ஏதோ வென்று கையை ஆட்டியபடி வேகமாக அவர்களை நோக்கி விரைந்து வந்தாள் நிரல்யா.

அதக ஒப்பனை இல்லாது, மிகவும் எளிதான புடவை உடுத்தி சிரித்தபடி நெருங்கிய நிரல்யாவை பார்த்தவளின் மனம் குதுகலிக்க... முகத்தில் எதுவும் காட்டாது சாந்தமாக அமீராவை பார்த்து "செல்ப் ரெஸ்பக்ட்டை பற்றி ரொம்ப சின்ன வயதில் படித்தால் சரியாக ஞாபகம் இல்லை.." என்று மங்கி ஆரம்பிக்க.

இவள் என்னத்தை பற்றி பேசுகிறாள் என்று புரியாது குழப்பமாகப் பார்த்தாள் அமீரா.

"இதோ இங்க தான் என் மூன்றாவது அண்ணி நிரல்யா" என்று அருகில் வந்துவிட்டவளை அறிமுகப்படுத்தினாள்.

யாரையும் தன் பார்வையால் கூட கௌரவப்படுத்தக் கூடாது என்று அலட்சியத்துடன் நின்றவளின் பார்வைக்கு படும்படியாக நிரல்யாவே வந்து முன் நிற்க.. வேண்டா வெறுப்பாகப் பார்த்தவளின் கண்கள் உரைய, மூச்சு கூட விட முடியாது அடைத்தது!!!

காரணம்... தன்னை விட அழகு யாரும் இல்லை என்று மமதையில் திரியும் அவளுக்கு நடு மண்டையில் அடித்தது போல் ஒருத்தி எங்கிருந்தோ வந்து குதித்தால் மூச்சு விடுவதற்கு சிரமாக தானே இருக்கும்?!?

இது அவளுக்கு மட்டும் இல்லை முதல் முறையாக நிரல்யாவை பார்ப்பவர்களுக்கு எல்லோருக்குமே மூச்சு முட்டுவதாகதான் உணருவார்கள்.

ஒரு நிமிடம் யார் எந்த வேலை செய்தாலும் நிறுத்து விட்டு அவள் கடந்து செல்லும் வரை அவளைத் தவிர வேறு யாரையும் பார்க்க முடியாது. தங்களை மறந்து பார்க்க வைக்கும் அழகு தான் கார்த்திக் மனைவி.

அமீராவை பார்த்தவுடன் "வடித்த சிலை" என்ற எண்ணம் தோன்றும் என்றால் நிரல்யாவை பார்த்தவுடன் எந்த எண்ணமும் மனதில் எழ முடியாதபடி "ஸ்தம்பிக்க" வைக்கும் அழகு அவளுடையது!!!

"நிரல்யா இவங்க.. அமீரா" என்று முறையாக அறிமுகம் படுத்தி வைத்தவள்.

தமிழில் அறிமுகப்படுத்தியதை வைத்தே அமீராவுக்கு தமிழ் தெரியும் என்ற நம்பிக்கையில்.

சிநேகமான புன்னகை பூத்து "வணக்கம்" என்றாள் நிரல்யா.

அவசரமாகத் தன்னிலைக்கு திரும்பிய அமீரா பதிலுக்கு "வணக்கம்" என்றாள் தடுமாற்றத்துடன்.

நல்ல நிலையில் இருந்தாள் பதில் சொல்லி இருப்பாளா என்பது சந்தேகமே என்றாலும் நிரல்யாவின் அழகு தந்த அதிர்ச்சியில் வாய் தந்தியடிக்க.. பதில் சொல்லி விட்டாள்.

இப்ப தான் அமீரா "செல்ப் ரெஸ்பக்ட்" என்கிற வார்த்தைக்கான அர்த்தம் டிக்ஷரியில் பார்க்க சொன்னார்கள்.." என்று இழுத்த மங்கி.. "அதற்கு என்ன அர்த்தம்?" என்று கேட்டாள்.

நேரடியாகப் பேசினாலே புரியாத அப்பாவி நிரல்யாவிற்கு இவள் நாட் நாட் செவனின் பேத்தி என்பதை நிருபிக்கும்

விதமாக ஏதோ செய்ய.. அதை புரிந்துக்கொள்ளும் திராணி நிரல்யாவிற்கு இல்லை என்பதால் திருதிருவென்று விழித்தாள்.

பொது அறிவை வளர்க்கத் தான் என்று வைத்துக்கொண்டாலும்... இவளைப் பார்த்தாள் டிக்ஷனரி புரட்டுபவள் மாதிரி தெரிவில்லையே என்ற ஐயம் தோன்ற... மங்கி அளந்து பேசும் ரகம்.. அவளே இவளை அழைத்து வைத்து கேட்கிறாள் என்றால் அதில் ஏதோ அர்த்தம் இருக்கும் என்று யூகித்த நிரல்யா..

"எந்த டிக்ஷரியில் இருந்து பொருள் வேண்டும்??" என்றாள் அமீராவை பார்த்து.

"வாட்???" என்றாள் அதிர்ச்சி தாங்காது.

"உங்களுக்கு ஆக்ஸ் போர்ட்டு, கேம்பிரிஜ், வெப்ஸ்டர் இல்லை அர்பன் வேண்டுமா?" என்று வரிசையாகப் பிரபல டிக்சனரியின் பெயர்களை அடுக்கி எதிரில் இருப்பவளை அழகால் அதிர வைத்தது போதாது என்று தன் அறிவாலும் அதிர வைத்தாள் நிரல்யா.

அமீரா பேய் அறைந்தது போல் பிரம்பை பிடித்து நிற்க...

"ஆ.. சொல்ல மறந்துவிட்டேன் நிரல்யாவிற்கு ஐ.கியூ நூற்றி நாற்பதற்கு மேல்.. அத்தோடு ஒரு முறை பார்த்த விஷயத்தைப் பார்த்தபடி சொல்லும் போட்டோ ஜெனிக் மேம்மரி.. அதனால்

தான் இந்த சின்ன வயதிலேயே டாக்டரேட் பட்டம் வாங்கிவிட்டாள்" என்றாள் பெருமிதமாக மங்கி.

அழகுடன் சேர்ந்த இந்த அபரிமிதமான அறிவு பயங்கங்கொள்ள செய்ய இங்கிருந்து தப்பித்தே ஆக வேண்டும் என்ற எண்ணம் தோன்ற "ஆ.. அங்க.. அப்புறம் கேட்டுக்கொள்கிறேன். இப்ப.. சின்ன பாட்டி கூப்பிடுகிறார்கள்" என்று இவளுக்கு முதுகு காட்டிக்கொண்டு நின்று இருந்தவரை குறிப்பிட்டு யாருக்காவும் காத்திருக்காது வேகமாக நகர்ந்தாள்.

அளந்து பேசும் மேக மித்ரா.. அன்று அளக்காமல் ஒரு வரியை விட்டாள்... "மறக்காமல் சாப்பிடுங்க.. ரஃபிக் உங்களை கவனிக்க சொன்னார்" என்று சொல்லிக்கொண்டு இருக்கும் போதே..

விட்டால் போதும் என்று வாரி சுருட்டிக்கொண்டு சென்ற அமீரா அப்படியே பிரேக் போட்டு நின்றவள்... மெல்லத் திரும்பி நின்று மேக மித்ரவை நோக்கிய கண்கள் கொல்லி கட்டையாகப் பற்றி எரிந்த குரோதத்தை கண் கூடாக கண்டாள் மங்கிக்கு தன்னால் கால் பின்னுக்கு இழுத்தது!!!

"என்ன தப்பாக சொல்லிவிட்டோம்?? என்று தீவிரமாக யோசிக்க..

"எவ்வளவு தைரியம் இருந்தால் நவாப்பை பெயர் சொல்லி அழைப்பாய்??" என்று அதட்டலாகக் கேட்டவள் கொஞ்சம்

விட்டால் அவள் தலை முடியைப் பிடித்து ஆட்டாமல் விடமாட்டாள் போல் ஆங்காரமாக நின்றாள்.

அந்த கோபத்திற்கான காரணம் இதுவரை பெற்றவர்களை தவிர வேறு யாரும் பெயர் சொல்லி அழைத்து இதுநாள் வரை பார்த்ததும் இல்லை... இன்னும் சொல்ல போனால் அப்படி கேள்வி கூடப் பட்டது இல்லை.. குடும்பத்தில் மட்டும் அல்ல பிசினஸ் உலகில் கூட அவன் நவாப் என்பதைத் தவிர வேறு எதுவும் சொல்லி அழைக்க மாட்டார்கள்.

ஆனால் இவளோ மனமாகும் முன்னாடியே பெயரை சொல்லி அழைக்கும் அளவுக்கு வந்து விட்டதா? என்று கோபம் தலைக்கு மேல் ஏற.. நல்ல காலம் அவளுக்குக் கண்களால் எரிக்கும் சக்தி இல்லை.. இல்லையேல் இந்நேரத்திற்கு அவள் பஸ்பமாக போய் இருப்பாள்.

"ஓ!!!" என்னும் பதிலை தவிர மங்கி எதுவுமே பதில் அளிக்காது " உங்கள் சின்ன பாட்டி அழைக்கிறார்" என்றாள் கனக அக்கரையாக.

என்னைப் பகைத்துக்கொண்டதற்கு நீ அனுபவிப்பாய் என்று அவள் கண்கள் சூளுரைக்க.. வீர்ரென்று திரும்பியவள் மனம் உளை களமாக கொதித்து.

ஆளை விழுங்கும் அழகு இல்லை, தன்னை போல் நானூறு வருஷம் பழமை வாய்ந்த வம்சத்தில் பிறக்கவில்லை என்று

துச்சமாக மேக மித்ராவை நினைக்க.. இன்று இவள் வீசிய வலைக்குள் எதிலும் சிக்காது ஒரு வித நிமிர்வுடனே நிற்க... கடைசியில் நாம் தானே ஓட வேண்டியதாகிவிட்டது என்று மனம் வன்மத்தால் துடிக்க தன் பாட்டியை கண்களால் தேடியபடி விரைந்தாள்.

அமீராவின் கண்களில் தெரித்த குரோதத்தை கண்டவளுக்கு தன்னையும் அறியாது பெரும் மூச்சு ஒன்றை விட.... "ம்ம்.. வர.. வர..நம்மை வெறுக்கும் ஃபேன் க்ளிப்பில் நாளுக்கு ஒருத்தியாகச் சேருவதற்கு பதில் ஒரு மணி நேரத்திற்கு ஒருத்தியாகச் சேருகிறார்களே" என்று பொருமியபடி நிரல்யாவை பார்த்து...

"போகலாம் நிரல்யா" என்று தன் அம்மா மற்றும் அண்ணிகளும் அமர்ந்திருந்த பகுதிக்கு சென்றனர்.

இவளை கண்டதும்.. முன்னே வந்த அம்மா மல்லிகா.. "எவ்வளவு நேரமாக உனக்காக காத்துக்கொண்டு இருக்கிறது??!" என்று கடிந்தவர்.. "அமீரா ஏதாவது சொன்னாலா?" என்று பெண்ணின் முக குறிப்பை பார்த்தே.

"புதிதாக ஒன்று சொல்ல வில்லைம்மா... தெரிந்தது தான் சொன்னாள்" என்றாள் அம்மாவை சமாதானப் படுத்தும் விதமாக.

புரிந்த மாதிரி தலை ஆட்டியவர்.. "இது எல்லாம் கொஞ்சம் நாளைக்குதான் அப்புறம் ஆடிக்கு ஒரு தடவை

அம்மாவாசைக்கு ஒரு தடவை வரப்போறாங்க அதனால் அவர்கள் பேச்சை எல்லாம் பெரிசுசா எடுத்துக்கொள்ளாதே புரியுதா??" என்று பொருத்து போகும் படி எடுத்து சொன்னார்.

"ம்ம்.." என்று தலை மட்டும் ஆட்டியவள் இப்படி ஊரே அவளை நிற்க வைத்து கேள்வி கேட்கும் படி வைத்த ரஃபிக் மீது கோபம் பொத்துக்கொண்டு வர.. எதையும் வெளியே காட்டாது அமைதியாக நின்றாள்.

"சங்கி எங்கம்மா?" என்றாள் கண்களால் தேடியப்படி.

"நாளைக்கு காலையில் ஐந்து மணிக்கு ஏதோ பூஜை செய்யனும் என்று உன் அத்தை சொன்னவுடன்.. விழுந்து அடித்துக்கொண்டு தூக்க போய் விட்டாள்... உன்னையும் படுக்க சொல்லலாம் என்று தான் தேடினேன்.. நல்ல வேளை மேஹந்தி வைக்கும் முன்னே நீங்க சாப்பிட்டு விட்டதால் கஷ்டம் இல்ல" என்றார்.

"அம்மா மணி பதினொன்று தானே ஆகிறது..." என்று அவள் சொல்லிக்கொண்டு இருக்கும் போதே அங்கே வந்த நாட் நாட் செவன்.

"இப்ப நீ கிளம்பினாதான் பொடி நடையாக உன் ருமிற்கு சென்று சேர எப்படியும் பன்னிரென்டு ஆகும்.. அதை விட நாளை காலையில் மூன்று மணிக்கு எழுந்து குளித்துவிட்டு கிளம்பினானால் தான் அங்கிருந்து கிளம்பி ஐந்து மணிக்காவது

மேயின் ஹோலுக்கு வந்து சேர முடியும்.." என்று பாட்டி புலம்பினார்.

லேசாக சிரித்த மங்கியை பார்த்த பாட்டி...

"நமக்கு முன்னாடி கிளம்பி போன அப்பா ஏன் லேட்டாக வந்தார் என்று கேட்டாயே இதுதான் காரணம்... உன் அப்பா எங்கோ வழி தெரியாது தொலைந்து போக... அவரை தேடிக்கொண்டு போன உன் தாத்தாவும் தொலைந்து போக... கடைசியில் சித் தான் போய் அவர்களை கண்டு பிடித்து அழைத்து வந்தான். மாளிகையாடி கட்டி இருக்காங்க... ஏதோ மேகா செயிஸ் மேஸ் கேம் மாதிரி இருக்கு.. வந்தவர்களுக்கு வகை வகையா உணவு கொடுப்பதற்கு பதில் ஒரு ரூட் மேப் கொடுத்தால் தேவலை... தொலைந்து போய் வழி கண்டு பிடித்து போவதற்குள்ளே விழி பிதுங்குது.." என்று சொல்லி முடித்தார் பாட்டி.

மேக மித்ராவின் முகத்தில் இருந்த இருக்கம் முற்றிலும் விடை பெற.. "கவலைப்படாதிங்க பாட்டி.. ஜி.பி.எஸ் வைக்க சொல்வோம்" என்றாள் மங்கி.

"ம்கூம்.. இந்த வீட்டிற்குள் சிக்கல் ஜமர்ரில் ஆரபித்து எல்லா வித ஹய் டெக் வசதியும் இருந்த போதும்.. கூகுள் மேப்பில் கூட இந்த மாதிரி ஒரு பேலஸ் இருக்கு என்று

தெரியாது வைத்திருக்கிறார்கள் என்றால் என்ன சொல்வது என்று தெரியவில்லை" என்றாள் நிரல்யா.

"உன்னை காணவில்லை என்றவுடன் நீ படுக்க போய்விட்டாய் என்று நினைத்துவிட்டேன்... ஆமாம் இவர்களுக்கு பக்கத்து ரூம்மில்தான் நீ இருக்காய்?!?" என்று நிரல்யாவை பார்த்து கேட்டார் நாட் நாட் செவன்.

"ம்ம்..." தலையை ஆட்டினாள் இயல்பிலேயே மிகுவும் கூச்ச சுபாவம் உடைய நிரல்யா.

"அப்ப நீயும் அவளோடு கிளம்பு.. உனக்குமே கடந்து இரண்டு வாரமாக உடம்பு வேற ரொம்பவே படுத்தது.. நீயும் அவ்வளவு சீக்கிரம் எழுந்து பூஜைக்கு வரவேண்டாம்... எப்ப முடியுதோ அப்ப வந்தால் போதும்" என்று கூறியவர் இருவரை அனுப்பி வைத்தார்.

"நீ சாப்பிட்டியாச்சு இல்ல?" என்றாள் தன் அண்ணியை பார்த்து.

இவளுக்கு நிரல்யாவிற்கும் மாதக்கணிக்கில் தான் வயது வித்தியாசம் என்பதோடு.. ஏற்காட்டில் எஸ்டேட் பக்கத்து எஸ்டேட்.. என்போதும் கிட்டதட்ட ஒன்றாக தான் வளர்ந்தவர்கள் என்பதாலும் சின்ன வயதிலிருந்தே தோழிகள்.

"ம்ம்.. நமக்காக கொஞ்சம் காரம் குறைவாக சமைத்து இருந்தாங்க அவங்களுக்காக கார சாரமாக வைத்திருந்தாங்க..

எல்லாமே ரொம்பவே நல்லா இருந்தது.." என்று மெல்ல பேசிப்படி லானில் நடந்துக்கொண்டு இருந்தவளுக்கு ஏதோ தோன்ற கண்களை திரும்பி பார்த்தவள் முகம் சுளித்தாள்.

அங்கே சற்றே தூரத்தில் கண்களாலே கத்தி வீசியக்கொண்டு மங்கி போவதையே பார்த்த அமீராவை கண்ட நிரல்யா "அவங்களுக்கு என்ன பிரச்சனை?" என்றாள் ஆதியும், அந்தமும் புரியாது.

"நான் மூச்சு விடுவதுதான் அவளுக்கு பிரச்சனை" என்றாள் அமீரா இருந்த புறம் திரும்பி கூட பார்க்காது.

"என்னது??" என்று திருதிருத்த நிரல்யா.

பதில் ஏதும் சொல்லாது அமைதியாக வந்த மங்கியை கேள்விகள் கேட்டு துளைக்காது பளிங்கு கற்களான மாளிகைக்குள் நுழைந்தனர்.

"இதை நம் வசிக்கும் வீடாக நினைக்க கொஞ்சம்.. ம்கூம்.. ரொம்பவே காலம் எடுக்கும் இல்ல மங்கி?? கீழே விரிந்திருக்கும் பர்ஷியன் கார்பேட்டில் இருந்து மேலே மினுமினுக்கு சான்டில்யரில், சுவற்றில் அங்காகே இருந்த அலிகான் முன்னோர்களை பார்க்கும் போது ஏதோ மிசியத்தில் இருப்பது போல் தோன்றுகிறது" என்றாள் பெரு மூச்சு விட்டப்படி நிரல்யா.

கொஞ்ச காலம் இல்ல கொஞ்ச வருடம் ஆனாலும் கூட இதை தன் வீடா நினைக்க முடியுமா?? என்ற சந்தேகம் அவளுக்கு இருக்க தான் செய்தது!!!

"ம்ம்..." என்று ஆமோதிப்பாய் தலையை ஆட்டினாள் மேக மித்ரா.

"அதை விட இந்த வீட்டில் எதை தொட்டாலும் குறைந்தது நூறு வருஷம் பழையானது தான் இருக்கிறது.. ஏற்கனவே தடுக்கி விழும் பழக்கம் உண்டா.. அதனாலே காலையில் இருந்து மாலை வரை நான் கம்பி மேல் நடப்பது போல் நடக்கிறேன்" என்று பெருமினாள் நிரல்யா மெல்ல நடந்தப்படி.

இது தான் நிரல்யா.. அவளின் படிப்பும் அழுகும் தான் அளவிற்கு அதிகமானதே தவிர மற்றப்படி மிக மிக சாதாரணமானவள்!!

நிரல்யா கேட்ட கேள்விக்கு ஏதோ கிண்டலாக பதில் சொல்லியப்படி திரும்ப.. பட்டென்று கையை பிடித்து நிறுத்திய நிரல்யா..

"இப்ப அங்க போக உரிமை இல்ல" என்றாள் குறும்பாக மங்கியை பார்த்து.

என்ன சொல்கிறாள் என்று புரியாது பேந்த பேந்த விழித்தாள் மங்கி.

"அது ரஃபிக் இருக்கும் நார்த் விங்கிற்கு போகும் வழி" என்றாள் கண்ணில் சிரிப்போடு.

"நார்த் விங்??" என்றாள் நிரல்யா என்னவோ பிரன்ச் மொழியில் பேசியது போல்.

"என்ன இப்படி பார்க்கிறாய்.. கல்யாணம் ஆன பிறகு அங்கே தான் இருக்கப் போகிறாய்.. என்று உன் சாமான்களை எடுத்து வைக்கும் போது உன் அத்தை என் அத்தையிடம் சொன்னார்கள்" என்றாள் நிரல்யா கண் அடித்தப்படி.

"ஓ!!! நார்த் விங்கில் ரஃபிக் ரூம் இருக்கிறது என்பதற்காக நார்த் விங் பக்கமே போக கூடாதா என்ன?!?" என்று பல்லை இளித்தபடி.

"இல்ல... அந்த நார்த்து விங் முழுவதுமே உன் ரஃபிக் உடையதுதானாம்"

"என்னது??" என்று கண்களை சுழல விட்டவளுக்கு பகிர் என்றது.

"என்ன இப்படி பார்க்கிற.. சவுத் விங் சித்துடையது அவர் விங்கில் சங்கிகாக ஒரு மாடுலர் கிட்சனையே வைக்க எல்லா ஏற்பாடு செய்து விட்டார் அது உனக்குத் தெரியாது?!?"

"அது தெரியும்... ஆனால்.. அந்த விங் முழுவதுமே ஒரு அறையாக இருக்கும் என்று நினைக்கவில்லை" என்றாள் முகம் கூம்ப.

"ராஜ பரம்பரை என்றால் சும்மாவா?.. இங்க எல்லாமே மேகா சயிஸ் தான்.. விருந்தினர் வந்து தங்குவதற்கே புட் பால் கிரவுட் மாதிரி இருக்கும் ரூம்மை தருகிறார்கள் என்றால் அப்புறம் அவர்கள் அறை எப்படி இருக்கும் என்று நினைக்கிறாய்??"

அவர்கள் வீட்டு டைனிங் டெபிளே இருபதி ஐந்து பேர் உட்கார்ந்து சாப்பிட கூடியது அளவு என்றால் இவர்கள் வீட்டில் டெனிங் ஹாலே பத்து இருக்கிறது.

நவாப் குடும்ப அங்கத்தினர் மட்டுமே அமர டைனிங்க ஹால் தனி என்றால்.. உறவினர் வருகைக்கு தனி.. மாலை வேலையில் காற்றாட உட்கார்ந்து டீ அருந்துவதற்கு தனி, காலையில் சூரிய ஒளி படும் படியாக உட்கார்ந்து சாப்பிடும் என்று வேலைக்கு ஒரு இடத்தில் சாப்பிடுவதற்கு அறை மாறுபடும்.

இங்கே ஒரு விங்க என்பது இருபது விஸ்தாரமான அறைகளைக் கொண்டது.. அது மாதிரி மூன்று அடுக்குகளிலும் பன்னிரண்டு விங்க இருக்கிறது.. எதிராளி வந்து தாக்கினால் தப்பி ஓடுவதற்காகவே வடிவமைத்து கட்டிய மாதிரி ஹேஸ்சகோண் என்று சொல்லப்படக் கூடிய ஆறுகோண வடிவில் அமைக்கப்பட்டு இருப்பதால் தான் இந்த குழப்பம்.

அறைகள் மட்டும் அது இல்லாது.. நவாப்பாக இருப்பவருக்கு தான் இருப்பதிலேயே பெரிய விங்க.. சொட்டா நவாப்பிற்கு என்று அடுத்த பெரிய தனி விங்க… இதில் அழகு என்னவென்றால் ஒவ்வொரு விங்கும் ஒவ்வொரு தீம்மில் இருக்கும்… அதே போல் ஒவ்வொரு விங்கிற்கும் பொது ஹால், டெனிங் ஹால் என்று தனியாக இருக்கும். இது பத்தாது என்று எல்லோரும் ஒன்று கூடுவதற்கு பத்து பெரிய ஹால், பால் ரூம் என்று நம் கற்பனைக்கு எட்டாது முதல் முறை பார்ப்பவர்களை தன் அசுரதனத்தால் மிரட்டச் செய்யும்.

தன்னுள் உழன்றுக்கொண்டே வந்தவளுக்கு நிரல்யாவின் பேச்சு பாதி காதில் விழுந்தது என்றால் மீது காற்றோடு கரைந்து மறைந்தது.

நிரல்யாவின் ஞாபகத்திறன் காரணமாக எந்த வித பிரச்சனையும் இல்லாது அவர்களின் அறை இருக்கும் பகுதிக்கு வந்து சேர… இவள் கதவை தட்டும் முன் பட்டென்று கதவு திறக்க…

அங்கே சிம்பி தன் கோனை பற்களை கோஸ் அப் பற்களாக பாவித்து விளம்பர புன்னகை செய்துக்கொண்டு நின்றது!!!

சிம்பியைப் பார்த்த நிரல்யா.. "என்னடா சங்கி தனியா படுக்க போகிறாளேன்னு நினைத்தேன்… நீ இங்க தான்

இருக்கியா?" என்று கூறியப்படியே பக்கத்தில் இருந்த அறை கதை திறந்தாள்.

எதுவுமே பேசாத மங்கி உள்ளே நுழையக் கால் அடி எடுத்து வைத்தவள் பின் திரும்பி "கார்த்திக் எப்ப வருவானே தெரியாது. அதுவரை நீ தனியாக எப்படி இருப்ப... சிம்பியை வேண்டுமானால் துணைக்கு.." என்று பேசிக்கொண்டு இருக்கும் போத...

வேண்டாம் என்று மறுத்த நிரல்யா.. "உனக்கே தெரியும் நான் உன்னை மாதிரி முனுக்கு என்று சத்தம் கேட்டால் எழுந்துக்கொள்ளும் ஆள் இல்லை... அசதியில் படுத்தேன் என்றால் இத்தோடு காலையில் தான் விழிப்பேன்" என்று சிரிப்போடு முடித்தவள். பின் ஏதோ நினைவிற்கு வந்தவளாய்.. "மங்கி.. இந்த தலை அலங்காரம் புடவை எல்லாம் கழட்ட நான் வரவா? கையில் மெகந்தி இருக்கே" என்றப்படி இவள் புறம் ஒரு படி எடுத்து வைத்தாள்.

"இல்லை.. மேகந்தி சுத்தமாக காய்ந்து விட்டது இனி ஒரு பிரச்சனையும் இல்லை.. அத்தொடு இது வைப்பதற்கு முன்பே முக்கியமான நகைகளை எல்லாம் கழட்டியாயிற்று.. புடவையும் தலை அலங்காரம் மட்டும் தான் மிச்சம் இருக்கு.. உனக்கே தெரியும் என் தலை முடியில் யார் கை வைத்தாலும் தனக்கு போட்டி என்று சிம்பி ஃபீல் பண்ணும்... அதனால் பெரிய

பிரச்சனை ஒன்றும் இல்லை நீ போய் தூங்கு. பாட்டி சொன்ன மாதிரி பொறுமையா எழுந்து வா"

"ம்கூம்.. எத்தனை நாளைக்கு இந்த சிம்பி உன் முடிக்கு போட்டி போடும் என்று பார்க்கிறேன்.. ஆனாலும் சகோதரிகள் இருவரும் இந்த சிம்பிக்காக இவ்வளவு நீட்டு முடி வளர்ப்பது எல்லாம் ரொம்பவே டூ மச்" என்று மொழியும் போதே இரண்டு முறை கொட்டாவி வர..

"முதலில் உள்ளே போய் படு நிரு.. ரொம்ப அசதியா இருக்கிறாய் குட் நயிட்" என்று சொல்லி விட்டு அவளின் குட் நயிட்டையும் பெற்றுக்கொண்டு உள்ளே வந்தவளுக்கு சங்க மித்ரா அயர்ந்து தூங்குவது தெரிந்தது.

உடன் பிறந்த சகோதரியாவது இந்த கல்யாணத்தில் எல்லா வித சந்தோஷமாவது கிடைக்கட்டும் என்று பெரு மூச்சு விட்டபடியே அங்கே இருந்த டிரஸ்ஸிங் டெபிள் நாற்காலில் அமர்ந்து சிம்பியிடம் தன் தலையை கொடுத்தாள்!!!

அடுத்த அறை மணி நேரத்தில் தலை சாமான்களைக் கழற்றி, ஆடை ஆபரணங்களை எல்லாம் மாற்றி.. வேறு ஒரு சாதாரண புடவையை உடுத்தி விட்டுப் படுக்க போனவளுக்கு உடம்பின் ஒவ்வொரு அனுவிலும் அசதியும் அயர்ச்சியும் இருந்த போதும் தூக்கம் மட்டும் வரவே இல்லை!!!

அதற்கு முக்கிய காரணம் அவளின் புடவை.. கல்யாணம் முடிந்து.. வீட்டு விருந்தினர் கிளம்பு வரை புடவையை தவிர வேறு எதுவும் அணிய கூடாது என்று மிக கண்டிப்பாக சொல்லி விட்டதோடு மட்டும் அல்லாது அவள் எடுத்து வந்த கேப்பரியையும் கூட அம்மா மல்லிகா எடுத்துக்கொண்டு போய் விட்டார்.

கொஞ்சம் நேரம் புரண்டு படுத்தவளுக்குத் தூக்கம் வராது இன்றைய நிகழ்வின் ரஃபிக்கின் உறவினர் எல்லோரும் பேசிய பேச்சுக்களும், குத்தல்களும், ஏச்சுக்களும் கண் முன் படமாக ஓட.... ஒவ்வொரு வார்த்தை ஊசியாய் குத்திய ரணம்... மெல்ல உடல் முழுவதும் பரவ ஆரம்பித்தது.

பகல் முழுவதும் லேசாக முனுமுனு என்று இருந்த பல் வலி இரவு ஆனதும் மெல்ல பரவி தலை, காது, கன்னம் என்று கண்களை திறக்க முடியாதப்படி விஸ்வ ரூபம் எடுத்து மொத்த நரம்பு மண்டலத்தையும் ஒரு உலுக்கு உலுக்குமே அது போல் அவர்கள் பேசிய பேச்சுகளால் ஏற்பட்ட வலி விஸ்வ ரூபம் எடுத்து அவளைத் திக்கு முக்காட செய்ய.. ஒரு கட்டத்திற்கு மேல் தாங்க முடியாதவளின் கண்களில் இருந்து சுடாக கண்ணீர் இறங்கியது.

தன் கண்ணீரை உணர்ந்தவளுக்கு அவமானமும், கழிவிரக்கமும் போட்டி போட.. பட்டென்று எழுந்தவள்...

இனியும் இங்கே இருந்தால் தன் கட்டு பாட்டை இழந்து கதறி அழுது விடுவோம் என்று புரிய மணி ஒன்றை தாண்டி விட்டது என்பதை பற்றி எந்த எண்ணமும் இல்லாது வேகமாக கதவை திறக்க அவள் பின்னாலே சிம்பியும் வந்தது.

"வேண்டாம் சிம்பி நீ இங்கேயே அவளுக்குத் துணையாக இரு.." என்று சற்றே உடைந்த குரளில் சொல்லிக் கொண்டு இருந்தவளை தன் சின்ன கண்களால் உற்று பார்த்த சிம்பி சட்டென்று அவளை இழுத்து அனைத்து முதுகைத் தடவிக்கொடுத்தது!!!

ஏன் அழுகிறாய் என்று காரணம் கேட்கவில்லை.. எங்கே வலிக்கிறது என்று கேட்கவில்லை.. ஆனால் வலியில் இருக்கிறாள் என்பதை உணர்ந்து அதை தன் அன்பால் வருடும் சிம்பின் ரோமம் நிறைந்த உடம்பில் முகத்தை புதைத்தவளுக்கு மீண்டும் கண்களை கரிக்க.. வெகு சிரமப்பட்டு அடக்கிக்கொண்டு அதன் அன்பில் திளைத்தாள்!!

எஸ்டேட்டில் அடிப்பட்டு உயிருக்கு போராடிய நிலையில் கிடந்து சிம்பி குணமானதும் ஏன் மீண்டும் காட்டுக்குள் அனுப்ப முடியவில்லை என்றால் அதனின் அபரிமிதமான அன்பு அவள் கைகளை கட்டி போட்டது.

ஐந்து நிமிடம் அதன் அனைப்பிலேயே கட்டுண்டு கிடந்தவளுக்கு உள்ளே ஆர்பரித்த அலைகள் மட்டுப்பட்ட

மெல்ல தன்னிலைக்கு திரும்பியவளை விடுவித்த சிம்பி அழகாகச் சிரித்தது!!!

அந்த சிரிப்பின் பிரதிபலிப்பாக அவள் முகத்திலும் புன்னகை மலர.. "எத்தனை தடவை உன்னிடம் நான் சொல்லி இருப்பேன் என்று தெரியவில்லை சிம்பி.. பட் ஸ்டில் நீ தான் என்னுடைய பெஸ்ட் ப்ரெண்டு" என்று ஆத்மார்த்தமாக மொழிந்தவள் சற்றே குணிந்து சிம்பியின் கன்னத்தில் அன்பொழுக முத்தம் பதித்தவள்.. "உனக்காக இந்த முடி என்ன பேரி டெயிலில் வரும் ரிப்பன்சல் மாதிரி எவ்வளவு நீட்டு வளர்த்தாலும் தகும்... தூக்கும் வரவில்லை கொஞ்சம் நேரம் காற்றாட உலாத்தி விட்டு வருகிறேன்.. நீ சங்கியுடன் இங்கே இரு" என்று கூறிவிட்டு வெளியேறினாள்.

மனதின் வலி சிம்பியின் அனைப்பால் குறைந்திருந்தாலும் வலியின் தாக்கம் இன்னும் நாடி நரம்பில் உணர.. நிரு அழைத்து வந்த பாதை வழியாக கீழே சென்றாள் அல்லது சொல்வதாக நினைத்துக்கொண்டு இருந்தாள் மூன்றாவது முறையும் அதே தாடி மீசையும் வரைந்த படத்தை பார்க்கும் வரை!!!

"இப்ப தானே பார்த்து விட்டு கடந்து சென்றோம்??" என்று அத்தனை நேரம் தன்னுள்ளே சுழன்றுக்கொண்டு இருந்தவளுக்கு தன் பிரச்சினைகளை ஒதுக்கி விட்டு மூளை வேலைச் செய்ய

தொடங்கியது அந்த நொடியில் தான். கிளம்பிய அவசரத்தில் போனை வேறு எடுத்து வர மறந்துவிட்டாள்!!!

எத்தனை நேரமாக இப்படி இங்கே சுற்றிக்கொண்டு இருக்கிறோம் என்று யோசித்தவளுக்கு விடை கிடைக்கவில்லை.. சரி இப்படியும் அப்படியுமாக சுற்றினால்.... பார்ட்டி முடிந்து ரூம்மிற்கு வருபவர்களில் யாராவது கண்ணில் படுவார்கள் வெட்கத்தை விட்டு வழி கேட்க வேண்டியதுதான் என்று அலட்சியமாக தோளை குலுக்கிவிட்டு வேறு வழியாக போகலாம் என்று சற்றே அதிக வெளிச்சமாக தென்பட்ட பகுதிக்குள் புகுந்தாள்.

அடுத்த இருபது நிமிஷம் மாங்கு மாங்கு என்று படியேறி இறங்கினாளே தவிர ஒருத்தரையும் கண்ணில் படவும் இல்லை இவளாகவும் வழி கண்டு பிடிக்கவும் இல்லை... அப்ப விடிய விடிய இப்படியே சுற்ற வேண்டியது தானா என்ற எண்ணம் அலையாக எழ... காலையிலே குளித்து விட்டு பூஜைக்கு வேறு போக வேண்டும் என்று பயம் பந்தாக எழு ஆரபித்தது அந்த நொடியில் தான்!!!

இவள் மட்டும் நேரத்திற்கு அங்கு போகவில்லை என்றால் ரஃபிக் என்ன மாதிரி முடிவு எடுப்பான் என்பதை நினைக்கும் போதே முதுகு தண்டில் ஜில்லிட்டது!!! கடவுளே எந்த மாதிரி

சுழ்நிலையில் மாட்டிக்கொண்டு இருக்கிறேன் என்ற விபரிதம் நெஞ்சு பதற நின்றாள்!!!

# அத்தியாயம் 8

இப்போ எந்த பக்கம் திரும்புவது என்று கைகைள பிசைந்துக்கொண்டு தன் முன்னால் விரிந்த மூன்று வழியையும் பார்த்துக்கொண்டு விழி பிதுங்கி நிற்க...

மூன்று வழியுமே ஒரே மாதிரி நீண்ட காரிடர் போன்ற தோற்றத்தோடு இருந்ததே தவிர வேறு ஒரு வித்தியாசமும் அவளுடைய கண்களுக்கு புலப்படவில்லை.. "கடவுளே என்னை காப்பாற்று..." என்று தன் குல தெய்வம் காளியை மனதால் வேண்டியப்படி குத்து மதிப்பாக ஒரு அடி எடுத்து வைக்க...

"உங்க அறைக்குப் போக.." என்று ஒரு ஆண் குரல் கேட்டது..

அர்த்த ஜாமத்தில் அசரீரியாக வந்த குரலைக் கேட்டு திடுக்கிட்டு துள்ளி குதித்து திரும்பியவளுக்கு அங்கே ஆறு அடிக்கு மேல் கட்டுமஸ்தான உடலுடன் அந்த நேரத்திலும் கோட் சூட்டுடன் நின்றுக்கொண்டு இருந்த புதியவனை பார்த்தவுடன் தன்னையும் அறியாது கால்கள் பின்னுக்கு இழுக்க...

"பின்னாடி... பார்த்து.." என்று அந்த நெடியவன் சொல்லிக்கொண்டு இருக்கும் போதே...

அங்கே மூலையில் சின்ன நாற்காலியில் வைக்கப்பட்டிருந்த பழைமை வாய்ந்த ஆள் உயர பூ ஜாடியில் வேகமாக இடித்துக்கொள்ள... இவளால் சமநிலை இழந்த அந்த பூ ஜாடி பேய் ஆட்டம் ஆடியது.

எதை வரைவது என்று தெரியாது கைக்கு வந்ததை எல்லாம் வட்டத்தில் ஆரம்பித்து உலகத்தில் இருந்து அத்தனை வடிவத்தையும் அந்த ஜாடியில் வரைந்த மாதிரி இருந்த அந்த அசிங்கமான பீங்கானிலான ஜாடி ஒரு முறை தடுமாறி.. பின் ஸ்லோ மோஷனின் கீழே சரிவதை ஒரு வித திகலுடன் கண்விரித்து பார்த்தவளுக்கு இது விழுந்து உடைந்தால்.... ஏற்கனவே எப்படா சந்தர்ப்பம் கிடைக்கும் என்று காத்துக்கொண்டு இருக்கும் இந்த வீட்டில் இவளே வலிய சென்று கொடுப்பது போல் இருக்குமே என்று மூளை எச்சரிக்கை செய்ய..

தன்னிச்சையாக தாவி பிடிக்க அவள் முன்னே குனிய.. அதையே தான் அந்த நெட்டயனும் நினைத்திருப்பான் என்று அவள் என்னத்தை கண்டாள்?!?

அவளை போலவே அவனும் பாய்ந்து வந்து பிடிக்க முயல.. அது தெரியாது இவள் குறுக்கே புக... இவள் கால் இடறி அந்த ஆறு அடி ஆண் மகன் நெடுஞ்ஞான் கிடையாக கிழே விழந்தான்.

தான் ஜாடியை மட்டும் தட்டிவிடவில்லை அந்த பாடிபில்டரையும் கீழே விழ வைத்திருக்கிறோம் என்பதை அறியாது... "அப்பாடா ஜாடியை காபாற்றியாச்சு" என்று முகம் வெற்றி களிப்பில் திரும்பியவளுக்கு அப்போது தான் அந்த புதியவனை காணாது சுற்றும் முற்றும் தேட.. அவன் கீழே கிடப்பதே கண்களுக்கு தெரிந்தது!!!

அவளால் தான் இப்படி கிடக்கிறான் என்பதை கூட உணராது... கண்களை அகல விரித்து அவனை விசித்திரமாக பார்த்தவள் "ஏன் இப்படி கீழே படுத்து இருக்கீங்க?? ஸ்ஸ்ஓ!! எதாவது தொலைந்து விட்டதா அதைத் தான் தேடறிங்களா?" என்றாள் அவளாக ஒரு முடிவிற்கு வந்து!!!

பின்னே அர்த்த ராத்திரியில் இப்படி கீழே படுத்து கிடந்தவனை வேறு என்னவென்று நினைக்க?!?

"ஆமாம்... உன்னால் அவனுடைய தன்மானத்தை தொலைத்து விட்டு கீழே படுத்து தேடிக்கொண்டு இருக்கிறான்.." என்று மீண்டும் அசரீரியாக ரஃபிக்கின் குரல் கேட்க..

அந்த குரலை சற்றும் எதிர்பார்க்காத மங்கி.. இந்த நீண்ட ஹாலில் எந்த புறந்தில் இருந்து இவன் குதித்தான் என்று திடுக்கிட்டு திரும்ப... ஏற்கனவே பிடிப்பற்று கையில் இருந்து வழுக்கிக்கொண்டு இருந்த ஜாடி.. அப்படியே கீழே விழுந்து

சுக்கல் சுக்கலாக உடைந்து சிதறியதையை ஒரு கையாலாகதத் தனத்துடன் வேடிக்கை பார்த்தாள்!!!

உடைந்த ஜாடியை இவள் வெறித்து பார்த்தப்படியே அசையாது நிற்க...

"முதன் முறையாக பர்ஷியாவிற்கு போன என் கொள்ளு தாத்தாவுடைய தாத்தாவுடைய தாத்தா அங்கே கொட்டி கிடந்த முத்துகளை பார்த்து இந்த ஜாடி முழுவதும் நிரப்பிக்கொண்டு வந்தாராம்..." என்றப்படி அந்த உடைந்த ஜாடியை கையை காட்டி.

அப்படி என்றால் எத்தனை நூறு வருஷங்கள் பழையானது என்று அவளால் கணக்கு கூட போட்டு பார்க்க முடியாது விக்கித்து போய் நிற்க..

"முத்து?!? ஹைத்திராபாத் தானே முத்துக்கு உலக பிரசித்தம் அப்படி இருக்க உன் தாத்தா ஏன் அங்கிருந்து வாங்கிக்கொண்டு வரவேண்டும்?" என்றாள் கீழே கிடந்த உடைந்த ஜாடியையும் அவனையும் பார்த்து வாய்க்கு வந்ததை கேட்டப்படி.

"ஹைத்திராபாத்தை சுற்றி கிட்ட தட்ட முன்னூறு கிலோ மீட்டருக்கு கடலே இல்லாத போது பின்ன எப்படி இங்கே முத்துக்கள் கிடைக்கும்?!?" என்று அவளை நட்ட நடு ராத்திரியில் ஜியோகிராகி கேள்வி கேட்டான் ரஃபிக்.

திருதிருவென்று அவனையே பார்த்தாள் மங்கி.

"என் முன்னோர்கள் முத்துக்கள் மேல் கொண்ட ஆசை அவர்களை அந்த காலத்தில் பர்ஷியா மற்றும் அரபு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய... இங்கே அதை பாலிஷ் செய்து ஆபரணங்களில் வைக்கும் விதமாக தயார் செய்யும் பணியை செய்தார்கள்.

இந்த அசிங்கமான ஜாடியில் நிரப்பிக்கொண்டு வந்தபடியால் தான் கடல் கொள்ளையர்களிடம் இருந்து விலை உயர்ந்த முத்துகளை காபாற்றியது மட்டும் இல்லாது இங்கே நூறு ரூபாயில் இருந்து பல கோடிகள் வரையிலான எல்லா தரப்பினரும் வாங்கக்கூடிய முத்துக்களும் கிடைக்க ஆரம்பித்தது.

ஆனால் இதை என் முன்னோர்கள் எடுத்து வரும் போது பிற்காலத்தில் "ஹைத்திராபாத் முத்துக்கள்" என்று பெருமைக்குரிய விஷயமாக சொல்லும் அளவு உலக பிரசித்த பெற்ற தொழிலாக மாறும் என்று யோசிக்கவில்லை... எந்த பெரிய விஷயமும் எங்கோ ஒரு சின்ன விஷயத்தில் இருந்து தான் ஆரம்பிக்கிறது... அதை என்னை போல் இருக்கும் அடுத்த தலை முறைக்கு நிருப்பிக்கும் விதமாக தான் இது இங்கே இருந்தது.." என்றான் அவளுக்கு விளங்கும் விதமாக.

அவன் பேச்சை கேட்டு மங்கி வாயை பிளந்தாள் என்றால் அதில் ஒரு நியாயம் இருக்கு ஆனால் ஏன் பீட்டர் வாயை பிளந்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்தான்??

இன்றைய அதிர்ச்சிக்கும் ஆச்சரியத்திற்கும் ஒரு முடிவே இல்லையா என்று இருந்து அவனுக்கு.. பின்னே??

பீட்டருக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து நவாப் ஊரில் இருக்கும் நாட்களில் நடு இரவில் உலாத்த பிடிக்கும்.... அதுவும் அவருடைய சேத்தக் என்னும் அரபிய சண்டி குதிரையில் காற்றை கிழித்துகொண்டு பறக்க பிடிக்கும் அதனாலேயே இங்கே குதிரை கொட்டகை கூட இருக்கிறது!!!

இந்த தலைமுறைக்கு தப்பி பிறந்துவிட்டார் என்று நினைப்பது உண்டு... எல்லொருக்கும் கார், பைக் ஓட்ட பிடிக்கும் என்றால் இவருக்கு குதிரை.. அதுவும் வேறு யாரையும் தன் முதுகில் ஏற்றாத அந்த சேத்தக் மட்டும் தான் அவர் விரும்பும் வாகனம்!!!

அதன் படி இன்று கூட விழா முடிந்தவுடன் தன் குதிரையில் ஒரு ரவுண்ட் போய் விட்டு வந்தவர் பீட்டருக்கு போன் கேட்ட முதல் கேள்வி "மேக மித்ரா எங்கே இருக்கா என்று பார்த்து சொல்" என்பது தான்.

இது என்ன கேள்வி ரூம்மில் தூக்கிக்கொண்டு தான் இருப்பாங்க என்று மனது நினைத்து போதும் நவாப்பை

துணிந்து எதிர்த்து கேள்வி கேட்கும் தைரியம் யாருக்கு இருக்கு??

வேறு வழியில்லாது சிசி டி.வியில் பார்க்க.. ஆச்சரியப்படும் விதமாக மேக மித்ரா காரிடர் காரிடராக அலைந்துக்கொண்டு இருந்தாள்!!!

இவர்களுக்கு உள்ள இருக்கும் இந்த விசித்திரமான தொடர்பை அவனால் புரிந்துக்கொள் முடியவில்லை.. என்று நினைத்தால்.. அதை தூக்கி சாப்பிடும் விதமாக

அவள் எவ்வளவு கோபப்பட்டாலும் அதை பற்றி கண்டுக்கொள்ளாது ரொம்பவே சாதாரணமாக நவாபால் எப்படி இருக்க முடிகிறது??

அதிலும் நடு இரவில் உட்கார வைத்து உடைந்து போன ஒரு ஜாடியை காட்டி பாடம் எடுப்பதும் அதை இந்த பொண்ணும் வாயை பிளந்துக்கொண்டு கேட்பதும் அவனுக்கு ஒரு வார்த்தையில் பதில் பேசும் நவாப் இவ்வளவு பேசுகிறானே என்று தலை சுழல.. எதையும் நம்ப முடியாது ... என்ன வென்று சொல் தெரியாது மெல்ல எழுந்து உட்கார்ந்தான்.

அதற்குள் இவனை பார்த்துவிட்டு..

"ஜாக்கிரதைன்னு சொன்னேன் இல்லயா?" என்று தன் மேல் விழுந்த பீங்கான் தூள்கள் கீழே விழ.. எழுந்து நின்ற தன் செக்கீயூரிட்டி சீப் பீட்டரை பார்த்து கேட்டான் ரஃபிக்.

"அது என் பாதுக்காப்பிற்கான எச்சரிக்கைன்னு நான் நினைக்கலை பாஸ்..." என்றான் தலையில் கிடந்த பீங்கான் துண்டை எடுத்து கீழே போட்டப்படி.

"காப்பாற்ற போனவங்களை கவிழ்க்கும் ரகம்.." என்றான் தோள்களை குலுக்கியப்படி ரஃபிக்.

ஒருவழியாக தன் அதிர்ச்சியில் இருந்து மீண்டவள்.. அவசரமாக பீட்டரிடம் திரும்பி..

"சாரி.. வெரி சாரி.. உங்களுக்கு ஒன்றும் அடிப்படவில்லையே..??" என்று அவன் புறம் திரும்பியவள் கால்களை எடுத்து உடைந்து கிடந்த பீங்கான் துண்டுகள் மேல் வைக்க போக..

"ஏய்.. கீழே பார்.." என்று ரஃபிக் எச்சரிக்கை செய்துக்கொண்டு இருக்கும் போதே.. அவனின் பேச்சை காதில் வாங்காது தன் புடவையை தூக்கி பிடித்தப்படி ஓரே தாண்டாக துள்ளி குதித்து அந்த பீட்டரின் அருகில் சென்று நின்றாள்.

இந்த தாண்டலை சற்றும் எதிர்பாராது பீட்டர் வியந்து மேக மித்ராவை பார்த்தவன் பின் ஏன் தன் பிறப்பிற்கும், வளர்ப்பிற்கும், இனத்திற்கும் சம்பந்தேமே இல்லாத இந்த மேக மித்ராவை கல்யாணம் செய்துக்கிறான் என்று புரியவது போல் இருக்க.. எதையோ நினைத்துக்கொண்டு கண்கள் சிரிப்பு பொங்க ரஃபிக்கை பார்த்தான்.

இதை எல்லாம் கவனிக்காத மேக மித்ரா.. "ஓ மை காட்.. உங்க நெற்றியில் லேசாக கிழித்து ரத்தம் கசிகிறது.. இப்படி ஆகும் என்று நான் எதிர்பார்க்கவில்லை... ஐயம் சாரி.." என்றப்படி ரஃபிக்கிடம் "ஃபர்ஸ்ட் ஏயிட் பாக்ஸ் எங்க இருக்கு?" என்றாள் பீட்டரின் நெற்றியை பார்த்ப்படி.

எப்படி மறுப்பது என்று பதில் சொல்ல தெரியாத பீட்டர் ரஃபிக்கை பார்க்க..

"இந்த சின்ன கீரலுக்கு எல்லாம் உன் மருத்துவ முகாமை தொடங்காதே மேகி.."

"ரஃபிக்..." என்று திரும்பி நின்று அவனை முறைக்க...

இவளின் முறைப்பை சட்டையே செய்யாது அவளுக்கு பின்னாடி முட்டும் சிரிப்புடன் தன் பாஸை பார்த்துக்கொண்டு இருந்தவனிடம் "அவளுடைய புடவை கிழித்து உனக்கு வைத்தியம் பண்ண ஆரம்பிக்கும் முன் ஓடிவிடு பீட்டர்" என்றான் ரஃபிக்.

"தேங்க்ஸ் பாஸ்" என்று அந்த புன்னகை மாறாது சலாம் வைத்தவன்... "குட் நயிட் மேடம்" என்று அதே சலாமை அவளுக்கும் வைத்து விட்டு வேக நடையுடன் அங்கிருந்து நகர்ந்தான்.

தன்னால் உடைந்த ஜாடியே அவள் மனதில் பிரதானமாக நிறைந்து இருக்க... "ஜாடி.. அந்த ஜாடி... ஐயம் வெரி சாரி.." என்று உண்மையான வருத்துடன் தெரிவித்தவள்.. "ஆமாம் நீங்க எப்படி வந்திங்க?? "அந்த பீட்டர்....??"

"அந்த பீட்டர் தான் என்னுடைய செக்கியூரிட்டி சீப் . நீ தனியா மாடி படியை ஏறி இறங்கிக்கொண்டு இருக்கிறாய் என்று அவன் தான் சொன்னதே.. அந்த தடியனிடம் அப்பவே சொன்னேன் இன்னும் அரை மணி நேரம் கழித்து போனா சமாளிப்பது எளிதுன்னு.. கேட்டானா? விட்டால் அழுதுவிடுவாய் என்று நினைத்து உன்னை காப்பாற்ற ஓடி வந்தான் இப்ப ரத்த காயத்தோடு ஓடுகிறான்..." என்றான் வருத்தத்துடன்.

"என்னது?!?... அரை மணி நேரமா நான் உங்க வீட்டை செக்கு மாடு மாதிரி சுத்திக்கிட்டு இருக்கிறதை வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்திங்களா?" என்றாள் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க.

"பின்ன யாராவது இப்படி அர்த்த ராத்திக்கு நடமாடுவாங்களா அதுவும் தெரியாத இடத்தில்?" என்றான் அவளின் கோபத்தை கொஞ்சம் கூட பொருட்படுத்தாது அலட்சியமாக விட்டால் ஜான்சன் பட்ஸ் கேட்டு காதை குடைவான் போல!!!

"என்னால் தூங்க முடியவில்லை என்றால்... நான் காற்றாட நடப்பேன் என்று உங்களுக்கே தெரியும் தானே?!?" என்றப்படி அவனை முறைத்தாள்.

தோளை விட்டேத்தியாக ஆட்டினான் ரஃபிக்.

"மறந்து விட்டேன் என்று சொல்லாத மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான்.. யானை மாதிரி எந்த ஒரு சின்ன விஷயத்தைக் கூட மறக்க மாட்டிங்கன்னு எனக்கு தெரியும்" என்றாள் அவனை உறுத்து விழித்தப்படி.

"எல்லாத்தை மறக்க சொல்லிவிட்டு இப்ப எதுக்கு கேட்கிறாய் மேக மித்ரா??" என்றவன் "இதையே நீ கெஞ்சி கேட்டால் எப்படி இருக்கும் என்று நினைத்தேன்.. ம்.. இன்டரஸ்டிங்" என்றான் கண்கள் கனவு மின்ன.

"வீனா பகல் கனவு காணாதே..." என்றாள்

"இது பகலும் இல்லை நான் காண்பது கனவும் இல்லை.. நான் நினைத்தேன் என்றால் இப்பவே இந்த நிமிஷம் அதை செய்துக்காட்டவும் முடியும்" என்று சவால் விட்டான் ரஃபிக்.

"ட்ரை செய்துக்கொள் ரஃபிக்" என்றாள் அலட்சியாக தலையை சரித்து.

"என்னிடம் சவால் விடாதே நான் சொன்னா சொன்னதை செய்வேன் என்று உனக்கு தெரியும்" என்ற போது அந்த குரலில் இருந்த குழைவு அவளுள் ஒரு சிலிர்ப்பை ஏற்ப்படுத்தியது.

பனி விழும் இரவில்... ஐஸ்கிரீம் சாப்பிடுவது போல்...

"ஒரு முறை ஜெயித்தால் ஒவ்வொரு முறையும் ஜெயிக்க மாட்ட...உங்க மனசில்..." என்று ஆவேசமாக ஆரம்பித்த மேக மித்ராவின் காதில் யாரோ வருவது போல் சத்தம் கேட்க..

"ரஃபிக் யாரோ படியில் நடந்து வரும் சத்தம் கேட்கிறது" என்று படப்படப்பாக திரும்பி பார்த்தப்படி.

கடந்த அரை மணி நேரமாக யாரவது வர மாட்டார்களா என்று பார்த்தவளுக்கு இப்ப யாரும் வந்து விடக் கூடாதே என்று மனது அடித்துக்கொள்ள..

"சீக்கிரம் என் அறைக்கு போகும் வழி சொல்" என்றாள் கிசுகிசுப்பாக.

அவளின் அவசரம் புரியாதவளாய்.. "ஏன்?" என்றான் பேச்சை வளர்க்க.

"ரஃபிக்.. புரியாத மாதரி கேட்காதே.. உன்னையும் என்னையும் ஒன்றாக பார்த்தால்.. அதுவும் இந்த நேரத்தில்.. காட்.. ஏற்கனவே.." என்று எதையும் சொல்லாமல் நிறுத்தி அவனை பார்த்தாள்.

"பார்த்தால்??"

"அதுதானே.. யார் பார்த்தால் உனக்கு என்ன? இங்கே போக போவது என் மானம் தான்.. அதை விட என் குடும்ப மானம்.." என்றாள் கோபம் தலைக்கு ஏற.

"எந்த பக்கம் என்று வழி சொல்றேன் ஆனா.."

"இங்க ஆனா ஆவன்னாவிற்கு எல்லாம் நேரம் இல்ல ரஃபிக்.. கால் அடி சத்தம் மிக அருகில் கேட்கிறது" என்றாள் கிசுகிசுப்பாக.

எனக்கு என்ன?? என்னும் ரீதியில் தோள்களை குலுக்கியவன்.. "முத்தம் கொடு வழி சொல்கிறேன்" என்றான் கண்கள் சிரிக்க.

"வாட்?? முத்தமா இப்பவா??" என்று அதிர்ந்து கேட்டாள்.

"கல்யாணம் பண்ண தான் நாள் நட்சத்திரம் பார்ப்பார்கள் முத்தம் கொடுப்பதற்கு எல்லாம் இல்ல.." என்றான் இடக்காக.

"ஆர் யூ கிரேசி... என்ன சமயத்தில் என்ன கேட்கிறாய்??" என்று அவள் சொல்லும் போதே மிக சமீபத்தில் காலடியுடன் பேச்சு குரல் கூட கேட்க.. மிரட்சியான பார்வையை அந்த புறம் பார்த்தவள் கீழே பீங்கான் இல்லாத இடத்தை பார்த்து இரண்டு தாவகா தாவி ரஃபிக் இருக்கும் புறம் வந்தவள்... "கொடுக்கிறேன்... இப்ப வா போகலாம்" என்று எந்த புறம் ஓடினாலும் மாட்டிவிட தான் போகிறோம் என்று மனது தவிக்க...

அவனோ மிக சாதாரணமாக அங்கே சுவர் போலவே வேலைப்பாடு செய்திருந்த கதவில் கையை வைத்து தள்ள அழகாக திறந்துக்கொண்டது அந்த அறை!!!

"இது.. என்ன??" என்று அவள் கேட்கும் போதே.. பெரிய ஹாலின் மற்றொரு கதவு வழியாக உள்ளே வந்திருக்கிறார்கள் என்று புரிந்தது.

"நீ நினைக்கிற மாதிரி ரகசிய அறையோ இல்ல சுரங்க பாதையோ இல்லை மேகி.."

"பின்ன..?"

"இது ஐவரி ரூம்..." என்றான் மார்பின் குறுக்கே கைகளை கட்டியபடி.

உள்ளே வந்தப்படி கண்களை சுழற்றிய போது அந்த பெயரிட்டதற்கான காரணம் புரிந்தது..

அங்கே இருந்த சின்னது பெரியது என்று எல்லாம் சாமான்களும் தந்தத்தால் செய்யப்பட்டு இருந்தது.. நாற்காலி முதல் டெபிள் உற்ப்பட... அதிலும் அந்த விசாலமான அறையின் நடுமத்தியில் இருந்த வெள்ளியிலும், தந்தத்தினாலும் செய்யப்பட்டிருந்த கலை நயம் மிக்க அந்த திவான் கட்டில் கண்களை கவர்ந்தது!!!

"இப்ப உங்க கூட சண்டை போட கூட எனக்கு நேரம் இல்லை... நான் என் ரூம்மிற்கு போகனும்... வழி சொல்லுங்க.." என்றாள் கண்களை அவன் மேல் திருப்பியப்படி

"நான் ஏன் சொல்லனும்?!?" என்றான் அவளை கூர்ந்து தலை முதல் பாதம் வரை உரிமையோடு பார்வையை மேய விட்டவன்.

தன்னையும் மீறி கைகளை புடவையை இழுத்து சரி செய்.. "ஏன் சொல்லனுமா?? காலையில் ஐந்து மணிக்கு ஏதோ பூஜை இருக்காம் அத்தை வர சொன்னாங்க.." என்றாள் படப்படப்பாக.

"ம்கூம்.. அது எனக்கு தெரியாது என்று நினைக்கிறாயா?" என்ற கேட்டப்படி அவனின் கண்கள் கீழே இறங்க...

இதயத்துடிப்பு தடதடவென்று எகிறயதை எங்கே கேட்டு விடுவானோ என்று பயந்து கால்கள் தன் இஷ்டத்திற்கு பின்னுக்கு நகர... வாய் தன் பாட்டில் பேசியது..

"தெரியும் என்றால் பின்ன வழி சொல்லி தொலைக்க வேண்டியது தானே.. எதுக்கு என்னை கேட்கனும்...?? இப்ப போனாதான் நான் குளிந்துவிட்டு சங்கியையும் எழுப்பி கிளம்ப சரியாக இருக்கும்" என்றாள் விளக்கமாக.

"நான் கேட்டதை கொடுத்து விட்டு போ" என்றான் கண்கள் மின்ன.

நடுங்கிய கால்களை நல்லகாலம் புடவை மறைக்கிறது என்ற நிம்மதி பெரு மூச்சுடன் "முடியாது" என்றாள் வன்மமாக.

"அப்ப என்னாலும் வழி சொல்ல முடியாது..."

"யாரும் எனக்கு சொல்ல தேவை இல்லை.. நானே.. நானே.. போய் கொள்வேன்" என்று ஆவேசமாக மொழிந்தவள் கண்களை சுழல விட... குழப்பதில் சுறுங்கியது..

ஏன் என்றால் அந்த ஐவரி அறையில் எந்த பக்கம் கதவு என்றே தெரியவில்லை எல்லாமே சுவர் போலவே தெரிந்ததே தவிர கதவு எங்கே எது என்ற எந்த வித்தியாசமும் தெரியவில்லை..."

ஏன் என்றால் அந்த ஐவரி அறையில் எந்த பக்கம் கதவு என்றே தெரியவில்லை எல்லாமே சுவர் போலவே தெரிந்ததே தவிர கதவு எது என்றே தெரியவில்லை...

"மேகி.. உன் ரூம்மிற்கு போவதை விடு... முதலில் என் உதவி இல்லாது இந்த ரூம்மை விட்டே உன்னால் வெளியே போக முடியாது..." என்று அகங்காரமாக பேசியவன்.. "நான் ரொம்ப நல்ல மனநிலையில் இருப்பதால் ஒரு டீல் சொல்றேன்.. நீயா வந்து முத்தம் கொடுத்தால் ஒன்று போதும்.. அதுவே நானாக வந்தால் எத்தனை அடி எடுத்து வைக்கிறேனோ அத்தனைக்கும் டபுள்ளாக வசூல் செய்வேன்" என்று டீல் பேசினான் அந்த உத்தமன்.

"இப்படி டீல் பேச வெட்கமா இல்லையா?"

"கொஞ்சம் கூட இல்லை.. இன்பாக்ட் ஐயம் என்ஜாயிய் திஸ்.. என்னதான் சொல்லு மேகி.. நாம் போய் முத்தம்

கொடுப்பதில் இருக்கும் கிக்கை விட.. நமக்கு முத்தம் கொடுக்கும் போது இருக்கும் கிக்கே வேற தான்" என்றான் கண்ணடித்தப்படி.

"இன்னும் ஒரு முறை பழைய விஷயத்தை ஞாபகப்படுத்தும் படி வாயை திறந்த... உன்னை..."

"ச்சுச்சு.. மேகி.." என்று தலையை ஆட்டியவன் "இப்ப தான் எல்லாத்தையும் மறந்து விட்டாயான்னு கேட்டு அதற்கும் திட்டினாய்.. மறக்காமல் ஞாபகம் வைத்திருந்தால் அதற்கும் திட்டுகிறாய்.. முதலில் நான் எதை மறக்கனும் எதை ஞாபகம் வைத்திருக்கனும் என்று லிஸ்ட் போட்டு கொடு ஓரே குழப்பமாக இருக்கு.." என்று நக்கலும் நய்யாண்டியும் போட்டி போட.

அவன் வழி தனி வழி என்று திரியும் ரஃபிக் தான் நினைத்தை சாதிக்காமல் விடமாட்டான்.. அவனாக அடி மேல் அடி எடுத்து அடி பிரதஷ்னம் செய்து பத்து முத்தம் கொடுப்பதை விட.. இவளாக சென்று ஒன்று கொடுத்து விட்டு இடத்தை காலி பண்ணுவது மேல்... இல்லை என்றால் இது மாதிரி பேசிக்கொண்டே இருப்பான் என்று ஒரு வழியாக முடிவிற்கு வந்தவள். அதற்குமேல் எதை பற்றியும் யோசிக்க அவளுக்கே அவகாசம் கொடுக்காமல்.. வீரென்று நடந்து அவன் புறம் சென்றாள்.

விரைப்பாக முகத்தை வைத்துக்கொண்டு..

"குனி ரஃபிக்" என்று கட்டளையிட்டாள்.

"கொடுக்க வந்தவள் நீ... சொ.. உனக்கு தேவை என்பதனால் நீ தான் கொடுக்க வேண்டும்"

"அண்ணகள் எங்களுக்கு தெரிய கூடாது என்று திட்டிக்கொள்ளும் ப்ரெஞ்ச் வார்த்தையைக் கற்றுக்கொண்டு வந்து உன்னை திட்ட வேண்டும் போல் இருக்கு ரஃபிக்".

"எந்த வார்த்தை என்று சொல் அதற்கு நான் ப்ரெஞ்ச்சில் சொல்லி தருகிறேன்" என்றான் கண்கள் சிரிக்க.

"காட்.. உன்னை.." என்று அவள் வார்த்தை கிடைக்காமல் தடுமாற...

"தெரியும்.. தெரியும்... என்னுடைய வசீகரம் உன்னை தடுமாற செய்கிறது இல்லையா?? அதனால் தான் உனக்கு வார்த்தைக் கூட இப்படித் தந்தி அடிக்குது.."

"ஒரு வார்த்தை பேசாத.." என்று பேசியப்படி சுற்றும் முற்றும் பார்த்தவள்... காலில் புடவை சிக்க இரண்டு முறை தடுமாறி அந்த தந்த தீவானில் ஏறி நின்று "இங்கிருந்து நான் உனக்கு முத்தம் கொடுக்க வேண்டும் என்றால் நான் ப்ளையிங் கிஸ் தான் கொடுக்க முடியும்.. அதனால் என் கிட்ட வந்து தொலை" என்றாள் கடுப்பாக.

"ஒ.கே" என்று எதோ வேண்டா வெறுப்பாக வருது போல் அவளை நெருங்கி நின்றவனின் கண்கள் அவளை பார்த்து கேலி செய்து சிரித்தது.

எரிச்சலாக அவன் சிரிப்பதை பார்த்தவளுக்கு உள்ளே பொங்க.. எது பேசினாலும் தான் அதற்கு பதில் பேச முடியாதப்படி பதில் பேச தெரிந்து வைத்திருக்கிறானே என்று மனதில் பொருமியப்படி... அவனை விட உயரத்தில் இருந்ததால் முன்னே நன்றாக குனிந்து லேசாக குத்திய தாடியுடைய முகவாயை பற்றி திருப்பி அவன் கன்னத்தில் முத்தம் இட முனைய..

அந்த சமயம் பார்த்து கண்களில் காதல் ரசம் மின்ன தலை லேசா திருப்பியவன் உதடு அவள் உதட்டோடு இணைந்தது!!!

மண்டைக்குள் ஆயிரம் எண்ணங்கள் ஓடிக்கொண்டு இருக்க.. அவன் இதழ் ஸ்பரிசம் பட்ட அடுத்த நொடி.. எல்லாம் மாயமாக மறைய... எப்பயும் போல் அவனின் அருகாமை.. அவனிற்கே உரிய மனம் அவளுள் நிறைய.. கால்கள் பாரத்தைத் தாங்காது வலுவிழக்க.. தலை குப்பு கீழே விழப்போகிறாள் என்று கனவில் தோன்றுவது போல் தோன்ற... அடுத்த நொடி உடம்பு லேசாகி காற்றில் மிதப்பது போல் ஒரு நிஜமான மாய உலகத்தில் சஞ்சரித்தாள்....

எத்தனை நேரம் அப்படி மிதத்துக்கொண்டு இருந்தாலோ அவள் அறியாள்!!! ஆனால்

அவனாக அவளை விடுவித்த போதும் கூட உடம்பு காற்றில் மிதப்பது போன்ற எண்ணம் மறையாது அப்படியே நீடிக்க.. அப்போதுதான் தெரிந்தது.. நிஜமாவே அவள் காற்றில் தான் மிதந்துக்கொண்டு இருக்கிறாள் அதாவது அவன் அவளை நின்ற நிலையிலேயே தூக்கி பிடித்திருக்கிறான் என்று புரிந்தது!!!

தீவான் கட்டில் இருந்து எப்போ இவன் கைக்கு வந்தோம் என்ற கேள்வி எழ.. அதை விட அவளின் விரல்கள் அவனின் தலை முடியில் பிணைந்து இருக்க.. உடம்போடு உடம்பு ஒட்டி இருக்க... இடையை பற்றி இருந்த அவனின் அழுத்தமான விரல்கள் வேறு கதைகள் சொல்ல... தீ பிடித்தது போல் அவன் பிடியில் இருந்து விடுப்பட்டு கீழே இறங்க முயற்பட..

"ஓ.கே.. ஓ.கே.. விழுந்துவிடாதே.." என்று கூறியப்படி அவளை விடுவித்தான் ரஃபிக்.

கைகள் நடுங்க.. கண்களை இருக்க மூடி தன்னை சமாதானப்படுத்த நினைத்தவளுக்கு எதுவுமே தன் கட்டுப்பாட்டில் இல்லாது தடுமாற..

"நான்... நான்.. போகனும்" என்றாள் லேசாக குரல் நடுங்க.

எதுவும் பேசாது அவளை கூர்ந்து பார்த்தவன் தன் பாக்கெட்டில் இருந்து போனை எடுத்து யாரிடமோ அரபிக்கில்

பேசிவிட்டு வைத்தவன் "ஐந்து நிமிடத்தில் பீட்டர் உன்னை அழைத்துக்கொண்டு போக வருவான்.." என்றான் அமைதியாக.

எதுவும் பேசாது தலையை மட்டும் ஆட்டியவள் "என்னை ஏமாற்றி விட்டாய் ரஃபிக்.. யோசித்து பார்த்தால் அதுதானே உன் வழக்கமும் கூட" என்றாள் குரல் வெதும்ப..

"ஏய்.." என்றப்படி அவன் ஒரு அடி எடுத்து முன்னே வைக்க..

அவசரமாக பின்னாடி நகரந்தவளை பார்த்தவனுக்கு கண்களில் கோபம் கொப்பளித்து.. "நீ என்னை ஏமாற்ற நினைத்தாய்.." அதற்கு மேலும் பேச நினைத்தவன் பின்ன ஏனோ அவள் முகம் போன போக்கை பார்த்து விட்டு அத்தோடு நிறுத்தினான்.

"என்னை பார்த்த அந்த நொடியில் இருந்து... உனக்கும் எனக்குமான ஒரு தொடர்பை நீ உணர்ந்தாய் தானே பின்ன ஏன் ரஃபிக் அங்கிருந்து நீ கிளம்பவில்லை. காற்று கூட உன் அனுமதி இல்லாது வீச முடியாத இந்த கோட்டையில் ஏன் வந்து நீ ஒளிந்துக்கொள்வில்லை..?? ஏன் ரஃபிக்? ஏன்..?? ஏன்..??" என்று கேட்ட போது அவள் கண்களில் தெரிந்த மரண வலியை அவனால் உணர முடிந்தது.

"நான் நவாப் மேகி... ஓடி ஒளிந்துக்கொண்டு பதுங்கும் பழக்கம் என் பரம்பரையில் இல்லை"

"ஒளியும் பழக்க இல்லை என்பதற்காக என்னை பலிகடா ஆக்கிவிட்டாயே நவாப்?!?" என்று அவள் கோபமாகக் கேட்டிருந்தால்... அவனால் முகத்தில் அடித்த மாதிரியோ இல்லை தெனாவட்டாகவோ பதில் சொல்ல முடிந்திருக்கும்... ஆனால் மேக மித்ராவோ... ரத்தமும் சதையுமாக வெட்டப்பட்ட வலியுடன் பேசினாள்.. அவள் வார்த்தையில் அதீதிக வலியின் கொப்பளிப்பு அவனை முகத்தில் அறைந்தது.

"மேகி.." என்று அவன் அழைத்தப்படி ஒரு அடி எடுத்து வைத்து அவள் புறம் வர.. அடுத்து அவள் சொன்ன வார்த்தைகள் அவனை கட்டிப் போட்டன..

"பயமாக இருக்கு ரஃபிக்... ஊர், உலகத்தில் உன்னை பார்த்து நான்கு அடி தள்ளி நின்ற போது ஏன் பயப்படறாங்கன்னு அப்ப புரியலை.. ஆனா இப்ப புரியுது அவங்க பயப்படுவதில் ஒரு நியாயம் இல்லாமால் இல்லை.."

ஒரு நிமிடம் அவள் சொன்ன பதிலை கண்களை மூடி ஏற்றுக்கொண்டவன் "பயம் நிஜம் தான்.. ஒத்துக்கொள்கிறேன்... ஆனால் அது என் மேல் பயமா இல்ல உன் மேல் உள்ள பயமா?!?" என்றான் அழுத்தமாக ரஃபிக்.

# அத்தியாயம் 9

**ஒ**ரு நிமிடம் அவள் சொன்ன பதிலை கண்களை மூடி ஏற்றுக்கொண்டவன் "பயம் நிஜம் தான்.. ஒத்துக்கொள்கிறேன்... ஆனால் அது என் மேல் பயமா இல்ல உன் மேல் உள்ள பயமா?!?" என்றான் அழுத்தமாக ரஃபிக்.

அதை மொழிந்தப்போது நவாப் குரலில் இருந்த அழுத்தமும் அவன் முகத்தில் இருந்த தெளிவும்.. பதில் தெரியாது கேட்கப்பட்ட கேள்வியாய் இல்லாமல்... ஐயம் திரிபுர அறிந்த உண்மையை அவளுக்கு உணர்த்தும் பொருட்டு விடுக்கப்பட்ட கேள்வியாக தான் அவளுக்கு தோன்றியது!!!

என்ன பதில் சொல்லுவாள்?? இவன் யார் என்று தெரிவதற்கு முன்னாலும் சரி...இவன் தான் சித்துடைய அண்ணன் "நவாப்" என்ற உண்மையை தெரிந்த பின்னும் சரி அவன் மேல் கோபம், ஆத்திரம், எரிச்சல், பகை என்று பலதரப்பட்ட உணர்வுகளால் சூழப்பட்டிருக்கிறாள் ஆனால் ஒரு முறை கூட அவன் மேல் கடுகு அளவு பயம் வந்தது இல்லை!!!

நவாப் கேட்டது போல்.. இது அவன் மேல் உள்ள பயம் அல்ல... அவள் மேல் உள்ள... பயம்... எதற்கானது என்பது அவள் உள்ளகிடங்கில் உறக்கும் உண்மை... அதை அவளே

அறியும் முன்பே அவன் எப்படி அறிவான்?!? அதை எப்படி அவன் முன் ஒப்புக்கொள்ள?? ஏற்கனவே மணி மகுடம் இல்லாமல் ராஜாவாக பவனி வருபவனுக்கு இந்த உண்மையை மட்டும் ஒப்புக்கொண்டு விட்டால்... அவ்வுளவுதான்... என்று முடிவுக்கு வந்தவள்..

அதற்கு சூடாகப் பதில் திறக்க வாயைத் திறந்த போது யாரோ மெல்ல கதவைத் தட்டுவது போல் இருக்க.. "தப்பித்து விட்டாய் என்று மட்டும் நினைக்காதே" என்று பொருள் படும் படி அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு

மெல்ல நடந்து சென்று வேறு ஒரு புறத்தில் அலங்காரமாக சுவற்றில் மாட்டி இருந்த தந்தத்தினால் ஆன வாக்கிங் ஸ்ஃடிக்கை பிடித்து இழுக்க.. அழகாகக் கதவு திறந்துக்கொண்டது...

ஜெட் வேகத்தில் பீட்டரிடம் உத்தரவு பிறப்பிக்க எல்லாத்தையும் கேட்டு தலை ஆட்டிவிட்டு அவன் பின்னாடி நகர இவள் புறம் திரும்பியவன் எதுவும் பேசாமல் கையை மட்டும் போகலாம் என்னும் படியாக சைகையைக் காட்டினான்.

அவன் எப்படி எதுவும் சொல்லாமல் கையை காட்டினானோ அதே போல் அவளும் எதுவும் பேசாது ரஃபிக்கைக் கடந்துப் போக நினைக்கையில் அவளையும் அறியாது அவளின் கண்கள் அவனை பார்த்தது.

அவளின் பார்வையை தயங்காமல் ஏந்திய அவனின் பார்வையில் இருந்த செய்தியை உணர்ந்தவளுக்கு கால்கள் முதலில் தடுமாறி... பின் தயங்கி.. கடைசியாக நின்று விட்டது!!!

ஏன் என்றால் அதில் அப்படி ஒரு வெற்றி களிப்பு நிறைந்து இருக்க... எதற்காக இந்த கொண்டாட்டம்... என்று புரியாத குழப்பம் மனதில் சூழ... அவளையும் அறியாது நின்று விட்டாள்!!!

அவள் அருகில் நின்று விட்டவளை கண்டவன்.. "என்னை விட்டுப் போக மனசு வரவில்லையா மேகி?" என்று களிப்புடன் சற்றே அவள் புறம் குனிந்து கேட்டான்.

அவன் குரல் காதிலேயே விழாத பாவனையுடன் நின்றவள்.. "இந்த வெற்றி களிப்பிற்கு என்ன அர்த்தம்?" என்றாள் வயிற்றில் பிரளயம் எடுக்க..

"ஓ.. கண்டு பிடித்துவிட்டாயா?? நாட் பேட்..." என்று அவள் திறமையை சிலாகித்தவன்...

பின் தாடையை தடவியப்படி.. "நாளை பூஜை முடிந்தவுடன் இதை பற்றி பேசுவோம்... அது வரை உனக்கு நேரம் இருக்கு.. யோசி.. அப்படி கண்டு பிடிக்கவில்லை என்றாலும் ஒரு பிரச்சனையும் இல்லை நானே சொல்வேன்" என்றான் பறந்த மனதாக.

"போடா நீயும் உன் ரகசியமும்" என்று சொல்ல ஆசை தான் ஆனால் அவன் முகத்தில் தெரிந்த அந்த களிப்பு அவள் நாவை கட்டிப் போட்டது...

மனதில் இருப்பதை எல்லாம் வெளிக் கொட்டிவிடும் ஆசாமி ரஃபிக் இல்லை என்னும் போது... எதற்காக இந்த சந்தோஷம்.. அதுவும் இவ்வளவு வெளிப்படையாக காட்டுகிறான் என்றால்... நிச்சயம் ஏதோ ப்ளான் பண்ணி வைத்திருக்கிறான் என்று தானே பொருள்?!?

அவன் ப்ளான் எதுவும் செய்யாமல் போகிற போக்கில் செய்யும் செயல்களையே அவளால் ஜீரணிக்க முடியாது.. இதில் அவன் கட்டம் கட்டி திட்டம் தீட்டினால் அது எத்தனை விபரிதமானதாக இருக்கும் என்று நினைக்க உள்ளம் பதறியது!!! அது என்னவாக இருக்கும் என்ற நினைப்பே பதற்றம் தோற்றிக்கொள்ள செய்ய போதுமானதாக இருக்க... வாய் வரை வந்த கேள்வியை மென்று விழுங்கினாள்.

ஏற்கனவே அவன் "போ" என்று சொன்ன பிறகும் நின்று பேசியதே அதிகம்.. அதை விட அவனிடம் கெஞ்சுவது மகா கேவலமாகப் பட... முகத்தை விரைப்பாக வைத்துக்கொண்டு அலட்சியமாக "சரிதான்.. போடா" என்று பார்வையை அவன் மேல் வீசி விட்டு நகர...

"அப்படியா??" என்று தலை சரித்து ஏற்றுக்கொண்டான் அந்த மகானுபாவன்.

"பீட்டர் அடிப்பட்டதே மருந்து போட்டிங்களா?" என்றாள் அவளை அழைத்துச்செல்ல வந்த பீட்டரிடம். அரை இன்ச் சிராய்ப்பையே நான்கு இன்ச் கிழிந்து ரத்தம் கொட்டியது போல் கரிசனமாக விசாரித்தாள்.

அவன் இருக்கும் துறையில் இது எல்லாம் எவ்வளவு அற்பமான விஷயம் என்று சொல்ல மனது வராது... அதற்காக அப்பட்டமாக பொய்யும் சொல்ல முடியாது எல்லா பக்கமும் தலையை ஆட்டி வைத்தான் அந்த பீட்டராகப்பட்டவன்.

இவள் அடுத்த கேள்வி கேட்டு அவனை திணறடிக்கும் முன் ரஃபிகிடம் திரும்பி அவன் சலாம் வைத்து விடை பெற.. ரஃபிக்கோ லேசான தலை அசைப்புடன் அதை ஏற்றுக்கொண்டான்.

பீட்டர் விடை பெறுவதை கண்டு காணாது போல் நின்றவள்.. மறந்து கூட ரஃபிக் புறம் திரும்பாது பீட்டருடன் நடந்தாள்!!!

என்ன விஷயமாக இருக்கும் என்ற கேள்வி மனது வண்டாய் குடைந்த போதும் பொதுப்படையாக பீட்டரிடம் பேசியப்படி வந்தவள்... அவர்களின் அறை வந்ததும் கதவை தட்டாது அவனுக்கு விடை அளிக்க... அவன் தலை

மறைந்ததும் "ப்பூ" என்று பெரு மூச்சு விட்டப்படி கதவை தட்ட கையை எடுக்க.. அவளின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் விதமாக கதவை திறந்தது சிம்பி.

அவசரமாக உள்ளே நுழைத்தவளுக்கு அதற்கு மேல் எதை பற்றியும் யோசிக்க நேரம் இல்லாது மடமடவென்று குளிந்து, சங்கி எழுப்பி பாத் ரூம் அனுப்ப.. அதற்குள் அம்மா மல்லிகா, பாட்டி நாட் நாட் செவன், மூத்த அண்ணி சௌவி என்று ஒவ்வொருத்தராக அறைக்குள் வந்த வண்ணம் இருந்தனர்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் மணப்பெண்களுக்காகக் காயத்திரி கொடுத்து அனுப்பிய புடவை மட்டும் நகைகளுடன் அலங்கரித்து முடிக்கவும்... கீழே அவர்களை அழைத்து வர ஆள் வரவும் சரியாக இருந்தது.

"ம்கூம்.. இன்று எத்தனை கிலோ மீட்டர் நடக்கனுமோ " என்று நாட் நாட் செவன் புலம்பியப்படி வர அதிசயமாக ரொம்ப தூரம் நடக்கவிடாது அந்த காரிடரின் கடைசியில் இருந்த ஹாலில் தான் அன்றைய பூஜைக்கான ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

இவர்களை பார்த்து விட்டு சிரித்த முகத்தோடு வந்த அத்தை காயத்திரி மணப்பெண்கள் இருவரையும் அங்கே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேடைக்கு அழைத்து சென்றார்.

எப்பயையுமே அறையின் நிறத்திற்கும் அளவிற்கும் ஏற்றப்படி சோபா செட்டுக்களாலும், அழகுப் பொருட்களாலும் நிரம்பி வழியும் ஹால் மாதிரி இல்லாது அந்த அறை முழுவதும் பால் வெண் நிறத்தில் இருக்க... ஆங்காங்கே தொங்கிய திரை சிலைகள் கூட அதே நிறத்தில் தொங்க... நேற்று நடந்த மெகந்தி விழாவைப் போலவே ஆட்கள் எல்லோரும் கீழே அமர்ந்து இருக்கும் படியாக இரு புறமும் வெண் நிற மெத்தையும் விரிந்து.. சாய்வதற்கு ஏதுவாக திண்டுக்களும் ஆங்காங்கே நிரம்பி வழிய... சற்றே உயரம் அதிகமில்லாத மேடையிலும் கூட அதே பட்டு மெத்தை விரித்திருக்க... அங்கே தான் சகோதரிகள் இருவரையும் அமர செய்தார் காயத்திரி.

இப்ப என்ன செய்ய போகிறார்களோ என்று நினைத்துக்கொண்டு இருக்கும் போது... அங்கே தங்க தாம்பாள தட்டில் இவள் உடுத்தி இருந்த புடவையின் நிறமான ஆரஞ்சு நிறத்தில் இருந்த பட்டு துணியை எடுத்து அவளின் தலையில் முக்காட்டிட்டார்!!!

கனவு உலகில் வரும் காட்சி போல் அனைத்தும் வெண்மையாக இருந்த அறைக்கு உட்கார வைத்து முகத்தில் முக்காடிட்டு அமர செய்ய... காலையிலே பூஜை முடியும் வரை உபவாசம் இருக்க வேண்டும் என்று சொன்னதால் சாகோதரிகளுக்கு இருவரும் தண்ணீர் கூட குடிக்காது மேடை

ஏற்றப்பட.. சடங்கு சம்பரதாயம் என்ற பெயரில் மணப்பெண்களை "ஆடறா ராம.. தாவுடா ராமா" என்று எழச் சொல்வதும், உட்கார சொல்வதும் நமஸ்காரம் செய்ய சொல்வதும் என்று ஏதோ சொல்லியப்படியே இருந்தனர்.

"இதை செய்வதற்குத் தானா கொலை பட்டினி கிடக்க சொன்னீங்க??" என்று அருகில் இருந்த சங்கி புலம்பிக்கொண்டு இருந்தது நன்றாக காதில் விழ... அதே எண்ணம் தான் மங்கி மனதிலும் ஓடியது!!!

ஒரு கட்டத்தில் பசி வயிற்றை கிள்ளியது என்றால் அடுத்ததாக தூக்கம் கண்களை சொருகியது.. இந்த நிலையில் தான் இவர்கள் மேல பரிதாபப்பட்டோ என்னவோ இருவரையும் அமைதியாக உட்கார்ந்து கையில் பூவை கொடுத்து ஒவ்வொன்றாகப் போடச் சொன்னார்கள்.

அப்பாடா ஒருவழியா உட்கார விட்டாங்களே சாமி என்ற நிம்மதியில் பாதி கொட்டாவி விட்டுக்கொண்டு மங்கி பூவை போட்டாள் அவளின் இரட்டை சாகோதரியோ தூங்கி வழிந்துக்கொண்டு அதை செய்தாள்.

அதுவும் முக்காடு வேறு போட்டு விட்டார்களா கொட்டாவி விடுவதற்கு தூங்கி வழிவதற்கும் இன்னும் வசதியாக இருந்தது!!!

அதிலும் கடைசி ஒரு மணி நேரம்... அவர்களை சும்மா உட்கார வைத்துவிட்டு பாடி, படித்து... கடைசியில் எதையோ

ஓத வேறு ஆரம்பிக்க... தாலாட்டு பாடுவது போல் மிகவும் இதமாவே இருந்து தொலைக்க.. எங்கே அப்படியே இருவருமே சாய்ந்து குறட்டை விட்டு தூங்கி விடுவோமோ என்ற பயம் விபரீதமாக எழுந்தது.

தன் பக்கத்தில் அமர்ந்திருந்த சங்கி தூங்கி வழியாமல் பாதி நேரம் இவள் அவளை கிள்ளிக்கொண்டு இருக்க.. மீதி நேரம் அவள் இவளை கிள்ளிக்கொண்டு இருந்தாள்!!! இதில் ஒரே நல்ல விஷயம் வெளியே தெரியாது அந்த முக்காடு அவர்களின் மானத்தை காப்பாற்றியது!!!

அப்படியா அரை தூக்கத்தில் சங்கியை கிள்ளி விழிக்க செய்துவிட்டு... அடக்க முடியாது மங்கி "வாவ்..." என்று வாயை பிளந்துக்கொண்டு கொட்டாவி விடும் சமயத்தில் தான் யாரோ தன் தலையில் இருந்த துணியை எடுக்க...

சத்தியமாக அவள் முக்காடை விளக்குவது ரஃஃபிக்காக இருக்க கூடும் என்று எதிர்பார்கவில்லை!!!

இருட்டில் கண்களில் அடிக்கும் டார்ச் மாதிரி அவனை பார்த்தவளின் கண்கள் கூச... அதிர்ச்சியில் அவள் வாய் பிளந்தப்படியே நிற்க...

நல்ல நேரம் இவளுக்கு நேராக அவன் உட்கார்ந்து இருந்தப்படியால் அவள் இப்படி கொட்டாவி விட்டு தூங்கி

வழிவதை வேறு யாரும் பார்த்திருக்க முடியாது என்ற திருப்திப் பட்டுக்கொண்டாள்!!!

ரஃபிக்கை தவிர அந்த இடத்தில் வேறு யாராக இருந்தாலும் எந்த மாதிரி ரீயாக்ட் பண்ணி இருபந்திருப்பார்கள் என்று கூற இயலாது ஆனால் அவனால் மட்டும் தான் மிக சாதாரணமாக முகத்தை வைத்துக்கொண்டு...

"என்ன ஒரு ஞான திருஷ்டி மேகி?!?" என்று சிலாகித்தப்படி அவன் கையில் இருந்த மோதிச்சூர் லட்டை திறந்திருந்திருந்த வாயில் திணித்தான்!!!

ஒரு முழு லட்டையும் தன் வாயில் திணித்தப் பிறகும் கூட மங்கி அதிர்ச்சியில் இருந்து இன்னும் மீளாது அவனை பார்த்தப்படி நிற்க..

"இந்த ஆரஞ்சு கலர் புடவை.. ஆரஞ்சு நிற ஆம்பர் கல் நகைகள்.. அத்தோடு வாயில் இந்த ஆரஞ்சு கலர் லட்டுடன்.. கலக்கற மேகி... திருஷ்டி சுத்தி போடனும்!!!" என்றான் கண்கள் பளபளக்க.

அவனுக்கு பதில் சொல்ல முடியாதப்படி வாயில் லட்டு அடைத்திருந்ததால்.. எதுவும் பேசமால் விழிக்க..

"ஒன்னும் அவசரம் இல்லை மேகி.. லட்டு சாப்பிட்டு முடி... காலை ஐந்து மணியில் கிட்ட ஐந்து மணி நேரம் எனக்காக உபவாசம் இருந்து இவ்வளவு பூஜை செய்ததால்... உன் பதிவிரத

தர்மத்தை மெச்சி... இந்த உபவாசத்தை முடித்து வைக்கிறேன்.." என்று சொல்லி முடிப்பதற்குள் அவன் கையில் வேறு எதையோ அவனின் சின்னம்மா அரபிக்கில் பேசியப்படி வைத்தார்.

"ம்ம்" என்று லேசாக தலையை ஆட்டியவன்.. அந்த தங்க டம்பளரை அவள் கையில் வைத்தவன் "குடி" என்று சொல்லி விட்டு மற்றொரு கிலாஸோடு அவளுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான்.

அவன் நகர்ந்த பிறகு கூட வாயில் லட்டு வைத்துக்கொண்டு இருந்தால் அனுமார் மாதிரி இருக்கும் என்று நினைத்துக்கொண்டு வேகமாக தொண்டையில் அடைத்த லட்டை அப்படியே விழுங்கியவள்... கையில் இருந்ததை தண்ணீர் என்று நினைத்தப்படி வாயில் கவிழ்க்க.. அப்புறம் தான் தெரிந்தது அது தண்ணீர் இல்லை ஏதோ பச்சை இலை கஷாயம் என்று!!!

எதற்கு இனிப்பு வைத்தான் என்று அப்போ புரிந்தது!!!

தொண்டை வரை கசந்த அந்த கஷயாத்தை விழுங்க முடியாது இவள் கஷ்டப்பட ஆனால் அவனோ எந்த வித ரியாக்ஷனும் இல்லாது அமைதியாக ஜூஸ் குடிப்பது போல் குடித்தான்!!!

அதற்குள் இந்த பக்கத்தில் இருந்த சங்கி அந்த கஷாயத்திற்கான ரெசிபியை சுவரசியமாய் கேட்டுக்கொண்டு இருந்தாள்!!!

இந்த கஷாயம் குடித்து முடிந்ததுடன் இன்றைய நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்து என்று நினைக்கும் போது தான்... அப்படி எல்லாம் விட்டு விடுவோமா என்று அவர்கள் இருவரையும் உட்கார வைத்து மீண்டும் என்னத்தயோ ஓத ஆரம்பிக்க..

"மீண்டும் முதலில் இருந்தா???" என்று மங்கிக்கு அழுகையும் ஆத்திரமும் போட்டி போட்டுக்கொண்டு வந்தது என்றால் அடுத்தாக ரஃபிக் பேசிய பேச்சை கேட்டு மயக்கமும் சேர்ந்து வந்தது!!!

அவள் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவன்... முகத்தை நேராக வைத்துக்கொண்டு மங்கிக்கு மட்டும் கேட்கும் குரலில் "நேற்றைய பெட்டில் நான் ஜெயித்தால் இருபது முத்தம் கொடுக்கனும்.." என்றான் திடமாக.

"வாட்???" என்று திடுக்கிட்டு திரும்பி அவன் முகத்தை பார்த்தாள் மேக மித்ரா.

நிர்மலமாக இருந்த முகத்தில் எந்த வித்தியாசமும் தெரியவில்லை.. ஏன் அவன் பேசினான் என்று கூட அவளால் நம்ப முடியவில்லை.. என்றாலும் கண்களில் தெரிந்த அந்த கர்வமும் இழையோடிய சிரிப்பு அவளை எரிச்சல் மூட்டியது.

"என்னை நீ வைத்த கண் வாங்காமல் பார்ப்பதைப் பற்றி எந்த ஆட்சேபனையும் இல்ல.. ஆனால் என் கசின்ஸ்களும்

பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள் அப்புறம்.." என்று அவன் முடிக்காமல் தோளை குலுக்கினான்.

அப்பொழுதுதான் எல்லோருக்கும் மத்தியில் உட்கார்ந்திருக்கிறோம் என்று புரிய அவசரமாக முகத்தை திருப்பிக்கொண்டு நேராக உட்கார்ந்தாள்!!!

"நவாப் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான்... நேற்று நீங்க சொன்னப்படி நான் தான் செய்து விட்டேனே" என்றாள் கடித்தப் பற்களிடையே.

முகத்தை அவள் புறம் திருப்பயவன் "இல்லயே... நான் சொன்னப்படி நீ செய்யவில்லையே" என்று அவன் மிக சாதாரணமாகப் பதில் அளித்தான்!!!

"என்ன.. நான்... தான்?" என்று அவள் கேள்வி கணைகளை வீச ஆரம்பிக்கும் போதே... காயத்திரி இரு ஜோடி மணமக்களை எழும்படி உத்தரவிட்டார்.

"ஏன்..??" என்று அவள் கேட்டுக்கொண்டு இருக்கும் போதே.. அன்றைய பூஜை இனிதே நிறைவடைந்து விட்டதாகவும்.. அதனால் மணப்பெண்கள் சென்று சாப்பிட வேண்டும் என்று கட்டளையிட்டார்.

ரஃபிக், சித்தோடு கழண்டுக்கொள்ள மணப்பெண்கள் இருவரும் அலிகானின் பெண்கள் கூட்டத்தோடு சாப்பிட செல்ல ரஃபிக் கண்ணிலேயே படவில்லை.

சாப்பாடு முடிந்தவுடன்.... சகோதிரிகள் இருவரையும் ஓய்வு எடுத்துக்கொள்ள காயத்திரி ரூமிற்கு அனுப்பிக்க வைக்க... தங்கள் குடும்ப அங்கத்தினர் புடை சூழ சலசலத்தப்படி வந்தவளை பார்த்த மங்கிக்கு கொஞ்சம் நேரம் எங்காவது அமைதியாக படுக்க வேண்டும் போல் தோன்ற...

வேகமாக நகை மற்றும் ஆடைகளை கலைந்து விட்டு குளிந்தவள்... "நேற்று இரவு கூட நான் சரியாக தூங்கவில்லை.. அம்மா தலை வலிக்கிறது... கொஞ்சம் நேரம் தூங்கப் போகிறேன்.. நீங்க எல்லோரும் நிரல்யாவின் ரூம்மிற்கு போக முடியுமா??" என்று கேட்டாள்.

மங்கிக்கு முனுக்கு என்று சத்தம் வந்தால் கூட தூங்க முடியாது என்ற உண்மை அறிந்த அவர்கள் வீட்டு ஆட்கள் சரி என்றப்படி பரிவாரத்துடன் அடுத்த ரூமிற்கு புறப்பட... வெளியே போன சங்கி மீண்டும் திரும்பி வந்தவள்...

"மங்கி ஏன் ஒரு மாதிரி இருக்க?!? நிஜமாகவே உடம்பு சரியில்லையா இல்லை மனது சரியில்லையா??" என்றாள் அர்த்தமாக பார்த்து.

இதுதான் இருவருக்கும் உள்ள தொடர்பு... ஏதோ சரியில்லை என்று வாய் திறந்து சொல்லாமலே புரிந்துக்கொள்ள முடியும்... இதை உள்ளுணர்வு என்று சொல்வதா இல்லை டிவின்ஸ் இன்ஸ்டிங் என்று சொல்லவதா என்று புரியாவிட்டாலும்..

சொல்லாமலே ஒருவரின் வலி மற்றொருவருக்கு புரிந்துக்கொள்ள முடியும்...

"தலை வலிக்குது சங்கி.. அதனால் கொஞ்சம் நேரம் தூங்கலாம் என்று போக சொன்னேன்" என்றாள் சங்கியை சமாதானம் படுத்தும் விதமாக.

"ம்ம்.." என்று தலை ஆட்டியப்படி அரை மனதாக கதவை சாற்றி விட்டு வெளியேற சங்கியை பார்த்து மனது வெதும்பியது..

எத்தனை பேரிடம், எத்தனை தடவை பொய் சொல்வது.. என்று மனம் பாரமாக கனக்க... அப்படியே மெத்தையில் பொத்தென்று விழுந்தாள்!!!

இதற்கு எல்லாம் காரணமாவன் என்னவோ எந்த பாதிப்பும் இல்லாது ஆனந்தமாக இருக்க.. இவளோ மருகியப்படி கண்களை மூடினாள்...

அவள் கோரிய தூக்கம் வராது அதில் ரஃபிக்கும்.. அவனை முதன் முறையாக பார்த்தம் நிகழ்வு வந்து கண் முன்னே நிழல் ஆடியது!!!

ஹேல்மட் போட்டு மறைந்திருந்த முகத்தை கூட நிமிர்ந்து பார்க்க முடியாதப்படி பாரமாக கணத்த தலையை அவனின் பறந்த மார்ப்பிலேயே சாய்த்தவள் "என் முன் ஜென்மம் கூட ஞாபகத்திற்கு வரும் அளவு தலையில் அடித்து விட்ட பிறகு

இப்ப தூக்கி என்ன பயன்?" என்று தமிழில் கிசுகிசுத்தாள்.

தலையில் பால் அடித்த போது கண்ணில் நட்சத்திரம் தெரிந்தது என்றால் அவன் சொன்ன பதிலால் கண்ணில் சூரியனே தெரிந்தது என்று தான் சொல்ல வேண்டும்....

"அடுத்த ஜென்மம் எடுத்து விடக் கூடாது என்ற பயன் தான்" என்று காதில் அழுத்தம் திருத்தமாக தமிழில் ஒலிக்க...

நடு மண்ணடையில் பால் அடித்த வலியை விட.. அலட்சியத்துடன் கூடிய அளவு கடந்த திமிருடன் அவன் பதில் சொல்லும் விதத்தை கேட்டு... அவனின் மார்பில் சாய்ந்து படுத்திருந்தவளின் தலை அவளையும் அறியாது விசுக்கென்று நிமிர்ந்தது.

அவள் உயர்த்திய அதே சமயம் தன் கம்பீரமாக நிமிர்ந்திருத்த தலையை லேசாக தாழ்த்தி இவளை பார்த்தான்.

இருவரின் பார்வை மோதிக்கொண்ட விதத்தில் சூரியன் பிழம்பாக தெறிந்து விழுந்தது போல் ஓர் உணர்வு தோன்ற... கண்கள் கூசுவதற்கு பதில் அவளால் கண்களை அகற்ற முடியாது தன்னை மறந்து அவனை பார்த்தாள் மேக மித்ரா!!!

ஹேல்மட்டின் பின்னால் இருந்த அந்த நீண்ட முகத்தை பார்த்தவளுக்கு அந்த குதிரைக்காரனின் கண்ணில் தெரிந்த அந்த பாவத்தை சொல்ல வார்த்தைகள் இல்லை...

பேச்சு மறந்து அவள் அவனை பார்த்தப்படி அமர்ந்திருக்க... அவனாக குதிரையை நிறுத்தினானா இல்ல குதிரையே தானா தன் இடம் வந்ததும் நின்றதா என்பதை உணரக் கூட இல்லாது அவள் உரைந்து போய் அமர்ந்திருக்க...

எப்படி அவளை ஒரு அலட்சியத்துடன் தூக்கினானோ அதே தொனாவட்டு தனத்துடன் கீழே இறங்கியதோடு மட்டுமல்லாது அவளையும் கீழே இறக்கினான்!!!

அவள் தடுமாற்றத்துடன் ஒரு அடி எடுத்து வைக்க.. ஒரு பெரு மூச்சுடன் அவளை மீண்டும் தூக்க...

"ஏய்... " என்று அவள் ஈன சுரத்தில் அலறிக்கொண்டு இருக்கும் போதே ஏதோ கட்டிடத்திற்குள் செல்வது போல் புரிந்தது...

அங்கே வாட்ட சாட்டமாக இருவர் நின்றதை கவனிக்க தவறியதோடு மட்டும் அல்லாது அவன் பிடியில் இருந்து தப்பிக்க... வலியில் பேசுவதே சிறமாக இருக்கும் போது கூட திடத்தை மட்டுமே உரமாகக் கொண்டு

"இப்படி என்னை கடத்தி செல்வது மட்டும் என் அண்ணன்களுக்கு தெரிந்தது போர் முரசு கொட்டாமலே உன்னை..." என்று ஆவேசாக ஆரம்பித்தவளுக்கு பேச வலியின் காரணமாக அலுப்பாக பாதிலேயே முடித்தாள் மேக மித்ரா.

அவளின் பதிலை கேட்டவனின் கண்கள் ஒரே ஒரு நொடி இடுங்கி சிவக்க...

"நீ சம்யூத்தையும் இல்லை நான் பிரித்திவி ராஜூம் இல்லை" என்ற அவனின் பிரத்தியோக ஒரு வரி பதிலை சொன்னான்.

எதற்காக சம்பந்தம் இல்லாமல் இப்படி சொல்கிறான் என்று யோசிக்கும் போதே..

"எந்த படம்??"

"வாட்... ?"

"இப்ப தானே.. சமந்தாவும் பிரித்திவி ராஜூம் நடித்திருக்கிறார் என்று சொன்னீங்களே அது எந்த படம்??" என்றாள் நேரம் செல்ல செல்ல பொருக்க முடியாமல் சென்ற வலியை சமாளித்தப்படி.

"நொந்த படம்" என்று வந்தது அவனின் பதில்.

"என்னது நொந்தவா...??" என்று இழுத்தவளுக்கு "ஓ!!! தெலுங்கு படமா?? நான் தமிழ் படத்தையே சரியா பார்ப்பது இல்லை..." என்று புது விளக்கம் அவளாகவே தன் கற்பனை குதிரை தட்டி விட்டு கொடுக்க..

அந்த பதிலை கேட்டவனின் கால்கள் சட்டென்று நிற்க... யாரோ பின்னாடி இருந்து தன் சிரிப்பை அடக்க பாடு படுவது போல் வேறு கேட்க... வலியின் காரணமாக கண்களை வேறு

சரியாக திறக்க முடியாதவளுக்கு அவன் சிரித்தானா வேறு யாராவது சிரிக்கிறார்களா என்று கூட உணர முடியாத நிலைக்கு சென்று கொண்டு இருந்தவளின் காதில்..

புரியாத மொழியில் அந்த குதிரைக்காரன் அதிகாரமாக பேசுவது விழுந்தது.

"எனக்கு தெலுங்கு தெரியாது" என்றாள் தன் தலை வலியை பல்லை கடித்து விழுங்கியப்படி.

"இது தெலுங்கு இல்லை அரேபிக்" என்று அவன் மொழிந்த போது அந்த குரலில் ஏதோ ஒன்று இருக்க... அதை பற்றி மேலே யோசிக்க முடியாதப்படி வலி சகிக்க முடியாதளவுத் தாண்டிப் போக.. அவளையும் அறியாது அவனின் விரிந்த புஜத்தை பற்றி இருந்த அவளின் விரல்கள் இருக... அந்த புதியவனின் முன் கண்ணீர் சிந்துவது பிடிக்காது... அவன் மார்ப்பிலேயே சாய்த்து கண்களை இருக்க முடிக்கொண்டாள்!!!

"வலிக்கிறதா?" என்று இருபது அடி தூரத்தில் இருந்துக்கொண்டு கேட்பது போல் அந்த குதிரைக்காரனின் குரல் காதில் கேட்டது.

"இல்லை.." என்றாள் முனுமுனுப்பாக.

அவளே எங்கோ உட்கார வைத்தவன் "எங்கே வலிக்குது??" என்று கேட்டுக்கொண்டு இருக்கும் போதே வலியின் காரணமாக கண்களை இருட்டிக்கொண்டு வர... "இல்லை.." என்று

சொல்லியப்படியே நிமிர்ந்து அமர முயன்றவளை ஒரு கூர்மையான பார்வையோடு விலகி நின்றான் நவாப் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான்!!!

இவனின் கண் அசைவிற்காகவே காத்திருந்த பாடி காட்... முன்னாடி வர... "ம்கூம்" என்று தலையை ஆட்டி மறுப்பு தெரிவித்தவன் "டாக்டர்??" என்ற சொல்லிலேயே அவரை அழைத்துக்கொண்டு வா... என்று தொனியும் இருக்க திடுக்கிட்டு நிமிர்ந்த பாடி காட் நவாப்பை பார்த்தான்.

பவுண்டிரி தாண்டி அமர்ந்து இருப்பவருக்கு இது மாதிரி அடிப்படுவதும் ஒன்று புதிதில்லை தான்..

அவன் முதல் உதவி செய்ய அழைத்து வருவதும் யாருக்கும் புதிதில்லை ஆனால்.. இங்கே வந்த அடுத்த நிமிஷம்.. நோயாளியை இவர்களிடம் பொருப்பாக ஒப்படைத்து விட்டு நகர்ந்து தன் வேலை பார்க்க செல்வதுதான் இத்தனை ஆண்டு கால வழக்கமாக இருந்திருக்கிறதே... தவிர இது என்ன என்றும் இல்லா திருநாளாக அந்த பெண்ணனை இவன் தாங்கிக்கொண்டு நின்றது என்ன இப்ப அவளை பார்த்தப்படி உட்கார்திருக்கிறான் என்று கேள்வி இடியாய் தாக்கியப்போதும்... எதுவும்பேசாது தலை ஆட்டி விட்டு நகர்ந்தனர்கள் பாடி காட்ஸ்.

ரஃபிக்கை பார்த்தவுடன் சலாம் வைத்த டாக்டரை வலியின் காரணமாக கண் மூடி அமர்ந்தவள் கவனிக்கவே இல்லை..

"எங்க அடிப்பட்டது?? எங்க வலிக்குது?? என்று கேட்டப்படி முன்னே வந்த டாக்டர் சம்பத்தை பார்த்து மெல்ல கண் திறக்க..

"எவ்வளவு வலி இருந்தாலும் வெளியே சொல்லாதவர்களிடம்

எதுக்கு கேட்கிறாய் சம்பத்?" என்றான் ரஃபிக் மார்பின் குறுக்கே கைகளை கட்டியப்படி.

"என் கேள்விக்கானப் பதிலை நானே சொல்வேன்.. பிருத்திவி ராஜ்" என்று அவனை முறைத்தப்படி மொழிந்தவள்.. பின் சம்பத்திடம் திரும்பி.. "எனக்கு ஒன்றும் இல்லை.. டாக்டர்.. தலையில் பால் விழுந்துவிட்டது.." என்று பேசுவதே சிரமமாக தோன்றினாலும் நிதானமாக!!!

"வாட்...?" சம்பத் அதிர்ந்து கூவ...

"வாட்??"

"வாட்??" என்று மேலும் இரண்டு முறை அவள் காதில் குரல் கேட்க.

எதுவும் பேசாமல் அந்த பிருத்திவி ராஜா அமைதியாக மார்பின் குறுக்கே கைகளைக் கட்டிக்கொண்டு லேசாக உயர்த்திய புறுவத்துடன் அவளை பார்த்துக்கொண்டு நின்று இருந்தான்.

"டாக்டர்..." என்று ஒரு முறை அழைத்து கண்களை இருக்க மூடித் திறந்தவள் "நீங்க ஒருத்தர் தானே என்னிடம் வாட் என்று சொன்னீங்க.. பின்ன ஏன் மூன்று முறை வாட் என்று காதில்

விழுந்தது??" என்று அடிப்பட்டதால் காதில் அப்படி விழுகிறதோ என்ற சந்தேகத்துடன் கேட்டாள் மேக மித்ரா.

அந்த கேள்விக்கானப் பதிலாக தன் அருகில் இருந்த பாடி காட்டை திரும்பி ஒரு முறை ரஃபிக் பார்க்க.. டாக்டர் சம்பத்தோ எப்படி சமாளிப்பது என்று தடுமாறிக்கொண்டு இருக்கையிலேயே...

"எக்கோ.." என்றான் மிக சாதாரணமாக அங்கே நின்று இருந்த ரஃபிக்

"ஓ!!!" என்று அவள் இழுக்க...

அந்த சம்பத்தாகப்பட்டவனோ என்ன பேசுவது என்று தெரியாது "ஆமாம்" என்பது போல் தலையை பலமாக ஆட்டினான்.

"ஆனால்..." என்று அவள் ஏதோ யோசித்தப்படி அந்த குதிரைக்காரன் புறம் திரும்ப.. அப்போதுதான்...

அவன் தன் தலையில் மாட்டி இருந்த ஹேல்மட்டை அவிழ்க்க... போலோ விளையாட்டில் அணியும் வெள்ளை நிற ஜோத் பூர் பேன்ட் உடுத்தி முழுகால் வரைக்குமான பூட்ஸ் அணிந்து ஏதோ போலோ கிளப் பெயர் எழுதிய டி சர்ட்டுடன் நிமிர்ந்து நின்றவனைக் காண.. வேர்க்க விருவிருக்க விளையாடி விட்டு வந்த மாதிரி இல்லை.. போட்டோ ஷூட் முடிந்து விட்ட விளையாட்டு வீரனை போல் தோற்றம் அளித்தான்.

"இப்ப யாரை பிருத்திவி ராஜ்ன்னு சொன்னீங்க??" என்றார் டாக்டர் அவளை சந்தேகமாக பார்த்தபபடி.. தலையில் அடிப்பட்டதால் தான் இப்படி இவள் முன்னுக்கு பின் உளறுகிறாளோ என்ற சந்தேகம் மண்டையைக் குடைய.

"ஏன்??? உ..உங்க பக்கத்தில் நிற்பவரை தான். ஏதோ படத்தைப் பற்றி சொன்னார்.. இவர் பெயர் எனக்கு தெரியாது அதனால் அவரை அப்படி அழைத்தேன்" என்று வலியை மென்று விழுங்கியப்படி.

"இங்க தான் பால் விழுந்ததா?" என்று கேட்டப்படி டாக்டர் அவளின் உச்சந்தலையில் கையை வைக்க.. ஏற்கனவே வின் என்று வலித்த இடம் இப்போ இரு மடங்கு வலிக்க ஆரம்பிக்க அவளுக்கு மூச்சு விடுவது கூட சிரமாக இருந்தது!!!

அவளுக்கு வலியால் மூச்சு விடுவது சிரமமாக இருந்ததால்.. அங்கே நின்று இருந்தவர்களுக்கு அவளின் பேச்சைக் கேட்டு மூச்சு விடுவதற்கும் சிரமமாக இருந்தது... பின்னே அவர்களுக்கு சம்பளம் கொடுக்கும் நாவாப்பை பற்றி இப்படி பேசினால் என்ன செய்யவார்கள் அதுவும் அந்த நவாப்பே அங்கே நின்றுக்கொண்டு அவள் பேசுவதிற்கு எந்த பதிலும் சொல்லாமல் கேட்டுக்கொண்டு இருக்கும் போது?!?

"ஏன் கோல் போடும் இடத்திற்கு போய் நிக்கிறீங்க?" என்று மெல்ல அவளின் தலையைப் பரிசோதித்தப்படி கேட்டார் சம்பத்.

"பிரிதிவ் ராஜ்.. குதிரை..." என்று ஏதோ கையை காட்டி பேச ஆரம்பித்தவள் பின் வலியின் காரணமாக பேச முடியாது தொண்டையை அடைக்க... நீர் திரண்ட விழிகளால் ரஃபிக்கை பார்த்தவள் "ஐ.. ஐ.. ல... ல...லவ்.... யூ.. யூ..." என்று கிசுகிசுப்பாக கூறியபடி மயங்கி சரிந்தாள்!!!

# அத்தியாயம் 10

**நீ**ர் திரண்ட விழிகளால் அவனை பார்த்தவள் "ஐ.. ஐ.. ல... ல...லவ்.... யூ.. யூ..." என்று கிசுகிசுப்பாக கூறியப்படி மயங்கி சரிந்தாள்!!!

பொதுவாக அதிர்ச்சி தரும் விஷயத்தைச் சொல்லும் போதும்... கேட்பவர் மயங்கி விழுவதுதான் உலக வழக்கம் ஆனால் இங்கே... சொல்பவளே மயங்கி விழுந்தாள்!!!

வாழ்க்கையில் முதல் முறை பார்த்து... பார்த்த அடுத்த அரை மணி நேரத்திலேயே ஐ லவ் யூ சொல்கிறாளே என்ற அதிர்ச்சியில் ரஃபிக்கு மயக்கம் வந்தால்.. அதில் ஒரு நியாயம் இருக்க கூடும் என்று வைத்துக்கொண்டாலும்.. இங்கே சொல்லியவள் சரிந்தோடு சொல்லப்பட்டவன் கூரியப் பார்வையோடு புருவங்கள் முடிச்சிட மயங்கி சரிந்தவளை கண்கள் இமைக்காது வெறித்து பார்த்துக்கொண்டு இருக்க... இதை தேமே என்று பக்கத்தில் நின்று சுவாரசியமாக கேட்டுக்கொண்டு இருந்த டாக்டர் அதிர்ச்சி தாங்காது மயங்கி சரிந்தார்!!!

வைத்தியம் பார்க்கவென்று தூக்கிவரப்பட்டவள் வைத்தியரையே நோயாளியாக்க... இப்ப யாருக்கு யார்

வைத்தியம் பண்ணுவது என்று பூதாகரமாகக் கேள்வி எழும்பி நின்றது!!!

இருவர் மயங்கி கிடப்பதை பார்த்து பெரும் மூச்சுடன் ரஃபிக்கு முன்னே நடந்து சென்று மயக்கத்தில் கிடந்த டாக்டரை எழுப்ப முனைய அப்பொழுதுதான் தத்தம் அதிர்ச்சியில் இருந்து மீண்ட அவனுடைய செக்கியூரிட்டி டீம் உயிர்ப்பெற்று... அலறி அடித்துக்கொண்டு அவனுக்கு உதவ முன்னே வந்தார்கள்!!!

அடுத்த ஐந்து நிமிஷத்தில் கண் விழித்த டாக்டர் தள்ளாடியப்படி எழுந்து நின்றவர்... மயங்கி கிடந்த மேக மித்ராவை பார்த்து "கிரேசி பேன்ஸ்... உங்க கவனத்தை கவர எப்படி எல்லாம் முயற்ச்சி செய்றாங்க?!? இனி மேட்ச்சிற்கு வரும் போது இரண்டு பேருக்கு பதில் நான்கு பாடி காட் வைத்துக்கொள்ளுங்கள்." என்று இலவசமாக அறிவுரை வழங்கினார்.

எதுவும் சொல்லாமல் டாக்டரை மெல்ல திரும்பி ஒரு பார்வை பார்க்க... அந்த பார்வையில் இருந்த கடுமை புரிந்தவருக்கு தான் அதிகப்படியாக பேசிவிட்டோமோ என்று எண்ணம் அவர் முகத்தில் அப்பட்டமாக தெரிந்தது!!!

ஒரு தர்ம சங்கடத்துடன் "மன்னித்துக்கொள்ளுங்கள்.. உங்கள் பாதுகாப்பை நினைத்து.."

"பேஷன்டை பாருங்க.." என்று அழுத்தமாக பதில் வந்தது.

அதாவது உன் வேலை என்னவோ அதை மட்டும் பார் என்று சொல்லாமல் சொல்லிய அந்த வாக்கியத்தில் இருந்த கட்டளையைப் புரிந்துக்கொண்ட டாக்டர் அவசரமாகத் திரும்பி நின்று மேக மித்ராவை பரிசோதித்தார்.

டாக்டர் தன் வேலையை செய்ய மெல்ல திரும்பி தன் பாடி காட்சை பார்த்த ரஃபிக்.. "கேம்மிற்கான பாஸ்... கிளம்பிற்கான மேம்ர் ஷிப்... எல்லாம் கேன்சல் பண்ணி கண் விழித்தவுடன் த்ரோ ஹர் அவுட்" என்று பனிக்கட்டியின் இருக்கத்துடன் வந்த குரலைக் கேட்ட அங்கே இருந்த அனைவருக்கும் குளிர் ஜுரமே வரும் போல் இருந்தது!!!

டாக்டர் கொடுத்த ஊசி மற்றும் மாத்திரையின் விளைவாக மூன்று மணி நேரம் கழித்து கண்விழித்தவளிடம்... அந்த டாக்டர் முகத்தை மட்டும் இல்லை உடம்பை கூட விரைப்பாக வைத்துக்கொண்டு நிற்க... எங்கோ பார்த்த மாதிரி தெரிந்த இரு பையில்வான்கள் இவளை வெறித்து பார்த்துக்கொண்டு இருக்க..

இவள் கேட்ட கேள்விக்கு எந்த பதிலும் சொல்லாது... "இந்த கிளப்பில் நீங்க மேம்பராகவோ இல்ல.. விளையாட்டை பார்க்க டிக்கட் வாங்கி இருந்தால்.. அவை எல்லாம் இந்த நிமிடத்தில் இருந்து நிரந்தரமாக ரத்து செய்யப்படுகிறது.." என்று ஆங்கிலத்தில் அறிவித்தார்கள்.

"வாட்ட்ட்???" என்று அவள் ஒன்றும் புரியாது இழுக்க..

"சுருக்கமாக.. இங்கே இருக்க அனுமதி இல்லை என்று சொல்கிறார்கள்" என்றார் அந்த டாக்டர்.

"ஏன்??" என்றாள் ஆதியும் அந்தமும் புரியாது.

பதில் சொல்லாத டாக்டர் அவளை ஒரு மார்க்கமாக பார்த்துவிட்டு அங்கே இருந்த இருவருடமும்.. "நீங்கள் அழைத்துக்கொண்டு போகலாம்" என்றார் ஜெயில் கைதியை போலிஸ்சிடம் ஒப்படைப்பது போல் சொன்னார் !!!

அதற்கு மேல் அவரிடம் பேச தன்மானம் இடம் கொடுக்காததால் "நன்றி டாக்டர்" என்றாள் அவர் மேல் உள்ள ஆத்திரத்தை எல்லாம் அந்த வார்த்தையில் காட்டி.

அவர்கள் கண் முன்னால் தப்பி... ஓடி ஒளிந்துக்கொண்டு விட போவது போல் நடுவில் அவளை நடக்க விட்டு இருபுறமும் அவர்கள் நடந்து வர.. என்ன நடக்கிறது என்று இத்தனை நேரம் மசமசத்த மூளைக்கு புரிய தொடங்க அதற்குள் ஹாஸ்பிட்டலை விட்டு வெளியே வந்திருந்தனர்.

அவர்களுக்காக காத்திருந்த பேட்டரியால் இயங்கும் அந்த கோல்ஃப் கார்ட்டில் அமர செய்து மூன்று மீட்டர் தூரத்தில் இருந்த வெளி கேட்டிற்கு அழைத்து சென்றனர்.

அது வரை எதுவும் பேசாது என்ன நடக்கிறது என்று காலையில் நடந்த நிகழ்ச்சி எல்லாம் மனதில் திரைப்படமாக

வேக ஓடியப்படி இருக்க.. வண்டியோ தன் இடம் வந்ததும் நின்றது!!!

அவளே வெளி கேட் தாண்டி அழைத்து வந்து விட்டவர்கள் "இனி உள்ளே வர அனுமதி இல்லை" என்றான் அந்த தடியன்களின் ஒருத்தன் தெளிவான ஆங்கிலத்தில்.

"இந்த முடிவை யார் எடுத்தது?" என்றாள் முகத்தில் எந்த சலனமும் இல்லாது அவனை நிமிர்ந்து பார்த்து.

"எங்கள் பாஸ்"

"அவர் யார்??"

ஆச்சரியமாக அவளை பார்த்ததொடு மட்டும் அல்லாது அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு.. "உங்களை மருத்துவமனைக்கு அழைத்து வந்தவர் தான்!!!" என்றான்.

"ஓ!!!" என்றவள் தன் கேப்பரி பாக்கெட்டில் கை விட்டப்படி தலை குனிந்து எதையோ தீவிரமாக யோசித்தப்படி அங்கே நிற்க.. அவர்கள் உள்ளே செல்லாது தயங்கி நிற்பதை பார்த்துவிட்டு "என்ன??" என்றாள் அதிகாரமாக.

"மேடம்... இங்க மட்டும் இல்லை.. இனி எங்கேயும் பாஸ் கண்ணில் பட்டு விடாதிங்க... உங்களோட நன்மைக்கு தான் சொல்கிறேன்.." என்றான் இரு தடியன்களில் மீசை வைத்திருந்தவன்.

"தெக்ஸ்" என்பது மட்டும்தான் அவளின் பதிலாக வந்தது.

கேட்டை சாத்திவிட்டு அவளுக்கு காது எட்டாத தூரம் சென்றவர்கள் "ஏன்டா அந்த பெண்ணிடம் அப்படி சென்னாய்?" என்றான்.

"திடீரென்று கழுத்தை பிடித்து வெளியே தள்ளினால்... பெண்கள் அழுது ஒப்பாரி வைத்திருப்பார்கள்... இல்ல நம் சட்டை காலரை பிடித்து இருப்பார்கள் ஆனால் அந்த பெண் டாக்டரிடம் நன்றி சொல்விட்டு.. நம்முடன் அமைதியாக வந்தது மட்டும் இல்லாமல்... ஊரை விட்டு சுமார் நூறு கிலோ மீட்டர் தள்ளி இருக்கும் இந்த வனாந்தரத்தில் நாம் தனியாக விட்ட பின்பு அந்த பெண் பான்ட் பாக்கெட்டில் கையை விட்டுக்கொண்டு தன் காலை பார்த்து வெறித்துக்கொண்டு நிற்கிறாள் என்றால்.. அந்த பெண்ணுடைய செயல் நார்மலாக படுகிறாதா?" என்றான் அந்த மீசைக்காரன்.

"அட ஆமான்டா..." என்று தலையை ஆட்டியபடி ஒன்றும் புரியாது வண்டியை ஸ்டார்ட் செய்தான் மற்றவன்!!!

கையில் போன்னும் இல்லாது, இருக்கும் இடமும் தெரியாது, பேசுகின்ற மொழியும் புரியாது, உடன் வந்த நண்பர்களிடமும் எங்கே போகிறோம் என்று சொல்லாது, காசும் பாக்கெட்டில் எடுக்காது பின் மாலை பொழுதில் சுற்றிலும் அடர்ந்த காடு...

அந்த காட்டின் துவக்கத்தில் இருந்த அந்த கிளப்பில் எட்டு அடி கதவிற்கு அப்பால் தன்னந்தனியாக நின்றாள் மேக மித்ரா!!!

***************************

அன்று பெண் என்றும் பாராது அவர்கள் வெளியே தள்ளியதை நினைத்தால் இன்றும் அவளுக்கு பற்றிக்கொண்டு தான் வந்தது!!

ஒரு பெண்ணை நட்ட நடுக் காட்டில் விட்டு விட்டு போகிறோமே என்ற எண்ணம் இல்லாது சென்றவன்.. எப்படி நல்லாவனாக இருக்க முடியும் அன்றும் சரி இன்றும் சரி அவன் நல்லவனாக இருந்ததில்லை... இருக்கப் போவதும் இல்லை.. என்றைக்கும் அவன் தான் அவள் வாழ்க்கையில் வில்லன்!!!

இது எப்படி அவளுக்கு புரியாமல் போனது...வாழ்ககையில் நடக்கும் சம்பவங்களுக்கு எல்லாவற்றிக்கும் அர்த்தம் உண்டு என்று அப்பொழுது புரிந்திருக்கவில்லை.. ஆனால் இப்போ நினைத்து பார்த்தால் நிச்சயம் இருக்க தான் செய்கிறது அன்றே சுதாரித்து இருந்தால் இதோ இன்று வீட்டினர் இப்படி யாரும் அறியாது கண்ணீர் விட வேண்டிய அவல நிலைக்கு தள்ளப்பட்டிருக்க மாட்டாள்!!! என்று நினைக்கும் போதே இரண்டு நாட்களாக இல்லாத தூக்கம் அவளை அப்படியே ஆரத்தழுவ தூங்கியும் போனாள் மேக மித்ரா காத்து இருக்கும் போராட்டத்தைப் பற்றி எதுவும் அறியாதவளாய்!!!!

யாரோ கதவை திறக்கும் சத்தம் கேட்டு கண் விழித்தவளுக்கு அம்மாவும் சங்கி மற்றும் பாட்டி உள்ளே நுழைவது தெரிய... மெல்ல எழுந்து உட்கார்ந்து சோம்பல் முறித்தவளுக்கு முன்னால் டீ வைக்கப்பட்டது.

"எழுந்து முகம் அலம்பி விட்டு வா... கிளம்பனும்" என்றார் பாட்டி.

"கிளம்பனுமா எங்கே??" என்றப்படி மெத்தையை விட்டு இறங்கினாள்.

"போய் விட்டு வா சொல்றேன்" என்று அம்மா மல்லிகா பாத்து ரூம் பக்கம் கையை காட்டினார்.

"ம்ம்.." என்று தலையை ஆட்டியப்படி பாத் ரூம் சென்றவள் சோம்பலாக உணர.. புத்துணர்ச்சிக்காக குளியலே போட.. அதற்குள் இரண்டு முறை கதவை தட்டி விட்டார்கள் வீட்டு ஆட்கள்.

"வரேன்" என்று அவசராக வெளியே வந்தளை கடுப்பாக பார்த்த மல்லிகா.. "எவ்வளவு நேரம்?" என்றப்படி கப்பில் ஆவி பறந்த டீயை ஊற்றி கொடுத்தார்.

அதற்குள்ளாகவே ஒரு மயில் கழுத்து நிற புது புடவைக்கு மாறி இருந்த சங்கிக்கு தலையை வாரி விட்டுக்கொண்டு இருந்தாள் மூத்த அண்ணி சௌவி.

"மறுபடியும் எதுக்குமா அலங்காரம்?" என்றாள் ஒரு வித திகிலுடன் கேட்டாள் மங்கி.

"என்னடி மங்கி புதுசா கேட்பது போல் என்ன விஷயம் என்று கேட்கிறாய்??"

"அம்மா நீங்க ஆயிரம் விஷயம் சொல்லி இருக்கிங்க அதில் இது எந்த விஷயம்?" என்றாள் டீயை உறிந்தப்படி.

"விருந்திற்கு போகனும்... மதியமே சொன்னேனே??"

"யார் வீட்டு விருந்திற்கு போகனும்??" என்றப்படி விழித்தாள்.

"யார் வீட்டிற்கும் இல்லை... இன்று தான் நீ சாப்பிட போகும் கடைசியாக விருந்து சாப்பாடு..." என்று மல்லிக்கா சொல்லிக்கொண்டு இருக்கும் போதே...

டீயை குடித்துக்கொண்டு இதை கேட்டவளுக்கு புரையேறியது.. "என்னம்மா சொன்னீங்க?? கடைசியாகவா? அப்படின்னா??"

"உனக்கு என்னால் பதில் சொல்லிமாலாது.. எத்தனை தடவை இதை உன்னிடம் சொல்லி இருக்கிறேன் நீ என்ன மறுபடியும் முதலில் இருந்து கேட்கிற மாதிரி கேட்கற..?? அத்தை நீங்க தான் இவளுக்கு பதில் பேச கூடிய ஆள்" என்று சும்மா நின்றுக்கொண்டு இருந்த நாட் நாட் செவனை இழுத்துவிட்டார் மல்லிகா.

"என்ன கடைசி விருந்து?!?" என்றாள் பாட்டியிடம் தலையை மட்டும் திரும்பி.

"இதை நானே உன்னிடம் மூன்றாவது முறையாக சொல்கிறேன் மறந்துவிட்டதா??" என்றார் தலையில் அடித்துக்கொண்ட பாட்டி...

"பாட்டி அவளுக்கும் ஹிஸ்டரிக்கு ஆகாதுன்னு உங்களுக்கு தெரியாது?? எத்தனை தடவை இவள் ஹிஸ்டரி கிலாஸை கட் அடித்துவிட்டு போனதற்கு நான் திட்டு வாங்கி இருக்கிறேன்?? பத்தாவது எக்ஸாமில் அம்மணி பாஸ் ஆனது கூட இவளுக்காக நான் கொடுத்த பேப்ரால் தான்..." என்றாள் சங்கி வஞ்ச புகழ்ச்சியில்.

"சரித்திரம் பிடிக்காதவளுக்கு ஐநூறு வருஷம் சரித்திரத்தை தன் ரத்தித்தில் சுமந்துக்கொண்டு திரியும் நவாப் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான் மணாளன்" என்றாள் சௌவி கண் அடித்தப்படி.

"மாப்பிள்ளை என்னடான்னா உன் ஷூ சைஸ் கூட தெரிந்து வைத்திருக்கிறார் ஆனா நீ அவர் மதிக்கும் அவர்களின் பரம்பரை பற்றி எதை சொன்னாலும் எனக்கு என்ன என்று திரிக்கிறாய்" என்றார் மல்லிக்கா கடுமையாகவே.

மல்லிக்கா யாரையும் கடுமையாக பேசும் ஆள் இல்லை.. அவரே இப்படி பேசுகிறார் என்றால்.. அனைவரின் முகத்திலும் அதிர்ச்சியுடன் தத்தம் வேலை மறந்து அவரை பார்க்க...

"இதோ பார்.. மங்கி.. நாளையில் இருந்து நீ நவாப் வீட்டு பெண்ணாய் தான் அடையாளம் காணப்படுவாய்... நீ மகாராணியாக வாழ போகும் வீடு இது.. பிறந்த வீட்டின் மானம் மரியாதையை காப்பாற்று என்று நான் சொல்ல மாட்டேன்... எதற்கு எடுத்தாலும் என் அம்மா வீட்டில்... என் அப்பா இங்கே இருந்திருதால்.. என் அண்ணன்கள் எப்படி தெரியுமா? என்று எல்லா சராசரி பெண்களை போல் உன் பிறந்த வீட்டின் பெருமையை இழுக்க மாட்டாய் என்று நினைக்கிறேன்... புகுந்த விட்டின் பரிபூரன அன்பும், மரியாதையும் உனக்கு கிடைக்க வேண்டும் என்றால் முதலில் அந்த அன்பையும், மரியாதையும் கொடுக்க நீ தயாராக இரு!!!" என்றார் மல்லிக்கா அமைதியாக அதே சமயம் அர்த்தமுள்ள வார்த்தைகளை பொறுக்கி போட்டு.

எதற்கு எடுத்தாலும் பேத்திகளுக்கு சப்பகை கட்டு கட்ட வரும் பாட்டி இந்த முறை எதுவும் சொல்லாது... அமைதியாக இருக்க... நிலைமையின் தீவிரம் புரிய தொடங்கியது அப்ப போதுதான்!!!

தன் கையில் இருந்த டீ கப்பை கீழே வைத்தவள்.. நேராக அம்மாவிடம் வந்து "சாரிம்மா.. நான்" என்று மேக மித்ரா தடுமாறும் போதே..

"தெரியும் மங்கி... நடப்பது உன் கல்யாணம் என்பதை மனதில் பதிய வைத்துக்கொள்.. யார் வீட்டு விருந்தோ என்று உட்கார்ந்திருப்பை முதலில் நிறுத்து... இருமகளுக்கு ஒரே மேடையில் கல்யாணம் நடப்பதை ஆசை தீர பார்க்கனும் ஆசைப்படறேனே தவிர மற்றவர் என் மகளை பார்த்து கேலி பேசுவதையும், கிண்டல் பண்ணுவதையும் அல்ல" என்று அம்மா திட்டவட்டமாக கூறிய போது தலை மட்டுமே மறுமொழியாக ஆட்டினாள் மேக மித்ரா.

அவசரமாக புடவை கட்டியப்படி அவர்கள் விவரித்த நிகழ்ச்சி நிரலை கேட்ட அவளுக்கு தலை சுற்றியது!!!

# அத்தியாயம் 11

புடவையை சுற்றி கொண்டு இருந்தவளுக்கு அவர்கள் சொல்லிய நிகழ்ச்சி நிரலை கேட்டு மட்டும் அல்ல... அதை செய்தாலும் தலையை சுற்ற தான் செய்யும்!!!

"என்னம்மா சொல்றிங்க? இன்று இரவு விருந்திற்கு பிறகு நாளை கல்யாணம் ஆகும் வரை சாப்பிடாமல் விரதம் இருக்கனுமா??" என்று காதில் விழுந்ததை மங்கி தெளிவு படுத்திக்கொண்டு இருக்கும் போதே...

"என்னது சாப்பிட்ட கூடாதா??" என்று அலறியப்படி எழுந்த சங்கி "இது என்னம்மா அநியாயமா இருக்கு?? ஊரில் இருக்கும் எல்லோரையும்.. வாங்க.. வாங்க.. என்று வலிய அழைத்து... விருந்து என்ற பெயரில் இருநூறு வகையில் உணவு வைத்து தொண்டை வரைக்கு திணித்து அனுப்புகிறார்கள்.... ஆனா கல்யாண பெண்ணிற்கு சாப்பாடு இல்லை என்றால் என்ன அர்த்தம்?? நான் ஒரு நாள் முழுக்க சாப்பிடாமல் எப்படி இருப்பேன்?? இது எல்லாம் ஏன் சித் முன்பே சொல்லவில்லை??" என்று புலம்பினாள் சங்கி.

"சாப்பிட்டிற்காக உன் சித்தையே தியாகம் பண்ணி விடுவாயோ என்கிற பயமாக இருக்கலாம் இல்லையா??" என்றாள் சௌவி சங்கியின் தலையை அலங்காரம் செய்தப்படி.

"சங்கி..." என்று ராகமாக இழுத்த மங்கி.. "ஏன் பயப்படற?? ஒரு நாள் முழக்க இல்லை... நாளைக்கு காலையில் தானே கல்யாணம்??" என்று சொல்லிக்கொண்டு இருக்கும் போதே அங்கு இருந்த அனைவரும் அவளை திரும்பி நின்று ஒரு மாதிரி பார்க்க...

"ஏன்?? எல்லோரும் இப்படி பார்க்கறிங்க?... தேதியை தவறாக சொல்லிவிட்டேனா??" என்றப்படி அவரமாக தன் கையில் இருந்த கடிகாரத்தில் தேதியை பார்த்தவள் இல்லையே சரியாகதான் சொல்லி இருக்கேன் என்று நிம்மதி பெரு மூச்சுடன் நிமிர்ந்து தாயை பார்க்க..

"பத்திரிக்கை பார்த்தாயா?" என்றார் அவர் முறைப்பாக.

"என் கல்யாண பத்திரிக்கையை நான் பார்க்காமல் இருப்பேனாம்மா??" என்றாள் எச்சரிக்கையாக. எதற்காக இப்படி கேட்கிறார் என்று மற்றவர்கள் ஏன் அப்படி பார்க்கிறார்கள் என்று எதுவும் புரியாது.

"அதில் முகூர்த்தம் எந்த நேரம் என்று இருந்தது??" என்றார் பாட்டி.

"பத்திரை மணிக்கு மேல் என்று எழுதி இருந்தது" என்றாள் ஆசிரியர் கேட்டவுடன் கை தூக்கி பதில் சொல்லும் சிறுமியை போல் ஆர்வமாக.

"ம்ம்... பத்தரை மணிக்கு பக்கத்தில் என்ன போட்டு இருந்தது??" என்று அடுத்ததாக சௌவிடம் இருந்து வந்தது கேள்வி.

"நீயுமா... யூ டூ புரூட்டஸ்" என்ற ரீதியில் அவளை பார்த்தவள் "நான் என்ன நிரல்யாவா எழுத்து எழுத்தாக நினைவில் வைத்துக்கொள்ள??" என்றாள் அலுப்பாக.

எரிச்சலாக அவளை முறைத்த அம்மா மல்லிகா.. "பி.எம் என்று போட்டு இருந்து" என்றார் அழுத்தமாக.

"என்னது.... பி.எம்யா?? யாராவது கல்யாணம் இரவில்...." என்று இழுத்தவளுக்கு அங்கே நின்று இருந்தவர்களின் முகம் சொன்ன விஷயம் புரிய... "வாட்??? நாளை இரவு பத்தரை மணிக்கு மேல் தான் கல்யாணமா??" என்று அதிர்ந்து கூவினாள்.

அவளை ஈட்டி பார்வை பார்த்தப்படி எல்லோரும் தலை ஆட்டினார்கள்.

"அதுவரைக்கு நாம் சாப்பிடாமல் இருக்கனும்" என்றாள் சங்கி காதில் வைரத்தாலான ஒரு குடை ஜிமிக்கியை மாட்டியப்படி.

எதுவும் பேசாமல் அவள் அருகில் வந்த மல்லிகா "இதை தான் சொன்னேன்... மங்கி" என்றார் காட்டமாக.

"அம்மா.. சும்மா திட்டாதிங்க.. அவள் அத்தானுடன் கனவில் டூயட் பாடிக்கொண்டு இருந்திருப்பாள்" என்றாள் திரும்பி நின்று மங்கிக்காக வக்காலத்து வாங்கிய சங்கி.

மங்கியை அங்கே இருந்த நாற்காலியில் உட்கார வைத்து.. சிம்பி தலைவாரி முடிந்திருந்த கூந்தலில் வைரத்தாலான தலை அலங்கார செட்டை வைத்து கட்ட தொடங்கியவர்... "இவள் முகத்தை பார்த்தால் அப்படியா தெரியுது?!? கனவில் கூட அவருடன் சண்டை போடுவது போல் தான் முகத்தை வைத்திருக்கிறாள்" என்றார் மல்லிக்கா ஏதோ சொல்ல வருவதை முழுதாக முடிக்காது பாதியில் விட்டது போல்.

"அம்மா..." என்று செல்லமாக விளத்தவள்.. "நானும் சித்தும் செய்வதை சொல்றிங்க... மங்கி அப்படி கிடையாது." என்றாள் இடுப்பில் ஒட்டியானத்தை வைத்து சரிப்பார்த்தப்படி.

"ம்ம்..." என்று பெரு மூச்சுவிட்டப்படி மகளின் கூந்தல் அலங்காரத்தை முடிந்து விட்டு அவளுக்கு முன்னாடி வந்து நின்று நெற்றி சுட்டியை வைத்தவரின் கைகள் லேசாக நடுங்க.. முகவாயை பிடித்து நிமிர்த்தியவர் "நீ சந்தோஷமாக தானே இருக்க மங்கி?" என்றார் கிசுகிசுப்பாய்.

மல்லிகாவின் கண்ணில் அப்பட்டமாக தெரிந்த பயம்.. மங்கியின் வயிற்றில் யாரோ பலமாக குத்து விட்டது போல் வலிக்க... "ரொம்ப ரொம்ப அம்மா" என்றாள் அவரின் கையை பிடித்து தன் கன்னத்தில் அழுத்தி வைத்துக்கொண்டு.

அவர் அப்படி கேட்டதற்காகன பொருள்.. மங்கி அழுத்தகாரியாக இருக்கலாம் ஆனால் முகத்திற்கு நேராக பொய் சொல்லும் பழக்கம் கொண்டவள் அல்ல!!!

அதை அறிந்த அன்னை மகளை முகத்திற்கு நேராக கேட்க.. உண்மை கூற முடியாத மங்கி.. எதையும் முழுதாக சொல்லாது... "ரொம்ப.. ரொம்ப..." என்பதோடு முடித்தாள்.

பெற்றவளிடமே இப்படி அபாண்டமாக பொய் சொல்கிறோமே என்ற குற்ற குறுகுறுப்பு அவளை உள்ளே அறுத்த போதும் வெளியே அமைதியாக முகத்தை வைத்துக்கொள்ள...

தன் கலக்கம் எல்லாம் மறைய "அது போதும் எனக்கு" என்று மல்லிகா தொண்டையை அடைக்க சொல்லிக்கொண்டு இருக்கும் போதே...

"ஏன் இந்த விரதம் இருக்க வேண்டுமாம்?? அதுவும் கல்யாணம் வரை??" என்றாள் சங்கி தன் சாப்பாட்டு பிரச்சனையிலேயே உழன்றப்படி.

"ஏன், எதுக்கு, எப்படி என்று நான் கேட்கவில்லை... எதாவது கேட்கனும் என்றால் உன் பாட்டியிடம் கேட்டுக்கொள்.. அவர் தான் உற்சாகமாக கேட்டுக்கொண்டு இருந்தார்" என்று நாட் நாட் செவனை கைக் காட்டினார் மல்லிகா தன் கை வேலையில் கவனத்தை திருப்பியப்படி. மங்கி, சங்கி, சௌவி ஏன் அங்கே மூலையில் அமர்ந்திருந்த சிம்பி கூட அவரை ஆவலுடன் பார்க்க... "என்னை பார்த்தால் அவ்வளவு இளிச்ச வாய் மாதிரியா தெரியுது?!? புது புதுசாக கண்டு பிடிச்சு ஒரு நாளுக்கு ஒரு விழா வைக்கறாங்க எதாவது தப்பி தவறி காரணம் கேட்டா அதுக்கு உட்கார வைத்து ஹிஸ்டரி கிலாஸ் எடுக்காத குறையாக ஆயிரத்தி எழுநூற்றி பத்தில் என்று அவர்கள் முப்பாட்டனுக்கு முப்பாட்டன் கதை ஒன்றை ஆரம்பித்து தலையே கிறு கிறுன்னு சுத்தற மாதிரி சொல்லி முடிக்கிறாங்க... நானும் சம்பந்தி வீட்டில் தப்பா நினைக்கப் போறங்கன்னு எத்தனை நேரம் தான் புரியற மாதிரியே நடிக்கிறது?!?.. சரி பெரியவங்க தான் இப்படின்னு பொடிசுகளை இப்படி இழுக்காமல் சட்டென்று முடிப்பாங்களேன்னு கேட்டால்... அதே அயிரத்தி எழுநாற்றில் என்று ஆரபித்து... இதே மாதிரி காதில் ரத்தம் சொட்ட சொட்ட கதை சொல்லி தான் அனுப்புறாங்க!!! இதில் கிளை கதை வேற... எனக்கு என்ன பயம் என்றால் எங்கே சொன்ன கதையில் இருந்து ஒரு கேள்வி

கேட்டு.. இதுக்கு பதில் சொல்லுங்க பார்ப்போம் என்று வினாடி வினா வைத்து விடுவாங்களோ என்ற பயத்தில் மூச்சு கூட விடாமல் எழுந்து ஓடி வந்து இருக்கிறேன் என்றால் பார்" என்றார் நாட் நாட் செவன். தங்கள் பாட்டியையே எழுந்து ஓட வைத்த கதை என்றால் அது நிச்சயம் ஏதோ பெரிய விஷயம் இருக்க தான் செய்யும் என்று யூகித்த சங்கி...

"அப்படி என்ன கதையை தான் கேட்டீங்க?!?" என்றாள் சங்கி கண் அடித்தப்படி.

"மங்கியோட சேர்ந்துக்கொண்டு நீயும் பிரச்சனை பண்ணாதே.. எல்லாம் குண்டு ஊசி கொடுத்த கதையை தான்" என்றார் பாட்டி.

"அது குண்டு ஊசி இல்ல.. கொண்டை ஊசி பாட்டி" என்றாள் மங்கி.

"என்னமோம்மா அந்த ஊசியை நீ தான் மெச்சிக்கனும்.. ஏய் சங்கி அந்த கதை பற்றி தெரியுமா??" என்றார் நாட் நாட் செவன்.

"நீங்க சொன்ன மாதிரி காதில் ரத்தம் வரும் அளவு சித்திக்கும் பூராண கதை சொல்லுவான் தான் ஆனா.. இதில் எந்த கதை என்று நான் சொல்ல??? இந்த ஊரில் இருக்கும் தெரு பெயர்களில் ஆரபித்து வட்டம், மாவட்டம், சதுரவட்டம்

எல்லாம் எங்க சொந்தகாரங்க பெயர் என்று சொல்லுவான்.. அப்புறம்.."

"நிறுத்து... நிறுத்து.. இந்த.. வட்டம்... சதுரம்... முக்கோணம் எல்லாம் எனக்கு தேவை இல்லை... இந்த ஹைதிராபாத் என்று பெயர் காரணம் பற்றி ஏதாவது சொன்ன நியாபகம் இருக்கா?" என்றார் பாட்டி ஆர்வமாக.

"பாட்டி நான் என்ன மங்கியா??" என்று அலட்சியமாக கேட்டவள் "சித்தோட மூத்த தாத்தா.... தாத்தா... தாத்தா...." என்று ஆவேசமாக ஆரபித்தவள்... பெட்ரோல் இல்லாமல் நின்று போன வண்டி மாதிரி அந்த தாத்தாவை விட்டு நகர மறுக்க....

"சரியா போச்சு போ.... உங்களை நல்லா படியா மனவரையில் உட்கார வைக்கறதுக்குள்ள.... என்னை ஸ்டெச்சரில் உட்கார வைக்காமல் விட மாட்டிங்க போல்" என்று தலையில் அடித்துக்கொண்டார் பாட்டி... "மங்கிக்கு கொடுத்த அந்த கொண்டை ஊசி நாட்டிய பெண்ணாக இருந்த பாக்மதிக்கு காதல் பரிசாக ஒரு காலத்தில் இந்த தக்காணத்தை ஆண்ட நவாப் கொடுத்ததாம்".

"வாவ்... என்ன பாட்டி கதை எட்டு எடுப்பிலேயே ரொமாஸ்சில் நாலுகால் பாய்ச்சலில் பாய்கிறது" என்றாள் சௌவி சங்கியின் அலங்காரத்தை முழுவதுமாக முடித்து விட்டு அங்கே இருந்த மெத்தையில் கதை கேட்கும் ஆவலில் அமர்ந்தப்படி.

"கதை இல்லை சௌவி... நிஜம்... அந்த நாட்டியப் பெண் பாக்மதியின் மேல் நவாப்பிற்கு தீரா காதல். தண்ணீரை எடுத்து கொடுக்க கூட நூறு பேரை வேலைக்கு வைத்திருக்கும் ராஜ பரம்பரையின் வழி வந்த அவர்... பாக்மதியின் மேல் இருந்த காதலால் தன் கையால் செய்துக்கொடுத்த தங்கத்தினால் ஆன முதல் பரிசு அந்த கொண்டை ஊசிதானாம்... அந்த சின்ன ஊசி தான் அவர்கள் கஜானாவிலேயே விலை மதிக்க முடியாததாக கருதி... நவாப் கட்டிக்கொள்ள போகும் பெண்ணிற்கு பரிசாக கொடுப்பதை தான் அத்தனை பெரிய விழா எடுக்கிறார்களாம்!!! இந்த கதை நான் எப்படி ஒரே நிமிஷத்தில் முடித்த விடுத்து விட்டேன் அது மாதிரி சொல்ல முடியாது?!? இதுக்கு மூன்று மணி நேரம் என்னை உட்கார வைத்து சொன்னாங்க பார்.... ஒரு கட்டத்தில் எனக்கு பசி மயக்கத்தில் கண்களை சுழற்றியது என்றால் பார்த்துக்கொள்.." என்றார் பாட்டி.

"ஓ!!" என்று இழுத்த சௌவி "ஆமாம்... உன் நவாப் கொண்டை ஊசியை தவிர வேற என்ன மங்கி கொடுத்தார்?" என்று ஆர்வமாக கேட்டாள்.

"ம்ம்.. பாஷை தெரியாத ஊரில்... மாலை வேலையில் கையில் போன்னும், காசு கூட இல்லாது... கழுத்தை பிடித்து தள்ளியது தான் அவர் எனக்கு கொடுத்த பரிசு" என்று வாயில்

வந்த வார்த்தையை விழுங்கியவள் எதுவும் பேசாது அழுத்தம் என்று போர்வைக்குள் தன் எண்ணத்தை மறைத்துக்கொண்டாள்.

"அவளாவது வாயை திறந்து அத்தானை பற்றி சொல்வதாவது?? இப்பவரை அவர்கள் எப்படி சந்தித்துக்கொண்டார்கள் என்று கூட சொல்லாதவள் இப்ப பரிசு பற்றி கேட்டவுடன் மடை திறந்த வெள்ளம் போல் கொட்டி விட போகிறாளா?" என்று கேட்ட சங்கி.. "இதை சொல்லும் ஆளிடம் கேட்கனும் சௌவி" என்றாள் தன்னை காட்டி.

"அதை கேட்க வேறு செய்யனுமா?!? அது தான் ஊருக்கே தெரியுமே.. உனக்காக சித் நஷ்டத்தில் தத்தளித்துக்கொண்டு இருந்த ஹோட்டலை கட்டிக்கொண்டு மூன்று வருஷம் போராடியதில் ஆரபித்து உங்க ரூம்மிலேயே கிட்சன் கட்டும் வரைக்கும்" என்று சிரித்தபடி மொழிந்தாள் சௌவி.

இந்த பேச்சு விபரிதமாகப் போய் கொண்டு இருப்பதை உணர்ந்த மங்கி "பாபியும், நிரல்யாவும் எங்கேம்மா??" என்றாள் பேச்சை மாற்ற.

"பாபிக்கு லேசாக தலை சுற்றலாக இருப்பதால் மதியம் சாப்பிட்டதுமே படுத்து போய்விட்டாள்... இப்பதான் அவளையும் எழுப்பி டீ கொடுத்து விட்டு வந்தேன்.. உன் மாமியாருக்கு கார்டனிங் என்றால் ரொம்ப இஷ்டமாமே.. நிரல்யாவும் அந்த செடி, கொடியை பற்ற தான் நிறைய தெரியுமே.... அவளின்

அறிவை பார்த்து அசந்த போன உன் மாமியார் மாலை பொழுது காட்டாயம் வா.. தோட்டத்தில் இருக்கும் ஆர்கானிக் கார்டனை காட்டுகிறேன் என்று வரசொல்லி இருந்தார் அங்கே போய் இருக்கிறாள்" என்றார் மல்லிகா.

"சரி.. சரி.. அந்த கதையை விடுங்க.. இன்றைய விழா கதை என்ன?!?" என்றாள் சங்கி பாட்டியை பார்த்து.

"அட.. இதை சொல்ல மறந்து விட்டேனே... இன்றைய விழா கேட்பதற்கு ரொம்பவே சுவாரசியாக இருந்தது.. அந்த நாட்டிய பெண் பாக்மதியை மணம் முடிக்க அனுமதிக்க வில்லையாம். பின்ன ஒரு நாட்டை ஆளும் ராஜா ஒரு நாட்டிய பெண்ணை எப்படி கல்யாணம் பண்ணிக்க பெரியவர்கள் சம்மதிப்பார்கள்?? அனால்.. நம் நவாப் தான் காதல் மன்னன் ஆயிற்றே.. அப்படியே அம்மணியை குதிரையில் தூக்கி உட்கார வைத்து இரவோடு இரவாகக் கடத்திக்கொண்டுப் போய் விட்டாராம்" என்றார் பாட்டி குதிரையை கையால் நடித்துக்காட்டி.

"ஓ!! இந்த ஊர் பிருத்திவி ராஜாவா??" என்றாள் சங்கி.

அந்த வார்த்தை கேட்ட மாத்திரத்தில் உடம்பில் மின்சாரம் பாய... அம்மாவின் அலங்காரத்தை நிறுத்தி விட்டு சங்கியின் புறம் திரும்பியவள் "இப்ப என்ன சொன்ன சங்கி?? பிருத்திவி ராஜான்னா சொன்ன அவர் யார்?" என்றாள் மனது திக் திக் என்று அடித்துக்கொள்ள..

அவளை ஒரு மார்க்கமாக பார்த்த சௌவி.. "நல்லா கேட்ட போ... பிருத்திவி ராஜ் ராஜபுத்திர வம்சத்தை சேர்ந்த வீரர்.. தீரர்... அசகாய சூர ராஜா... சமுயுக்தா வேறு ஒரு நாட்டின் இளவரசி... அப்சரஸ் மாதிரி அழகு பதுமை, சமுயுக்தாவின் அழகை பற்றி கேள்வி பட்டு பிருத்திவி ராஜாவும்... அவரின் வீர, தீர, பராக்கிரமத்தை கேள்விபட்டு அவளும் ஒருவரை ஒருவர் பார்க்காமலே காதல் கொள்ள.. இது பிடிக்காத அவங்க அப்பா சுயம்வரம் வைக்க... கடைசியில் சுயம்வரத்திலேயே சம்யுத்தை தன் குதிரையில் கடத்தி கொண்டு போனாராம் அந்த காதல் மன்னன் பிருத்திவி ராஜ்... இது சின்ன குழந்தையை கேட்டால் கூட சொல்லும் நீ என்னடான்னா இப்ப கேட்டு தெரிந்துக்கொள்கிறாய்..." என்றாள் சௌவி.

இதை தான் அன்று ரஃபிக் அவளிடம் சொன்னானா?? என்று நினைக்கும் போதே மனதில் புலங்காகிதம் ஊற்று எடுக்க... உடல் எங்கும் உற்சாகம் ஆர்பரிக்க.. தன் எண்ண அலைகள் திக்கு முக்காடி மூச்சு முட்ட செய்ய இனிமையான நினைவுகள் சூழ அமர்ந்திருந்தாள். ஏதோ மிக தீவிரமாக யோசித்தப்படி கைகளை பிசைந்தப்படி இருந்தவளை பார்த்த சங்கி...

"மங்கி... உனக்கு சரித்திரம் கேட்டாலே கொட்டாவி விட்டு தூக்கம் முட்டிக்கொண்டு வரும் என்று தெரியும்... அதனால்

வீனா குழப்பிக்காதே.. சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால் இது கிட்டதட்ட நம்ம தாத்தா ஓட்டை பிரிந்துக்கொண்டு நம்ம பாட்டியை தூக்கின மாதிரின்னு வைத்துக்கொள்ளேன்..." என்றாள் சங்கி சிரிப்பு முட்ட..

"என்னது உன் தாத்தா என்னை தூக்கினாரா? வெளியே சொல்லாதே வெட்கக் கேடு... உன் தாத்தா கூரையை பிய்த்துக்கொண்டு குதித்தது வரை சரி.. அதுக்கு அப்புறம் என்னை தூக்குவதற்கு பதில் என் பக்கத்தில் சிவனேன்னு தூங்கிக்கொண்டு இருந்த என் எண்பது வயது தாத்தாவைத் தானே தூக்கிக்கொண்டு ஓடினார்??" என்று முகவாயை இடித்துக்கொண்டார் பாட்டி.

அதை கேட்டு இத்தனை நேரம் ஏதோ திவிர சிந்தனையில் இருந்த மங்கியால் கூட அடக்க மாட்டாது சிரித்து வைத்தாள்!!!

"அப்படிப்பட்ட தப்பை எல்லாம் செய்யாது சரியா அந்த பாக்மதியை நவாப் குதிரையில் வைத்து கடத்துக்கொண்டு போயிட்டாராம்.." என்று விட்ட கதையில் வந்து நிறுத்தினார் மல்லிகா.

"அப்ப இன்று சங்கி, மங்கியையும் குதிரையில் தூக்கிக்கொண்டு போவாங்களா?" என்றாள் சௌவி.

"ம்கூம்.. தூக்கிக்கொண்டு போவது குதிரை இல்லை அவங்களே.."

"என்னது?!?"

# அத்தியாயம் 12

"ம்கூம்.. தூக்கிக்கொண்டு போவது குதிரை இல்லை அவங்களே.."

"என்னது?!?"

"என்னது?!?"

"என்னது?!?"

"என்னது..?" என்று ஆள் ஆளுக்கு ஒரு என்னது போட.. சிம்பியால் என்னது சொல்ல முடியாது என்ற ஒரு காரணத்தால் அது மட்டும் சைகையால் செய்து காட்டி கேட்டது!!!

"எதுக்காக இப்படி ஒரு சவுண்ட்?? கல்யாண பெண் மறைந்துக்கொள்ள வேண்டுமாம் மாப்பிள்ளை வந்து தேடி கண்டு பிடித்து தூக்கிக்கொண்டு வருவாராம்." என்றார் பாட்டி சர்வ சாதாரணமாக.

"இது ஏதாவது நம்பும் படியாகவாக இருக்கு??" என்று மங்கி பாட்டியை ஒரு நம்பாத பார்வை பார்த்து.. "பாட்டி.." என்றாள் இழுப்பாக.

"பாட்டி சொல்வது உண்மைதான்.. உன் மாமியார் கூட அதை தான் சொன்னாங்க" என்று கூறியப்படி உள்ளே வந்தாள் நிரல்யா.

சிம்பி கதைவை திறந்து விட்டதையே அப்பொழுதான் அங்கு இருந்தவர்கள் கவனிக்கவே செய்ய...

"வாம்மா... டீயை குடிக்கிறாயா?" என்றார் மல்லிகா.

"இல்ல அத்தை குடித்துவிட்டேன்.." என்று அவருக்கு பதில் அளித்தவள் "கீழே ரொம்ப அமர்களமாக விருந்து தயார் ஆகிறது.. அந்த பக்கமாக போய் தான் ஆர்கானி கார்டனை பார்த்தேன்.. ரொம்பவே அழகாக வைத்திருக்கிறார்கள்... பேசியப்படி நடந்து வரும் போதுதான் இதை பற்றி உங்க அத்தை சொன்னாங்க" என்றாள் விளக்கமாக.

"நிரல்யாவிற்கு பொய் சொல்ல வராது" என்று அவர்கள் வீட்டு நண்டு, சிண்டுவிற்கு கூட தெரியும்...

"அப்புறம் சௌவிக்கா.. பசங்க விழிக்கும் முன் உங்களை மாமா வர சொன்னார்.."என்று நிரல்யா சொல்லும் போதே..

"ஐய்யோ... அவ்வளவு நேரம் ஆகிவிட்டதா?? என்று மணியை பார்த்தவள் "நான் போய் அவர்களை கிளப்பிவிட்டு வருகிறேன் அத்தை.." என்று கூறியப்படி கதவருகில் சென்றவள் பின் திரும்பி "நிரு உனக்கு உடை, மற்றும் நகைகள் அந்த பையில் இருக்கு" என்று மூத்த மருமகளாய் சொல்லிவிட்டு விடைப்பெற்றுக்கொண்டு போனாள்.

"இப்ப நான் சொன்னதை நம்புவாய் இல்லை??" என்றார் பாட்டி அதிகாரமாக.

"கல்யாண பெண் அலங்காரம் பண்ணிக்கொண்டு மறைந்துக்கொள்ள வேண்டும் என்றால் மூளை உள்ளவன் எவனாவது நம்புவானா பாட்டி?" என்றாள் மங்கி இடுப்பில் கை வைத்தப்படி... "ஏன் சின்ன வயதில் கண்ணா மூச்சு விளையாடியது இல்லையாமா??" என்று தன்னுள் பொங்கிய எரிச்சலை மறைக்காமல்.

"அது தானே... இது என்ன சின்ன புள்ள தனமா இருக்கு...?" என்றாள் சங்கி மங்கியுடன் கைகோர்த்தப்படி!!!

"ஏன் எதுக்குன்னு நான் கேட்க வில்லை... இதற்கு பதில் பாட்டியிடம் கேட்டுக்கொள்... ஏன் என்றால் நேற்று இதை பற்றி யாருடனோ பேசிக்கொண்டு இருக்கும் போது அவர் தான் துருவி... துருவி கேட்டுக்கொண்டு இருந்தார்" என்று நாட் நாட் செவனை பார்த்தாள் நிரல்யா.

கதை கேட்டு மயக்கம் வருது... வாந்தி வருது என்று சொன்னாலும் கூட ஒரு கதையையும் விட்டு வைக்காமல் தெரிந்து வைத்துக்கொண்டு இருந்த பாட்டியின் அன்பை பெருமிதம் பொங்க பார்த்தார் மல்லிகா.

அதற்குள்ளே எதற்கு என்பதை யூகித்த மங்கி.. "ஓ!! மை காட்!!! ஒரு நடனப்பெண்ணிற்கு இத்தனை முக்கியத்துவமா?? என்னால் நம்ப முடியவில்லை... பாக்மதிக்கு நடந்து

எல்லாத்தையும் இன்று வரை அச்சரம் பிசகாமல் அப்படியே தொடர வேண்டுமா???" என்றாள் அதிர்ச்சியாக.

"ஒன்று சொல்கிறேன் குறிந்து வைத்துக்கொள் மங்கி தப்பு செய்ய சந்தர்ப்பம் கிடைக்காதவரை அனைவரும் உத்தமர்களே.. இந்த பழமொழியை கேள்வி பட்டு இருக்கியா?? உண்மையான உத்தமன் யார் தெரியுமா??... தப்பு செய்ய சந்தர்ப்பம் கிடைத்தும் அதன் பயன் படுத்திக்கொள்ளாது இருக்கிறானோ அவனே உத்தமன்... அப்படிப்பட்டவரின் ஒருத்தர்தான் ரஃபிக் மற்றும் சித்தின் தாத்தா. கொஞ்சம் மாற்றி யோசித்து பாரேன் மங்கி... அந்த காலத்தில் நடன பெண்கள் எந்த சமூகத்தை சேர்ந்தவர்களாக இருந்திருப்பார்கள்??? அப்படிப்பட்ட ஒரு பெண்ணை ஊர் உலகம் தெரியாத யாரோ ரோட்டில் போகும் ஆடவன் மணந்து கொள்ளவில்லை... ஒரு நாட்டை ஆளும் நவாப் அந்த பெண்ணை எப்படி வேண்டுமானலும் பயன்படுத்திக்கொள்ள சந்தர்ப்பம் இருக்கும் போது.. அவளை ஊர் உலகமே மதிக்கும்படி மகாராணி ஆக்குவேன் என்று மணம் முடித்த அந்த நவாப்புடைய காதலின் மேன்மையை எந்த வார்த்தகைளால் எடுத்துக்காட்டி விட முடியும்?!?" என்று பாட்டி கேட்கும் போதும் அங்க யாருக்கும் பதில் சொல்ல வார்த்தைகள் கிடைக்கவில்லை.

"பாக்மதி என்ற நடன கன்னிகையை ஹைதர் மஹால் என்று மதம் மாறி நவாபின் கரம் பற்ற... அவரின் நினைவாக வந்த பெயர் தான் ஹைதராபாத்!!!"

"அப்புறம் சுபம்... போட்டு எல்லோரும் சந்தோஷமாக வாழ்ந்தார்கள்!!!" என்று கையை தட்டிய சங்கி.. "சித் இதை சொன்னான்.. ஆனா ஒரு வரியில் சொல்லித்தான் தெரியுமே தவிர இதில் இவ்வளவு விஷயம் இருக்கும் என்று யோசிக்கவில்லை பாட்டி" என்று சிரித்தவள்.. "அத்தை காயத்திரியை மதம் மாறாமலே கல்யாணம் பண்ண மாமா வீட்டில் ரொம்பவே போராட வேண்டி இருந்தது.. அதற்காக பொருமையாக காத்து இருந்தாக கூட சித் சொன்னதாக ஞாபகம்" என்று இழுத்தாள்.

பாத் ரூம் சென்று முகம் அலம்பிவிட்டு வந்த நிரல்யா... "ரொம்பவே சரி.. அந்த காலத்திலேயே ஏரோநாட்டிக்கல் இன்ஜினியரிங் படித்திருந்து அவர்.. கல்யாணத்திற்காக அதை பாதியில் விட்டுவிட்டாராம். ஏய்.. மங்கி நான் கார்டனை சுற்றி பார்க்கும் போது.. உன் அத்தை அங்க கட்டி இருந்த "செத்தக்" குதிரையை காட்டினார்கள்.. வாவ்.. எவ்வளவு மெஜஸ்டிக்கா இருக்க தெரியுமா?" என்று நவின்றப்படி முகத்தை துடைத்தவள் "அந்த குதிரையின் பெயரை கேட்டவுடன் ஒன்று நியாபகத்தில் வந்தது.. அந்த பிருத்திவி ராஜ் சவுகன்..." என்று ஆரபிக்கும்

போதே எல்லோரும் அவளை ஒரு வித நமுட்டு சிரிப்புடன் பார்க்க..

"யார் சம்யுத்தையை சுயம்வரத்தில் தூங்கிக்கொண்டு போன ராஜா தானே??" என்ற சங்கி.. "இன்று என்ன எல்லோருக்கு பிருத்திவி ராஜ் மேல் இவ்வளவு அன்பு பொத்துக்கொண்டு வருகிறது என்று தெரியவில்லையே" என்று நமுட்டும் சிரிப்புடன் மங்கியை பார்த்தபடி கேட்டாள்.

"ஆமாம் அவரே தான்..." என்று தலையை ஆட்டிய நிரல்யா.. "அவர் வைத்திருந்த குதிரையின் பெயர் கூட செத்தக் தான்... அந்த குதிரையின் மேன்மையை பற்றி பல நாட்டு புறப் பாடல்கள் இருக்கிறது" என்று மினி கூகுளாக பதில் சொன்னாள் நிரல்யா.

தூங்கி எழுந்ததில் இருந்து எத்தனை அதிர்ச்சிகள்?!? பிருத்திவி ராஜ்ஜில் ஆரபித்து தன் கல்யாண தேதி வரை... எதையும் வரிசையாக கோர்த்து சிந்திக்க முடியாது வீட்டினர் வேறு ஏதோ பேசியப்படியே இருந்தனர்.. ஏற்கனவே அம்மாவிடம் வேண்டும் அளவு வாங்கியாச்சு என்று மூளை எச்சரிக்கை செய்ய.. எங்கோ தரி கெட்டு ஓட துடித்த மனதை அடக்கி அங்கே இருத்தி வைத்தாள் இல்லை வைக்க முயன்றாள்!!!

ஆனால் மனதை ஞாநியாலும் அடக்குவது கடினம் என்னும் போது மங்கி எம்மாத்திரம்??? பாட்டி சொன்னதில் எங்கோ எதிலோ தான் சரியாக புரிந்துக்கொள்ளாது மாதிரி ஒரு எண்ணம் எழுந்து அவளை அலை கழித்தப்படியே இருக்க.. ஒரு வழியாக அலங்காரம் எல்லாம் முடிய.. விழா கீழே டைனிங் ஹாலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது!!!

காலை வெள்ளை நிறம் என்றால் மாலை அலங்காரத்திற்கான நிறம் சிகப்பு போல... கீழே விரிந்திருந்த சிகப்பு கம்பலத்தில் ஆரம்பித்து அங்கே அலங்கரித்த பூக்கள்.. ஏன் போடப்பட்ட நாற்காலி மேல் இருந்த குஷன் வரை எல்லாமே சிகப்பு நிறத்தில் கண்களை பரித்தது. இதை எல்லாம் கவனித்தவள் அங்கே மணமகன்கள் இருவரும் தயாராகி காத்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை அவள் கவனிக்கவே இல்லை!!!

காலையில் மொத்தி சூர் லட்டு நிறத்தில் வந்தவள்... இப்பொழுது ஆவி பறக்கும் சூடான ஜிலேபி நிறத்தில் புடவை உடுத்தி தலை முதல் பாதம் வரை வைரத்திலான நகைகள் அணிந்து... இருபது அடி தூரத்தில் இருந்து பார்க்கும் பெண்களின் கண்கள் இத்தனை நகை அணிந்தும் அவளின் முகத்தில் தெரியும் தோற்ற பொலிவிற்கு முன்னால் டல் அடிக்கிறதே என்று பொறாமையால் வேக.. ஆண்களின் கண்கள்

மின்னும் வைரத்தால் கூசுவதற்கு பதில் அவளின் தோற்ற பொலிவில் கூசியது... இப்படி தன் தோற்றம் பிறரை பாதிக்கிறது என்பது கூட அறியாது தன் அருகில் வரும் சௌவியின் கையை பிடித்தப்படி அன்ன நடையிட்டு வந்தவளை கண்களால் கபளீகரம் செய்துக்கொண்டு இருந்தான் ரஃபிக்!!!

எப்பயும் போல் புடவை கால்களை தட்டாமல் நடக்க வேண்டும் என்பதில் ஆரம்பித்து யார் என்ன பேசினாலும் முக குறிப்பில் கூட அவர்களின் பேச்சு தன்னை பாதிக்கிறது என்று வெளியே காட்ட கூடாது என்று மனதில் உழன்றுக்கொண்டே வந்தவளை ஒரு நாற்காலியை காட்டி அமர சொன்னார்கள்!!!

"நன்றி.." கூறியப்படி நிம்மதியாக அமர்ந்தாள்... அப்பாடா ஒரு கண்டத்தில் இருந்த தப்பித்தாகிவிட்டது என்று நிம்மதி பெரு மூச்சு விட....

அடுத்த நிமிஷம் மனதில் வந்து நிறைத்தது.. அந்த குதிரையின் பெயர். நிரல்யா சொன்னதில் இருந்து மனதில் பெரும் புயல் கிளப்பி விட்டிருக்க... எங்காவது அமைதியாக நடக்க வேண்டும் போல் இருந்து... கல்யாண வீட்டில் அமைதிக்கும் தனிமைக்கும் யாருக்காவது பொருள் புரியுமா.. அதுவும் கல்யாண பெண்ணிற்கு கிடைக்கும் வரங்களாக அவை?!? என்று ஏக்க பெரூ மூச்சு விட்டப்படி விழிகளை உயர்த்தியவளின் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தது.

அவளே உட்காரலாம் என்னும் படியா இருந்த அந்த பெரிய தங்க தட்டில் கலர் கலராக வைக்கப்பட்டிருந்த உணவை பார்த்தவளுக்கு எதில் இருந்து முதலில் ஆரம்பிப்பது என்று யோசித்தப்படி அமர்ந்திருக்க...

"தட்டில் வைத்திருப்பது சாப்பிடுவதற்கு தானே தவிர.. வேடிக்கை பார்ப்பதறக்கு அல்ல மேகி.." என்று அருகில் இருந்த ரஃபிக் குரல் காதில் ஒளித்து அவள் நாடிய தனிமையும், அமைதியையும் இருந்த இடம் தெரியாமல் விரட்டி அடித்தான் நாயகன்!!!

நல்ல காலம் வாயில் உணவு எதுவும் வைத்திருக்க வில்லை... இல்லை என்றால் இன்நேரத்திற்கு புரை ஏறி இருக்கும் என்று நினைத்தப்படி செர்வாணி உடுத்தி கழுத்தில் முத்துகளான நீண்ட மாலை அணிந்து கை தொடும் நெருக்கத்தில் அமர்ந்திருந்தவனை பார்த்தவளுக்கு கண்களில் குழப்பம் மின்ன...

"இங்க என்ன பண்ற ரஃபிக்?" என்றாள் கிசுகிசுப்பாக.

"ம்ம்.. படுத்து தூங்க டைனின் ரூம் காலியா இருப்பதாக சொன்னாங்க அது தான் வந்தேன்!!!" என்று அவளை இலக்காரமாக பார்த்துக்கொண்டு மொழிந்தவனின் கண்கள் சட்டென்று கூர்மை பெற்று அவளின் முகத்தில் நிலைத்தது...

எப்பயும் போல் தனக்கே உரிய திமிர்தனத்துடன் பேசிக்கொண்டு இருந்தவனின் பார்வையில் ஒரு மாற்றத்தை உணர்ந்தவளின் மேனி அடுத்த நொடி... கை தொடும் தூரம் அமர்ந்திருந்தவனின் கதகதப்பு பனி இரவின் கம்பளியாய் அவளை சூழ... நேற்று இரவு அவனின் பேச்சு... பின் அவன் தந்த முத்தம்... அதன் தாக்கம்... இவளின் தடுமாற்றம் எல்லாம் குலுக்கிப்போட்ட கோலியாய் ஒன்றுக்கு ஒன்று தொடர்ப்பு இல்லாமல் நினைவில் வந்து மோத.. அவளையும் அறியாது அவனின் உதட்டில் வந்து நின்றது அவளின் பார்வை!!!

ஐம்பது பேர் தங்களை சுற்றி சாப்பிட்டுக்கொண்டு இருக்க.. அவர்களுக்கு பரிமாறவும், கவனிக்கவும் ஐம்பதற்கும் மேற்பட்ட வேலை ஆட்கள் நிற்க.. அவர்களை சுற்றி எழுந்த எந்த வித பேச்சும், ஒலியும் அவளை எட்டாதவாறு அவனின் விழி ஈர்ப்பு விசையில் விழந்தவளுக்கு வேறு எதுவுமே தெரியாது... அவனோடு லயித்து போய் ஒன்று கலக்க..

"உன் கண்களை பார்த்தால்... ராத்திரி முழுக்க தூக்கிய மாதிரி தெரியவில்லையே.." என்ற அவனின் பேச்சு... மெல்ல அவளின் மனதில் பதிய...

உருகிக்கொண்டு இருக்கும் தங்கத்தின் மேல் குளிந்த நீரை கொட்டி அதை உரைய செய்வது போல் ஆனது அவனின் பேச்சு!!! இத்தனை நேரம் அவன் அருகாமை என்னும் கூட்டில்

உறுகிக்கொண்டு இருந்தவளுக்கு அவனின் பனி கட்டியின் தன்மையான பேச்சு அவளை உரைய செய்தது!!!

சட்டென்று தன் பார்வையை தட்டிற்கு திருப்பியவள் "ஆமாம்.. தூங்காமல் கனவுலகில் டூயட் பாடி, ஆடிக்கொண்டு இருந்தேன்" என்றாள் அவன் மேல் இருந்த ஆத்திரத்தை எல்லாம் வார்த்தையில் வடிகால் தேடி.

"மேகி... நடக்க முடியாததை நினைத்து தானே கனவு காண வேண்டும்??? ஒரு சின்ன கால் பண்ணி இருந்தால் போதுமே நானே வந்திருப்பேனே... லைவ்வாக டூயட் ஆடி இருக்கலாமே??" என்று வம்பு இழுத்தப்படி தட்டில் இருந்த உணவை எடுத்து வாயில் வைத்தான்.

தலை சரித்து அவனை பார்த்தவள் "ஆ.. டூயட் ஆடினேன் என்று சொன்னேனே தவிர உங்களுடன் ஆடினேன் என்றா சொன்னேன்?!?" என்றாள்.

அவன் கண்கள் அந்த பதலை கேட்டு மெச்சிய போதும்.. "மேகி.. நீ என்னுடையவள் என்று ஊருக்கே தெரியும்... அதனால் கனவில் கூட உன்னுடன் யாரும் ஆட யாரும் வர மாட்டாங்க" என்று நவாப் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகானாக பதில் அளித்தப்படி டெபிள் கீழ் இருந்த அவள் கையை பிடித்தான்.

பொது இடத்தில் தன் கையை பிடிப்பான் என்று சற்றும் எதிர்பார்காதவளுக்கு தூக்கி வாரி போட.. அவசரமாக தன் தலையை தட்டில் கவிழ்த்துக்கொண்டு..

"என் கை... என் கையை... என்ன பண்ற ரஃபிக்??" என்று தடுமாறியப்படி சீறினாள்.

"இன்னும் முடிவு பண்ணவில்லை.. லேடிஸ் சாய்ஸ்.. என்ன பண்ணலாம் என்று நீ நினைக்கிறாய்?" என்று அவளையே கேட்டான் அந்த உத்தமன்.

"என் கையை விட்டலாம் என்று நினைக்கிறேன்" என்று அவள் சொல்லிக்கொண்டே தன் கையை பிடுங்கிக்கொள்ள முனைய.. எங்கே?? அவனின் இரும்பு பிடியில் சிக்கி இருந்த விரல்களை அசைக்க கூட முடியவில்லை.

"நான் கேட்கும் கேள்விக்கு முதலில் பதில் சொல்.... விடுகிறேன்"

கேட்டுத் தொலை என்னும் படியாக தலையை அசைக்க... "இன்று இரவு எல்லோரும் தூங்கிய பின் எனக்கு கால் பண்ணு".

"வாட்??" என்று கூவ தொடங்கியவள் பின் அடங்கி போய் "சரி சரி உங்களுக்கு போன் பண்ணனும் அவ்வளவு தானே??"

"ம்ம்..." என்று தலை ஆட்ட..

"பண்ணி தொலைக்கிறேன்.." என்று அவசரமாக கூறி முடித்த பிறகு கூட அவள் கை விடுதலை பெறாது அவனின்

விரல்களிலேயே பின்னி கடக்க... "அதுதான் ஒத்துக்கொண்டேனே பின்ன..." என்று மொழிந்துக்கொண்டு இருக்குமே போதே அவளின் மூச்சு தாறு மாறாக எகிறது..

அதற்கு காரணம் இத்தனை நேரம் அவளின் கையை பற்றி இருந்தவனின் அழுத்தமான விரல்கள் உள்ளங் கையில் மிக மென்மையாக எதையோ வரைய தொடங்க... சிலிர்த்து எழுந்த நாடி நரம்புகளின் புது ரத்தம் பாய.. அவளுக்கு மூச்சு முட்டியது!!!

மென்மையான ஸ்பரிசம் அவளை இத்தனை தூரம் பாதிக்கும் என்று அவள் இதுவரை கற்பனை கூட பண்ணி பார்த்ததில்லை... பேச்சு மறந்து.. உணர்வு மந்தித்து தட்டை வெறித்து பார்த்துக்கொண்டு அமர்ந்து இருக்க..

"மேகி.. மேகி.." என்று அழுத்தமாக ரஃபிக் குரல் இரண்டாம் முறையாக கேட்டு திடுக்கிட்டு அவனை நிமிர்ந்து பார்க்க...

"சாப்பிட உனக்கு என்ன வேண்டும் என்று கேட்கிறார்கள்" என்று அவளின் இந்த நிலை தடுமாற்றத்திற்கு அவனுக்கு எந்த சம்பந்தம் இல்லை என்பது போல் சொல்ல... முதலில் அவன் எந்த மொழியில் பேசுகிறான் என்று கூட புரியாது திருதிருத்தவளுக்கு அவன் கையையும் தலையையும் அந்த புறம் ஆட்டி காட்ட..

மெல்ல அவன் சொன்ன புறம் திரும்பி பார்த்தவளுக்கு அங்கே நின்ற ஆட்களை பார்த்து புரிய தொடங்க… நிச்சயம் அந்த பனி ஆட்கள் இவளுக்கு காது கொஞ்சம் மந்தம் என்று தான் நினைத்திருப்பார்கள்.. என்று எண்ணியப்படி

அவர்கள் கேட்டதற்கு எல்லாம் சம்மதமாக தலையை ஆட்டியவள் கடவுளே என்னை காப்பாற்று.. என்று வேண்டியப்படி திரும்ப அங்கே நேருக்கு நேராக ஆமிராவின் விழியில் விழுந்தாள் மேக மித்ரா!!!

# அத்தியாயம் 13

இவளைக் கண்ட அடுத்த நொடி அமிராவின் கண்களில் தெறித்த துவேஷமும், வன்மமும் மனதில் பதியவில்லை... அதற்கு பதில் மங்கி கவனிக்கிறாள் என்று உணரும் முன் அமிரவின் விழிகளில் தெரிந்த அந்த வலியும்.. எல்லையில்லா சோகமும் மனதில் சாட்டை அடியாக சுளிரென்று விழ.. அதை அவள் முழுமையாக கிரக்கிக்கும் முன் தன் மனவேதனையை துவேஷம் என்னும் திரை போட்டு மறைத்தவளின் மேல் சிறு கோபம் கூட வரவில்லை!!!

இரண்டு வருடம் பல கனவுகள் கண்டு காத்திருந்தவளுக்கு, அதை தட்டி கவிழ்த்தோடு மட்டும் இல்லாது அவளின் கண் எதிரே வேறு யாரோ தனது இடத்தில் உரிமையோடு அமர்ந்திருப்பதை காண எப்படி வலித்திருக்கும் என்று அவள் மேல் இரக்கம் சுரந்தது!!!

விலங்குகளின் வலியை கண்டு துடிக்கும் அவள் அழுத்தக் காரியாக வெளியே தெரிந்தாலும் பிறர் மனதை புண் படுத்தி அதில் சுகம் காணும் குரூர புத்தி மங்கிக்கு என்றுமே இருந்ததில்லை!!!

அமிரா படும் வேதனையிக்கு தானும் காரணம் என்று நினைக்கும் போது குற்ற உணர்வு மனதை நெருஞ்சி முள்ளாக குத்தி கிழித்தது!!!

சாப்பிடாமல் எங்கோ வெறித்தப்படி உட்கார்ந்திருந்த மங்கியை பார்த்தவனுக்கு கண்கள் கேள்வியுடன் பார்வை நிலை குத்தி நின்ற இடத்தை நொக்கியவனின் விழிகள் அமிராவை கண்டன!!!

இவனின் பார்வையை உணர்ந்த அமிரா சலாம் வைக்க... ஆமோதிப்பாய் தலை அசைத்ததுவிட்டு மங்கியின் புறம் திரும்பிய ரஃபிக்..

"முறைத்தது போதும்... தட்டை பார்த்து சாப்பிடு.. அவளையும் சாப்பிட விடு" என்றான் கண்களால் தட்டை காட்டி.

"நான் அவளை முறைக்கிறேனா??" என்றாள் அவள் ஆயாசமாக.

அலட்சியமாக தோள்களை குலுக்கிவிட்டு தன் தட்டில் இருந்த உணவை எடுத்த வாயில் வைக்கும் முன் அவளை பார்த்து "கண்களாலே கத்தி வீசிக்கொண்டு இருந்தது நீதானே??" என்றான் அதிசிரத்தையாக விளக்கினான்.

"உன் நக்கல், நய்யாண்டி பேச்சை கொஞ்சம் நேரம் மூட்டை கட்டி வை" என்று கழிவிரக்கம் தாங்காது பேசியவள் "அவள் கண்ணில் தெரிந்த வலியை நீ பார்த்திருந்தால்..." என்று

வார்த்தைகள் தடுமாற நிறுத்தியவளின் கண்கள் நேருக்கு நேராக அவனின் கூறிய விழிகளில் கலந்து... "அவள் சந்தோஷமாக வாழ வேண்டிய இடத்தை பிடுங்கிக்கொண்டது மட்டுமல்லாது அவளுக்கு முன்னாடி உன்னோடு சேர்ந்து உட்காரும் போது கொலை பட்டினி கிடக்கும் ஒருவன் முன் தலை வாழை இலை போட்டு தான் மட்டுமாக சாப்பிடுவது போல் இருக்கு ரஃபிக்" என்றாள் உணர்ச்சியில் வார்த்தைகள் பொங்கி வழிய.

அவள் சொன்னது காதில் விழுந்ததாக என்று சந்தேகம் வரும் அளவிற்கு முகத்தில் எந்த மாற்றம் இல்லாது இருந்தவன்.. பின் "நன்றி.." என்று மிக ஏளனமாக சொல்லிவிட்டு தன் உணவில் கவனத்தை திருப்பினான் ரஃபிக்!!!

தன் வீட்டு ஆட்களிடம் கூட இவ்வளவு வெளிப்படையாக பேசாது இவனிடம் தன் உள்ளத்தின் வேதனையை திறந்து கொட்டி வடிகால் தேடினால்... அவனோ "நன்றி" என்றால் என்ன பொருள்?

"நன்றி?? இப்ப நன்றி... எதற்காக சொன்னாய்???" என்றாள் உள்ளே இருந்த கொந்தளிப்பை வார்த்தைகள் வெளிப்படுத்த.

"ம்ம்.." என்று தலையை ஆட்டியவன்.. "அவள் என்னை கல்யாணம் செய்திருந்தாள்.. சந்தோஷமாக இருந்திருப்பாள் என்று சொன்னாயே.. அதற்கு.."

அவள் எத்தனை முக்கியமான விஷயம் சொல்லிக்கொண்டு இருக்கிறாள்... அதை புறக்கணித்து விட்டு அதில் இருந்த அற்ப தனமாக ஒரு விஷயத்தை எடுத்து அவன் பெரிதாக பேசியதை கேட்டவளின் மனம் நிலைக்கொள்ளாது கொந்தளிக்க...

"எப்பொழுதும் உன்னை தவிர உலகத்தில் எதுவுமே இல்லையா ரஃபிக்...?? சக மனுஷி உன்னால் படும் வேதனையை எப்படி இவ்வளவு அலட்சிய படுத்த முடிகிறது?" என்று அவள் கேட்ட போது அந்த குரலில் இருந்த பரிதவிப்பு, ஆற்றாமை எல்லாத்தையும் விட அதில் இழையோடிய வலி தான் அவன் காதில் பிரதானமாக விழுந்தது.

ஒரு முறை அவளை தன் விழிகளால் ஆழமாக பார்த்தவன்... "இதை எல்லாம் அன்று நீ என்னிடம் ஐ லவ் யூ சொல்லும் முன் யோசித்திருக்கனும்" என்று ரொம்ப நாள் பிறகு அவனின் தனித்துவமான ஒரு வரி பதில் அவளின் முகத்தில் அறைந்தது.

அந்த பதிலை விட அவன் உணர்த்திய பொருள் நெஞ்சை கலவர பூமி ஆக்க... "ரஃபிக்... அன்று... நான்.. அப்படி சொல்லவில்லை..." என்றாள் அதிர்ச்சியாக.

"யா.. ரயிட்.. ஐ.. ஐ.. ல..லவ்..லவ்... யூ..யூன்னு சொன்னாய்.." என்று நிரல்யாவை போல் அச்சரம் பிசகாமல் கூட இல்லை... அதே மாடுலேஷனில் பகன்றான்.

தன் அதிர்ச்சியில் இருந்து மீண்டு.. "ரஃபிக்.. நான்..." என்று அவள் பேச வாயை திறக்கும் போதே..

"ஒரு பெண் ஒரு ஆணிடம் ஐ... லவ்..யூ என்று சொன்னால் என்ன அர்த்தம் பண்ணிக்கொள்ள முடியுமோ அதை தான் நானும் பண்ணிக்கொண்டேன்.. நான் மட்டுமல்ல உன் பேச்சை கேட்டு மயங்கி விழுந்த என் டாக்டர், உறைந்து போய் நின்ற என் பாடி காட்ஸ் உற்பட"

அவன் செய்யும் இந்த அராஜகத்திற்கும், அட்டூழித்திற்கும் காரணம் இவள் தான் என்று அடுக்கிக்கொண்டே போகும் குற்றச்சாட்டின் பாரம் பொறுக்க முடியாமல்...

"ஓகோ... அப்ப ஐ லவ் யூ சொன்னவங்களை எல்லாம் கியூவில் நிற்க வைத்து கல்யாணம் பண்ணிப்பாயா??" என்றாள் வார்த்தைகளில் தீ பொறி பறக்க.

"உன் போல் சினிமா தனமாக காதலை சொல்லி... மயங்கி விழுந்து.. கேட்டபவரையும் மயங்கி விழ செய்த மாஸ்டர் பீஸ் பர்ஃபாமன்ஸ் அதுவரை யாரும் கொடுத்தில்லை.. ஆங்.. அப்புறம்.. வாழ்க்கையில் முதல் முறையாக என் அழகில் மயங்கி விழுவதை பார்ப்பதற்கு... ம்ம்.. சூப்பர் என்று சொல்ல முடியாவிட்டாலும்.. இன்ரஸ்டிங்!!!" என்றான் மிகுந்த யோசனையுடன் வார்த்தகைகளை தேடி பிடித்து பேசியக்கொண்டே போனவன்.. விட்டால் அவளின்

பர்ஃபாமன்ஸ்சின் நிறை குறையை அலசி ஆராய்ந்து மதிப்பெண் போடுபவன் போல!!!

அவளின் பயம் என்னவென்றால் ரஃபிக் உண்மையாக தான் இப்படி அபான்டமாக பழி போடுகிறானா இல்லை எப்பயும் போல் தெனாவட்டாக பதில் சொல்கிறானா என்று அவளால் நிச்சயமாக சொல்ல முடியாதது தான் அவளை இன்னும் கலவரப்படுத்தியது!!!

"ரஃபிக்... உன்னை..." என்று அவள் பற்களை நரநரவென்று கடித்தப்படி வேறு எதுவும் பேச வராது தொண்டையை அடைக்க...

"பொறுமை.. மேகி.. இன்னும் இருபத்தி நான்கு மணி நேரம் தான் இருக்கு... கல்யாணம் முடிந்த பிறகு நீ என்னை என்ன வேண்டுமானாலும் பண்ணலாம்" என்றான் அவள் என்னவோ கொஞ்சி குலாவ அழைப்பு விடுத்தது போல...

"உனக்கும்.... உன் இமாலய ஈகோவிற்கும் எப்படி இத்தனை பெரிய டைனிங் ஹாலில் சரி போகுது?? ஆமாம் நாளை நான் யாரை கல்யாணம் பண்ணிக்கொள்ள போகிறேன்.. உன்னையா இல்லை உன் ஈகோவையா??" என்றாள் கண்களில் கோபாக்கனி கொழுந்து விட்டு எரிய.

"ஓ!! டொன்ட் வொரி மேகி... எனக்கு உனக்கும் மத்தியில் காற்று கூட புக முடியாது என்னும் போது ஈகோவிற்கு நோ

சான்ஸ்..." என்று அவள் கேட்ட விதத்தையே மாற்றி சரசம் பேசினான் ரஃபிக்.

வாயில் இருந்த உணவை விழுங்கியவளுக்கு அவனின் பதில் கேட்டு புரையேற.. அதற்காக தான் காத்துக்கொண்டு இருந்தவன் போல் அங்கு இருந்த தங்க குவளையை எடுத்து அவள் கையில் திணித்தான்.

இதில் ஒன்றும் குறைச்சல் இல்லை.. செய்வதை செய்துவிட்டு கரிசனத்தை பார் என்று மனது திட்டிப்படி தண்ணீரை குடிக்க.. அதை கூட இரண்டு வாய் தான் குடிக்க விட்டான்.. பின் அவள் கையில் இருந்த குவளையை பிடுங்கி கீழே வைத்தான்!!!

"நான் எவ்வளவு தண்ணீர் குடிக்க வேண்டும் என்பதற்கு கூட கட்டுப்பாடு விதிப்பாயா?" என்று சீறினாள்.

"தண்ணீர் குடித்தால் சாப்பிட முடியாது.. அப்புறம் எப்படி நாளை வரை விரதம் இருக்க முடியும்..?"

"என்ன ஒரு கரிசனம் நீங்க மட்டும் மூக்கை பிடிக்க சாப்பிடுவிங்க.. ஆனா உங்களை கல்யாணம் பண்ணி போற குற்றத்திற்காக நாங்க கொலை பட்டினி கிடக்கனுமா?"

"அப்படி யார் சொன்னது?? நீ இருக்கும் அதே விரதம் நானும் இருந்தேன்.. இருப்பேன்" என்றான் முகத்தில் அடித்தாற் போல்.

"ஓ!!" என்று அவள் காதில் விழுந்ததை நம்ப முடியாது என்ன பதில் சொல்வது என்று யோசிக்கும் வேலையில் ஆபத்பாந்தவனாக வரிசையாக உணவு வர..

முகத்தை திருப்பிக்கொண்டு சாப்பிடும் சாக்கில் அவனுக்கு பதில் சொல்லாது அமைதியாக சாப்பிட தொடங்கினாள் மறுபக்கம் உட்கார்ந்திருக்கும் அவனுடைய சித்தி ஏதோ கேட்கும் வரை!!!

இத்தனை நேரம் ரஃபிக்கின் சித்தி அமர்ந்திருப்பதை கூட உணராததை நினைத்து வெட்கம் பிடுங்கி தின்ன... அவளுக்கு தான் ரஃபிக் அருகில் இருந்தால் ஐம்புலன்கலும் அவன் கட்டுப்பாட்டிற்கு கீழ் சென்று விடுவதால் தன்னை சுற்றி என்ன நடக்கிறது.. யார் இருக்கிறார் என்று எதுவுமே தெரிய மாட்டேன் என்கிறதே.. என்று தன்னை தானே நொந்தப்படி அவருடன் ஆங்கிலத்தில் உரையாடிக்கொண்டே அடுத்த கால் மணி நேரத்தில் தட்டில் விழுந்ததை எல்லாம் வாயில் திணித்தாள்!!!

ஒருவழியாக எல்லோரும் சாப்பிட்டு முடிந்து எழந்து அங்கே இருந்த விசாலமான ஹாலிற்கு செல்ல... பிடிக்கவில்லை என்றாலும் பலி கடா மாதிரி பின்னே சென்றாள்.

அங்கே பெரியவர்கள் நாளைய கல்யாண ஏற்பாடுகளை பற்றி தீவிரமாக அலசி ஆராயப்பட்டுக்கொண்டு இருக்க.. மணப்பெண்களை கல்யாணம் ஆகாத இளவட்டங்கள் கூட்டம்

ஒன்று சுற்றி அமர்ந்துக்கொண்டு ஏதேதோ பேசி அரட்டை அடித்தப்படி இருக்க... இவளால் சங்கியை போல் மனது விட்டு பேசி சிரிக்கவும் முடியாது அதற்காக முகத்தை தூங்ககி வைத்துக்கொண்டு உட்காரவும் முடியாது எப்படியோ சமாளித்துக்கொண்டு இருக்க.. ஒருவழியாக அவர்களை தூங்கச் செல்லும் மாறு காயத்திரி விடைக்கொடுத்து அனுப்பினார்.

மணமக்கள் என்ன உடுத்துகிறார்கள் என்பதில் ஆரபித்து வீட்டின் செயல் பாடுகள், உணவு, தங்கி இருக்கும் விருந்தினரின் உபசரிப்பது வரை.. எல்லாவற்றையும் சாந்தமாகவும், எளிதாக சமாளிக்கும் திறன் படைத்த காயத்திரி... மகன் சொல்லுக்கும், செயலுக்கும் மறுவார்த்தை பேசாது தலை ஆட்டும் இவரா படிப்பை பாதியில் நிறுத்தினார்??

இவர் போல் தன்னால் இருக்க முடியுமா?? என்று நினைக்கும் போது.. தலை சுற்ற... நிச்சயம் முடியாது... அதிலும் சொல்வதற்கு எல்லாம் தலை ஆட்டிக்கொண்டு இருக்க வேண்டும் என்றால் அது ஆகாத காரியம் அதை விட அவள் இத்தனை வருடமாக இஷ்டப்பட்டு படித்த படிப்பை விட்டு விட்டு அத்தை மாதிரி எப்படி இருக்க முடியுமா??

இத்தனை நாள்... வராத சந்தேகம் இன்று திடீரென்று மனதில் உதிக்க.. நிலைக்கொள்ளாது தவித்தாள்.. இதை ரஃபிக்கிடம் கேட்க.. இல்லை.. அவனிடம் இதை பற்றி கேட்க

ஒன்றும் இல்லை... தீர்மானமாக சொல்லியே ஆக வேண்டும் அவளால் அப்படி எல்லாம் ஒருகாலும் வாழ முடியாது.. என்று கட்டுதிட்டமாக தெரிவித்து விட வேண்டும் என்று சொல்லிக்கொண்ட போதுதான் நிம்மதியாக மூச்சு கூட விட முடிந்தது.

அதுவும் இன்று இரவு போன் செய்யும் போதே இதை பற்றி பேசியே தீரவேண்டும் என்று முடிவெடுத்தப் படி அறை வந்து நகைகளை கழட்டி பத்திரபடுத்தி விட்டு... அவளின் நீண்ட முடியை தளர பின்னி.. குளித்து மாற்று புடவைக்கு மாறி படுகையில் விழும் வரை வீட்டு ஆட்கள் அனைவரும் அங்கே ஆளுக்கு ஒரு வேலை செய்ததப்படி இருந்தனர்!

ஒருவழியாக இவர்களை தனியாக விட்டுவிட்டு கிளம்பி சென்ற பின்னும் சங்கி ஏதேதோ சலசலத்தப்படி இருக்க.. ஏய் தூங்குடி என்று இவள் சொல்லிய பின்தான் தூக்க ஆரபித்தாள்.

அப்பாடா என்று நிம்மதி பெரு மூச்சு விட்டப்படி தன் செல் போனை தேடி கண்டு பிடித்து எடுத்து சுட்ச் ஆன் செய்து ரஃபிற்கு போன் செய்த... முதல் ரீங்கிலேயே எடுத்தவனின் குரல் "எங்க இருக்கிறாய்?" என்றது அதிகாரமாக.

"ரும்மில் தான் வேற எங்கே?" என்றாள் இல்லாத பொறுமையை குரல் காட்டி.

"எப்பயும் போல் சங்க மித்ராவும், சிம்பியும் தானே?" என்றது அவன் குரல்.

"சிம்பி இங்கே இருப்பது உங்களுக்கு எப்படி தெரியும்??"

"நீ அர்த்த ராத்தியில் உலா வருவதையே தெரிந்துக்கொண்டு இருக்கும் எனக்கு உன் ரூம்மில் யார் இருப்பாங்கன்னு என்று கூடவா தெரியாது?" என்றவன் "இப்ப நீ என்ன பண்ற உன் ரூம்மில் இருந்து வெளியே வந்து இடது பக்கமாக இருக்கு படியில் இறங்கி அடுத்த தளத்திற்கு வா" என்றான் அதிகாரமாக.

"என்ன விளையாடறிங்களா?? இப்ப போய் கீழே வர சொல்றிங்க??"

"ஏன் நீ என்னோடு ராத்திரியில் தனியா இருந்ததே இல்லயா??" என்றது அவன் குரல்.

அது நேற்றைய சம்பவத்தை மட்டுமாக சொல்ல வில்லை என்று அவனின் பேச்சில் இருந்த அழுத்தத்தில் நன்றாகவே புரிந்தது..

"அது நானாக வந்ததிற்கும்... இப்படி வலுக்கட்டாயமாக அழைப்பதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கு"

"அப்போ நீ மரியாதையாக அழைத்தால் வர மாட்டாய்?? உன் ரூம் கதவை திறந்துக்கொண்டு வந்து தூக்கி போனா தான் நீ வருவாய் அப்படி தானே??"

அவன் ஒரு முடிவு எடுத்து விட்டால் அதில் மாறுவது என்பது ஏது? என்று நினைக்கும் போதே... இல்லையே... இரண்டு வருடம் ஒருத்தியை காக்க வைத்து விட்டு அவளை விட்டு விலகி விட்டானே.. என்று மனது புழுங்கிய போதும்..

பெரு மூச்சு விட்டபடி "வந்து தொலைக்கிறேன்" என்றாள் தன் வெறுப்பை வெளிப்படையாக குரலில் காட்டி.

சிம்பியிடம் கதவை மூட சொல்லிவிட்டு அவன் சொன்ன இடத்திற்கு சென்ற போது அவன் அங்கே நின்று இருப்பதை காண பெரிய அதிர்ச்சியில் எல்லாம் இல்லை.

ஏன் என்றால் இதை விட பயங்கரமாக ஏதோ காத்துக்கொண்டு இருக்கிறது என்று மனது எச்சரித்தால் இதில் திருப்தி பட்டுக்கொண்டு..

"இதுக்கு எதுக்கு போன் பண்ண பிறகு சொல்லனும்.. முதலிலேயே சொல்லி இருக்க வேண்டியது தானே?"

"நயிட் வா என்று சொன்னவுடன் அப்படியே பறந்து அடித்துக்கொண்ணடு வர போகிறாயா??" என்றான் அவளின் மனநிலையை நன்கு உணர்ந்து.

"என்ன விஷயம் ரஃபிக் நேற்று கூட நான் தூங்கவில்லை..."

"நாளைக்கும் கூட தூக்க முடியாது" என்று தலை சரித்து ஒரு மார்கமாக சொல்ல "ஏய்.. நான் கல்யாணத்தை சொன்னேன்

நீ வேற ஏதாவது நினைத்துக்கொண்டால் நான் பொறுப்பு அல்ல" என்றான் கண்கள் ஹாசியத்தில் மின்ன.

அவள் எதுவும் பேசாது முறைத்தப்படி நிற்க..

"சரி வா போகலாம்.." என்று கீழே படிக்களை காட்டியப்படி அவனும் கீழே இறங்கினான்.

"எங்கே?"

எதுவும் பேசாது அவன் படி இறங்க.. பெரு மூச்சோடு இரண்டு படி இடைவேளையில் சென்றவளுக்கு தன் தீர்மானம் நினைவிற்கு வர..

"ரஃபிக்... அத்தை கல்யாணத்திற்காக படிப்பை பாதியில் நிறுத்திவிட்டாங்களாமே.. நிரல்யா சொன்னாள்" என்று ஆரபித்தாள்.

"உன் அத்தையை பற்றி நிரல்யா சொல்லிதான் தெரியனுமா??" என்று கேட்ட போது அந்த கேள்வியிக்கான பொருள் அவளுக்கு விளங்கவில்லை.

"அத்தை மாதிரி என் உலகமே இந்த குடும்பம் தான் என்று நினைக்கமுடியாது அதை விட...." என்று பேசிக்கூட முடிக்க வில்லை.

முன்னே சென்றுக்கொண்டு இருந்தவன் பட்டென்று திரும்பி நின்று அவளை பார்க்க..

எதற்கு வழியை மறைத்துக் கொண்டு நிற்கிறான் என்று தலையை உயர்த்த முற்ப்பட்டவளுக்கு விடைத்த மார்பும்.. முறுக்கேறிய தோள்களும்.. புடைத்த நரம்புகளும் அவள் அடி வயிற்றில் பிரளயத்தை ஏற்படுத்த.. இரண்டு படி வித்தியாத்தால் சரிசமமாக நின்று இருந்தவளுக்கு ஆக்ரோஷத்தை கொப்பளிக்கு அவனின் முகத்தில் நிலைக்க... அதிலும் தீ ஜூவாலையாக கக்கிய கண்களை கண்டவளுக்கு.. காரணம் புரியாவிட்டாலும் அந்த கோப நெருப்பு அவளை சுட்டது!!!

"என் அம்மாவையோ இல்ல என் தம்பியையோ ஒரு வார்த்தை.. ஒரே ஒரு வார்த்தை மரியாதை குறைவாக பேசினால்... மார்க் மை வாட்ஸ்... நீ உதிர்க்கும் ஒவ்வொரு எழுத்திற்கும் கதறி அழும்படி செய்வேன்" என்று கர்ஜித்தான்.

கைகள் ஜில்லிட... வயிற்றில் பயம் புயலாக சுழன்று அடிக்க... வார்த்தைகள் பேச முடியாது தொண்டையை அடைத்த போதும்.. என்றுமே பயத்தை கண்டு பின்ன வாங்கி பழக்கப்படாத மேக மித்ரா...

அவனின் பார்வையை தயங்காமல் ஏற்று நின்றவள்..

"தலை ஆட்டி பொம்மையாக என்னால் இங்க இருக்க முடியாது... அதை உங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றால் இப்பவே இந்த கல்யாணத்தை நிறுத்தி விடுங்கள்" என்றாள் தெளிவாக அதே சமயம் தீர்மானமாகவும்.

"நிறுத்த மாட்டேன் என்று என்னிடம் சவால் விடுகிறாயா???" என்று உணர்ச்சியே இல்லாது வந்தது அந்த குரல்.

தொடரும்...

# அத்தியாயம் 14

"**நி**றுத்த மாட்டேன் என்று என்னிடம் சவால் விடுகிறாயா???" என்று உணர்ச்சியே இல்லாது வந்தது அந்த குரல்.

அந்த குரலில் வெளிப்பட்ட இருக்கத்தை உணர்ந்த அவளுக்கு நெஞ்சில் குளிர் பிறக்க.. தன் மார்பின் குறுக்கே கைகளைக் கட்டி அந்த குளிரை ஓட்ட நினைத்தவளுக்கு அப்போது தான் தன் உடம்பு எத்தனை தூரம் ஜில்லிட்டு போய் இருக்கிறது என்று புரிய... தன் நடுக்கதை அவனிடம் காட்டாதப்படி விரைத்து நின்றவள்.. அவனின் பார்வையை ஒரு நொடி கூட விலக்காது...

"ஒரு செயலை புதிதாகவோ இல்லை.. தன் சக்திக்கு மீறி செய்யும் போதுதான் அதை சவால் என்று சொல்ல வேண்டும்... உங்களுக்கு தான் கல்யாணத்தை நிறுத்துவது ஒன்று புதிது இல்லை... சக்திக்கு மீறிய செயலும் இல்லையே.." என்று வார்த்தையில் கத்தி வீசினாள் மேக மித்ரா.

அவனின் ஆழப் பார்வையாலே அவளின் உள்ளகிடங்கில் இருக்கும் ரகசியத்தை எல்லாம் தெரிந்துக்கொள்பவன் போல் பார்த்தவன்.. "இப்ப என்ன சொல்ல வருகிறாய்? இந்த

கல்யாணம் வேண்டும் என்று சொல்கிறாயா இல்லை வேண்டாம் என்று சொல்கிறாயா?!?" என்றான் அதே மைனஸ் டிகிரியில் சில்லிட்டு இருந்த வெற்று குரலில்.

அந்த குரலின் தன்மை அவள் உள்ளத்தை மட்டும் அல்ல உடலையும் ஒரு உலுக்கு உலுக்க... மடக்கி இருந்த கைகளை அப்படியே தன் இடையோடு அணைத்து அதை அவனுக்கு தெரியாது மறைத்தவள்.. "இப்ப மட்டும் இல்ல ரஃபிக்.. நான் ஆரம்பத்தில் இருந்தே இந்த கல்யாணம் வேண்டாம் என்று தான் சொல்லிக்கொண்டு இருக்கிறேன்.. ஆனா உன் காதில் தான் அது விழவே இல்ல..."

"எனக்கு பிடிக்காத விஷயம் எதையும்.. நான் காதில் வாங்கிக்கொள்ளும் பழக்கம் இல்லை" என்றான் இன்னும் வார்த்தைகள் உரைய..

ஒரு மனிதனால் மனதைக் குத்தி கிழிக்கும் உணர்ச்சி கரமான பேசும் போது இப்படி நிமிடத்திற்கு நிமிடம் தான் பேசும் ஆளிடம் மட்டும் அல்ல பேசும் இடத்தை கூட தன் பேச்சால் உரைய வைக்க முடியும் என்று நேரடியாக உணர்ந்திருக்கா விட்டால் அவள் நம்பி இருக்க மாட்டாள்!!

"அதையே நானும் சொல்கிறேன்... உனக்கு பிடித்த விஷயத்தை மட்டும் தான் சொல்லவே வேண்டும் என்றால்

அதற்கான ஆள் நான் இல்லை.. என்னை விட்டு விடு.." நெஞ்சின் குளிர் தொண்டையை அடைக்க..

"உன் இஷ்டப்படி... இப்பவே இந்த கல்யாணத்தை நிறுத்தி விடுகிறேன்... அப்ப உன் பிரச்சனை எல்லாம் முடிந்து நீ பழயப்படி ஆகிவிடலாம் என்று நினைக்கிறாயா மேக மித்ரா?"

அவன் கூறிய கேள்விக்கு அவளால் பதில் கூற முடியாது அவளின் லாஜிக் மூளை தடுத்தது.

ஆம் என்று தலை அசைக்கவும் முடியாது இல்லை என்று சொல்லவும் முடியாது விக்கித்து போய் நிற்க.

"இந்த அமைதி என் கேள்விக்கான பதில் இல்லை... மேக மித்ரா. உணர்ச்சி வசப்படமால் யோசித்து பேசு... என் கல்யாணம் நடக்காது என்றால் உன் சகோதரியின் கல்யாணம் எப்படி நடக்கும்?" என்றான் மிக மிக அமைதியாக.

நொடிக்கு நொடி அந்த உரை பணியின் தாக்கம் அதிகரித்துக்கொண்டே போக.. இன்னும் எத்தனை நேரம் அதை பொருத்துக்கொண்டு தன்னை ஒன்றும் பாதிக்காததுபோல் உரையாட முடியும்?? என்று மனது அடித்துக்கொள்ள..

அந்த கேள்வியில் இருந்த உண்மை அவள் தலை குப்புற விழ செய்தது... இதை எப்படி மறந்தாள்?!?

"என் குடும்பத்திற்கும்.. இங்கே வந்த உறவினர்களிடமும் இந்த கல்யாணம் ஏன் நின்றது என்று நான் பதில் சொல்ல

வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் என்னால் பதில் சொல்ல முடியும்... ஆனால் உன் சகோதரியின் முகம் பார்த்து இந்த கல்யாணம் உன்னால் நின்றது என்று சொல்ல முடியுமா?" என்றான் அவன் விழி நோக்கி கேட்ட போது அந்த கேள்வியில் இருந்த குரூரம் அவளை குத்தி கிழித்தது.

ரஃபிக் என்று பெயர் தெரியும் முன்பே... அவள் அறிந்தது சித்திற்கும் அவன் அண்ணனிற்கும் இடையேயான பாசத்தை பற்றி தான்!!!

அவர்கள் வீட்டிலும் கார்த்திக்கும் ஆரியாவிற்கும் இடையிலான அண்ணன் தம்பி பாசம் ராமன் லஷ்மனனுக்குமானது... அதுவே ரஃபிக் மற்றும் சித்தின் உறவு... ராமனுக்கும் பரதனுக்குமானது... புரிந்துக்கொள்வதோ.. கிரத்துக்கொள்ளவோ பிரம்பிப்பாக இருக்கும்!!!

அப்படி ஒரு கண் மூடி தனமான பாசத்தைக் கண்டு பிரமித்து இருக்கிறாள் ஆனால்.. அதே பாசம் இன்று அவர்கள் நல்வாழ்விற்கு குறுக்கே நிற்க... ரஃபிக்கிற்காக தன் காதலை துறந்து சங்கியை திருப்பி அனுப்பியவன் சித்!!!

சங்கி படும் நரக வேதனையை பல நூறு மயில்களுக்கு அப்பால் எங்கோ காட்டுக்குள் உட்கார்ந்து இருந்தவள் உணர... பாட்டிக்கு போன் செய்து விசாரித்த போது அவர் சொன்ன

உண்மையை கேட்டு.. உடன் இருந்த டாக்டருக்குக் கூட தெரியாது குமறி... குமுறி.. அழுதவள் தான் மேக மித்ரா!!!

எப்படி சொல்லுவாள்?!? கடந்த இரண்டு வருஷமாக சங்கி சித்தை காதிலிப்பதை வாய் விட்டு சொல்ல வில்லை என்றாலும் கூட இவள் அறிவாள்.. ஒருவழியாக காதல் கை கூடி.. எல்லாம் நல்லா படியாக முடியும் என்று நினைத்து பல கனவு கண்டுக்கொண்டு வானத்தில் மிதக்கும் அவளிடம் எப்படி சொல்லுவாள்?!?

அவன் உருவாக்கிய காட்சி மனதில் ஒரு பிரளயத்தையே உண்டாக்க... அதை காண சகிக்காது கண்களை மூடி திறந்தவள்...

"என் அன்பை உன் தேவைக்கு பயன் படுத்தி கொள்கிறாய் ரஃபிக்" என்ற போது அந்த குரலில் தெரிந்த வலியும் வேதனையும் எதிரில் இருந்தவனால் உணர முடிந்தது.

"இன்னும் எத்தனை நாள் இதை சொல்லிக்காட்டி என் வாயை அடைக்க போகிறாய்?!? உன் கண்ணிற்கு என் உடன் பிறப்பு மட்டும் தான் தெரிகிறாளா? ஏன் உன் உடன் பிறப்பு தெரியவில்லை..?? எப்படி உன்னை போல் ஒருவனிடம் சித்தால் கண் மூடித்தனமாக பாசம் வைக்க முடிகிறது...? மற்றவர்களோட பலவீனத்தை உன் பலமாக பயன்படுத்தும் உன்னை பார்த்தால் பயமாக இல்லை.... பயங்கரமாக இருக்கு.. உன்னோடு வாழும்

வாழ்க்கை முழுவதும் என்னை இப்படி தான் பயன்படுத்திக்கொள்ள போகிறாயா ரஃபிக்?!?" என்று கேட்ட போதில் அதில் கோபவம் இல்ல மித மிஞ்சிய பயமும்... தாங்கொணாத் வலியும் வழிந்தது.

ஒரு நிமிஷம் கூட யோசிக்காது "ம்ம்... தேவைப்பட்டால்" என்று தலை அசைத்தான் ரஃபிக்.

அந்த வார்த்தைகளை கேட்ட மாத்திரத்தில் முதல் முறையாக அவளின் அழுத்தம் உடைய தொடங்க திரை படலமாக கண்ணீர் தேங்க... "காட்.." என்று கலங்கியப்படி தன் வயிற்றை இருக்கி பிடிக்க...

"மாட்டேன் என்று உன்னால் ஒரு சின்ன பொய் சொல் முடியாதா ரஃபிக்...???.. ஏன் உன்னை போல் என்னாலும் என் சுகம், என் விரும்பம் என் சந்தோஷத்தை பற்றி மட்டும் யோசிக்க முடியவில்லை?? என்று உள்ளே நொருங்கிக்கொண்டு இருந்தவளின் வார்த்தைகள் சிதற..

"ஒரு நாள் வரும்... ரஃபிக்... அப்படி நாள் நிச்சயம் வரும்.. அப்ப நான் யாரை பற்றியும் யோசிக்காமல் என்னை பற்றி மட்டும் நினைக்க... வரும்.. அந்த நாள் விரைவில் வர வேண்டும் என்று கடவுளை நான் வேண்டிக்கொள்கிறேன்" என்று சொல்லும் போதே கண்களில் இத்தனை நேரம் அடைக்கி வைத்திருந்த கண்ணீர் மடையை திறக்க.. தன் சக்தி எல்லாம்

வடிந்தது போல் கால்கள் துவள... அப்படியே அந்த படியில் சரிந்து அமர்ந்து தன் முகத்தை மூடி அழுதாள் மேக மித்ரா.

அடுத்த நிமிஷம்.. மைனஸ் டிகிரில் உரைந்த பனி போல் இருகி விரைத்து போய் இருந்தவளின் குளிரை போக்குவது போல் அவனின் கதகதப்பான பரந்த மார்பில் அவளை அணைத்துக்கொள்ள.. பொருக்க முடியாத வலியின் மிகுதியால் தன்னுள்ளே உழன்றவளுக்கு அவனின் அனைப்பை விட்டு விலக கூட தோன்றாது.. அவனின் மார்ப்பிலேயே சாய்ந்து சத்தம் இல்லாமல் கண்ணீர் உகுந்தாள்.

"இன்ஷா அல்லாஹ்... அப்படி ஒரு நாள் வராது... வரவும் விடமாட்டேன்" என்று முனுமுனுத்தப்படி முகம் புதைத்திருந்த அவளின் கூந்தலின் லேசாக முத்தமிட்டான் நவாப் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான்!!!

கடந்த மூன்று வாரமாக தன் வாழ்க்கையில் நடந்த எத்தனையோ விஷயங்களை வாயை மூடி பல்லை கடித்து, அமைதியாகவும், பொருமையாகவும் சென்றுக்கொண்டு இருந்தவளுக்கு அவனின் அழுத்தமாக பேச்சு ... பிரேக்கிங் பாயின்டாக அமைய... நிகழ்ந்த அனர்த்தங்கள் எல்லாம் வரிசை வரிசையாக வந்து நிற்க.. பொருக்க முடியாது அப்படியே இன்று வரை நெஞ்சில் இருந்த குமுறலுக்கு எல்லாம் சேர்ந்து வைத்து

அவன் மார்பில் முகம் புதைத்து அதற்கு மேலும் தாங்க முடியாது உடைந்து அழுதாள்!!!

ஐந்து நிமிடம் நிற்காமல் அழுதவள்... பின் மெல்ல புதைத்திருந்த அவன் மார்பில் இருந்த தலையை நிமிர்த்தியவள்.. வீங்கி இருந்த விழிகளில் கண்ணீர் திரண்டு நிற்க... "அன்று என்னை வெளியே தள்ளி கதவை முகத்தில் அறைந்து சாத்திய போதே ஊருக்கு கிளம்பி இருக்க வேண்டும்... இல்ல ரஃபிக்???" என்ற தொண்டை கமற.. தேங்கி இருந்த கண்ணீர் கீழே வழியக் கேட்டவள்.. "போகாமல் மீண்டும் உள்ளே வந்தது... எவ்வளவு பெரிய தப்பு என்று இப்போ.. புரிகிறது ரஃபிக்.." என்று மீண்டும் வெள்ளமாய் திரண்ட நீரை பகீரதப் பிரயத்தனப்பட்டு நிறுத்தியவள் அவன் கையில் இருந்த தன்னை பியித்து எடுத்துக்கொண்டு கால்கள் நடுங்க எழுந்து எதுவும் பேசாது.. தன் அறைக்கு திரும்பி நடந்தாள்.

படி திரும்பு வரை அவள் போவதையே பார்த்தவனின் கண்கள் முதல் முறையாக இரவில் இடியுடன் கூடிய புயல் அடிக்கும் வானத்தை போல் அத்தனை வகையான உணர்ச்சிகள் வந்து போக.. "நீ வாழ்க்கையில் பண்ண ரொம்ப ரொம்ப சரியான காரியம் பிடிவாதமாக உள்ளே வந்தது தான்!!!" என்று முனுமுனுப்போடு தன் வாய்க்குள் சொல்லியவன் கண்களை இருக்க மூடினான்.

அப்படியே முழங்காலில் கைகளை ஊன்றி தலையை தொங்கவிட்டவனின் கண்களுக்கு தன் மார்பில் அவள் அழுத கண்ணீரின் கறையை கண் சிமிட்டாமல் ஒரு நொடி வெறித்து பார்த்தவன்.. பின் தீ சுட்டது போல் அவசரமாக எழுந்து வாழ்க்கையில் முதல் முறையாக பிரசுரிக்க முடியாத வார்த்தைகளை பயன் படுத்தியப்படி வரித்தியாக தலை முடியை கொதியவன்... பின் அங்கே நின்றிருந்த அழகான பீங்கான் சிலையை ஓங்கி ஒரு குத்து விட.. இவனின் பலத்தை தாங்காது அந்த இருநூறு வருட பழமையான பீங்கான் சுக்கல் சுக்கலாக நொருங்கி சிதற... இன்னமும் தன்னுள் பொங்கிய உணர்ச்சிகளை தனியாது கரைபுரள.. அவன் அணிந்திருந்த சட்டை பட்டன்களை கழற்றியப்படியே மூன்று படிகளால் கீழே இறங்கினான் நவாப் மிர் ரஃபிக் அலவுமர் அலிகான்!!!

தத்தம் பிரச்சனையில் சுழன்று இருந்தவர்களை அங்கே நின்று இருந்த இருவிழிகள் கவனித்ததை பார்க்க தவறினார்கள்!!!

அந்த விழிகள் அப்படியே போகாது... மெல்ல கீழே இறங்கி வந்து உடைந்திருந்த பீங்கான் துண்டங்களை பார்த்தது மட்டும் அல்லாது... அங்கே சொட்டு சொட்டாக வழிந்து கிடந்த ரஃபிக்கின் ரத்த துளிகளையும் கண்டு யோசனையில் முழுகியது!!!

கதவை திறந்த சிம்பியை திமிர்ந்து கூட பார்க்காது உள்ளே போனவள் அப்படியே தன் மெத்தையில் விழுந்து சுருண்டு படுத்தாள்... அமைதியாக அவள் அருகில் வந்த சிம்பி அடிப்பட்டு கதறி அழும் குழந்தையை மார்பில் அனைத்துக்கொள்ளும் அன்னையை போல் தன் மார்பில் புதைத்துக்கொள்ள.. எதுவும் பேசாது கண்களை மூடி படுத்து கிடந்தவளுக்கு நூறாவது முறையாக நேரத்தை திரும்ப முடியுமானால் அவள்.... சர்வத்தையும் மாற்றி அமைத்திருப்பாள். தன்னையே திட்டிக்கொண்டு கண்களை நிறைத்த நிகழ்வுகளை மூடி போட்டு நிறுத்த முயல இவளின் முயற்சிகளுக்கு எதுவும் அடங்காது அவனை மீண்டும் சந்தித்த நிகழ்வு கண் முன் சுழன்றது.

தொடரும்...

# அத்தியாயம் 15

**கோ**ல் போடும் இடத்தில் ஒருத்தி வந்து நின்று கேம்மை கெடுத்துவிட்டால் என்பதற்காக அந்த பிருத்திவி ராஜா தேசத் துரோகியை நாடு கடத்துவது போல் துரத்தி வெளியே அனுப்பினான்?? என்று மனதில் வெஞ் சினம் கொழுந்துவிட்டு கப கபவென்று எரிய.. இதை இப்படியே விடக் கூடாது… அப்படி விட்டால் அவள் எப்படி சச்சிதேவாக இருக்க முடியும்?!?

நாட் நாட் செவன் ஜேம்ஸ் பாண்டின் ரசிகையாக இருக்காலமே தவிர.. ஆனால் இந்த மாதிரி சூழ்நிலையில் எந்த ஜேம்ஸ் பாண்டாவது வானத்தை கிழித்துக்கொண்டு குதிப்பார்கள் என்று மூளை சலவை செய்து வளர்க்கவில்லை என்பதால் எந்த ஹிரோவும் தன்னை வந்து காப்பாற்றுவான் என்று ஏங்கி எதிர்பார்த்து காத்து நிற்காமல் அடுத்து என்ன செய்வது என்று நடந்தப்படி தீவிரமாக யோசிக்க தொடங்கினாள் மேக மித்ரா.

உள்ளே பற்றி எரிந்த கோபத் தீ அவளை ஒரு இடத்தில் நிற்க விடாது அங்கேயும் இங்கேயும் நடக்க வைக்க.. அவசரமாக நேற்று போட்டுக்கொண்டு வந்தது தன் ஜீன்ஸ் தானே என்று தன்னை தானே பார்த்துக்கொண்டவள் பின்

அவசரமாக தன் பேன்டில் கையை விட.. தான் எதிர்பார்த்த வஸ்து அதில் இருத்தமைக் கண்டு கண்கள் ஆனந்த கூத்தாடியது.

அதற்கு அடுத்த பத்தே நிமிஷம் மூளையில் திட்டம் உருவாகி... அதை தன் திட்டப்படி நிறைவேற்றி... அடுத்த அரை மணி நேரத்தில் மீண்டும் அதே கிளப்பிற்கு உள்ளே கால் வைத்தாள்.

முதல் முறையாக லண்டன் மண்ணில் கால் வைக்கும் போது... அடிமை படுத்த பட்ட நாடிலேயே இன்று சுகந்திரமாக கால் பதித்த அந்த நொடி நம்மையும் அறியாது நம்முள்ளே புரியாத புளங்காயித்தையும், கர்வரத்தையும் தோற்று விக்குமே இதுக்கும் பெரிய சாதனை என்று எதுவும் இருக்காது.. ஆனாலும் வார்த்தைகளால் விவரிக்க அந்த உணர்வு... வருமே... அது போல் ஏனோ மனதில் ஒரு கர்வம் வருவதை அவளால் தவிர்க்க முடியவில்லை.

நேராக அவளின் அறை சென்று தன் உடையை மாற்றி, தலை வாரிக்கொண்டு சேவையில் ஈடுப்பட்டிருந்தது டாக்டர்கள் இருக்கும் இடம் அறிந்து சென்று சேர்ந்துக்கொண்டாள்.

மூன்று குழுவாக டாக்டர்கள் பிரிந்து வேலை செய்துக்கொண்டு இருந்ததால்.. இவளை காணாது யாரும் தேடவில்லை என்பது வசதியாக போக... தனக்கு

அடிப்பட்டதையோ இல்லை வெளியே தள்ளி விடப்பட்டதை பற்றியோ எதுவும் வாயை திறக்காது நேராக அவர்களுடன் கலந்துக்கொண்டாள்!!!

அங்கு இருந்த குதிரைகளின் அளவை பார்த்தவளுக்கு பத்து நாட்களில் இது முடித்து விட முடியுமா?? என்று மனதில் கேள்வி எழ... எத்தனை நேரம் வீண் செய்து விட்டோம் என்று மனதில் குறுகுறுப்பு எழ.. விட்டதற்குமா சேர்த்து மற்ற டாக்டர்கள் சென்ற பிறகும் கூட வேலை செய்துக்கொண்டு இருந்தாள்.

ஆர்வமாக வேலையில் முழ்கி இருந்த போதும் கூட கண்கள் தானாக ஏதாவது கருப்பு குதிரை காண நேரந்தால் இது அந்த பிருத்திவி ராஜ் ஓட்டின குதிரையாக இருக்குமோ என்ற கேள்வி எழ.. அதை கண்கள் தேடியதை தவிர்க்க முடியவில்லை.

ஒருவழியாக அவள் அன்றைய வேலையை முடித்து பன்னிரண்டு மணி வரை அங்கேயே இருந்து சில பேப்பர் வொர்க்ஸ் முடிந்து விட்டு அறைக்கு வந்து படுக்கையில் விழுந்தவளுக்கு மனதில் வெற்றி களிப்பில் ஆனந்த கூத்தாடியது.

முகாமில் இருக்கும் பல குதிரைகள் நடக்க விருக்கும் போலோ போட்டியில் பங்குக்கொள்ள இருப்பதால்... காலை ஏழு

மணிக்கு முகாமை ஆரம்பிக்க ஏற்பாடாகி இருந்ததையோ.. மதியத்திற்கு பின்னர் ஆட்டத்தை பார்ப்பதில் ஆர்வம் உள்ளவர்கள் ஆட்டத்தையோ... இல்ல ஊர் சுற்றி பார்க்க வரும்பும் டாக்டர்கள் சிட்டிக்குள் செல்ல திட்டம் இருந்ததையோ அவள் அறியவில்லை!!!

பார்த்தாயா பிருத்திவி ராஜ்.. நீ என்னை வெளியே தள்ளினாய்.. ஆனா நான் இங்கே என் படுக்கை அறையில் நிம்மதியாக தூங்குகிறேன் என்று இளக்காரமாக நினைத்தப்படி... புரண்டு படுத்தவளுக்கு அவனின் முகம் ஏனோ கண்ணில் வந்து நின்ற வண்ணம் இருக்க... சிம்பி இருந்திருந்தால் நல்லா இருக்குமே என்று மன ஏங்கியப்பிடி வெகு சிரமப்பட்டு தூங்கினாள்.

ஒன்பது மணிக்கு வரும் டாக்டர்கள் தனக்கு முன்னால் வந்து மாங்கு மாங்கு என்று வேலை பார்க்க.. ஆச்சரியத்துடன் பார்த்துவிட்டு தன் வேலையில் முழ்கினாள்.

மதியம் சாப்பிட்டு விட்டு எல்லோரும் புறம்பட.. எங்கே என்று கேட்டவளை "என்னம்மா மறந்துவிட்டதா இன்று மேட்ச் இருக்கு சொல்லி ஷாப்பிங் போகலாம் என்று நேற்று ப்ளான் பண்ணோமே?" என்றாள் டாக்டர் ராமா.

"ஏய்.. நான் வரவில்லை" என்று நிலைமை சமாளித்து பதில் அளித்துக்கொண்டும் இருக்கும் போதுதான் அந்த பிருத்திவி

ராஜாவுடைய கருப்பு குதிரை தனியாக ஒரு கொட்டகையில் அடைக்கப்பட்டு நிற்பதைக் கண்டாள்!!!

குதிரை சவாரி செய்வதில் அலாதி விருப்பம் கொண்டவளுக்கு அதை பார்த்தவுடன் துள்ளி குதித்துக்கொண்டு அந்த கொட்டகையை நெருங்க... இவள் அருகில் வருவதை கவனித்த அந்த கருப்பு குதிரை... தன் மூக்கால் உஷ்ணக் காற்றை வெளியிட்டு... உரக்க கனைத்தப்படி.. திமிரிக்கொண்டு எகிரி குதித்து... இவளை ஒரு அலட்சியத்துடன் பார்த்தது!!!

அதற்குள் அவளிடத்திற்கு ஓடி வந்த டாக்டர்... "அந்த குதிரையிடம் போகாதீங்க அது டெம்பரமன்டல் ஹார்ஸ்.. யாருக்கும் கட்டு படாதாம் அதனுடைய எஜமானனைத் தவிர.. இன்று மேட்ச் இருப்பதால் அதை டிஷ்டர்ப் பண்ண போக வேண்டாம்.." என்று விளக்கினார்.

"அதோடு பெயர் என்ன?"

"செத்தக்"

"செத்தக்???"என்று அழைத்தப்படி அதை ஆச்சரியமாக பார்த்தாள்.

காதை உயர்த்தி அவளின் அழைப்பை கேட்ட அந்த குதிரை திரும்பி கூட பார்க்காது விரைப்பாக நின்றது!!!

அது நின்ற விதத்திலேயே அதற்கு தன்னை நெருங்குவது பிடிக்கவில்லை என்று சொல்லாமல் சொல்ல... பிருத்திவி ராஜீம்

அவனுடைய குதிரையும் எப்படி ஒரே மாதிரி இருக்காங்க என்ற நினைப்பு சிரிப்பு வந்த போதும் எதுவும் சொல்லாது உன்னை இரு.. இரு கவனித்துக்கொள்கிறேன் என்று மனதில் நினைத்தப்படி செல்ல.. பெயர் செல்லி அழைத்தப்போது கூட திரும்பி பார்க்காத அந்த செத்தக்.. இப்ப அவளை பார்த்து "உன்னால் ஆனதை பார்" என்று சொல்லும் விதமாக அதன் வாயை இளித்து சத்தமாக மூச்சு விட்டது!!!

குதிரைக்காரனுக்கு தான் திமிர் என்றால் குதிரைக்கு அதை விட அதிகமாக தான் இருக்கு என்று நினைத்தப்படி அங்கிருந்து நகர்ந்தாள்.

அன்று முன் மாலை பொழுதில் டாக்டர் சொன்னப்படி கிளம்பி வெளியே போய் விட.. அங்கே தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த ஆபிஸ் ரூம்மிற்கு சென்றவளுக்கு... ஆர்ப்பரிக்கும் கூட்டத்தின் குரல் காதில் விழுந்தது.

வேகமாக திரும்பி செத்தக் கட்டி இருந்த இடத்தை தூரத்தில் இருந்து பார்த்தவளுக்கு அதின் கொட்டகைக் காலியாக இருக்க... மனம் படப்படவென்று அடித்துக்கொண்டது!!!

அவள் அங்கே போவது சரியா என்று யோசித்தவளுக்கு செத்தக் விளையாடுவதை பார்க்க வேண்டும் என்ற பேர் ஆவலே அவளை அந்த இடத்திற்கு இழுத்து சென்றது.

அங்கே சென்ற பின்னர் தான்... அன்று இருந்த கூட்டத்தை விட இன்று அலைபோதும் கூட்டத்தை பார்த்து விட்டு எப்படியும் இந்த கூட்டதில் அவனை கண்டு பிடிக்க முடியாது என்று நம்பிக்கை வர சற்றே கூட்டம் இருந்த பகுதியாக அதே சமயம் மறைவாகவும் தோன்றி ஒரு இடத்தை பார்த்து கண்டு பிடித்து முதல் வேலையாக அமர்ந்தாள்!!!

போலோ விளையாட்டை பற்றி எந்த அறிவு இல்லை என்றாலும் கூட அந்த குதிரையின் வீர சாகத்திற்காகவே அங்கே வந்த அமர்ந்தவளின் ஆசையை பூர்த்தி செய்யும் விதமாக கம்பீரமாக ஆடியது அந்த குதிரை. அந்த குதிரையே வேடிக்கை பார்த்தவளின் கண்கள் தன்னை மறந்து விழிகளை உயர்த்தி அந்த குதிரையை மிக லாவகமாக கையாண்டவனை பார்க்க...

அவனுக்கும் அவளுக்குமான தூரத்தில் வெறும் கண்களால் அமர்ந்திருப்பவர்களை இனம் கண்டு பிடிக்க முடியுமா என்பதே சந்தேகமாக இருக்க.. ஆனால் அவனின் பார்வையோ அர்ஜூனனின் அம்பாய் அவளை குத்தி நின்றதை கண்டவளுக்கு ஏனோ ஜூரம் அடிப்பது போல் உணர.. தன்னையும் அறியாது தன் கைகள் அவள் நெற்றியையும், கழுத்தையும் தொட்டு பார்த்தது!!!

பிரிக்கமுடியாது பின்னி இருந்த கிடந்த பார்வையை பிரித்தவளுக்கு அடுத்த அதிர்ச்சியாக ரஃபிக் குதிரையில்

இருந்து யாரும் எதிர்பார்காத நொடி அப்படியே சரிந்து தலை குப்புற கீழே விழுந்தான்!!!

பாலை அடிக்க போகிறான் என்று நினைத்துக்கொண்டு இருந்த கூட்டம்... அவன் மண் தரையை தொட்டும் முன் வரை "ஹா.." என்று கத்திக்கொண்டு இருந்தவர்கள் விழுந்து விட்டான் என்று புரிந்த அடுந்த நொடி... உட்கார்ந்திருந்த பார்வையார்கள் அதிரிச்சியில் என்ன நடக்குமோ என்று பீதியில் எழுந்து நிற்க... அந்த கூட்டத்தில் இலை விழுந்தாலும் சத்தம் கேட்கும் படியான அதிபயங்கர மௌனம் நிலயது.

அவன் விழும் அந்த காட்சியை ஸ்லோ மொஷனில் கண்டவளுக்கு மூளையில் ஷாட் சர்கியுட் ஆனது போல் ஸ்தம்பித்து நிற்க.. கூட்டத்தோடு எழுந்து நின்றவள் எல்லோரும் விழுந்தவனை வெறித்து பார்ப்பது போல் பார்க்கவில்லை..

அதற்கு பதில் ஏன் எதற்கு என்று யோசிக்கவும் தோன்றாது புயல் வேகத்தில் மருந்தவ மனையை நோக்கி பறந்து சென்றாள்!!

ஆறு அடிக்கும் மேலாக உயரத்தில் இருந்து விழுந்தவனின் மார்பிற்கும் தோள் பட்டைக்கும் இடையில் கல் ஆழமாக குத்தி ரத்தம் குபு குபுவென்று ரத்தம் பெருக்கெடுத்து சட்டயை நனைத்திருக்க.. இது போல் விபத்து நிகழ்ந்தால் முதல் உதவி செய்ய காத்திருந்தவர்கள் இவனை சூழ்ந்துக்கொள்ள.... அடுத்த

ஐந்தாவது நிமிடம் அவனை அழைத்துக்கொண்டு மருத்துவ மனைக்கு விரைந்தனர்.

உள்ளே நுழைந்தவளை யாரோ கையை நீட்டி தடுக்க.. தலை உயர்த்தி முகத்தை கூட பாராது...

"நான் டாக்டர்" என்று எரிந்து விழுந்தவள் அப்படியே தன் கழுத்தில் கிடந்த ஐ.டி கார்ட்டை ஆவேசமாக கழட்டி நீட்டி இருந்த அவனை கையில் விசிறி விட்டு.. புயல் வேகத்தில் உள்ளே சென்றவளுக்கு சற்றே உயரமான கட்டிலில் படுக்கையில் உட்கார்ந்து இருப்பவனின் சட்டை முழுவதும் ரத்தக்கடலில் நனைந்திருக்க... கால்கள் உரைய அப்படியே நின்றவளின் கண்கள் ஒரு முறை மூடி திறக்க... மெல்ல கண்களை உயர்த்தி பார்த்தவளின் கண்களை எந்த வித உணர்ச்சிகளையும் வெளிக்காட்டாது அவளை நோக்கினான் நவாப் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான்!!!

அடிப்பட்டு ரத்தம் வெள்ளத்தில் மிதந்தால் கூட எப்படி இப்படி அமர்ந்திருக்க முடிகிறதே என்று அவனுக்குமாக சேர்ந்து நெஞ்சு பதர... இவளை கண்டுக்கொண்டான் என்று கூட அவன் முகக் குறிப்பில் இருந்து அறிய முடியவில்லை.

பெரும் மூச்சு விட்டு அங்கே நின்ற டீயூட்டி டாக்டர் பக்கம் திரும்பினாள்.

புதிதாக அன்று தான் வேலைக்கு சேர்ந்திருக்கும் அந்த டாக்டருக்கு அது நவாப் என்று தெரிந்தவுடன் வேர்த்து விருவிருத்து... நடுங்கிக்கொண்டு இருக்க.. இவன் தையல் போடுவதற்கு உடம்பில் இருக்கும் மொத்த ரத்தமும் வடிந்துவிடும் என்று அஞ்சியவள்..

"நானும் டாக்டர் தான்.. உங்களுக்கு உதவலாமே..." என்றப்படி அவன் அருகில் சென்றாள்.

கண்ணில் ஒரு நிம்மதி பரவ.. நடந்த விஷயத்தை சொல்ல.. தலை ஆட்டிப்படி ரஃபிக் அருகில் சென்றவளுக்கு கிழிந்த சட்டையின் வழியாக காயத்தின் ஆழத்தை பார்த்தவுடன் எப்படி வலி இருக்கும் என்று புரிந்தது.

டாக்டர் நீங்க சட்டையை கட் பண்ணுங்களேன் நான் தையல் போடுகிறேன் என்று சொல்லியப்படி அவன் அருகில் வந்தவள் "அனத்திஸ்சியா" என்று ஆரம்பிக்கும் போதே..

"வேண்டாம்... என்று சொல்லி நேரடியாக தையல் போட சொல்லி விட்டார் நவாப்" என்றான் திக்கி தடுமாறி..

இருந்த பதட்டத்தில் அவனை நவாப் என்று நடுக்கத்துடன் பேசியது காதில் விழாது போனுது!!

"இதில் ஈகோ வேறா" என்று மனதிற்குள் திட்டியப்படி அவள் மடமடவென்று தன் வேலையை தொடங்க..

ஒரு முறை கூட அவன் அவளிடம் வாயை திறந்து எப்படி பேசவில்லையோ அதே மாதிரி அவளை தெரிந்த மாதிரியும் காட்டவுவில்லை.. ஆனால் ஒரு நொடி கூட அவளை விட்டு அகலாது அவளை வெறித்து பார்த்தப்படியே இருந்தது அவனின் பார்வை.

மற்ற சமயம் எப்படி சமாளித்திருப்பானோ என்னவோ ஆனால் கையில் வேலை இருந்ததால் அவன் பார்வையை முடிந்தவரை தவிர்த்து வேலையில் முழுமனதாக ஈடுப்பட்டாள்.

ஒரு வழியாக தன் வேலை எல்லாம் முடித்துவிட்டு நிமிர்ந்தவளின் பார்வை சிறை பிடிக்க.. ஏன்டா இப்படி பார்க்கிறாய் எதுவாக இருந்தாலும் கேட்டு தொலைக்க வேண்டியதானே என்று நினைத்தப்படி இருந்தவளுக்கு திடிரென்று மேலே இருந்து கீழே விழுந்தானே என்று மனது பிசைய..

"நான் யார் என்று தெரிகிறதா..??" என்று கேட்க ஆரம்பித்தவள் பின் தலையை ஆட்டி "இல்ல... இது எத்தனை?" என்றாள் தன் கைகளை அவன் முகத்தின் முன்னே நீட்டி.

இவளிடம் எதுவும் பேசாது பக்கத்தில் நின்றுக்கொண்டு இருந்த டாக்டரை பார்த்து வெளியே போ என்னும் படியாக தலையை ஆட்ட..

அந்த டாக்டரோ விட்டால் போதும் என்று தலை தெறிக்க ஓடினான்.

அவளின் கேள்விக்கு பதில் ஏதும் சொல்லாது அவளை அலட்ச்சியத்துடன் பார்த்து வைக்க..

அவன் என்னமோ "டாண் டாண்" என்று பதில் சொன்னது போல்... "குட்.." என்று தலை ஆட்டியவள்...

பின் திரும்பி அங்கிருந்த ஊசியை கையில் எடுத்து.. "தர்மப்படி பார்த்தால் இது விச ஊசியாத் தான் இருக்கனும் ஆனா...டி.டி போடுகிறேன் ஏன்னா.. அவர் நாண நன்னயஞ் செய்து விடல்... எங்க ஐயன் வள்ளுவர் ஒரு குறளில் சொல்லுகிறார்.. அப்படின்னா..." என்று பரிமேழகருக்கு அடுத்தப்படியாக அவள் விளக்க வாயை திறக்க...

"தப்பு" என்று தலையை மறுப்பாக அசைத்தான் ரஃபிக்.

"தப்பா? எது??" என்றாள் அவனுக்கு ஊசியை போட்டப்படி.

"தப்பான குறள்"

"எனக்கே வா?" என்று அவனை இளக்காரமாக பார்த்தவள்.. "ஓ!!! தமக்கு இன்னா பிற்பகல் தாமே வரும்" அதை சொல்லி இருக்க வேண்டுமோ??" என்று வேண்டும் என்றே பாதி குறளை சொல்லி விட்டு நீ என்னை அடித்தாய் இல்லை இப்ப உனக்கே வந்திருக்கு பார் என்னும் விதமாக அவனை பார்த்தாள்.

அவள் சொல்லியதையும் சொல்லாமல் விட்டதையும் புரிந்துக்கொண்டவன் போல் அவளை ஒரு முறை ஆழமாக பார்த்தவன் இல்லை என்பது போல் தலை அசைத்தான்.

"அப்படின்னா சரியான குறள் சொல்லுங்க பார்ப்போம்" என்று சவால் விட்டால் மங்கி தான் யாரிடம் சவால் விடுகிறோம் என்று தெரியாது..

"செய்ந்நன்றி அறிதல்" ரத்தின சுருக்கமாக வந்தது பதில்.

ஒரு குறள் கேட்டவளிடம் ஒரு அதிகாரத்தையே பதிலாக சொன்னான் அந்த புண்ணியவான்!!!

அவன் செய்த உதவிக்கு நன்றிகடன் தான் செய்திருக்கிறாய் என்னும் விதமாக அவளுக்கு பதில் சொல்ல.. அவன் இத்தனை தூரம் குறள் தெரிந்திருக்கும் என்று வரை கூட யோசிக்காது திகைத்து விழித்து வாயை அடைத்து போய் நின்றாள் மங்கி!!!

"உலகமே உங்கள் ஒருத்தனுக்காக இயங்குகிறது என்று நினைக்கும் உங்களின் ஈகோவை பார்த்து ஆச்சரியமாக இருக்கு...." என்று அவள் பேசிக்கொண்டு இருக்கும் போதே..

"நீ சொன்ன இரண்டு குறளும் துறவறவியலில் வருகிறது.. நான் சொன்னது இல்லறவியலில் வருகிறது.." என்று எந்த குறள் எந்த இயலில் வருகிறது என்பதை கூட தொடர்புப்படுத்தி... இங்கே யாரும் துறவறம் மேற்கொள்ளவில்லை அதனால் நான்

சொன்னது தான் பொருந்தும் என்று பேசாமல் பேசும் அவனின் பேசு திறனைக் கண்டு மதி கலங்க அவனை பார்த்தாள்!!!

பார்த்ததை எல்லாம் நியாபகத்தில வைத்திருக்கும் நிரல்யாவும் அதை பேச்சு வாக்கில் பேச ஒன்றோடு ஒன்று தொடர்புப்படுத்தி பேச வராது!!!

ஒரு வரியில் பேசுபவனுக்கு... ஒன்னே முக்கால் வரியில் உலகிற்கே கருத்த சொன்ன திருக்குறள் எப்படி தெரியாமல் இருக்கும்?? என்று மனதில் எண்ணம் தோன்றி சமய சந்தர்ப்பம் இல்லாமல் சிரிக்கவும் அவனை பாராட்டவும் கூட தோன்றியது!!!

அவளின் தெறித்து விடும்படியாக பார்ப்பவளை பற்றி எந்த அக்கரையும் இல்லாது அவன் எழ முயற்சிக்கும் போதே யாரோ மெல்ல நடந்து வரும் காலடி சத்தம் கேட்க இவள் திரும்ப... அங்க ஒரு புது முக அடுத்த பவுன்சரின் வரவை கண்டாள் அதுவும் கையில் சட்டையோடு!!!

"நான் உள்ளே வந்தது உங்களுக்கு நன்றி கடனை திருப்பி செலுத்த இல்ல... பிருத்திவி ராஜ்.."

"பிருத்திவிராஜ்??" என்று பீட்டர் இவளிடம் கேட்டப்படி ரஃபிக்கை பார்த்தான்.

"ம்ம்..." பதிலாக ஆட்டியவள்.. இவன் புறம் திரும்பி "உங்களுக்கு நன்றி கடன் பட்டதற்கு வந்தது போல் தெரியவவில்லை... மிஸ்டர் பிருத்திவி ராஜ் தி கிரேட் தலை

குப்புற கீழே விழுவதை பார்க்கத் தான் என்று தோன்றுகிறது.. இப்ப எங்கப் போறீங்க??.. தலை அடிப்பட்டு உங்க ஆட்டத்தை கெடுத்து விட்டேன் என்று உங்க பவுன்சர்களை விட்டே வெளியே தள்ளினிங்களே இப்ப உங்களால் கேம் தடைப்பட்டத்தே அதற்கு யார் வெளியே தள்ளுவது?" என்று திமிராக கேட்டாள் மேக மித்ரா.

"நீ..நீங்க தான் அன்று அடிப்பட்ட பெண்ணா டாக்டர்??" என்று அந்த பீட்டர் கேட்டான்.

"ம்.." என்று தலை ஆட்டியவள்.

"கீழே விழுந்ததால் வேற எதாவது டெஸ்ட எடுக்கனுமா..??" என்று பீட்டர் இழுக்கும் போது..

"அவசியம் இல்லை.. கையை காட்டி இது எத்தனை என்று கேட்டனே.. தெளிவாக எதுவும் பேசாமல் நல்லா முறைத்தார்.. சொ.. ஹி இஸ் குட்" என்றாள் விளக்கமாக.

இந்த விளக்கத்தை கேட்டு பீட்டருக்கு முட்டிக்கொண்டு சிரிப்பு வர.. சிரம்பட்டு நவாப்பை பார்த்து அடக்கியவன்... பேச்சை மாற்ற வேண்டுமே என்று...

"உள்ளே எப்படி வந்தீங்க...??"

"ஏன்... ??"

"உங்களோட டிக்கட்ஸ் எல்லாம் கேன்சல் பண்ணியாச்சு என்று சொல்லிய பிறகும் நீங்க வந்தது குற்றமாகும் தெரியுமா??"

என்றான் அந்த பீட்டர் இத்தனை நேரம் இருந்த இலகு தன்மை மாற..

"நான் வாங்காத டிக்கட்டை எப்படி கேன்சல் பண்ண முடியும்?" என்று கேட்டாள் அந்த பீட்டரிடம்.

"அப்ப எப்படி உள்ளே வந்தீங்க..??" என்றான் புரியாது..

"ஆறு மாதமாக வா.. வா என்று வருந்தி அழைத்தன் பேரில் தான் இங்கே வந்திருக்கோம். எப்படி என்று புரியவில்லை என்றால் கொஞ்சம் மூளையை கசக்கி பிழிந்து யோசிங்க... நிறைய பேஷன்ட் அங்க வெயிட்டிங்.." என்று திரும்ப..

"என்ன பேஷன்ட்டா??" என்றப்படி காலியா இருந்த மருந்துவ மனையை பார்த்தான் பீட்டர்.

"இவரை மாதிரி இரண்டு கால் ஜீவன்களை சுமக்கும் நான்கு கால் ஜீவனை பார்க்கும் டாக்டர்" என்று நிறுத்தி நிதானமாக சொல்ல.

"வாட்?? நீங்க வெட்னரி டாக்டரா??" என்று கேட்க பீட்டர் அலறியப்படி கேட்க.

பீட்டர் எடுத்து வந்திருந்த சட்டை அணிந்து பட்டன் போட்டப்படி இதை கேட்டவன் சட்டென்று தலையை நிமிர்த்த... முகத்தில் சிரிப்பு போல் வந்து விட்டு போனதை.. அங்கே இருந்த இருவருமே கவனிக்கவில்லை..

"அப்ப நீங்க எப்படி??" என்று அவசரமாக பீட்டர் ரஃபிக்கை பார்த்தான்.. இந்த மாதிரி சூழநிலையை அவன் கடந்து வந்ததே இல்லை என்பதால் என்ன பேசுவது என்பது தெரியாது திருதிருவென்று விழித்தப்படி.

"இவரை விட மோசமான பேஷன்ட்டுகளை எல்லாம் வைத்தியம் பார்த்திருக்கேன்.. என்பதால் சமாளிப்பது அவ்வளவு ஒன்றும் கஷ்டமாக தெரியவில்லை" என்று அமர்த்தலா மொழிந்தவள்..

"கேம்பிற்கு வந்தால் உடனே உங்கள் மேட்சை தான் பார்க்க வந்தேன்.. உங்களை பின்னாடியே துரத்திக்கொண்டு ஓடி வந்தேன்னு என்ற பில்டப் வேற..." என்று முனுமுனுப்பத்தப்படி திரும்பியவள் பின் "இன்னும் இங்க இருக்க போகும் எட்டு நாளும் ஒருத்தரை ஒருத்தர் பார்க்காமல் இருந்தால் ரொம்ப நல்லது" என்று அவனிடம் சொல்லிவிட்டு அமைதியாக அவள் நடந்து செல்ல...

இரண்டு அடி தான் எடுத்து வைத்திருப்பான் அதற்குள் அவளை தாண்டிக்கொண்டு பீட்டர் அறையை விட்டு வெளியேற..

"நீ எதுக்காக இங்க வந்தாய் என்ற உண்மை எனக்கு தெரிந்தாக வேண்டும்" என்று கேள்வியாக கேட்வில்லை...

ஆணையாக கேட்டான்... இல்லை அப்படிதான் அவள் காதல் காதில் விழுந்தது.

சட்டென்று திரும்பியவளுக்கு அரை மணி நேரத்திற்கு முன்னாடி ரத்த வெள்ளத்தில் மிதந்துக்கிடந்தவன் இவன் என்று சொன்னால் நம்ப கூட முடியவில்லை...

"நான் உண்மையை தான் சொல்கிறேன்..."

"அதை நான் முடிவு செய்கிறேன்"

"முடிவு செய்ய நீங்க யார்? அதற்கான அவசியம் தான் என்ன?"

என் அவசியத்தை பற்றி நான் உன்னிடம் கூற அவசியம் இல்லை என்னும் விதமாக அவன் தோளை குலுக்க..

அவனுக்கு அடிப்பட்டு விட்டதே என்பதை நினைத்துக்கொண்டு இருந்தவளுக்கு மறந்திருந்த கோபத்தை துளிக்க செய்தது அவனுடைய அந்த செயல்.

எதுவும் பேசாது அவள் திரும்பி நடக்க..

"உனக்கு தலையில் அடிப்பட்ட அன்று என்ன நடந்து என்று நியாபகம் இருக்கா?" என்று தடுத்து நிறுத்தியது அவன் குறள்.

"எனக்கு அம்னிசியா இல்லை... நீங்க அடித்த இடத்தில் வான் கோழி முட்டை அளவிற்கு வீங்கி இருக்கு..." என்று தன் விரிந்து விட்டிருந்த கூந்தலை தொட்டு காட்டி எரிச்சலாக பேசியவள்.. "செத்தக்கை பார்த்து அசந்து போய்.. என்ன

நடக்குது என்று கூட புரியாது வேடிக்கை பார்க்க... நீங்க என் தலையில் பால் அடித்து.... அந்த குற்ற உணர்வை கழுவிக்கொள்ள என்னை இங்கே தூக்கி வந்து சிகிச்சை கொடுத்து விட்டு.. இதுவரை செய்த புண்ணியமே போதும் என்று நினைத்து... என் கழுத்தை பிடித்து வெளியே நிறுத்தினிங்க" என்றாள் தெளிந்த குரலில்.

அவன் நின்ற விதத்திலேயே அவள் எப்படி உள்ளே வந்தாள் என்பதையும் சொல்லி விடுவாள் என்று நினைத்தானோ என்னவோ...

ஆனால் அத்துடன் தன் உரையை இனிதே முடிந்தது என்னும் விதமாக திரும்பி நடந்தாள்!!!

அவள் செல்வதையே கண்கள் இடுங்க பார்த்தவனின் மனம் எதையோ தீவிரமாக யோசித்துக்கொண்டு இருந்தான்.

மங்கி சென்ற அடுத்த நிமிஷம்.. உள்ளே வந்த பீட்டர்.. அவளின் ஐ.டி கார்ட்டை நீட்டினான்!!!

அதை வாங்கி பார்த்தவனின் மனது சரசரவென்று புள்ளியாய் நின்ற கேள்விகளை எல்லாம் கோர்த்து ஒரு முழு படத்தை வரைந்து முடிந்திருந்தான்.

மீண்டும் அந்த ஐ.டியை கொடுப்பான் என்று எதிர்பார்க்க... அவனோ அதை அவனின் பாக்கெட்டில் பத்திர படுத்தியவிட்டு பீட்டரை பார்த்தவன் "ஒன்னார்" என்றான் அழுத்தமாக.

அந்த ஒரு மணி நேரத்திற்கு என்ன அர்த்தம் என்று பீட்டருக்கு புரியும்.. அதாவது இந்த நேரத்தில் இருந்து கால் நடை மேக மித்ராவை பற்றி அடுத்த ஒரு மணி நேரத்தில் அவள் எத்தனை மணிக்கு பிறந்தாள் என்பதில் ஆரம்பித்து இன்று காலை என்ன சாப்பிட்டாள் என்பது வரை அவனுக்கு வந்து இருக்க வேண்டும் என்பது பொருள்.

பாதுகாப்பு விஷயத்தை பொருத்த வரை ரஃபிக் எத்தனை முன்னச்சரிக்கையாக இருந்தாலும் போதாது என்ற நம்பிக்கை உடையவன்!!

அவனுக்கு மட்டும் அல்ல அவன் அம்மா, தம்பியில் ஆரம்பித்து அவர்கள் நண்பர்கள் வரை இது தொடரும்!!!

அவர்கள் குடும்பத்தில் போரில் மாண்டவர்களை விட வஞ்கத்திலும், துரோகத்திலும் மாண்டவர்கள் தான் அதிகம். பரம்பரையாக கோடிக்கணக்கான சொத்து இருக்கும் போது.. அதற்கு விலையாக தான் இத்தனை பாதுகாப்பு ஏற்பாடுகள்!!!

தன் அறையில் நின்றுக்கொண்டு எட்டு தூரம் வரை இருட்டாகவே தெரியும் காட்டை வெறித்து பார்த்துக்கொண்டு இருந்தவனின் அறையை தட்டிக்கொண்டு பீட்டர் உள்ளே வந்தான்.

"நீங்க கேட்ட தகவல்" என்று சொன்னவன் அதை அப்படியே அங்க வைத்துவிட்டு போய்விட்டான்.

அமைதியாக அமர்ந்தவன்... தன் பாக்கெட்டில் இருந்த அந்த கார்ட்டை எடுத்து ஒரு நோடி சிரித்துக்கொண்டு நின்ற மேக மித்ராவை பார்த்தவனின்... எண்ணங்கள் எங்கேங்கோ ஓட.. கண் மூடி தலை சாய்ந்து ஒரு நிமிஷம் நிதானித்தவன்.. சட்டென்று நிமிர்ந்து அமர்ந்து அதை பிரித்து பார்த்தான்.

அடுத்த பத்து நிமிஷத்தில் எல்லாவற்றையும் படித்தவன் பின் எழுந்து இரண்டு முறை நடந்தவனுக்கு அந்த ஏ.சி அறையிலும் மூச்சு முட்டுவதாக தோன்ற... எதை பற்றி யோசிக்காமல் ரூம்மை விட்டு வெளியே வந்தான்.

அவனுடனே வந்த செக்கியூரிட்டியை தடுத்து நிறுத்துவிட்டு நேராக செத்தக் இருக்கும் இடத்தை நோக்கி சென்றான்.

வேகமாக நடந்தவனின் கால்கள் சற்று மட்டுப்பட.. பின் சிறிது நேரத்திற்கு எல்லாம் நின்றே விட்டது...

காரணம்.. அங்கே இடுப்பில் கையை வைத்துக்கொண்டு செத்தக்கை முறைத்து பார்த்தப்படி நின்று இருந்தாள் மேக மித்ரா!!!

தொடரும்...

# அத்தியாயம் 16

**கா**ரணம்.. அங்கே இடுப்பில் கையை வைத்துக்கொண்டு செத்தக்கை முறைத்து பார்த்தப்படி நின்று இருந்தாள் மேக மித்ரா!!!

யாரை பற்றிய எண்ணங்களை கடந்த சில மணி நேரங்களாக அவனை விடாது வண்டின் ரீங்காரமாய் மனதில் சுற்றிக்கொண்டோ இருக்கிறதோ... யாரை பற்றி மனதால் கூட நினைக்ககூடாது என்று இங்கு செத்தக்கை நாடி வந்தானோ... அவளே அவனுக்கு முன்னாடி பிரதக்ஷனாகயிருந்தாள்!!!

இத்தனை காலமாக மூளை சொல்லிய வேலையை திவ்வியமாக செய்துக்கொண்டு இருந்த புலன்கள் முன்னறிவிப்பு இன்றி வேலை நிறுத்தத்தில் ஈடுப்பட... "திரும்பி செல்" என்ற மூளையின் கட்டளையை மீறி கால்கள் நின்றது என்றால்... "பார்க்காதே" என்ற செய்தியை மீறி அவனின் கண்கள்... அவளை ஒவ்வொரு இன்சாக அளவு எடுத்தன!!!

நிலா அற்று நட்சத்திரங்கள் மட்டுமே வானத்தில் இங்கொன்றும் அங்கொன்றுமாக இருக்க... பெரும் பாலும் விளக்குகள் அணைக்கப்பட்டு வழி தெரிவதற்காக மட்டுமே எரிந்துக்கொண்டு இருந்த சின்ன மெர்குரி விளக்கின் ஒளியில்...

அவனுக்கு முதுகை காட்டி நின்று கொண்டு இருந்தவளின்... பளபளக்கும் நீண்ட கார்குழல் விழியில் விழுந்து மனதில் பதிந்தது!!!

பால் அடித்து வீங்கி இருந்ததாலோ என்னவோ.. தையல் போடும் போது கூட கூந்தலை இப்படிதான் கட்டாமல் கிடக்க... சற்றே குனிந்து வேலையில் முழு கவனத்துடன் இருந்தவளுக்கு தன் கூந்தலை பற்றி பிரகஞ்சையே இல்லாது இருக்க.. ஆனால் அவன் தான் அந்த பட்டு இழையை ஒவ்வொரு நொடியும் உணர்ந்தான்.

ஊர் உலகத்தில் அவனிடம் கை குலுக்க மாதக்கணக்கில் வரிசையில் காத்து இருக்க.. ஆனால் இந்த நீண்ட பட்டு நூல் போல் மென்மையாக இருந்த அந்த கூந்தல் அது இஷ்டத்திற்கு அவன் கையில் ஏறி, குதித்து, தவழ்ந்து.. விளையாடிது போதாதென்று... என்றால்.. ரஃபிக்கின் முகத்தை நேருக்கு நேராக பார்த்து பேசவே அஞ்சி ஓடும் கூட்டத்திற்கு நடுவில் அவனின் முகத்தை வருடி கொஞ்சி குலாவியது இந்த கூந்தல் தான்!!!

அவனையும் வெளி உலகத்தையும் பாதுகாப்பு என்னும் இரும்பு திரைக்கொண்டு வெகு தூரத்தில் நிறுத்தி வைத்திருக்க.. அதை எல்லாம் பிரயத்தனமே இல்லாது தன் மென்மையான கூந்தல் இழையாலே சுக்கல் சுக்கலாக உடைத்துக்கொண்டு..

உள்ளே வந்தவளை அதிசயமாக வெறித்தான் நவாப் மிர் ரஃபிக் அல்உமர் அலிகான்!!!

தன்னை மறந்து பார்த்துக்கொண்டு இருந்தவனின் காதில்... அடித்த காற்றின் வழியே அவள் பேசியது மெல்ல காதில் வந்து விழுந்தது...

"வாட் இஸ் ராங் வித் யூ..???.. நீ பிருத்திவி ராஜுவுடைய குதிரை என்பதற்காக அவரை மாதிரியே நடந்துக்கொள்ள வேண்டும் என்பது இல்ல.." என்று தன் எதிரில்...

என்ன சொல்ல வேண்டுமோ அதை சொல்லி விட்டு சீக்கிரம் கிளம்பு எனக்கு தூக்கம் வருகிறது என்பது போல் முகத்தை வைத்துக்கொண்டு நின்று இருந்த செத்தக்கை பார்த்து சொன்னவள் தொடர்ந்து...

"நான் கொண்டு வரும் ஆப்பிளை பார்த்தால் முகத்தை திருப்புற.. கேரட்டை பார்த்தா கனைக்கிற... நான் கிட்ட நெருங்கினாலே துள்ளி குதிக்கிற.. இது எல்லாத்தையும் விட... ஐ.. லவ்... யூன்னு.. சொன்னா.. நீ.."

"எத்தனையாவது தடவை??" என்று கேட்டப்படி அவளை நெருங்கினான் ரஃபிக்.

பின்னாடி இருந்து வந்த அவன் குரலை கேட்ட மேக மித்ரா துள்ளி குதித்துக்கொண்டு திரும்பினாள்!!!

"பிருத்திவி ராஜ்?!?" என்றாள் நம்ப மாட்டாமல் கண்களை விரித்து.

"ம்" என்று ஒரு சின்னதாக தலையை அசைத்தான்.

"இங்க என்ன பண்றிங்க??" என்றாள் அவனை இன்னும் நம்ப முடியாது பார்த்தப்படி.

"இது என்னுடைய கேள்வி..." என்று கேட்டப்படி நெருங்கி வந்தான்.

என் குதிரையிடம் நீ என்ன பண்கிறாய் என்று நான் கேட்பதற்கு பதில் நீ என்னை கேட்கிறாயா? அவன் கேட்டதின் அர்த்தம் நன்றாகவே புரிந்தது.

"தூக்கம் வராததால்.. செத்தக்கோடு பேசிக்கொண்டு இருந்தேன்..." என்றாள் கைகளை பிசைந்தப்படி.

"பேசிக்கொண்டு இல்ல.. ப்ரப்போஸ் பண்ணிக்கொண்டு இருந்தாய்.." என்ற போது முதல் முறையாக அந்த குரலில் ஒரு சின்ன சிரிப்பு இழையோடியது போல் அவள் காதில் விழ..

பிருந்திவி ராஜிற்கும் சிரிப்பிற்கும் என்ன சம்பந்தம்? தன் காது தான் சரியில்லை என்று முடிவு கட்டினாள். மேலும் அவனிற்கு சிரிக்க வராது என்பதோடு அப்படியே தப்பி தவறி சிரித்து வைத்தாலும் அது அவனின் ஆளுமைக்கும் கம்பீரத்திற்கும் இடியாய் காதை நிறைக்கும் படியாதான் இருக்கும் என்று யூகித்தாள்!!!

இல்லாத சிரிப்பை பற்றிய ஆராயிச்சியில் இருந்தவளுக்கு அப்போது தான் அவன் எழுப்பிய கேள்வியே விளங்க... ரௌத்திரமாக அவனை முறைத்தப்படி...

தன் கேப்பரி பாக்கேட்டில் கையை விட்டுக்கொண்டவள் "காட்ட்... நாகரிகமே இல்லாது.. என் பேச்சை ஒட்டு கேட்டிங்களா??" என்றாள் வார்த்தைகளில் அனல் கக்க.

நீ செத்தக்கிற்கு லவ் யூ சொன்னதை ஒட்டு வேறு கேட்கனுமா?!? என்ற ரீதியில்... ஒரு முறை திரும்பி செத்தக்கையும் அவளையும் பார்த்தவனின் கண்களில் "ரியலி?!?" என்று மேதாவித்தனமாக கேட்ட போதும்.. அவனை மீறி முகத்தில் சிரிப்பு குடியேறி இருந்தது.

சற்று முன் பிருந்திவி ராஜிற்கும் சிரிப்பிற்கு என்ன சம்மந்தம் என்று எண்ணியவளை அந்த சிரிப்பு ஒரு உலுக்கு உலுக்கி... அவளின் எண்ணத்தை தவிடு பொடியாக்கும் வண்ணம் இடியாய் காதை நிறைக்காமல் மின்னலாய் கண்களைப் பரித்தது!!!

பேச முடியாது அவனின் சிரிப்பு தந்த அதிர்ச்சியில் இருந்து மீளாது உறைந்து நின்றவளுக்கு... மனதில் இவனின் சிரிப்பை விட கோபத்தை கை ஆள்வது மிக மிக எளிது என்று விசித்திரமான எண்ணம் தோன்றியது!!!

நடை முறையில் இல்லாத வழக்கமாய் இவனிடத்தில் சிரிப்பை விட கோபத்தை எதிர்க்கொள்வது எளிது என்று தோன்றினாலும்... அதுதான் அக்மார் உண்மையாகும். அவனின் கோபம் தகிக்கும் அனல் காற்றாய் வீசினாலும் தாங்கிக்கொள்ளலாம்... ஆனால் அவனின் சிரிப்போ மின்னலாய் நம்மை தாக்கினால் அத்தனை மின்சாரத்தை தாக்கும் சக்தி இல்ல என்று உண்மையை உணர... அவளையும் அறியாது உடம்பில் ஒரு நடுக்கம் பரவத்தான் செய்தது!!!

"நீங்க.. நீங்க.. என்ன சொல்றிங்க.. ??" என்றாள் தடுமாற்றமாய்.

"ஒட்டுகேட்டேனா??.. அதுதான் ஊரே கேட்டதே" என்று அவளின் முந்தைய கேள்விக்கு இப்போ பதில் சொன்னான்.

"ஊரே வா?" என்று அர்த்தம் புரியாது திரு திரு வென்று விழித்தவள் பின் சுற்றியும் முற்றியும் காலியா இருந்த நிலப்பரப்பை வேறு பார்த்தாள்.

அவள் கேட்ட கேள்வி காதிலே விழாதது போல்... "இது எத்தனையாவது தடவை?"

"எது எத்தனையாவது தடவை?" என்று தன் பாக்கெட்டில் இருந்த கையை எடுத்து கைகளை பிசைந்தப்படி கேட்டாள்.

தோளை குலுக்கியப்படி.. சர்வ சாதாரணமாக.. "ப்ரப்போஸ்.. செய்வது?" என்றான் அலட்சியமாக.

ஒட்டு கேட்டது மட்டும் அல்லாது குறுக்கு விசாரணை வேறா என்ற கொந்தளிப்புடன். "நான் யாருக்கு வேண்டுமானாலும் பண்ணுவேன் அது உங்களுக்கு அநாவசியமானது...." என்றாள் வன்மத்துடன்.

"நாம் சந்தித்த மூன்று முறையில் இரண்டு முறை நீ இதை தான் செய்கிறாய்" என்றான் அவள் ஏதோ கொலை குற்றம் செய்து விட்டது போல்.

அமர்த்தலாக அவனை பார்த்தவள்.. "நான் இரண்டு முறை இல்லை இரண்டாயிரம் முறை கூட செய்வேன் உங்களுக்கு அதில் என்ன பிரச்சனை?"

"ஓ!! அப்ப தர வரிசையில் நான் எந்த இடம்?" என்றான் பதவிசாக.

"இப்ப என்ன சொன்னீங்க தரவரிசையில் எந்த இடமா?"என்றப்படி மீண்டும் தன் பாக்கெட்டில் கைகளை தினித்தாள்.

"ம்ம்.."

அவன் தலையை ஒரு மார்க்கமாக பார்த்தவள்... "தலையில் அடிப்பட்டா மண்டை குழம்பி உலருவாங்கன்னு கேள்வி பட்டு இருக்கேன் இப்பதான் பார்க்கிறேன்..."

"நான் நேற்றே பார்த்தேன்.." என்று அவள் விட்ட பாணத்தை குறி பார்த்து திருப்பி விடுத்தான் அவன்.

"என்ன பார்த்திங்க??" என்றாள் வரிந்துக்கொண்டு.

"ப்ரப்போஸ் பண்ணியதை.."

இப்ப தானே சென்னால் ஆனால் இவனோ நேற்றே என்று சொல்கிறானே என்று குழம்பியவள் "யாருக்கு யாரை??"

"நீ... என்னை"

"தப்பா சொல்றிங்க...??" என்று அலுப்பாக பெரு மூச்சு விட்டப்படி.

அவன் தந்தையை தவிர முகத்திற்கு நேராக இப்படி யாரும் சொல்லியது இல்லை என்று நினைவு மனதில் ஓட.. தலையை மட்டும் சரித்து "ஓ!!" என்றான் அதையே கேள்வியாக.

"நீங்க என்னை அடித்து மட்டும் தான் நடந்தது" என்றாள் திடமாக.

"பார்த்த முதல் தடவை ப்ரப்போஸ் பண்ணியதால்.. இப்ப கல்யாணம் பண்ணிக்க சொல்லி கேட்பாயோன்னு நினைத்தேன்" என்றான் கண்களில் உவகை பொங்க.

இத்தனை நேரம் அவன் துண்டு துண்டாக மொழிந்ததின் பொருள் அப்போது தான் அவளுக்கு முழுமையாக விளங்க... கண்களில் அக்கினி பொறி பறக்க..

"நான்... போயும்.. போயும்... உங்களை... எதாவது கனவு கண்டீங்களா?"

சற்றே அவள் புறம் குனிந்தவன்.. "எத்தனை பேரை சாட்சிக்கு அழைக்கனும்?!?" என்றான் பரவசமாக.

"உங்கள் ஜோக் மகா கேவலமா இருக்கு.. சிரிப்பு வரலை"

"கல்யாணத்திற்கு தான் சாட்சி தேவை.. ப்ரப்போஸலுக்கு கூடவா சாட்சி?" என்று அதிசிரதையாக கேட்டான்.

"நான் உங்களுக்கு ப்ரப்போஸ் பண்ணியதை நேரடியாக பார்த்த சாட்சி இருக்காங்களா..?" என்று அவன் கூறியதை நம்ப முடியாது மிரண்டு போய் கேட்டாள்.

நவரசம் ஆடும் அவளின் முகத்தை இமைக்காது ஊடுருவிப் பார்த்தப்படி.... "ம்ம்.." என்று தலை அசைத்தான்.

"நடக்காது ஒன்றுக்கு சாட்சி எப்படி இருக்க முடியும்..?? நீங்க பொய் சொல்றீங்க" என்றாள் முகத்திற்கு நேராக.

அவளின் வார்த்தையை கேட்ட அடுத்த நிமிடம் இலகுவாக நின்று பேசிக்கொண்டு இருந்தவன் இடம் காணாமல் போக.. உடம்பு விரைத்து... கண்களில் கடுமை குடியேற... எதுவும் பேசாது உற்று பார்த்தான்... ரஃபிக்.

பார்த்தது அவன் மட்டும் அல்ல செத்தக்கும் தான்.

இத்தனை நேரம் டென்னிஸ் மாதிரி இருபுறம் பேச்சை பால் போல் மாறி மாறி ஒரு வரியில் வேமாக அடித்து திருப்பி அனுப்பிக்கொண்டு இருந்த... இந்த விளையாட்டில் யார் ஜெயிக்க போகிறார்கள் என்று சுவாரசியமாக வேடிக்கை பார்த்துக்கொண்டு

இருந்த செத்தக்.. பட்டென்று ரஃபிக் எதுவும் பேசாது... முறைத்து நின்றுக்கொண்டு இருப்பதை பார்த்தவுடன் சுவாரசியம் போய் கண் மூடி "ஸ்டே அப்பாரட்டஸ்" என்று சொல்லும் நின்ற நிலையிலேயே தூங்க ஆரம்பித்தது.

"வாக்கு தவறும் பரம்பரையில் வந்தவன் அல்ல நான்!!!" என்று ரஃபிக் சொல்ல... அதை எதிர்த்து பேச என்ன எதிர்ப்பாக நினைக்க கூட அந்த குரலில் இருந்த அழுத்தம் இடம் தரவில்லை..

அவள் கேட்காமலே அன்று அடிப்பட்ட சம்பவத்தை ரஃபிக்கே தனக்கே உரிய பாணியில் ஒரே வரியில் இவள் பேசியதையும் கூடவே அந்த டாக்டர் இவளின் பேச்சை கேட்டு மயங்கி விழுந்ததையும் கூறினான்.

ஒரு நொடி கண்களை மூடி அவன் சொன்ன விஷயத்தை கிரகித்தவளின் கால்கள் நிற்க முடியாது தள்ளாட... நேராக நிற்க முடியாது தள்ளாடிய கால்களை மட்டும் அல்ல.. எதை பேசவும் வார்த்தை வராது நெஞ்சை அடைத்த வார்த்தைகளை சிரமப்பட்டு வெளியே வந்தவள்... நேராக அவனை நோக்கி...

"நான் உங்களை பார்த்து அப்படி சொல்ல வில்லை.. ஐ மீன் சொல்ல வரவில்லை... ஐ லவ் யுவர் ஹார்ஸ் என்று சொல்ல வந்து.. பாதிலேயே முடிக்காமல் மயங்கி விட்டிருப்பேன் என்று நினைக்கிறேன்" என்றாள் மிக சின்ன குரலில்.

"நீ சொல்வதை எப்படி நம்ப??" என்றான் அவள் எப்படி நம்ப மாட்டேன் என்று சொன்னாலோ அதே குரலில்.

"மிஸ்டர் பிருத்திவி ராஜ்... நீங்க எப்படி வாக்கு தவறும் பரம்பரையில் வரவில்லையோ அதே போல் நானும் போகிற போக்கில் பார்க்கும் நபரிடம் எல்லாம் ப்ரபோஸ் பண்ணும் குடும்பத்தில் பிறக்கவில்லை.. இதை நம்பும் படி சந்தர்ப்ப சூழ்நிலை அமையவில்லை என்றாலும் ஐ ஐஸ்ட் கோட் கேர்" என்று கூறி விட்டு அதற்கு மேல் இதை பற்றி பேச பிடிக்காது செத்தக் புறம் திரும்பியவள்..

"செத்தக்" என்றாள் தூங்கிக்கொண்டு இருந்த குதிரையை அழைத்தாள்.

தன் பெயர் சொல்லி அழைப்பதை கேட்டு விசுக்கென்று கண்களை விரித்த அது.. பின் படக்கென்று கண்களை மூடிக்கொண்டு தூங்குவது போல் பாசங்கு செய்ய..

"ரொம்ப நடிக்க வேண்டாம்... செத்தக்... நான் சொல்வது உன் காதில் விழும் என்று எனக்கு தெரியும்... நான் விரும்புவதை எப்பயும் விட்டுக்கொடுக்கும் பழக்கம் என் ரத்ததிலேயே இல்லை" என்று அதனிடம் சூளுரைத்து விட்டு அவன் புறம் திரும்பியவள்..

"குட் நயிட்" என்று மொழிந்துவிட்டு அங்கிருந்து இரண்டு அடி எடுத்து வைத்தவள் பின் திரும்பி நின்று..

"உங்களுக்கு உடம்பு எப்படி இருக்கு?" என்று கேட்டாள் அவன் பதில் என்னவாக இருக்கும் என்று தெரிந்த போதும் கேட்காமல் இருந்தால் அவளால் தூங்க முடியும் என்று தோன்றவில்லை.

"ம்ம்.." என்று தலையை மட்டும் அசைத்தான்.

இவன் "ம்ம்" மில் பி.எச்.டியே முடித்திருப்பான் போல்... எத்தனை மாடூலேசனில் இந்த "ம்ம்"மை சொல்கிறான் என்று பெரு மூச்சு ஒன்றை விட்டு விட்டு எதுவும் பேசாது திரும்பி செல்ல... மூன்றாவது அடி எடுத்து வைக்கும்போது அவளுக்கு பக்கத்தில் அவனும் நடந்து வந்தான்.

ஏன் என்னுடன் சேர்ந்து நடக்கறிங்க என்று அவள் கேள்வி கேட்கவில்லை அவனும் எதை பற்றியும் சொல்லவும் இல்லை.

இருவரும் ஒரு வித அமைதியான சூழ்நிலையில் நிலவு இல்லாத வானத்தில்.. காற்று இல்லாத இருக்கமான சூழ்நிலையில்.. ஆந்தை அகவிய அந்த அர்த்தம் அற்ற அமைதியான நடைப்பயணம் இருவருக்குள்ளும் ஏதோ தட்டி கவிழ்ப்பதை உணர்ந்தும் உணராது அவளின் அறை வரும் வரை நடந்தனர்.

அவளின் பில்டிங் வந்தும் கூட திரும்பாதவன்... மாடியில் இருக்கும் அவளின் அறை வரை துணைக்கு வர.. தன் கதவை திறந்துக்கொண்டு உள்ளே போய் அவள் கதை மூடும் வரை

எதுவும் பேசாது லேசாக தலை அசைத்து விடைப்பெற்றான் நவாப் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான்.

கதவை சாற்றியவள்.. தன் இதயத்தில் கையை வைத்துக்கொண்டு கதவில் சாயந்து அப்படியே சரிந்து அமர்ந்தாள்!!!

இரண்டு நாட்களாக அவர்கள் பேசி சண்டை போட்ட போது உணராத ஆயிரம் விஷயம் அவன் அமைதியாக உடன் வந்த இந்த இருபது நிமிஷ நடைப் பயணத்தில் உணர்ந்தாள்!!!

அவனிற்கே உரிய மனம்... அருகில் சென்றாலேயே அனல் அடிக்கும் அவனின் வெப்பம்.. கம்பீரமாக நடக்கும் அவனின் நடை... நின்ற விதம்... ஏன் வாங்கும் மூச்சு காற்று வரை அந்த இருபது நிமிட நடைப் பயணம் அவளின் வாழ்க்கையே புரட்டி போட்ட பயணமாக இருக்கும் என்று அவள் உணரவில்லை.. அது என்ன விசித்திரம் என்றால் அவனின் ஒவ்வொரு அசைவையும் அவளின் கண்கள் உணரும் முன் அவளின் புலன்கள் உணரந்தது தான் மிகவும் ஆபாத்தாக தோன்றியது!!!

இதுவரை அவள் அறிந்திராத மட்டும் இல்லாது புரியாததுமாய் இருக்கும் இந்த உணர்வை எதில் சேர்ப்பது என்று குழம்ப... தன்னந்தனியாக நடுரோட்டில் நிற்க வைக்கப்பட்ட போது பயம் இல்லாது எதிர்க்கொண்டவளின் மனதில் ஏதோ

வார்த்தைகளால் இன்னதென்று சொல்ல முடியாத பயம் அவளை ஆட்க்கொள்வதை தவிர்க்க முடியவில்லை!!!

சிறுது நேரம் அப்படியே கண்களை மூடி தன்னுள்ளே உழன்றுக்கொண்டு இருந்தவளுக்கு... மனது நாலாபுறத்திலும் முட்டி மோதி அலைப்பாய.. ஒரு கட்டத்திற்கு மேல் அவளின் பயத்திற்கான காரணத்தை அறியவே முடியாது வெறித்து போய் எழுந்தவளுக்கு அப்போது தான் ஏன் அவன் வெளியே தள்ளினான் என்று புரிய.. அவன் செய்கையில் தப்பு இருப்பதாக தோன்றவில்லை!!!

அவளின் ஓவர் ப்ரொட்டக்டிவ் அண்ணன் கார்த்திக் கூட இந்த விஷயத்தை கேட்டால் தப்பு இவள் பேரில் என்று தான் சொல்லுவான் என்றாலும் அதை முழுவதுமாக நின்று கேட்கும் முன் பிருத்திவி ராஜின் மூக்கை உடைத்திருப்பான் என்பது வேறு விஷயம்!!!

கால்நடை மருத்துவருக்கு படித்துவிட்டு மனித டாக்டரானது அவனால் தான் என்பது ஊர் அறிந்த ரகசியம்.. என்று வீட்டு ஆட்களை நினைவு வரும் போதே... நிலை புரியாது தத்தளித்துக்கொண்டு இருந்த மனது தானாக சமன் பட்டது.

எது நடந்தாலும்.. எத்தனை விபரிதமாக இருந்தாலும் தன் உடன் நிற்க தன் குடும்பம் இருக்கும் என்ற உண்மை ஒரு மனிதனுக்கு எத்தகைய மனோதிடத்தை கொடுக்கும் என்று

அவள் அறிவாள்!!! அதுவும் அக்கா, அம்மா அப்பா என்று இருந்தும் இல்லாதவர்களாய் வாழ்ந்த இரண்டாவது அண்ணி அலக்நந்தாவையும்.. தன் குடும்பத்தை பார்த்து பயந்து பின் வாங்கும் தன் பால்ய தோழியும் மூன்றாவது அண்ணியுமான நிரல்யாவை பார்க்கும் போது... தன் குடும்பத்தின் மேன்மையை அவள் தெளிவாக புரிந்துக்கொண்டாள் என்றே சொல்ல வேண்டும்.

அலைகழித்த எண்ணங்களை முற்றிலும் ஒதுக்க முடியாவிட்டாலும் எது நடந்தாலும் தோள் கொடுக்க குடும்பம் இருக்கையில் என்ன நேர்ந்து விட போகிறது என்று நினைவோடு எழுந்து பாத் ரூம் சென்று கை கால் கழுவிக்கொண்டு வந்தவள் அப்படியே மெத்தையில் சரிந்தாள்.

மெல்ல தூக்கத்தில் ஆழ்ந்தவளுக்கு கடைசியாக நினைவில் நின்றது அவனின் மின்னல் சிரிப்பு தான்!!!

அது அன்று மட்டும் அல்ல அடுத்த இரண்டு நாளும் மூச்சு விடக் கூட நேரம் இல்லாது வேலையில் உழன்ற போதும்... கிடைத்த இடைவேளையில் செத்தக்கிடம் சென்று அவள் கெஞ்சி கொஞ்சிய வரை அது இன்னும் தன்னை ஒரு மனிதனாக என்ன ஜந்துவாக கூட ஏற்றுக்கொள்ளாது முகத்தை திருப்பிக்கொண்டு நின்றது மனதை கவலையில் ஆழ்த்தியது என்றாலும் கடைசியாக மெத்தையில் கண்களை மூடும் போது நின்றது

பிருத்திவி ராஜின் சிரிப்பு மட்டும் தான்!!! இத்தனைக்கும் அவனை பார்க்கக் கூட இல்லை என்பது வேறு விஷயம்.

வழக்கம் போல் அனைவருக்கும் முன்னாடி சென்றவள் ஆசையாக செத்தக்யிடம் செல்ல ஏதோ நல்ல மூடில் இருந்ததாலோ என்னவோ வழக்கம் போல் இவளை பார்த்ததும் வந்துவிட்டாளா என்று எரிச்சலாக கனைத்தப்படி முகத்தை திருப்பாமல்.. முதல் முறையாக அவளை கிட்ட நெருங்க விட்டது..

அந்த குஷியில் கையில் எடுத்து வந்த கேரட்டை நீட்ட.. எதற்கு அவளை நெருங்க விட்டது என்று அந்த நொடி புரிந்தது ஏன் என்றால் அந்த சண்டி குதிரை கேரட்டை கடிப்பதற்கு பதில் அவள் கையை கடிக்க வாயை பிளந்துக்கொண்டு வந்தது!!!

நல்ல நேரம் குதிரை கடிக்கும் அதுவும் சண்டி குதிரைகள் ரொம்பவே அழுத்தமாக கடிக்கும் என்று தெரிந்ததால் வெடுக்கு என்று கையை இழுத்துக்கொண்டு செத்தக் எதிர்பார்க்காத நொடி அதன் முகத்தில் ஒரு அடி போட... விசுக்கென்று தலையை உலுக்கிக்கொண்டு கனைத்தப்படி முகத்தை திரும்பிக்கொண்டது அது!!!

"என் மேல் தப்பில்லை.. நீ கடிக்க வந்தாய் நான் அடித்தேன்.." என்று மங்கி அதனிடம் பேசிக்கொண்டே இருக்க... குறி வைத்து கடிக்க முடியாததலோ இல்லை வலிக்க அவளிடம்

அடி வாங்கியதாலோ கோபம் கொண்ட செத்தக் முகத்தை திருப்பிக்கொண்ட தோடு மட்டும் அல்லாது அப்படியே திரும்பி நின்று தன் பின்னங்காலை தூக்கி காற்றை உதைத்தது!

ஒரு நிமிஷம் செத்தக்கின் செய்கை பார்த்தவளுக்கு அதன் நீண்ட வாலும் அந்த வாலில் கட்டி இருந்த சிகப்பு நிற ரிப்பனையும் கண்டவளுக்கு சிரிப்பு பொத்துக்கொண்டு வந்தது.

காரணம் அவள் குதிரை ஏற்றம் பயன்ற காலங்களில் முதலில் கற்றுக்கொண்டது அதன் வாலில் சிகப்பு நிறத்தில் ரிப்பன் கட்டப்பட்டிருந்தால் அது உதைக்கும்.. அதனிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பது தான்... அது போல் பச்சை, நீலம் என்று பல நிறங்களுக்கு குறிப்புகள் உண்டு!!!

"செத்தக்..." என்று அவள் சிரித்தப்படி தனக்கு தன் வாலை காட்டியப்படி நின்ற குதிரையை பார்த்து அழைக்க..

அது வேண்டும் என்றே முகத்தை அப்படியே நிற்க.. "ஒரு நாள் நீ என்னிடம் இதே மாதிரி கெஞ்ச போற.. அப்ப நானும் என் முக்ததை திருப்பிக்கொண்டு போக போகிறேன் பார்" என்று சிரித்தப்படி சொல்லிவிட்டு அவள் இடத்திற்கு சென்றாள்.

அன்று முகாமிற்கும் அழைத்து வரப்பட்டிருக்கும் குதிரைகளில் ஃப்பைகளை படித்துக்கொண்டு இருந்தவளை பார்த்துவிட்டு காலை வணக்கம் வைத்தப்படி நெருங்கிய மேனஜர்..

"சாரி.. டாக்டர் உங்க நேரத்தை வீண் அடித்துவிட்டோம்.. இவை முகாமிற்காக வந்த குதிரைகளின் ஃபைல்கள் அல்ல..." என்றப்படி அதில் இருந்து இரண்டை உருவினார் ஒரு அசட்டு சிரிப்பை உதிர்த்தப்படி.

"ஓ.." என்று இவர் சொல்ல வருகிறான் என்று புரிந்துக்கொள்ள முயற்சி செய்தவள் "கொஞ்சம் வயது முதிர்ந்த குதிரைகளை விற்று விடுவது தானே வழக்கம் என்று கேள்வி பட்டு இருக்குறேன்" என்று கேட்கும் போதே..

"ஆமாம்" என்பது போல் தலை ஆட்டியவர் "ரேஸ்சிற்கும், இந்த மாதிரி விளையாட்டிற்கும் பழக்கபட்ட குதிரைகள் வயது முதிர்ந்ததும் எந்த உபயோகமும் இல்லை என்பதால் அவற்றை விற்று விடுவது தான் வழக்கம்... நீங்கள் ரோட்டில், பீச்சில், கண்காட்சியில் பார்க்க மாட்டிங்க... அவைகள் எல்லாம் ஒரு காலத்தில் சில பல லட்சத்தில் விற்கப்பட்ட குதிரைகள் தான் பிற்காலத்தில் சாப்பாட்டிற்கு கூட வழியில்லாது களைத்து விற்கப்படுபவை. ஆனால் இங்க போலோ விளையாட்டு மட்டுமல்லாது குதிரை ஏற்றதிற்கான பயிற்சியும் அளிக்கப்படுவதால் கிளப்பிற்கு வரும் சின்ன குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை குதிரை ஓட்ட பழகவும், பொழுது போக்கிற்காக சவாரி செய்யவும் அவைகள் பயன் படும் என்பதால் விற்பது இல்லை.." என்றார் அவர் விளக்கமாக.

"அப்ப இவை?!?" என்றாள் அவர் கையில் எடுத்த அந்த இரண்டு பையில்களை காட்டி

"இவை இரண்டும் ஆப்ரேஷன் செய்தும் குணப்படுத்த முடியாத குதிரைகள்.. சில குதிரைகள் இப்படி தான் பட்டினி கிடந்தே செத்து போகும் ஏன் என்று தெரியாது... அப்படிப்பட்ட குதிரைகளை விற்று விடுவோம்."

"அதை வாங்கி போய் என்ன பண்ணுவாங்க?!?" என்றாள் புரியாது.

"பெரும் பாலும் அதை கொன்று... " என்று அவர் விவரிக்கும் போதே...

அத்தனை நேரம் கேட்டுக்கொண்டு இருந்தவளுக்கு அப்படியே உள்ளே உடம்பு செந்தனலாக கொதிக்க தொடங்க..

"வாட்?!?" என்று பதறி போய் கேட்டாள்.

இதை கேட்டப்படி உள்ளே வந்த அவர்களின் சீப் டாக்டரும் இவர்களை தலைமை ஏற்று அழைத்து வந்தவருமான வரத ராஜன் "மேக மித்ரா... முதல் நாளே அதை போய் பார்த்து விட்டு வந்தோம்.. நீ வேற ரூப்பில் இருந்தால் உனக்கு தெரியவில்லை போல... கண்ணை கூட திறக்க முடியாது இப்படி அவஸ்தப்பட்டு சாவதற்கு பதில் அதை சுட்டு விடுவது எவ்வளவோ மேல்... இப்படியே விட்டாலும் அதிக பட்சம்

இன்னும் மூன்று நாள்... அவ்வளவுதான்!!!" என்றார் அந்த சீப் டாக்டர்.

"அந்த மூன்று நாளாவது வாழ அதற்கு உரிமை இல்லையா?" என்றாள் மனதை அடக்க.

"அதனால் என்ன பயன்?"

"பயனா?? அப்போ ஊர் உலகத்தில் யாருக்கும் எந்த பயனும் இல்லாதவர்கள் நாம் நீ வேஸ்டாகத்தானே இருக்க என்று நாம் சுட்டு விடுவோமா?" என்றாள் கோபம் தனியாதவளாய்.

"நாம் முடிவு செய்ய என்ன இருக்கிறது?? இதை வைத்து நடத்துபவர்கள் செய்யும் முடிவுதான் அது. வா நாம் போகலாம்" என்று கூறிவிட்டு பிரச்சனையை பெருசு பண்ண பிடிக்காது அவளை அங்கிருந்து இழுத்துக்கொண்டு நகர்ந்தார்.

அன்று முழுவதும் என்ன வேலை செய்தாலும் மேனேஜர் சொன்ன தகவலே மனதை அடைக்க.. இரவு உணவை முடித்துவிட்டு அனைவரும் படுக்க சென்ற பின்னர் மெல்ல நடந்து சற்றே வயதான குதிரைகள் கட்டி இருக்கும் இடத்தை நோக்கி நடந்தாள்!!!

வயதான குதிரைகளின் கொட்டகையின் வாயிலில் காவலுக்காக இருந்த இரண்டு பேர் அமர்ந்ததப்படியே தூங்கி வழிய.. எதுவும் சொல்லாமல் குதிரைகள் இருந்த இடத்தை

நோக்கி உள்ளே சொன்றவளை பார்த்து அடையாளம் கண்டு கொண்டு சில குதிரைகள் கனைத்தும் தங்கள் இருப்பை தெரிவித்து கொள்ள பல குதிரைகள் எதுவும் கண்டுக்கொள்ளாது படுத்து தூக்கிக்கொண்டு இருந்தன.

இவள் தேடி வந்த குதிரையானது கடைசியாக இருந்த கொட்டைகையில் கண்களை கூட திறக்க முடியாது படுத்து கிடக்க.. அதன் மேல் ஈ, எறும்புகள் மேய்ந்ததன.

அதன் அருகில் போனவள்.. தன் அருகில் யாரோ இருக்கிறார்கள் என்று உணர்ந்தற்கான அடையாளமாக அதன் காதை மட்டும் சற்றே அசைத்து விட்டு கண்களை மூடி அப்படியே கிடக்க... மெல்ல அதன் நெற்றியில் மற்றும் காதில் தடவியப்படியே ஏதோ பேசிக்கொண்டே... குதிரைகள் விரும்பி தின்னும் கேரட் மற்றும் ஆப்பிளை எடுத்து வந்திருந்தவள் அதனை வாய் அருகே நீட்ட எந்த உணர்வு இல்லாது படுத்தே கிடந்தது. இதே கதியில் அடுத்த குதிரையும் கிடந்தது.

யாரோ நடந்து வரும் கால் அடி தடம் கேட்க.. கண்களை உயர்த்திப் பார்த்தவளுக்கு அங்கே நின்றவனை கண்டு...

"பிருத்திவி ராஜ்?!?" என்றாள் இந்த நேரத்தில் இவன் இங்க என்ன செய்கிறான் என்று அதிர்ச்சியாக...

எதுவும் பதில் சொல்லாது அவளை உறுத்து விழித்தவன்.. "என்ன பண்ற??" என்றான் அதட்டலாக,

"பார்த்தால் எப்படி தெரியுது?? சாப்பிட வைக்க முயன்றுக்கொண்டு இருக்கிறேன்.." என்றாள் பெரு மூச்சுடன்.

"சாப்பிட்டாலும் கூட இன்னும் மூன்று நாளில் அது" என்று அவன் சொல்லும் போதே.. பெரிய அரசியல் மற்றும் பிசினஸ் ஆட்கள் இவனின் ஒரு வரி பதிலேயே கேட்க வரிசையில் நின்றால் இவளோ அவன் பேசி முடிக்கும் வரை பொருமையாக இல்லாது..

"தெரியும்... மூன்று நாளில் அதன் வாழ்க்கை முடித்து வைக்க கேடு விதித்தது யார்?!? மனிதர்கள் என்ற திமிரா? நமக்கு எப்படி இந்த பூமியில் வாழ உரிமை இருக்கோ அதே போல் அதற்கும் வாழ எல்லா தகுதியும் இருக்கு.." என்றாள் ரோஷத்தோடு.

"மணி பதினொன்றைத் தாண்டுகிறது. உன் அறைக்கு போ மேக மித்ரா" என்றான் அழுத்தமாக.

"எனக்கு தூக்கம் வரவில்லை இங்கே தான் இருக்க போகிறேன் உங்களுக்கு என்ன பிரச்சனை..?"

"மற்ற குதிரைகள் சரியாக தூங்க வில்லை என்றால் மறுநாள் ஒழுங்காக விளையாட முடியாது"

அவன் சொல்வதில் நூற்றிற்கு நூறு உண்மை இருக்கு. இந்த குதிரைகள் நாள் முழுவதும் குழந்தைகள் மற்றும் புதிதாக குதிரை ஏற்றம் பயில வரும் நபர்களை சுமந்துக்கொண்டு சுற்றி

வரும். எரிச்சலும் தூக்கமின்னையாலும் அவர்களை வீசி எரியலாம் என்ற உண்மை சுட.. எதுவும் பேசாது எழுந்து நடக்க தொடங்கியவள் கடைசியாக அந்த குதிரயை தடவிக்கொடுத்து விட்டு எடுத்து வந்திருந்த ஆப்பிளையும் கேரட்டையும் அந்த அறையின் மறுபுறம் இருந்த வேறு குதிரைகளிடம் கொடுத்துவிட்டு நடந்தாள்.

அன்றைய தினம் போலவே அவர்கள் மத்தியில் எந்த வித பேச்சும் இல்லாது மௌனமே குடியேற.. எதுவும் பேசாது.... பேச வேண்டும்... என்று தோன்றாது அமைதியாக வந்தவளை அறை வரை அழைத்து விட்டவன் இவள் குட் நயிட் சொன்னதிற்கு பதிலாக தலையை ஆட்டி விட்டு போனான்.

இப்படி எதுவுமே பேசாது அமைதியாக வந்த இந்த பிருத்திவி ராஜ் மறுநாள் இவளிடம்... "எந்த உரிமையில் என்னிடம் இப்படி பேசுகிறாய்?? சோட்டா நவாப்பிற்கும் உங்களுக்கும் இருக்கும் சம்பந்தத்தை வைத்தா?" என்று முகத்தில் அடித்தது போல் கேட்டான்!!!

# அத்தியாயம் 17

அன்றைய தினம் போலவே அவர்கள் மத்தியில் எந்த வித பேச்சும் இல்லாது மௌனமே குடியேற.. எதுவும் பேசாது பேச வேண்டும் என்று தோன்றாது அமைதியாக வந்தவளை அறை வரை அழைத்து வந்து விட்டவன்... இவள் குட் நயிட் என்று சொன்னதிற்கு பதிலாக தலையை ஆட்டி விட்டு போனான்.

இரவு முழுவதும் தூங்க முடியாது புரண்டுக்கொண்டு இருந்தவள் விடிந்ததும் விடியாததுமாக குளித்து விட்டு அந்த பட்டினி கிடந்த குதிரைகளைப் பார்க்க சென்றாள்.

நேற்றைய நிலையிலேயே படுத்து இருந்த அந்த குதிரைகளை... கண்டு மனம் வெதும்பி... என்ன செய்வது என்று புரியாத செயலற்ற கோபம் உள்ளே அரிக்க... இதற்காக எதாவது முயற்சிக்கா விட்டால் அவளால் மூச்சு கூட விட முடியாது என்று மூளை இடித்துரைக்க அந்த இடத்தின் மேனேஜரை நோக்கி புறப்பட்டாள்.

இன்னும் வரவில்லை என்று விபரம் தெரிவிக்கப்பட.... மனம் சோர்ந்தவளுக்கு... அப்படியே அவர் வந்தாலும் கூட இந்த விஷயத்தில் எந்தளவிற்கு உதவக்கூடும்? என்ற கேள்வியும் உடன் எழுந்தது.

கொள்கை சார்ந்த விஷயங்களில் உயர்ந்த பதவியில் இருப்பவர்களால் மட்டுமே முடிவுகளை எடுக்க முடியும் என்பதை நன்கு அறிவாள்.. சங்கி மாதிரி தொழிலில் முனைப்பாக ஈடுப்பட வில்லை என்றாலும் அதன் நடைமுறைகளை பற்றி நன்கு அறிவாள்.

"இந்த கிளப்பின் பிரசிடன்ட் எப்ப வருவார்??" என்று கேட்டாள். நேராக தலைவரையே பார்த்து விட வேண்டியது தான் என்ற தீர்மானத்தோடு.

அவளை மேலேயும் கீழேயுமாக பார்த்த அந்த ஊழியன்... "முதலில் நவாப் சார் ஊரில் இருக்காரேன்னு தெரியலை.. அப்படியே இருந்தாலும் அவரை எல்லாம் பார்ப்பது அவ்வளவு எளிதல்ல.. எதற்கும் அவரின் செயலாளரிடம் இதை பற்றி கேளுங்க" என்று முடித்துக்கொண்டான்.

இப்படிதான் பதில் வரும் என்று யூகித்து இருந்ததால்.. கையோடு அவனிடமே போன் நம்பரை வாங்கிக்கொண்டு அங்கிருந்து நகர்ந்தாள்.

ஊரை விட்டு இத்தனை தள்ளி இருக்கும் இந்த இடத்திற்கு காலை எட்டு மணிக்கு எந்த செயலாளரும் வந்து இருக்க மாட்டார்கள்.. பத்து மணி வரை காத்திருக்க வேண்டியதுதான் என்று விரத்தியாக மூச்சு விட்டுக்கொண்டு தன் வேலையில் ஈடுப்பட்டாள்!!!

சரியாக பத்து மணிக்கு அந்த செயலாளரிடம் ஒரு அப்பாயின்மென்ட் வேண்டும் என்று போன் செய்து கேட்க...

ஏன் எதற்கு என்று ஆயிரம் கேள்விகளைக் கேட்டதோடு தன் பூர்வீகத்தையே கேட்ட அந்த அம்மணி கடைசியில் "ஐந்து நிமிஷம் கழித்து போன் பண்ணுங்கள் பார்த்து சொல்கிறேன்" என்று போனை வைத்துவிட்டார்.

போன் பண்ணுங்கள் என்று சொன்ன பெண்மணி மூன்றாவது நிமிடத்தில்...

அவரே மீண்டும் அழைக்க... எப்படியும் "இல்லை" என்று சொல்ல போகிறார் என்று நினைத்த மங்கிக்கு இன்ப அதிர்ச்சியாக தயங்கிய குரலில்..

"அதிக பட்சமாக ஐந்து நிமிஷம் அவ்வளவு தான் கொடுக்க முடியும்... அதுவும் மாலை ஐந்து மணிக்கு மேல வாங்க.. எப்ப நேரம் கிடைக்குதோ.. மீட்டிங்கிற்கு மத்தியில் இருக்கும் நேரத்தில் போகலாம்" என்று கூறிவிட்டு... அடுத்த பதினைந்து நிமிஷம் "நவாப் சார்" முன்னால் எப்படி நடந்துக்கொள்ள வேண்டும் என்று கிலாஸ் எடுத்தார்.

ஒரு வழியாக போனை வைத்தவிட்டு நிமிர்ந்தவளுக்கு தலை சுற்றியது என்ன தான் பெரிய ஆளாக இருந்தாலும்.. உள்ளே போனதும் சலாம் வைப்பதில் ஆரம்பித்து... பத்தடி தூரம் தள்ளி நிற்க வேண்டும்... அவரே கை கொடுத்தால் தான்

கொடுக்க வேண்டும்.. அவரே பேச ஆரபித்தால் பேச வேண்டும்.. அவர் பேசும் போது குறுக்கால் பேச கூடாது என்று இருக்க போகும் ஐந்து நிமிஷத்திற்கு ஐம்பது ரூல்ஸ் சொல்லி விட்டு போனை வைத்தார்.

இந்த "நவாப் சார்" சரியான கிறுக்கனாக இருப்பானோ?!? ரூல்ஸ் எல்லாம் நினைவு வைத்துக்கொண்டு இருந்தால் அவள் எப்படி அவனிடம் பேச வந்ததை நினைவு வைத்துக்கொள்ள முடியும்?? அப்படி அவனை போய் பார்த்து தான் ஆக வேண்டுமா?? என்ற கேள்வி எழ...

"பொது விதி என்று ஒன்று இருக்கிறது.. யாருக்கு தேவை இருக்கோ.. அதை அவர்கள் தான் முயன்று பெற்றுக்கொள்ள வேண்டும்... குழந்தையாக இருக்கும் போது அழாமல் பால் கூட கிடைக்காது என்று தெரியும் நமக்கு... ஏனோ வளர்ந்த பிறகு அந்த விதியை மறந்துவிட்டு எல்லாமே தானாக நம் கைக்கு வந்து விழ வேண்டும் என்று தவம் இருக்கிறோம்..." என்று அவளின் பாட்டி சொல்வதுண்டு!!!

செயலாளர் சொன்ன மாதிரியே சரியாக ஐந்த மணிக்கு வந்து சேர.. வரவேற்பு அறையில் இருந்து உள்ளே சென்றவளுக்கு அன்று பிருந்திவி ராஜுடன் பார்த்த பாடி காட்ஸ் அங்கு நிற்பதை கண்டு யோசித்தபோதுதே... மனம் முழுக்க அந்த ஐந்து நிமிஷத்தில் என்ன பேச வேண்டும் என்று மிக

தீவிரமாக வரிசையிட்டப் படியே இருந்ததால் அதை புறம் தள்ளினாள்.

ஆனால் அவள் எண்ணத்திற்கு நேர்மாறாக அவள் வந்தவுடனே உள்ளே அனுப்பி வைத்து விடவில்லை..!!!

ஐந்து மணிக்கு வர சொன்னவளின் பொருமை அடுத்து வந்த நான்கு மணி நேரம் அங்கே இருந்த ரீஷப்ஷனில் உட்கார வைத்து சோதிக்க...நாளை அந்த குதிரைகளை அழைத்து செல்ல எல்லா ஏற்பாடுகளும் நடந்துக்கொண்டு இருக்கிறது என்பதால் மட்டுமே பல்லை கடித்துக்கொண்டு நூல் இழையில் தொங்கிய பொருமையை கடைப் பிடித்துக்கொண்டு அமர்ந்திருந்தாள் மேக மித்ரா!!!

ஒரு வழியாக இரவு ஒன்பதரைக்கு அவளை அனுப்ப... உள்ளே போனவளுக்கு மறக்காமல் பத்து தடவை சலாம் வைக்க சொல்லி அனுப்பியதால் கையை தூக்க.... தூக்கிய கை தூக்கியப்படி காற்றில் நின்றது!!!

காரணம்... அவள் சற்றும் எதிர்பாராது "பிருத்திவி ராஜ்" அங்கே சுழல் நாற்காலியில் தன் கூர்மையான கண்களால் அவளை ஊடுருவி பார்த்தப்படி உட்கார்ந்திருந்தான்!!!

வார்த்தைகளை கொண்டு சொல்ல முடியாத அளவு அதிர்ச்சியில் கற் சிலையாய் உரைந்து போய் அவனை பார்த்தவள்... சலாம் போட போன தன் கைகளை மார்ப்பின்

குறுக்கே கட்டிக்கொண்டு நிமிர்ந்து நின்றவள் இத்தனை நேரம் வேண்டும் என்றே காக்க வைத்தவனை பார்த்த கண்கள் கோபத் தீ மூள..

"ஐந்து நிமிஷம் உங்களை பார்க்க நான்கு மணி நேரம் வெளியே உட்கார வைத்த போதே யூகித்து இருக்கனும் இல்லை??" என்று வார்த்தைகளில் அனல் கக்க கூறியவள் "ஆனா அது முக்கியம் இல்லை... நான் எதுக்கு வந்தேன்.." என்று அவள் வாயை திறக்கும் முன்னே "போதும்" என்பது போல் கைகளை தூக்கி நிறுத்தி அவளை தடுத்தவன்..

"எந்த உரிமையில் இந்த க்ளிப்பின் கொள்கை சார்த்த முடிவில் விமர்சனம் செய்ய இங்கே வந்தாய்?? சோட்டா நவாப்பிற்கும் உங்களுக்கும் இருக்கும் சம்பந்தத்தை வைத்தா??" என்று காரசாரமாக அவனிடம் கேள்வி வந்தது.

"சோட்டா நாவப்?? சித்??" என்று இன்று தான் அந்த பெயரையே கேட்பது போல் தடுமாறியவள் பின் மெல்ல சித்திற்கும் இவனுக்குமான சம்பந்தம் என்ன என்று அதி வேகமாக மூளை அலசி ஆராயத் தொடங்க.. விஷயங்கள் மெல்ல புரிய ஆரம்பிக்க ஏன் அவன் அறைக்குள் போக அத்தனை கெடு பிடி என்று ஆரம்பித்து பாடி காட் வரை காரணங்கள் அடுக்கிக்கொண்டு வர.. அயர்ந்து போய் நின்றாள்!!!

"நவாப் சார்... நவாப் ஜி.. நவாப் பையா" என்று விதவிதமாக அழைக்கவே அது அவனுடைய பெயர் என்று நினைத்தாலே தவிர சித்திக்கின் சோட்டா நவாப் என்று பட்டபெயரோடு இதை தொடர்ப்பு படுத்தவே இல்ல!!! இதற்கே அவனும் ஹைதிராபாத்தை சார்ந்தவன் என்பதையோ அவனுடைய அண்ணாக இவன் இருப்பான் என்று அவள் கனவில் கூட நினைக்காத விஷயமாக இருக்க.. அதை நம்புவதற்கு இன்னும் வெகு சிரமமாக தான் இருந்தது!!!

உருவத்தில் எப்படி சகோதர்களுக்குள் சம்மந்தம் இல்லையோ அதே போல் குணத்திலும் சம்பந்தம் இருப்பது போல் தோன்றவில்லை. எப்பயும் சிரித்த முகமாய்.. நட்புணர்வுடன் பேசி பழகும் அந்த சித்திற்கும் இருக்கமான முகத்துடன் ஒரு வார்த்தை பேசுவதற்கே ஆயிரம் முறை யோசிக்கும் இவன் எப்படி அண்ணனாக இருக்க முடியும்?? என்று வாயில் வந்த கேள்வியை அடக்கியவள்..

"பிருத்திவி.." என்று ஆரம்பித்து "சாரி.. நீங்க இப்போ சொல்லும் வரை உங்க இருவருக்குமான சம்பந்தம் எனக்கு தெரியாது... இன்னும் கேட்க போனால் என் வீட்டில் கூட ஹைதராபாத்தில் இருக்கும் போலோ கிளப்பில் தங்குகிறேன் என்று தெரியுமே தவிர உங்க குடும்பத்திற்கும் இதற்கும்

சம்பந்தம் இருக்கு என்று கூட தெரியாது.." என்று அழுத்தமாக பேசியவள்...

"நீங்க சித்தோட அண்ணாவா இருந்தாலும் சரி இல்லை சித்தார்த்தோட அண்ணாவா இருந்தாலும் எனக்கு ஒன்று பிரச்சனை இல்லை...நான் பேசுவது ஒரு டாக்டர் என்ற முறையில்தான் பேச வந்தேன்" என்று வார்த்தையில் ஒரு நிமிர்வுடன் மொழிந்தவள்... "அந்த குதிரைகள் கடைசி வரை உயிர் வாழ வாய்ப்பு கொடுங்கன்னு தான் கேட்கிறேன்" என்றாள் அவன் முகத்தை வெறித்து பார்த்தப்படி.

"முடியாது" என்றான் கொஞ்சம் கூட யோசிக்காது.

நேற்று இரவு அவளுடன் நடந்து வந்தவன் இவன் தானா என்று சந்தேகம் கொள்ளும் அளவு அத்தனை தூரம் மாறி இருந்தான்.. பேசிய விதத்தில்... பார்த்த முறையில்.. நிஜமான ராஜாக்கள் இன்று வரை இருந்திருந்தால் இப்படிதான் பேசுவார்களோ என்று தோன்றும் படியாக இருந்தது அவனும்... அவனின் பதிலும்.

"அவைகள்... இங்கே இருப்பதில் உங்களுக்கு என்ன பிரச்சனை??" என்றாள் புரியாது.

"நான் கொடுப்பதாக வாக்கு அளித்துவிட்டேன்.. கொடுத்த வாக்கை மாற்றும் வழக்கம் என் குடும்பத்தில் இல்லை" என்றான் திமிராக.

"வாக்கா?? நீங்க சொன்ன சொல்லை காப்பாற்ற இரண்டு உயிரை கொல்வது என்பது எந்த வகையில் நியாயம்??"

"நான் கொல்லவில்லை.."

"நீங்க கொல்லவில்லை ஆனா யார் கொல்ல போகிறார்களோ அவர்களுக்கு அதை கொடுக்குறீங்க.. அதற்கு பெயர் என்ன?" என்றாள் தன் பாக்கெட்டில் கையை விட்டபடி ஆத்திரம் கண்களை மறைக்க.

"சாகும் கட்டத்தில் இருக்கும் அந்த குதிரையை கொடுப்பதில் என்ன தவறு?"

"அது சாகும் நாளை குறிக்க நமக்கு என்ன உரிமை இருக்கு??.. இல்ல அது சாகும் வரை பொருக்க கூட முடியாத அளவு என்ன அவசரம்?" என்றாள் தாள மாட்டாது.

"டைம்" என்றான் அவன் கையில் இருந்த டிசைனர் வாட்சை காட்டி.. என்ன டைம் என்று யோசிக்கும் போது தான்... அவளுக்கு கொடுக்கப்பட்ட ஐந்து நிமிஷம் முடிந்துவிட்டதாம். அதை தான் அப்படி தெரிவித்தான்.

"ஆனா..." என்று அவள் ஆரம்பித்ததை காதிலே வாங்காது தன் இருக்கையை விட்டு எழுந்தவன் அவளை ஒரு அலட்சியமாகப் பார்வை பார்த்து விட்டு தன் அறையை விட்டு வெளியேற கால் எடுத்து வைத்தவன்.. பின் ஏதோ யோசனை வந்தவனாக நின்று திரும்பி..

"என் முடிவு இறுதியானது" என்று அவன் கூறிய விதத்தில் எதிர்த்து கேள்வி கேட்கவும்.. மறுத்து பேசவும் ஏன் பதில் சொல்லக் கூட அங்கே இடமிருக்கவில்லை!!!

முதல் முறையாக விளையாட்டு வீரன் பிருத்திவி ராஜாவாப் பார்க்காது நவாப்பாக உணர்ந்த தருணம் அது...

மணிக்கணக்காக வாதம் பண்ணவில்லை... தர்கம் பண்ணவில்லை... குரல் உயர்த்தி கத்தவில்லை.. ஆத்திரப் படவில்லை... ஐந்து நிமிஷத்தில்... ஐந்தே நிமிஷத்தில் அவன் எண்ணி பேசிய வார்த்தகளையின் விளைவு... ஆயுதம் எதுவுமின்றி வார்த்தைகளையே கத்தியாக.. தன் நெஞ்சில் இறக்க... வலியின் கடுமை தாங்காது சுருண்டாள் மேக மித்ரா... குற்றுயிரும் குலையுயிருமாக மனதால் அடிப்பட்டவளை திரும்பி கூட பார்க்காது எப்போதோ வெளியேறி இருந்தான் நவாப் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான்!!!

எப்படி அங்கே இருந்து வெளியே வந்தாள்... எங்கே போகிறாள் என்று மனதில் எதுவும் பதியவில்லை..

மனம் முழுக்க... ஐந்து மணி நேரம் இதற்காகவா காத்து இருந்தாள்..??? தோற்கவே கூடாத ஒன்றில் தோற்றும் போய் எதையும் செய்ய வக்கற்று நின்றுக்கொண்டு இருப்பது போல் உணர... மனதில் பொங்கிய வலியும்.. அந்த வலி தந்த தடுமாற்றமும்.. கால் போன போக்கி நடந்தாள்.

அப்படி எத்தனை நேரம்.. எத்தனை தூரம் நடந்தாளோ அவள் அறியாள்.. இதை தடுக்க வேண்டும்... .. தடுத்தே தீர வேண்டும் என்று மனது ஜபமாக சொல்லிக்கொண்டே இருக்க... எப்படி தடுப்பது என்று நாலாபுறமும் ஆராய்ந்தாள்!!!

நவாப் குடும்பம் என்று தெரிந்த பின்னும் சித்தின் மூலமாக எதாவது முயற்சிக்கலாம் என்றால் அண்ணனின் சொல்லை வேதவாக்காக கருதும் மறபில் உதிர்த்தவனாக இருக்க அதை கை விட்டாள்.

அடுத்தாக அவளின் பாட்டி நாட் நாட் செவன் வழியில் எதாவது நாடகம் அரங்கேற்றம் பண்ணி குதிரைகளை எடுத்து செல்வதை கவிழ்க்கலாம்தான்.. ஆனால் அது அவளின் இரண்டாது அண்ணன் பத்ரி மற்றும் சித்தின் நட்பை பாதித்து விடக் கூடாதே என்பது தான் அவளின் அச்சம். காரணம் பத்ரியின் ஆத்ம நண்பன் சித்தாயிற்றே!!!

சித்திக்கின் நட்பு எத்தகையது என்றால் பத்ரி கேட்டுக்கொண்டான் என்ற ஒரே காரணத்திற்காக பல கோடிகள் முதலீடு செய்து சச்திதேவ் குடும்பத்தோடு ஹோட்டல் தொழிலில் இணைந்து செயல் பட.. சங்கியின் பிடிவாதத்தால் தொழிலில் வருடா வருடம் நஷ்டம் ஏற்பப்பட்ட போதும் அதை நண்பனுக்காக வாயை திறந்து கூட வெளியே சொல்லாத

உத்தமனாக இருக்கும் பட்சத்தில் எதையும் துணிந்து செய்யவும் முடியவில்லை...

இத்தோடு மூன்றாவது அண்ணன் கார்த்திக்கோடு சித் கைகோர்த்து வேறு ஒரு தொழிலும் ஈடுப்பட்டிருக்க.... தான் தவறாக எடுத்து வைக்கும் ஒரு சின்ன அடி இடியாய் அவர்கள் வாழ்க்கையில் விழக் கூடும் என்று உணர்ந்தப்படியால் எதுவும் செய்யவும் முடியாது அதற்காக அப்படியே விடவும் முடியாது தவியாய் தவித்தாள் மேக மித்ரா!!!

தன் செயல் யாரையும் எப்படியும் எந்த விதத்திலும் பாதிக்கக் கூடாது என்பதில் தீவிரமாக ஆராய்ந்து ஈடுப்படுபவள்!!! இதுதான் சங்கிக்கும் மங்கிக்கும் மிக முக்கியமான வித்தியாசம்!!!

என்ன செய்து என்று யோசித்தப்படி நடந்துக்கொண்டே இருந்தவளுக்கு ஒரு கட்டத்திற்கு மேல் கால்கள் வலிக்க ஆரம்பிக்க... ரூம்மிற்கு செல்ல தொடங்கியவளுக்கு பின்னால் பார்வைக்கு எட்டாத தூரத்தில் ரஃபிக் பாடி காட்ஸ் நின்று இருந்ததை மனஉளைச்சலில் அவள் கவனிக்கவே இல்லை!!!

மனம் முழுக்க அந்த குதிரைகள் பற்றியே நிறைந்து இருக்க அறையின் கதவைத் திறக்கும் போதே சங்கியிடம் இருத்து போன் வந்ததது.

போனை எடுத்து காதில் வைத்தவளுக்கு ஹலோ சொல்லும் முன் "என்ன ஆச்சு.. உடம்பிற்கு எதுவும் முடியவில்லையா?" என்று காதில் அறைந்தது அவளின் குரல்.

இதுதான் சங்கிக்கும் அவளுக்கும் உள்ள தொடர்பு முழுவதுமாக எதையும் மறைக்க முடியாது... "எனக்கு ஒன்றும் இல்லை.. இங்கே ஒரு குதிரை சாக பிழைக்ககிடைக்குது அதுதான்"

"ஓ!!! நான் கூட உனக்கு உடம்பு சரியில்லையோன்னு நினைத்தேன்..."என்று ஆரம்பித்த சங்கி அடுத்த பத்து நிமிடம் வளவளத்துவிட்டு போனை வைத்துவிட்டாள்.

நேற்றே தூங்காததின் விளைவுடன் அன்றைய நடை பயணமும் சேர்ந்துக்கொண்டதால்.. குளித்துவிட்டு படுத்தவுடன் அசதி காரணமாக தூங்கியும் போனாள்!!!

காலை கண் விழித்தவளுக்கு நெஞ்சை கசிக்கிப் பிழிந்த வேதனை தாங்கிக்கொண்டு என்ன பண்ணலாம் என்ற யோசனையுடன் முகாமிற்கு சென்றவளுக்கு அடுத்த அதிர்ச்சி காத்து இருந்தது.

காலை பத்து மணிக்கு மேல்தான் குதிரைகளை எடுத்து செல்வார்கள் என்று நினைத்துகொண்டு அங்கே சென்றவளுக்கு பேரதிர்ச்சியாக இவள் ஏழு மணிக்கு செல்லும் முன்னே அவைகளை கொண்டு சென்று இருந்தனர்.

தான் காணும் காட்சியை நம்ப கூட முடியாது அங்கே வேலை செய்யும் ஆட்களை அவர்களிடம் விசாரிக்க.. அவர்கள் சொன்னதில் இவளுக்கு புரிந்ததில் ஐந்து மணிக்கே அவைகளை ஏற்றிக்கொண்டு சென்று விட்டனர் என்ற வரை தான் விளங்கியது.

கடைசியாக அவைகளைப் பார்க்க கூட முடியாது போய் விட்டேதே என்பது ஒரு புறம் நெஞ்சை அரித்தது என்றால் அவைகளுக்கு தன்னால் எதுவும் செய்ய முடியாது கை கட்டி நின்ற அவல நிலையை பற்றி நினைக்கவே கேவலமாக இருந்து!!!

நெஞ்சில் பொங்கிய குற்ற உணர்வையும்.. பாரத்தை மறைக்க அன்றைய வேலையில் ஈடுப்பட்டாள்.

எப்பயும் போல் தன்னிடம் வந்து பேசிவிட்டு எதையாவது சாப்பிட கொடுக்க முயற்சி செய்து விட்டு... அதில் தோல்வி கண்ட போதும் சிரித்த படி செல்லமாக முறைத்துக்கொண்டு போகும் அவள் ஏன் தான் கனைத்து... குதித்து என்று தான் செய்ய கூடிய எல்லாம் சேஷ்டையும் செய்த பின்னும் கூட திரும்பி கூட பார்க்காது இருக்கிறாள் என்று புரியாத செத்தக்கிற்கு ... ஏதோ சரியில்லை என்று புரிந்தது... புரிந்த கையோடு தன் விநோத செயல்களை எல்லாம் மூட்டை கட்டி

நிறுத்திவிட்டு அமைதியாக அவளை அங்கிருந்த படி பார்த்தவண்ணம் நின்றிருந்தது!!!

தன்னை திரும்பி கூட பார்க்காத செத்தக் முதல் முறையாக வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டு இருக்கிறது என்பதை பற்றி எந்த பிரகஞ்சையும் இன்றி தன் வேலை உண்டு தான் உண்டு என்று வேலையில் புதைத்துக்கொண்டாள் மேக மித்ரா.

எத்தனை நேரம் மணலில் தலையை புதைத்துக்கொண்டாளும் மூச்சு விட வெளியே வந்து தானே ஆக வேண்டும்? அதை சுத்தமாக மறந்து போனவளாய்... மறுநாள் செய்யவதற்காக திட்டமிட்ட வேலைகள் கூட இழுத்து போட்டுக்கொண்டு வேலை செய்தவளை மற்ற டாக்டர்கள் சாப்பிட அழைத்தார்கள்.

மதியமும் சாப்பிடாது மாலை உணவையும் "வேண்டாம்" என்று மறுக்க... அதை காதிலே வாங்காது இழுத்து சென்று உட்கார வைத்து சாப்பிட வைக்க... மனம் இல்லாத போதும் சாப்பிட்டு எழுந்தவளுக்கு அடித்து போட்டாற் போல் அசதியாக இருந்தாலும்... உள்ளே புழுங்கிய மனதை வெளியே காட்டாது..

அமைதியாக "நான் ஒரு வாக்கிங் போய்விட்டு அப்புறம் படுக்க போகிறேன்.. குட் நயிட்" என்று பொதுவாக சொல்லிவிட்டு நடந்தாள்!!!

கண்மண் தெரியாது மூச்சு வாங்க நடந்துக்கொண்டு இருந்தவளின் காதில் பின்னாடி வெகு சமீபத்தில் குதிரையின் குளம்பு சத்தம் கேட்க...

கொட்டகையில் இருக்கும் குதிரை தப்பி ஓடி வருகிறதோ?? கூட்டமாக பழகி இருக்கும் குதிரை இப்படி இரவில் தன் இஷ்டத்திற்கு காட்டு தனமாக ஓடிவருகிறது என்றால் அது மிகவும் ஆபத்தானது ஆயிற்று என்று அறிந்ததால் நாலாபுறமும் கண்களால் பாதையை விட்டு பதுங்க இடம் தேடியப்படி ஓட.... இரண்டு அடி எடுத்து வைத்திருப்பாள்.. ஆனால் மூன்றாவது அடி எடுத்து வைக்க அவளின் பாதங்கள் பூமியில் இல்லாது காற்றில் ஆட.. என்ன நடக்கிறது என்று யூகிக்கும் முன் உயரே காற்றில் பறந்தாள்....

# அத்தியாயம் 18

ஒரு நொடி தரையில் ஓடிக்கொண்டு இருந்தவள் மறுநொடி காற்றில் பறக்க என்ன இது என்று உணரும் முன் ஆறு அடி உயரமிருந்த செத்தக்கின் மேல் அமர்ந்திருந்தாள்!!!

அவளை இப்படி அலேக்காக "பிருத்திவி ராஜ்" அல்லாது வேறு யார் தூக்க முடியும்??

ஏதோ குதிரை ஓடி வருகிறது என்று பயந்து ஓடியவளுக்கு அது செத்தக் தான் என்று புரிந்து அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்குள்...

தன் ஓட்டத்தை நிறுத்திவிட்டு இவளை திரும்பிப் பார்த்த செத்தக்.. அடுத்த அதிர்ச்சி தரும் விதமாக அவளின் கேப்பரிக்கும்... ஷூவிற்கும் இடையில் இருந்த காலை தன் நீண்ட மூக்கால் ஒருமுறை தேய்த்து விட்டுக்கொண்டு... நிமிர... பின்னால் அமர்ந்திருந்த ரஃபிக் புறப்படும் படி சின்னதாக உந்தினான்... மிக சந்தோஷமாக கனைத்துக்கொண்ட செத்தக்.. கால்கள் தரையில் படாது மேலே எகிறி குதித்தப்படி நாலு கால் பாய்ச்சலில் பறந்தது!!!

கடந்த ஒரு வாரத்தில் தனக்கு கிடைத்த சொற்ப நேரத்தை எல்லாம் செத்தக்குடன் கழிக்க முனையும் போது எல்லாம் என்

முகத்திலே விழிக்காதே.. என்று வாயை திறந்து பேசாத குறையாக முகத்தை திருப்பிக்கொண்டு போன அதே குதிரையா இன்று அவள் எதுவும் கேட்காமலே தன் அன்பை வெளிப்படுத்தும் விதமாக அவளின் காலை தன் முகத்தால் உரசியது?!?

இல்லை அவள் ஆசைக்கொண்ட மனதின் கற்பனையா என்று சந்தேகம் எழ.. ??

அப்படியே பின்னால் அமர்ந்திருந்தவனின் காலரை பற்றி முன்னிற்கு இழுத்தவள்.. தன் தலையை திருப்பி... கண்கள் பளபளக்க.. "செத்தக்.. இப்ப செத்தக் என்.. காலை.." என்று வார்த்தைகள் வராது அவள் தடுமாற...

கேள்வியை புரிந்துக்கொண்டவன் "ஆமாம்" என்பது போல் தலையை ஆட்டியவனின் கண்கள் சந்தோஷமும் ஆனந்த பெருவெள்ளத்தில் துள்ளி குதிக்கும் அவளின் முகத்தை அள்ளி பருகியவாரு அவள் பார்த்தப்படி இருக்க...

அந்த உண்மையின் பாரத்தை தாங்காது அப்படியே தன் கழுத்தை அவன் மார்ப்பில் சாயந்தவளின்... விரல்கள் அவன் காலரில் அப்படியே பற்றிய படி இருக்க.. பின் மெல்ல முக்தை திருப்பி முகத்தில் மோதும் காற்றை கண்களை மூடி ரசித்தவளுக்கு... நிசப்தமான இரவின்... வீசும் காற்றின் ராகத்திற்கு... செத்தக்கின் குளம்போசை இசையாக தாளம்மிட...

பின்னால் அமர்ந்திருந்தவனின் வெப்பமான மூச்சு காற்றோ... ராகத்திற்கும், தாளத்திற்கும் ஏற்ற பல்லவியாக இனிமையாக இணைசேர்க்க... தான் எங்கே இருக்கிறோம்.. என்று மறந்தவளாய்... அதை ரசித்தப்படி வந்தவளுக்கு சற்று நேரத்திற்கு முன்பு உள்ளே எரிமலையாய் கொழுந்து விட்டு எரிந்த தீ மறந்தே போய் இருந்தது...

கண்களை மூடி தன்னை மறந்து இருந்தவளுக்கு... அடிக்கும் ஊதக் காற்றை மீறி... காதில் தகிக்கும் வெம்மையை உணர... நொடிப் பொழுதில் அது உடம்பெல்லாம் அந்த வெம்மையின் தாக்கம் பரவ ஆரம்பிக்க... அந்த புது உணர்வுகளை ரசித்தப்படி இருந்தவளுக்கு அப்பொழுது தான் அந்த வெம்மைக்கு காரணம்..

பிருத்திவி ராஜ்... ஏதோ தன் காதில் உதடு உரசியப்படி பேசுகிறான் என்று புரிய... எதுவும் காதில் விழவில்லை...

பேசிய வார்த்தையோ மனதில் பதியவில்லை.. பேசும் பொருளையோ மூளை உணரவில்லை... ஆனால் பேசுவபவனின் குரலும், உச்சரிக்கப்படும் வார்த்தையின் வெம்மையும் நிராயுதபாணியாக நின்றவளை அந்த தாக்குதல் ஒவ்வொரு அனுவிலும் தாக்கி அவளை உயிர்த்து எழ செய்ய...

தன் அழிவிற்கு காரணமாகும் "நெருப்பை" தானாக நாடி தேடி செல்லும் விட்டில் பூச்சியை போல்... இத்தனை நேரம்

அவன் காலரை பற்றி இருந்த விரல்கள் அவளையும் அறியாது... அவனின் கழுத்தை சுற்றி இருந்தது!!!

மங்கி அவன் மேல் சாய்ந்த வினாடியே கையில் இருந்த செத்தக்கின் கயிறு வழுவி விழுந்தை கூட உணராது... அவளின் கொடி இடையை தன் கை சேர்த்து அனைத்திருந்தவனுக்கு... அவளின் சின்ன தீண்டல்... அவனை கட்டி இருந்த தளைகளை எல்லாம் வேருடன் வெட்டி சாய்க்க... சிப்பியாய் இருந்த அவளின் சின்ன செவி மடலில் எதையோ முனுமுனுத்தப்படி முதல் முத்தம் பதித்தான்!!!

காதில் அவன் கொடுத்த முத்தத்தின் எதிரொலி நேராக மூளையை சென்று தாக்கி.. ஸ்தம்பிக்க செய்ய... கண்களை திறக்காது.. திறக்க முடியாது.. கிடந்தவளை கண்டவனின் உதடுகள்... போரில் திட்டமிட்டு எதிரியின் கோட்டைக்குள்ளே மெல்ல முன்னேறி... சென்ற இடமெல்லாம் ஜெயக்கொடியை பறக்கவிட்டு மொத்த கோட்டையும் தன் கை பிடியின் கீழ் கொண்டு வரும் கைதேர்ந்த தளபதியை போல்.. அவனின் உதடுகள்.. மிக மெல்ல நெற்றி.. கன்னம்.. மூக்கின் நுனி என்று முத்தமிட்டே முன்னேறி அவனின் உதட்டாலே அவளை ஆட்கொண்டது!!!

இடையை அனைத்திருந்த விரல்களோ அவளை அவனோடு ஒட்டி சேர்த்துக்கொள்ள... ஓட்ட பந்தைய வீரனை

போல் எகிறி குதித்து துடிக்கும் இதயத்தை அவளின் அணிந்திருந்த டிசட்டையும் தாண்டி உணர முடிந்தது...

நாலா புறத்திலும் இருந்து உணர்ச்சி பேரலைகள் ஒரே நேரத்தில் அவளை முழுகடிக்க.. எல்லாவற்றிக்கும் சிகரமாய்... மங்கியின் மென்மையான கன்னத்தை.. ஒரு நாள் ஷேவ் செய்யப்படாத முள் தாடி குத்தி நினைவிற்கு இழுக்க...

பிரிக்க முடியாத கண்களை பிரித்து பார்த்தவளுக்கு அவங்கே என்ன மாதிரி உணர்வு என்றே சொல்ல முடியாது உணர்ச்சியில் பெருக்கில் கொந்தளித்த பிருத்திவி ராஜின் விழிகள் அவளை ஊடுறுவி பார்த்தப்படி நின்றவன்... பின் மெல்ல குனிந்து அவளின் செவ்விதழ்களை சிறைப்பற்றி தன் ஜெயக்கொடியை நாட்டினான் நவாப் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான்!!!

தண்ணீருக்கு அடியில் இத்தனை நேரம் மூச்சு காற்றிக்கு தினறியது போல் அலறி அடித்துக்கொண்டு எழுந்து அமர்ந்த மேக மித்ரா... வேகமாக மூச்சு விட்டப்படி!!!

இவன் எழுந்த விதத்திலேயே அருகில் படுத்திருந்த சங்கியும், சிம்பியும் அலறி புடைத்துக்கொண்டு லைட்டை போட்டு "என்னாச்சு... என்னாச்சு" என்று சங்கி விசாரிக்க... மங்கியோ அமைதியாக சென்று கிலாசில் தண்ணீர் கொண்டு வந்து நீட்டியது!!!

"ஒன்றும் இல்லை கேட்ட கனவு" என்று சங்கியை சமாதானம் படுத்தியப்படி சிம்பி கொடுத்த தண்ணீர் குடித்தவள் அமைதியாக படுத்தாள்.

அன்றைய முத்தத்தை நினைத்து பார்த்தற்கே இப்படி மூச்சு முட்டியது என்றால் அன்றைய அவளின் நிலை என்னவாக இருந்திருக்கும் என்று சொல்லவும் கூடுமோ?!?

ஏன் வாயால் விஷம் சாப்பிட்டவர்களை கூட பிழைக்க வைக்க முடியும் ஆனால் காதில் விஷத்தை ஊற்றிக்கொண்டவர்கள் பிழைக்க வைக்க முடியாது என்று மகா பெரும் உண்மை இப்போது புரிந்தது!!!

முதன் முதலாக அவன் செவியில் தானே முத்தம் கொடுத்தான் அதனால் தான் இத்தனை விபரிதம் என்று மூளை சப்பை கட்டு கட்டிய போதும்... அன்று ரஃபிக் காதில் எதையோ சொன்னான்...

நிச்சயம் அது தமிழ் தான் என்று ஞாபகம் இருக்கிறது.. என்னவாக இருக்கும் என்று பரபரப்பாக மூளையை கசக்கி யோசிக்கும் போதே... "மாட்டேன்" என்று சொன்னதாக ஞாபகம் மிக லேசாக வந்தது!!!

மாட்டேனா?? என்ன மாட்டேனா?? என்று என்ன யோசித்தும் ஞாபகத்திற்கு வரவே இல்லை...

அவள் இருந்த மயக்க நிலையில் எதுவும் காதில் விழவில்லை என்பது ஒருபுறம் இருக்க... அதன் பிறகு அரங்கேறிய அனர்த்தகளின் இவளுக்கு சரி பாதி பங்கு இருக்கிறது என்பதை அவள் மனம் சொல்லிகாட்டி சுட்டது!!!

பேசுவதற்கு கூட முன் பின் யோசித்து பேசும் மேக மித்ரா.. அன்று வாழ்க்கையில் முதல் முறையாக எதை பற்றியும் யோசிக்காது உணர்ச்சிகளின் குவியலாய் இருந்த போது செய்த விஷயங்கள் அவள் வாழ்க்கையே திசை மாற்றி கொண்டு சென்று விட்டது!!!

இனியும் தூக்காமல் இருந்தால் நாளை சமாளிப்பது கஷ்டம் என்று தன்னை தானே திட்டிக்கொண்டே எதை பற்றியும் யோசிக்காது தூங்க போனவள்... அதில் வெற்றியும் கண்டாள்!!!

ஆனால் அவளின் தூக்கத்திற்கு அன்று அற்ப ஆயுள் என்று அறிந்திருந்தாள் அவ்வளவு கஷ்டப்பட்டு முயற்ச்சித்திருக்க மாட்டாள்...

விடிந்தும் விடியாதுமாக அம்மா அறைக்கு வர...

"என்னம்மா??" என்று கண்கள் எரிய எழுந்த அமர்ந்த மங்கியின் முகத்தை பார்த்த மல்லிகா..

"இன்று உங்களுக்கு கல்யாணமா இல்லை அதுக்கா??" என்று அங்கே நின்று இருந்த சிம்பியை கை காட்டியவர்.. "எப்படி டீ இப்படி தூங்கறிங்க.??" என்று கடுப்பாக மொழிந்தவர்

பக்கத்தில் இடியே விழுந்தாலும் அசராது தூக்கும் சங்கியை உலுக்கு எழுப்பி விட்டார்.

"இரவு தானேம்மா" என்று சங்கி அலுப்பாக மொழிந்துக்கொண்டு இருக்கும் போதே கதவை தட்டிக்கொண்டு உள்ளே வந்த அவர்களின் அத்தை..

மருமகள்களை இருவரை பார்த்து சிரித்தவர்... "இன்னும் ஒரு மணி நேரத்தில் தயாராகி கடைசியில் இருக்கம் ஹாலுக்கு வந்துவிடுங்கள்... வீட்டுப் பெரியவங்க எல்லாம் வந்து ஆசிர்வாதம் செய்வாங்க..." என்றார் அங்கே நின்று இருந்த சிம்பியையும் பார்த்து விட்டு எதுவுமே சொல்லாமல் சென்றுவிட்டார்!!!

அத்தையே வந்து சொன்னதற்கு பிறகு என்ன இருக்கு?? அதன் பிறகு எல்லாம் மின்னல் வேகம் தான்.. எழுந்து குளிந்து விட்டு வருவதற்குள் சச்சிதேவ் குடும்ப அங்கத்தினர் வந்து சேர.. அலக்காரம் என்ற பெயரில் அனல் பறந்தது!!!

ஒருவழியாக காலை ஏழு மணிக்கு அங்கே சென்ற மணபெண்களை... இரண்டு மணி வரை வாழ்த்து என்று பெயரில் உட்கார வைத்து ஆசிர்வாதம் செய்துவிட்டு பின் போனாக போகுதென்று அனுப்பி வைத்தனர்!!!

விட்டால் போதும் என்று ஓடி வந்த சகோதரிகளை ஒரு மணி நேரம் ஒய்வு எடுக்க சொல்லி விட்டு மாலை நான்கு வந்து

வந்து மனமக்களை கல்யாண வைப்பதற்கு தலை அலங்காரம் செய்யும் பணியில் அதற்காக வரவழைக்கப்பட்ட ஆட்கள் ஈடுப்பட...

"இந்த அலங்காரம் முடிந்தவுடன் அந்த கண்ணாமூச்சு விளையாட்டா??" என்றாள் சங்கி பாட்டியை பார்த்து கண் அடித்தப்படி.

"ஆமாம்... அவர்கள் வீட்டு சம்பரதாயப்படி மறைந்து வைக்கப்பட்ட பாக்மதியை எப்படி தூக்கிக்கொண்டு போனாரோ அதே மாதிரி நீங்கள் மறைந்துக்கொள்ள மாப்பிள்ளை வந்து உங்களை கண்டு பிடித்து தூக்கி வருவார்"என்றார் பாட்டி பெருமிதமாக.

"பாட்டி இங்க இருக்கும் அறைகளை பார்க்கும் போது... இந்த இடத்திற்கு எத்தனை நாள் ஆகும் என்னை தேடி

கண்டு பிடிப்பதற்கு??" என்றாள் அலுப்புடன் சங்கி.

"என்ன சங்கி அலிகான் ரத்தத்தை இத்தனை இளக்காரமாக நினைக்கிற...?? நிச்சயம் நாள் கணக்கில் இல்ல மணி கணக்கில் தேடி கண்டு பிடித்து விடுவார்கள்" என்றார் பாட்டி ரொம்பவே நம்பிக்கையாக.

"அட போங்க பாட்டி.. சித் மேல் எனக்கு அந்த நம்பிக்கை எல்லாம் இல்லை... இரண்டு வருஷமாக அவருக்காக காத்து இருக்கிறேன் என்பது கூட தெரியாது... மல்லுக்கட்டிக்கொண்டு

என்னிடம் சண்டை போட்டுக்கொண்டு இருந்தவருக்கு உள்ளுணர்வு எல்லாம் ஒன்றும் வேலை செய்யாது.." என்று அலுப்பாக மொழிந்தவள் "சித் கண்டு பிடிக்கவில்லை என்றால் கூட அவன் மானத்தை காப்பாற்ற நானே போன் பண்ணி எங்க இருக்கேன் என்று சொல்லி விடுவேன்" என்றாள் பறந்த மனதாக சங்கி.

"ஐய்யோ... அப்படி எதுவும் செய்து தொலைக்காதே.. அவரே உன்னை கண்டு பிடித்துவிடுவார்.. இந்த பக்கம் இருக்கும் ரூம்மில் எல்லாம் காற்று நல்லா வரும்.. அதனால் அங்கு இருக்கும் அறையில் மறைந்துக்கொள்" என்றார் மல்லிக்கா வரிந்து கட்டிக்கொண்டு.

"ம்ம்.." என்று தலை ஆட்டினாள் எப்படியாவது தன்னை சீக்கிரம் கண்டு பிடித்துவிடுமே என்ற ஆவலில்.

மங்கியோ தன்னை கண்டே பிடித்துவிடக்கூடாது என்ற எண்ணத்தில் தானே இடத்தை தேர்ந்துக்கொள்வதாக பொதுவாக சொல்லிவிட்டு... தீவிர யோசனையில் முழுகினாள்!!!

# அத்தியாயம் 19

மங்கியோ தன்னை கண்டே பிடித்துவிடக்கூடாது என்ற எண்ணத்தில் தானே இடத்தை தேர்ந்து எடுத்துக்கொள்வதாக பொத்தாம் பொதுவாக சொல்லிவிட்டு.. தீவிர யோசனையில் மூழ்கினாள்!!!

வீர தீரமாக பேசி விட்டாளே தவிர.. சங்கி சொன்னது போலவே அவளே முதலில் தொலையாமல் இருக்க வேண்டும்... என்று நினைத்தவளை அதற்கு மேல் யோசிக்க விடாமல் அலங்காரம் பண்ண அழைத்து வரப்பட்டடு இருந்த மூன்று பேர் அவளை சூழ்ந்துக்கொண்டு தலையை இப்படி திருப்பு... அப்படி திருப்பு... என்று நிமிடத்திற்கு ஒன்று சொல்லிக்கொண்டு இருப்பது போதாதென்று தலையில் ஹேர் பின்களையும் சகட்டு மேனிக்கு குத்திய விதத்தில் தலையில் எப்படியும் நூறாவது ஏற்றி இருப்பார்கள் என்று நினைத்துக்கொண்டாள்.

நல்ல காலம் சிம்பியை நிரல்யாவின் அறைக்கு இவர்கள் வரும் முன்பே அனுப்பியாகி விட்டது இல்லை என்றால் இன்நேரத்திற்கு அவள் முடியை பிடித்துக்கொண்டு இருப்பவர்களை கடித்து குதறி இருக்கும் என்று நிம்மதி பெரும் மூச்சு விட்டுக்கொண்டாள் மேக மித்ரா.

அடுத்த... ஒரு மணி நேரத்தில் மங்கியின் நீண்ட முடியை ஒருவழியாக அவர்கள் விரும்பிய விதத்தில்... உச்சியில் சின்ன பஃப் வைத்து.... ஐந்து கால் பின்னல் போட்டு ஒவ்வொரு பின்னலிலும் முத்து மற்றும் நீலம் பதித்த ஒரு சின்ன மயில் சொருகி வைத்திருந்தனர்!!!

அது கலையாமல் இருக்க ஸ்பேரே அடித்து செட் வைத்து விட்டு.. முகத்தில் மேக்கப் போட தொடங்கினர்.

"பெயின்ட் அடிப்பது போல் பூச வேண்டாம்.. நியூட்ரல் மேக்கப்... போதும்" என்றாள் மேக மித்ரா சங்கிக்கும் சேர்த்து.

இவள் சொன்னதை கேட்டு அந்த மேக்கப் ஆட்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள... அவர்கள் பார்த்த விதத்திலேயே ஏதோ விஷயம் இருக்கு என்று புரிந்தவள்..

"என்ன??" என்றாள் அங்கே குழுமி இருந்த ஆட்களை பார்த்தப்படி.

"நீங்க சொன்ன அதே வார்த்தையை தான்... நவாப்ஜி எங்களிடம் சொல்ல சொன்னதாக தகவல் வந்தது" என்று சிரித்தப்படி கூறியவள்... "ஒப்பனையே போடாத மாதிரி தெரியும் இந்த நியூட்ரல் மேக் அப் போட கொஞ்சம் நேரம் எடுக்கும் என்பதால் தான் நாங்கள் இத்தனை சீக்கிரம் வந்தோம் பேகம்ஜி" என்று முதல் முறையாக அவளை வெளி ஆட்கள் "பேகம்" என்று அழைக்க...

அதை அவள் காதில் வாங்கியது போல் கூட தெரியவில்லை... அவளின் எண்ணம் எல்லாம் ரஃபிக் சொன்ன பேச்சில் தான் இருந்தது!!!

ரஃபிக்... அப்படி சொன்னானா? இவள் என்ன பூசிக்கொள்ள வேண்டும் என்பது கூட அவனின் தீர்மானம் தானா?? இவன் யார் இதை சொல்வது என்று உள்ளே கோபம் வந்த போதும்.. முகத்தில் "பேன் கேக்கை" அப்புங்கள் என்று சொல்ல வாய் வராததால் எதுவும் சொல்லாது அமைதியாக இருந்தாள்.

இவளை போலவே சங்கியையும் மூன்று ஆட்கள் சூழ்ந்து ஒப்பனை செய்துக்கொண்டு இருக்க.. அவர்களை விலக்கி விட்டு "இப்ப இவங்க என்ன சொன்னாங்க "பேகமா??" அத்தையை தான் பேகம் என்று அழைத்து கேட்டு இருக்கிறேன்??" என்றாள் அவள் யோசனையாக.

"நல்லா கேட்ட போ.. உன்னையும், மங்கியையும் இனி மரியாதையுடன் "பேகம்" என்று தான் அழைப்பாங்க... உங்க அத்தையை "நவாப் பேகம்" என்று அழைப்பாங்க" என்றார் விளக்கமாக நாட் நாட் செவன்.

"கலக்கறீங்க...பாட்டி.. கதை கேட்கப் பிடிக்கலை பிடிக்கலை என்று சொல்லிவிட்டு எல்லாத்தையும் கேட்டு தெரிந்து வைத்திருக்கீங்க பாட்டி" என்றாள் நிரல்யா.

"என்ன பண்ண சொல்ற பேத்திங்களை நினைத்து இதையெல்லாம் சகித்துக்கொள்ள வேண்டி இருக்கு" என்று பெருந்தன்மையாக செப்பியவர்.. "மேக் கப் முடிய எப்படியும் ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆகும் என்று நினைக்கிறேன்... அதற்குள் நீங்களும் கிளம்பி வந்து விட்டால் நல்லா இருக்கும்" என்று பாட்டி தெரிவித்தார்.

இப்படி சும்மா உட்கார்ந்து இருப்பதற்கு கிளம்புவது சரி என்று மல்லிகாவிற்கும் பட... நாட் நாட் செவனை மட்டும் விட்டு விட்டு எல்லோரும் அறையை காலி செய்தனர்.

சொன்ன மாதிரியே ஒரு மணி நேரத்தில் மேக் கப் போட்டு முடிக்க.. காலையில் ஆசிர்வாதம் செய்யும் போதே வைத்து கொடுத்த புடவை பாட்டி எடுத்து கொடுத்தார்!!!

மங்கிக்கு மயில் கழுத்து நீலத்தில் இருந்த சேலையை பார்த்தவுடன் யானை கனம் கணக்கும் என்று பயந்து நடுங்கியவளுக்கு ஆச்சரியப்படும் வகையில் மிக மிக லேசாக சங்க இலக்கியத்திலேயே சொல்லப்பட்ட பாலாவியன்ன நூல்லாடையாக இல்லாது பாலவியன்ன பட்டாடையாக இருந்தது!!!

கொண்டை ஊசி கொடுப்பதற்கே அப்படி அலப்பறை பண்ணவர்கள் நவாப் கல்யாணத்திற்கு கொஞ்சம் சிப்பிளாக என்று நினைத்துக்கொண்டு இருக்கும் போதே...

இதை அவள் மனதில் நினைத்துக்கொண்டு இருக்கையிலேயே மாம்பழ நிறத்தில் இருந்த சங்கியின் புடவையும் அப்படிதான் இருந்தது போல......

ஆச்சரியமாக புடவையை தூக்கி பார்த்தவள் "பாட்டி.. கல்யாண புடவை எப்படி இவ்வளவு லேசாக இருக்கிறது??" என்று கேட்டவளின் கண்கள் அதனுடன் வந்த ஜாக்கட்டை பார்த்து சுருங்கியது... புடவை எத்தனை எளிமையானதாக இருந்ததோ.. அத்தனை வேலைப்பாடு கொண்டதாக இருந்தது அதனுடன் வந்த ஜாக்கெட்!!!

சங்கியின் ஜாக்கெட்டில் முதுகு மற்றும் கைகளில் மாங்காய் டிசைனில் அதே நிறம் கொண்ட புஷ்பராக கற்கள் மற்றும் முத்துக்கள் பதித்து மிக மிக நுணுக்கமாக வேலை செய்து இருந்தார்கள் என்றால் மங்கிக்கு மயில் டிசைனில் அசல் நீலம், மரகதப் பச்சை மற்றும் முத்துக்களால் நெய்யப்பட்டு இருந்ததை கண்டு வாயை அடைத்து நின்றனர்!!!

"ம்ம்.. இரவு முழுவதும் நீங்க கட்டிக்கொண்டு உட்கார்ந்து இருக்க வேண்டுமே அதுக்காக இருக்குமோ?" என்று பதில் அளித்தவரின் கண்கள் கட்டி விடுவதற்காக புடவையை பிரித்துக் கொண்டு இருந்தவரிடத்தில் நிலை குத்தி நின்றது!!!!

ஏன் என்றால் அது சாதாரண புடவையை விட மிகவும் நீளமாக இருக்க.. "என்ன இது இரண்டு புடவையை சேர்த்து வைத்து தைத்த மாதிரி இவ்வளவு நீளத்தில் இருக்கு?"

புடவையை பார்த்தப்படி பாட்டி கேட்ட கேள்வியை புரிந்துக்கொண்ட அங்கே இருந்தவர்கள்.. "சாதாரணமாக புடவை மாதிரி இதை கட்ட மாட்டார்கள்.. வித்தியாசமாக கட்ட வேண்டும்" என்று சிரித்தப்பபடி விளக்கியவர் அடுத்த முக்கால் மணி நேரம் மூன்று பேர் அந்த புடவையை கட்டினர்.

ஏன் மூவர் வந்தனர் என்று அப்போது தான் புரிந்தது!!! பின்னே கண்ணன் திரௌபதிக்கு கொடுத்த புடவை மாதிரி நீண்டு இருந்த அந்த புடவையை ஒருவரால் கட்ட முடியுமா...???

எத்தனை சுற்று சுற்றினார்கள்... எங்கு கொசவம் வைத்தார்கள் அதை விட எத்தனை பின் குத்தினார்கள் என்று எதுவும் புரியாது கண்கள் தெறிக்க பார்த்தார் பாட்டி.

நாட் நாட் செவனே இப்படி என்றால் சகோதரிகளை பற்றி கேட்கவும் வேண்டுமோ??

பரத நாட்டிய உடையில் கூட இத்தனை கொசவம் வைத்திருப்பார்களா என்று தெரியாது ஆனால் அவர்கள் புடவையில் எத்த பக்கம் எப்படி வைத்தார்கள் என்று கூட புரிந்துக்கொள்ள முடியாதப்படி அடுக்கு அடுக்காக அடிக்கி வைத்தவர்கள்...

இத்தனை நாள் முக்காடிற்காக பட்டுத்துணி தனியாக இருக்க.. இன்று புடவையிலேயே முக்காடு போட்டார்கள்...

கடைசியாக எதையோ கொடுக்க.. பிடித்துக்கொள்ள முந்தானையை தான் கொடுக்கிறார்கள் போல் என்று நினைத்தவளின் கையில் கொடுக்காது அந்த புடவையை முழங்கை சற்றே கீழே புடவை ஒரு சுற்று சுற்றி... முந்தியை அப்படியே கீழே தொங்க விட்டார்கள்!!!

ஒரு வழியாக எல்லாவற்றையும் சரி பார்த்து முடித்து விட... எப்படி இருக்கிறது என்று கண்ணாடி முன் பார்க்க கூட தோன்றாது... "அப்பாடா விட்டார்களே" என்று அமர்ந்தவளிடம் பாட்டி கொடுத்த அணிகலன்களை போட ஆரம்பித்தனர்.

அணிந்திருக்கும் ஜாக்கெட்டிற்கும்... புடவை கட்டி இருக்கும் தோரணைக்கு.. புடவையின் மேல் எந்த நகையை போட்டாலும் ஒன்று புடவையின் அழகை கெடுக்கும் இல்லை நகையின் அழகு தெரியாது... என்று அவள் யோசனையுடன் பார்க்கும் போதே தந்தத்தில் செய்யப் பட்டிருந்த இருந்த அந்த பெட்டியை திறந்து சொக்கர் என்று சொல்லப்படும் கழுத்தை கவ்வி பிடித்துக்கொண்டு இருக்கும் நான்கு சரம் முத்து மாலையில்... இரண்டு இன்ச் இடைவேளைக்கு அவள் உடுத்தி இருக்கும் புடவைக்கு ஏற்ற நிறத்திலான பச்சை, நீலம்.. வைரம் பதித்த தோகை விரித்து ஆடும் மயில் மத்தியில் வைக்கப்பட்டிருக்க...

அதே மயிலின் டிசைனில் காதணியும்... கையில் மூன்று விரல் பட்டையில் அதே கற்கள் மற்றும் முத்துகள் பதித்த வளையல்கள் என்பதோடு நின்று விடாது.. மோதிரத்தில் ஆரம்பித்து இடுப்பில் அதே நான்கு வரிசையில் முத்து ஒட்டியானமும், காலில் அதே டிசைனில் கொலுசு வரை நீடித்தது!!!

மங்கிக்கு மயில் என்றால் சங்கிக்கு அவள் புடவையின் நிறத்திற்கு ஏதுவாக மாங்காய் டிசைன்!!!!

ஒருவழியாக எல்லாவற்றையும் அணிவித்து நிறுத்திவிட்டு "ஒரு முறை கீழே உட்கார்ந்து பாருங்கள்" என்று சொன்னதோடு சகோதரிகளின் புடவையை அதற்கு ஏற்றாற் போல் சரி செய்து கொண்டு இருக்கும் போது தான்....

கண்ணாடி முன்னாடி நின்று பார்த்தவளுக்கு... மாறு வேடப் போட்டியில் கலந்துக்கொள்ள போகும் சூனியக் காரியை ஒத்து இருக்க போகிறது என்ற எதிர்பார்ப்புடன் இருந்தவளுக்கு... அங்கே தெரிந்த பிம்பம்.. தான் தானா என்று சந்தேகத்தை தூண்டும் பாடியாக... சூனியக் காரியை போல் தோன்றாமல் ராணி போல் ஒரு மாய தோற்றத்தை தோற்று வித்து அவளை ஆச்சரியப்படுத்தியது!!!

கட்டியிருந்த நீண்ட புடவையும்.... அணிந்திருந்த நகையும்... தலை வாரி இருந்த முறையும்... அங்கே இருந்த பதினெட்டாம்

நூற்றாண்டில் வரைப்பட்டிருந்த படத்தில் இருந்து குதித்து வந்தது போல் இருந்தது!!!

அந்த சமயம் பார்த்து... மல்லிகா உள்ளே வர... அவர்களை கண்டு அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டார்!!!

"என் கண்களை நம்பக் கூட முடியவில்லை..." என்று கூறியப்படியே அவர் வீட்டினருக்கு போன் செய்து வரவழைக்க முயற்சிக்க.. நல்ல காலம்.. எல்லா சச்சிதேவ்வும் ஒன்று சேர்ந்து ஒரு டிராமாக போடுவதற்குள் மணப்பெண்களை ஒளிந்துக்ககொள்ள சொல்லுவதற்கு நேரம் வந்துவிட்டது என்று ரஃபிக்கின் சின்ன பாட்டி வந்து சொல்லி விட்டு போனார்.

மேலே எதை பற்றியும் யோசிக்காது... ஆளாளுக்கு எங்கே ஒளிவது என்று ஆலோசனை கொடுக்க... சங்கி அம்மாவின் ஆலோசனையை ஏற்று சென்று மறைய...

"நீங்க போங்க நான் மறைந்துக்கொள்கிறேன்" என்று வீட்டினரை அனுப்பிவிட்டு கொஞ்சம் நேரம் அங்கேயும் இங்கேயும் எங்கே மறைவது என்று புரியாது பத்து நிமிஷம் உலாத்தினாள்.

அடுத்த இருபது நிமிஷம் நடந்துகொண்டு இருந்தவளுக்கு மூளையில் மணி அடிக்க.. இரண்டாவது தளத்தில் விருந்தனருக்கான வரவேற்பு அறையின் இடது கோடியில் தேக்கினால் பிரம்மாண்டமாக செய்யப்படிருந்த ரதமும்... அந்த

ரதத்தின் உள்ளே வெள்ளியில் மிக நுணுக்கமான வேலைப்பாடு செய்யப்பட்டிருந்த பல்லக்கும், அந்த அறையின் வண்ணத்திற்கு ஏற்றவாரு மஞ்சள் நிறத்தில் திரை அமைக்கப்பட்டு ரசனையுடன் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது!!!

பார்ப்பதற்கு ரதம் மட்டுமே தெரியுமே தவிர அதற்குள்ளே வெள்ளி பல்லக்கு இருக்கிறது என்று கூடத் தெரியாது!!!

"மாட்டினடா மகனே" என்று தனக்குள் சிரித்தப்படி புடவையை வாரி சுருட்டிக்கொண்டு சிம்பியிடம் பயின்ற எல்லா வித்தையும் பயன் படுத்தினாலும் கட்டி இருக்கும் அந்த புடவைக்கு அந்த பல்லக்கில் ஏற அமர முடியாது என்று உணர....

அவசரமாக என்ன செய்வது என்று யோசித்தவளுக்கு அப்போது தான் பாட்டி கையில் போனை கொடுத்து நீ தொலைந்து போய் விட்டால் என்ன செய்வது என்று திணித்து விட்டு போனது நியாபகத்திற்கு வர... மகிழ்ச்சியுடன் பத்ரிக்கு போன் செய்தாள்.. அவனின் போன் தொடர்பின் எல்லைக்கு அப்பால் இருந்ததால் வேறு வழி இல்லாது கார்த்திக்கு போன் செய்தாள்.

அடுத்த பத்தாவது நிமிஷத்தில் வந்தவன்... அவள் கேட்டப்படி தூக்கி உள்ளே உட்கார வைத்துவிட்டு... ஏதோ தயங்கி நின்றப்போது போல் தோன்ற...

"என்ன கார்த்திக்??"

"இதை என் வாயால் சொல்வேன் என்று நினைக்கவே இல்லை... உன் உடையும், அலங்காரத்தையும் பார்க்கும் போது... நவாப் ரசனைக்காரன் என்று புரிகிறது" என்றான் சிரித்தப்படி.

"கார்த்திக்" என்று அவள் முறைக்க.

"மங்கி... இந்த கல்யாணத்தில் எனக்கு கொஞ்சம் கூட உடன் பாடு இல்லை என்று உனக்கு தெரியும்.. ஆனால் ஏன் இதை தடுக்காது கை கட்டி வேடிக்கை பார்க்கிறேன் என்றால் எந்த சச்சிதேவ்வும் காதலுக்காக அல்லாது வேறு எதற்காகவும் திருமண பந்தத்தில் ஈடுப்படுவதில்லை என்று ஒரே ஒரு காரணத்திற்காக மட்டும் தான்!!!" என்றான் மிக மிக தீவிரமான குரலில்.

"ரொம்ப சரியாக சொன்னாய் அண்ணா" என்று மங்கி லேசான சிரிப்போடு மொழிந்த போதும் "யாருடைய காதலுக்காக??" என்று மனது கேள்வி கேட்பதை நிறுத்த முடியவில்லை......

ஏதோ பேச வந்தவனை தடுக்கும் விதமாக அவனுக்கு போன் வர.. அவசரமாக பதில் சொல்லியப்படி வெளியேறினான்.

நல்ல காலம்.. அவன் பேச நேரம் கிடைக்கவில்லை இல்லை என்றால் எதையாவது உளறிக்கொட்டி இருப்பாள்!!!

எப்படிதான் அந்த காலத்தில் இப்படி மீட்டர் கணக்கில் புடவை சுத்திக்கொண்டு இந்த சின்ன பல்லாக்கில் எல்லாத்தையும் அடக்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தார்களோ என்று மனதில் கேள்வி எழுப்ப.. மிகவும் சிரமப்பட்டு அந்த பல்லாக்கில் அமர்ந்தாள் மங்கி.

அடுத்த பத்து நிமிஷம் தன் போனை குடைந்தவள்.... ஐய்யோ இந்த வெளிச்சத்தை கொண்டு கண்டு பிடித்து விட்டால் என்ன செய்வது என்று அவசரமாக அதை ஸ்சைலன்டில் வைத்தாள்.

மெல்லியதாக உள்ளே வந்த வெளிச்சத்தின் வழியாக எட்டி எட்டி பார்த்துக்கொண்டு இருந்தவளுக்கு போர் அடிக்க ஆரம்பிக்க.. மெல்ல அங்கே அழகாக மான் முதல் அன்னம் வரை விதவிதமாக வேலை செய்யப்பட்டிருந்த பல்லக்கின் அழகை அடுத்த அரை மணி நேரம் ரசித்தவளுக்கு அதற்கு பிறகு இப்படி உட்கார்ந்திருப்பது... போர் அடிக்க ஆரம்பித்தது.

தனக்கே இப்படி என்றால் சங்கிக்கு எப்படி இருக்கும் என்று நினைத்தப்படி சோம்பல் முறித்தவளுக்கு... அந்த நேரத்தில் தான் உயர்த்தி இருந்த தன் கையில் நேற்று வைத்த மெகந்தி செக்க செவேல் என்று சிவந்து இருப்பதை கவனித்தாள்.

தன் கையில் வரைந்திருந்த மெகந்தியைக் கூட பார்க்க நேரம் இல்லாதளவு பிசியாகி விட்டாளே என்று தன்னைதானே

நினைத்துக்கொண்டு விரத்தியாக சிரித்தப்படி மெகந்தி டிசைனை உற்று பார்க்க..

நெளி... நெளியாக ஏக்கப்பட்ட டிசைன்களுடன் முழு கை வரைக்கும் இருக்க.. மெல்ல ரசனையுடன் பார்த்துக்கொண்டே உள்ளங்கையில் இருந்த டிசைன் மற்றும் வித்தியாசத்துடன் கண்களுக்கு தெரிந்தது.

என்ன மற்ற டிசைன்கள் போல் இல்லாமல் சற்றே வித்தியாசமாக இருக்கிறது என்று வெளிச்சம் வரும் இடத்தில் குனிந்து கையை சற்று கவனித்து பார்க்க..

"இது அப்படி இல்லை.. இப்படி திரும்பி பார்க்க வேண்டும்"என்று அவள் கையை திருப்பி பார்க்கும் படி தலையை பல்லக்கின் உள்ளே வைத்து சொன்னான் ரஃபிக்.

தான் எங்கே இருக்கிறோம் என்பதை பற்றி முற்றிலும் மறந்து போய் இருந்தவளுக்கு ரஃபிக் குரல் தந்த அதிர்ச்சியில் "ஆங்" என்று அலறியப்படி படப்படக்கும் நெஞ்சோடு பார்த்தவள்... "நீ..நீங்க எப்படி கண்டு பிடித்தீங்க??" என்றாள் திடுக்கிட்டு இன்னும் படப்படப்பு அடங்காதவளாக.

"ஆயிரம் பேர் சூழ்ந்திருக்கும் கிரவுண்டில் நீ மறைந்திருந்தாலும் உன்னை கண்டு பிடித்த பின்னும் இப்படி

கேட்கலாமா?" என்றான் அவனின் கூர்மையான கண்கள் அவளின் கண்களை சிறைப்பிடித்து கேட்டது.

அவள் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாது.. "நானே இப்படி ஒரு இடத்தை தேர்ந்து எடுத்து வைத்தாலும் கூட முடியாதது போல் எவ்வளவு அழகாக தேர்ந்து எடுத்து உட்கார்ந்திருக்கிறாய்.." என்றப்படி கையில் இருந்த அவளின் விரல்களில் மெல்ல முத்தமிட்டான் ரஃபிக்.

நெருப்பு பொறி பட்டது போல் வெடுக்கென்று அவன் கை பிடியில் இருந்த தன் கையை உருவியப்படி..

"ரஃபிக்..." என்றாள் எச்சரிக்கும் விதமாக.

அவளை என்ன செய்தாலும் தகும் என்றும் படி ஒரு பார்த்தவன் "ஊரே பார்க்கும் படி உன் கையில் என் பெயரை எழுதி இருக்கிறாய் ஆனால் நான் பார்க்க கூடாது என்று தட்டி விடுகிறாய்.. என்ன லாஜிக் இது??" என்றான் அவளின் கைகளை காட்டி. வினையமாக.

# அத்தியாயம் 20

**அ**வளை என்ன செய்தாலும் தகும் என்னும் படி ஒரு மாதிரி பார்த்தவன் "ஊரே பார்க்கும் படி உன் கையில் என் பெயரை எழுதி இருக்கிறாய் ஆனால் நான் பார்க்கக் கூடாது என்று தட்டி விடுகிறாய்.. என்ன லாஜிக் இது??" என்றான் அவளின் கைகளைக் காட்டி.

"உங்க பெயரா? நானா?? எனக்கு வேறு வேலை இல்லையா?" என்றாள் அலட்சியமாக.

"பார்த்தால்... வேலை இல்லாமல் நான்கு மணி நேரம் உட்கார்ந்து போட்டுக்கொண்டு இருப்பது போல தான் தெரிகிறது!!!" என்றான் அவளின் கையை காட்டி.

எதுவும் பேசாமல் கண்களில் கோபம் தெறிக்கும் படி அவனை முறைக்க...

"நான் நன்றாக இருக்கிறேன் என்று தெரியும் ஆனால் நீயே.. இப்படி கண் சிமிட்டாமல் பார்க்கும் அளவு இருப்பேன் என்று நினைக்கவில்லை.."

"நான் உங்க அழகில் மயங்கி கண் சிமிட்டாமல் பார்க்கவில்லை..."

"ஓ!!! உனக்கு அழகில் மயங்கி பார்க்கும் பழக்கம் இல்லை.. கீழே விழும் பழக்கம் தான் இல்லையா?!?" என்றான் கண்களில் அப்பட்டமாக ஹாஸ்சியம் தெறிக்க...

"அது உங்களால் இல்லை.. நீங்க அடித்த பாலால்..."

"எப்படி விழுந்தாலும்... விழுந்தது என்னவோ என்னால் தானே?!?" என்றான் கடைசி வார்த்தை அவனுடைய தாக்கி.

"ஆமாம்... அன்று விழுந்ததில் ஆரம்பித்து... இன்று இப்படி மூளையில் முடங்கி உட்கார்ந்திருப்பது வரை எல்லாம் உங்களால் தான்" என்று சூடாய் வந்தது அவளின் பதில்.

"இங்க உட்கார்ந்திருப்பது மட்டும் இல்லை... இனி உன் வாழ்க்கையில் நடக்க போவது கூட என்னால் தான்" என்றான் தீர்க்கமாக.

"நடக்கப் போவது கூட... என்று அவ்வளவு தெனாவட்டாக சொல்லாதே.. ரஃபிக்... நான் விட்டு கொடுக்கும் வரை தான் நீ எதை வேண்டுமானாலும் செய்யலாம்..." என்றாள் எச்சரிக்கும் தொனியில்.

"இதுவரைக்கும் எனக்காக எதையெல்லாம் விட்டு கொடுத்து இருக்க மேகி??"

"ஆயிரம் இருக்கு.. " என்றாள் வன்மத்துடன்.

கையில் இருந்த கடிக்காரத்தை பார்த்தவன் "அத்தனை நேரம் இல்ல.. அதனால் ஏதாவது ஒன்று சொல் போதும்!!!"

அந்த பதிலை கேட்டு உள்ளே எரிச்சல் பட்டவள்.. "அப்ப எனக்கும் பேச நேரம் இல்லை வாங்க போகலாம் ..."

"போகலாம்.. ஆனால்.. போன் வந்தவுடன்"

"போன்??"

"சங்க மித்ராவை கண்டு பிடித்து... அங்கே போய் சேர்ந்து அரை மணி நேரம் கடந்த பின் சித்தை போன் பண்ண சொன்னேன்"

"ஏன்?!?" என்றாள் அவன் சொல்லும் விளக்கம் புரியாது.

"கொஞ்சம் நேரம் அவன் மட்டுமே தனியாக இருந்து அனுபவிக்கட்டும்" என்று பழி வாங்குவது போல் சொல்லிய போதும் அதற்கும் பின்னாடி இருந்த காரணத்தை அவளால் உணர முடிந்தது.

அதாவது இரு திருமணமும் ஒன்றாக நடப்பதால்...சித் எந்த விதத்திலும் புறக்கணிக்கப் பட்டு விட கூடாது என்ற எண்ணத்தில் அப்படி சொல்கிறான் என்று புரிந்தது.

அத்தை பற்றி ஒரு வார்த்தையை பேசியதற்கே பாய்ந்துக்கொண்டு வந்தவனிடம் சித் பற்றி பேச விரும்பாது.... அவன் கேட்ட கேள்விக்கு பதிலாக..

"என் சுதந்திரத்தை" என்றாள் அழுத்தமாக.

"உன் சுதந்திரத்தை நான் எந்த விதத்தில் பறித்தேன்?"என்றான் அதிசிரத்தையாக.

"நான் யாரை கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டும் என்ற சுதந்திரத்தை!!!" என்றாள் ஆக்ரோஷமாய்.

"வாட்?? ஆயிரம் இருக்கும் போது... இதுதானா உனக்கு கிடைத்தது?!?" என்றான் சற்றே நம்ப முடியா தன்மையுடன்.

"கல்யாணம் விஷயம் ஆயிரத்தில் ஒன்று இல்லை.. ரஃபிக்" என்றாள் விக்கித்து.

"நீ என்னை தான் கல்யாணம் பண்ணிக்கப் போகிறாய் என்னும் போது... அதை நீ எடுத்தால் என்ன நான் எடுத்தால் என்ன?"

"உனக்காக ஒரு பெண் இரண்டு வருஷமாக காத்துக்கொண்டு இருக்கும் போது. அப்படி ஒரு முடிவை நீங்க எடுப்பிங்க... நிச்சயம் நான் எடுத்திருக்க மாட்டேன்..." என்றாள் பிடிவாதமாக.

"சச்சிதேவ் குடும்பத்தில் காதலித்தவனை தான் கல்யாணம் பண்ணிப்பாங்கன்னு நினைத்தேன் மேகி" என்றான் பூடகமாக.

"அதுக்காக யார் வாழ்க்கையையும் கெடுக்க நினைக்கும் வழக்கம் இல்லை" என்று சுடாக பதில் வந்தது

"இந்த "யார்" என்று யாரை சொல்கிறாய்...?!?என்னையா இல்ல உன்னையா?"

நன்றாக பதில் தெரிந்து கேள்வி கேட்பவனை... என்று மனதிற்குள் திட்டியப்படி "நம் இருவரையும் சொல்லவில்லை..."

"பின்ன?"

"அமிராவை சொன்னேன்"

"நிஜமாக யோசித்துதான் பேசுகிறாயா??"

"ஆமாம்..."

"ஆனால் எனக்கு அப்படி தெரியவில்லை... நான் அவளை கல்யாணம் பண்ணிக்கொண்டு இருந்தால் உன்னை விட என்னை விட மிக மோசமாக அவள் தான் பாதிக்கப்பட்டிருப்பாள் என்று உனக்கு இன்னுமா புரியவில்லை?" என்றான் அழுத்தமாக.

அவன் சொன்னதில் இருந்த உண்மை சூரிரென்று சுட... "இந்த குழப்பம் எல்லாம் யாரால்?? உங்களால்.. உங்க ஒருத்தரால்... நீங்க மட்டும் இதை எல்லாம் முன்னாடியே சொல்லி இருந்தால்.."

"சொல்லி இருந்தால்.. என்ன பண்ணி இருக்க முடியும்?? நீ என்னை பார்த்ததை மாற்ற முடியுமா? இல்லை நான் உன்னை பார்த்ததை மாற்றி இருக்க முடியுமா?"

"அதை மாற்ற முடியாது இருந்திருக்கலாம் ஆனால் அதற்கு பின்னால் விளைந்ததை தடுத்து இருக்கலாம்..."

"தடுத்து இருக்கலாமா...??? இது ஒன்றும் வியாதி இல்லை.. தடுப்பு ஊசி போட்டு தடுப்பதற்கும்... தவிர்ப்பதற்கும்!!!" என்றான் ரஃபிக் புரியாத குழந்தைக்கு புரிய வைக்கும் விதமாக.

"ஆமாம்.. வேற ஒரு பெண்ணுடன் நிச்சயம் ஆகி இருக்கும் போது.. என்னை தவிர்த்து இருக்கனும்... தடுத்து இருக்கனும்... உங்களால் முடியவில்லை என்றால் என்னிடம் சொல்லி

இருக்கனும்..."

"நான் உன்னிடம் இதுவரை பொய் சொன்னது இல்லை மேகி" என்றான் அழுத்தமாக.

"ஆனால் முழு உண்மையையும் சொல்லவில்லை... மறைத்து விட்டிங்க..." என்றாள் குமுறலோடு.

"மறைத்து விட்டேனா?? நான் உங்கள் வீட்டினர் மாதிரி ஒளிந்து மறைந்து நிச்சயம் பண்ணிக்கவில்லை.... சொல்ல போனால் நிச்சயதார்த்தமே ஒருவாரம் நடந்தது..." என்றான் தெள்ள தெளிவாக.

"அது தெரிந்திருந்தால் நான் ஊரை விட்டு போய் இருப்பேன்..."

"அனுப்ப வில்லை?? நான் உன்னை அனுப்பிவில்லை?? ஆனால் அதற்கான பலன் எதுவும் இருந்ததாக தெரியவில்லையே" என்று கேட்டவன்... தொடர்ந்து...

"சொல்லவில்லை.. சொல்லவில்லை என்று குதிக்கிறாயே... ஆமாம் உன்னிடம் எப்ப சொல்ல சொல்ற?? உனக்கு முத்தம் கொடுத்தேனே அப்பவா? இல்லை இரவு முழுவதும் என் கையில் இருந்தாயே அப்பவா?? இல்ல.. நீ.." என்று அவன்

பேசிக்கொண்டு இருக்கும் போதே.. வரப் போகும் வார்த்கைதகளை கேட்க சக்தி இல்லாது கைகளால் வாயை மூடி தடுத்து நிறுத்தியவள்.

"ரஃபிக்.." என்று இறங்கிய குரலில் அவனை அழைத்தவள்... "நீங்க சொல்ல முடியாதற்கு காரணம் தேடுறீங்க.. நான் ஏன் சொல்ல வில்லை என்பதற்கு காரணத்தை தேடுகிறேன்... ரஃபிக்"

உதட்டில்... பதிந்து இருந்த ஈரமான நீண்ட விரல்களை... மெல்ல பிரித்து அவன் கைக்குள் அடக்கியப்படி அவளை நேருக்கு நேராக கூர்மையாக நோக்கியவனின் கண்களில் எந்த வித உணர்ச்சியும் இல்லாது....

"உனக்குள் பதிலை வைத்துக்கொண்டு என்னிடத்தில் தேடினால் கிடைக்காது" என்று மிக குழைவாக பேசியவனின் குரல் அவளை ஒரு நிமிஷம் கட்டிப் போட்டது.

"எனக்கு எதுவும் தேட வேண்டாம்..." என்று அவள் சொல்லிக்கொண்டு இருக்கும் போதே.. அவன் பார்வையின் தீட்சண்யத்தில் தாங்காது தன்னையும் அறியாது கையை இழுத்துக்கொள்ள முயல.. நினைத்த மாதிரி அவன் பிடியில் இருந்து எடுக்க முடியவில்லை..

"கேள்வி கேட்டவள் நீ... பதிலை தாங்கும் சக்தி இல்லை என்றால் அப்புறம் ஏன் கேட்க வேண்டும்??" என்ற போது அந்த

குரலில் இருந்த ஏதோ ஒன்று அவள் நெஞ்சை இம்சை செய்தது!!!

"ரஃபிக்... நீ பதில் சொல்லி இருந்தால் கேட்டு இருப்பேன் ஆனால்.. நீ பதில் சொல்லவில்லை விதண்டாவாதம் பேசுகிறாய்... கொஞ்சம் மாற்றி யோசி... நான் உன்னுடன் நிச்சக்கப் பட்டு விட்டு.. வேறு யாரையும் கல்யாணம்..." என்று அவள் முழுவதுமாக முடிக்கும் முன்...

"உன் வீட்டில் சித்தை கடத்த முயன்று என்னை மாற்றி கடந்தி வந்தது போல் இல்லாமல்... வைத்த குறி தப்பாது உன்னை கடத்தி வந்திருப்பேன்..." என்றான் கொஞ்சம் கூட தயங்காமல்.

"ரஃபிக்..." என்று ஆவேசமாக பதில் சொல்ல வாயை திறந்தவள்.. பின் அதை மாற்றி "பேசாமல் இருந்த ரஃபிக் விட இந்த பேசும் ரஃபிக் ரொம்ப ரொம்ப அபாயமானவன் என்று இப்ப புரிகிறது... கொலையே பண்ணாலும் கூட வாய் பேச்சாலே நீ செய்தது சரி என்று சொல்ல வைத்து விடும் திறமை மண்டி கிடக்கும் உன்னிடம்... நான் பேசி ஜெயிக்க முடியும் என்று தோன்றவில்லை... ஒன்று மட்டும் சொல் ரஃபிக்... இப்படி தான் வாழ்க்கை முழுவதும் என்னை தோற்கடித்து நீ ஜெயித்துக்கொண்டே இருக்க போறாயா??" என்றாள் பரிதவிப்புடன்.

அவளின் குரலும்.. கண்களில் அப்பட்டமாக தெரிந்த வலியும்... அவனின் கை பிடியில் இருந்த போதும் லேசாக நடுங்கிய விரல்களை கூட கண்டு இளகாதவன்... "நிச்சயமாக ஜெயித்துக்கொண்டு தான் இருப்பேன்" என்று உறுதியாக கூறினான்.

கன்னத்தில் "பளார்" என்று அறை வாங்கியது போல் வலிக்க... துடி துடித்து போய் ரஃபிக்கை பார்த்தவள்... அவன் கைக்குள் அடைக்கலம் புகுந்திருந்த தன் விரல்களை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு.. எதுவும் பேசாது... பேச தோன்றாது.. அவன் சொன்ன உண்மையின் ஆழத்தத்தை கண்டு மனம் பொருக்க மாட்டாது.. கைகளை பிசைந்தாள்!!!

அவள் முகமும்... பிசைந்த கைகளும் வார்த்தைகளால் சொல்ல முடியாத விஷயத்தை பறை அடித்து தெரியப்படுத்த... இனியும் இப்படி பேசிக்கொண்டு இருந்தால் நேற்றைய நிலை தான் இன்றும் ஆகும் என்று உணர்ந்தவன்... பேச்சை மாற்ற விரும்பி... "இப்படி கையை பிசைந்தால்... என் பெயரை அழித்து விட முடியும் என்று நினைக்காதே மேகி.."

அவன் பேசுவது புரியாது மலங்க விழித்தப்படி அவனை பார்க்க... "என்னை இப்படி பார்ப்பதை விட்டு விட்டு... உன் கையை பார் விபரம் புரியும்" என்றான் அவனுக்கே உரிய தொனவட்டு தனத்துடன்.

முறைத்தாலும் எதையாவது சொல்லித் தொலைக்கிறானே என்பதினால் "ரஃபிக்..." என்று பல்லை கடித்தாள்.

"தப்பு" என்றான் அவள் என்னவோ கண்டு பிடித்து பெயரை சொன்னது போல்...

பதில் சொல்லாமல் மீண்டும் முறைக்க...

"கண்டுபிடி பார்க்கலாம்" என்று சவால் விடுவது போல் சொன்னான்.

பார்க்கும் வரை விட மாட்டான் என்று எரிச்சலுடன் நினைத்தவள் வேண்டா வெறுப்பாக குனிந்து தன் கையை பார்த்தாள்... செக்க செவ்வேல் என்று சிவந்து.. அழகாக தெரிந்ததே தவிர கண்களுக்கு ஒன்றும் தெரியவில்லை... மத்தியில் சற்றே வித்தியாசமாக இருந்த டிசைனை தவிர!!!

"இங்க நீங்க சொன்ன உங்க பெயர் எங்க இருக்கு?" என்றாள் அசட்டையாக அவன் முகத்திற்கு முன்னால் காட்டியப்படி.

நீட்டிய கையையும் அவளையும் ஒரு முறை பார்த்தவன்... வலது கையின் விரல்களை பிடித்து இருவருக்கும் மத்தியில் வைத்து...

அந்த வித்தியாசமான டிசைன்களை காட்டி "என்ன இது?" என்றான்.

"ஏன் உங்களுக்கு கண்கள் தெரியாதா?? என்று அழுத்தமாக கேட்டவளின் குரல் அப்படியே தேய்ந்து மறைய... "இது அரபிக் மாதிரி இருக்கே..." என்று இழுத்தப்படி சற்றே குனிந்து பார்த்தாள்.

"மாதிரி இல்லை... அதே தான்"

"ம்ச்சு.. இது உங்க பெயர் இல்லை... ரஃபிக்... அரபிக்கில் உங்க பெயர்.. எப்படி இருக்கும் என்று எனக்கு தெரியும்"

"அது எனக்கும் தெரியும்.. ஆனால் இங்க எழுதி இருப்பது..." என்று அவன் முழுவதும் சொல்லாது தொக்கி நிறுத்த..

"எழுதி இருப்பது?!?" என்றாள் மனது திக் திக் என்று அடித்துக்கொள்ள.. அவன் எதை சொல்ல வருகிறான் என்று புரிய தொடங்கி.. சொல்லாமல் புரிந்தது விட்டது.

அவளுக்கு புரிந்து விட்டதை உணர்ந்தவன்... "பிருத்திவி ராஜ்" என்றான் அவள் முகத்தில் பார்வையை பதித்திதப்படி.

அத்தனை நேரம் அவர்கள் பேச்சில் இருந்த எரிச்சலும், விளையாட்டுத்தனமும் இருந்த இடம் தெரியாது பறந்து போக.. குப்பென்று இருக்கம் சூழ்ந்ததை அவள் உணர்ந்தாள்!!!

தன்னையும் அறியாது அவளின் கையை இருக்க மூடி.. அப்படியே தன் மடியில் மறைந்துக்கொண்டவள்...

"ஏன்?" என்றாள் தடுமாற..

"ஏன் என்று நீயே சொல்" என்றான் விடாது.

ஒரு நிமிடம் கண்களை மூடியவள்.. ஆர்ப்பரிக்கும் எண்ணங்களை நிலைப்படுத்த முயன்று தோற் று.. ஏனோ அவளின் கண்கள் அவளையும் அறியாது நீர் மல்க...

"தெரியவில்லை" என்று கிசுகிசுப்பாய் கூறிவயளின் கண்களை மூடி பின் மெல்ல திறந்தவளுக்கு... தான் செய்த இமாலய பிரயத்தனத்தையும் மீறி... அவளின் கண்கள் கையில் எழுதி இருந்த வார்த்தையில் போய் நின்றது!!!

ஒரு நொடி அதை உற்று பார்த்தவளின் கண்களில் கட்டுப்படுத்தவே முடியாது... கண்களில் கண்ணீர் சுரக்க... அவசரமாக தன் விரல்களை அழுத்தி முடியவள்... அப்படியே கைகளை தன் மடியில் பதுக்கினாள்!!!

அவளின் சைகையை ஒரு வித இரக்கத்துடன் பார்த்தவன்.. பின் பெரு மூச்சுடன் முகவாயை பற்றி அவன் புறம் திருப்ப.... அவள் கண்கள் இன்னமும் மூடி இருப்பதை உணர்ந்தான்.

"உன் கையை மறைத்து விட்டால் எல்லாம் மறைந்து விடுமாக மேகி?!?" என்றான் உயிரை உருக்கும் குரலில்.

"மறைக்க இல்லை... ரஃபிக் மறக்க நினைக்கிறேன்..."

"இன்னும் மறைக்க நினைத்துக்கொண்டு தான் இருக்கிறாயா??" என்றான் அழுத்தமாக.

"செய்து இருப்பேன்"

"எப்ப??"

"என் முன் வராமல் இருந்திருந்தால்"

"மேகி... நீயாக எனக்கு போன் பண்ண போதும்.. நான்கு மாதம்... உன் முன் வராமல் மறைந்து தான் இருந்தேன்... அப்ப ஏன் இன்னும் மறக்காமல் இருக்காய் மேகி??"

அந்த சொற்கள் அவளை அடித்து துவைக்க... பட்டென்று கண்களை திறந்தவளின் கண்களில் செவ்விய தோற்றமுடைய ரஃபிக்கின் முகத்தில் காண கிடைக்காத ஒளியுடன் நோக்கியவன் கண்கள் தவிர வேறு எதையும் நோக்க மறுக்க..

"அப்படி பார்க்காதே..." என்றாள் கிசுகிசுப்பாய்.

"ஏன்??"

"ஏன் என்று உனக்கு தெரியும்.."

"தெரியாது..."

"காட்.. ரஃபிக் ஸ்டாப் டூயிங் திஸ்..."

எதுவும் பேசாது அவளையே பார்த்தப்படி இருந்தான்..

"யீ ஆர் நாட் ப்ளேயிங் ஃபேர்..." என்றாள் மன்றாடும் குரலில்

"உன்னிடம் நான் பொய் சொன்னதில்லை என்று சொல்லி இருக்கேனே தவிர... எப்ப நியாயமாக இருப்பதாக சொன்னேன் மேகி?"

அவன் பேசும் விதமும்.. பேசிய பொருளும்... அந்த குரலும்.. அவனின் கம்பீரமும் என்று ஒவ்வொன்றாக அவளை சூழ்ந்து இளக வைத்துக்கொண்டு இருக்க.. எத்தனை நேரம் அவன் மேல் உள்ள கோபத்தை மட்டுமே பிடித்துக்கொண்டு தொங்க முடியும் என்று தோன்றவில்லை.. மீண்டும் அவள் முதல் முறை முத்தமிட்ட போது செய்த தவறுகளை திரும்ப செய்ய விரும்பாது...

"தள்ளி... போ... ரஃபிக்.." என்றாள் வார்த்தைகள் தந்தி அடிக்க.

முகத்தில் எந்த வித மாற்றமும் இல்லாது...அவளை பார்த்தவன் "ஓ.எஸ் அதுக்கு முன்னாடி நீ என்னை பிருத்திவி ராஜ் என்று அழை போகிறேன்" என்றான் முடிவாக.

# அத்தியாயம் 21

முகத்தில் எந்த வித மாற்றமும் இல்லாது...அவளை பார்த்தவன் "ஓ.எஸ் அதுக்கு முன்னாடி நீ என்னை பிருத்திவி ராஜ் என்று அழை போகிறேன்" என்றான் முடிவாக.

ஒரு வினாடி கூட யோசிக்கவில்லை...

"முடியாது" என்றாள் தீர்மானமாக.

இந்த பதிலை தான் சொல்லுவாள் என்று முன்பே அறிந்திருந்தாலோ என்னவோ கண்களில் எந்த உணர்ச்சியும் இல்லாது அவளை பார்த்தவன் லேசாக தலையை சரித்து "சொல்" என்றான் அழுத்தமாக.

அவனுக்கு சளைத்தவள் நான் இல்லை என்று சொல்லாமல் சொல்வது போல்... எதுவும் பேசாது.. எந்த உணர்ச்சிகளையும் வெளிக் காட்டாது... அவனின் பார்வையை எதிர்க்கொண்டவள்...

"இப்படி சொல்வதற்காக கல்யாணத்தை இந்த நொடியில் நிறுத்தினாலும் சரி நான் அப்படி அழைக்க மாட்டேன்.." என்று முடிவான முடிவாக பதில் தந்தாள்.

அவனின் கூர்மையான விழிகள் அவளை விட்டு அகலாது நிலை குத்தி இருக்க "ரியலி?!?"என்றான்.

"உங்களால் மட்டும் தான் காரணம் சொல்லாமல் இந்த கல்யாணத்தை நிறுத்த முடியும் என்று இல்லை ரஃபிக்... இந்த நொடி... சென்று என் வீட்டினரிடம் எனக்கு கல்யாணம் வேண்டாம் என்று சொன்னால் மறுவார்த்தையின்றி நிறுத்துவார்கள் என்று எனக்கு தெரியும்..."

"அப்ப சங்க மித்ராவின் கல்யாணம்??" என்றான் எலிப் பொறியில் மாட்டிக்கொண்ட எலியை போன்ற சூழ் நிலையில் அவளை நிறுத்தி.

ஒரு நொடி கண்களை மூடி திறந்தவள்... "குற்ற உணர்ச்சியோடு வாழ பழகிக்கொள்ள முடியும் ஆனால் என்னை கொன்று விட்டு வாழ பழகிக்கொள்ள முடியாது!!!" என்றாள் தீர்மானமாக.

அவள் மொழிந்த வார்த்தைகளின் உள்ளே இருக்கும் பொருளை மங்கி உணர்ந்தாளோ இல்லையோ அவன் உணர்த்தான்!!! உதிர்த்த ஒவ்வொரு அக்ஷரத்தின் பொருளையும் அது ஏற்படுத்திய தாக்கத்தையும் அதன் தாக்கத்தின் அழுத்தையும்.. அதில் இருந்த ரணத்தையும்... பரிபூரணமாக உணர்ந்தான்!!

தனக்கு பிடிக்காத கல்யாணத்தில் அவனின் சொந்தங்கள் அவதூராக பேசுகிறார்கள் என்று தெரிந்தும் கூட ஒரு வார்த்தை எதிர்த்து பேசாதவள்... தன் சோதரியின் திருமணம் தன்னால்

எந்த விதத்திலும் பாதிக்க படக் கூடாது என்பதற்காகவே பொறுக்க முடியாத போதும் சகித்தவள்... அவன் செய்ய சொன்ன விஷயத்தை எல்லாம் பிடிக்கா விட்டாலும் பல்லை கடித்துக்கொண்டு உடன் பட்டவள்... இப்படி அசாதாரணமான விஷயத்தை எல்லாம் போகிற போக்கில் செய்து விட்டு போனவளுக்கு "பிருத்திவி ராஜ்" என்று பெயர் சொல்லும் அல்ப விஷயத்தை இப்படி கல்யாணத்தை நிறுத்தும் வரை போக கூடியளவு பெரியது பண்ண வேண்டிய அவசியம்?!? இருவருக்கு மத்தியில் அது வெறும் பெயராக மட்டும் இருத்திக்க வில்லையோ?!?

இந்த பதிலை கேட்டு நியாமாக ரஃபிக் கோபப் பட்டு இருக்கனும்... ஆனால் அதற்கு நேர் மாறாக ரஃபிக்கின் முகத்தில் கோபம் இல்லை... கூரிய பார்வை இல்லை... கல்யாணம் என்று அறிவித்த தினத்தில் இருந்து அங்கே குடிக்கொண்டு இருந்த தீவிரம் இல்லை... அவனின் குணத்திற்கு கொஞ்சம் பொருந்தாது நிர்மலமான முகத்தில் புன்னகை பிரதிபளிக்க...

"வெல்கம் பேக்" என்றவனின் குரலும் சிரித்தது.

"வெல்கம் பேக்??" என்று அவள் புரியாமல் கேட்டக்கொண்டு இருக்கும் போதே.. அவள் பேசியது காதில் விழாதது போல்... பட்டென்று.. அவளின் பூ முகத்தை

ஏந்தியவனின் கைகள் லேசாக நடுங்க… முன்னே குனிந்து அவளின் சென்னியில் முத்தமிட்டான்!!!

"ரஃபிக்?!?" என்று வீரிட்டவளின் குரல் அவனின் முத்தமிட்ட அடுத்த நொடி அந்த குரலில் அத்தனை நேரம் இருந்த அழுத்தம் மறைந்து தேய்ந்து கரைந்து போய்க் கொண்டு இருந்ததை அவளே உணரந்தவள் எதுவும் பேசாது கண் மூடி அவனின் ஆண்மையில் முழ்க.. மறு வினாடி அவளை அப்படியே தன் கழுத்தில் வலைவில் சாய்த்து அணைத்துக்கொண்டான்.

தான் இழந்த சக்தியை எல்லாம்… ஒருவரிடம் இருந்து மற்றவர் இழுந்த சக்தி எல்லாம் ரீச்சார்ஜ் செய்துக்கொள்ளவது போல் அந்த அருகாமை அவர்களை இத்தனை நேரம் இருந்த உணர்ச்சியின் பிடியில் சிக்கி தள்ளாடியவர்களை மீட்டு… இறுக்கத்தை விடுவித்துக்கொண்டு இருக்க… அப்படியே கண் மூடி அதை அவனை இருக்க பற்றிக்கொண்டாள் மேக மித்ரா!

அந்த நொடிக்காவே காத்து இருந்தவனை போல்… கழுத்தில் சரிந்து கிடந்தவளின் கன்னத்தில் தன் கன்னத்தை வைத்து லேசாக உரசியவன்… பின் பெரு மூச்சு விட்டப்படி அவளின் மென் கன்னத்தில் தன் கன்னத்தை பதித்தான்.

அவனுக்கே உரிய கதகதப்பும்.. மூச்சு காற்றும் அவளை சூழ்ந்து… எங்கோ ஓரத்தில் ஒட்டி இருந்த மனபுழுக்கத்தையும்

விரட்டி அடிக்க... உணர்ச்சியின் பிடியில் முழுமையாக இருந்தவளின் கைகள் அவளையும் அறியாது அவன் கழுத்தை சுற்றி வளைத்தொடு மட்டும் அல்லாது.... உரிமையோடு அவனின் முடியை அலைந்தன!!!

அவளின் ஸ்பரிசத்தை கண் மூடி ரசித்தவன்... மெல்ல தலையை உயர்த்தியவனின் முகத்தில் குடிக்கொண்டு இருந்த இருந்த பாவத்தை வார்த்தைகளால் விவரித்து சொல்ல முடியாததாக இருந்தது!!!

படை பலம் இல்லாது... தக்க போர் பயிற்ச்சி இல்லாது... ஏன் கையில் போர் வாள் கூட இல்லாது.. ஒரு மகாபெரும் சைனியத்தை ஒற்றை ஆளாக எதிர்த்து நின்று அதிலும் இமாலய வெற்றி பெற்ற பூரிப்பு... களிப்பு.. கர்வம்... என்று எல்லாம் கலந்து அவன் முகத்தில் தாண்டவம் ஆட.... கல்யாணத்தை நிறுத்து விடு என்று எந்த உணர்ச்சியும் இல்லாது சொல்லியவளை கண்டு அவன் இத்தனை பாவத்தை காட்டினான்!!!

அதற்கு மேலும் அவளை அப்படியே பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது... உள்ளே ஆர்பரித்து ஓடும் இன்பத்தை அவளுக்கு வெளிப்படுத்தும் விதமாக... தோளில் இருந்த அவளின் பூ முகத்தை ஏந்தியவன்... அவள் கண் திருக்கும் முன் இதழ் முத்தம் பதித்தான்!!!

ஐந்து நிமிஷம் வரை உடல் விரைத்து.. இறுகி போய் உறைந்த பனியாக இருந்தவள்... இப்போ உருகும் பனியாய் அவனின் முத்தத்தில் கரைந்துக்கொண்டு இருந்தாள்!!!

எப்படி அவசரமாக முத்தம் கொடுத்தானோ அதே அவசரமாக அவளை விடுவித்தவனின் முகத்தில் அந்த சிரிப்பு இன்னும் மறையாது தவழ..

ஒன்றும் புரியாது அதிர்ச்சியுடன் அவனை பார்த்தவதவளுக்கு சற்று முன் நடந்தது எல்லாம் கண் முன் படை எடுக்க...

"முத்தம் கொடுத்தால் அப்படியே மூளை மழுங்கி நான்.. நான் மாறி விடுவேன் என்று நினைக்கறீங்களா??" என்றாள்

"ம்கூம்.. முத்தம் கொடுத்தே நீ மாறாமல் இருப்பதற்காக தான்" என்றான் பூடமாக.

என்ன என்று அவள் விளக்கம் கேட்டுக்கொண்டு இருக்கும் போதே அவனுக்கு தன் தம்பியிடம் இருந்து போன் வந்தது.

எடுத்து ஒரு நொடி பேசி விட்டு வைத்தவன்... "நாம் போகலாம்" என்றவன் எதுவும் இவள் யூகிக்கும் முன் அப்படியே அந்த பல்லாக்கில் இருந்து தூக்கினான்.

இதை எதிர்பார்த்து இருந்தவள் தான் என்ற போதிலும்... அவன் தூக்கும் போது.. அவனின் அருகாமையும்... அந்த

அருகாமை தந்த ஈர்ப்பும்.. அந்த ஈர்ப்பிற்கே உரிய மயக்கமும்... அவளை எதுவும் பேச விடாது தத்தளிக்க செய்ய...

ஐம்பத்தைந்து கிலோ எடை உள்ள ஒருத்தியை தூக்கிக்கொண்டு செல்கிறோம் என்ற சின்ன மூச்சிறைப்பு கூட... எதுவுமே இல்லாது...

"ஆமாம்... ஏன் இந்த பெயர் உன் கையில் எழுதி இருக்கு என்று யாராவது கேட்டால் என்ன பதில் சொல்வாய்?" என்று அவளை சீண்டினான்.

"நீங்க தானே நான் அத்தைக்கும் உங்களையும் தவிர யாருக்கும் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னீங்க??"

"ஓ!! அப்ப என் அம்மா கேட்டால்?" என்றான் விடாது.

"அரபிக் தெரியாததால் நான் தப்பாக சொல்லி விட்டேன் என்று சமாளித்துக்கொள்வேன்" என்றாள் பிடிவாதமாக.

"உன் வீட்டில் மாப்பிள்ளையை மாற்றி கடத்தி வந்தது போல் உன் கையில் மாப்பிள்ளையின் பெயரை தவறாக எழுதி விட்டார்கள் என்று சொல்ல போகிறாயா?" என்றான் எள்ளல் வார்த்தைகளில் எட்டி குதிக்க..

"இந்த கடத்தல் விஷயத்தை எத்தனை நாளுக்கு இதை உங்க பேச்சில் சொல்லிக்காட்ட போறீங்க?!?" என்றாள் தலையில் அடித்துக்கொள்ளாத குறையாக.

"உன் பாட்டி வழி என் வழி..." என்றான் ஏதோ உலக மகா ரகசியத்தை சொல்லிவிட்டப்படி

"என்னது???... என் பாட்டியா???" என்று அரண்டு போய் பார்த்தாள். பின்னே நாட் நாட் செவனை பற்றி அவள் அறியாததா?!?

"கொள்ளு பேரன், பேத்தி எடுத்த பிறகும்...உன் பாட்டி கடத்தப்பட்டத்தை சொல்றாங்க தானே?"

"கடவுளே..." என்று பல்லை கடித்தாள் அவள்.

"ம்ம்.. அவரே என் முன் வந்தாலும் அவரிடமும் இந்த விஷயத்தை சொல்லுவேன்" என்றான் விடாது.

"ரஃபிக்..." என்று அவள் கோபத்தில் அலறிக்கொண்டு இருக்கும் போதே... ஒரே கரகோஷம் காதை கிழிக்க... படக்கென்று தலையை திருப்பி பார்த்தவளுக்கு அங்கே தான் மொத்த குடும்பத்தினரும் கூடி இருக்க... தான் அரண்மனையின் வாயிலுக்கு வந்துவிட்டோம் என்பதை அப்பொழுதான் உணர்ந்தாள்...

அதாவது.. அலிகான் குடும்பத்தை மட்டுமே சேர்ந்த ஐநூற்றி சொச்ச குடும்பத்தினரும்... அவர்களின் நண்டு... சிண்டு... வண்டுகள் என்று கிட்ட தட்ட ஏழுநூற்றி மிச்ச சொச்ச பந்தங்களும்... அவளை பார்த்தனர்!!! இதில் இவள் குடும்பத்தை சேர்த்தவர்களும்... ரஃபிக் குடும்பத்தில் பரம்பரை பரம்பரையாக

வேலை செய்த ஆட்கைள் வேறு இவர்களை பார்க்கும் ஆர்வத்தில் கலந்துக்கொண்டதையோ... பத்தாதற்க்கு செக்கியூரிட்டி என்ற பெயரில் பத்தடிக்கு ஒரு கோட் சூட் போட்ட ஆட்கள் வேறு வாக்கி டாக்கியுடன் நின்று இருந்ததை கணக்கிலேயே எடுத்துக்கொள்ளப் படவில்லை!!!

அவர்கள் முன் இப்படி அவன் கையில் இருப்பது அவளுக்கு கூச்சத்தில் அவள் நெளிய தொடங்கும் போதே அவன் அவளை கீழே இறக்கி விட்டான்.

ஏன் என்று புரியாது திரு திருக்க.. "என்ன?" என்று கேட்பதற்கு வாய்யை திறந்தவள் தான் பேச வந்ததை மறந்து... கண்கள் உரைய... தன் அருகில் நின்றவனை பார்த்தப்படி நின்றாள்.....

பல்லாக்கின் உள்ளே இருந்த அவனை பார்த்த போது குறைவான வெளிச்சத்தின் காரணமாக அவனின் முகம் மட்டுமே தெரிந்ததே தவிர.. உடையை காண முடியவில்லை..

ஆனால் இப்போ எதை பார்க்க எப்படி பார்க்க.. எங்கிருந்து ஆரம்பிக்க என்று எதுவும் விளங்கவில்லை... என்று தான் கூற வேண்டும்!!!

தங்க நிறத்திலான ஷர்வாணி முழுங்காலையும் தாண்டி தொங்க... அதில் அவளின் புடவை நிறமான மயில் கழுத்தின் நிறத்தில் சின்ன சின்ன வேலைகள் செய்யப்பட்டு... இடுப்பிலும்

பட்டையாக மயில் கழுத்து நிறத்தில் நவாப்புகள் கட்டும் இடுப்பு கச்சையை கட்டி... இடது புறத்தில் வேலைப்பாடு மிகுந்த ஐந்து அடி உடை வாள் சொருகப்பட்டு இருக்க... தங்க நிறத்தில் பேன்ட் அணிந்திருந்தவனின் கால் அணி கூட வேலைப்பாடுடன் இருந்தன!!!

அவள் கண்களை கட்டி போட்டது என்னவோ அவன் இடுப்பில் அணிந்த வாள் மட்டும் அல்ல மயில் கழுத்து நிறத்தில் அவன் அணிந்திருந்த தலைப்பாகையில் இருந்த நன்முத்துக்கள் மற்றும் வைரம் பதித்த பெரிய பதக்கமும்... அந்த பதக்கத்தில் இருபுறமும் மூன்று வரிசை முத்து மாலையின் ஒரு விரல் இடைவெளையில் சற்றே சின்ன பதக்கம் இருக்க... அந்த தலைப்பாகையின் பின்னால் இருந்து தொங்கிய நீண்ட பட்டாடை நான்கு மடிப்புகளாக முதுகில் வந்து... அவனின் வலது முழுங்கையின் கையில் இரண்டு சுற்று சுற்றப்பட்டு கீழே தொங்கி நின்ற விதம்... அரண்மனை முழுவதும் ஆங்காங்கே தொங்க விடப்பட்டிருந்த வரை படத்தில் இருந்து உயிர் பெற்று குதித்திவன் போல் நின்றான்!!!

அந்த தலை பாகையும்... அதில் இருந்து வந்த அந்த நீண்ட துணி அவன் கையில் சுற்றி தொங்கிய விதமும்... இடையில் தரித்திருந்த வாளும்... அந்த வாளின் மேல் கையை வைத்துக்கொண்டு நின்ற விதமும்... அவன் அணிந்த

காலணியும்... அந்த கால்களை சற்றே அகட்டி நின்ற விதத்தில் தெரிந்த கம்பீரமும்.. கர்வத்தையும் இன்னதென்று சொல்ல வார்த்தைகள் இல்லை...!!!

இவள் வாய்யடைத்து நின்ற நேரத்தில் அவளை சுற்றி என்ன நடந்து என்று தெரியவில்லை அதற்குள் எல்லோரும் எதையோ திரும்பி பார்த்து ஆ..ஆ.. என்று ஆச்சரியப்பட அவர்களின் சத்தம் வந்த திசையை கேட்டு திரும்பியவளின் வழி தெறிந்து விழுந்தது!!!

எதற்காக அப்படி பார்த்திருக்கிறார்கள் என்று அங்கே விரிந்த காட்சியை காணும் போதும் புரிந்தது...

செத்தக்கிற்கு வெள்ளை நிறத்தில் சேனை பூட்டி அலங்காரத்துடன் நிறுத்தப்பட்டிருந்தது அதன் பின்னால் இருவர் நிற்க கூடிய அலங்கரிக்கப்பட்ட சின்ன வெள்ளை ரதம் நின்று இருந்தது!!!

எதை நம்புவது என்று எதுவும் புரியாது... "என்ன இது??" என்றாள் வார்த்தகைள் தடுமாற..

"நம் கல்யாணத்தில் செத்தக் இல்லை என்றால் எப்படி??" என்றப்படி மிக சாதாரணமாக இயம்பினான் ரஃபிக்.

அவள் அதிர்ச்சியில் மீண்டு வருவதற்குள் அவளை... காயத்திரி மெல்ல கையை பிடித்தார்.

அவர் கையை பிடித்த பின்னர் தான் அவர் தன் பக்கதில் நிற்கிறார் என்பதையே உணர்ந்த மேக மித்ரா...

"அத்தை??" என்றாள் புரியாது.

புன்னகை பூத்தவர் அவர் கையில் இருந்த கை பெட்டியை திறந்து அதில் அரை வட்டதில் முத்துக்களும் வைரங்களும் பதித்த சின்ன கீரிடத்தை அவளின் பஃப் வைத்து வாரி இருந்த தலையில் சொருகி வைத்தவர்..

"வாம்மா.." என்றார் அங்கே இருந்த ரதத்தை கையை காட்டி.

"ஆனால்.. அத்தை மேடை வரை தூக்கிக்கொண்டு போகனும் பாட்டி சொன்னாங்களே என்றாள் ஒருவேலை தப்பாக புரிந்துக்கொண்டு விட்டுடோமோ?? என்று குழம்பி போய்.

"இதுவரை அப்படி தான்... ஆனால் எப்பயும் போல் ரஃபிக் அந்த பழக்கத்தை உடைத்துவிட்டான்.. நிச்சயமாக உன்னை தூக்கிக்கொண்டு போக முடியாமல் இல்ல.. நான் காரணம் கேட்பதும் இல்லை... உன்னை கல்யாணம் பண்ணிக்கொள்ள போகிறேன் என்று சொன்ன போது எப்படி காரணம் கேட்கவில்லையோ அதே போல் இதற்கும் கேட்கவில்லை... மேக மித்ரா... ஆனால் என்னுடைய அனுமானம்.. உனக்கு பிடிக்காத காரணத்தினால் இருக்கலாம்" என்றார் அவர்.

"ம்கூம்.. எனக்கு பிடிக்காது என்று தெரிந்தால் முதலில் அதை செய்துவிட்டுதான் மறுவேலைப் பார்ப்பான்" என்று மனதிற்குள் எண்ணம் ஓடினாலும் எதையும் சொல்லாது... அவள் பக்கத்தில் நடந்தப்படி வந்தவரிடம்..

"அப்ப கல்யாணத்திற்கு என்ன யூகித்தீங்க அத்தை??" என்றாள் வெகு நாட்களாக மனதில் குடைந்த கேள்வியை கேட்டாள்.

நின்று திரும்பி பார்த்து அர்த்தமாக சிரித்தவர்... "வாழ்க்கையை சந்தோஷமாக அவன் அப்பா மாதிரி வாழ போகிறான் என்று நினைத்தேன். அவன் தந்தை இறந்து பிறகு... முதல் முறையாக அவன் முகத்தில் ஒரு மாற்றத்தை பார்த்தேன்... என் மகன் வெளிப்படையாக பேசும் தன்மை கொண்டவன் அல்லன்.. அப்படி வளர்க்க பட்டனவனும் இல்லை.. அவன் மனம் திறந்து பேசும் ஒரே ஆள் அவனின் தந்தை தான்!!! அவரின் மறைவு எங்கள் எல்லோரையும் பாதித்து தான் என்றாலும் இதில் அதிகம் பாதிக்கப்பட்டவன் ரஃபிக்!!! அவன் தந்தையை மட்டும் இழக்கவில்லை.. ஒரு உயிர் நண்பனை இழந்தான்... அதுதான் அவனை அதிகம் பாதித்தது!!! அந்த இழப்பின் தீவிரம் நாளடைவில் குறையும் என்று நினைத்தேன்... ஆனால் சோகம் என்னவென்றால் அடுத்த அடுத்த பிரச்சனையில் கூடியக்கொண்டு இருந்ததே தவிர

குறையவில்லை... கிட்ட தட்ட இரண்டு வருடம் எந்த மாற்றும் அப்படியே தான் போச்சு... முதல் மாற்றம் தோன்றிய தருணம் உன்னை கல்யாணம் பண்ணிக்கொள்ள போகிறேன் என்று அவன் தெரிவித்த போதுதான்!!!" என்றாள் காயத்திரி.

உண்மை தெரிந்தால் இப்படி பேச மாட்டிங்க அத்தை என்று மனதிற்குள் வெதும்பிய போதும்.. மறு பக்கத்தில் அவரின் பதில் அவளை வெகுவாக குழப்பி அவனுக்காக வலிக்க வேறு செய்தது. இன்னும் பேசி தன்னை தானே நோக வைத்துக்கொள்ள வேண்டாமே என்று அமைதியாக அவருடன் ரதத்தை நோக்கி நடந்தாள்...

இருவர் மட்டுமே நிற்க கூடிய அந்த ரதத்தை நெருங்க.. இவளின் வருகையை உணர்ந்த செத்தக்... திரும்பி அவளை பார்த்தது!!!

அதன் முட்டை விழியில் என்ன சொல்ல வருகிறது என்று நின்று கவனிக்கும் முன்...

தன்னை மறந்து அவளின் கால்கள் செத்தக்கை நோக்கி நடக்க..

அங்கே குழுமி இருந்தவர்களின் பார்வை அவளை விட்டு அகல வில்லை....

பின்னே?? நவாப்பை போன்றே அவனின் குதிரையும் தன் வட்டத்திற்குள் யாரையும் நெருங்க விடாது... அப்படிப்பட்ட

குதிரை இவள் அருகில் சென்றதும் துள்ளி குதித்து அவளை மிரட்டாது.. பூனை குட்டியாய் குழைந்துக்கொண்டு பரம சாதுவாய்.. அவள் தடவி கொடுக்கும் படி தலையை நீட்டிக்கொண்டு நிற்க… இவள் ரஃபிக்கை மட்டும் தன் கை பிடியில் வைத்திருக்கவில்லை…. அவனின் குதிரையை கூட விட்டு வைக்கவில்லை போல.. இவள் நிச்சயம் சாதாரண ஆள் இல்லை என்று அதிர்ச்சியில் வாயை இரண்டு அடி கீழே தொங்க வேடிக்கை பார்த்தனர்.

பிரிந்து இருந்த நண்பனை கண்டது போல் அவளிடம் மிக பிரியமாக வந்த செத்தக்கை கொஞ்சி விட்டு வருவதற்குள்… ரஃபிக் ரத்தின் உள்ளே சென்று இருந்தவன் அமைதியாக அவள் முன் கையை நீட்ட….

மற்ற நேரத்தில் எப்படி நடந்து இருப்பாளோ ஆனால் இன்று அவள் எதுவும் சொல்லாது… அவனின் கை பற்றி தான் ஏற வேண்டிய நிலை… பின்னே சாதாரண புடவையில் சாத்தியம் அற்றது என்னும் போது… இந்த புடவையில் நடக்காத காரியமாக தான் தோன்றியது…

அவர்கள் இருவரும் ஏறி நின்ற அடுத்த நொடி குதிரை மெல்ல நடந்து முன்னாடி சென்றது…

இந்த மாதிரி ரதத்தில் எல்லாம் போன பழக்கம் இல்லாத காரணத்தினால் முன்னால் அழகிற்காக பூ சுற்றி வைக்கப்பட்டிருந்த இருக்கையை பிடித்துக்கொண்டாள்!!!

"ஏன்?" என்றாள் அவன் பக்கம் கூட திரும்பாது.

"எனக்கு பிடிக்கவில்லை..." என்றான் மிக சாதராணமாக.

"எது?!?"

"உன்னை தூக்கிக்கொண்டு நடப்பது..."

"ஏன் அது மட்டும் தான் காரணம் என்று எனக்கு தோன்ற வில்லை...?!?" என்றாள் பிடிவாதமாக அவனை பார்க்காது...

"குட்.. ஏன் என்றால் அது மட்டும் காரணம் அல்ல..."

"வேற??"

எதுவும் பதில் சொல்லாது அமைதியாக வர... மீண்டும் அழுத்தமாக கேட்டாள்.. அப்பொழுதும் பதில் வராது போக... அவன் புறம் திரும்பி "வேற என்ன காரணம் என்று கேட்டேன்??" என்றாள் அழுத்தம் திருத்தமாக.

தலைப்பாகையில் தொங்கிய முத்துக்கள் ஆட திரும்பியவன்... "கண்டு பிடி" என்றான் கண்களில் சிரிப்பு கூத்தாட....

"என்னது..." என்று அவள் மீண்டும் கேட்கும் முன் அவர்கள் வந்து சேரும் இடம் வந்து விட... இவள் இறங்கும்

முன் அதற்குள் அங்கு வந்திருந்த அத்தை காயத்திரி அந்த சேரட்டில் ஏறினார்.

"இனி கல்யாணத்திற்கு பிறகு பார்க்கலாம்" என்று சிரித்தப்படி மொழிந்துவிட்டு தலையில் முக்காடு போட்டு மறைத்தவர் அவளை கை பிடித்துக்கொண்டு அழைத்து எங்கோ சென்றார்!!!

# அத்தியாயம் 22

இப்படி முகத்தை மூடி.. கையை பிடித்துக்கொண்டு எங்கே அழைத்து போகிறார்கள் என்று நினைக்கும் போதே.. ஒரு பத்தடி நடந்திருப்பாள்.. அதற்குள் அவளின் அத்தை காலில் இருந்த செருப்பை கழட்டி விட சொல்ல... அவர் சொல்லியதிற்கு இணங்க கழட்டியவளை பட்டு பீதாம்பரத்தில் நடக்க வைத்து அழைத்து சென்றவர்... எங்கோ அமர சொன்னார்!!!

புடவையை சரி செய்தப்படி அமர்ந்தவளின் பக்கத்தில் யாரோ முன்பே உட்கார்ந்திருப்பது புரிய.. அது சங்கி என்று உள் உணர்வு உணர்த்தியது.

"சங்கி?!?" என்று நிம்மதியுடன் கேட்கும் போதே..

"கையை விடு..." என்றது சங்கியின் குரல்

"நான் பிடிக்கவே இல்லையே" என்றாள் புரியாத திகைப்பில்.

"நான் உன்னை சொல்லவில்லை..." என்றாள் கிசுகிசுப்பாக.

"பின்ன??"

"சித்தை சொன்னேன்.."

"என்னது?? சித் உன் கையை பிடித்துக்கொண்டு இருக்கிறாரா??" என்றாள் அரண்டு போய்.

"பின்ன என் கையை சித் இல்லாது சுதாகரா பிடிப்பான்? என்றாள் சங்கிக்கே உரிய துடுக்கு தனத்துடன்.

"சுதாகரா எந்த சுதாகர்??"

"உன் கிலாஸ்சிற்கு லேட்டாகிவிட்டது என்று நான் போய் அட்டன்டன்ஸ் கொடுக்க... அந்த சுதாகர் உனக்கு பிரபோஸ் பண்ணுவதாக நினைத்துக்கொண்டு எனக்கு பண்ணானே நியாபகம் இருக்கா??"

"ஓ!! அவன் சுதாகர் இல்ல திவாகர்" என்றாள் திருத்தமாக.

"அவனை நியாபகம் வைத்திருக்கிறதை பற்றி ரொம்ப ரொம்ப சந்தோஷம்.... ஆனால் கல்யாண மேடையில் என் கையை யார் பிடித்து இருக்கிறாய் என்று கேட்கிறாயே உன்னை எல்லாம் எந்த எக்சிபிஷனில் வைக்கிறது?!?" என்றாள் சங்கி மடமடவென்று பொறிந்தாள்.

"உட்கார்ந்து இருப்பது வரை ஓ. கே தான் ஆனால் எதுக்கு கையை பிடிக்கனும்??"

"ம்ம்.. மணப்பெண் எழுந்து ஓடாமல் இருப்பதற்காக இருக்குமோ?" என்றாள் சங்கி.. தன் கற்பனை குதிரையை தட்டி விட்டப்படி....

"ம்கூம்... பசி கொடுமை தாங்க முடியாது மயங்கி சரியாமல் இருப்பதற்காக இருக்கும்" என்றாள் தன் பங்கிற்கு கூறிய மங்கி..

"நிஜமாகவே உனக்கு தெரியாதா??.. எப்படியும் பாட்டி உன்னிடம் சொல்லி இருப்பார்களே?!?" என்றாள் சற்றே சந்தேகமாக.

"இங்க நடக்கிற சடங்கிற்கு எல்லாம் என்னிடம் கேட்டுக்கொண்டு தான் பண்ணுறாங்களாக்கும்?? எதுக்கு எடுத்தாலும் இப்படி துணியை முகத்தில் போட்டு மூடி.... திறக்கப் படாத தலைவர் சிலை மாதிரி நிற்க வைத்து விடுதில் என் கையையே பார்க்க முடியவில்லையாம் இதில் எங்கிருந்து பாட்டியை பார்ப்பது?? இந்த பக்கம் சித்.. என் கை பிடிக்கிறேன் என்ற பெயரில் ரத்தம் ஓட்டமே இல்லாது இறுக்க பிடித்து வைத்தான் என்றால் நீ வேற என் பக்கத்தில் உட்கார்ந்து கேள்வி கேட்டே உயிரை வாங்கற??

அவளின் எரிச்சலின் அளவையும் பதில் வந்த விதத்தையும் வைத்தே புரிந்துக்கொண்டவள்..

"ரொம்ப பசிக்குதா??" என்றாள் மங்கி.

"நீ ஒருத்திதான் பாக்கி..." என்றாள் பெரூ மூச்சுடன்... பின்னே அவள் தான் பசி தாங்க மாட்டாள் என்று தெரியுமே.

அந்த பதிலை கேட்டு சிரிப்பு பொத்துக்கொண்டு வர... அடக்கியப்படி "நீ வந்து ரொம்ப நேரம் ஆகிவிட்டதா?" என்றாள்

"இப்ப தான் பத்து நிமிஷம் ஆச்சு.. நீ குதிரையில் வந்ததால் சீக்கிரம் வந்துவிட்டாய்... ஆமாம் வரும் போது அந்த மரங்களை பார்த்தியா?" என்றாள் குரலில் ஆர்வம் பொங்க.

"மரங்களா?? எந்த மரம்?? என்று கேட்க வாயை திறந்தவள் கப் என்று மூடிக்கொண்டாள்...

ஏற்கனவே அவள் இருக்கும் யானை பசிக்கு தேவையில்லாமல் சோளப்பொறி ஆவனானேன் என்று மூளை எச்சரிக்கை செய்ய... வேகமாக யோசித்தாள்.. நேற்று... இல்ல.. அதற்கும் முந்திய நாள்.. ச்சு ஏதோ ஒரு நாள் குட்டை மரங்களில் சின்ன சின்ன ஃபேரி லட்ஸ்சை சுற்ற விட்டு பார்ப்பதற்கு மிக மிக அழகாக இருந்தது!!! அதை தான் சொல்கிறாளோ...?!?

அவள் என்னத்தை கண்டாள்?? பயணித்த பத்து நிமிடத்தில் முதல் ஐந்து நிமிடம்... வண்டியில் அப்படியே தலைக்குப்புற விழாது இருக்கும் வழிய தேடிக்கொண்டு இருக்க... அடுத்த ஐந்து நிமிடம் அவனின் பதிலுக்காக முகத்தை வெறித்துக்கொண்டு வந்தாள்.. இதற்கு மத்தியில் மரம் என்ன மலையே நின்றாலும் அவள் கண்ணுக்கு தெரிந்திருக்காது. ஆனால் அதை சொல்லி அவளிடம் வாங்கிக்கட்டிக்கொள்ள விரும்பாது..

"நல்லா இருந்ததே" என்றோடு முடித்து இருக்கலாம் அவளுடைய போதாத நேரம்... வாயை வைத்துக்கொண்டு சும்மா இருக்க முடியாது "குட்டை மரங்களை சுற்றி ஃபேரி லைட்ஸ் வைத்து... பார்ப்பதற்கு ரொம்ப அழகா இருந்ததே.." என்றாள் மிதப்பாக.

அவளின் பதிலைக் கேட்டு ஒரு வினாடி மறுபுறத்தில் அமைதி நிலவ...

"என்னாச்சு சங்கி?!?"

"நீ பார்க்கவே இல்லை" என்றாள் கடுப்பாக.

இதற்குமேல் மறைக்க என்ன இருக்கு?? என்று பெரு மூச்சு விட்டபடி "ம்ம்.." என்றாள் அமைதியாக.

"வீட்டில் இருந்து இங்கே வரும் வரை... மின்சாரமே இல்லாது வெறும் மெழுகு மற்றும் விளக்குகளால் மட்டுமே அலங்கரிக்கப்பட்டு கண்களை கூசும் அளவு ஜெக ஜோதியாக ஜொலித்ததை பார்க்காமல் கண்களை மூடிக்கொண்டு வந்தாயா?!?" என்று அதிசயத்து கேட்டாள் சங்கி.

"வரும் வழி முழுக்க... இருமருங்கிலும் பாத்தி கட்டின மாதிரி கீழே நட்சத்திர கண்ணாடி குடுவையில் மெழுகுவத்தி எற்றப்பட்டிருந்தது என்றால்.. மேலே.. வழி முழுக்க... பெரிய பெரிய மரத்தை வைத்து அதில் தொங்க விட்டிருந்த ராந்தலையும்... தீ பந்தம் போன்ற விளக்கும் ஏற்றப்பட்டு

இருக்க.. நாம் ஏதோ ஒரு அடர்ந்த..." என்று அவள் பேசிக்கொண்டு இருக்கும் போதே

சங்கி விவரித்த விதத்தை கேட்டவுடன் அவளையும் அறியாது உடம்பு ஒரு நிமிடம் தூக்கி வாரி போட.... எதுவும் பேச முடியாது... பழைய நினைவுகள் அப்படியே கண்ணில் முன் நின்றது...

காட்டில் அவர்களை சுழ்ந்திருந்த அந்தகாரமும்... குளிரை விரட்ட அவன் சருகுகளை கூட்டி வைத்த நெருப்பும்... அதில் அவனும் அவளுக்குமான தனிமையில் அரங்கேறி நிகழ்வு தான் இன்று.... அவளை இங்கே வந்து உட்கார்ந்து வைத்திருக்கிறது!!!

நினைத்து பார்க்கையில் குளிரையை விட்ட அவன் வைத்தது வெறும் நெருப்பு அல்ல.. அவளின் நல்வாழ்க்கைக்கு வைத்த நெருப்பு என்று தான் தோன்றியது.. தன் வாழ்க்கையையே திசை திருப்பி.. புரட்டி போட்ட அந்த நிகழ்வை... தன் முட்டாள் தனத்தின் உச்சியில் நடந்தவற்றை மறக்க அவள் பிரம்ப பிரயத்தனம் பட்டுக்கொண்டு அவனோ அதை எல்லாம் நியாபகப்படுத்தும் விதமாக இதை செய்ய வேண்டுமா??

"அடர்ந்த காட்டிற்குள் இருப்பது போல் எல்லாமே வடிவமைக்கப் பட்டிருக்கிறது" என்று முடித்து வைத்தாள் மங்கி மனதில் புயல் அடிக்க.

இப்படி எல்லாம் பண்ணுவதால் அவன் என்ன சாதிக்க விட போகிறான்?? இவள் என்ன சின்ன குழந்தையாக புது பொம்மையை காட்டியவுடன் பழசை மறந்துவிட்டு குதுகலமாக எடுத்து விளையாடுவதற்கு?!? என்று உள்ளே குமுறியப்படி தன் கைகளை பிசைய தொடங்கினாள்!!

"அட.... மங்கி... பார்க்காத போதும் ரொம்ப.. ரொம்ப சரியாக சொல்லிட்டியே.. சூப்பர்" என்று மெச்சினாள் சங்கி... "இருந்தாலும் இது எப்படி உன் கண்ணுக்கு தெரியாது போச்சு?!?"

எதையாவது சொல்லி அவள் வாயை அடைக்காத வரை அவள் ஓயமாட்டாள் என்று தன் டிவின்ஸ்சை பற்றி அறிந்திருந்ததால் "ம்... என் கண்ணிற்கு அவரை தவிர எதுவும் தெரியவில்லை.. போதுமா?" என்றாள் அலுப்பாக சொல்வது போல்.

"எனக்கு போதும்.." என்று கிசுகிசுப்பாக கேட்டது ரஃபிக்கின் குரல்.

தன் அருகில் உட்கார்ந்து கூடவா தெரியாது ஒருத்தி வாய் பேசிக்கொண்டு இருப்பாள்?? என்று தன் மேல் கோபம் வந்தது ஒரு புறம் என்றால்... அவன் காதல் ரசம் சொட்ட பேசியது வேறு பற்றிக்கொண்டு வந்தது!!!

சுடாக பதில் கொடுக்க வாய் திறக்கும் போது... அத்தை காயத்திரி அவளின் கையை எடுத்து அவன் கையின் மேல்

வைக்க... அதை அசைக்க கூட முடியாதப்படி பற்றினான் ரஃபிக்.

அந்த நிமிஷம் ஏதோ பஜனை ஆரம்பித்தார்கள்....

சும்மா ஆசிர்வாதம் பண்ணவேண்டும் என்று சொன்னதற்கே ஒராயிரம் தடவை எழுந்து உட்கார்ந்து குட்டி கர்ணம் அடிக்க சொன்னவர்கள் கல்யாணத்திற்கு என்ன சொல்ல போறாங்களோ என்று நினைத்து பயத்துக்கொண்டு இருக்க.. அதிசயத்தில் அதிசயமாக எதுவுமே சொல்லாது அமைதியாக ஆள் மாற்றி ஆள் எதையோ புரியாத பாஷையில் பேசிக்கொண்டே இருந்தனர்.

என்ன நடக்கிறது என்று சுத்தமாக புரியவில்லை என்றாலும் ஏதோ அரபிக்கில் ஓதுகிறார்கள் என்ற அளவு புரிந்தது.

இனி பேசினால் யாரும் கவனிக்க மாட்டார்கள் என்று அவள் உணர்ந்த நேரத்தில் உதட்டில் துடித்துக்கொண்டு இருந்த வார்த்தைகளை கொட்டினாள்...

"இந்த ஃபாரஸ்ட் தீம்மில் கல்யாணத்தை ஏற்பாடு செய்தால் கசப்பான பழைய சம்பவத்தை எல்லாம் மறந்து விடுவேன் என்று பகல் கனவு காணாதே ரஃபிக்" என்று எச்சரிக்கை செய்தது அவளின் குரல்.

"எதை நீ கசப்பான பழைய சம்பவம் என்று சொல்கிறாய்??"

"தெரியாத மாதிரி கேட்காதே ரஃபிக்..." என்று வெகுண்டாள் மேகி.

"தெரிந்துக்கொள்ள கேட்கிறேன்.." என்றான் விடா பிடியாக.

அவளிடம் மௌனமே பதிலாக வர....

"அன்று.. நான் உன்னை கதற.. கதற கடத்திக்கொண்டு போய்....... உனக்க பிடிக்காத எதையும் செய்யவில்லை.... என்னுடன் இருந்த ஒவ்வொரு நிமிடம் நீ சுய நினைவில் தான் இருந்த மேகி. அதற்கு என்னை மட்டும் குற்றவாளியாக ஆக்காதே" என்றான் திடமாக.

"குற்றவாளியாக்க வேண்டாமா???" என்று பாம்பின் சீற்றமாக வந்தது அவளின் பதில்..

"அன்றையை தினத்தின் பின் விளைவுகளை பற்றி உனக்கு மட்டும் தான் தெரியும் ரஃபிக்.. தப்பு பண்ணியது நீ... ஏற்கனவே நிச்சயமான நீ என்னுடன்.. என்னுடன்... என்னுடன்...எப்படி... எப்படி...உன்னை மட்டும் நம்பி... வந்தேன்..." என்று கோர்வையாக பேச முடியாது துண்டு துண்டு பேசியவள் அதற்கு மேல் பேசவே முடியாது.. தடுமாறி...

"தப்பு செய்தவன் நீ... ஆனால் தண்டனை அனுபவிப்பது நான்." என்றாள் தொண்டைய அடைக்க.

"என்னை மட்டுமே நம்பி வந்தற்காக தான் இப்படி உன்னை ஊர் அறிய கல்யாணம் பண்ணிக்கொள்கிறேன் மேகி..."

என்றபோது அவன் விரல்கள் ஒரு நொடி அவளின் விரல்களை பிடித்து அழுத்தியது...

ஒரு சின்ன சீண்டல் எங்கோ மனதில் பதிந்திருந்த நினைவுகளை தட்டி எழுப்ப.... அன்றைய இரவும் இப்படி தான் அவன் மார்ப்பில் சாய்ந்திருந்த போது... என்று மீண்டும் முழுக... அவசரமாக மனதை அடக்கினாள்!!

வெடுக்கென்று அவனிடம் இருந்து கையை பிடுங்கிக்கொள்ள அவள் முனைய...

அழுத்தி பிடித்த ரஃபிக்... "என்ன?" என்றான் பிடியின் அழுத்ததிற்கும் சற்றும் குறையாமல் இருந்தது அவனின் குரல்.

உன் நினைவு தந்த அதிர்ச்சி என்று எப்படி சொல்லுவாள் எதுவும் பேசாது அமைதியாக பல்லை கடித்துக்கொண்டு இருக்க..

"பழைய ஞாபகம் இல்ல??" என்றான் மிக சரியாக யூகித்து.

"இல்லை" என்று திடமாக மறுத்தாள்.

"ஒ!!! நான் கூட அன்று இரவு... காட்டில் என்னோடு தனியாக இருந்த போது.. இப்படி தான் நீ என்ன கையை விடாது பிடித்துக்கொண்டு..." என்று அவன் சிலாகித்து பேசும் போதே...

"நான்.. நான் உங்க கையை பிடித்துக்கொண்டு இருக்கவில்லை.. நீங்க தான் என் கையை பிடித்துக்கொண்டு

இருந்திங்க.. அப்புறம்.." என்று வீராவேசமாக ஆரபித்தவள்.. பின் அதை சொல்லாமல் விட்டாள்.

"ஒரு விஷயத்தை ஆரம்பிக்கிறது சுலபம்.. ஆனா அதை கடைசி வரை நின்று போராடி முடிப்பது ரொம்ப கஷ்டம்..." என்றான் விளக்கமாக.

ஒ... முடியாததை முடித்தற்கு உனக்கு பாராட்டு விழா வைக்கனுமா??" என்றாள் எள்ளலாக.

"அதுக்கு தானே இத்தனை பெரிய விழா" என்ற போது அந்த குரலில் இருந்த கேலியும் கிண்டலும் அவளை இம்சித்தது.

"முடிக்க வேண்டிய அவசியம் இல்லாத பொழுது அதை பாதிலேயே விடுவது தப்பில்லை.. ரஃபிக். என்னை கல்யாணம் பண்ணிக்கொள்ள போராட வேண்டிய அவசியமே இல்லாது நானாகவே உன் வழியில் விழுந்தேன்"

"முடித்து வைத்தது நீ என்று பெருமையாக சொல்கிறாயா மேகி???"

ஆனால் என்ன மாதிரி முடிந்து என்று நினைக்கும் போதே கண்களை கட்டியது!!!

"அப்படி பார்த்தால்... மேகி.. நாளை நடக்க விருக்கும் முதல் இரவு நமக்கு முதல் இரவு கிடையாது... இரண்டாது.. இரவு இல்ல?!?" என்றான் யோசனையுடன் இழுத்து.

"இப்படி பேசியும்.. பார்க்க வைத்தும் என் பழைய நினைவுகளை மறக்கடிப்பதற்காக இந்த செட் போட்டு..." என்று அவள் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே..

"மேகி... என்னுடைய ஒரு தீண்டலில் உன்னையே மறக்க வைக்கும் போது... நான் எதுக்கு கோடிக்கணக்கில் செலவு செய்து இந்த செட் போடனும்?" என்ற போது அந்த குரலில் இருந்த உண்மை அவளை சுட்டது!!!

என்ன பதில் சொல்லுவாள் அதுதானே நிஜம்?!? சரியாக ஐந்த நிமிஷமும்... மூச்சு விட முடியாத அழுத்ததில் கழிய... "மேகி... உன் வீட்டில் கல்யாண ஏற்பாடு நான் செய்ய.... இங்கே செய்தது சித்!!!" என்றது உணர்ச்சியே இல்லாத அவன் குரல்.

தலையில் ஷார்ட் சர்கியூட் ஆனாது போல் இருந்தது... காரணம் சித்தும் சங்கியும் தங்கள் காதலை வெளிப்படுத்தியது பிச்சாவரத்தில் அடர்ந்த தீவில் இருந்த ரீசாட்டில் தான்!!!

அதை நினைவு படுத்தும் விதமாக தான் சித் இந்த ஏற்பாடு செய்திருக்க வேண்டும் என்று புரிய... இவள் தான் அனாவசியமாக அவனிடம் வம்பாக போய் சண்டை போட்டு இருக்கிறாள்?!?

"சாரி ரஃபிக்..." என்றாள் அமைதியாக. தப்பு செய்தது அவள் என்று தெரிந்த அடுத்த நொடி.

நல்ல காலம் பக்கத்தில் இருந்தவன் அதன் பிறகு அவளிடம் எதுவும் பேசவும் இல்லை இவளும் பேச வாய் திறக்கவும் இல்லை..

அடுத்து வந்த அரை மணி நேரமும் இப்படி அவன் கையில் கையை வைத்துக்கொண்டு அமர்ந்து இருந்ததை தவிர எந்த வேலையும் இல்லாது இப்படி வருவோர் போவார் எல்லாம் புரியாத மொழியில் எதையோ ஓதிக்கொண்டு இருக்க... இப்படியே விடிய விடிய உட்கார்ந்து இருக்கனுமா? என்று மலைப்பாக இருந்தது.

இதற்கு இவர்கள் என்னை குனிந்து நிமிர ஆசிர்வாதமே பண்ண சொல்லி இருக்கலாம்... என்று மனதில் எண்ணிக்கொண்டு இருக்கும் போதே... தானும் இங்கே தான் இருக்கேன் என்று அவளின் வயிறு பசியின் காரணமாக சத்தம் போட்டது.

"உனக்குமா?? எனக்கும் தான்" என்று தன் பசியை பற்றி பேச்சு கொடுத்தாள் சங்கி.

"நாளைக்கு மருமகளாய் உன் கடமையை சமையல் அறையில் இருந்து ஆரபிக்கனும்... தெரியுமா??" என்று அசராமல் குண்டை தூக்கி போட்டாள்...

"என்னடீ சொல்ற? குக் நீதானே... நான்... எதுக்கு சமைக்கனும்?!?" என்றாள் கிசுகிசுப்பாக.

"நீதான் மூத்த பேகம் அதனால்... நான் நாளை மறுநாள் சமைக்கனுமாம்" என்றாள் விளக்கமாக...

"இப்ப என்ன பண்ணுவது எனக்கு தான் தண்ணீரை கூட சுட வைக்க தெரியாதே.." என்றாள் பதட்டமாக மங்கி.

"ரொம்ப பயப்படாதே... அதுக்கு எல்லாம் நான் ப்ளான் பண்ணி விட்டேன்... உன் இடத்தில் நான் போய் சமைத்து விடுவேன்.. ஆனால் மறக்காமல் ஒன்பது மணிக்கு எல்லோரும் டைனிங் ஹால் வரும் முன் கீழே வந்து விடு... இல்ல இருவருமே மாட்டிக்கொள்வோம்..." என்றாள் மடமடவென்று.

"வந்து விடுகிறேன்" என்றாள் மங்கி நிம்மதியாக.

"நாளை உனக்கும் எனக்கும் ஒரே மாதிரி சௌவி டிசைன் செய்த சிகப்பு பட்டு புடவை.. பாட்டி கொடுத்த வைர செட்.. வேற எதுவும் அணிந்து வந்து மாட்டிக்கொள்ள கூடாது" என்றாள் எப்பயும் போல விலா வரியாக ப்ளான் போட்டபடி.

"ம்ம்.." என்று சம்மதமாக சொல்லிக்கொண்டு இருக்கும் போதே..

"இப்ப தான் சித் சொன்னான்... நீ ரதத்தில் வந்த இல்ல.... அந்த ரதம் சித்தோட அப்பா அத்தைக்கு வாங்கி கொடுத்தாம்..."

"கண்டு பிடி என்றானே" அது இதுவாக இருக்குமோ என்று மூளை அதி பயங்கரமாக வேலை செய்தது.

நிச்சயம் ஏதோ சம்பந்தம் இருப்பதாக தான் தோன்றியது.. ஆனால் அது என்னவாக இருக்கும் என்று தான் பிடி படவில்லை... முன்பு பேசிய விதத்தில் அவனுக்கும்... தந்தைக்கும் மிக நெருங்கிய உறவு இருப்பது தெரியும்.. அவரின் மறைவு அவனை பாதித்திருக்கிறது என்பது வரை புரிந்து தான் இருந்தது.. ஆனால் அதன் ஆழம் எத்தனை தூரம் என்று அத்தை சொன்ன பிறகு தான் உணர முடிந்தது!!!

பரபரப்பாக.. "ஏன் ரதத்தை வாங்கி கொடுத்தார்??"

"ஏன்னா என்னை போல் அத்தைக்கும் குதிரை ஓட்ட தெரியாது... ஆனா மாமாவிற்கு குதிரையில் சவாரி செய்வது ரொம்ப பிடிக்குமாம் அதனால் இவரும் சேர்த்து செல்வதற்காக அத்தைக்கு வாங்கி பரிசு அளித்தாராம்"

அதுக்கும் இவன் நம்மை குதிரையில் அழைத்து வருவதற்கும் எதாவது சம்பந்தம் இருக்குமோ?!? என்று அவள் மண்டையை பிய்த்து கொண்டு இருக்கும் போதே.. பின்பக்கதில் யாரோ அமர்வது புரிய... அவர்களின் பேச்சு அத்துடன் நின்றது.

பேசிக்கொண்டு இருந்ததில் பசியை மறந்து இருந்தவளுக்கு மீண்டும் பசியின் ஞாபகம் வர... வயிறு டிசைன் டிசைனாக சத்தம் போட்டது..

"முதலில் கல்யாணம் அப்புறம் தான் பிரியாணி!!!" என்றான் இத்தனை நேரம் வாய் திறக்காது அமைதியாக உட்கார்ந்து இருந்தவன்.

"நான் உங்களிடம் கேட்கவில்லை..." என்று சூடாக பதில் வந்தது.

"கேட்கா விட்டாலும் கொடுப்பேன்..." என்றான் அவனுக்கே உரிய தெனாவட்டு தனத்துடன்.

"அதையும் தான் பார்க்கலாம்.." என்றாள்... "அப்புறம் நீங்க கண்டு பிடிக்க சொன்னீங்களே அந்த சாரட் எதற்கு என்று கண்டு பிடித்து விட்டேன்"

"ஓ!!" என்றான் அதே கேள்வியும் பதிலுமாக.

"இவ்வளவு சீக்கிரமாக கண்டு பிடித் து விடுவேன் என்று எதிர்பார்க்கவில்லை இல்ல?!?"

"நீ கண்டு பிடித்தது உண்மை இல்லை என்று மட்டும் தெரிகிறது.." என்றான் தீர்மானமாக.

"நான் என்னவென்று சொல்லும் முன் நீங்க யூகித்து விட்டிங்களா?"

"ஓ.எஸ்.."

"எங்க சொல்லுங்க பார்ப்போம்?!?"

"உண்மையை கண்டு பித்திருந்தால் நீ அமைதியாக இப்படி என்னிடம் உட்கார்ந்து பேசிக்கொண்டு இருக்க மாட்டாய்"

"பின்ன என்ன பண்ணி இருப்பேன்?" என்றாள் இழுத்து.

"இப்ப முடியாது.. கல்யாணம் முடிந்த பின் செய்துக் காட்டுகிறேன்" என்றான் பூடகமாக.

அவன் சொன்ன விதமும்... சொன்ன பதமும் அவளுக்கு தலையை சுற்ற செய்ய வாயை மூடிக்கொண்டு அமைதியாக இருந்தாள்.

அமைதியை பற்றி எதையும் கேட்காதவன் அவளின் கையை பற்றி இருக்கினான்.

"ரஃபிக்" என்றாள் பல்லை கடித்தப்படி.

"ம்கூம்... பிருத்திவி ராஜ்" என்றான் தீர்மானமாக.

"திரும்பவும் முதில் இருந்து ஆரம்பிக்கிறாயா..." என்றாள்

"ஆரம்பித்தது நீ தான் நான் இல்லை மேகி.."

"எஸ்.. எல்லாத்திற்கும் நான் தான் காரணம்..." என்றாள் அழுத்தமாக.

"தேங்க்ஸ்..." என்றான்.

இப்படி பேசுபவனிடம் அவள் எப்படி பதில் பேச முடியும்??

வாயை இழுத்து மூடிக்கொண்டு அமைதியாக இருந்தாள்.

அடுத்த இருபது நிமிஷத்திற்கு அதே அமைதியில் கழிய இந்த புறத்தில் இருந்த சங்கி எதையோ இவளிடம் கேட்க..

தொடங்க.. இருவரும் கொஞ்சம் பேச்சு... கொஞ்சம் அமைதி... என்றப்படி இருந்தனர்...

அப்படி தொடங்கிய திருமணம்.. அடுத்த மூன்று மணி நேரமும் ஒரே இடத்தில் உட்கார்ந்து பாடினார்களா இல்லை ஓதினார்களா என்று எதுவும் தெரியாத படி.. ஏதோ செய்தார்கள்...

பசியின் உச்சத்தில் இருந்த சங்கியோ மயங்கி சரியாத குறையாக உட்கார்ந்து இருக்க.. இவளுக்கோ தூக்க மின்னையும் பசியும் சேர்ந்துக்கொண்டு இம்சை பண்ண.. ஒரு கட்டத்திற்கு மேல் பசி மந்தித்து விட ரொம்ப சோர்வாக உணர்ந்தாள்....

உலகத்திலேயே இப்படி போர் அடித்து மணப்மகளே தூக்கி விழுந்த கல்யாணம் தனதாக தான் இருக்கும் என்று நினைக்கும் போதே.. அவள் இதுவரை தூங்கி விழாமல் இருப்பதற்கு காரணம்.. பத்து நிமிடத்திற்கு ஒருதரம் அவர்கள் தூவிய பூவும்.. சந்தனமும் தான் அவளின் மானத்தையும் மட்டும் அல்ல சங்கியின் மானத்தையும் சேர்த்து காபாற்றியது....

ஒரு வழியாக சாங்கியங்கள் எல்லாம் முடிய விடியற்காலை ஆகி இருக்க.. இரு தம்பதிகளையும் எழந்து நிற்க சொன்னார்கள்.

முதல் முறையாக அவளின் கை விட... இருவரும் எழுது நின்ற பின்ன... அவளிற்கு முன் வந்து நிற்பது புரிந்தது!!!

தலையில் இருந்த முக்காடை ரஃபிக் விலக்க ... வெளிச்சத்திற்கு தன் கண்களை பழக்கபடுத்துக்கொண்டு இருக்கும் போதே... அவளை மிக கூர்மையாக பார்த்தவன்... "பேகம் மேக மித்ரா அல்வுமர் அலிகான்... போன முறைக்கு இந்த முறை பேட்டர் இல்ல?" என்றான் அருகில் இருப்பவர் யார் காதிலும் விழாதப்படி!!!

# அத்தியாயம் 23

"**பே**கம் மேக மித்ரா அல்வுமர் அலிகான்... போன முறைக்கு இந்த முறை பெட்டர் இல்ல?" என்றான் அருகில் இருப்பவர் யார் காதிலும் விழாதப்படி!!!

"எத்தனை முறை கல்யாணம் பண்ணிக்கிட்டாலும் நீங்கதான் மாப்பிள்ளை என்னும் பொழுது எப்படி பெட்டராக இருக்க முடியும்?" என்றாள் நிறுத்தி நிதானமாக.

இந்த பதிலை கேட்டவனின் முகம் சிரிப்பின் சாயலை வெளிப்படுத்த.. ஏதோ சொல்ல வாயை திறக்க.. அதற்குள் அருகில் இருந்த அவன் அம்மா காதில் ஏதோ சொல்ல... சம்மதமாக தலையை ஆட்டியவன்... அவர் கொடுத்ததை கையில் வாங்கினான்!!!

என்ன?? என்று அவள் பார்வையை தாழ்த்தும் முன்.. சுற்றி இருந்தவர்கள் பூவைக் கூடை.. கூடையாக அவர்கள் மேல் வீச தொடங்க... அதை பற்றிய எந்த பிரங்களையும் இல்லாது... தன் கையில் கொடுக்கப்பட்ட தங்க டம்பளரில் இருந்து எதையோ குடித்தவன்... பின் அவளுக்கும் நீட்டினான்!!!

அவன் கொடுத்ததை வாங்கிக்கொண்டவளின் கண்கள் அந்த கிலாசில் இருந்த கருப்பு நிற திரவத்தை பார்த்து தயங்கி

நின்றாள்... அவர்களின் வாழ்க்கை பந்தத்தை முடிச்சுப் போடும் இந்த செயலை செய்ய மூளையும்.. மனமும்... ஒன்றுக்கு ஒன்று எதிரும் புதிருமாக கருத்தை அவள் முன் நிறுத்த... நடுங்கிய கையால் என்ன செய்வது என்று தெரியாது.. நிமிர்ந்து அவனை பார்த்தாள்...

அவளை பார்த்த பார்வையில் அகங்காரம் இல்லை.. திமிர் இல்லை... குடித்து தான் ஆக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை... ஏன் எப்பொழுதும் நிறைந்து இருக்கும் கூர்மை கூட இல்லை... அதற்கு பதில்... அவள் என்றுமே அறியாத... சின்ன இறைஞ்சலுடன் அவளிடம் மையம் கொண்டு நின்றதை முதல் முறையாக உணர்ந்தவளுக்கு... அவளையும் அறியாது கைகள் தானாக வாயை நோக்கி நகர்ந்தது...

அவன் கண்ணில் தெரிந்த அந்த சின்ன பார்வைக்கு தன்னுள் இத்தனை பெரிய பிரதிபளிப்பு இருக்கும் என்று அவளே இதுவரை உணர்ந்ததில்லை...

ஆழ்ந்த மூச்சு விட்டு குடிக்கத் தொடங்க... இந்த பானத்தை குடிக்க விடாது அடுத்த கட்ட பூ மாரியை பொழிய தொடங்கினர்.. சுற்றத்தார்!!!

பார்வையை அவனிடம் இருந்து அவசரமாக விலக்கியவள்... இப்படி வாயிலேயே பூவை போட்டால் நான் எங்கிருந்து குடிக்க?? கொஞ்சம் குடிக்க தான் விடுங்களேன்

என்று மனம் கூவ... அதை பற்றி அக்கரையே இல்லாது... ஒரு நொடி கூட இடை விடாது பூவை கூடை கூடையாக தூவியப்படி இருந்தார்கள் அங்கே இருந்தவர்கள்!!!!

விட்டால் அந்த கிலாசையே பூவால் நிறப்பிவிட்டு தான் மறுவேலை பார்ப்பார்கள் போலவே என்று புகைத்தப்படி மிகுந்த சிரம்மப்பட்டு ஒரு முனறு அந்த பானத்தை விழுங்கினாள் வாயில் விழுந்த பூவோடு...!!!

குடித்தற்கு அப்புறம் தான் தெரிந்தது... இதற்கு அவர்கள் அதை கொடுக்காமலே இருந்திருக்கலாமே என்று... பசி மந்தித்து விட்ட நிலையில் இருந்தவளின் வாயில் புளிப்பு, இனிப்பு, கசப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு என்று முழுதாக அறுசுவையும் கொண்டு இருந்தது அந்த பானம்.

சங்கியின் கை வண்ணத்தில் இப்படி பலதரப்பட்ட பானம் குடித்து பழகியதால் முகத்தை சுளிக்காமல் இருக்க முடிந்தது.. இல்லை என்றால் அந்த வாசனைக்கும் சுவைக்கும் குடலையே புரட்டிக்கொண்டு வெளியே வந்திருக்கும்!!! வாசனையே அப்படி இருந்தது என்றால் அப்போ அதன் சுவை கேட்கவும் வேண்டுமோ?!?

"வாழ்க்கையில் எந்த சுவை வந்தாலும் அதை பகிர்ந்து வாழ பழக்கிக்கொள்ள வேண்டும் என்பதை உணர்த்தும் விதமாக

தான் இந்த பானம்" என்று அத்தை காயத்திரி மருமகள் இருவருக்கும் தமிழில் விளக்கம் சொல்ல...

சங்கியோ தலையை பலமாக ஆட்ட.. மங்கியோ.. பகிர்வதா இவனுடனா?? எனக்கு சொல்லும் முன் உங்கள் மூத்த பையனிடம் நன்றாக காதில் ஓதுங்கள் என்று மனதில் நினைத்தப்படி ரஃபிக்கை பார்க்க...

அவளின் பேச்சை கேட்ட மாதிரியே அவனின் முகம் பிரதிபளிக்க.. தலையை மட்டும் சாய்த்து "ரீயலி??" என்றான் கண்களாலேயே ரஃபிக்.

அவன் கேட்ட கேள்விக்கு பதில் ஏதுவும் சொல்லாது அவள் முகத்தை திருப்ப.. சரியாக அந்த சமயம் பார்த்து காயத்திரி..

"பெரியவர்களிடம் ஆசிர்வாதம் வாங்கிக்கொள்ளுங்கள்" என்றார் அமைதியாக.

இனி.. மூத்த குடும்ப அலிகான் அங்கத்தினர் அனைவரின் கால்களிலும் விழுந்து ஆசிர்வாதம் வாங்க வேண்டும் என்று பெரு மூச்சு விட்டப்படி ரஃபிக்கை பின் தொடர்ந்து திரும்ப... அருகில் இருந்த சங்கி அவளின் கையை பற்றினாள்...

"அவர்கள் கையால் இந்த பானம் குடித்ததோடு நம் கல்யாணம் இனிதே முடிவைடைந்து விட்டதாம்...." என்றாள் அதிர்ச்சியில் தொண்டையை அடைக்க தன் சோதரியிடம் கிசுகிசுத்தாள்.

கடந்த இரண்டு வாரமாக நடந்த எந்த வைபவத்தை பற்றி ஒரு அச்சரம் கூட தெரியாது இன்னும் கேட்கப்போனால் தன் முகூர்த்த நேரத்தைக் கூட தெரியாது அதிர்ச்சியாக கேட்டவளுக்கு இன்று சங்கியின் அதிர்ச்சியில் ஒரு துளி கூட பிரதிபளிப்பு என்ன... ஒரு சின்ன சலனம் கூட முகத்தில் இல்லாது.. அமைதியாக அவளை பார்த்து...

"தெரியும்" என்றாள் சங்கியின் கையில் மேல் ஆதரவாக அவள் கையை வைத்து.

"இதற்காக வா கடந்த பத்து நாட்களாக நம்மை இந்த பாடு படுத்தினாங்க?!? டூ மச் டீ மங்கி... நான்கு மணி நேரம் ரத்த ஓட்டமே இல்லாது கையை பிடித்துக்கொண்டு உட்கார வைத்தார்களே.... ஏதோ... சினிமாவில் காட்டுவது போல்... இடுப்பில் சொருகி இருந்த உடை வாளை எடுத்து எதையாவது வெட்டுவார்கள் என்று எதைஎதையோ வரிசையாக கற்பனை பண்ணிக்கொண்டு உட்கார்ந்து இருந்தால்... கடைசியில் ஒட்டியானம் போல் அணிகலனாக அழகுக்கு இடுப்பில் சொருகி இருப்பார்கள் என்று நான் சத்தியமாக நினைக்கவில்லை... பத்தாதற்கு அந்த கசாஷயம் வேறு?!?..." என்று இன்னும் அதிர்ச்சியில் இருந்த மீளாது நொடிக்கு நூறு வார்த்தைகள் என்ற ரீதியில் அடிக்கொண்டே போனாள் சங்கி.

அவளின் நிலையை புரிந்தவளுக்கு... "அந்த கஷாயத்தை பற்றி சொன்னியே... அதன் சுவை... வேஸ்ட் பண்ணாமல் சமைக்கிறேன்னு சொல்லிவிட்டு கழனி தண்ணீர்... வெட்டி போட்ட பழ, காய்கறி தோலில் நீ புரூட் பன்ச்ன்னு ஒரு நாள் வீட்டில் போட்டு.. பன்ச் பண்ணாமலேயே எல்லோரையும் நாக் அவுட் பண்ணியே..அதே மாதிரி இருக்கு.. கவனித்தாயா??" என்று சமயோகிதமாக பேச்சை மாற்றினாள் மங்கி.

இவளின் பதிலை கேட்டு சங்கியை மனம் திசை திரும்பி விட... அவள் அருகில் இருந்து சித் நிம்மதி பெருமூச்சு விடுவது நன்றாகவே கேட்டது... அவனிடம் திரும்பி நின்று பேசுவதற்குள் ரஃபிக் கையை பற்றி முன்னே அழைத்துக்கொண்டு போக.. அமைதியாக அவனோடு நடந்தாள்.

வரிசையாக வீட்டின் மூத்த அலிகான் அங்கத்தினர் வந்து நிற்க... அடுத்த இருபது நிமிஷம் ஆசிர்வாதம் பண்ணுவதில்... கழிந்தது!!!

ஆசிர்வாதப் படலம் ஒருவழியாக இனிதே நிறைவடைய... மணப்பெண்களை அங்கையே விட்டு விட்டு மாப்பிள்ளைகள் மட்டும் எங்கோ செல்ல.. எங்கே செல்கின்றர் என்று திரும்பக் கூட வழி இல்லாது அனைவரும் சூழ்ந்து இருந்தனர்.

அடுத்த பத்தாவது நிமிடம்.. அவர்கள் வீட்டின் வாழ்த்துக்களுக்கும் அணைப்புகளுக்கும் மத்தியில் குதிரையின்

காலடி ஓசை கேட்க... திடுகிட்டு திரும்பி பார்த்தவளுக்கு ரஃபிக்கும் அதற்கும் பின்னாடி சித் குதிரை பூட்டிய ரதத்தில் வருவது தெரிந்தது!!!

ஏன் என்று அவள் யோசிக்கும் போதே.. அவர்களை சூழ்ந்திருந்த கூட்டம் இரண்டு அடி பின்னால் விலகி நிற்க அதை கூட உணராது நான்கு கால் பாய்ச்சலில் பாய்ந்து வரும் செத்தக்கின் அழகையும் அதன் மேல் ராஜ கம்பீரமாக மிடுக்குடன் அமர்ந்து வரும் ரஃபிக்கையும் அவள் வாயை பிளந்துக்கொண்டு பார்த்து நிற்க...

கொஞ்சம் கூட வேகம் தனியாது அவள் புறம் வந்தவன் எப்பயும் போல் அவளை காற்றில் தூக்கி குதிரையில் அமர வைக்க.. கரகோஷமும்.. காதை கிழித்தது!!!

சங்கி இதை பார்த்து பயந்து போய் பின்னால் ஒரு அடி எடுத்து வைக்க அதற்குள் தன் ரதத்தோடு வந்து நின்ற சித்... தன் அண்ணனுக்கு எந்த விதத்திலும் குறையாது நிமிர்வுடன் வந்தவன்.. அவளை பார்த்து "வா போகலாம்.." என்று கையை நீட்டினான்.

நிம்மதி பெரு மூச்சுடன் அவன் நீட்டிய கையை பற்றியவள் சிரித்தப்படி அந்த ரதத்தில் ஏறி அவன் அருகில் நின்றாள் சங்க மித்ரா!!!

முன்னால் போய்க்கொண்டு இருந்த தம்பதிக்கு இடம் விட்டு சற்று பொருமையாகவே சென்றான் சித்!!!

"ஏன் இதை என்னிடம் சொல்லவே இல்லை??" என்றாள் முன்னாடி சென்று கொண்டு இருந்த குதிரை பார்த்து இன்னும் அதிர்ச்சியில் இருந்த விலகாத சங்கி.

அவளின் முகத்தை பார்த்து வாய் விட்டு சிரித்தவன்.. "சொல்லி இருந்தால் என்ன செய்து இருப்ப?? மண மேடைக்கு வருவதற்கு பதில் யாருக்கு என்ன சாப்பிட கொடுக்கலாம் என்று மெனு போட்டு... அபிசியலாக என் மனைவி ஆகும் முன் நம் விங்கிற்கு வந்து சமைக்க ஆரம்பித்து இருப்பாய்!!!" என்றான் குரலில் சிரிப்பு தெறிக்க.

பயமோ.. இல்ல படப்போ அதை சங்கி வெளிப்படுத்தும் விதம் அவளின் சமையல்... மூச்சு விடாது சமைத்துக்கொண்டே இருப்பாள்!!! அதை நன்கு அறிந்தவன் என்பதால் தான் இப்படி ரதத்தை எடுத்து வந்து இருக்கிறான் என்று புரிய.. சிரித்தப்படி அவன் வயிற்றில் முழங்கையால் சின்னதாக இடித்தவள்..

"நல்ல காலம்... இதில் என்னை அழைத்தாய்... அத்தான் மாதிரி குதிரையில் வந்திருந்தால்.... நான்.."என்று படப்படப்பாக பேசும் போதே..

"தெரியும்.. தெரியும்.. இன்நேரத்திற்கு நீ கத்தும் கத்தில் ஊரை கூட்டி என் மானத்தை வாங்கியது மட்டு இல்லாது என்

காதையும் பஞ்சர் ஆக்கி இருப்பாய்" என்றான் சித் வாய் விட்டு சிரித்தப்படி அவள் இடுப்பில் சுவாதினமாக கையை போட்டு அவனோடு இறுக்கி அணைத்தப்படி.

அவசரமாக அவனின் கையை தட்டி விட்டவள்... "சித்... யாராவது பார்த்து" என்று சொல்லும் போதே..

"ம்கூம்... எல்லோரும் கிளம்பி வீட்டின் வாசலுக்கு போய் சேர்ந்து நம்மை வரவேற்க இன்னும் பத்து நிமிஷமாவது ஆகும்... அது வரை நான் இங்கே சுற்ற வேண்டியது தான்" என்று சரசம் பேசினான் சித்.

"சித்... உறவினர்கள் கூடி இருக்கும் போது... நான் மேக் கப்...கலைந்து போய் நின்றால் அது உனக்கு தான் அசிங்கம்..." என்றாள் சிரிப்பில் குரல் பொங்க.

"இன்னும் ஒரு நாள்... உன் அண்ணன் பாடி காட்டாக என்னோடு சுற்றிக்கொண்டு தான் இருப்பான் என்று சொல்" என்றான் தன் ஆத்ம நண்பனான பத்ரியை பற்றி சொல்லியப்படி ஏக்க மூச்சு விட்டான் சித்.

இப்படி புது தம்பதிகளுக்கே உரிய பேச்சுகளும்.. சீண்டல்களும் பொங்க.. பின்னாடி இளையவன் வர... மூத்தவனோ எதுவும் பேசாது அமைதியாக காற்றை கீழிக்கும் வேகத்தில்... ஒரு பக்கமாக கால் போட்டு இருந்த தன் மனைவியின் இடுப்பை.. சுற்றி இருந்த கை தன் மார்போடு

இருக்கி வைத்திருக்க... அப்படியே உருகிதான் தான் போனாள் மேக மித்ரா!!! பேச எதுவும் தோன்றாமல் வந்தவளுக்கு செத்தக்.. வீட்டை நோக்கி போகாமல் வேறு புறம் திரும்புவது புரிய... தன்னிலைக்கு திரும்பியவள்...

"கையை எடு ரஃபிக்..." என்றாள் அவனின் கையை பிரித்து எடுக்க முயன்றப்படி.

"ஏன்?"

"பிடிக்க வில்லை..."

"ஓ!!!" என்றப்படி முன்னிலும் இருக்கி பிடித்து அவனோடு சேர்த்தான் அந்த உத்தமன்.

"ரஃபிக்.." என்று அவள் பல்லை கடிக்க..

"நீ தான் சரியா பிடிக்கவில்லை என்று குறைப்பட்ட?!?"

"சரியாக பிடிக்கவில்லை என்று குறைப்படலை... நீ என்னை பிடித்திருப்பது பிடிக்கவில்லை" என்று கூறினேன் என்றாள் என்னமோ அவள் செய்கை புரியாது போல்

"மேகி.. நான் பிடிக்கவில்லை என்றால் புடவையில் ஒரு புறம் கால் போட்டுக்கொண்டு அமர்ந்துக்கொண்டு வரும் நீ... விழுந்துவிடுவாய்" என்றான் அமர்த்தலாக..

"கீழே விழாமல் பிடித்திருப்பதற்கும்... நீ இப்ப பிடித்திருப்பதற்கும் வித்தியாசம் இருக்கு" என்றாள்.

"அப்ப நீ என் மனைவியாக இருக்கவில்லை மேக மித்ரா அல்வுமர் அலிகான்" என்றான் நிறுத்தி நிதானமாக.

"இப்பவும் நான் உன் மனைவியாக இருக்க போவதில்லை" என்றாள் திடமாக.

"அதையும் தான் பார்க்கலாம்" என்றான் அதே திடமாக.

இவர்கள் இப்படி வழக்கு அடித்துக்கொள்ளும் போதே செத்தக் ஒரு ரவுண்ட அடித்து விட்டு அவர்கள் வீட்டு வாசலில் போய் நிற்க... முதலில் குதிரையில் இருந்து இறங்கி அவளையும் அழகாக இறங்கி விட்டான்.

இவர்கள் பின்னாடியே இளையவனும் வந்து சேர... ராஜ உபசாரத்துடன் சிகப்பு கம்பளம் விரித்து அரண்மனைக்குள் உள்ளே அழைத்து வர... தம்பதியனர் நேராக டைனிங் டேபிள் இருக்கும் இடத்திற்கு சென்றனர்.

மணமக்கள் விருந்தை முடித்து வைக்க அவர்களை பூக்களாலும் மலர் கொத்துகளாலும் அலங்கரிக்கப்பட்ட பெரிய டைனிங் ஹாலுக்கு அமர செய்யப்பட.. அலிகான் வீட்டில் மிக மிக முக்கிய நபர்கள் மற்றும் சச்சிதேவ் வீட்டில் அனைவரும் டைனிங் டேபிளில் அமர்ந்தனர்.

தங்க தட்டில் முதலில் ஏதோ இனிப்பை வைப்பார்கள் என்று பார்த்தால் முதலில் பிரயாணியை வைத்தார்கள்!!!

இதை தான் திருமணம் முடிந்ததும் பிரியாணி தருவதாக சொன்னானா? என்று மனதிற்குள் குமைந்தப்படி அதை வெறித்தாள்.

மூத்த தம்பதியனர் என்னத்தையோ ஓதிவிட்டு இவர்களை சாப்பிட அனுமதிக்க... அப்பாடா என்று பிரியாணியில் கையை வைத்திருப்பாள் அதற்குள் இவர்களுக்கு எதிரில் உட்கார்ந்திருந்த கார்த்திக்..

"மேக மித்ரா.. நீ சாப்பிட போவது மட்டன் பிரியாணி" என்றான் ரஃபிக்கை குற்றம் சாட்டும் பார்வையோடு.

அவன் பார்வை மட்டும் குற்றம் சாட்டவில்லை... "நீ சைவம் என்பது கூட தெரியாது உனக்கு அசைவ உணமைவை வைத்து விட்டார்கள்??" என்று சொல்லாமல் சொன்ன விதம்... அவளுக்கு மட்டும் இல்லை அங்கே உட்கார்ந்து இருந்த அனைவரின் காதிலும் தெள்ள தெளிவாக யாரை குற்றம் சாட்டுகிறான் என்று உணர்த்த.. ஒரு நிமிஷம் அங்க மையான அமைதி நிலவியது!!!

ரஃபிக்கோ இல்லை அவன் குடும்ப அங்கத்தினர் யாராவது கார்த்திக்கிற்கு பதில் அளித்தால் பேச்சின் மூலமே மூன்றாம் உலக பேரையே உருவாக்க கூடிய வல்லமை படைத்தது என்று நொடியில் உணர்ந்தவள்.... சூழ்நிலையில் தீவிரம் உணர்ந்து அடுத்த நொடி சற்று கூட யோசிக்காமல்... பட்டென்று

டேபிளுக்கு கீழே இருந்த அவன் தொடையில் கையை வைத்து அவன் பேச வந்ததை தடுத்து நிறுத்தியவள்...

"நீயுமா அண்ணா??" என்று மெல்ல சிரித்தவள் "முதல் முறை பார்த்து நானும் கூட அப்படி தான் ஏமாந்து போனேன்... இது மட்டன் பிரியாணி இல்லை. வெஜ் பிரியாணி தான்... இந்த பீஸ் வந்து பலா காய்.. அங்கே வெஜ் பிரியாணிக்கு மணம் கொடுக்க பலா காயை வெட்டி இப்படி போடுவது வழக்கம். முதல் முறை பார்ப்பவர்கள் வெஜ் பிரியாணி என்று நம்ம மாட்டார்கள் அப்பவே இவரிடம் சொன்னேன்" என்று பூகம்பமாய் வெடிக்க இருந்த விஷயத்தை புஸ்வானமாக்கி விட்ட போதும் ஏனோ மனது பட படவென்று அடித்துக்கொள்ள... சிரித்த முகாகவே கார்த்திக்கையும் ரஃபிக்கையும் ஒரு பார்வையை பார்த்துவிட்டு தட்டில் குனிந்தாள்.

சூழ இருந்த உறவினர் பட்டாளமும்... சிரித்தப்படி சாப்பாட்டை கவனிக்க.. வேறு ஒரு முனையில் அமர்ந்திருந்த காயத்திரியின் அருகில் அமர்ந்திருந்த சொந்தத்தினர்..

"இனி கவலையை விடுங்கக்கா.. இத்தனை நாள் வாயை மூடிக்கொண்டு ஆமிரா வீட்டு ஆட்கள் கொடுத்த குத்தத்தை எல்லாம் பொருத்துக்கொண்டு அமர்ந்திருந்த விதத்தை பார்த்துவிட்டு சரியான அப்புராணி சப்புராணியாக இருக்கும் போலையே.. இந்த பொண்ணு வந்து எப்படி நம் வீட்டு

சூழ்நிலையையும்.. பேச்சுகளையும் சமாளிக்குமோன்னு கொஞ்சம் பயமாக கூட இருந்தது... ஆனால் அவர்கள் வீட்டு ஆட்களையும் விட்டுக்கொடுக்காமல்... அதே சமயம்... நம் வீட்டு ஆட்கள் பதில் கொடுத்து விஷயத்தை பெருசு படுத்தும் முன்.. இவளே முந்தி ரொம்ப ரொம்ப அழகாக கையாண்டு விட்டாள்.... யாருக்கும் சிறு இடஞ்சலும் இல்லாது... கெட்டிக்காரிதான்" என்றாள் அந்த அம்மணி மெச்சுதலோடு.

பெரு மிதம் பொங்க தன் மகனையும் மருமகளையும் பார்த்த காயத்திரி.. "பின்ன ரஃபிக் தேர்வு செய்து இருக்கிறானே என்றால் சும்மா இருக்க முடியுமா?"என்றாள் பெருமையாக.

இப்படி அவளை எடை போடுவது தெரியாது அவள் தட்டில் விழுந்ததை வாயில் வைத்துக்கொண்டு இருக்கும் போது தான் அவளின் கை இன்னும் அவனின் தொடையிலேயே இருப்பதை உணர்ந்தவள் அவசரமாக கையை எடுக்க... பட்டென்று அவளின் கையை அப்படியே அழுத்தி பிடித்து அங்கே இருத்தியப்படி... மேகியின் புறம் திரும்பியவனின் கணகளின் கோபம் தெறிக்க...

"உனக்கு தேவை என்றால் என்னை பயன்படுத்திக்கொள்வதும்.. தேவை இல்லை என்றால் தூக்கி எறிவதுமாக இருக்கும் இந்த வாடிக்கையை முதலில் நிறுத்து மேக மித்ரா" என்றான் கடுமையான குரலில்.

# அத்தியாயம் 24

"**உ**னக்கு தேவை என்றால் என்னை பயன்படுத்திக் கொள்வதும்.. தேவை இல்லை என்றால் தூக்கி எறிவதும் வாடிக்கை ஆகி விட்டது மேக மித்ரா" என்றான் கடுமையான குரலில்.

மெல்ல தலையை அவன் புறம் திருப்பியவள் "அதை மட்டும் தானே செய்கிறேன்... உங்களை மாதிரி இல்லாத சந்தர்ப்பத்தை கூட உருவாக்கி அதை பயன் படுத்துக்கொள்ளும் திறமை இல்லையே என்று சந்தோஷப் பட்டுக்கொள்ளுங்கள்" என்றாள் கடித்த பற்களுக்கு இடையே.

"மேக மித்ரா..." என்று பேச வந்தவன்.. பின் அதை விட்டு சுருக்கமாக "கார்த்திற்கும் எனக்கும் நடுவில் நீ வராதே" என்றான் திட்டவட்டமாக.

"பிரச்சனையே என்னை வைத்து தான் என்னும் போது நான் எப்படி வராமல் இருக்க முடியும்?"

"எங்களின் பிரச்சனை நீ மட்டும் இல்லை என்று தெரிந்தும்..." என்று பேசிக்கொண்டு இருந்தவனின் குரல் மங்கியின் முகம் போன போக்கை பார்த்து.. பாதியிலேயே

நிற்க... பின்... பெரு மூச்சு விட்டவன்.. "அப்ப உனக்கு தெரியாதா?" என்றான் அவளை ஆழமாக பார்த்து.

"எதை பற்றி?"

"ம்கூம்.. இப்ப வேண்டாம் அப்புறம் பேசுவோம்" என்று முடித்தான்.

"என்னை தவிர்த்து உங்களுக்குள் வேறு பிரச்சனை இருக்கா?? என்று அவனை பார்த்து முனுமுனுத்தவள்... "இதுவரை ஏன் என்னிடம் யாருமே சொல்லவில்லை?!?" என்று தவித்தப்படி "ஏன் என்ற உண்மை தெரியாது என்னால் தூங்க முடியாது"

அவளின் தவிப்பையும், பயத்தையும் அதை அடக்க மேகி படும் அவஸ்தையும் ஒரு நொடி கண்ணுற்றவன் "கேட்டாலும்.. தூங்க முடியாது.. பேசாமல் சாப்பிடு" என்றான் அமைதியாக...

"உண்மை தெரியாது என்னால் ஒரு வாய் கூட விழுங்க முடியாது போல் இருக்கிறது... ப்ளிஸ்... எதுவாக இருந்தாலும் சொல்லி விடு ரஃபிக்" என்றாள் அவனை கெஞ்சுதலோடு.

"சித்சிற்கு பதிலாக என்னை மாற்றி கடத்தி வந்ததிற்கு ஒரு வாரத்திற்கு முன்பு... கார்த்திக்கும், நிரல்யாவும் டைவர்ஸ் லாயரை சென்று பார்த்தார்கள்... இந்த விஷயத்தை உங்க வீட்டில் நான் சொல்லிவிட்டேன்... என்பது மற்றொரு காரணம்..." என்றான் உணர்ச்சியே இல்லாத குரலில்.

அவன் சொல்லிய விஷயம் கேட்டு அதிர்ச்சியில் வாயில் உணவு இல்லாதபோதும் புரையேற.. தண்ணீர் குடிக்க வேண்டும் என்ற நினைவு கூட இல்லாது இரும்பிக்கொண்டு இருந்தவளின் முன்.. தண்ணீரை நீட்டினான்... ரஃபிக்.

செய்ற்கையாக வாங்கி குடித்தவளுக்கு ரஃபிக் சொன்ன விஷயத்தை பற்றியே மனது சுற்றியது.. அவன் சொன்ன செய்தியின் உண்மையின் தீவிரத்தை உணர்ந்தவளுக்கு... அந்த செயலுக்கான முகாந்திரம் புரியாது தத்தளிக்க...

அவளின் பரிதவிப்பை உணர்ந்தவனுக்கு... "மேகி... மேகி" என்று இரண்டாவது முறை அழுத்தமாக அழைத்தவன்... "அவர்களுக்கு என்ன பிரச்சனை இருந்தாலும்... அதை கடந்து வந்து நம்முடன் தானே ஊர் அறிய உங்க கோவிலில் கல்யாணம் பண்ணிக்கொண்டார்கள்??" என்றான் அவளை அதிர்ச்சியில் இருந்து மீள வைக்கும் முயற்சியில்.

"ஆனால்.. ஆனால்.... நிரல்யாவும்.. கார்த்திக்கும்... டைவர்ஸ் லாயரை பார்த்தார்கள் என்றால் என்னால் நம்ப கூட முடியவில்லை... வீட்டிலேயே மேட் பார் ஈச் அதர் என்று நான் அவர்களை தான் நினைத்தேன்.." என்று அவளையும் அறியாது டைனிங் டேபிளில் கீழே பிடித்திருந்த கையை இருக்கி பிடித்தவள் அவனை நேருக்கு நேராக பார்த்தவளின் கண்ணில்

தெரிந்த வலியும் வருத்தமும் அருகில் இருந்தவனை புயலாக தாங்கியது.

"ஏய்... கூல் டவுன்.. அப்படி எதுவும் ஆக உன் பாட்டி விட மாட்டாங்க" என்றான் மிகவும் திடமாக.

"ம்ம்.." என்று தொண்டையை அடைக்க தலையை ஆட்டியவள்.

"அவனால் இப்படி முகத்தை நீ தூக்கி வைத்துக்கொண்டு சாப்பிட்டாலும் கூட உன் அண்ணனுக்கு நான் ஏதோ சொல்லிவிட்டது போல் தான் தோன்றும்.. இதற்காகவே தேவை இல்லாமல் வந்து என்னிடம் வம்பு இழுக்கலாம் என்றுதான் பார்ப்பான்.." என்றான்.

அவன் சொல்வதில் இருந்த உண்மை அவளுக்கு புரிய அவசரமாக முகத்தை சரி செய்துக்கொண்டு தட்டில் இருந்த உணவை சாப்பிடாமல் அலைய ஆரம்பிக்க...

"ஏய்... உன் அண்ணன் அவ்வளவு சீக்கிரம் எதையும் விட்டு கொடுக்கும் ஆள் இல்லை... நம் விஷயத்தையே எடுத்துக்கொள்ளேன்... சந்தர்ப்பம் கிடக்கும் போது எல்லாம் என்னுடன் முட்டிக்கொண்டே இருப்பவன் எப்படி நிரல்யாவை விட்டு கொடுப்பான்??"

"ஓ.. இதை தான் வசிஸ்டர் வாயால் பிரம்ப ரிஷி என்பதா?" என்றாள்.

"மேகி.. உன் அண்ணனை நான் என்றுமே எதிரியாக பார்த்ததும் இல்லை... ஒதுக்கியதும் இல்லை.. அவனுக்கு பிடிக்காவிட்டாலும் கூட நான் தான் அவனின் மச்சான் தான் என்று நினைவு படுத்துவேன்!!!" என்றான் குரலில் ஹாசியம் பொங்க.

அதற்குள் அவர்களுக்கு அடுத்த உணவு பதார்த்தங்கள் நிரப்ப ஆட்கள் வர.... அதன் பிறகு தனித்து அவர்களுக்கு எதை பற்றியும் பேச இடமே கிடைக்கவில்லை... ஆனால் சாப்பிட்டு முடிக்கும் வரை.. அவளின் கை அவனின் கைக்குள் தான் அடைக்கலம் புகுந்து இருந்தது விருப்பத்துடன்!!!

உணவு முடிந்தவுடன் முதல் முறையாக காயத்திரி மணபெண்களை அரண்மனையில் இருக்கும் சுவாமி அறைக்கு அழைத்து சென்று விளக்கு ஏற்ற பணித்தார்.

தங்க தொட்டிலில் மயில் பீலியுடன் படுத்து கிடந்த குறும்புக்கார கண்ணனை பார்த்து மனம் லேசாக... மணபெண்கள் இருவரும் அங்கே இருந்த விளக்கில் தீபம் ஏற்றி வழிப்பட்டனர்!!!

"இதுதான் ஒன்று தான் எங்களுக்கு தெரிந்த சம்பிரதாயம்" என்றார் பாட்டி சிரித்தப்படி... காயத்திரியிடம்.

ஆமோதிப்பாக தலை ஆட்டிய காயத்திரி "இது இங்கே கிடையாது.. தான் நம் ஊர் பெண்களாக ஆகி விட்டதால் தான் இதை செய்ய சொன்னேன்" என்று விளக்கியவர்..

மருமகள் புறம் திரும்பி... "விடிய ஆரம்பித்துவிட்டது நீங்க போய் கொஞ்சம் நேரம் ரெஸ்ட் எடுத்து விட்டு குளிச்து விட்டு வாங்க.." என்று மொழிந்தவர்.. "காலை ஒன்பது மணிக்கு எல்லோரும் சாப்பிட வந்துவிடுவாங்க மேக மித்ரா.. அவர்களுக்கு முதலில் சாப்பிடும் உணவு நீ செய்ததாக தான் இருக்க வேண்டுமே தவிர... அது எதுவாக வேண்டுமாலும் இருக்கலாம்... குறைந்தது இருபது பேருக்காவது தேவைப்படும் அளவு சமைக்க வேண்டி இருக்கும்.. நான் உடன் வந்து உதவி செய்யலாம் என்று நினைத்து இருந்தேன்.. ஆனால் நாளை மாலை நடக்க விருக்கும் ரிஷப்ஷனுக்கான கடைசி ஏற்பாடு சில பாக்கி இருப்பதால் நான் பார்க்க வேண்டி இருக்கிறது.. பயப்படவேண்டாம் உனக்கு துணையாக வேலை ஆட்கள் இருப்பாங்க கூடவே ரஃபிக்கோட சின்ன பாட்டியும் கூட இருப்பாங்க... இப்ப உங்க அறைக்கு போய் கிடைத்த நேரத்தில் ஓய்வு எடுங்க" என்று அவர் கூற பலமாக தலை அசைத்தாள்.

உடன் வந்த குடும்பத்தினர் அனைவரும் அவர்களுடன் திரும்ப... "நான் உங்க அறை என்று சொன்னேன்" என்று அவர் கூற அப்படியே உரைந்து நின்று திரும்பி பார்த்தாள் மேகி.

"இந்த புடவையை மாற்றிவிட்டு.." என்று இழுத்தப்படி நின்ற சங்கியை பார்த்து சிரித்த காயத்திரி..

"இதை எல்லாத்தையும் கலைக்கவே... மூன்று ஆட்கள் தேவைப்படும்.. அவர்கள் அங்கே தயாராக உங்க வரவிற்காக காத்துக்கொண்டு இருக்காங்க... உங்களின் உடமைகள் எல்லாம் அந்த ரூம்மிற்கு எப்பயோ எடுத்துக்கொண்டு போய் அடுக்கியாச்சு!!!" என்று மொழிந்தவர் சச்சிதேவ் குடும்பத்தினரிடம் திரும்பி

"நீங்களும் தானே விடிய விடிய கண் விழித்து இருந்தீங்க.. கொஞ்சம் நேரம் ரெஸ்ட் எடுங்க.." என்று நிறுத்தியவர் "அவசரம் என்றால் தவிர இவர்களுடைய விங்கிற்கு வேலை ஆட்களை தவிர நான் உட்பட வேறு யார் செல்லவும் அனுமதி இல்லை..." என்று அவரையும் சேர்த்து கூறினார்.

காயத்திரியே போக அனுமதி இல்லை என்றால் அப்படி என்ன சிதம்பர ரகசியம் அங்கே இருக்கும் என்று ஆளாக்கு யோசித்த போதும்.. எப்படி நாட் நாட் செவன் எந்த சிதம்பர ரகசியத்தை உடைத்து கண்டு பிடித்துவிடுவார்கள் என்று நம்பிக்கை இருந்ததால் மணபெண்களை வேலை ஆட்கள் அவர்களின் விங்கிற்கு அழைத்து செல்லும் வரை உடன் இருந்துவிட்டு அங்கிருந்த ஓய்வு எடுக்க புறப்பட்டனர்.

மங்கிக்கு அங்கு செல்ல சற்றும் விரும்பம் இல்லை என்னும் போதும் அவளுக்கு வேறு வழி இல்லை என்று உணர்ந்து அமைதியாக அங்கே சென்றாள்!!!

எதிர்பார்த்தப்படி நேராக அவனின் அறைக்கு அழைத்து செல்லாது அந்த நார்த் விங்கில் உடைகள் மற்றும் அலங்காரத்திற்கு என்றே இருந்த விசாலமான தனி அறைக்கு தான் முதலில் ஆட்கள் அழைத்து சென்றனர்.

தேக்கு மரத்தால் சின்ன சின்ன வேலைப்பாட்டுடன் இழைத்து.. சேதுக்கி கட்டி இருந்த அந்த அறையும்.. ஆள் உயர கண்ணாடியையும் பார்த்த அசர கூட முடியாத அளவு அசதியும், சோர்வும் கண்களை கட்ட செய்தது!!!

அத்தை காயத்திரி தெரிவித்து இருந்தது போல் மூன்று பேர் இவர்களின் வரவிற்காக காத்து இருக்க… இவள் வந்து அமர்ந்தவுடன் மடமடவென்று தலை முதல் பாதம் வரை இருந்த நகைகள் மற்றும் அலங்காரத்தை கலைக்க… நகைளை எல்லாம் பத்திரமாக எடுத்து வைத்தவள் குளியல் அறை எங்கே கேட்டுவிட்டு.. அவர்களை வெளியேற சொன்னாள்!!!

குளியல் அறையின் கதவை திறந்துக்கொண்டு உள்ளே சென்றவளுக்கு.. வெளிபுற தோற்றத்திற்கும் சற்றும் பொருத்தம் இல்லாது… உள்ளே ஜக்கூசியில் ஆரபித்து சூப்பர் லக்சூரி என்று

சொல்ல கூடிய எல்லா ஆடம்பர வசதியும் கொண்டு மினி மாளிகையே அங்கே இருக்க...

ஒரு நிமிஷம் அதை பார்த்தவள் அங்கே இருந்த ஜக்கூசியில் சென்று அப்படியே உட்கார ஆசை பட்டாலும் இருக்கும் மனஉளைச்சலிலும்.. களைப்பிலும் தூக்கி விடுவாள் என்பதினால் அந்த எண்ணத்தை கை விட்டு ஷவருக்கு அடியில் நின்றாள்!!!

பத்து நிமிடம் அப்படியே நின்றவளுக்கு... நெருப்பு மூட்டும் போது... தீகு தீகு என்று கொழுந்து விட்டும் எரியாது... அணைந்தும் போகாது.. வெறும் புகையை மட்டும் வெளியே விட்டுக்கொண்டு குமைச்சலாக... புகைத்துக்கொண்டே இருப்பதை போல் மனது.. ரஃபிக் மேல் உள்ள கோபத்தை கொட்டி தீர்காமலும்... அவனையே புறம் தள்ள முடியாமல் புகைந்துக்கொண்டே இருக்க.. அவளால் நிம்மதியாக எதிலும் ஈடுப்பட முடியவில்லை!!!

அதிலும் ஊரே பொறாமை படும் நவாப்பை மணம் செய்துக்கொண்ட போதும்... அவனை முழு மனதாக ஏற்கவும் முடியாது.. பழசை அடியோடு மறக்கவும் முடியாது... எத்தனை நாள் இப்படி நரகத்தில் உழல முடியும் என்று தெரியாது.. நின்றவளுக்கு சுடு தண்ணீர் தீர்ந்து.. பச்சை தண்ணீர்

தபதபவென்று தலையில் கொட்டிக்கொண்டு இருப்பதை வெகு நேரம் சென்றே உணர..

வேகமாக தலையில் துணியை கட்டிக்கொண்டு மீண்டும் புடவை எடுத்து கட்ட மனம் வராது… டிரசிங் ரூம்மில் இருந்து கையோடு கொண்டு வந்திருந்த கேப்பரியையும், டி சர்ட்டையும் மாட்டிக்கொள்ள நீண்ட நாள் பிரிந்து இருந்த தோழியை சந்தித்த திருப்தியுடன் பாத் ரூம் கதவை திறக்க… அது வேறு ஒரு அறைக்கு அழைத்து சென்றது!!!

தான் வந்த வழி இது இல்லையே என்று தோன்ற.. ஆனால் அங்கே இருந்த பெரிய கட்டில் அவளை வேறு எதையுமே சிந்திக்க விடாது அழைக்க..

எதை பற்றயும் யோசிக்காமல் அதில் போய் விழுந்தவளுக்கு ஜில் என்று எங்கிருந்தோ காற்று வர.. மேலே பார்த்தவளுக்கு மேலே பேனையே காணவில்லை… மேலே மட்டும் அல்ல சுற்றியும் முற்றியும் பார்த்தவளுக்கு எங்கேயும் கண்களால் தேடிய பேன்னே காணாது போக… பின்னே எப்படி காற்று வீசுகிறது என்று எண்ணியப்படி குளிர் தாங்காது வேகமாக அங்கே இருந்த போர்வைக்குள் தன்னை புதைத்துக்கொண்டு அவசரமாக தன் போனில் இருந்த அலாரத்தை வைத்து விட்டு அப்படியே கண் மூடினாள் மேக மித்ரா!!!

கசகசப்பு போக குளிந்து விட்டு... ஷாட்ஸ் அணிந்து தலையை துவட்டியபப்படியே தன் அறைக்குள் நுழைந்தவனுக்கு அடுத்த நொடி.. கண்கள் கட்டிலில் ஒருபுறமாக படுத்து அழ்ந்த துயிலில் இருந்தவளின் முகத்தில் நிலைத்தது!!!

பத்து பேர் படுக்கக் கூடிய பட்டு மஞ்சத்தில்... கழுத்து வரை போர்த்திக்கொண்டு... ஒரு பக்கமாக படுத்து ஆழ்ந்தத் துயிலில் இருக்க.. அவளின் கருத்த.. அடர்ந்த நீண்ட கார் கூந்தல் படம் எடுத்து ஆடும் ஐந்து தலை பாம்பு போல் மஞ்சத்தில் பாதி இடத்தை உரிமையுடன் சரிந்து கிடந்தது!!!

முனுக்கு என்று சத்தம் கேட்டாலும் கூட விழித்துக்கொள்ளும் மேக மித்ரா அசதியிலும் களைப்பிலும் அடித்து போட்ட மாதிரி தூங்க.. மெல்ல வந்து அயர்ந்து உறங்கியவளின் முகத்தை ஐந்து நிமிஷம் ஆழ்ந்து பார்த்தவன்... பின் பெரூ மூச்சு விட்டப்படி... அவனுக்கு முது காட்டியப்படி படுத்திருந்தவளின் பக்கத்தில் அமர்ந்து...

"மேகி" என்றான் மென்மையாக.

குரல் கேட்ட நிமிஷம் கண்களை திறக்காது "ம்ம்" என்று முனுமுனுத்தப்படி அவன் அமர்ந்திருந்த புறம் திரும்பி படுத்தவள் அப்படியே கைகளால் அவனை தூழாவினாள்!!!

அவளின் கை மேல் தன் கையை எடுத்து வைத்தவன்... "மேகி..." என்று மீண்டும் அழைத்தான் எழுப்புவதில் கொஞ்சம் கூட இஷ்டமே இல்லை என்று போதிலும்.

சிறு துளி கூட ஒப்பனை இல்லாது மாசுமருவற்று... பொன்னாக மின்னும் முகப்பொலிவையும்... ஒருபுறமாக படுத்து இருந்ததால் சற்றே சிவந்திருந்த அந்த பட்டு கன்னத்தை வருட துடித்த விரல்களை அவன் கட்டிப்போட்டு வேடிக்கை பார்க்க... ஆனால் அந்த மாதிரி எந்த கட்டுப்பாடும் இல்லாத வாடை காற்றோ... அவன் அறையில் சுதந்திரமாக நுழைந்து அவன் கண் எதிரே அவளின் பட்டு கன்னத்தை வருட... குளிரில் சிலிர்த்து சுருண்டு படுப்பதை திருப்தியுடன் கண்ணுற்று வெளியேறியது!!!

இந்த வாடை காற்றுக்கு இருக்கும் உரிமை தனக்கு இல்லையா என்று அவன் யோசிக்கும் போது தான்.. அவளின் பிடியில் இருந்த அவனின் கையை அப்படியே இழுத்து அவள் கன்னதில் வைத்தாள்!!!

"ம்ம்..." என்றப்படி அவனின் கையை எடுத்து அவளின் கன்னத்தில் வைத்துக்கொண்டு தூங்கினாள்!!!

கையின் இழுப்பிற்கு ஏற்றவாறு அவள் புறம் குனிந்தவனுக்கு.. மூச்சு காற்று படும் தூரத்தில்.. அவளின் சங்கு கழுத்து வளைவு தெரிந்தது!!!

தன் கட்டுப்பாட்டை மீறி எல்லாம் நடந்துக்கொண்டு இருப்பதை உணர்ந்தவன்... அடுத்த ஐந்து நிமிஷத்தில் அவள் பிடியில் இருந்து நகர வேண்டும் என்று சூளுரைத்தப்படி மெல்ல கையை எடுக்க முயல... அதற்குள் இவனை முந்திக்கொண்ட காற்று.. மீண்டும் அவளை வருடி விட்டு போக... குளிரில் நடுங்க.. கழுத்தில் இருந்த ரோமங்கள் எல்லாம் எழுந்து நிற்க... அவனின் கையை மேலும் கன்னத்தில் அழுத்தி பதித்தவள்....

"குளிர்கிறது.. பிருத்திவி" என்றாள் முனுமுனுப்பாக.. அவன் புறம் மேலும் சுருண்டு படுத்தப்படி.

தூக்க கலக்கத்தில் பேசுகிறாள்.. இல்லை என்றால் அவளாவது "பிருந்திவி" என்று அழைப்பதாவது?!? உண்மை புரிந்ததாலும் கூட அவள் அழைத்ததால் வந்த இன்ப அதிர்வுகளின் இருந்து மீளவே சரியாக ஒரு நிமிடம் பிடித்தது அவனிற்கு!!!

"கையை விடு நான் போய் ஜன்னலை மூடிவிட்டு வருகிறேன்.." என்றான் அங்கிருந்து நகர பெரு பிராயத்தனப்பட்டப்படி.

"ஜன்னல்.. காட்டில் ஏது ஜன்னல்?" என்றாள் லேசாக கண்களை திறக்க முயன்றப்படி.

அவள் தூக்க கலக்கத்தில் கூட பேசவில்லை... கனவில் பேசுகிறாள் அதுவும் அன்றைய இரவை நினைத்து பேசுகிறாள்

என்பதும் அப்பொழுது தான் சேர்ந்து புரிய... தீயாய் சுட்டது அவளின் தொடுகை..

அந்த இடத்தை விட்டு அந்த நொடியே நகர்வது தான் சரி என்று மூளை அபாய மணி எச்சரிக்கை செய்ய...

"மேகி... என் கையை விடு" என்றான் தெளிவாக.

"என் கையை விட மாட்டேன் என்று சொல்லிவிட்டு இப்ப எதுக்கு என் கையை விட்டு ஓடுகிறாய்?!?" என்று கேட்டப்படி மெல்ல கண்களை திறந்தவளுக்கு முன்னால் சட்டை இல்லாது ஈர தலை முடியுடன் முகத்திற்கு நேராக இருந்தவனை காண...

"பிருத்திவி.. மழையில் நனைந்தாயா?!?" என்றப்படி அவனின் ஈர முடியில் உரிமையோடு அவளின் விரல்களால் அலைந்தப்படி!!!

பதில் ஏதும் சொல்லாது அவளின் ஸ்பரிசத்தை கண் மூடி ரசித்தவன் அபாய கட்டத்தை தாண்டி கொண்டு இருப்பதை உணர்ந்து... அவளின் கையை மெல்ல தலையில் இருந்து கீழே இழுக்க.... உரிமையுடன் அவனின் கன்னத்தின் வழியாக உறவாடிய அவளின் நீண்ட விரல்களின் புறம் தலையை சாய்ந்து அவளின் உள்ளங்கையில் சூடான முத்தம் பதித்தவனின் விழிகளில் ஓராயிரம் கதைகள் சொல்ல... ஆனால் அதற்கு நேர்மாறாக உதடுகளோ...

"தூங்கு" என்றது கரகரப்பாக!!!

"ம்ம்" என்றப்படி அவனின் கையே தலையணை போல் பதமாக வைத்துக்கொண்டு... அதில் முகத்தை புதைத்தப்படி முதல் முறையாக அவன் கேட்டப்படி கண்களை மூடியவள்.. "நீயும் படு" என்றாள் முனுமுனுப்பாக.

கையையே தலையணையாக வைத்து தூங்குபவளை விட்டு எங்கே நகர என்று பெரு மூச்சுடன் "நீ செய்து விட்டு.. என்னிடம் சண்டைக்கு வருவாய்" என்று குறைப்பட்டப்படி அவள் பக்கத்தில் அப்படியே கால்களை நீட்டி படுத்தான்.

அவன் படுத்த அடுத்த நிமிஷம்.. கண்களை மூடியப்படி "பிருத்திவி" என்றப்படி அவனின் பறந்த மார்ப்பில் தன் தலையை வைத்தாள் மேக மித்ரா!!!

தொடரும்.....

# அத்தியாயம் 25

"**பி**ருத்திவி" என்றப்படி அவனின் பறந்த மார்ப்பில் தன் தலையை உரிமையுடன் படுத்தவளின் முகத்தில்... அவனிற்கே உரிய கதகதப்பையும்.... ஒரே சீரான லயத்தோடு கேட்ட இதய துடிப்பையும்... அவளின் ஒவ்வொரு அணுவிலும் உணர... அதை கண்களை மூடி ரசித்தபடி இருந்தவளுக்கு.... கைகள் தானாக எழுந்து அவனின் பறந்த மார்பை வருட ஆரம்பித்தது!!!

அவள் தொட்ட அடுத்த நிமிடம் அவனின் உடல் எஃகு போல் இருகுவதை உணர.... ஏன் என்னாச்சு?? என்று யோசிக்கும் முன்பே... பட்டென்று அவளின் விரலின் மேல் தன் விரல்களை அழுத்தி பிடித்து தடுத்து நிறுத்தியவன்...

"ஷ்ஷ்.. தூங்கு" என்றான் கரகரப்பாக.

எதுவும் பேசாது தலையை மட்டும் அவன் மார்ப்பில் ஆட்டியவளின் கன்னத்தின் வழியாகவும்.. அவனின் மார்பிலேயே பதிந்திருந்த விரல்களின் மூலமாகவும்.. தீடிரென்று அவனின் இதயம் எக்குத்தப்பாக எகிரி துடிப்பதை உணர்ந்தவள்...

"பிருத்திவி... ஏன் உன் இதயம்...." என்று அவள் கேட்கும் போதே..

அரபிக்கில் விரக்த்தியாக வாய்குள்ளே முனுமுனுத்தவன் "தூங்கு" என்றான் அவளின் கேள்விக்கு பதிலேதும் சொல்லாது.

"இல்ல பிரு.." என்று மீண்டும் அவள் வாயை திறக்க..

"ஷ்ஷ்..." என்று அவளின் கைய மேல் இருந்த விரல்களை அவசரமாக எடுத்து மங்கியின் உதட்டின் மேல் மூடி... "தூங்கு" என்று குரல் அதிகாரமாக கட்டளை இட்டாலும்... அதற்கு நேர்மாறாக அவனின் மற்றொரு கை.. அவளை இழுத்து இருக்கமாக மார்போடு அணைத்துக்கொண்டது!!!

"ம்ம்" என்று பெரூ மூச்சுடன் அவனின் அணைப்பிற்கு ஏற்றவாறு லாவகமாக அவனுடைய மார்பிலேயே படுத்துக்கொண்டவளின் கட்டவிழ்ந்த நீண்ட கூந்தல் இழை காற்றின் ஜதிக்கு நடன மாடுவதை போல் அவனின் முகத்தில் உரிமையோடு தீண்டி விளையாடிதை அவள் அறியாள்!!!

மார்பில் படுத்திருந்தவளின் நெருக்கத்திற்கே கட்டுப்பாடு இன்றி இதயம் எகிறி துடிப்பது போதாது என்று... முகத்தை வருடி செல்லும் அவளின் கூந்தல் இழை... மூளையை மழுங்க செய்ய... அவனுடைய கட்டுப்பாடு தளர்ந்துக்கொண்டு இருப்பதை உணர்ந்தவனுக்கு... நூறு சதவிகிதம் தோற்று போக கூடிய கேமை விளையாடுகிறோம் என்று உணர தொடங்க... அவனையும் அறியாது உதட்டில் இருந்த அவனின் விரல்கள் இடுப்பை சுற்றி வளைத்து ஆரத் தழுவி இருந்தது!!!

"பிருத்திவி.." என்று மெல்ல அழைத்தவள் குரலில் இருந்த கிரக்கத்தையும்... அது சொன்ன செய்தியையும் கேட்டவனுக்கு சரக்கு அடிக்காமலே போதை ஏறிய உணர்வு அவனுள் பொங்கி எழ.. இம்முறை சொல்ல வேண்டுமே என்று "தூங்கு.."என்று வாய் தானாக சொல்லியது.

அவள் தூக்குகிறாளோ இல்லையோ தன் கட்டுபாட்டை இழக்கும் முன் இங்கிருந்து கிளம்ப வேண்டும் என்று நினைத்து விலக நினைத்தவனுக்கு... அவனின் மூளையிட்ட கட்டளை கேட்க மறுத்த விரல்கள் அவளின் இடையில் நங்கூரம் பாய்ச்சியது போல் நிற்க... மார்பில் கிடந்தவளின் ஏறி இறங்கிய சுவாசிப்பின் எதிரொலியை அவனின் நாடி நரம்புகள் உணர... இனி இங்கு இருக்கும் ஒவ்வொரு வினாடியும் பின் எடுத்துவிட்டு கிரானைட்டி ன் மீது அமர்ந்திருப்பதற்கும் சமம் என்று உணர்ந்து... பகீரத பிரயத்தனம் செய்து எழுதுக்கொள்ள நினைக்கும் வேலையில் தான்..

"தூங்காதே.. தூங்காதே என்று சொன்ன நீ.. இப்ப ஏன் தூங்கு என்று சொல்கிறாய்? ஆர் யூ ஆல் ரயிட்?" என்றாள் தன் தலையை சற்றே உயரத்தி அவனை முதல் முறையாக கண்களை திறந்து பார்த்து கேட்டாள் அந்த புன்னியவதி!!!

"என் மேல் நீ படுத்திருக்கும் போது நான் எப்படி ஆல் ரயிட்டாக இருக்க முடியும்?" என்று கடிந்த பற்களிடையே

மொழிந்தவன்... அப்படியே அவனையே விழி விரித்து கண்களில் மோகனத்துடன் பார்த்துக்கொண்டு இருந்தவளின் விழியின் வீச்சை தாங்க இயலாதவனாய்... அவளின் பூ முகத்தை தன் இருகைகளாலும் ஏந்தி மோகம் பொங்க... முன்னே குனிந்து அவளிள் நெற்றியோடு தன் நெற்றியை வைத்து... "கால அவகாசதத்தை கொடுக்க முடியாத நிலையில் தான் இப்பொழுதும் நிற்கிறேன்... மேகி" என்று உயிர் உருகும் குரலில் கிசுகிசுத்தவன்... மெல்ல நிமிர்ந்து அவள் விழியில் பொங்கி தளும்பும் உணர்ச்சிகளுக்கு... சற்றும் சளைக்காது உணர்ச்சி குவியலாக இருந்தவன் மெல்ல குனிந்து மங்கியின் மூக்கின் நுனியில் முத்தமிட்டான்!!!

"என்ன அவகாசம்??" என்று கேட்க சொன்ன மூளையின் கட்டளையை செயல் படுத்த விடாமல் தடுத்த அவனின் பிம்பம்...

கலைந்த தலை முடியுடன்... கண்களில் உணர்ச்சி பிரவாகம் எடுத்து ஓட.. கண்களை இமைக்காது பார்த்துக்கொண்டு இருந்தவனிடம் எதை கேட்கவும் தோன்றவில்லை.. தோன்றவும்... இவள் அவகாசமும் கொடுக்காது... அவனின் கழுத்தை சுற்றி தன் இருகைளை கட்டியவள்... விருப்பத்துடன் இதழ் முத்தமிட்டாள்!!!

மதகுகளை உடைத்துக்கொண்டு வெளியே வர துடித்துக்கொண்டு இருக்கும்.. வெள்ளத்தை கைகளால் தடுப்பது போல் இருந்த அவனின் முயற்சிக்கு முற்று புள்ளி வைக்கும் படியாக அவளின் செய்கை அமைய.. அவளின் ஒரு முத்ததிற்கு கட்டுப்பாடு இழந்தான் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான்!!!

ஆரம்பித்தது வேண்டுமானல் அவளாக இருக்கலாம்.. ஆனால் மூச்சு விட நேரம் இல்லாது அவன் தொடர... அதை தொடர்ந்து அரங்கேறிய காதல் மொழிகளை கண்டு காற்று கூட அவர்களின் அறைக்கு வருவதை நிறுத்தி விட்டு வேறு புறம் வீச... அடுத்த பத்தாவது நிமிஷத்தில் யாரோ கதவை தட்டும் சத்தம் கேட்டது!!!

என்னவென்று உணரும் முன் அவளின் கைகளில் இருந்து தன்னை பிய்த்து எடுத்துக்கொண்டு மெத்தையில் இருந்து கீழே குதித்தவன்... அவளை திரும்பி கூட பார்க்காது அவசரமாக கதவை நோக்கி சென்றான்!!!

ஒரு நிமிடம் கூட யோசிக்காது பாதி கதவைத் திறந்து.. வெளியே நின்றிருந்தவனிடம் ஏதோ சொல்லி விட்டு திருப்பியவன் பார்வை கட்டிலில் கொலை செய்யும் ஆத்திரத்தோடு அமர்ந்திருந்த மேக மித்ராவை பார்த்து அப்படியே நின்ற ரஃபிக்... அவளை முந்திக்கொண்டு...

"ஐ.. நோ.. ஐ நோ.. நானும் அப்படியே தான் ஃபீல் பண்ணினேன்... ஆனால் என்ன பண்ண... ஐந்து தலை முறையாக நம் குடும்பத்தில் வேலை பார்க்கும் அவனை நான் கொலை செய்வது என்ன... வேலையை விட்டு தூக்க முடியாது.." என்று அவள் என்னவோ வேலை ஆள் கதவை தட்டி தொந்தரவு செய்ததால் தான் அப்படி கொலை வெறி தாண்டவம் ஆட அவனை பார்க்கிறாள் என்னும் விதமாக சொல்லி வைத்தான் அந்த மகானுபாவன்.

"ரஃபிக்..." என்று பற்கள் நொருங்கி விழும் அளவு அவனின் பெயரை கடித்து துப்பியவள்.. ஆத்திரம் தாங்காது... "என் ரூம்மில்..." என்று ஆரம்பித்தவள் அப்படியே நிறுத்தினாள்..

காரணம் அந்த சமயம் பார்த்து கிரிகெட் மைதானம் மாதிரி இருந்த அந்த அறையின் மூலையில் இருந்த கருப்பு நிற வேலைப் பாடு மிகுந்த மர டிரஸ் டேபிளில் முன் சென்று நின்றவன் அவங்கிருந்த டிராவை திறந்து அதே வேலைப்பாடு மிகுந்த மரத்திலான கை பிடி செய்யப்படிருந்த ரோலிங் கோம்பை எடுத்து தன் தலையை வார ஆரம்பித்தான்!!!

முதல் முறையாக கண்களை விரித்து சுற்றியும் முற்றியும் பார்த்தவளுக்கு முதலில் தெரிந்தது.. அறை முழுவதும் கருப்பு நிறத்தில் இழைத்து வைக்கப்பட்டிருந்த மர வேலைப்பாடு தான்!!!

அதுவும் அவளின் கட்டில் நான்கு முனையில் இருந்து மேலே சுமார் ஐந்து அடிக்கு மேலாக எழுப்பப்பட்டிருந்த மரத் தூணில் செதுக்கி வைக்கப்பட்டிருந்த வேலைப்பாடு கண்களை நிறைத்தது என்றால் அதன் மேலே நான்கு முனையிலும் தொங்கிய பட்டினால் ஆன திரைசீலை அவள் வாயை கட்டி போட்டது!!!

சுவரோடு பதித்த சின்ன.. சின்ன.. விஷயத்தில் கூட அத்தனை கலை நயம் வெளிப்பட.. இந்த அறையை பார்க்கவே ஒரு நாள் முழுவதும் தேவைப்படும் போலவே என்று எண்ணியவளுக்கு.....

கட்டில் நான்கு புறமும் எழுப்பட்டிருந்த மரத்தூணும்.. அவை நான்கும் சேர்ந்து கட்டிலின் மேலே நான்கு படியாக கோபுர வடிவில் அமைக்கப்பட்டிருந்த அந்த அமைப்பை கண்டு மெய் மறந்து பார்த்தவளின் கண்களுக்கு ஏதோ வித்தியாசமாகப் பட... சற்று கூர்ந்து உன்னிப்பாக செதுக்கிருந்த மரத் தூண்களின் வேலைப்பாட்டை கவனித்தவளுக்கு அங்கே வடித்திருந்த பெண்ணும், ஆணும் ஆடும் நடனக் காட்சிகளும்.. நிற்கும் விதமும்... செய்யும் செயலையும் கண்டவளுக்கு கண்கள் கூசியது!!!

"ரஃபிக்.. வாட் தி ஹேல் இஸ் திஸ்?!?" என்று அலறினாள் மேக மித்ரா.. தன் போர்வையை காது வரை

போர்த்திக்கொண்டு... இல்லை என்றால் அந்த வடித்து வைத்த சிற்பங்கள் இவளையும் வந்து அவர்களுடன் எங்கே ஆட சொல்லி விடுவார்கள் போல!!!

என்னத்தை கேட்கிறாள் என்று யோசனையுடன் திரும்பிப் பார்த்தவன்.. அவள் முகத்தில் படர்ந்த பீதியைகண்டு அவளின் பார்வை பதிந்திருந்த இடத்தை நோக்கி பார்த்தவனுக்கு... அவளின் பேச்சிற்கான காரணம் புரிய... சிரிப்பு பொத்துக்கொண்டு வர அதை உள்ளே அடக்கியப்படி... மீண்டும் கண்ணாடியின் புறம் திரும்பியவன்..

"ஓ!!! அதுவா..?? அது கொஞ்சம் கஷ்டம் தான்.. பட் உனக்கு டிரை.. பண்ண வேண்டும் என்றால் ஐயம் ஆல்வேஸ்... " என்று ஏதோ அவனுக்கு பிடிக்காத விஷயத்தை அவளுக்காக பரந்த மனதாக செய்ய ஒத்துக்கொள்வது போல் அவன் சொல்லிக்கொண்டு இருக்கும் போதே.. அவன் முதுகில் வந்து ஒரு தலையணை மோதி கீழே விழுந்தது...

"ஏய்.. நீ கேட்டதற்கு ஒரு கணவனாக உனக்கு நான் எப்படி உதவ முடியும் என்று பதில் சொல்லிக்கொண்டு இருக்கும் போது வன்முறையில் ஈடுபடுவது தவறு.." என்று பதில் சொல்லியவளின் குரலில் சிரிப்பு நன்றாகவே வெளிப்பட்டது.

"ஷட் அப்.. ரஃபிக்.." என்று கடுப்பாக பதில் சொல்லியவள்... "இது.. இங்க... ஏன்... இப்படி...??" என்று

எதையும் முழுவதுமாக முடிக்க முடியாது.. அவள் தட்டு தடுமாறி நிற்க.......

"அதை பெட் ரூம்மில் வைக்காது நடு ஹாலில் வைக்க சொல்றியா என்ன??" என்று எதிர் கேள்வி கேட்டதற்கு மேகியின் முறைப்பை பதிலாக ஏற்றவன்.. "மேகி... என்னை முறைக்காதே.. இதை செய்த என் முன்னோர்கள் கலா ரசிகனாகத்தான் இருக்க முடியும்.. கொஞ்சம் யோசித்துப் பார்.. இப்ப வேண்டும் என்றால் பதினெட்டு வயதில் கல்யாணம் பண்ண வேண்டும் என்று சட்டம் இருக்கலாம்.. ஆனால் அப்ப.. பால்ய விவாகம் நடந்த காலத்தில்.. கல்யாணம் பண்ணவங்களுக்கு என்ன பண்ண வேண்டும் என்று தெரிய வேண்டாமா?? அதனால் தான் இந்த அறையை கல்யாணத்திற்கு பிறகு தான் உபயோகப்படுத்த... நவாப்பிற்கு அனுமதி" என்றான் விளக்கமாக.

"ஓ!!! இதனால் தான் மற்றவர்களுக்கு இங்கே வர அனுமதி இல்லையா?" என்றாள் அவன் சொல்லும் விஷயத்தை ஜீரணிக்க முயன்றப்படி.

"ம்கூம்... அது.. மற்ற இடங்களில் எல்லாம் நான் நவாப்பாக மட்டும் தான் இருக்க முடியும்... இருக்க வேண்டும்.. அப்படி வளர்க்க பட்டவன் தான்.. ஆனால் இந்த விங்கில் மட்டும் தான்.... நானாக இருக்க முழு சுகந்திரமாக என் விருப்பு வெறுப்பு ஏற்றப்படி தங்குதற்காவும்.. கணவன் மனைவிக்கான

ப்ரைவசிகாகவும்.. அது எல்லாவத்தவையும் விட நவாப்பாக இருப்பவர்களின் பாதுகாப்பிற்காகவும் இப்படிப்பட்ட ஏற்பாடு.. இந்த விங்கில் நுழை கூடிய வேலை ஆட்களுக்கு கூட மூன்று தலைமுறை தெரிந்தவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.."

"இப்ப என்ன சொன்ன இந்த அறையா.. அப்ப இது உன் அறையா??" என்றாள் அவள் குரல் தொண்டையை அடைக்க..

தலை வாரிக்கொண்டு இருந்த கண்ணாடியின் வழியாக அவளின் நோக்கியவனின் பார்வை என்ன மாதிரி கேள்வி இது என்று கேட்காமல் கேட்டது...

அந்த பார்வையின் பொருள் புரிந்தவள் முகம் லேசாக சிவக்க.. ஆனால் "பாத் ரூம்மின் கதவை திறந்தால் என் அறை வரும் என்று அவள் சொன்னாலே..." என்று சத்தமாக யோசித்தவள்..

"சரி அதை விடு... நான் படுத்து இருக்கிறேன் என்று தெரிந்த பின் ஏன் இங்க வந்தாய் ரஃபிக்?"

"ஒ!! மறந்து விட்டாய் போல்.. இன்று காலையில்தான் நமக்கு ஊர் அறிய கல்யாணம் ஆனது.." என்று கூறிப்படி தன் சீப்பை அலட்சியமாக டிரஸ்சிங் டேபிளில் மேல் வீசியவன் அலட்சியத்துடன் அவள் புறம் திரும்பி... டிரஸ்சிங் மேஜையின்

மீது தன் முதுகை சாய்ந்து தன் முழங்கையை அதன் மீது ஊன்றி நின்ற விதத்தில் கூட அலட்சியத்தை வெளிப்படுத்தின...

"அதுக்கு?" என்றாள் அவனின் அலட்சியத்தை கண்டு சகிக்க முடியாது.

"உன்னுடன் பேசி சண்டை போட நேரம் இல்லை.. கீழே என்னை பார்க்க ஆட்கள் வந்து காத்துக்கொண்டு இருக்கிறார்கள்.. நான் போக வேண்டும்.."

"ரஃபிக் நான் முன்னே சொன்னேன் நான் உன் மனைவியாக இருக்க மாட்டேன்"

"அதற்கு நானும் பார்க்கலாம் என்று சொன்னதாக நியாபகம்"

"உன் நியாபகத்தை பற்றி எனக்கு அக்கரை இல்லை... எது என் ரூம்.. இனி என் அறைக்கு எந்த காரணத்தை முன்னிட்டும் வராதே.." என்றாள் ஆத்திரமாக.

"பேகம் மேக மித்ரா அல்வுமர் அலிகான்... என் அறைக்கு உனக்கு எப்படி வர உரிமை இருக்கோ அதே உரிமை எனக்கு இருக்கு.. சோ... உன் அறை என் அறை என்று விதண்டா வாதம் பேசாதே.. இது பதினெட்டாம் நூற்றாண்டில் கட்டியது.. அப்போ இருந்த பழக்கத்தின் படி கணவனும் மனைவியும் தனித்தனி அறை... ஆனால்.. இப்ப அப்படி பழக்கம் இல்லை.." என்றான் திட்டவட்டமாக.

"இல்ல... எனக்கு தனி அறைதான் வேண்டும்" என்று அதே திட்டவட்டமாக பதில் வந்தது அவளிடம் இருந்து.

ஒரு நிமிஷம் கூர்மையுடன் பதிந்து மீண்ட அவனின் பார்வையில் எந்த உணர்ச்சியும் இல்ல என்ற போதும் அவன் ஏதோ முடிவு செய்து விட்டான் என்று அவன் உடல் மொழி கூற...

"ஓ.கே.. உன் இஷ்டம் ஆனால்.. நீ அந்த ரூம்மில் இருப்பதினால் வரும் பிரச்சனைக்கு நீதான் பொருப்பு..." என்று விட்டேத்தியாக பதில் அளித்தவன் "அதோ... தெரியுது பார் அந்த அன்னபட்சி இருக்கே.. அதை இடது புறம் இரண்டு முறை திருகினால் உன் அறையின் கதவு திறக்கும்" என்று அங்கிருந்து சொல்ல இவளுக்கு அந்த அன்ன பட்சியை கண்டு பிடிக்கவே ஐந்து நிமிடம் ஆனது.

"ஏன் இப்படி பண்ண ரஃபிக்?"

"என்ன அப்படி பண்னேன்?... கல்யாணம் ஆகிவிட்டது என்றால் என் அறையில் படுப்பதற்கும் கூட உன்னிடம் பர்மிஷன் வாங்க வேண்டும் என்று நான் அறிந்திருக்கவில்லை மேகி"

"நான் அதை கேட்கவில்லை என்று உனக்கே தெரியும் தானே..?!?"

"தெரியும்... உன் ஈகோவை தள்ளி வைத்துவிட்டு பார்த்தால் உனக்கு எல்லாம் புரியும்.."

"ஈகோவா? அப்ப இத்தனை நாள் நான்.. நான்.. செய்தது எல்லாம் என் ஈகோவை திருப்பி படுத்த மட்டும் தான் என்று நினைக்கிறீயா ரஃபிக்?!?" என்று அவள் நிறுத்தி நிதானமாகக் கேட்டாள்.

"இல்ல... என்னால் அடிப்பட்ட உன் காயத்தை ஆற்றிக்கொண்டு இருக்கிறாய் என்று தெரியும்.. ஐந்து மாதம்.. முடிந்து விட்டது... நீ கேட்காமலே உனக்கான நேரத்தை கொடுத்திருக்கிறேன்.. இன்னும் எத்தனை நாள் இப்படியே இருக்க போகிறாய்..??" என்றான் இத்தனை நேரம் ஒரு அலட்சியத்துடன் நின்று பேசிக்கொண்டு இருந்தவன் ஒரு நிமிர்வான நடையுடன் அவள் அருகில் வந்து நின்றான்.

தன் போர்வையை இன்னும் இழுத்து பிடித்தப்படி "ஆற கூடிய காயம் இல்லை ரஃபிக் நீ பண்ணியது.." என்றாள் அவனை கண்களால் எரித்தப்படி.

மேகியின் புறம் சற்றே குனிந்த அவளின் முகவாயை ஒற்றை விரலால் உயர்த்தி பிடித்தவன்... "ஆறக்கூடிய காயங்களை ஆற விடாமல் தடுத்துக்கொண்டு இருப்பது உன் ஈகோ என்கிறேன்..." என்றான் அவளின் பார்வையை சற்றும்

சலைக்காமல் தாங்கி நின்றதோடு மட்டும் அல்லாது அவளையே குற்றம் சாட்டினான் ரஃபிக்.

"ஆறக்கூடியது தான் என்று நீ நினைக்கிறாய் பார் அது உன் ஈகோ என்கிறேன்" என்றாள் அவளும் விடாது.

ஒரு நிமிஷம் அவளை கூர்ந்து பார்த்தவன் தன் கோபத்தை கை விட்டு சற்றே தனிவான குரலில் "மேகி... இப்படி தேவை இல்லாத பிடிவாதத்தால் நீ சாதிக்க போவது என்ன??" என்றான் தீர்க்கமாக.

"என்னிடம் எப்படி இருந்தாயோ அப்படி தான் இரண்டு வருடம் நிச்சயம் பண்ணி இருந்த அமீராவிடம் நடந்துக்கொண்டாயா??" என்று அவனின் முகத்தை பார்த்து நேராக கேள்விக் கேட்டாள்.

இத்தனை நேரம் இருந்த இலகு தன்மை முற்றிலும் பட்டென்னு மாயமாக மாற அந்த இடமே காற்று அற்ற ஒரு அழுத்தமும் இருக்கமும் பந்தாக அவர்கள் இருவரையும் சூழ...

"இதே கேள்வியை நான் மாற்றி கேட்கிறேன் மேகி.. என்னுடன் எந்த உறவு இன்றியே அன்று வந்து என்னுடன் இருந்தாயே... அப்போ.." என்று கேட்க வந்த கேள்வியை முடிக்கும் முன் அவனின் கன்னத்தை நோக்கி பாய்ந்த மேகியின் கையை அலட்சியமாக பிடித்து நிறுத்தினான் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான்.

"கணவன் மனைவியை அடிப்பது கோழை என்றால்.. அப்போ மனைவி கணவனை அடிப்பது வீரம் என்று ஆகி விடாது மை டியர் பொண்டாட்டி..." என்றான் அவளின் இருகப் பற்றி இருந்த கைகளை விடாமலே!!!

ஆனால் அவளுக்கு அவன் சொன்ன பதில் எதுவும் காதில் விழவில்லை... "நீ.. நீ... எப்படி என்னை அப்படி கேட்கலாம்?!? நான்.. நான்.. நான்.. உன்னுடன் தங்கினேன் என்றால் அதற்கு காரணம் காதல் என்று புரியாத அளவு நீ முட்டாள் இல்ல தானே ரஃபிக்...?!?" என்ற போது அவள் கண்ணில் கோபம்... ஆத்திரம்.. அதை விட அவளின் இயலாமை என்ற கலவை ஒன்றோடு ஒன்று போட்டி போட்டுக்கொண்டு அங்கே குடியேறிது.

"வாட்?? காதலா?? நீ என்னை காதலித்தாயா?? காதலுன்னா என்னவென்று தெரியுமா?!? உன் தாத்தா பாட்டியை போய் பார்.. மலை வாழ் பெண்ணை வீட்டிற்கு ஒப்பாது கல்யாணம் பண்ணி தனியாக இருந்து.. உன் அப்பா குடிசையில் பிறக்கும் போது பட்ட கஷ்டத்தை பார்த்து விட்டு... உன் தாத்தா வேறு ஒரு குழந்தையே வேண்டாம் என்று நினைத்தோடு இல்லாமல் குடும்பத்தோடு ஒன்றாக சேர்ந்த பின்னர் கூட அதை கடை பிடித்தார் பார் அது காதல்... என் அம்மாவும் அப்பாவும் ஏதோ ஒரு கல்யாணத்தில் பார்த்து காதல் கொண்டு.. ஐந்து வருஷம்

வீட்டின் சம்மதத்திற்காக போராடி.. கல்யாணம் பண்ணி என் அப்பாவிற்காக தன் படிப்பை விட்டாங்க பார் அது காதல்.. ஏன் உன் டிவின் சிஸ்டர்... இரண்டு வருஷம்.. சித்திற்காக காத்துக்கொண்டு இருக்கவில்லை...??!? நீ உன் காதலுக்காக என்ன பண்ண?? ஒரு நாள் என்னுடன் தங்கியதை தவிர???" என்று வார்த்தையை சராமரியாக அம்புத் தொடுத்தான்.

கேள்வி என்னும் நஞ்சு தேய்த்த அம்பினால் தாக்கப்பட்ட மேக மித்ராவிற்கு உடம்பின் ஒவ்வொரு அணுவிலும் விஷம் பரவ... பற்றி எரிந்த அவளின் தேகத்தையும்.. வலியின் எல்லை தாங்காது மூச்சு திணறிய போதும்.. அதை பற்றி எதையுமே கண்டுக்கொள்ளாது மனமோ என்ன மாதிரி கேட்டு விட்டான்.. எப்படி கேட்டு விட்டான்.. என்று ஆழி பேரலையாய் அவளை ஆட்டிப்படைக்க.. இது எதையுமே அவன் அறியாது உள்ளே அடக்க போராடியவள்... "நீ சொன்ன எல்லோரும் கல்யாணத்தின் மூலமாக அவர்களின் காதலை நிருபித்தார்கள் என்றால்.. நான் எந்த வித பந்தமும் இல்லாமலே என் காதலை மட்டுமே பற்றிக்கொண்டு உன்னிடம் என்னை கொடுத்தேன் ரஃபிக்.. அதன் மகத்துவம் உனக்கு புரியவில்லை இல்ல?? நான் உன் மேல வைத்திருந்த நம்பிக்கை உனக்கு கண்ணிற்கு தெரியவில்லை இல்ல..?? ஓசியில் கிடைக்கும் எதற்கும் மதிப்பு கிடையாது என்று என் பாட்டி அடிக்கடி சொல்வார்கள்... அதன்

அர்த்தம் என்வென்று இப்போது புரிகிறது.. என்னை கொன்று.. என் காதலை கொன்று.. என் நம்பிக்கையைக் கொன்று விட்டு எப்படி ஐந்து மாத இடைவேளையில் ஆறி போகும் என்று நினைக்கிறாய் ரஃபிக்...??" என்று அவள் கேட்டுக்கொண்டு இருக்கும் போதே மீண்டும் அவனின் அறை கதவு தட்டப்பட...

பட்டென்று கையை விடுவித்தவன் அவளிடம் இருந்து தன் பார்வையை விலக்கிவிட்டு நிமிர்ந்தவன் "இப்ப நீ இருக்கும் மூடில் நான் எது சொன்னால் உன் தலைக்குள் ஏறாது.. பெட்டர் நீ உன் அறைக்கு போ.." என்றான் கையை காட்டி.

அவள் மெத்தை விட்டு குதித்து கீழே இறங்கி... அவன் சொன்ன அந்த அன்னபட்சியை திருகினாள்.. இல்லை திருக முயன்றால்.. ஆனால் அது என்னவென்றால் பலத்திற்கு எல்லாம் அடம் பிடித்துக்கொண்டு அப்படியே நிற்க..

கையை எடு என்று கூறியப்படி அவள் பின்னால் வந்து நின்றவனை... திரும்பி கூட பார்க்காது அப்படியே நிற்க.. அவளின் பதில் எதிர்பாராது அவன் கையை வைத்து திருக கிளிக் என்ற சப்தத்துடன் திறந்துக்கொண்டது அவளின் அறை கதவு!!!

தன் அறைக்கு செல்ல விழைந்தவளை தடுத்து நிறுத்த அவனின் கைகள்.. "மேகி..." என்று மொழிந்தவனின் குரலை கேட்டாலும் சட்டையே செய்யாது தன் விசாலமான அறைக்குள்

நுழைந்து அங்கே நின்றவனை பார்த்தும் பாராதது போல் தன் அறையின் கதவை சாற்றி அதன் மேல் சாய்ந்து நின்றவளுக்கு மூடப்பட்ட இந்த கதவினால் எப்படிப்பட்ட பிரச்சனைகளை சந்திக்க காத்து இருக்கிறது என்று தெரியாது நிம்மதி பெரு மூச்சு விட்டாள்!!!

அவனின் அறைக்கு சற்று குறைவில்லாத வேலைப்பாடுடன் அவள் அறையும் இருந்தது என்றால் பெரிய வித்தியாசம் அவன் அறையில் எல்லாம் கருப்பு நிற மரத்தினால் ஆனாது என்றால் அவள் அறையின் வேலைப்பாடு எல்லாம் ப்ரவுன் நிறத்தினால் செதுக்கி செய்யப்பட்டிருந்தது..

மேலே எதைப்பற்றியும் யோசிக்காமல் அங்கே இருந்த கட்டிலில் படுக்காமல் மூளையில் ஜன்னல் ஓரத்தில் கலை நயம் மிக்க திவான் நாற்காலியில் சென்று அமர்ந்தவளுக்கு தான் கனவு என்று நினைத்துக்கொண்டு இருந்தது எல்லாம் நினைவு என்று ஏற்க இன்னும் மனசு ஒப்பாத நிலையில்... எதை செய்யும்.. ஏன் யோசிக்க கூட திராணி அற்று அப்படியே கண்களை மூடி குப்புற படுத்தாள்!!!

அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் என்றும் இல்லாத வழக்கமாக அவளின் மனப்போராட்டத்திற்கு விடுதலை அளிக்கும் விதமாக தூக்கம் அவளை ஆரத்தழுவ... யாரோ கையை தட்டி ஆர்பரிக்கும் சத்தம் கேட்டு கண்களை திறந்தவளுக்கு முதலில்

எங்கே இருக்கிறோம் என்று புரியாது.. விழிந்தவளுக்கு பின்னர் தான் இருந்த இடம் நியாபகத்திற்கு வர... சத்தம் வந்த திசை நோக்கி பார்த்தவளுக்கு அது கீழே லானில் அலிகான் குடும்பத்து இளவட்டங்கள் விளையாடுகின்றனர் என்று தெளிவு வரும் போது தான்... அவளின் சமையலை பற்றி ஞாபகத்திற்கு வர...

அவசரமாக எழுந்து நேரத்தை பார்த்தவளுக்கு மணி எட்டரையை தாண்டி ஓட்டமாக ஓடிக்கொண்டு இருக்க... விழுந்தடித்துக்கொண்டு பாத்ரூம்மை நோக்கி பறந்தவளுக்கு காக்கா குளியல் போட்டு விட்டு புடவையை மாற்றிக்கொண்டு.. கழட்டிய நகையில் இருந்து ஈசியாக அணிய கூடியதை மாட்டிக்கொண்டு கீழே வரவே அரை மணி நேரம் ஆகி விட.. பறந்தடித்துக்கொண்டு சமையல் அறையை தேடி பிடித்து வந்து சேர பொன்னாக அடுத்த பதினைந்து நிமிஷங்கள் கரைந்து மறைய புயல் வேகத்தில் உள்ளே போனவளுக்கு மறு புறத்தில் இருந்த கதவைவின் நுழையவும்.. அங்கே ரஃபிக் குரல் காதில் விழுந்தது..

"உங்களை அம்மா.. நாளை விழாவிற்கான சாமான்களை சரி பார்க்க அழைத்தார்கள்.." என்று அவன் சின்ன பாட்டியிடம் கூறிக்கொண்டு இருக்கையில்தான் அவர்களுக்கு பின்னால் வந்த மேக மித்ராவை கவனித்தவனின் கண்கள் பட்டென்று சமையல்

செய்வதாக நின்றுக்கொண்டு தன் தலையை ஒரு பாத்திரத்திற்குள் கவிழ்த்துக்கொண்டு இருந்த சங்கியின் புறம் ஒரு நொடி படிந்து மீள.. அப்படியே உரைந்து நின்றாள் மேக மித்ரா!!!

ஒரு நிமிடம் உலகம் தன் சுழற்சியை நிறுத்தி விட்டு அவர்களை வேடிக்கை பார்த்தது!!!

அத்தனை நேரம் சமைத்துக்கொண்டு இருப்பது சங்கி என்று தெரியாத அவரோ வாயை வைத்துக்கொண்டு சும்மா இருக்க முடியாது.. "நான் வரும் முன்னே உன் பேகம் வந்து சமைக்க தொடங்கி இப்ப முடியவே போகுது... வாசனையே தூக்குது" என்று அரபிக்கில் பெருமையாக சொல்வதாக நினைத்துக்கொண்டு உண்மையை உடைத்தார்.

அவர் பேசுவது சுத்தமாக புரியவில்லை என்றாலும் அவர் கைகாட்டி சொன்ன விதத்திலேயேயும்.. ரஃபிக் உடல் விரைத்து நிறை விதத்திலேயே புரிந்துக்கொண்ட மங்கி.. மயங்காத குறையாக நின்று அவனை பார்த்தாள்.

ஏற்கனவே இன்று காலை இருவரும் ரத்தம் வரும் அளவு அடித்துக்கொண்டு இருக்கிறார்கள் இது போதாதென்று அவன் அவளை கடித்து குதற அவளாக வலிய சென்று காரணத்தை தர... இப்ப என்ன செய்ய போகிறான்.. மேகி என்று அழைத்து காட்டிக்கொடுக்க போகிறானா இல்ல அமைதியாக எதுவும்

செல்லாமல் சென்று விடுவானா?? என்று மனது படப்படவென்று அடித்துக்கொள்ள..

அவன் சொல்ல வாயை திறக்க.. அவசரமாக "ப்ளிஸ்.." என்று அவருக்கு பின்னால் நின்று சொல்ல வேண்டாம் என்று தலையை ஆட்டிய மங்கியின் மறுப்பை சட்டையே செய்யாது...

"இது சங்க மித்ரா... பாட்டி.. அதோ அவள் தான் மேக மித்ரா" என்று குரலில் எந்த வித வித்தியாமோ இல்லை முகத்தில் எந்த வேறு பாடோ இல்லாது அந்த வீட்டின் மூத்த தலை முறையும்.. ஆமீராவின் சொந்தமுமான அவரின் முன் உண்மையை போட்டு உடைந்தான் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான்.

# அத்தியாயம் 26

"**இ**து சங்க மித்ரா... பாட்டி.. அதோ அவள் தான் மேக மித்ரா" என்று குரலில் எந்த வித வித்தியாசமும் இல்லை முகத்தில் எந்த வேறு பாடோ இல்லாது அந்த வீட்டின் மூத்த தலை முறையும்.. ஆமீராவின் சொந்தமுமான அவரின் முன் உண்மையை போட்டு உடைந்தான் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான்.

அவன் சொன்ன விதமும்... அதற்கு அவர் அவசரமாக பின்னாடி திரும்பி மேக மித்ராவை அதிர்ச்சியுடன் பார்த்த விதமுமே மங்கிக்கு விஷயத்தை தெளிவுப்படுத்தத் தொடங்க... ஒரு நிமிஷம் கண்களை மூடி நிலமையை எப்படி சமாளிப்பது என்று யோதித்தவளுக்கு மூளை சாவு ஏற்பட்டது போல் எந்த செயலும் இல்லாமல் அப்படியே அவனை வெறித்து போய் பார்க்க மட்டும் தான் முடிந்தது!!!

அதற்குள் சூழ்நிலையை கட்டுக்குள் கொண்டு வர சங்கி முயற்சி எடுக்க.. ஆனால் அவள் பேசியதை யார் அங்கே கேட்டார்கள்..?!?

நவாப்பும்.. சின்ன பாட்டியும் மாறி.. மாறி ஏதோ சர மாரியாக அரபிக்கில் பேசிக்கொள்வதையும்.. இடையிடையே

மேகியையும், சங்கியையும் குற்றம் சாட்டும் பார்வையில் அவர் திரும்பி பார்ப்பதையும் உணர்ந்த சகோதரிகள் அவசரமாக நாட் நாட் செவன் அருகில் இருந்தால் தேவலையே என்று ஏங்கினர்!!!

ஆனால் இவர்களின் போதாத நேரம்.. பத்ரியின் மனைவி அலக்நந்தாவிற்கு இரவு முழுவதும் கண் விழித்தலால் சற்று உடம்பு படுத்த அவளை கவனிக்கும் வேலையில் மொத்த பெண்களும் அங்கே சூழ்ந்து இருக்க... இங்கே வர தாமதம் ஆகிக்கொண்டு இருந்தது.

இப்ப என்ன சொல்ல போறாங்கன்னு உள்ளே பிரளயமே வெடித்தாலும்.. ஆழ்கடலாய் எதையும் வெளிக்காட்டாது.. மங்கி கைகளை பிசைந்துக்கொண்டு நிற்க... சங்கியோ அலை கடலாய் பரபரவென்று சித் விரும்பி குடிக்கும் ஈராணி சாயை கலந்துக்கொண்டு நிற்க... மிக அழகாய் சகோதரிகள் தத்தம் குணத்தை வெளிப்படுத்தினர்!!!

பேசி முடித்து பாட்டியை வெளியே அனுப்பி விட்டு சங்கியின் புறம் திரும்பிய ரஃபிக்.. "இவ்வளவு தூரம் கஷ்டப்பட வேண்டியதில்லை.." என்று எண்ணி நான்கு வார்த்தைகளை பேசியவன் பின் மங்கியிடம் திரும்பி..

"தெரிந்தால் சூடான தண்ணீரை வை.. " என்று அலட்சியத்துடன் தெள்ள தெளிவாக மீண்டும் அதே நான்கு வார்த்தைகளை வீசிவிட்டு விறுட்டென்று அங்கிருந்து நகர்ந்தான்.

அவன் சென்ற பின் "ப்ப்பூ.." என்று தன் கைகளால் முகத்தில் விசிறிக்கொண்ட சங்கி.. "ஒரு நிமிஷம் என்ன நடக்க போகுதோ என்று நான் பயந்து விட்டேன்.. மங்கி.. எண்ணி நான்கு வார்த்தை பேசி எதிரில் இருப்பர்களின் ஃப்யூசை பிடுங்கி விட்டாரே!! முடியலை டா சாமி.. இவர் சித்தின் அண்ணன் தானா என்று சந்தேகம் கூட வருகிறது??" என்று பெரு மூச்சு விட்டாள் சங்கி.

காலையில் இருந்து சங்கிக்கு உதவி செய்வதற்காக சுற்றி இருந்த வேலை ஆட்களுக்கு அங்கே என்ன நடக்கிறது என்று புரியாது திருதிருக்க.. அவர்களை எல்லாம் ஒரு முறை பார்வையிட்டவள்... தன் நிலையையும்.. மன கொந்தளிப்பையும் சற்று தள்ளி வைத்து விட்டு... சுடு தண்ணீயா கேட்ட இரு.. உன்னை பார்த்துக்கொள்கிறேன்... என்று கருவியவள்..

"சங்கி பத்து நிமிஷத்தில் செய்ய கூடிய இனிப்பு எதாவது சொல்லு" என்று மனதில் நடக்கும் போராட்டம் எதுவுமே நடக்காதது போல் அவள் அருகில் வந்து நின்றாள் மேக மித்ரா.

ரஃபிக் சொன்னதை கேட்டு கூட அதிர்ச்சி அடையாத சங்கிக்கு இப்ப தன் சகோதரி சொல்லும் விஷயத்தை கேட்டு மயக்கமே வந்தது..

"என்னடீ விளையாடுறியா??" என்று கேட்க ஆரம்பித்தவள் மங்கியின் முக குறிப்பிலேயே முடிவு எடுத்து விட்டாள் இனி

மாறுவது கடினம்.. அவளை கன்வின்ஸ் பண்ண முயற்சிப்பதை விட.. கூடவே இருந்து செய்து விடுவது எவ்வளவோ மேல் என்று சங்கி தலை ஆட்டியவள்... மேகியிடம் என்ன செய்வது என்று சொல்லித்தர... பத்து நிமிடம்... இருபது நிமிடம் ஆகி.. பின் அரை மணி நேரத்தில் சங்கி உடன் இருந்து மங்கி செய்து முடித்திருக்க... ஆவி பறக்கும் பச்சை நிறத்தில் ஒரு பயாசம் ரெடியாக இருந்தது!!!

முதல் முறை அதை பார்பவர்களுக்கு பயமாக தான் இருக்கும் என்றாலும் மனதை திடப்படுத்திக்கொண்டு மங்கி அதை சுவைத்து பார்க்க.. வாயில் வைத்தவுடன் குடலையே புரட்டிக்கொண்டு வரும் அளவு எதுவும் இல்லை என்ற திருப்தி வர.. அதிர்ச்சியாய் சங்கியை பார்த்தவள்..

"எப்படிடீ..?!?" என்றாள் ஆச்சரியமாக ஏன் என்றால் பச்சை பட்டாணியில் பாயசம் நிஜமாகவே இப்படி இருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை!!!

"எவ்வளவு கேவலமான பாயசமாக இருந்தாலும் அதை சூப்பராக மாற்ற கூடிய ஒரு பொருள் டொட்டோடாங்..." என்று விளம்பர பாணியில் அவள் மூன் நீட்டியது.. சற்று முன் பாயசத்தில் ஊற்றியே காலியான கன்டன்ஸ்டூ மில்க் டின்!!!

இருவரும் தத்தம் கவலையை மறந்து "களு"க்கு என்று குலுங்கி சிரித்தனர்... அதற்குள் சற்றே தயங்கியபடி அவர்களின்

அருகே வந்த வேலை ஆட்கள் பரிமாற தயார் செய்யலாமா? என்று ஆங்கிலம் கலந்த ஹிந்தியில் கேட்க..

"ம்ம்..." என்று தலையை ஆட்டியபடி சம்மதம் தெரிவித்தவள்... பின் "ஒரு நிமிஷம்" என்றபடி ஒரு சின்ன கிண்ணத்தை எடுத்து வர சொல்லி அதில் கொஞ்சம் ஊற்றி தனியாக வைக்க ஒருவேளை பின்னால் சாப்பிடுவதற்காக எடுத்து வைக்ககிறார்களோ என்று யூகித்த வண்ணம் பார்த்துக்கொண்டு இருந்த வேலை ஆட்களிடம் அதை நீட்டி..

"இதை நீங்க நேரம் கிடைக்கும் போது எல்லோரும் ருசி பாருங்க.." என்று நாட்டியம் ஆடாத குறையாக புரியவைத்தவளை கண்டு மயக்கம் வராத குறையாக பார்த்தார்கள்!!!

எத்தனை பேர் வந்த முதல் நாளே வீட்டில் வேலை செய்யும் ஆட்களை பற்றி நினைப்பார்கள்?? என்று அதுவும் ஆமீரவா இருந்தால் நிச்சயம் செய்ய மாட்டாள் என்று அவர்களுக்கு நன்றாகவே தெரியும்!!!

வெட்கம்.. சிரிப்பு மற்றும் ஆச்சரியத்தோடு அவர்கள் அதை வாங்கிக்கொள்ள... இந்த சின்ன செயலால் ஒரு நொடியில் அவர்களின் மரியாதையை மட்டும் அல்லாது அன்பையும் சேர்த்தே பெற்று விட்டாள் என்று பேகம் மேக மித்ரா அறியவில்லை!!!

சங்கியும் அங்கே சமைக்க ஆரம்பித்தவுடனே... அவளின் பேச்சாலும் நடவடிக்கையாலும் இதே சலுகையை வேலை ஆட்களிடம் பெற்று விட்டாள் என்பதையும் அவள் அறியாள்!!!

சொல்லி வைத்தது போல் அடுத்த ஐந்தாவது நிமிடம் அவர்கள் இருவருக்கும் அத்தையிடம் இருந்து அழைப்பு வர.. சமையல் அறையை ஒட்டி இருந்த டைனிங் டேபிளிற்கு சகோதரிகள் நடந்து வர... அங்கே ஏற்கனவே விருந்தினர் குழுமி இருந்தனர்!!!

சச்சிதேவ் குடும்பத்தில் ஆண்கள் அனைவரும் வந்திருந்தாலும் பெண்களில் நிரல்யா மட்டுமே வந்திருக்க.. எல்லோரும் இன்னும் அலக்நந்தாவிடம் தான் இருக்கிறார்கள் என்று புரிய.. பாபியின் உடல் நிலையை பற்றி குசலம் விசாரிக்க சங்கி அவளிடம் சென்றாள்!!!

மங்கிக்கோ எங்கே செல்வது என்று தயங்கியப்படி.... சென்ற முன்று நாட்களாக அவளை உட்கார வைக்கும் இடத்திற்கு சென்று நிற்கலாம் என்று பார்த்தவளுக்கு முகம் குழம்பியது... காரணம் எப்பயும் போல் டைனிங் டேபிள் ஓவல் வடிவில் இல்லாது.. இன்று டைனிங் டேபிள் "ப" வடிவில் இருந்தது...

அதுவும் ஐந்து நாற்காலி மட்டுமே முன்னில் போடப்பட்டு இருக்க... யார் எங்கே உட்கார வேண்டும் என்று ஏதோ கணக்கோடு போடப்பட்டு இருப்பது போல தோன்ற.. என்ன

பண்ணுவது என்று யோசித்தப்படி அத்தையை நோக்கி அடி எடுத்து வைத்தவளின் கையை ரஃபிக் பிடித்து நிறுத்தினான்!!!

அவன் மேல் இருந்த கோபம் கொழுந்து விட்டு உள்ளே எரிந்துக்கொண்டு இருக்க... வெளிப்படையாக தெரியா விட்டாலும் அமைதியாக அவனின் கை பிடியில் இருந்தது அவளின் கையை எடுக்க முயற்சிக்க...

"எங்க போற?" என்று அடிக்குரலில் சீறியது அவனின் குரல்.

"என் இடத்தில் உட்கார போகிறேன்" என்றாள் அவன் முகத்தை கூட பார்க்காது தூரத்தில் இருக்கும் காயத்திரியை பார்த்தப்படி.

"நான் எங்க இருக்கிறேனோ அது தான் உன் இடம்" என்று சூடாக பதில் வந்தது அவனிடம் இருந்து.

"அது புதை குழியாக இருந்தாலுமா??" என்றாள் வெடுக்கு என்று

"ஓ!! எஸ்.." என்று தெனவாட்டாக அவளின் முகத்தை சற்றே குனிந்து பார்த்து சொன்னவன்.. "அது.. உயிரை பணயம் வைக்கும் புதை குழியாக இருந்தாலும்.. உன் பச்சை நிற கீராக இருந்தாலும்" என்றான் அமைதியாக.

அதற்குள் இவனுக்கு தான் சமைத்ததை பற்றி தகவல் வந்து விட்டாதா?? அதன் நிறத்தை பற்றி கூட சொல்கிறானே?!? என்று மனதில் கேள்வி எழுந்த போதும்... எரிக்கும் பார்வையை

அவன் மீது அனாசியமாக வீசியவள்.. "சாப்பிடுவதற்கும் முன்னாடி அதன் சுவையை ஜட்ச் செய்து விட்டாயா?"

"ம்ம்.. சாப்பிட பின் ஜட்ச் பண்ணும் நிலையில் நான் இருப்பேனோ இல்லையோ" என்று அவன் கண்களால் சிரித்தான்
.

"அப்படி பயப்படுபவர் எதற்காக இங்கே இருக்க வேண்டும்??"

"என்ன பண்ண?? என் பேகம் சமைத்ததை நான் சாப்பிடாமல் வேறு யாரும் சாப்பிட மாட்டாங்க அந்த காரணத்திற்காக தான்" என்று அவன் சொல்லிக்கொண்டு இருக்கும் போதே அவனின் அம்மா காயத்திரி வந்து அவர்களை அமர சொன்னார்.

ரஃபிக் அவளை அழைத்துக்கொண்டு "ப" வடிவில் ஐம்பது பேர் சுலமாக அமரக் கூடிய அந்த மெகா பெரிய டைனிங் டேபிளில் படு நாயகமாக இருந்த நாற்காலியில் அமர்ந்து இடது புறத்தில் அவளும்.. பக்கத்தில் அத்தை காயத்திரி அமர.. நவாப்பின் வலது புறத்தில் சித்தும்.. அடுத்ததாக சங்கியும் அமர்ந்தனர்.

அவர்கள் அமர்ந்த இடத்தில் இன்னும் நான்கு பேர் கூட உட்காரலாம் என்னும் அளவு இடம் இருந்த போதும்.... வந்திருந்த விருந்தினருக்கு சைடில் பெயர் எழுதப்பட்டு

அவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட இடத்தில் வரிசையாக அமர்ந்தனர்!!!

அதாவது நவாப் பின் குடும்பம் மட்டுமே அந்த ப வடிவில் நடுநாயமாக அமர்ந்து வந்தவர்களை எல்லோரையும் பார்க்கும் படியாக அவர்களை இடது மற்றும் வலது புறத்தில் அமர வைக்கப்பட்டிருந்தனர்!!!

முதல் முறையாக அவள் நவாப் குடும்பத்தினருக்கே உரிய சலுகையுடன் உட்கார வைக்கப்பட்டிருக்கிறாள் என்று புரிய... பயத்தில் உடம்பு லேசாக நடுங்க கூட செய்தது!!!

ஆனால் அதை பற்றி யோசிக்க நேரம் கூட இல்லாது அவளுக்கு முன்பு முதன் முறையாக செய்ய அந்த பாயசத்தை பரிமாற... அதை சாப்பிட ஆரம்பிக்கும் முன்பு அவளுக்கு பக்கத்தில் இருந்த ரஃபிக்...

தங்க கிண்ணத்தில் இருந்த பாயசத்தை ஸ்பூனால் எடுத்தவன் அதை தன் வாயில் வைக்கும் முன் அவள் புறம் திரும்பி...

"அதோ... நமக்கு இடது புறத்தில் நான்காவது சீட்டில் அமர்ந்திருக்கும் அப்துல் ஒரு பிரபல டாக்டர்.." என்று அர்த்தம் பொதிந்த வார்த்தையை சொல்லி விட்டு இவளின் பதில் எதிர்பார்க்காது குடித்தான்!!!

அவன் குடிப்பதற்காக காத்திருந்தது போல் அங்கே இருந்தவர்கள் எல்லோரும் குடிக்க ஆரம்பித்தனர்.

"என் கையால் சமைத்த உணவின் பின் விளைவில் இருந்து உன்னை டாக்டர் குணப்படுத்தி விடுவார்.. ஆனால் நீ உன் பாட்டியிடம் சொன்ன விஷயத்தின் பின் விளைவில் இருந்து எங்களை யார் காபாற்றுவார்கள்?!?" என்றாள் குமுறலாக...

அவளின் கேள்வியை கேட்டு தாடையில் நரம்புகள் புடைக்க மங்கியின் புறம் திரும்பியவன்... "அதை பற்றி பேசும் இடமோ நேரமோ இல்லை" என்று பற்கள் நரநரக்க பதில் அளித்தான்

வாயை இழுத்து மூடிக்கொண்டவள் அமைதியாக தன் தட்டில் இருந்து உணவை சுவைக்க... அதில் சச்சிதேவ் குடும்பத்தினரை தவிர அந்த கீர் எதனால் செய்தது என்னவென்று சத்தியமாக கண்டு பிடிக்க முடியவில்லை!!!

என்னது இது?? என்று ஆராயும் நோக்கில் ஸ்பூன்... ஸ்பூனாக எடுத்து வாயில் வைத்து கண்டு பிடிக்கும் முன்பே அது காலியாகி விட்டு இருந்தது!!!

"இதன் பெயர் என்ன என்று கண்டு பிடிப்பதற்கே.. பட்டி மன்றம் வைக்க வேண்டும் போலவே" என்று முனுமுனுத்தவனை அலட்சியமாக "ஐ டோன்ட் கேர்" என்பது போல் மேகி பார்த்து வைக்க..

அந்த கூட்டத்தில் அமர்ந்திருந்த அவனின் சின்ன தாத்தா.. அந்த கீர்யை பார்த்து ஏதோ மொழிய.. அவர் மூச்சு விடாது திட்டு கிறாரா இல்ல இதை குற்றம் சாட்டுகிறாரா என்று எதுவும் புரியாது மேகி திருதிருக்க.. ஆச்சரியப் படும் வகையில் உடன் இருந்த அனைவரும் "வா..வா" என்று சொல்லி தலையை அசைத்தனர்!!!

"இப்ப எங்கே வர சொல்லி அழைக்கிறார்கள்?" என்று தன் மணவாளனை கேட்டு வைத்தாள!!!

உண்மை நிலைவரம்.. என்னவென்றால் அவள் செய்ய அந்த இனிப்பை பாராட்டி அரபிக்கில் கவிதை மொழிய.. அதை உடன் இருந்தவர்கள் ஆமோதிப்பாய் அரபிக்கில் பாராட்ட.. அதை தமிழ் "வா..வா" என்று அர்த்தம் பண்ணிக்கொண்டு கேட்டு வைத்தாள் அவனின் பேகம்!!!

பட்டென்று அவள் புறம் தன் தலையை திருப்பி முகத்தை பார்த்தவனுக்கு இத்தனை நேரம் இருந்த இருக்கம் தளர்ந்து கண்களை பறிக்கும் மின்னலாய்... மாய புன்னகைத் தோன்றியது!!!

மின்னல் ஒளி கண்களை ஒரு நிமிடம் குருடாக்கும் என்றால் வானே இடிந்து கீழே விழுவது போல் கேட்கும் இடி ஒலி காதை செவிடாக்கும்.. ஆனால் விசித்திரமாக அவனின் மின்னல் ஒளியாய் வந்த சிரிப்பு அவளின் கண்களை பளீரிட செய்து...

காதை குளிர்விக்க... கண்களின் இமை முழிக்க விழி விரித்து பார்த்துக்கொண்டு இருந்தவளிடம் அவன் சிரித்தப்படி ஏதோ பதில் சொல்ல... சத்தியமாக காதில் எதுவும் விழவில்லை!!!

அருகில் அமர்ந்திருந்த அத்தை ஏதோ சொல்ல.. மயக்க நிலையில் இருந்து மீண்ட மேகி... மறந்தும் அவன் புறம் திரும்ப வில்லை என்ற போதிலும்.. பேசாத முடியாதப்படி அவர்கள் சாப்பிடுவதற்கு அடுத்தடுத்த உணவு பதார்த்தங்கள் வந்த வண்ணம் இருக்க.. அடுத்த ஒரு மணி நேரத்தில் காலை உணவு முடிய... "ஹப்பாடா" என்று நிம்மதி மூச்சு விட்டப்படி அங்கிருந்து எழுந்தாள்!!!

"பாபி" என்று சித் யாரையோ அழைப்பது காதில் விழுந்தது.

யார் அந்த பாபி?? என்று கண்களால் தேடியவளின் புத்திக்கு அவர்களுக்கு இருக்கும் சொந்த பந்தங்களுக்கு பாதி பேர் பாபிதான் என்று நினைத்தப்படி அவள் நகர.. கையை பிடித்து இழுத்து நிறுத்தினாள் சங்கி.

என்ன என்பது போல் பார்த்தவளை பின்னால் நின்று இருந்த சித்தை புறம் கையை காட்டினாள் அவள்.

"நீ நேராக பேசினாலே புரியாது... இதில் இப்படி பேசினாள் எப்படி புரியும்?" என்று கேட்டுக்கொண்டாள் மங்கி.

"உன்னை பாபி என்று கூப்பிட்டார்.. நீ கண்டுக்கொள்ளாது போற.."

"அவர் பாபியைதான் கூப்பிட்டார் என்னை இல்லை" என்று அவள் பதில் மொழிந்துக்கொண்டு இருக்கும் போதே..

"நீங்க தான் என் முதல் பாபி ஆவிங்க" என்று கூறியப்படி அவர்களில் அருகில் வந்தான் சித்.

"எப்பயும் போல் என்னை பெயர் சொல்லியே அழைக்காலமே.." என்று கூறிக்கொண்டு இருக்கும் போதே..

இரண்டு அடி இடைவேளையில் யாருடனோ நின்று பேசிக்கொண்டு இருந்த ரஃபிக்கை காட்டி... "ம்கூம்.. அது என் அண்ணனுக்கு செய்யும் மரியாதை ஆகாது" என்று இனிமையாக மறுத்தான் சித்.

இதுதான் சித்திற்கும் ரஃபிக்கிற்கும் உள்ள சம்பந்தம்.. எல்லா உறவும் அவன் அண்ணன் வழியாதான் வரும்.. இல்ல தெரியும்.. பின்ன அண்ணனிற்காக தன் காதலையே துறந்தவன் என்றால் சும்மாவா?!?

"உங்களை அழைத்திற்கு காரணம்.. பச்சை பட்டாணி கீர் ரொம்ப சூப்பர்..." என்றப்படி சங்கி தான் அதன் பெயரை சொல்லி இருப்பாள் என்று அவள் சிரித்ததை வைத்தே கண்டுபிடிக்க.. "அதுவும் என் அண்ணனுக்கு பச்சை பட்டாணி சுத்தமாக பிடிக்காது என்று தெரிந்தே செய்த உங்க மன

தைரியத்தை பாராட்ட வார்த்தைகள் இல்லை.. ரொம்ப ரொம்ப தாக்ஸ்" என்றான் மென் நகையுடன் கூறியவன்..

இந்த தகவல் அவளுக்கு புதிதுதான் என்றாலும் ஒரு சின்ன திருப்தி எழுவதை தடுக்க முடியவில்லை.. "எதுக்கு தாக்ஸ்? உங்க அண்ணனை பச்சை பட்டாணி சாப்பிட வைத்ததிற்கா?"

"இல்ல.. என் அண்ணன் ரொம்ப மாசம் கழித்து சந்தோஷமாக பார்ப்பதற்கு நீங்க தான் காரணம் என்பதால்" என்றான் தெளிவாக.

இவளின் கேள்வியை முந்திக்கொண்டு "வாட்?? அத்தான் சந்தோஷமாக இருக்கிறாரா? எப்படி சொல்லுறீங்க எனக்கு என்னவோ எப்பயும் இருப்பது போல் தான் இருக்கிறது."

"ம்ம்.. என் அண்ணன் பேசுகிறார்" என்றான் புன்னைகை விரிய.

சகோதரிகள் ஒருவரை ஒருவர் அந்த விநோத பதிலால் பார்த்துக்கொண்டு.. "சித்.. உன் அண்ணன் ஒன்றும் ஊமை இல்ல அவர் பேசிவிட்டார் என்று புலங்காகிதம் அடைய" என்றாள் சங்கி.

"என்னை விட நூறு மடங்கு கட்டுகோப்பாக... வளர்க்கப்பட்ட என் அண்ணன்... ரொம்ப சாதாரணமாக உங்களிடம் பேசுகிறார்.. சிரிக்கிறார்.. கோபப்படுகிறார்.. என்றால் சம் திங் ஸ்பெஷல்" என்றான் அர்த்தமாக.

"இது எல்லோரும் பண்ண கூடியது தானே என்று நீங்க நினைக்கலாம்.... ஆனால் என் அண்ணனுக்கு எதுவுமே சாதாரணம் இல்ல.. இந்த நவாப் நாற்காலியை அமர போகிறவர் என்பதால் எதை செய்தாலும் பெஸ்டாகதான் செய்தாக வேண்டும் என்ற பிரஷர் அவரை தொடர்ந்த படியேதான் இருந்தது.. இருக்கும்.." என்று மிக எளிமையாக அவனின் வாழ்க்கையை கூறியவன்..

"என் அண்ணன் எதிர்த்து பேசி.. சண்டையிட்டு.. சிரித்து பேசியது என் தந்தையிடத்தில் மட்டுதான்... என் தந்தையின் மறைவிற்குப் பின் இழந்த அந்த தோழமையை உங்களிடம் காண்கிறார் என்று புரிகிறது" என கூறிக்கொண்டு இருக்கும் போதே அருகில் காயத்திரி வர அந்த பேச்சு அத்துடன் முடிவடைந்தது.

காலை உணவு முடிந்தவுடன் மணமக்களுடன் அவர்களின் மூதாதயர்களின் சமாதிக்கு சென்று வணங்கி விட்டு வர வேண்டும் என்று கிளம்பி செல்ல.... மங்கி யூகித்திருக்கவில்லை அங்கே ரஃபிக் தந்தையின் சமாதியும் இருக்கும் என்று!!!

வரிசையாக பதினேழாம் நூற்றாண்டில் ஆரம்பித்து அனைவருக்கும் மலர்கள் வைத்து வணங்கி விட்டு வர.. கடைசியாக கருப்பு நிற கிரானைட்டில் சற்றே புதிதாக

தெரிந்ததை வைத்து இது தான் அவனுடைய தந்தை உடையது என்று யூகித்தாள்!!!

ஒரு நிமிடம் கண் மூடி அங்கே நின்றவனின் உடல் விரைத்து கைகள் மூடி மூச்சு விட சிரமத்துடன் நிற்பதை கண்டு தானாக அவளின் கைகள் அவனின் கைகளை பிடிக்க.. அதை உணர்ந்த நிலையில் கூட இல்லாதவன் அப்படியே வடித்த சிலையாய் இருகி நின்றான்.

உடன் வந்தவர்கள் காயத்திரி உற்பட அவனுக்கு தனிமை கொடுத்துவிட்டு அங்கிருந்து நகர... தானும் போவதா இல்ல நிற்பதா என்ற போராட்டத்தில் குழம்பி போய் நின்றுக்கொண்டு இருந்தவளின் கையை ரஃபிக் அழுத்தி பிடிக்க .. நிமிர்ந்து பார்த்தாள் மேக மித்ரா!!!

கண்களை திறந்து சூறாவளியாய் சுழலும் உணர்வோடு நின்று இருந்தவனை தன் தந்தையின் கல்லறையை பார்த்தவனை கண்ணுற்றவளுக்கு தன்னையும் அறியாது உடம்பில் ஒரு அதிர்வு ஓட.... அப்படியே சமாதியின் அருகில் அவன் மண்டியிட்டு அமர... அவனோடு அவளும் அமர்ந்தாள்!!!

மெல்ல வீசும் காற்று கூடு அவனின் தவத்தை கலக்க விரும்பாதது போல் நிறுத்திக்கொள்ள... அந்த மாயன அமைதியும்... ரஃபிக்கின் லேசாக கலங்கிய கண்களும்.. இருக்கிய பிடியில் சில்லிட்டிருந்த விரல்களும் அவள் கேட்காத

விபரத்தை கூட வரிசையிட்டு கூற... தோழனாக, ஆசானாக, தந்தையாக... என்று எல்லாமாகவும் இருந்த அவனின் தந்தை இல்லாதது எத்தனை பெரிய இழப்பை அவன் சமாளிக்கிறான் என்பதை விட.. தந்தையிடம் ஏதோ மன்னிப்பு கேட்க விழைகிறான்.... தன் தந்தையிடம் ஏதோ சொல்ல வந்து.. பேச தெரியாது... முடியாது... விழி விரிந்து நிற்கும் அவனின் போராட்டம் உடன் நின்று இருந்தவளின் நுண்ணுர்வால் உணர முடிந்தது!!!

பிறந்ததில் இருந்து வாக்கு தவறாமையை ரத்தத்திலேயே ஊறு ஏற்றிய தந்தையிடம்.. அவர் இருக்கும் போது நிச்சயக்கப்பட்ட பெண்னை மணம்புரியாது வேறு ஒரு பெண்னை மணந்து வந்து இங்கே நிறுத்திருக்க... அவர் கற்பித்த கல்வியில் தான் தோற்று விட்டதை நினைத்து உள்ளம் குமுற.. மானசீகமாக மன்னிப்பு கேட்கிறான் என்று சர்வ நிச்சயமாக தெரிந்தது!!!

அன்று அவளிடம் நான் யாருக்கு பதில் சொல்ல தேவை இல்லை என்று சொன்னதில் முழு உண்மை இல்லை... அவன் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் தன் தந்தையிடம் பதில் சொல்கிறான் என்று புரிய.. அவனுக்காக மனது உருகியது!!!

அந்த நொடி அவன் செய்தது பற்றி அவள் மனதில் எந்த சஞ்சலமும் இல்லை.. கோபம் இல்லை.. ஏன் வருத்தமும் கூட இல்லை... தோன்றியது எல்லாம்.. இந்த சூழ்நிலைக்கு காரணம்

அவன் மட்டும் இல்ல... தானும் இதில் உடந்தையாக இருக்கும் போது.. நிகழ்ந்த அனர்த்தத்தில் அவனை மட்டுமே குற்றவாளி ஆக்கி விட முடியாது.. அதில் சரி பாதி தவறு அவளுடையது என்ற உண்மை உரைக்கவே காற்றோடு காற்றாகி கலந்திருக்கும் ரஃபிக் தந்தையிடம் அவளுமே மன்னிப்பு கோரினாள்!!!

அவனை காதலித்ததிற்காக அல்ல.. மணம் செய்துக்கொண்டதற்காக அல்ல.. இந்த தப்பை அவர் உயிரோடு இருந்தாலுமே செய்திருப்பாள் தான்!!! அவள் கோரிய மன்னிப்பு... அவனுக்கானது... அவன் தன்னால் தானே வாக்கு தவறினான் என்பதற்கான மன்னிப்பு!!!

சட்டென்று அங்கே உறங்கிக்கொண்டு இருக்கும்... இதுவரை பார்த்து இராத மனிதரிடம் மதிப்பு மரியாதையும் அபரிமிதமாக தோன்றியது.. காரணம்..

இதோ பக்கத்தில் மண்டியிட்டு தன் தந்தையிடம் மனதால் மன்னிப்பு கேட்கும் இவன்... எண்ணி வார்த்தைகளில் பேச கூடியவனை... ஒரு மகனாக மட்டும் வளர்க்க வில்லை.. ஒரு தலைவனை உருவாக்கி இருக்கிறார்.. மகனை வளர்ப்பது யார் வேண்டுமாலும் செய்ய கூடிய செயல்... ஆனால் ஒரு தலைவனை உருவாக்குவது தலை சிறந்த மனிதரால் தான் முடியும்... உடம்பில் ஒரு புலனாகிதம் ஊற்று எடுக்க.. முதல்

முறையாக இப்படி ஒருவனை பெற்று தலை சிறந்த கோமகனாய் வளர்த்ததற்கு அவருக்கு நன்றி கூறினாள்!!!

ஏன் எதற்கு எப்படி என்று தெரியவில்லை அடுத்த அவள் கேட்டது தான் அவளையே ஆச்சரியப்பட வைத்தது...

"ரஃபிக் சந்தோஷமாக இருக்க வேண்டும்.." என்று அவரிடம் அவள் வேண்டு கோள் வைத்துவிட்டு கண்களை திறக்க..

ரஃபிக் தன் தந்தையின் கல்லறையை மெல்ல வருடியவன் பின் ஒரு பெரும் மூச்சுடன் இவள் புறம் திரும்பி போகலாம் என்பது போல் தலை அசைக்க.. அமைதியாக எழுந்துக்கொண்டவள் எதுவும் பேசாது அவன் பிடியிலேயே வெளியே செல்ல... அங்கே காத்திருந்த குடும்ப அங்கத்தினர் இவர்களை விசித்திரமாக பார்ப்பதை மேகி காணவில்லை என்றாலும் அவர்களுடன் உடன் வந்து சங்கி கண்டு விட... ஏன்? என்று சித்தை துறுவினாள்.

எல்லோரும் ஒன்றாக சென்றோம்.. கடைசியா அபீயின் இடம் வந்தவுடன் அம்மா கூட அண்ணனை தனியாக விட்டு விட்டார் என்றால்... அவர் தனியாக மட்டுமே இருக்க விரும்புவார்... ஆனால் இம்முறை பாபியை அவருடன் நிறுத்தி இருக்கிறார் என்றால்... அந்த ஆச்சரியத்தில் தான் இப்படி பார்க்கிறார்கள் என்றான் சித்.

அரபிக்கில் அபீ என்றால் என்னுடைய அப்பா என்ற பொருள் என்பதை முன்பே கேட்டு தெரிந்திருந்தால் சித்தின் பேச்சிற்கு இடையே புகாமல் கேட்டுக்கொண்டு இருந்தாள்!!!

அவர்கள் வந்தவுடன் உறவினர்கள் தத்தம் காரில் ஏறி வீட்டிற்கு சென்றனர்!!!

இவர்களுக்காக தயாராகி இருந்த மதியம் சாப்பாடு முடிந்தவுடன் கொஞ்சம் ஓய்வு எடுக்க விடுவாங்க என்று எதிர்பார்த்தால் அதற்கு நேர்மாற.. நாளை மாலை அவர்களின் ஹோட்டலாக மாற்றப்பட்டு இருக்கும் அரண்மனையில் நடக்க விருக்கும் ரீஷப்சனிற்கு கடைசி நிமிஷத்தில என்ன மாற்றம் நடந்து இருக்கிறது என்பது முதல் எத்தனை அரசியல் தலைவர்கள், சினிமா துறையை சேர்ந்த பிரபலங்கள், பிசினஸ் பிரமுகர்கள் வருகிறார்கள்.. எத்தனை மணிக்கு வருவார்கள் என்பதில் எல்லாம் கடைசி நிமிஷம் வரை மாறும் என்றார் காயத்திரி.

அவர் எழுந்து சென்ற அடுத்த நிமிஷம் யாரோ தன் அருகில் உட்காருவதை போல் தோன்ற.. தலை உயர்த்தி பார்த்தவளுக்கு பதவிசாக அமிரா அமர்ந்திருப்பதை கண்டு துனுக்குற்றாள்!!!

அவள் எதிர்பார்த்தை போல் உட்கார்ந்த அடுத்த நிமிஷம்.. "என்னம்மா.. கிட்சனில் பெரிய நாடகமே அரங்கேற்றம் செய்தீங்களாமே... ??"

# அத்தியாயம் 27

"**கி**ட்சனில் பெரிய நாடகமே அரங்கேற்றம் செய்தீங்களாமே… ??"

முகத்தில் எந்த வித உணர்ச்சியும் காட்டாது அவளை பார்த்தவள்.. "எந்த நாடகத்தை சொல்றீங்க ஆமீரா?" என்றாள் அமைதியாக.

"ஓ!! எது என்று கேட்கறீங்களா இல்ல எத்தனையாவதுன்னு கேட்கறீங்களா??" என்று அவளின் கேள்விக்கு குதர்க்கமாக பதில் அளித்தாள் ஆமிரா.

மெகந்தி விழாவிற்குப் பிறகு சற்று தள்ளியே போகும் இவள்.. இன்று தானாக வம்புக்கு வருகிறாள் என்றால் சமையல் அறையில் நடந்த விஷயம் நிச்சயம் இவள் காதில் விழுந்து இருக்கிறது… என்று யூகித்தவளுக்கு எது வரை என்பது தான் புரியவில்லை.. ஏன் என்றால் காலை உணவு உண்ணுவதில் ஆரம்பித்து மதியம் அஞ்சலி செலுத்த வெளியே போகும் போதும் வரை இவர்கள் வீட்டு ஆட்கள் யாரும் உடன் வரவில்லை என்பதால் இவளிடம் அதற்குள் செய்தி போய் இருக்க வாய்ப்பில்லை… எது வந்தாலும் அவள் வாயில் இருந்தே வரட்டும் அதுதான் தனக்கு நல்லது என்ற முடிவோடு…

"நான் எது செய்தாலும் உங்களுக்கு நாடகமாக தோன்றும் என்பதால் அப்படி கேட்டேன்" என்றாள் விளக்கமாக.

"நீ சரியாகத் தான் சொன்னாய் நான் தான் புரிந்துக்கொள்ளவில்லை..... சமைக்கவே தெரியாத ஒருத்தி முதல் தடவை சமைப்பாளாம்... அதை பாராட்டி என் தாத்தா கவிதை வேறு பாடியதோடு மட்டும் இல்லாது... உன் பி.ஆர்.ஓவாக வருவோர் போவோரிடம் புகழ்ந்து சொல்லிக்கொண்டு திரிகிறார் என்றால்.. வேலை ஆட்களுக்கு கொஞ்சம் கொடுத்து சாப்பிட சொல்லி.. அவர்களையும் உன் மாய வலையில் போட்டுக்கொண்டு... அதுகளையும் உன் கொள்கை பரப்பு செயலளாராக மாற்றிக்கொண்டு விட்டாய்.. இப்படி ஒரு கப் கீர் வைத்து.. இந்த அரண்மனை முழுவதும் உன்னை பற்றி பேசும் படி திருப்பி விட்டாயே... இது எல்லாம் எழுதி அரங்கேற்றி இருப்பதை நாடகமாக இல்லாமல் வேற எப்படி இருக்க முடியும்?!?"

இப்படி பேசுகிறவளிடம் என்ன சொல்லி புரிய வைக்க முடியும்? என்று பத்திக்கொண்டு வந்தாலும்.. "நீங்களே முடிவு செய்துவிட்ட பிறகு நான் என்ன பதில் சொல்ல இருக்கு?" என்றாள் அலுப்பாக.

இப்ப புரிந்தது அவளின் கடுப்பிற்கு காரணம் என்னவென்று... ஆக அந்த வேலை ஆட்களிடம் கொடுத்த கீர்

செய்தி பரவி இப்படி ஒரு பூதாகரமாக செய்தியாக வரும் என்று அவள் என்னத்தை கண்டாள்.. அவளை பாராட்டுவதை பொருக்க முடியாது இப்படி புகைகிறாள் என்று நன்றாகவே தெரிந்தது.. ஆனால் இவள் சமையல் ஆட்களிடம் கொடுத்தது எங்கேயோ இருக்கும் இவளுக்கு எப்படி தெரிந்தது?? என்று மனதில் கேள்வி எழ அதை அப்படியே தள்ளி வைத்துவிட்டு டிராகன் போல் நெருப்பை கக்கும் ஆமீராவை சமாளிக்க..

"சங்கி சொல்லிக்கொடுக்க நான் செய்தேனே தவிர... மற்றவை எதுவும் திட்டம் போட்டு நாடகம் நடத்தி இல்லை... எனக்கு சுத்தமாக சமைக்க தெரியாது என்பது ரஃபிற்கு நன்றாகவே தெரியும்" என்று சுமூகமாக முடிப்பதாக நினைத்து பிரச்சனையை இழுத்தவிட்டாள் மேகி.

"நவாப்பையே கவிழ்த்த உனக்கு... மற்றவர்கள் எல்லாம் பெரிய விஷயமா என்ன?" என்றாள் அவளும் விடாது.

அமீராவின் புறம் நன்றாக திரும்பியவள் "மற்றவர்களை விடு ஆமிரா... எத்தனை பேர் என்ன திட்டம் போட்டாலும் தலை குப்புற விழும் ஆளாகவா நவாப் தெரிகிறாரா?" என்றாள் அமைதியாக.

"அப்படித் தான் நானும் நம்பிதான் அவருக்காக இரண்டு வருஷம் காத்து இருந்தேன்... ஆனால்... அப்படி எதுவும்

இல்லை என்று கேம்ப் வந்த பத்து நாட்களில் காட்டி விட்டாயே!!!" என்று ரணமாக வந்தது அவளின் குரல்.

குற்ற உணர்ச்சியை தூண்டும் இந்த பேச்சு நெருப்பாக சுட்டு பொசுக்க.."நான் நவாப்பை பார்க்கும் போது நிச்சயம் ஆகி இருக்கிங்கன்னு எனக்கு தெரியாது ஆமிரா.. தெரிந்திருந்தால்...."

"தெரிந்திருந்தால்.. என்ன பண்ணி இருப்ப?? அவரோடு காட்டிற்குள்ளே போய் தங்கி இருந்திருக்க மாட்டியா??" என்றாள் வார்த்தைகளில் கத்தி வீசினாள்.

உயிராக நேசிக்கும் குடும்பத்தினரிடம் கூட மூச்சு விடாது காத்து வந்த விஷயத்தை... அவர்கள் இருவருக்கும் மட்டுமே தெரிந்த இரகசியத்தை.. இடுகாடு செல்லும் வரை தன்னுடன் மட்டுமே இருக்க வேண்டும் என்று நினைத்து தன்னுள் புதைத்து வைத்த உண்மை... இவளுக்கு எப்படி தெரிந்தது?? என்ற புரியாத திகைப்பும் அதிர்ச்சியும்.. விஷயத்தின் தீவிரம் சூராவளியாய்... ஒரு சேர தாக்க...

நல்ல காலம் அவள் அமர்ந்திருந்தாள் இல்லை என்றால் அப்படியே கால்கள் நடுங்கிய நடுக்கத்திற்கு கீழே விழுந்து இருப்பாள்... "அப்பாடா" என்று சந்தோஷிக்க முடியாது... அவளின் உணர்வுகளை கட்டியம் கூறும் விதமாக கைவிரல்கள் நடுங்க.. அத்தை காயத்திரி கொடுத்த காயிதங்கள் கீழே நழுவி

விழுந்து அவளின் மனதை போல் எதற்கும் அடங்காமல் நான் புறமும் பறந்து சென்றது!!

அவளின் செய்கையை கண்ணுற்றவள்.. "சம்பந்தப்பட்ட இருவரை தவிர உலகில் வேறு யாருக்குமே தெரியாத ரகசியம்... எனக்கு எப்படி தெரியும்??" என்று அலட்சியத்தோடு கேட்டவள்... பதில் பேச முடியாது பேய் அறைந்தது போல் அரண்டுபோய் இவளை வேடிக்கை பார்த்தவளை கண்டு அலட்சியமாக சிரித்தவள்..

"இதற்கே இப்படி நடுங்கறீயே.. இந்த விஷயத்தை சொல்லியது யார் என்று சொன்னால் நீ என்ன பண்ணுவ??.. மயக்கம் அடித்து என் கால் அடியில் விழுந்து விடுவாயா? இல்லை மதியம் சாப்பிட்டதை எல்லாம் வாந்தி எடுப்பாயா?? இல்ல கதறி அழுவாயா??"என்று தலை சரித்து தீவிரமாக யோசித்த வண்ணம் இளக்காரமாக கேட்டவள்... "இதில் முதல் இது செய்தால் ரொம்ப சந்தோஷப் படுவேன்.. மற்றது... பண்ணாலும் எனக்கு பூரண சம்மதமே..." என்றாள் மகா திருப்தியுடன்.

எதுவும் பேசாது... பேச முடியாது... வார்த்தைகள் கோர்வையாக பேச வராத திராணி அற்று... அவள் சொன்ன செய்தியின் தாக்குதலில் கண் இமைக்க மறந்து அவளை வெறித்து பார்த்தப்படி மேக மித்ரா இருக்க...

"சொல்லியது யார் தெரியுமா...?? என்று என்னவோ சூப்பர் சீங்கர் வின்னர் அறிவிப்பது போல் பெரிய பீடிகையோடு அறிவித்தவள்... "உன் கணவர் நவாப் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான்" என்று குடம் குடமாக செந்தனலை அவள் தலையில் கவிழ்த்து விட்டு பரம திருத்தியுடன் பார்த்தாள்!!!

"நிச்சயமாய்.. ரஃபிக் சொல்லி இருக்க மாட்டார்.." என்றாள் முதல் முறையாக வாயை திறந்து திடமாக.

பட்டென்று தலையை பின்னிற்கு தள்ளி சிரித்தவள்.... "அப்படியா?? எப்படிம்மா... அவ்வளவு நிச்சயமாக சொல்ற?? அவ்வளவு நம்பிக்கையா?? நவாப் மேலையா?? உன் முன்னால் அவரை நம்பி ஏமாந்தவள் நின்றுக்கொண்டு இருக்கும் போது.. உன் நம்பிக்கை பாராட்ட வார்த்தைகளே இல்லை?!? உன் முகத்தை பார்த்தால் நான் சொல்லுவதை நம்பாதது போல் தெரிகிறது... வேண்டும் என்றால் நான் சொன்னது உண்மையா.. பொய்யா என்று உன் அன்பு...கணவரிடம் போய் கேட்டுப்பார்...." என்றாள் தலை சிலுப்பி எடுத்து எரிந்து பேசிவிட்டு...

தான் விட்ட அம்பு... தவறாது தன் இலக்கை தாக்கியதா என்று பார்த்தவள்.. அங்கே மேக மித்ராவின் மூச்சு துடித்து தடுமாறியதையும்... கண்கள் கலங்க.. கைகளை இருக மூடி.. உதட்டை கடித்து பீறிட்டும் வரும் அழுகையை அடக்க முயல்வதை ஒரு குரூர திருப்தியுடன்....கண்டு ரசித்தவள்...

"ரத்தம் வராது.. கத்தி இல்லாது.. குத்தி கொலைப்பண்ணியது போல் வலிக்கிறது இல்லை...?? எனக்கும் அப்படியே தான் இருந்தது... நவாப் கையில் கத்தி இல்லை... ரத்தம் வழியவில்லை... ஆனால் நான் உயிரோடு கொலை செய்யப்பட்டேன்... அதுவும் எந்த சமயத்தில் தெரியுமா....??"

"தான் கல்யாணப் பத்திரிக்கை டிசைனை பற்றி பேச வந்த என்னிடத்தில் இந்த கல்யாணம் நடக்காது என்று சொல்லி விட்டு உன்னை பற்றி நவாப் சொல்லும் போது இப்படி தான் உணர்ந்தேன்.... நான் யார் தெரியுமா? எப்படி பட்ட குணம் தெரியுமா? என் பொருளை மற்றவர்கள் தொட்டால் கூட எனக்கு பிடிக்காது.. நானும் மற்றவர்கள் பொருள் மேல் ஆசை பட மாட்டேன்.. அப்படிப்பட்ட என்னிடம்.. என்னிடம் நான் காதலித்த எனக்கு நிச்சயக்கப்பட்ட வரை நீ திருட்டிக்கொண்டாய் என்றால் உன்னை அப்படியே கொலை பண்ணனும் வெறி கூட வந்தது... செய்யும் அளவு உனக்கு தகுதி இல்லை என்று நினைத்தேன்"

"உனக்காவது.. இந்த விஷயத்தை வெளியே தெரியாது மறைத்து விட்டாய் ஆனால்... எனக்கு?? என் கல்யாணம் நின்று விட்டது என்று ஊர் உலகம் அறிந்த போது.. எப்படி தெரியுமா இருந்தது???"

"நிறைந்த சபையில் ஆடை கழன்று விழுந்தது போல் இருந்தது… அந்த அவமானத்தை நீ உணர்ந்து பார் அப்ப புரியும் நான் என்ன மாதிரி சித்திரவதையை அனுபவித்து இருப்பேன் என்று… இயல்பிலேயே பொசஸ்சிவ் குணத்துடன் இருக்கும் நான் ரஃபிக்கை காதலித்து இருப்பேன் என்று ஏன் புரியவில்லை…?? என்னை பிடிக்கவில்லை என்றாலோ இல்லை என்னிடம் ஏதோ குறை இருக்கு என்றோ… இல்ல உலகில் வேறு எந்த காரணத்திற்காகவும் என் திருமணம் நின்று இருந்தாலும் அதை ஏற்றுக்கொண்டு இருக்க முடியும் ஆனால்… நின்ற காரணம் வேறு ஒரு பெண் என்றால் அந்த வலியின் ஆழம் எனவென்று தெரியுமா?? துக்கம் விசாரிப்பது போல் குத்தி காட்டும் நண்பர்களையும்.. சொந்த பந்தங்களையும் நீ முகத்திற்கு நேராக சிரித்தப்படி பார் அப்ப தெரியும்… என்ன ரணத்தின் அளவு என்னவென்று.. நீ இங்கே அணுகுண்டை வீசிவிட்டு அங்கே போய் உட்கார்ந்துக்கொண்டால் அதன் பாதிப்பை நீ உணர முடியாது என்று நினைக்காதே.. நீ அணுகுண்டை வீசியது நவாப்பிடம் அல்ல என் வாழ்க்கையில்… நான் அனுப்பவித்த வலியையும் அவமானத்தையும் நீயும் அனுபவிக்க வேண்டாம்??" என்று வார்த்தையில் நஞ்சு தொய்த்த அம்பாய் ஏய்தி விட்டு…நக்கலாக சிரித்து ஏதோ மீண்டும் வாய் திறக்கும் போதே.. அவர்கள் அருகில் யாரோ வருவதை உணர்ந்து…

"ஹாப்பி மேரீட் லைப்" என்று சொல்லி விட்டு ஒரு அர்த்த பூஷ்டியான பார்வை பார்த்து விட்டு நகர்ந்தாள் ஆமிரா!!!

மங்கியின் கையில் இருந்து கீழே விழுந்த காயிதத்தை கூட தெரியாது அவை பறந்து ஓடுவதை கூட கவனிக்காது.. ஆமீராவை பார்த்துக்கொண்டு இருந்தவளை தூரத்தில் இருந்த பார்த்த சங்கி அவசரமாக அங்கே வர..

கீழே இருந்த காயிதங்களை எடுத்து மங்கியிடம் நீட்டியவள்.. "என்னாச்சு??" என்றாள் நேராக விஷயத்திற்கு குதித்து.

தன் சகோதரி அருகில் நிற்பதை கண்டு தன் எண்ண அலைகளை கட்டுக்குள் கொண்டு வர முயன்றப்படி...

"ம்கூம்... எப்பையும் போல் சீண்டி விட்டு போகிறாள்" என்று பேச்சை சமாளித்தவளின் குரல் உடைந்து வருவதை நன்றாக உணர.... பெரு மூச்சுடன்... எப்படி கேட்டாலும் எந்த பதிலும் சொல்ல மாட்டாள் இந்த அழுத்தக்காரி என்று புரிய.. அங்கே சங்கி அமர்ந்து சில்லிட்டிருந்த விரல்களை தன் கை பிடிக்குள் வைக்க.. அடுத்த ஐந்து நிமிஷங்களின் அவளை தேடிக்கொண்டு சித் அங்கே வந்தான்.

"ஏய் கார்த்திக் உன்னிடம் சொல்ல சொன்னான்... உன் தோழி மௌனிக்கா நாளை ரீஷப்ஷனிற்கு வருவதற்கு டிரெயினில் ஏறி விட்டாளாம்... இரு இரு... ப்ளைட்டில் வர மாட்டேன் என்று

அவள் தான் சொல்லி விட்டாளாம்" என்றான் சங்கியின் மணாளன்.

"அவளை இங்கே தங்க ரூம் என்று ஆரம்பிக்கும் போதே.."

"ம்கூம்.. உனக்கே தெரியும் இங்கே அந்த முறை கிடையாது.. முடிவும் முடியாது.. இது நெருங்கிய உறவினர்களுக்கு மட்டுமே... இந்த வீட்டிற்குள் அனுமதி உண்டு... அதனால் தான் ரீஷப்ஷன் நடக்கும் இடத்திலேயே ரூம்..." என்று சித் ஆரம்பிக்கும் போதே..

இல்லை.. மாசமாக இருக்கும் அவளை... யாரும் தெரியாத இடத்தில் எப்படி விட முடியும்?? என்னை நம்பி தான் அவள் இங்கே வருவதே.." என்று சங்கி பிடிவாதம் பிடிக்க..

"ஏய்.. அவர் சொல்வது தான் சரி... இங்கே இருந்து அந்த ஹோட்டல் ஐம்பது கிலோ மிட்டர்..தூரம்... இன்று இரவு நம்முடன் இருந்து விட்டு திரும்பவும் அங்கே போவது அவளுக்கு எத்தனை அலைச்சல்?? பாபியை பார்த்த இல்ல.. எப்படி கஷ்டப்படறாங்கன்னு? அவளுக்கு தானே இந்த பிரச்சனைகள் இருக்கு?!?... அங்கே இருக்கும் ரூம்மிலேயே தங்கி ஒய்வு எடுக்கட்டும்... நாம் தான் மதியமே அங்கே போய் விட போகிறோமே.. அப்புறம் எதுக்கு இங்கேயும் அங்கேயும் அவள் திரியனும்??" என்று சித்திற்கு ஒத்து ஊத... வேறு வழி தெரியாது தலையை ஆட்டினாள் சங்கி.

"ஆமாம்.. இது என்ன பெயர்கள்??" என்று கையில் இருந்த பேப்பர்கள் பார்த்து கேட்டாள் சங்கி.

"நாளை ரீஷப்ஷனுக்கு வரும் முக்கிய பிரமுகர்களின் பெயர் மற்றும் விபரங்கள்" என்றான் சித்.

"இதை எல்லாம் இப்ப நாங்க படித்து தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டுமா?" என்றாள் அரண்டு போய்..

"ம்ம்.. நாங்க இன்னார் என்று அறிமுகப்படுத்துவோம்... நீங்க சிரித்தப்படி அவர்களின் குடும்பத்தை பற்றியோ... இல்லை அவர்களின் பிசினஸ் பற்றி ஒரிரண்டு வார்த்தை கேட்கனும்.. அதுதான் அவர்களை கௌரவப்படுத்தும் விதம்... அதுதான் அலிகான் குடும்பத்தின் விருந்தோம்பல்.. சின்னவர்கள் பெரியவர்கள் என்று யாரையும் விட்டுவிடாது.. அவர்களை தெரிந்து வைத்திருப்பார்கள்..." என்றான் பெருமையாக.

"ஆனால்... கிட்ட தட்ட இருநூறு பெயருக்கு மேல் இருக்கிறதே..." என்று அவள் அழ மாட்டாத குறையாக கூற...

"நீயும் அலிகான் என்பதை மறந்துவிடாதே" என்று சொல்லி விட்டு தன் அண்ணன் இருக்கும் இடத்தை நோக்கி நகர்ந்தான்.

"ஷ்ப்பா... கல்யாணம் ஒருவழியாக முடிந்துவிட்டது.. என்று நிம்மதி பெரு மூச்சு விட்டால் இது என்ன மங்கி இப்படி??" என்று புலம்பினாள்.

"ஏய் ஏன்டீ பெயரை பார்த்தால் பாதிக்கு மேல் தெரிந்தவர்களாக தான் இருப்பார்கள்.. மீதி பெயர் தானே அது எல்லாம் சமாளித்து விடலாம்... நானும் பக்கத்தில் தானே இருக்க போகிறேன்..?? அப்புறம் என்ன பிரச்னை??" என்று அவளை வாய் வார்த்தையாக தேற்றினாலும் மனது முழுக்க.. ஆமீரா சொன்ன செய்தியில் முழ்கிக் கிடந்தது.

அவள் சாதாரண செய்தி கூறவில்லையே... அவள் கூறி சென்ற விஷயம் அவளின் அஸ்திவாரத்தையே அசைத்தது!!!

அவள் எதிர்பார்க்கும் தனிமை கிடைக்காது அவர்களின் வீட்டு ஆட்கள் எல்லோரும் வந்து சேர.. பின் சச்சிதேவ் குடும்பம் அலிகான் குடும்ப அங்கத்தினர் என்று யாரோ ஒருவர் வந்து அவளிடம் பேச்சு கொடுத்தப்படியே அப்படியே மாலை டீ டிபன் கூட அங்கே அரங்கேறியது... இனியும் எத்தனை நேரம் என்று அவள் அழ மாட்டாத குறையாக உட்கார... அந்த சமயம் பார்த்து காயத்திரி வந்து இரவு விருந்திற்கு குளிந்து உடை மாற்றிக்கொண்டு தயாராக சொன்னார்.

"இப்ப என்ன விழா அத்தை?" என்று வாயை திறந்து கேட்டவளை அருகில் அமர்ந்திருந்த அம்மா கையை பிடித்து அழுத்தி நிறுத்தினார்.

சிரித்தப்படி காயத்திரி நகர.. "ஏன்டீ கல்யாணம் முடிந்த இரவு என்ன விழா இருக்கும் என்று கூடவா தெரியாது??" என்று

உடன் இருந்த சங்கி காதை கடிக்க... தலையை எங்காவது சென்று முட்டிக்கொள்ள வேண்டும் போல் இருந்தது.

அவர்கள் இருக்கும் நிலையில் இது ஒன்று தான் குறைச்சல்... கடவுளே!! என்று உள்ளே குமுறினாலும் எதுவும் பேசாது தலை ஆட்டிவிட்டு தன் அறைக்கு செல்ல அங்கே ஆட்கள் தயாராக காத்து இருந்தார்கள்.

குளிந்து விட்டு வந்த அவளை அடுத்த அறை மணி நேரத்தில் சிம்புளாக அலங்காரம் செய்து அவர்கள் முறையில் புடவையை உடுத்தி விட்டு.. கீழே அழைத்து வர.. இரவு ஏழு மணி ஆகி இருந்தது.

தன் அருகில் அமர்ந்து இருந்த கணவனை கண்களால் கூட காணாது தட்டில் இருந்ததை பார்த்து சாப்பிட்டவளை ஒரு மார்க்கமாக பார்த்தவன் எதுவும் கண்டுக்கொள்ளாது உணவு அருந்தினான்.

ஒரு வழியாக எல்லோரும் உணவு முடிந்து ஆண்கள் வெளியே செல்ல.. அடுத்த ஆசிர்வாதம் என்ற பெயரில் வயது முதிர்ந்த பெண்கள் அனைவரும் அவளுக்கு அடுத்த ஒன்பது மாதத்தில்குழந்தை பிறக்க அருள் ஆசி வழங்க.. மேகிக்கு அழுவதா இல்ல சிரிப்பதா என்றே தெரியிவில்லை!!!

ஒரு வழியாக அவளை ரூம்மிற்கு அனுப்ப போகும் போது.. நல்ல காலம் தமிழ் சினிமாவில் வருவதுபோல் குடம் பாலை

கொடுத்து அனுப்பும் வழக்கமோ.. இல்லை... கருப்பு வெள்ளை படத்தில் வருவது போல் நாற்பது பெண்கள் வெட்டியாக சிரித்தப்படி சூழ வந்து... கதவை திறந்து உள்ளே தள்ளிவிட்டும் வழக்கமோ எதுவும் இல்லாது.. அமைதியாக நார்த் விங் வரும் வரை உடன் வந்த அத்தை காயத்திரி ஆசிர்வதித்து சங்கியை அவள் அறைக்கு அனுப்ப வேண்டும் என்று சென்று விட்டார்.

அவன் முகத்தில் விழிக்காது அவளின் தனி அறைக்கு சென்று கதவை தாழிட்டுக்கொள்ள வேண்டும் என்றுதான் மனம் சண்டித்தனம் செய்தது ஆனால்.. நெஞ்சில் எங்கோ ஒரு மூலையில் அவன் மேல் ஒட்டிக்கொண்டு இருந்த நம்பிக்கை... அவளை அப்படி செய்ய விடாமல் தடுக்க.. அமைதியாக அவன் அறை கதவில் கையை வைத்து தள்ள அது திறந்துக்கொண்டது!!!

இவள் கதவை திறந்துக்கொண்டு உள்ளே வருவதை பார்த்தவனின் கண்கள் ஆச்சரியம் தெறித்தது...

"அரே... நம் முதல் இரவை கொண்டாட இங்கு வருவாய் என்று நினைக்கவில்லை" என்றப்படி தன் போனை திண்டில் வைத்து விட்டு எழுந்து நின்றான்.

எந்த பதிலும் சொல்லாது அவனின் பார்வையை விட்டு அகலாது.. பறந்து சென்று மறைந்துக்கொள்ள துடித்த கால்கள் இழுத்துக்கொண்டு வந்து நின்றவள்...

"அன்று காட்டில் நாம் தங்கி இருந்ததை ஆமிராவிடம் சொன்னாயா ரஃபிக்?" என்று நிறுத்தி நிதானமாக அவனை கண் கூட இமைக்காமல் பார்த்து கேட்டாள்.

அவள் கேள்வியின் ஆழத்தை உணர்ந்தவனின் உடல் விரைக்க.. "என்னாச்சு என்றால்.." என்று அவன் வாயை திறக்க அவசரமாக தன் கையை உயரத்தி பேசுவதை தடுத்து நிறுத்தியவள்...

"ஆம்... இல்லை என்ற பதிலை தவிர வேறு எதுவும் அவசியம் இல்லை" என்று கேட்ட போதும்...

இல்லை என்று சொல்லு ப்ளீஸ் என்ற அந்த மன்றாடல் அவளின் குரலில் மட்டுமல்ல... அவளின் பார்வையில்.. இதய துடிப்பில் ஏன் மூச்சு காற்றி கூட நிறைந்து இருந்தது!!!

அவளின் உள்ளகிடங்கில் இருந்த உணர்வை உணர்ந்தாலும் "ஆம்" என்று தலையை ஆட்டினான் நவாப் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான்!!!

# அத்தியாயம் 28

"**ஆ**ம்" என்று தலையை ஆட்டினான் நவாப் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான்!!!

எந்த பதிலை கேட்ட கூடாது என்று அவள் மனம் ஏங்கியதோ... எந்த பதில் அவன் வாயில் இருந்து வராது என்ற சின்ன நம்பிக்கை பொறி அவளுள் இத்தனை நேரம் கனன்றுக்கொண்டு இருந்ததோ... அதை தண்ணீர் இல்லாமல்... காற்று இல்லாமல் வெறும் இரண்டு எழுத்தைக்கொண்ட ஒரு வார்த்தையால் அணைத்து விட்டான் ரஃபிக்!!!

இந்த மாதிரி ஒரு சூழ்நிலையில் வெகுண்டு எழுந்து... அழுது ஆர்பாட்டம் பண்ணி அவன் சட்டை காலரை பிடித்திருந்தால்... அது அந்த இடத்திற்கு தேவையான ரீயாக்க்ஷனாக இருந்திருக்கும்.. ஆனால் அப்படி செய்ய கூடியவள் மங்கி இல்லையே.. ஒரு நிமிடம் அந்த பதிலை கேட்டவள் கண்களை இருக்க மூடி தன் உள்ளே பிரீட்டு எழும் உணர்வுகளை அடக்கியவள்..

எதுவுமே பேசாது மெல்ல கண்களை திறந்து அவனை பார்த்த பார்வையில்.. ரௌத்திரம் இல்லை... குற்றசாட்டும்

தோரனை இல்லை.. ஏன் அழுகை கூட இல்லை... ஆனால் அதற்கு பதில்...

தன் கையாலேயே அவளை உயிருடன் நெருப்பில் இட்டு எரிப்பது போல் கண்களில் இருந்த மரண வலியை இதற்கு முன்பு ஒரு முறை பார்த்திருக்கிறான்... முதல் முறையாக அவனிற்கு நிச்சயக்கப் பட்டு இருக்கிறது... அதுவும் இரண்டு வருடமாக... என்று அறிய நேரும் போது இப்படிதான் பார்த்தாள்!!!

அன்று பேசிவிட்டு போனவள் தான்... அவனிற்கு விபத்து நேர்ந்ததை அறிந்து போன் செய்த போதும் கூட பேசவில்லை.. மீண்டும் அவள் பேசியது சங்கி.. சித்தின் கல்யாண ஏற்பாட்டை பற்றி அறிந்த போதுதான்.

அதுவும் முதுமலை கேம்பில் போனவளுக்கு வீடு திரும்பும் வரை இந்த விஷயத்தை தெரியாதப் படி அவன் பார்த்துக்கொள்ள... இரண்டு நாள் கல்யாணம் என்ற நிலையில் திரும்பிவளுக்கு அந்த செய்தி கொடுத்த அதிர்ச்சி தாங்காது... சங்கியின் கல்யாணத்தில் தன்னால் எந்த வில்லங்கமும் வந்து விட கூடாது என்ற ஒரு காரணத்திற்காக தான் அவனுக்கு போன் செய்து பேசினாள்!!!

இன்னும் சொல்லப்போனால்.. எப்படி அவளாக பேசாமல் போனாலோ அதே போல் அவளாகவே பேச வேண்டும் என்று பேச வைத்தவனும் அவன்தான்!!!

இப்போது மறுபடியும் அதே மாதிரி சூழ்நிலையை நோக்கி அவள் நகர்ந்துக்கொண்டு இருப்பது தெரிய.. அந்த அளவு காக்கும் பொருமையும்... காக்க வேண்டிய கட்டாயமும் இல்லை... என்பதை உணர்ந்தவன்..

"அன்று அவளை பற்றி ஏன் உன்னிடம் சொல்லவில்லை என்று கோபப்பட்டாய்... இன்று என்னை பற்றி ஏன் அவளிடம் சொன்னாய் என்று கோபப்படுகிறாய்" என்று நிறுத்தி நிதானமாக பதில் மொழிந்தான் நவாப் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான்.

அவனின் பதில் கேட்டு எடுத்த அடி காற்றில் கால்கள் நிற்க.... எதுவும் பேசாமல் அப்படியே பனிச் சிலையாக உறைந்து நின்றாள்...

"வாட்ஸ் யூவர் ப்ராளம்?? நீ சொன்னதை செய்ததற்கு கோபப்படுகிறாயா??... இல்ல... ஏன் செய்தாய் என்று கோபப் படுகிறாயா என்று புரியவில்லை.." என்றான் அவளின் முதுகை பார்த்ததப்படி கேட்டான் ரஃபிக்.

அவன் பதிலும் அதை அவன் சொன்ன விதமும் உறை நிலையில் இருந்தவளை உயிர்ப்பிக்க... அப்படியே அக்ரோஷமாக திரும்பியவள்....

"வாட்?? என்று ஆத்திரமாக திரும்பியவள் கண்களில் மார்பின் குறுக்கே கைகளை கட்டிக்கொண்டு அலட்சியாக நின்று இருந்தவனை பார்த்தவளுக்கு அடிக்கி வைத்திருந்த கோபம் வெடித்து சிதற..

"என்ன பிரச்சனை என்று தெரியாத மாதிரி கேட்காத ரஃபிக்.." என்றாள் குரல் நடுங்க.

அவனை பார்த்து பேச வைத்து விட்டதிலேயே உடல் விரைத்து நின்று இருந்தவன் லேசாக தளர..

"உண்மையை உன்னிடம் சொன்னது பிரச்சனையா இல்லை அவளிடம் உண்மையை சொன்னது பிரச்சனையா?" என்றான் அமைதியாக.

"சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லாது விட்டது தான் இப்ப பிரச்சனை..." என்றாள் ஆத்திரமாக.

"நமக்கு இன்று ஊர் அறிய கல்யாணம் ஆன பிறகும் கூட அந்த பழைய கதையை பற்றி இன்னும் எத்தனை நாள் பேசிக்கொண்டு... பிரச்சனை வளர்த்துக்கொண்டு இருப்பாய்?" என்றான் விரத்தியாக.

"நடந்து முடிந்ததா? எது முடிந்தது? எதை முழுவதுமாக முடிந்ததாக சொல்கிறாய் ரஃபிக்..?? இன்று ஆமிரா என்னிடம் அவள் கோபத்தை காட்டுகிறாள் என்றாள் அதற்கு காரணம் நீ..

உன்னிடத்தில் காட்ட முடியாத கோபத்தை என்னடத்தில் காட்டுறாள்.. உன்னை கல்யாணம் பண்ணிக்கொண்ட காரணத்திற்கு அந்த கோபத்தை நான் சுமக்கிறேன்... என்னை பார்த்து கேட்கிறாள் நீ எப்படி நவாப்பை நம்புகிறாய்... இரண்டு வருஷம்.. காத்து இருந்தவளை ஏமாற்றியவரை எப்படி நம்புகிறாய் என்று கேட்கிறாள் நான் என்ன பதில் சொல்ல ரஃபிக்...??"

"அவளிடம் நீ பதில் சொல்வதை விடு.. இப்ப நீ எனக்கு பதில் சொல்.. என் மேல் உனக்கு நம்பிக்கை இல்லையா?" என்றான் முகத்திற்கு நேரமாக கண்கள் கூர்மையுற மிக மிக அழுத்தமாக கேட்டான்.

"அவளிடம் நீ பதில் சொல்வதை விடு.. இப்ப நீ எனக்கு பதில் சொல்.. என் மேல் உனக்கு நம்பிக்கை இல்லையா?" என்றான் முகத்திற்கு நேராக கண்கள் கூர்மையுற மிக மிக அழுத்தமாக கேட்டான்.

"நம்பிக்கையா?? உன்னிடமா?? எந்த அடிப்படையில் உன்னை நம்ப சொல்ற?? உன்னை நம்பும் ஒவ்வொரு சமயமும் என் நம்பிக்கையில் மண்ணை அள்ளி போடவில்லை ரஃபிக் அணுகுண்டைப் போடுகிறாய்... அணுகுண்டு போட்ட இடத்தில் சில ஆண்டுகளுக்கு புல் பூண்டு கூட முளைக்காது.." என்றாள் கண்களில் லேசாக நீர் முட்ட.

"இதுவரை யாரிடமும் என் நம்பகத் தன்மை நிருப்பிக்க எதையும் செய்தது கிடையாது... அந்த பழக்கத்தை நான் மணந்துக்கொண்டவளிடம் ஆரம்பிக்கும் திட்டம் எதுவும் இல்லை" என்றான் தீர்மானமாக.

"நான் உன் மனைவி என்று சொல்லும் போது.. என் கணவனாக பதில் சொல்.. நவாப்பாக இல்ல" என்றாள் ஆவேசமாக.

"இதற்கு உன் கணவனாகவும்... நவாப்பாகவும் ஒரே பதில் தான். நான் உன்னை இந்த பால்கனியில் இருந்து குதி என்றால் நீ கண்களை மூடிக்கொண்டா கண்களை திறந்துக்கொண்டா என்று கேட்கும் நம்பிக்கை வேண்டும்" என்று அவளால் நம்பவே முடியாத வார்த்தைகளை பதிவிட்டான் ரஃபிக்.

அவனின் பதிலை கேட்டு விரத்தியாக சிரித்தவள் "ரஃபிக்... நீ கேட்காமலே அந்த நம்பிக்கை இருந்தது.. இல்லை என்றால் உன்னை பார்த்த ஒரு வாரத்தில்.. ஒரே வாரத்தில் என்னையே உன் கையில் கொடுத்திருக்க மாட்டேன்.. ஆனால்.. நீ.. நீ.. அந்த நம்பிக்கையை காப்பாற்றிக்கொள்ள தவறிவிட்டாய்..." என்று அவள் தொடர்ந்து பேசும் போதே பாதியில் குறுக்கிட்டவன்...

"என்ன செய்து உன் நம்பிக்கையை காபாற்றிக்கொள்ள தவறிவிட்டேன்" என்று உயிர்வு நவிற்ச்சியாக கேட்டான் தன்

விரிந்து மார்ப்பை இன்னும் அகலமாக காட்டும் விதமாக தோள்கள் விரைக்க நின்று.

"நீ எனக்கு மட்டுமே சொந்தம் என்று நம்பிக்கொண்டு இருந்த போது.. நீ வேறு ஒரு பெண்ணுடன் நிச்சயம் செய்யப்பட்டு இருந்தாய் ரஃபிக்..." என்றாள் பற்களை கடித்தப்படி.

"எஸ்.. அப்படி பார்த்தால் நீ என்னை இன்னும் அதிகமாக நம்ப வேண்டுமே தவிர.. நம்பிக்கையை குலைத்தேன் என்று எப்படி சொல்ல முடியும்??" என்றான் அழுத்தமாக.

"வாட்??" என்று அதிர்ந்து பார்த்தவளின் பார்வையில் "யூ ஆர் கிரேசி..." என்று எழுந்த கேள்வி அப்பட்டமாக தெரிந்தது.

"நான் உனக்கு கொடுக்காத வாக்கை காபாற்ற.. பிறந்ததில் இருந்து நவாப்பின் பண்பாக கருதப்படும் வாக்கு தவறாமையை உடைந்து... உன்னை தேடி வந்து மணந்துக்கொண்டு இருக்கிறேன்." என்று அவன் வீராவேசமாக அடுக்க... அவளுக்கு மயக்கமே வந்தது.

"இப்படி பேச பேசத்தான் எனக்கு கோபம் இன்னும் அதிகம் வருது.. எனக்காக தான் உன் வாக்கை உடைத்தேன் என்று சொல்லாதே... நீ உனக்காக செய்ததை எனக்காக செய்ததாக சொல்லாதே..." என்றாள் ஆத்திரமாக... "இதில் குற்றவாளி நீ.. நான் இல்லை.. அதுவும் இன்னொருத்திக்கு நிச்சயப்பட்டவனை

பறித்துக்கொண்டேன் என்று பார்வையாலும்.. பேச்சாலும் நான் ஏன் குற்றம் சாற்றப்பட வேண்டும்?"

"ஏன்னா.. என் சகதர்ம பத்தினி என்று ஆகிவிட்டதால் எது வந்தாலும் சரிபாதி அதை ஏற்றுக்கொண்டு தான் ஆக வேண்டும்.. " என்று கன அக்கரையாக மொழிந்தவன்... "ஒன்று சொல்கிறேன் கேள்.. ஆமிரா உன்னை நோக வைக்க வேண்டும் என்பதற்காக..." என்று விவரிக்கும் போதே... அவனின் பேச்சில் குறுக்கிட்டவள்

"அது தெரியாத அளவு முட்டாள் இல்லை ரஃபிக்.. என்னை கஷ்டப்படுத்தி பார்ப்பதில் அவளின் புண் பட்ட நெஞ்சு ஆறும் என்றால் ஐயம் ஓ.கே வித்தட்.. ஏன் என்றால் தெரிந்தோ தெரியாமலோ அவளின் கல்யாணம் நின்று போனதில் நானும் துணை போய் இருக்கிறேன்..."

"அவளை பற்றி அவ்வளவு தெரிந்தும்... என்னை அடிக்க குச்சி கொடுப்பது போல்... கிட்சனில் உன் சின்ன பாட்டியிடம் ஏன் அப்படி செய்தாய்? ஒரு ஒரு ஐந்து நிமிடம் ஐந்து நிமிடம் நீ அமைதியாக இருந்திருந்தால்...." என்று அவள் வேகமாக மொழிந்துக்கொண்டு இருக்கும் போதே...

"இன்று ஒருநாளோடு நீ போட்ட வேஷம் முடிய போவதில்லை மேகி.. என் சின்ன பாட்டி... வருஷத்தின் பாதி நாள் இங்க தான் இருப்பாங்க... இப்ப இல்ல என்றாலும்...

என்றாவது ஒரு நாள் இது வெளிச்சத்திற்கு வரும் போது.. என் பேகம் யார் முன்பும் தலை குனிந்து நிற்க கூடாது... என்ற காரணமும்... அதை விட முக்கியமாக என் தம்பியின் மனைவி சமைத்த உணவை என் மனைவி சமைத்ததாக விளையாட்டுக்கு கூட என்னால் சொல்ல முடியாது..." என்று தெளிவாக கூறியவன்..

"முன்பே உன்னிடம் சொல்லி இருக்கிறேன் மேகி... நமக்குள் இருக்கும் பிரச்சனையில் என் அம்மாவையோ இல்லை தம்பியையோ இழுக்காதே என்று.. இன்று முதல் என் தம்பியின் மனைவியும் அதில் அடக்கம்..." என்று ராஜ தோரனையாக அறிவித்தான்...

மனைவியின் உடன் பிறப்பு.. என்பதை விட அண்ணனின் மனைவியாக பார்த்தவன் சித் என்றால் இங்கே.. ரஃபிக்கின் பாசத்திற்குரிய குடும்ப வட்டத்திற்குள் தம்பியின் மனைவியை கல்யாணம் ஆன முதல் நாளே சேர்க்கப்பட...

நானூறு வருடம் பழமை வாய்ந்த நவாப் வம்சத்தை சேர்ந்தவன் என்று தெரிந்த போது வராத பூரிப்பு... தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் என்று எல்லோரும் அவர்களை கண்டு பொறாமை படும் போது கூட வராத பூரிப்பு... வைரமும் முத்துவுமாக அணிந்து புரவியில் உலா வரும்போது வராத பூரிப்பு... முதல் முறையாக சகோதர்கள் தங்களை இந்த

குடும்பத்தில் ஒரு அங்கமாக பார்க்க தொடங்கி விட்டனர் என்று அறிய நேர்கையில் பூரிப்பாக உணர்ந்தாள் மேக மித்ரா!!!

தன் தப்பை உணர "நான் அந்த கோணத்தில் பார்க்கவில்லை... ஐயம் சாரி" என்றாள் சின்னதாகி விட்ட குரலில்.

"தெரியும்..." என்று தலையை ஆட்டினான்.

"இந்த விஷயத்தில் இவ்வளவு யோசிக்கும் நீ.. ஆமிராவிடம் நம்மை பற்றி சொன்னால் அது எப்படிப்பட்ட பின் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை மட்டும் ஏன் யூகிக்க தவறினாய் ரஃபிக்?? என்றாள் அதங்கமாய்... அந்த குரலில் இருந்த தவிப்பும்.. பயமும்.. அதை விட அவள் கேட்ட போது அதில் இழையோடிய நடுக்கம் அவனை தாக்க..

"என்ன மாதிரி பின் விளைவுகளை பற்றி நீ சொல்கிறாய்?" என்றான் நிதானமாக.... அவளை கண் இமைக்காமல் பார்த்தப்படி.

" இந்த விஷயத்தை என் வீட்டினர் காதல் விழும் படி அவள் சொன்னால் என்ன ஆகும் என்று யோசித்து பார்த்தாயா?? உன்னை பற்றி ஏன் இதுவரை என்வீட்டில் மூச்சு கூட விட வில்லை என்று என் வீட்டு ஆட்கள் நான் கொலையே பண்ணாலும் என்னை மன்னிப்பார்கள் என்று தெரியும்.. ஆனால் என் அண்ணன்கள் உன்னை அப்படி விட மாட்டார்கள்.. இந்த

விஷயம் அவர்கள் காதில் விழுந்தால் என்ன விபரிதம் நடக்கும் என்று யோசித்து பார்த்தாயா?? கார்த்திக்கிடம் இருந்து உன்னை காப்பாற்ற அரி அண்ணாவும் வரமாட்டார்.. பத்ரி அண்ணாவும் முயல மாட்டார்..." என்று கண் முன்னால் விரியும் ரத்தம் கசியும காட்சியை கண்டவள்... தோய்ந்துபோய் இரண்டு அடிக்கு பின்னால் இருந்த கதவில் சாய்ந்தாள்!!!

மச்சான்கள் ரத்தம் வர... அடிப்பார்கள் என்று சொன்னதை அவள் என்னவோ "கண்களை மூடிக்கொண்டு குதிக்கவா இல்லை கண்களை திறந்துக்கொண்டு குதிக்கவா" என்று கேட்டது போல் அவன் முகத்தில் பொலிவும் மந்தாகச புன்னைகயும் பிரதிபளிக்க அவர்களின் கதவில் சாய்ந்துக்கொண்டு பேசியவள் விழுங்குவது போல் பார்த்து வைத்தவனின் கால்கள் வேகமாக அவளிடம் சென்றது!!

முதல் முறையாக அவனுக்கு அந்த இக்கட்டான சூழலிலும் சிரிப்பு வர.. தன்னுள் வெடித்து சிதறிய சிரிப்பை அடிக்கி "மேகி.." என்று அழைத்தப்படி அவளின் முகத்தை தன் கைகளில் ஏந்தியவன் முகத்தில் முத்த மழை பொழிந்தான்...

இதுவரை அவன்... உணர்ச்சி வசப்பட்டு முத்தமிட்டு இருக்கிறான்... மோகம் பொங்க முத்தமிட்டிருக்கிறான்... ஏன் கோபப்பட்டு கூட முத்தமிட்டு இருக்கிறான் ஆனால் இவ்வளவு

ஆவேசமாக முத்தம் கொடுத்தில்லை.... இந்த ஆவேசத்ததிற்கான காரணமும் அவளுக்கு புரியவில்லை...!!!

அவனின் கதகதப்பிலும்.. முத்ததிலும் கரைய துடித்த மனதை வெகு சிரமப்பட்டு தன்னை நிதானப்படுத்துக்கொண்டு...

"என்ன பண்ற??" என்றாள் பின்னால் இருந்த கதவோடு கதவு ஒட்டி நின்று.

உடலோடு உடல் ஒட்டி அவளுடன் சேர்ந்து அந்த கதவில் சாய்ந்தவன்... "ஒருவேலையை சரியாக செய்யாத போதுதான் அதை பார்த்தது என்ன பண்ற என்று கேட்பார்கள் இல்ல?? அப்ப நான் சரியா முத்தம் கொடுக்கவில்லை என்று அர்த்தம் இல்லை?.." என்று திருத்தமாக கேட்டவன்

இவள் தலையை ஆட்டியப்படி ஏதோ பேசவர.. அவளுக்கு சந்தர்ப்பமே கொடுக்காது இதழ் முத்தம் பதித்தான்!!!

மீண்டும் அவளை விடுவித்த போது... இருவருக்கும் மூச்சு வாங்கியதோடு அவளின் கை அவனின் இடையோடு சுற்றி இருக்க... அவர்கள் இருவருக்கும் மத்தியில் காற்று புகக் கூட இடம் இல்லாது இருந்தது!!!

அவனின் முகத்தை பார்த்து "என்ன.. பண்ற.." என்று கேட்க ஆரம்பித்தவள்...பின் பாதியிலேயே நிறுத்தி "இப்ப எதுக்கு முத்தம் கொடுத்தாய்??" என்றாள் மூச்சு இரைக்க..

"ம்ம்... கணவன் மனைவிக்கு காரணம் சொல்லிவிட்டு தான் முத்தம் கொடுக்க வேண்டும் என்று எந்த ஒரு நவாப் சட்டத்திலும் இல்லை" என்றான் அவளை இன்னும் இருக்கி பின்னால் இருந்த கதவில் அவளை அழுத்தியப்படி.

மூச்சு முட்டியப்போது... "நீ மூச்சு காற்று இழுத்து விட்டால் கூட ஒரு காரணம் இருக்கும் என்று எனக்கு தெரியும்" என்றாள்

கண்களில் அவளை மெஞ்சுதலோடு பார்த்தவன்... "சரி நான் ஏதோ காரணத்திற்காக தான் முத்தம் கொடுத்தாகவே இருக்கட்டும் என்றே வைத்துக்கொண்டாலும்.. நீ ஏன் எனக்கு திரும்பி முத்தம் கொடுத்தாய் என்று சொல்" என்றான் அதிகாரமாக.

எதுவும் பதில் சொல்லாது... அமைதியாக அவனை முறைத்தப்படி நிற்க..... "உன்னால் பதில் சொல்ல முடியாது என்று எனக்கு தெரியும்.." என்று வெற்றி களிப்பில் பதில் அளித்தவனின் தீண்டலில் அவள் மெழுகாக உருகி கரைந்துக்கொண்டு இருக்க...

இன்னும் எத்தனை நேரத்திற்கு அவளின் இந்த மனோதிடம் நிலைக்கும் என்று தெரியாது திண்டாடியவள்...

"எனக்கு ரூம்மிற்கு போகனும்... தூக்கம் வருகிறது" என்றாள் அவன் பிடியில் இருந்து தப்பி விட்டால் போதும் என்று மனநிலைக்கு வந்திருந்தவள்...

முன்னிலும் அதிகமாக முகம் சிரிப்பில் விரிய... "ஏன் இதை பார்த்தால் ரூம் மாதிரி தெரியவில்லையா.. இல்லை.. அந்த கட்டிலை பார்த்தால்" என்று அவன் பேச வரும் போதே......

"கடந்த இரண்டு நாட்களாக நான் தூங்க வில்லை ரஃபிக்... ஐயம் டயர்ட்... ப்ளிஸ்.." என்றாள் நிஜமாகவே சோர்வாக...

அவளின் முகத்தை ஒரு நிமிடம் ஆழமாக பார்த்தவன் "ம்ம்..." என்று தலை ஆட்டி பெரு மூச்சுடவன் அவளை விட்டு பின் நகர.. அவனை நகர முடியாமல் தடுத்தது இடையோடு அணைத்து இருந்த அவளின் கைகள்!!!

மெல்லிய புன்னைகயோடு.. அவன் தலையை சரித்து அவளை பார்க்க... அவனை பார்க்காமலே அவன் பார்வையின் பொருளை உணர்ந்தவளுக்கு வெட்கம் பிடுங்க... அவசரமாக கையை எடுத்துக்கொண்டவளின் மனம் மணிக்கு நூறு கிலோ வேகத்தில் தாண்டி அடிக்கும் சூறாவளியாக சுழன்றி அடிக்க... அவன் முகத்தை நிமிர்ந்து கூட பார்க்காது..

"என்... ரூம்மிற்கு... போகனும்..." என்றாள் கிசுகிசுப்பாக.

அவளின் தோள்களை பற்றி திருப்பி விட்டவன்.. அங்கே கை போல் வடிவமைப்பில் இருந்த தாழ்ப்பாளை சுழற்ற... கிளிக் என்று சத்துடன் திறந்துக்கொண்டது கதவு........

தன் அறையின் கதவை திறந்தவள் நடுங்கும் கால்களால் இரண்டு அடி எடுத்து அறையின் உள்ளே வைக்க... மோஷன் சென்சார் கொண்ட விளக்குகள் பளீரிட......

"மேகி..." என்று மென்மையாக அழைத்து அவள் உள்ளே செல்வதை தடுத்து நிறுத்தியவன் "எந்த காரணம் கொண்டும் ஆமிரா நம் விஷயத்தை பற்றி வெளியே சொல்ல மாட்டாள்.. நம்மை பற்றி சொல்ல வேண்டு என்று நினைத்திருந்தால் கல்யாணம் ஆகும் வரை காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.. அதனால் எங்கே என் மச்சான்கள் என்னை அடித்து கை காலை உடைத்து விடுவார்களோ என்ற பயத்தை விட்டு விட்டு நிம்மதியாக தூங்கு" என்று வெகு சிரம்பட்டு அவன் அடக்கிய சிரிப்பின் வழியாக வார்த்தைகள் வெளியப்பட்டது!!!

அரண்டு போய் திரும்பி பார்த்தவளுக்கு அவனின் மந்தகாச சிரிப்புடன் அவளை பார்த்தப்படி நிற்க.. பட்டென்று தன் அறையின் கதவை அடைத்து அதன் மேல் சாய்ந்து நின்றவளின் காதில் அந்த பக்கம் இருந்த ரஃபிக் சிரிப்பும் பின் அவன் ஏதோ பாடல் ஒன்றை முனுமுனுத்தவப்படி நகர்வதும் நன்றாகவே காதில் விழ... எதை பற்றியும் யோசிக்க பிடிக்காது எழுந்து சென்று அப்படியே தன் கட்டிலில் விழுந்தால் மேக மித்ரா!!!

பத்து நிமிஷம் தன் இதயத்துடிப்பு சமன் ஆகும் வரை படுத்து கிடந்தவள்.. பின் மெல்ல தலையை உயர்த்தி அவளின்

ரூம்மை ஒரு பார்வையிட.. அங்கே யாரோ அவளுக்காக எடுத்து வைத்திருந்த இரவு உடையை கண்டு நிம்மதி மூச்சு விட்டவள் அடுத்த அரை மணி நேரத்தில் தன் உடைகள் மற்றும் நகைகளை களைந்து விட்டு படுக்க.. கடந்த இரண்டு நாள் தூங்காததால் தூக்க அவளை ஆட்க்கொள்ள.. அயர்ந்து தூங்கினாள்!!!

யாரோ தன் அறை கதவை திறந்துக்கொண்டு உள்ளே வரும் சத்தம் கேட்க.. விசுக்கென்று கண்களை திறந்து தலையை உயர்த்தி பார்த்தவளுக்கு முதலில் எங்கே இருக்கிறோம் என்ற புரியாது திகைக்க.. பின் மெல்ல நினைவிற்கு வர... அப்பொழுதுதான்... கதவை திறந்துக்கொண்டு உள்ளே வந்த இரண்டு வேலை ஆட்கள் இவளை இங்கே எதிர்பார்க்காத அதிர்ச்சியில் உறைந்து.. என்ன சொல்லி திட்ட போகிறாளோ என்று பயந்து போய் அங்கேயே நிற்க...

அவர்களின் பயத்தின் காரணம் புரிந்தாலும்.. எதுவும் பேசாது... கைக்கு இடையே ஒரு கொட்டாவியை விட்டப்படி உள்ளே வருமாறு கையை காட்டியவள்.. மெல்ல எழுந்து கண்களால் பாத்ரூம் கதவை தேடி கண்டுபிடித்து உள்ளே சென்றாள்!!!

அடுத்த ஒரு மணி நேரத்தில் குளிந்து விட்டு டிரஸ்சிங் ரூம்மில் இருந்த ஒரு நல்ல புடவையை உடுத்துக்கொண்டு கீழே

இறங்கி போது மணி கிட்டதட்ட ஒன்பதை தாண்டி இருக்க... இரண்டு நாள் பழக்கத்தில் டைனிங்க ரூம்மை நோக்கி நடந்தவளுக்கு வழி நெடுக்கிலும் வேலை செய்துக்கொண்டு இருந்த ஆட்கள் முதல் வீட்டில் தங்கி இருந்த விருந்தினர் வரை பரபரப்பாக திரிய இது பத்தாதற்கு செக்கியூரிட்டி சீப் பீட்டர் தன் போனில் யாரிடமோ கத்திக்கொண்டு இருக்க... எல்லோரும் ஒரு வித படப்படப்பொடு இருப்பது அப்பட்டமாக புரிந்தது...

ஏன் என்னாச்சு?? என்று நூறு கேள்வி மனதில் எழ.. யாரிடம் கேட்பது என்று யோசித்தப்படி டைனிங்க ஹாலை அடைந்தாள்.

அங்கே அலிகான் வம்சத்தின் இளவட்டங்கள் அவர்களும் அதே பரப்பரப்போடு சாப்பிட்டு கொண்டு இருப்பது தெரிய...

எல்லோருக்கும் பொதுவான காலை வணக்கம் வைத்தவள் "ஏன் எல்லோரும் ஒரு மாதிரி பதட்டத்தோடு இருக்காங்க??" என்றாள் மேகி.

"ஏன்னா இன்று ரிஷப்ஷன்" என்றாள் ஏதோ மேகி அறியாதது போல்.

"ஆமாம்... ஆனால் அது மாலை தானே.. அதுக்கு இப்ப எல்லோரும்...??" என்று நிறுத்தாமல் அவள் இழுக்க..

"இன்னும் கொஞ்சம் நேரத்தில் அது வந்து விடும்.." என்றாள் கண்களில் கனவு மின்ன அங்கே இருந்த ஒரு மங்கை.

"எது வந்துவிடும்??" என்று தனக்கு முன்னால் தட்டில் வைக்கப்பட்ட உணவை வாயில் வைத்தப்படி கேட்டாள் மேகி.

"உங்க புடவை.." என்றான் ஒல்லியாக இருந்த டீன் ஏஜ் பையன்.

தன் புடவையில் அப்படி என்ன இருக்க போகிறது?? இவர்கள் முன்னோர்கள் அடித்த மான் மற்றும் புலி தோலினால் செய்தது என்று அவளின் தொழிலுக்கு சற்றும் பொருந்தாத எதையாவது கொடுத்து கட்டு என்று சொல்லாத வரை தனக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்று மனது அடித்துக்கொண்ட போதும்.. அதை பற்றி மேலே எதையும் கேட்காது அமைதியாக சாப்பிட்டு விட்டு நகர்ந்தவளுக்கு மௌனிக்கா பத்திரமாக வந்துவிட்டாள் என்ற செய்தி கிடைத்தது.

அதன் பின் தன் பாபியின் உடல் நலத்தை பற்றி விசாரிக்க அவர்களின் அறை சென்றவளுக்கு... கீழே வரச்சொல்லி அத்தையின் அழைப்பு வரும் வரை அங்கேயே குடும்ப அங்கத்தினருடன் நேரம் கழிய.. மதியதிற்கு மேல் முதல் முறையாக அந்த புடவையை பார்த்தவளுக்கு இதை தான் கட்ட போகிறோமா என்று மயக்கம் வந்தது!!!

# அத்தியாயம் 29

**பா**பியின் உடல் நலத்தை பற்றி விசாரிக்க அவர்களின் அறை சென்றவளுக்கு... கீழே வரச்சொல்லி அத்தையின் அழைப்பு வரும் வரை அங்கேயே குடும்ப அங்கத்தினருடன் நேரம் கழிந்தது!!!

அத்தையின் அழைப்பை கேட்டு விழுந்தடிக்கொண்டு சங்கியும், மங்கியும் கிளம்ப.. அறையிலேயே இருந்து ஓய்வு எடுக்க சொன்னதை பிடிவாதமாக மறுத்துவிட்டு அலக்நந்தா எழுந்து தயாராக.. சிரித்தப்படி எல்லோரும் வெளியேறினர்!!!

ஆரியுடன் ஏதோ பேசியப்படி முன்னே சென்ற கார்த்திக் பட்டென்று தன் பேச்சை நிறுத்திவிட்டு புருவம் சுளித்து யோசித்தவன்.. பின்னால் திரும்பி நிரல்யாவை பார்த்தான்.

அத்தனை நேரம் பாட்டியுடன் நடந்து வந்தவள் இவன் பார்த்த அதே சமயம் அவளும் தலையை உயர்த்தி பார்க்க...

"ஓ!! நோ !!!" என்று வாய் தானாக முனுமுனுக்க.. "அண்ணா நீங்க போங்க நான் நிரல்யாவுடன் வருகிறேன்" என்று மொழிந்தவன் ஆரியின் தலை ஆட்டலை விடையாக பெற்றுக்கொண்டு பாட்டியுடன் வந்த நிரல்யாவின் அருகில் சென்றான்.

கார்த்திக் முக குறிப்பில் இருந்தே விஷயத்தை புரிந்துக்கொண்ட நாட் நாட் செவன்... இருவரையும் ஒரு மாதிரி பார்த்துவிட்டு நகர.. இந்த நிகழ்வை சற்று தூரத்தில் இருத்து பார்த்தப்படி மூத்தவனுடன் இணை சேர்ந்து பத்ரி..

"அவன் முகமே சரியில்லையே... என்னாச்சு??" என்று கார்த்திக் பற்றி விசாரித்தான் பத்ரி.

"உன்னை மாதிரிதான் நானும்.. ஒரு மண்ணாங்கட்டியும் புரியவில்லை.. கூர்கில் இருக்கும் காபி எஸ்டேட்டை பற்றி பேசிக்கொண்டு இருந்தவன்.. அப்புறம் திடீரென்று நான் நிரல்யாவுடன் வருகிறேன் என்று போய் விட்டான்" என்றான் கைகளை விரித்து.

"இவன் அவளை பார்க்க கூட மாட்டான்.. இருந்தாலும் ரேடாரே இல்லாது அவள் எங்க போனாலும் எங்க வந்தாலும் அவளை பற்றி எப்படி தான் தெரியுதோ?!?" என்று ஆச்சரியமாக பேசினான் பத்ரி.

"நிரல்யா மட்டும் என்னவாம்.. சின்ன வயதில் சங்கி.. மங்கியின் தொல்லை தாங்காது அவர்களுடன் கண்ணா மூச்சு ஆடும் போது... எதிரில் இருக்கும் கதவு சந்தில் மறைந்தாலும் கண்டு பிடிக்க முடியாதவளுக்கு... கார்த்திக் எந்த மர பொந்தில் சென்று மறைந்தாலும் நிமிஷத்தில் கண்டு பிடித்து விடுவாளே!!!" என்றான் ஆர்யா.

"ஆம்.." என்று போல் தலை ஆட்டிய பத்ரி எதையோ சொல்ல வாய் திறக்க.. அதற்கு எங்கிருந்தோ புயல் வேகத்தில்...

"ம்கூம்... மாட்டேன்.. மாட்டேன்..." என்று தன் பாட்டியின் இடுப்பில் இருந்து கத்தியப்படி இறங்கிய துர்வா அழுதப்படி ஓடி வர... அங்கே பத்ரி கண்டதும் "சித்தப்பா" என்று கண்களில் நீர் வடிய அவன் கால்களை கட்டிக்கொண்டான்.

அண்ணனின் மகனை அவசரமாக தூக்கிய பத்ரி..

"என்னடா ஆச்சு??" என்றான் கண்களை துடைத்து விட்டப்படி.

தன் சித்தப்பாவின் கழுத்தை கட்டிக்கொண்டு அருகில் இருந்த தன் அப்பாவை பார்த்தவனின் கண்களில் அருவியாக வந்த கண்ணீர் பட்டென்று நிற்க...

"நான்... பெரியவனானதும்... இதே மாதிரி கல்யாணம் பண்ணுவாங்களாம்... எனக்கு இப்படி வேண்டாம்" என்று மழலை குரலில் கண்ணீர் மல்க தெரிவித்தான்!!!

அதை கேட்ட அடுத்த நொடி சகோதர்களுக்கு சிரிப்பு பொங்கி வர... அடக்கியவர்கள்.. "ச்சீ.. இப்படி எல்லாம் நம் வீட்டில் நடக்காது.. நாம் இரவோடு இரவாக.." என்று பத்ரி தங்களின் வீர பரம்பரையை பற்றி ஆரம்பிக்கும் போதே..

அங்கே வந்த சௌவி... "பத்ரி அத்தான்.... அவனுக்கு ஐந்தரை வயதுதான் ஆகிறது.. சச்சிதேவ் குல வழக்கத்தை

வளர்க்க இன்னும் நிறைய ஆண்டுகள் இருக்கு.. அதுக்குள்ள என்ன அவரசம்??" என்று கேட்டபடி முன்னே போக..

சாகோதர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டவர்கள் சௌவி சொன்னதை பற்றி அக்கரையே இல்லாது... அவர்கள் வீட்டில் எப்படி திருமணம் நடக்கும் என்று அந்த சிறுவனுக்கு கீதா உபதேசத்திற்கு இணையாக "சச்சிதேவ் உபதேசம்" செய்துக்கொண்டு முன்னே நடந்தனர்!!!

அதற்குள் அவசரம் தாங்காத கார்த்திக்கோ "ரிசல்ட் வந்து விட்டதா?" என்று நேராக விஷயத்திற்கு குதித்தான்.

"ம்கூம்... இன்னும் பார்க்கவே இல்லை" என்றாள் கீழே குனிந்த தன் கை விரல்களை பார்த்தப்படி.

"ஓ!!!" என்று இழுத்தவன்.. பின் தாடையை தடவியப்படி "அப்ப வேற என்ன பிரச்சனை??" என்றான் அவளின் குனிந்திருந்த தலையை யோசனையுடன் நோக்கியப்படி.

"அக்காவும்... மாமாவும் இன்றைய விழாவிற்கு வருகிறார்களாம்" என்றாள் திக்கி தினறி.

"வாட்?? இப்ப அவர்கள் வரவில்லை என்று யார் அழுதது? ஏன் வரவேண்டும் இங்கே வர அவர்களுக்கு என்ன அவசியம்?" என்று நிறுத்தாமல் பொறிந்தான் அவன்.

மிரட்சியுடன் அவனை பார்த்தவள் "இருவீட்டினரின் அழைப்பை ஏற்று வருகிறார்கள்" என்றாள் மிக மிக மென்மையாக.

"இல்லன்னா மட்டும் உன் மாமாவிற்கு வர தெரியாதா?? அந்த ஆள் தான் தனக்கு லாபம் இல்லை என்றால் பெத்த அம்மாவையே ஏலம் விடும் ஆள்... இங்கே வந்தால் நாலு பெரிய ஆளுங்களை பார்க்கலாம்.. அவர்களுடன் கைகோர்க்கலாம் என்ற நினைப்பில் வருவார்" என்று பாம்பாக சீறினான்.

"என் அக்காவிற்காக" என்று அவனின் முகத்தை பார்த்து இழுக்க..

"உன் அக்காவிற்காக இல்ல நிரு.. உனக்காக.. உனக்காக மட்டும்தான் அந்த ஆளை பொறுத்து போகிறேன்.. ஆனால்... எத்தனை நாள் பொறுத்து போக முடியும் என்று தெரியவில்லை. அவனின் மூக்கு உடைய வேண்டாம் என்றால் என் முகத்தில் விழிப்பதை தவிர்க்க சொல்" என்று அழுத்தம் திருந்தமாக சீறினான்.

"ப்ளிஸ்... அப்படி எதுவும் செய்யாதே கார்த்திக்.." என்று அழ மாட்டாக குறையாக அவனிடம் கெஞ்சினாள்.

"ஞாபகத்தில் வைத்துக்கொள்ள நிரு.. எப்ப இருந்தாலும் அவனை..." என்று அவன் பல்கள் கடித்தப்படி சூளுரைக்கும்

போதே... அவர்கள் அருகில் கார்த்திக்கின் அப்பா வர... வாயில் வந்த வார்த்தைகளை அப்படியே விழுங்கியவன்.. அப்பா கேட்ட கேள்விக்கு பதில் சொல்லியப்படி செல்ல.. அவர்களுடன் "இன்று மாலை என்ன பூகம்பம் வெடிக்க போகுதோ.." என்று பயந்து நடுங்கியப்படி நடந்தாள் நிரல்யா.

ஒருவழியாக குடும்ப அங்கித்தனர் அவர்களை வர சொன்ன ஹாலுக்கு சென்று சேர... மொத்த அலிகான் ரத்தமும் அங்கே சூழ்ந்திருந்தனர்.

எதுக்கு இப்ப இத்தனை கூட்டம் அடுத்து என்ன சடங்கோ?? என்று அலுப்பாக பெரூ மூச்சு விட்டப்படி மங்கி நுழைய... அவளை தொடர்ந்து சங்கியும் நுழைந்தாள்.

சகோதரிகளின் வரவை கண்டது.. அந்த கூட்டம் அப்படியே பிரிந்து வழி விட.. அத்தையை தேடியப்படி சென்றவளுக்கு ஹாலி நடுநாயகமாக இருந்த சற்றே உயரிய சிம்மாசனத்தில் விரித்து வைக்கப்பட்டுந்த புடவை தான் கண்ணில் பட்டது!!!

தக்காளி சிவப்பில் இருந்த புடவையை வேடிக்கை பார்க்க தான் ஏன் இத்தனை பேர் அதை சுற்றி நிற்கிறார்கள் என்று புடவையை பற்றி பெரிய அறிவு இல்லாத அவளின் கத்துக்குட்டி கண்களுக்கே புரிந்தது!!!

அதற்குள் அங்கே வந்த காயத்திரி "வாம்மா.. வந்து இப்படி உட்கார்ந்து பார்" என்று அவளை அங்கே எதரில் இருந்த நாற்காலியில் உட்கார சொல்லி அழைக்க...

அதிர்த்தியில் இருந்தவள் அவர் சொன்ன இடத்தில் அமர்ந்தாள்!!!

தக்காளி சிவப்பில் இருந்த புடவையை கையை காட்டி "இதுதான் நீ உடுத்த போகும் புடவை... நூறு வருத்திற்கு ஒரு முறை நவாப்பிற்கு ஷர்வாணியையும், பேகத்திற்கு கல்யாண புடவையை நெய்வார்கள்... ஒரு புடவையை செய்ய குறைந்தது ஒரு வருடம் ஆகும்... கல்யாணத்திற்கு கூட இவ்வளவு கிராண்டாக இல்லை என்று தானே சந்தேகம் வருது.. ??" என்று அவளின் முகக் குறிப்பிலே கண்டு பிடித்தவர் "கல்யாணம் குடும்பத்தாருடன் மட்டுமே நடக்கும் ஆனா ரிஷப்ஷன்.. இவர்களின் பெருமையையும்... பரம்பரையும் உலக்கிற்கு பறைச் சாற்றும் வகையில் இருக்க வேண்டும் என்பதால் தான் இப்படி..." என்று விளக்கமாக மொழிந்தவர்...

அந்த புடவையின் ஒரு பகுதியை அவளிடம் எடுத்து கொடுத்து... இதில் இருக்கும் சர்தோஷி வேலையில் அசல் தங்கம் நூல் இழை சேர்த்து இருக்கிறார்கள்.." என்று கூறியப்படி "இதோ பார் என்று கைகளால் காட்ட.." கண்களை அகல விரித்து பார்த்தாள்..

கற்களால் மின்னிய அந்த புடவையில் வெறும் கொடி .. பூ .. இலை என்று மட்டும் இல்லை.. கீழே பாட்டர் போல் இருந்து பார்டர் இல்ல... சின்ன வட்ட வடிவில் இருந்த தங்க காசி சுற்றியிலும் சர்தோஷி வேலை செய்யப்பட்டிருக்க.. அங்கே பதிக்கப்பட்ட பளபளத்த முத்துகளும்... ஜோலித்த வைரங்களும்... அசலா? என்று கேட்க தேவையே இல்லை!!!

"இந்த புடவை இந்த விழாவிற்கு உடுத்த மட்டுமே வெளியே எடுப்பார்கள்... அப்புறம் இதை அப்படியே தகுந்த முறையில் பத்திர படுத்தி இதற்காக செய்யப்பட்ட லாக்கர் சென்று விட்டால்.. அத்துடன் அடுத்த கல்யாண விழாவிற்குதான் வெளியே எடுப்பார்கள்!!!" என்று கூறிய காயத்திரியின் கைகள் புடவையை வருட.. கண்கள் அவரின் திருமண நினைவுகளில் முழுகுவதின் அடையாளம் அப்பட்டமாக தெரிய.. மாமாவை ரொம்பவே மிஸ் செய்கிறார் என்று புரிய கனத்த மனத்துடன் கண்களை தாழ்த்தியவளுக்கு... அங்கே தெரிந்த டிசைன் கருத்தை கவர்ந்தது...

நான்கு பேர் தூக்கிய பல்லக்கில் நடுநாயகமாக கையில் மலரை முகர்ந்தப்படி அமர்ந்திருந்த ஒரு நவாப்பும்.. அவரின் அருகில் மிக அலங்காரத்துடன் அமர்ந்திருந்த அந்த மங்கையும் பார்த்த முதல் பார்வையிலேயே அவளின் கருத்தை கவர..

"அத்தை... இது.. இது.." என்று மேகி காயத்திரியை பார்த்து இழுக்க...

"நீ யூகித்தது ரொம்ப சரி... இதுதான் நவாப்பும், பாக்மதியும்... ஒவ்வொரு கல்யாண புடவையிலும் அவர்கள் வந்துவிடுவார்கள்!!!" என்று சிரித்தவர் "அவர்கள் நூறு வருஷம் வாழ்ந்தார்களாம் அதனால் அவர்களை போல் மணமான தம்பதியும் வாழ வேண்டும் என்று இந்த புடவையில் இருக்கும் எல்லா கற்களும் நூறு எண்ணிக்கையில் இருக்கும்!!!"

"வாட்??" என்று அதிர்ந்து கூவ..

"ஆமாம்... அதோ அங்கே பூ நடுயகமாக தெரியுது இல்லை.. அது பவழம்... அந்த இலையில் தெரிகிறது பார்... அது மரகதம்... அந்த மொக்கு கோமேதகம்.. இப்படி உலகத்தில் இருக்கும் எல்லா வகை கற்களும் இந்த வேலைப்பாடில் இருக்கும்" என்று சொல்லிக்கொண்டே போக.. மேகிக்கோ அடுத்த டிசைனை நொக்கியவளின் கண்களை விரிந்தது...

மிக மிக ரசனையுடன் வடிவமைத்திருந்த சர்தோஷி வேலையில் வைரங்கள் மின்ன இருந்த யானையும் அதன் மேல் உள்ள அம்பாரியில் நவாப்பும்... அவரிம் பேகமும் அமர்ந்திருக்க... அந்த பெண்மணியின் முகம் மட்டும் அல்ல தலை முடி கூட அத்தனை துள்ளியமாக வடிவமைத்து இருந்தது!!!

மணமக்கள் சென்ற யானைக்கு முன்னால் சென்ற குதிரை படை.. அதற்கு முன் சென்ற காலாற் படை அவர்கள் ஏந்தி சென்ற வாள் என்று ஒவ்வொரு சின்ன வேலைப்பாட்டிலும் கலைநயம் ததும்பியது என்றால் அதில் எல்லா வற்றிலும் பதித்திருந்த கற்களை காண இரு கண்களை போதவில்லை!!!

அப்போ குடை குடையாக கற்களை எல்லாம் கொட்டி கவிழ்த்த மாதிரி காடியாக இருந்தது என்றால் அப்படி இல்லாமல் திருத்தமாக தேவையாக இடைவேளையில்... அந்த புடவையில் கொடி.... பூ... இலை.. என்று சின்ன சின்ன மிக நுனுக்கமான வேலைப்பாட்டை பார்க்கவே நான்கு நாட்கள் ஆகும் என்றால்... அதில் பதிந்திருந்த வைரம்.. முத்து.. நவமணிகள் என்று பலதரப்பட்ட கற்களை காண சரியாக ஒரு மாதம் ஆகும்!!!

"இது சங்க மித்ராவுடயது" என்று வேறு ஒரு புடவை கை காட்டினார்!!!

கடல் நீலத்தில் இருந்த அந்த புடவையிலும் கண்களை பறிக்கும் இதே வேலைப்பாடுடன் காட்சி தர.. ஏன் செக்கீயூரிட்டி சீப் இத்தனை டென்ஷனாக இருந்தார் என்று இப்போ புரிந்தது!!!

"இதுவரை ஒரே சமயத்தில் இரண்டும் கல்யாணம் நடந்தது இல்லை என்பதனால் தான் நூறு வருவஷம் கடந்த பிறகும் கூட இந்த புடவையை நீ கட்ட போகிறாய்.. சென்ற ஆண்டு நெய்த

புடவையை சங்க மித்ரா கட்ட போகிறாள்" என்றார் பாதி சொல்லி மீதியை சொல்லாது விட்டுவிட்டவர்.

அதாவது அவனின் நிச்சயத்திற்கு பிறகு நெய்த சேலையை தான் இந்த நீல நிற புடவனை என்று அவள் உள்ளம் கூறியது.. ஆனால் அதை பற்றி மேலே எதுவும் பெரிதாக யோசிக்க தோன்றாது அவளின் புடவையை எடுத்து கையில் வைக்க.. எப்படியும் அந்த புடவை ஏழு கிலோவை தாண்டி இருந்தது!!!

இதை எப்படி கட்டிக்கொண்டு நிற்பது என்று உள்ளம் திடுக்கிட... சங்கியோ அடக்க மாட்டாது கொட்டாவி விட்டாள்!!!

"ஏய்... இப்படி நடுவில் நின்றுக்கொண்டு கொட்டாவி விடுகிறாய்??" என்று கிசுகிசுத்தாள் மேகி.

"நல்லகாலம் தூங்கி விழவில்லையே என்று சந்தோஷப்படு... ஒரு மனுஷி எத்தனைநாள் தூங்காமல் இருக்க முடியும் சொல்லு?" என்று அலுத்துக்கொண்டாள்.

"ஏன் என்னாச்சு??" என்று கேட்டவளை விசித்திரமாக பார்த்தாள் சங்கி.

"முதல் இரவு முடித்து விட்டு வந்தவள் மாதிரியா நீ பேசற??" என்று சங்கி சந்தேக கண்களுடன் பார்த்தாள்!!!

# அத்தியாயம் 30

"**மு**தல் இரவு முடித்து விட்டு வந்தவள் மாதிரி நீ பேசவில்லையே" என்று சங்கி சந்தேகக் கண்களுடன் பார்த்தாள்.

"அது முதல் இரவு முடித்து விட்டு வந்தவர்களுக்கு தானே??" என்று வாய் வரை வந்த பதிலை அப்படியே விழுங்கியவள்... முகத்தில் எந்த உணர்ச்சியும் காட்டாது...

"இரவில் என்ன நடந்தது என்று ஊருக்கே இப்படி கொட்டாவி விட்டு ஊருக்கே காட்ட வேண்டிய அவசியம் இல்லை சங்கி" என்றாள் கிசுகிசுப்பாக.

தலையை சரித்து அவளை பார்த்தவள்... "இதோ இங்கு நிற்கும் குட்டீஸ் தவிர... மற்றவர்கள் எல்லோரும் நேற்று இரவு நம்மை "வாழ்த்த" வந்தவங்க அவங்க எதுக்கு வாழ்த்தினாங்கன்னு நினைக்கிற??"என்றாள் வியாக்கானமாக.

"உனக்கு.." என்று மங்கி வாயை திறக்க..

"ஷ்ஷ்.. உங்க அத்தை ஏதோ சொல்றாங்க அதை கேட்காமல் இது என்ன கிசுகிசுன்னு பேசிக்கொண்டே இருக்கீங்க??" என்றார் அருகில் நின்ற அம்மா மல்லிகா.

இருவரும் அவசரமாக பேச்சை முடித்துக்கொண்டு அத்தையின் புறம் பார்வையை திருப்ப... காயத்திரி அங்கே இருந்த புடவையை காட்டி...

"நீங்க சாப்பிட்டு வந்து இதை எடுத்துட்டு போய் ரீசப்ஷனுக்கு தயாராகுங்க.. இங்க இருந்து நான்கு மணிக்கு எல்லாம் நாம் கிளம்பிவிடனும்... ஐந்து மணிக்கு ரிஷப்ஷன் ஆரம்பித்தால் எப்படியும் முடிய நள்ளிரவு இரண்டு மணிக்கு மேல் ஆகும்... பெரும்பாலும் வி.வி.ஐ.பி எல்லாம் நள்ளிரவில் தான் வருவாங்க... உங்களுக்கு சாப்பிடக் கூட நேரம் இருக்காது அதனால் மதியம் கொஞ்சம் நல்லா சாப்பிட்டுக்கொள்ளுங்கள்!!!" என்று விளக்கமாக சொல்லிவிட்டு அங்கே உள்ளே வந்த பீட்டரை கண்களை காட்டி விட்டு மருமகள்களை அழைத்துக்கொண்டு அங்கிருந்து நகர்ந்தார்.

"நீங்களும் போய் சாப்பிட்டு விட்டு இவர்களுடனே தயாரா இருந்தீங்க என்றால் அனைவரும் ஒன்றாக போய் விடலாம். இவர்களுக்கு என் அறை வரை வேலை இருக்கு" என்று சம்பந்தியிடம் கூறி விட்டு நகர... சகோதரிகள் இருவரும் என்ன என்று கேள்வி எழுப்பியப்படி ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு பின் தொடர்ந்தனர்.

"பீட்டர் அங்கே பாதுகாப்பிற்கு நின்றால்... யாரும் தப்பாக நினைக்க மாட்டார்களா அத்தை?" என்றாள் சங்கி புரியாத தன்மையோடு.

மெல்ல சிரித்தப்படி அவளை பார்த்த காயத்திரி "என்ன தான் இங்கே இருப்பவர்கள் அனைவரும் நம் நெருங்கிய சொந்தம் என்றாலும்.. சமயமும் சந்தர்ப்பமும் கிடைக்காத வரை அனைவரும் உத்தமர்களே.." என்று அன்று பாட்டி கூறியதை திரும்ப அப்படியே கூற திடுக்கிட்டு பார்த்தாள் மங்கி.

"அத்தை..." என்று தன் காதில் விழுவதை நம்ப முடியாது சங்கி கூவ..

"அவர்கள் நல்லவர்களாகவே இருக்கலாம் ஆனால் மனிதனின் பேராசையைத் தூண்ட இந்த புடவையில் இருக்கும் ஒரு சின்ன வைரம் போதும் சங்க மித்ரா.. அதன் சரித்திரத்தையும் பழமையை சொல்லி சில கோடிகளுக்கு விற்களாம் என்னும் போது... எதற்கு அப்படி ஒரு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும்?? எப்பொழுதும் நாம் தான் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.. யாரையும் எளிதில் நம்பி விடக் கூடாது... இந்த குடும்பத்தில் பதவிக்காகவும்.. நவாப் நாற்காலிக்காவும்.. சொந்த உடன் பிறப்புகளை கொன்று குவித்த ரத்த கரை படிந்த சரித்திரமும் இருக்கதான் செய்கிறது!!!"

அவர் பேசியதை அமைதியாக கேட்டப்படி வந்த மங்கி.. "அதனால் தான் அண்ணன் தம்பி இருவரையும் இவ்வளவு ஒற்றுமையாக வளர்த்தீங்களா அத்தை" என்றாள் தெளிவாக.

மருமகளை மெஞ்சுதலோடு பார்த்தவர்.. "ஒற்றுமை என்று சொல்வதை விட.. நம்பிக்கை என்று சொல்ல வேண்டும்... அவர்கள் அப்பா எப்பயும் ஒன்று சொல்லுவார்.. பால்கனியில் இருந்து கீழே குதி என்று இருவரில் யார் கூறினாலும் கண்களை திறந்தா இல்லை மூடிக்கொண்டா என்று கேட்கும் நம்பிக்கை வேண்டும் என்று கூறியதோடு மட்டும் இல்லாது அப்படியே வளர்க்கவும் செய்தார்... அதனால் தான்..."

நேற்று இரவு ரஃபிக் சொன்ன அதே வார்த்தையை கேட்டு அப்படியே ஷாக் அடித்து போய் அவள் அங்கேயே நின்று விட....

"ஏய்.. ஏன்டி இப்படி நிற்கிறாய்?? புடவை காலை தட்டுகிறதா??" என்று கேட்டு வைத்தாள் சங்க மித்ரா.

அவள் கேட்ட பிறகே தான் நின்று விட்டதை உணர்ந்தவள் ஆம் என்பது போல் எல்லா புறத்திலும் தலையை ஆட்டி மழுப்பலாக பதில் அளித்தவள் வேகமாக அத்தையின் பக்கத்தில் சென்றாள்.

மேக மித்ராவை கூர்ந்து பார்த்த காயத்திரி மேற்கொண்டு நடக்க... "இதுநாள் வரையிலும் சகோதரர்கள் மட்டுமே கூட்டாக

செய்து வந்த தொழிலில்... ஏற்காட்டில் இருக்கும் உங்க ஹோட்டலில் பத்ரிக்காக பார்ட்னராக சித் சேர... ஏன் எதற்கு என்று ரஃபிக் கேட்கவேயில்லை... பின் அது நஷ்டத்தில் நடந்த பொழுதும் கூட கேட்டுக்கொண்டது இல்லை.. பெற்ற மகனின் மனதில் என்ன இருந்ததை கண்டு பிடிக்க முடியவில்லை ஆனால் தம்பியின் மனதில் என்ன இருக்கு என்பதை விட யார் இருக்கிறார்கள் என்று ரஃபிக் கண்டு பிடித்தது தான் எனக்கு இன்னும் ஆச்சரியம்." என்று கூறியப்படி அவரின் அறைக்கு அழைத்து சென்றார்.

அவர்கள் அறையை போல் மிகவும் விஸ்தாரமாக இருந்த அறையை பார்த்தப்படி உள்ளே வர... முதல் ஹாலை தாண்டி.. அடுத்த ஹாலை தாண்டி அதற்கு அடுத்த அறையில் உள்ளே கால் எடுத்து வைக்க அங்கே ஏற்கனவே சித்தும், ரஃபிக்கும் திவான் நாற்காலியில் அமர்ந்து ஏதோ பேசிக்கொண்டு இருப்பது தெரிந்தது!!!

தாயை பார்த்தவுடன் இருவரும் எழுந்து நிற்க... "பீட்டர் எங்களை கூப்பிட்டதாக சொன்னான் என்று கூறும் போதுதான் அம்மாவிற்கு பின்னால் வந்த மனைவியை கண்ணுற்ற சித் அவளை கேள்வியுடன் நோக்கினான்.

தனக்கு ஒன்றும் தெரியாது என்பது போல் தலையை அவள் ஆட்ட... அருகில் இருக்கும் தன் அண்ணனை நோக்கினான்.

அவனும் யோசனையுடன் தன் மனைவியையும் அம்மாவையும் பார்ப்பது புரிய.. என்ன விஷயமாக இருக்கும் என்று யோசித்தப்படி கால் மாற்றி கால் நின்றப்படி தாயை பார்த்து நின்றான்.

"கொஞ்சம்.. உட்காருங்க" என்று எல்லோருக்கும் பொதுவாக சொன்னவர்... நடந்து போய் அங்கே இருந்த பெரிய லாக்கரை திறந்து இரண்டு பெட்டியை எடுத்துக்கொண்டு மீண்டும் லாக்கரை பூட்டிவிட்டு அவர்கள் இருக்கும் இடத்திற்கு வந்தார்!!!

எதிரும் புதிருமாக அமர்ந்திருக்க... அவரின் கையை பார்த்தவுடனே ஏதோ நகை பெட்டி என்று புரிய... சகோதர்களுக்கு விஷயம் புரிந்து விட்டது என்று முகத்திலேயே வெளிப்பட.. புரியாத பெண்கள் மட்டும் திருதிருக்க அமர்ந்தனர்.

சித்தை பார்த்து நீ இப்படி வந்து சங்க மித்ராவின் பக்கத்தில் உட்கார் என்று கூறிவிட்டு மங்கியை பார்க்க எதுவும் பேசாது அவள் எழுந்து சித் காலி செய்த இடத்தில் அமர.. சங்கியின் பக்கதில் அவன் அமர்ந்தான்.

இப்படி தம்பதிகளை அமர செய்ய காரணம் என்னவாக இருக்கும் என்று யோசனையுடன் அமர்ந்திருக்க....

முதலில் மூத்தவன் புறம் சென்ற காயத்திரி...

அவர்களிடம் ஒரு தங்கத்தில் வேலைப்பாடு செய்யப்பட்ட பெட்டியை நீட்டி... "இது நான் கல்யாணம் ஆனவுடன் என்

மாமியார் எனக்கு கொடுத்த பரிசு..." என்றப்படி அதை அவர்களுக்கு நீட்ட கணவனும் மனைவியும் ஒரே சமயத்தில் கையை நீட்டி வாங்கிக்கொண்டனர்.

"இதை என் அத்தை என்னிடம் கொடுக்கும் போது ஒன்றை மட்டும் தான் சொன்னார்.. அதை அவர்கள் அத்தை அவர்களுக்கு சொன்னார்களாம்" என்று பீடிகையோடு கூறியவர்... "இதற்குள் உள்ளே இருப்பதை விட என் மகன் மிக மிக மிக உயர்ந்த பொக்கிஷம்..." என்று அர்த்தமாக மொழிந்தவர்... அப்படியே ரஃபிக்கின் புறம் திரும்பியவரின் கண்களில் லேசாக நீர் திரையிட "இதை உன் அப்பா சொல்ல வேண்டும் ரஃபிக்... ஆனால் அவர் இடத்தில் இருந்து நான் உனக்கு சொல்கிறேன்...

"உன் மனைவிக்கு நான் கொடுத்த வாக்கை காப்பாற்றும் பொறுப்பு உன்னுடையது..." அதாவது.. அந்த பெட்டிக்குள் இருப்பதை விட கிடைத்தற்குரிய பொக்கிஷம் நான் என்பதை தன் மனைவிக்கு உணர்த்த வேண்டும்... என்று லேசாக தொண்டை கமற அவர் கூற... வேகமாக எழுந்து தன் அன்னையை அணைத்தான் ரஃபிக்.

முழுதாக ஒரு நிமிடம் ஆனது அவர்கள் பழைய நிலைக்கு மீள...

மெல்ல தன்னை விடுவித்துக்கொண்ட காயத்திரி.. அந்த தங்க பேழையை திறக்க சொல்ல...

மங்கியின் அருகில் அமர்ந்து இருவரும் சேர்ந்து திறக்க...

அதன் உள்ளே வெல்வெட் துணிக்கு மேலே மிக மிக மெலிதான வைரம் பதித்த சின்ன சங்கிலியில் நடுநயகமாக பதிக்கபட்டு இருந்தது பிங்க் டைமண்ட்!!!

ஓவல் வடிவில் பிங்க் நிறத்தில் இருந்த அந்த வைரத்தை சுற்றி... பொடி வைரங்கள் பதித்திருந்த போதும்... அந்த செயின் முழுவதும் கலங்கமற்ற தூய்மையான வெள்ளை நிற வைரங்கள் ஜோலித்த போதும்... அந்த நெல்லிக்காய் அவளவில் இருந்து பிங்க் வைரம் பௌணமி நாட்களில் மின்னும் நட்சித்திரங்களுக்கு மத்தியில் வீற்றிருக்கும் நிலவாய் மின்னியது!!!

அறிதாக கிடைக்கும் விலை மதிப்பில்லாத பிங்க் டைமண்ட் பற்றி படித்திருந்தவளுக்கு அதை பார்த்தவுடனே தெரிந்துவிட்டது இது ஏதோ மிக மிக அறிய வகை பிங்க் டைமண்ட் என்று!!!

"இது???" என்று கேட்டப்படி அவள் அத்தையை தலை உயர்த்தி பார்க்க..

"அதற்கு "ISHQNOOR" என்று பெயர்... எல்லோருக்கும் கோகினூர் டைமண்ட் பற்றி தெரியுமே... தவிர அதே இடத்தில் உலகிலேயே மிக மிக அறிதாக கிடைத்த பிங்க் டைமண்டை பற்றி அவ்வளவாக வெளியே தெரியாது!!! இதை போலவே கிடைத்த மற்றொரு டரியா ஐ நூர்(DARIA-I-NOOR) என்று

அழைக்கபடும் பிங்க் டைமண்ட் இரான்னில் அரச பரம்பரையில் இருக்கிறது!!!" என்று மொழிந்தவர்..

"இதை ஆண்டு அனுபவிக்கும் உரிமை எவ்வளவு இருக்கோ.. அதே போல் இதை அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்லும் கடமையும் உங்களுக்கு இருக்கு... இதை உன் கையில் கொடுத்ததோடு என் முப்பதி இரண்டு வருடத்திற்கு முன்பு என் அத்தை என்னிடம் ஒப்படைத்த கடமையை நிறை வேற்றிவிட்டேன்.." என்று சந்தோஷமாக மொழி விட்டு எதிரே இருந்த சித்திக்கை பார்க்க சென்றார்.

அவர்களிடம் இதே போல் ஒரு பேழையை கொடுக்க... அதில் இதே போல் வைரத்திலானா செயினும் அதில் கீழே நீல நிற டைமண்டும் தொங்கியது!!!

சதுர வடிவில் மேலே மட்டும் சின்ன தங்க முகப்பில் வைரம் பதித்து அதை சற்றே பெரிய வைரங்கள் பதித்த சங்கிலியில் கழுத்தை ஒட்டி அணியக்கூடிய வித்தில் இருந்த அந்த நீல நிற வைரம்.. அது வெட்டப்பட்ட விதத்தாலும்.. விளக்கின் ஒளியாலும் ஒளிரவில்லை... மின்னலாய் மின்னி பார்ப்பர்களின் கண்களை குருடாக்கியது என்றால் அது மிகை ஆகா!!!....

அதை பார்த்த ஷாக்கில் எதை பற்றியும் கேட்க வராது வாயை திறந்து சங்கி பார்க்க...

மூத்த தம்பதியிடம் சொன்னது போல் இளைய தம்பதியிடம் தெளிவாக சொன்ன காயத்திரி... "பார்ப்பதற்கு அச்சு அசல் ஹோப் டைமண்ட் மாதிரி இருக்கும் இதுவும் அதே சுரங்கத்தில் கிடைத்ததுதான்.. என்ன அந்த வைரம் படை எடுப்பில் சிக்கி.. இப்ப ஸ்டேட்ஸில் ஒரு மியூசியத்தில் உட்கார்ந்திருக்கு... நம் சுரங்கத்தில் இருந்து எடுப்பப்பட்ட இதை தக்க வைத்துக்கொள்ளவும் எதிராலியிடம் இருந்து... அதை காப்பாற்ற எத்தனை பேர் எப்படி எல்லாம் கஷ்டப்பட்டாங்கன்னு சொல்ல வார்த்தைகள் இல்லை!!" என்று அவர் சங்கியிடம் விரிவாக கூறியது எதுவும் தன் கையில் இருந்த வைரத்தை பார்த்தவளுக்கு பயத்தில் காதிலேயே விழவில்லை!!!

"இதை அணிந்துக்கொண்டே ஆகனுமா??" என்று கிசுகிசுத்தாள் அருகில் இருந்த ரஃபிக் இடம் குரல் நடுங்க.

"ஏன்?? எங்க தொலைந்து விடுமோ என்று பயப்படுகிறாயா??" என்று இடக்காக அவன் கேட்க...

பதில் சொல்லாது ப்ளூ டைமண்ட் மாதிரியே கழுத்தை ஒட்டி போடும் அவளவில் இருந்த அந்த மாலையை கைகள் எடுத்து தன் கண்களுக்கு முன்னால் தொங்க விட... லேசாக ஆடிய மாலையில் இருந்த பிங்க் வைரம்... அந்த சின்ன அசைவிற்கே எட்டு திக்கிலும் இருந்து வர்ணங்களை வாரி

அவள் முகத்தில் வீச... அதை பார்க்க.. பார்க்க மனதின் பாரம் கூடியது!!!

"அதை விட விலை உயர்ந்தவன் நான் என்று இப்ப தானே அம்மா சொன்னாங்க??" என்று கேட்க.

தன் பயம் எல்லாம் பின்னுக்கு தள்ளப்பட அவனை முறைத்தாள்!!!

அதற்குள் காயத்திரி "இதை எடுத்துக்கொண்டு போய் உங்க ரூம்மில் வைத்து மீண்டும் கீழே இறங்கி வருவதற்கு எல்லாம் நேரம் இல்லை அதனால் இப்படியே போய் சாப்பிடுங்க.. இப்ப என்னோடு இருக்கட்டும் தயாரான பின் சொல் அதை உங்கள் கணவரிடம் கொடுத்து அனுப்புகிறேன்" என்று கூறிவிட்டு அதை வாங்கி அவர் பூட்டிவிட்டு எல்லோருமாக டைனிங் ஹாலிற்கு விரைந்தனர்.

மூத்த தலை முறையினரும் பெரும்பாலும் சாப்பிட்டுவிட்டு எழுந்திருக்க.. சற்றே மத்திய வயதில் இருந்தவர்கள் சாப்பிட்டுக்கொண்டு இருக்க.. இவர்கள் வருவதை கண்டு அவர்கள் சிரித்தப்படி தலையாட்டி விட்டு உண்டனர்.

இவர்கள் இடத்தில் அமர்ந்தவுடன் மடமடவென்று தட்டுக்களை நிரப்ப.. அந்த வைரத்தையும் அதை தொடர்ந்த பேச்சேயும் கேட்டதில் இருந்து ஏதோ பேய் அரைந்த மாதிரி திகில் வந்து அவளை கவ்வி இருக்க... ஒரு மாதிரி மயக்கத்தில்

என்ன செய்கிறோம் என்று புரியாத நிலையில் என்னத்தை வாயில் வைத்தாள் என்று கூட தெரியாது அவள் தட்டில் வைத்ததை எல்லாம் விழுங்கிக்கொண்டு இருந்தாள்!

அப்படி உன்னும் உணவின் ருசியே தெரியாது... உள்ளே ஆர்ப்பரிக்கும் பேரலையை வெளியே காட்டாது வெகு அமைதியாக சாப்பிட்டுக்கொண்டு இருந்தவளின் கையை பக்கத்தில் இருந்தவன்

பட்டென்று அவள் கையை பிடித்து தடுத்தான் ரஃபிக்..

என்னவென்று தெரியாது ஏன் கையை பிடிக்கிறான் என்றும் புரியாது அவனை பார்த்து விழிக்க...

"என் தட்டில் இருந்து எடுத்து சாப்பிடுவதில் எந்த ஆட்சேபனையும் எனக்கு இல்லை ஆனால் நீ சாப்பிடுவது மட்டன்..." என்று அவன் சொல்லி முடிக்கும் முன் தன் கையில் பார்வையை திருப்ப... அவன் சொல்லுவது போல் அவள் கையில் மட்டன் துண்டுகள் இருக்க. அவளையும் அறியாது பட்டென்று விரல்களை விடுவிக்க.. அந்த மட்டன் துண்டு நேராக அவளின் தட்டில் விழுந்தது.

சங்கி சித் மட்டும் இல்லை அங்கே அமர்ந்திருந்த அனைவரும் என்ன நடக்கிறது என்று வேடிக்கை பார்க்க... என்ன பதில் சொல்லி சமாளிப்பது என்று தெரியாது தர்ம

சங்கடத்தில் நெளிய.. அதற்குள் யாரோ வந்து அவள் தட்டை எடுத்ததோடு கை கழுவ ஃபிங்கர் பவுலையும் வைத்தனர்.

எதுவும் சொல்லாது அமைதியாக கழுவிட்டு எழ... முயற்சிக்க.. "உட்கார்ந்து சாப்பிடு.. இரவு சாப்பிட முடியாது.." என்று எதுவுமே நடக்காதது போல் ரஃபிக் சொல்ல.. அனைவர் முன்பும் சண்டை போட பிடிக்காது அமைதியாக மீண்டும் உட்கார்ந்து உண்ண தொடங்கி இந்த முறை தட்டில் இருந்து தலையை கூட உயர்த்த வில்லை!!!

"என்ன மேகி என்னை கொட்டாவி விட்டதற்கே எல்லோரும் என்ன நினைப்பார்கள் என்று நிற்க வைத்து பாடம் அடித்தாய்.. இப்ப நீ என்னடான்னா.. தூக்க கலக்கத்தில் யார் தட்டில் இருந்து எடுத்து சாப்பிடுகிறோம் என்று கூட தெரியாத இப்படி சாப்பிடுகிறாய்??" என்ற சீரியஸாக கேட்டு சிரிப்பலையை கிளப்பி விட..

தமிழ் புரியாதவர்கள் என்னாச்சு என்று தெரிந்தவர்களிரிடம் கேட்க... அவர்கள் அதை மொழி பெயர்க்க.. அது மொத்தம் ஒரு ரவுண்ட் வருவதற்க்குள்.. அங்கே இருந்த அனைவரின் முகத்திலும் பிரகாசமான புரிதலும் அதை ஒட்டி ஒரு புன்னகையும் தவழ எல்லோரும் உண்டனர்.

ஆனால் மேகியோ எதையும் கவனிக்காது வெட்கம் பிடிங்கி தின்ன... இங்கிருந்து தப்பிக்கலாம் என்றால் இவனோ விட

மாட்டேன் என்கிறானே என்று மனதால் புழுங்கியப்படி.. தலை குனிந்து உண்ண தொடங்கினாள்.

"எதை நினைத்து இப்படி டென்ஷன் ஆகிறாய் பேகம் மேக மித்ரா அல்வுமர் அலிகான்??" என்று கேட்டான் அவளின் மணாளன்.

அதை அவன் கேட்ட விதத்திலும் கேட்ட பட்ட குரலும் அவளுக்கு ஆயிரம் பொருளை விளங்க... வீணாக அனைவரின் முன்பும் வம்பை வளர்க்க விருப்பமில்லாது எதுவும் பேசாது குனிந்த தலை நிமிராது கண்ணும் கருத்துமாக உண்ண..

"காதலையும் அன்பையும் பறைசாற்றும் பிங்க் டைமண்ட் பார்த்து இப்படி எல்லாம் பயப்பட மாட்டாய் என்று தெரியும்.. அப்ப எதற்காக ஓ!!! அடுத்த தலை முறைக்கு அதை எப்படி கொடுக்க வேண்டும் என்று சொன்னதை நினைத்தா??" என்று அர்ஜூனின் அம்பாக வந்தது அவனின் கேள்வி.

எமகாதன் தன் மனதில் இருப்பதை கண்டு பிடித்துவிட்டானே என்று புலம்பியப்படி வேண்டும் என்றே அவன் சொன்னது எதுவுமே காதிலேயே விழாதது போல் தட்டில் இருந்ததை எல்லாம் வாயில் வைத்து தினித்துக்கொண்டு இருக்க...

சற்றே அவள் காதருகே குனிந்தவன்.. "இந்த சின்ன விஷயத்திற்கு எல்லாம் பதட்டப்படாதே மேகி.. இன்னும் ஒரே மாதத்தில்...உன்னை" என்றான் விஷமமாய் பேச..

ஐய்யோ என்ன சொல்ல வருகிறான்... வாக்கு கொடுத்து விட்டால் அந்த விஷயத்தில் இருந்த மாற மாட்டானே என்று பீதியில் தொண்டையில் இருந்த உணவு சிக்க.. புரையேறியது... இதற்காகவே காத்து இருந்தது போல் அவள் தலையில் வேகமாக இரண்டு தட்டு தட்டி தண்ணீரை எடுத்து கொடுக்க... எதுவுமே சொல்லாது மடமடவென்று குடித்து விட்டு அவனை பார்த்தாள்!!!

அவள் அப்படி பார்ப்பதற்காகவே காத்திருந்தவன் போல் கண்ணுற்றவன்...

"ஒரே மாதத்தில்" என்று மீண்டும் விட்ட இடத்தில் இருந்தே ஆரம்பிக்க...

"இதற்கு மேல் எதையும் சொல்லாதே" என்றாள் சீற்றத்துடன்.

"ஏன்??இதில் என்ன இருக்கு..?? இன்னும் ஒரு மாதம் வரை இப்படி தான் இருக்கும் அதன் பிறகு நம்மை கண்டுக்கொள்ள மாட்டார்கள் என்று சொல்ல வந்தேன்... ஏன் நீ என்னவென்று நினைத்தாய்??" என்றான் விஷயமாய்.

"ம்ம்.. வெங்காயத்தை நினைத்தேன்" என்றாள் எரிச்சலாக.

"அதை ஏன் நினைக்கவேண்டும் அது தான் உன் தட்டிலேயே இருக்கே என்று கையை காட்ட...

கண்ணில் கொலை வெறியுடன் அவனை பார்த்தாள்

"வாவ்... என்னை பார்த்து என்ன மாதிரி ஒரு ரோமான்ட்டிக் லூக் விடுகிறாய் என் பேகம்?" என்றான் கண்களில் நக்கல் வழிய.

"போடா" என்று சொல்லாத குறையாக அவனைப் பார்த்து விட்டு தன் தட்டில் கவனத்தை திருப்ப நினைக்க பின் ஏதோ நினைவிற்கு வந்தவளாய்.. அவன் புறம் திரும்பி.. "ஒழுங்கு மரியாதையாக உன் தட்டை பார்த்து சாப்பிடு இல்ல சங்கி செய்த கீமா சமோசா இன்னும் மிச்சம் இருக்காம் அதை கொண்டு வந்து தட்டில் வைக்க சொல்வேன்" என்றாள் விவகாரமாக.

"ஏன் சங்க மித்ரா சமைக்கனும்...??"

"உங்க நூற்றி எட்டு கசின்களில் ஒருத்தி மெகந்தி விழா அன்று நயிட் ரொம்ப படுத்தினாள்... நான் தான் முன்பே சொல்லி வைத்திருந்தேன்.. எதாவது பேசி வாயை பிடுங்குவாங்க... ஆனால் தயவு செய்து வாயை கொடுக்காத... நாம் அந்த வீட்டில் வாழ போகிறவர்கள் அவர்கள் தங்க வந்திருக்கும் விருந்தாளிகள் சமயம் வரும் போது பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லி இருந்தேன்.. அதனால் தான் மருதாணியிட்ட கையால் அவள் முகத்தில் பிசையாமல்

அமைதியாக இருந்தால்.. இப்ப சமயம் கிடைத்து விட்டது பழி தீர்த்துக்கொண்டாள்" என்றாள் சர்வ சாதாரணமாக.

கண்களில் தெளிவு பிறந்த போதும் "எப்படி??" என்றான் அவளை பார்த்தப்படி.

"இதில் என்ன சிதம்பர ரகசியம்.. அவளுக்கு கீமா சமோசா பிடிக்கும் என்று கேள்வி பட்டு சங்கியின் விங்கில் புதிதாக கட்டி இருந்த கிட்சனின் அதை செய்து வேலை ஆட்கள் மூலமாக ரூம்மிற்கு அனுப்பி இருக்கிறாள்... சோ.. அம்மணிக்கு பின்னால் நிற்காமல் போவதால் உலகமே திரண்டு வரவிருக்கும் இன்றைய விழாவிற்கு அவளால் வர முடியாது... இது சச்திதேவ் இடம் விளையாடினால் வரும் பிரச்சனை" என்றாள் பெருமை பீத்தலாக.

"ஓ!!!" என்று அவள் புறம் நன்றாக திரும்பியவன்... உன்னில் இருக்கும் சச்சிதேவ் ரத்தத்தை மதிக்கிறேன்.. ஆனால் நீ இனி சச்சிதேவ் இல்லை அலிகான்... பேகம் மேக மித்ரா அல்வுமர் அலிகான்.." என்று தெளிவாக கூறியவன் "அதை மறந்துவிடாதே.." என்று அவளை விளையாட்டாகவே எச்சரித்துவிட்டு "இதே சூழலை எப்படி அலிகானாக கையாள்வது என்று சொல்கிறேன் கேளு... அவள் சொன்னது காதில் விழாதது போல் நகர வேண்டும்..." என்று அவன் சொல்லிக்கொண்டு இருக்கும் போதே அவன் செல் போன்

அடிக்க அவளிடமும் அம்மாவிடமும் தலையை ஆட்டிவிட்டு எழுந்து சென்றான்.....

"அப்பாடா..." என்று மங்கி நிம்மதி பெரு மூச்சு விடும் போதே....

"இந்த ஒரு வாரமாக போன் தொல்லை இல்லாமல் இருந்தது.. இனி நேரம் காலம் இல்லாமல் அடித்துக்கொண்டே இருக்க வேண்டியதுதான்" என்று காயத்திரி புலம்பினார்.

சிரித்தப்டி தலையை ஆட்டிய சித்.. ஏதோ நினைவிற்கு வந்தவனாக "ஏய் மௌனிக்காவிடம் இருந்து கால் வந்தது.."

"ஏன் என் போனை எடுக்கவில்லையாம்??" என்றாள் பரப்பரப்பாக.

"வாக்கிங் போய்..." என்று அவன் சொல்லிக்கொண்டு இருக்கும் போதே..

"வாட் வாக்கிங்கா அவளாக..?? என்று சந்தேகமாக இழுத்தவள் அவர்களின் ரீஷப்ஷன் நடக்கவிருக்கும் இடத்தில் நூற்றுக்கணக்கான விருந்தினர் தங்கி இருக்கும் அந்த இடத்தில் அவள் அப்படியெல்லாம் போக மாட்டாளே" என்று சங்கி இழுக்க...

"இப்படி எல்லாம் என்னை கேட்காதே அவள் சொன்னதை தான் சொல்கிறேன்.. நன்றாக இருக்கிறாளாம்... நீ எத்தனை

மணிக்கு வருகிறாய் என்று கேட்டாள்.. நான்கு மணிக்கு மேல் என்று சொல்லிவிட்டேன்..."

"அப்படியே.." என்று அவள் ஆரம்பிக்கும் போதே...

"ம்ம்.. நீ கொடுத்த அனுப்பி இருந்த புடவையும் நன்றாக இருந்ததாம் இருந்தாலும் இத்தனை விலை உயர்ந்த புடவை தேவையில்லை என்று சொல்லிவிட்டு நன்றி கூறினாள்"

"அவள் எப்பயும் அப்படிதான்.." என்று சங்கி சொல்லியப்போதும்.. ஏனோ மனது தன் தோழி திருமணம் ஆகாது.. ஐந்து மாதம் கர்ப்பமாக இருக்கும் அவளை நினைத்து மனம் சலனப்படதான் செய்தது.

ஒருவழியாக எல்லோரும் சாப்பிட்டுவிட்டு எழுந்து செல்ல... விருவிருப்பாக ரீஷப்பஷன் முடிந்து விடாதா என்று மனது ஏங்கினாலும்.. அப்படியெல்லாம் நடக்கவுமில்லை... அதை விட முக்கியமாக அப்படி முடியவுமில்லை...

அத்தை சொன்னது போல் பீட்டரின் பாதுகாப்பில் இருந்த புடவையை எடுத்துக்கொண்டு தத்தம் அறைக்கு செல்ல... அவள் கண்மறையும் வரை அவளையும் அவளின் கையில் இருந்த புடவையும் ஆமிரா வெறுப்பு பொங்க பார்த்துக்கொண்டு இருந்ததை கவனிக்கவில்லை... ஒரு வேலை கவனித்து இருந்திருந்தால் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருந்திருக்க கூடும்!!!

அறையில் தயார் படுத்த காத்திருந்த மேக் கப் கலைஞர்கள் அடுத்த இரண்டு மணி நேரத்தில் அவளையும் அந்த புடவையும் மடிப்பு கலையாது உடுத்தி ஒப்பனை என்று எதுவும் பெரிதாக செய்யாது.. அவளின் நீண்ட முடியை நேர்த்தியாக புதுவிதமாக பின்னலிட்டு.. தலை அலங்காரமும் என்று பெரிதாக எதையும் வைக்காது... புடவையை அன்று மணநாளில் கட்டியது போல் கட்டிவிட... அந்த புடவையின் பாரம் தாங்காது அவளுக்கு மூச்சு முட்டியது!!!

ஒருவழியாக எல்லாம் சரிபார்த்து அவர்கள் கடைசி டச் அப் கொடுத்துக்கொண்டு இருக்கும் வேளையில் தான் அவர்களின் டிரஸ்சிங் ரூம்மின் கதவை திறந்துக்கொண்டு தங்க நிறத்தினால் நீண்ட ஷர்வாணியும்... மெரூன் நிறத்தில் பேன்ட்டும் அதே மெரூன் நிறத்தில் தலைக்கு பாகை அணிந்து.. நான்கு வரிசை பெரிய நன்முத்து அணிந்து கையில் அந்த தங்க பேழயை எடுத்து வந்தான் ரஃபிக்.

மேக மித்ரா ஆடையை உடுத்தி இருந்த விதமும்.. அதில் தெறித்த கற்களும்... வானத்தில் இருந்து வந்த அப்சரஸாக தெரிந்தாள்!!!

இவனை கண்டது சலாம் வைத்தவர்கள் அங்கிருந்து வேகமாக கிளம்ப... கிட்டே வந்து அவள் கையில் அதை

கொடுக்க ஒரு பெரும் மூச்சுடன் அவளும் அதை வாங்கிக்கொண்டாள்.

கைகள் நடுங்க அதை திறக்க முற்பட... அவளின் பயனற்ற முயற்சியை பார்த்தவன்.. அவளிடம் இருந்து அதை வாங்கி திறந்தான்.

ஜன்னல் வழியாக வந்த சூரிய ஒளியில் கதிர் வீச்சில் இன்னும் பன்மடங்கு நிறங்களை வாரி இறைத்த அந்த பிங்க் டைமண்டை பார்த்தவளுக்கு வயிற்றுக்குள் பிரளையம் அடிக்க... அதை கையில் எடுத்தவன் அவளை திரும்ப சொல்லி கழுத்தை ஒட்டி இருந்த சின்ன சங்கிலியை அணிவித்தான்!!!

"இது.. இது..." என்று அவள் மூச்சு இறைக்க கேட்கும் போதே...

"மேகி.." என்று அழுத்தம் திருத்தமாக அழைத்தப்படி எதிரே இருந்த கண்ணாடியில் அவளை பார்த்தவன் "நம் எதிர்காலம் எப்படி இருந்தாலும் என் மனைவி என்ற முறையில் இதை அணிய உனக்கு முழு உரிமை இருக்கு" என்று அவன் கூறி முடித்தான்.

கண்ணாடியின் வழியாக லேசாக தலை ஆட்டி விட்டு அவன் கொடுத்த அடுத்த பெட்டியை வாங்கி திறந்து பார்க்க.. அந்த பிங்க் டைமண்ட் ஏற்றாற்போல் மேட்சாக இருந்த சின்ன

காதணி மற்றும் கையில் அணிவதற்கு இருந்த பிரேஸ்லட் மற்றும் கல் பதித்த மிக சன்னமான வாட்ச் அதில் இருக்க...

ஏற்கனவே அதிக வேலைப்பாட்டில் இருந்த சேலைக்காக மிதமான நகைகளை அணிய வைத்த அத்தைக்கு நன்றி சொல்ல வேண்டும் என்று நினைத்துக்கொண்டவளை ஒரு மார்க்கமாக பார்த்துக்கொண்டு இருந்த ரஃபிக்கை பற்றி அவள் எண்ணவில்லை.... எண்ண விரும்பவில்லை..!!!.

"போகலாமா??" என்று கேட்டுக்கொண்டு இருக்கும் போதே அவனுக்கு போன் வர... ஏதோ பேசியப்படி அவன் முன்னே போக.. அவன் பின்னாடியே அவளும் வெளியேறினாள்.

பாதுகாப்பு காரணங்களுக்காக அண்ணனும் தம்பியும் வெவ்வேறு காரில் வரும் படி முன்பே பீட்டர் ஏற்பாடு செய்து இருந்ததால்... இவர்களுக்கு முன்பே சித் மற்றும் சங்கி ஜோடி கிளம்பி செல்ல... இவர்களுடன் அத்தை காயத்திரியும் சேர்ந்து வர... ரஃபிக்கோ காதில் வைத்த போனை தவிர உலகத்தில் எதுவுமே இல்லை என்பது போல் மண்டபம் வந்து சேரும் வரை பேசிக்கொண்டு வந்தான்.

கீழே இறங்கி அவர்களின் மாளிகைக்குள் நுழைந்தவளுக்கு ஏதோ டைம் மிஷினில் ஏறி அமர்ந்து பதினாறாம் நூற்றாண்டிற்கு நுழைந்தது போல் ஒரு மாய திரையை அந்த ஹோட்டலாக மாற்றப்பட்டிருந்த அரண்மனையாக கொடுக்க.. அங்கே ஆயிரம்

பேர் ஒன்றாக உட்காரக் கூடிய பார்ட்டி ஹாலில்.. பூக்களில் ஜோடிப்புகளும்... வித விதமான வண்ண விளக்குகளின் அலங்காரமும் கண்களை பறிக்க... அதை எல்லாம் தூக்கி எரிவது போல் முதல் மாப்பிள்ளையும் பெண்ணும் மேடையில் ஏற... தங்க செயின் நடுவே வைர பதக்கம் வைத்தது போல் அவர்களின் வருகை அந்த மேடையையே தூக்கி நிறுத்தியது.

அவர்களை தொடர்ந்து மேடை ஏறிய இளைய ஜோடியும்... அந்த வைரத்தின் இடையே வைத்த முத்துவை போல் பிராகாசித்தனர்.

ரஃபிக்கின் குடும்பத்தினர் அவர்களுக்கு முன்பே வந்து அங்கே காத்து இருக்க... முதலில் வந்த அவனின் பெரிய தாத்தாவும், பாட்டியும் வாழ்த்தி விட்டு படி இறங்க... அடுத்தாக எல்லா குடும்ப அங்கத்தினரும் மேடை ஏறி வாழ்த்த.. இடையில் வந்த ஆமிரா...

"நீ நவாப் பக்கம் நின்று விட்டால் என்னை ஜெயித்ததாக ஆகி விடாது.... ஜெயிக்க விட மாட்டேன்..." என்று அவளை அணைக்கும் போது அவள் காதில் முனுமுனுத்து விட்டு சிரித்தப்படி வாழ்த்து சொல்லி விட்டும் அருமையாக சிரித்தப்படி போட்டோவிற்கு போஸ் கொடுத்தவிட்டு இறங்கினாள் அந்த எமகாதகி!!!

# அத்தியாயம் 31

"**நீ** நவாப் பக்கம் நின்று விட்டால் என்னை ஜெயித்ததாக ஆகி விடாது.... ஜெயிக்க விட மாட்டேன்..." என்று அவளை அணைக்கும் போது காதில் முணுமுணுத்து விட்டு சற்றே உயர்ந்த குரலில் வாழ்த்து சொல்லி விட்டு அருமையாக சிரித்தப்படி போட்டோவிற்கு போஸ் கொடுத்தவிட்டு இறங்கினாள் அந்த எமகாதகி!!!

அவள் பேசியதை கேட்டு திடுக்கிடவோ அல்லது மறுத்து பேசவோ... இடமே கொடுக்காது அவள் அங்கிருந்து சென்று விட... நிஜமாகவே அவள் பேசினாளா இல்ல தன் மன பிரம்மையா என்று சந்தேகமே வந்தது அவளுக்கு!!!

ஆமிரா சென்ற திசையை பார்த்த விதத்திலேயே ஏதோ நடந்து இருக்கிறது என்பதை உணர்ந்தவன்...

"என்ன சொல்லி விட்டு போகிறாள்?" என்றான் அவள் காதில் மட்டும் விழும் படியாக.

மெல்ல சுதாரித்தவள்... ஒரு பெரு மூச்சு ஒற்றை அலுப்பாக விட்டவள்.. "அலிகானாக மாறி விட்ட பிறகு எது பேசினாலும் எங்கே காதில் விழாதது போல் இருந்து விடுவாளோ என்று பயந்து என் காதிலேயே நான் என்னவோ உங்களை கல்யாணம்

பண்ணிக்கொண்டதால்.. ஏதோ உலக கோப்பையை வென்றது மாதிரி... இந்த வெற்றி நிரந்திரமில்லை... நான் என்றும் தோற்க மாட்டேன் என்று ஓதி விட்டு போகிறாள்" என்று இடக்காக அவன் சொன்ன வார்த்தைகளை திரும்பி கொடுத்தாள் அவள்.

"வாட்??" என்று பல்லை கடித்தவன் கண்களால் ஆமிராவை தேட...

"தோற்பது யாருக்குமே பிடிக்காது தான் ரஃபிக்.. என்னை தோற்கடிப்பதை ஒரு தவமாக நீ செய்வது போல் அதை அவள் அதை வரமாக செய்ய வேண்டும் என்று சவால் விடுகிறாள்.. ஆக மொத்தத்தில் நான் தோற்பதை எத்தனை ஜீவன்கள் தன் வாழ்க்கை லட்சியமாக கொண்டு இருக்கிறார்கள் என்று இப்பொழுது புரிகிறது" என்று அலுப்பாக சொன்னாள்.

"அவளை..." என்று அவன் பல்லை கடிக்க.. தன் கண்களால் யாரையோ தேட...

பட்டென்று அவன் கையை பிடித்து அவன் தன் பக்கம் திருப்பிவள் "தயவு செய்து இதில் தலையிடாத... ஏற்கனவே உன்னால் தான் இந்த பிரச்சனையே.. நான் பார்த்துக்கொள்கிறேன்" என்றாள் கடுப்பாக.

"ரீயலி??" என்றாள் அவள் பிடித்திருந்த கையையும் அவளை பார்த்தப்படி.

"உங்க சக தர்ம பத்தினி ஆகிவிட்டதால் எது வந்து வந்தாலும் சரிபாதியாக ஏற்றுக்கொண்டு தான் ஆக வேண்டும் என்று நெற்று சொன்னிங்க.. இல்ல.. அதை நான் மறக்காது.. அந்த கடமையை நிறைவேற்றும் பொருட்டு ஆமிரா என்னை பன்ச் பேக்காக வார்த்தைகளால் குத்தி விட்டு போவதை தாங்கிக்கொண்டு நிற்கிறேன் ரஃபிக்.." என்று மீண்டும் அவன் சொன்ன வார்த்தைகளை திரும்பி கொடுத்தவள்.. "என் பாதியை நான் செய்து விட்டேன்.. உங்க பாதியை எப்ப செய்ய போறீங்க?" என்று இளக்காரமாக கேட்டப்படி கையை விடுவித்தாள் மேக மித்ரா.

"நான் அவளிடம் இதை பற்றி பேசுகிறேன்.." என்றான் அழுத்தமாக.

சீற்றத்துடன் அவனை பார்த்தவள் "என்னவென்று பேசுவிங்க.. நீ என் பேகத்திடம் இப்படி பேசியதால் அவள் மனது உடைந்து குடம் குடமாக அழகிறாள் என்றா??" என்று சுடாக வந்தது அவளின் பதில்.

ஏதோ முடிவில் தான் இப்படி எல்லாம் பேசுகிறாள் என்று உணர்ந்தவன்.. அவளை ஆழ்ந்து பார்த்து.. "உனக்கு என்ன தான்டீ வேண்டும்?" என்றான் பற்களை கடித்தப்படி...

"கண்களை மூடிக்கொண்டா இல்லை திறந்தக்கொண்டு குதிக்க வேண்டுமா என்று கேட்கும் நம்பிக்கை இருக்க

வேண்டும் என்று என்னை கேட்டிங்களே அதே நம்பிக்கை... என்னிடத்தில் உங்களுக்கு இருக்கிறதா??" என்றாள் அழுத்தமாக...

அவள் எதை பற்றி கேட்கிறாள் என்று கண்களில் தெளிவு பிறக்க... கண் இமைக்காது பார்த்தவன்.. "இப்பவும் சொல்கிறேன் அவள் முடிந்து போன கதை.. அவளிடம் நீயாக போய் பேசினால் இல்லாத பிரச்சனை பெரிதுதான் ஆகும்..." என்று அவன் கூறும் போதே...

"பிரச்சனை பெரிசாகுதா இல்ல முடிந்து போகுதா என்பது அல்ல இங்கே நான் கேட்பது... நீ என்னிடம் கேட்ட அதே நம்பிக்கை உனக்கு என்னிடம் இருக்கா...?? என்பதுதான்.. இல்லை வாழ்க்கை முழுக்க நான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் உன்னிடம் அனுமதி வாங்கிக்கொண்டு தான் செய்ய வேண்டுமா?" என்றாள் திடமாக.

"ஏன்..??" இது ஏன் உனக்கு அவ்வளவு முக்கியம்?" என்று கேட்காமல் கேட்டது அவனின் விழிகள்

"எனக்கு உங்களை மாதிரியே ஊர் அறிய நிச்சயம் ஆகி... அவன் வந்து உன்னிடம் இப்படி பேசி இருந்தால்... காதில் விழாதது போல் கடந்து செல் என்று அதே தத்துவ வார்த்தைகளை நான் உன்னிடம் சொன்னால் இதை நீ கேட்பாயா ரஃபிக்.. ???" என்று குறி பார்த்து அம்பு ஏய்தால் மேகி...

கேட்ட கேள்வியின் பொருளும்... அவள் கேட்ட விதமும்.. அதில் இருந்த உண்மையும் அவனை தாக்க... "சரி.. இனி இதில் தலையிட மாட்டேன்.. ஆனால் எது பண்ணினாலும் அது இந்த வீட்டிகுள் மட்டும் தான் நடக்க வேண்டும்.." என்று விசித்திரமாக ஒரு நிபந்தனையை வைத்தான்.

அவன் நம்பிக்கை வைக்கிறேன் என்னும் சொல்லாமல் சொல்லும் விதமாக ஒப்புக்கொள்வதே அசாத்தியமான விஷயமாக தோன்ற.. ஏன் இப்படி விசித்திரமான நிபந்தனை வைக்கிறான் என்று யோசிக்க தவறி....... "ஓ.கே" என்றாள் முகம் லேசாக... இதனால் அவர்கள் வாழ்க்கையே எத்தனை பெரிய பிரச்சனையில் இழுத்துக்கொண்டு போக போகிறது என்பதை அவள் அறியாள்!!!

அவனின் பதிலை கேட்டு மேகியின் கண்களில் தெளிவு பிறக்க... ஏதோ பதில் பேச ஆரம்பிக்கும் முன் யாரோ வந்து அவர்களுக்கு வாழ்த்து தெரிவிக்க வர... மீண்டும் அவர்களுக்கு தனிமை கிடக்க இருபது நிமிடம் பிடித்தது!!!

அதுவரை அளவாக சிரித்து... அவர்களின் வாழ்த்தை பெற்றுக்கொண்டு.. புகழ் பெற்ற நவாப் உணவு விருந்தில் கலந்துக்கொள்ள சொல்லவதில் ஆரம்பித்து... குழந்தைகளுடன் வந்திருந்தவர்களிடம் பிள்ளைகள் விளையாட இடமும் அமைத்திருப்பதை வரை ஆளுக்கு ஏற்றப்படி முதல் முறையாக

பார்ப்பவர்களை கூட எளிதாக தன் விருந்தோம்பலில் அவர்களை மற்றும் அல்ல பக்கத்தில் நின்று இருந்தவனை கூட ஆச்சரிப்பட வைத்தாள் மேக மித்ரா!!!

கிடைந்த முதல் தனிமையில் "இங்கே என்னென்ன ஏற்பாடு ஆகி இருக்கிறது என்று உனக்கு எப்படி தெரியும்??" என்றான் குரலில் ஆச்சரியம் போல் ஏதோ வந்து போனது.

"அத்தையிடம் தான் இதற்கு நன்றி சொல்ல வேண்டும்.. அவர்கள் தான்... வி.ஐ.பி கெஸ்ட் லிஸ்ட் கொடுத்த பேப்பரில்... அவர்களின் என்ன கேட்க வேண்டும்.. சென்ற முறை வீட்டிற்கு வந்து இருந்த போது அவர்கள் எதை விரும்பி சாப்பிட்டார்கள்.. என்று ஆரம்பித்து... யாரிடம் என்ன மாதிரி கேள்வி கேட்க வேண்டும்.... கேட்கும் கேள்விக்கு எப்படி பதில் சொல்ல வேண்டும் என்று கூட அத்தை சின்ன குறிப்பு கொடுத்து இருந்தார்கள்" என்றாள் திருத்தமாக.

"இதை எல்லாம் எப்ப படித்தாய்??" என்றான் அவளை ஒரு மார்க்கமாய் பார்த்தப்படி.

"அலங்காரம் பண்ணிய இரண்டு மணி நேரம் வெட்டியாக தானே உட்கார்ந்திருந்தேன்...??"

"ஓ!!! நாட் பேட்..." என்றான் அவளைப் பார்த்து கண்களால் சிரித்து.

"ஐயம் சூப்பர் குட்.." என்றாள் அவனின் பார்வையை அலட்சியப்படுத்தி.

அவளின் அந்த பதிலை கேட்டு கண்கள் மட்டும் அல்ல அவனின் முகமும் புன்னகையின் சாயல் தோற்றிக்கொள்ள... முதல் முறையாக அவனின் இளகிய முகத்தை கீழே அமர்ந்து பார்த்தவர்களுக்கு நவாப் ஏன் அவளை இப்படி அவர்களின் அந்தஸ்திற்கும்.. தகுதிக்கும் சம்பந்தே இல்லாது திடீர் மணம் செய்துக்கொண்டதன் காரணம் புரிவது போல் இருந்தது.

"இப்ப புரியுது ஏன் நவாப் விருந்து இத்தனை பிரபலம் என்று.. சின்ன சின்ன விஷயங்களை கூட தெரிந்து வைத்துக்கொண்டு அதை அவர்களுக்கு மீண்டும் வரும் போது செய்து கொடுக்கும் போது அவர்கள் எவ்வளவு ஸ்பெஷலாக உணர்வார்கள் என்று யூகிக்க முடிகிறது... இதை எல்லாம் ரிகாட் பண்ணி வைக்கும் அத்தையைப் பார்த்தால் பிரம்மிப்பாக தான் இருக்கிறது!!!... ஏன் உங்க ரீசாட்டுகள், ஹோட்டலகள் எப்பயும் ஃபுல்லா இருக்கிறது என்று புரிகிறது " என்றாள் அவள் மடமடவென்று!!!

"அது..." என்று அவன் ஆரமிக்கும் போதே.. முதல் வி.வி.ஐ.பியின் படை எடுப்பு ஆரம்பம் ஆகியது!!!

சங்கி கொடுத்த புடவையை கட்டிக்கொண்டு இவர்கள் வருவதற்கும் முன்பே வந்திருந்த மௌனிக்காவை கண்டவுடன் பார்த்து கண்களை விரித்தாள் சங்க மித்ரா.

அவளுக்கு தெரிந்து நிரல்யாவை அடுத்து ரொம்ப அழகு என்று நினைப்பது மௌனிக்காவை தான்!!!

ஆனால் அதை பொய்யாக்கும் விதமாக அவள் கொடுத்து அனுப்பி இருந்த யானை நிறத்தில் புடவை உடம்பு முழுக்க மங்கின வெள்ளியின் நிறத்தில் சின்ன புட்டாவும்... நிறத்தில் கோபுர வடிவில் பார்டர் ஆகவும் இருக்க... கழுத்தில் மறைந்த அம்மாவின் நியாபகமாக இருக்கும் சின்ன மாங்காய் மாலையை அணிந்துக்கொண்டு கையில் எப்பயும் அணியும் வலையல்களுடன்.. சற்றே மேடிட்ட வயிற்றுடன் இவளை பார்த்து சிரித்தவளை.. கண்டவனுடன் கன்னத்தில் சின்ன திருஷ்டி பொட்டு வைக்க வேண்டும் என்று தான் முதலில் தோன்றியது!!!

கீழே அமர்ந்திருந்திருந்தவளைப் பார்த்து மேடைக்கு "வா" என்று தலையால் அழைக்க...

அப்புறம் வருகிறேன் என்று கையால் செய்கை செய்துவிட்டு அசையாமல் அமர்ந்திருக்க...

இப்ப வருகிறாயா இல்ல நான் கீழே வரவா என்று அவள் மிரட்ட சங்கியை பொருத்த வரை எது வேண்டுமானாலும்

செய்ய கூடியவள் என்று தெரியும் என்பதால் நானே வருகிறேன் என்று அவசரமாக எழுந்தவள் அடி மேல் அடி எடுத்து மிகுந்த தயக்கத்துடன் மேடையை நெருங்கினாள்!!!

அவள் மேடை ஏறி நெருங்கி வந்தவுடன் அவளை கட்டி அணைத்து தன் சந்தோஷத்தை தெரியப்படுத்தியவள்.. தன் அன்பு பிடியில் இருந்து விடுவித்து விட்டு...

மௌனி சொன்ன வாழ்த்தை கூட புறக்கனித்தவள்... "முதலில் உன் உடம்பு எப்படி இருக்கு அதை சொல்லு?!?" என்றாள் அக்கரையாக.

"ரொம்ப ரொம்ப நல்லா இருக்கேன்... இப்ப அவ்வளவாக வாமிட் வருவதில்லை..." என்றாள் மெல்ல சிரித்தப்படி.

"குட்... அப்புறம் அம்மா ஏதோ ஊறுகாய் செய்து எடுத்து வந்து இருக்கிறார்கள்... உடனே வேண்டாம் என்று சொல்லாதே... உனக்கு என்று எதுவும் செய்யவில்லை பாபிக்கு செய்ததை தான் கொடுக்கறேன்." என்று மிக சுவாரசியமாக குசலம் விசாரித்தவளை தொடர்ந்து பேச விடாது யாரோ வர... வேகமாக அங்கிருந்து நகர்ந்தவளை கையை பிடித்து நிறுத்தினாள் சங்கி.

"இங்கே... இரு.... இரண்டு நிமிஷம் பேசுவதற்காக உன்னை நான் இங்க போராடி வரவைக்கவில்லை.." என்று கையை பிடித்து நிறுத்தி வைக்க...

"சரி.. சரி நிற்கிறேன்.. ஆனா என் கையை விடு.. மேக மித்ராவிடம் வாழ்த்து தெரிவித்து விட்டு வந்து விடுகிறேன்" என்று கூறிய பின்னரே அவள் கையை விடுத்தாள் சங்கி.

சொன்ன மாதிரியே மங்கியிடம் சென்று வாழ்த்து தெரிவிக்க... புன்னைகயுடன் அவளை வரவேற்று.. அருகில் இருந்த கணவனிடம் அறிமுகம் செய்து வைக்க...

அவளிடம் மிக சரளமாக மலையாளத்தில் பேசினான் நவாப் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான்!!!

கேரளத்தை சேர்ந்த தந்தைக்கும் தமிழகத்தை சேர்த்த தாய்கும் பிறந்த மௌனிக்கா... தமிழை மலையாள வாடை வீசாது பேசக்கூடியவள்... அப்படி இருந்தும் எப்படி இவளிடம் மலையாளத்தில் பேசுகிறான் என்று மூளைக்குள் மணி அடிக்க...

இருவருக்கு வாழ்தது தெரிவித்து விட்டு அவள் நகர்ந்தவுடன்...

"எப்படி உங்களுக்கு அவளை பற்றி தெரியும்??" என்றாள் ஆச்சிரியமாய்.

அவள் புறம் திரும்பி ஒரு மார்க்கமாக பார்த்தவன்... "ஏன் உனக்கு மட்டும் கெஸ்ட லிஸ்ட் வருமா?" என்றான் அட்டகாசமாக.

அவன் சொன்ன பதிலை ஏற்காது.. "இருந்தாலும் உங்களுக்கு அவளை பற்றி முன்பே தெரியும் என்பது போல்.."

"எனக்கும் அப்படி தோன்றியதால் தான் அவளை பற்றி தேடி கண்டு பிடித்து அறிந்துக்கொண்டேன்" என்றான் அமைதியாக.

அவன் சொல்லும் பொருள் புரிய.. "அப்படின்னா.. அப்படின்னா.. அவளை பற்றி.." என்று மேகி ஆத்திரத்துடன் கேட்க ஆரம்பிக்கும் போதே..

"பாதுகாப்பு என்று வந்துவிட்டால் யாரும் எதற்கும் விதி விலக்கு அல்ல.. மேகி.. உன் பத்ரி அண்ணன் உற்பட அனைவருக்கும் பேக்கிரவண்டு செக் செய்யப்பட்டது.. வேண்டும் என்றால் அவரையே கேட்டுப்பார்" என்றான் அமைதியாக.

"வாட்?? அண்ணாவிற்கு தெரியுமா??" என்று அவன் கூறுவதை அதிர்ச்சியுடன் கேட்டவள் "அப்படின்னா... அப்படின்னா... நீங்க நான் யார் என்று என்னை முதல் முறை பார்க்கும் முன்னாடியே தெரியுமா?"

"உன் பெயர் மட்டும் தான் தெரியும்.. முதல் முறை பார்த்த போது கூட உன்னை யார் என்று தெரியாது... அதன் பிறகு.." என்று லேசாக தோளை குலுக்கினான்.

"அதன் பிறகு தெரிந்துக்கொண்டிங்களாக்கும்" என்றாள் எகத்தாளமாக.

"தெரிந்துக்கொள்ள வேண்டிய சூழல்.." என்றான் கண்கள் மின்ன.

அதற்கு அவள் சூடாக பதில் அளிக்க காத்திருக்கும் போதே.. யாரோ வி.ஐ.பி வருவதற்கு அறிகுறியாக ஒரு பரபரப்பு தொற்றிக்கொள்ள... இருவரின் கவனமும் அங்கே திரும்பியது.

தன் வேக நடையுடன் காகி கார்கோ பேன்டில் ரவுண்ட் நெக் வெள்ளை டி சர்ட்டிற்கு மேல் சிகப்பு நிற ப்ளேசர் அணிந்து.. கண்களை தாண்டி விழுந்த அவனின் நீண்ட முடியை... அனாயாசமாக பின்னால் தள்ளி விட்டு.. ஒருவாரம் ஷேவ் செய்யப்படாத கன்னத்தில் முள் தாடி முளைத்திருக்க... கண்களில் துள்ளி தெறித்த அலட்சியத்துடன் வேகமாக அவர்கள் அருகில் வந்தான் அந்த நெடியவன்!!!

ஃபார்மலாக கை கொடுத்த ரஃபிக்கின் கையை புறக்கணித்து விட்டு அவனை கட்டி பிடித்து விடுவித்தவன்... வாழ்த்து சொல்லுவான் என்று எதிர்பார்த்தால்..

"தேங்.. காட்... அவளிடம் இருந்து தப்பித்து விட்டாய்" என்று ஆமிராவை பற்றி முகத்திற்கு நேராக ரஃபிக்கிடம் சொல்ல..

அப்படியே உடல் விரைத்து போய் நின்றாள் மேக மித்ரா.

இவளிடம் திரும்பியவன்.. "இந்த உம்மூணா மூஞ்சியை கல்யாண பண்ணிக்கொண்டதற்கு என்னுடைய வாழ்த்துகள்" என்று கூற..

அதை கேட்டவளின் முகத்தில் புன் முறுவல் பூக்க.. "வந்ததில் இருந்து நீங்க ஒருத்தர் தான் ரொம்ப சரியாக வாழ்த்து சொல்லி இருக்கீங்க" என்று அவனை பார்த்து தெரிவித்தாள்.

"உங்க ரெண்டு பேருக்கும் நீங்களே கோயில் கட்டி கும்பிடுவதற்கு முன்.. இவன் சிபி சஞ்ஜீவ் லிங்கராஜ்.. கூர்கில் காபி எஸ்டேட்டி...." என்று முறைப்படி அறிமுகப்படுத்தும் முன்..

"போதும் ரஃபிக்... விட்டா என் பட்டது குதிரையின் பெயர் கூட சொல்லுவ போல் இருக்கு..." என்று தன்னை பற்றிய பேச்சை மறுத்து விட்டு அவன் பாக்கெட்டில் இருந்து ஒரு கடிதத்தை எடுத்து ரஃபிக் கையில் கொடுத்தவன்.. "ஓபன் இன்விட்டேஷன்.... எப்ப முடியுதோ அப்ப எங்க வீட்டிற்கு வருவதற்காக" என்று கூறியவன் இருவருக்கும் பொதுவான ஒரு வாழ்த்தை தெரிவித்து விட்டு மேலே பேசுவதற்கு இடமே கொடுக்காது நகர்ந்தான்.

அந்த சிபி சஞ்ஜீவ் லிங்கராஜ் சென்ற அடுத்த நொடி புயல் அடித்து விட்டு போனது போல் இருந்தது!!!

"அவர் கூர்க் என்று பாதி ஆரம்பிக்கும் போதே.. புரிந்து விட்டது... உங்களை போல் ஒரு ராஜ குடும்பத்தை சேர்ந்தவர் தானே?? அல்லது அப்படிதான் அத்தை கொடுத்த பேப்பரில் படித்தாக ஞாபகம்" என்றாள் இழுத்தப்படி .

"ம்ம்.. அவனேதான்... அதை விட சூப்பர் ப்ளே பாய் என்று தான் அறிமுகப்படுத்த வேண்டும்!!!" என்றான் தலையை சரித்து.

"ஓ!!! என்று அவன் சித்திடம் சென்றுக்கொண்டு இருந்தவனை தலையை திருப்பி பார்க்க.. அங்கே மௌனி அவனை உற்று பார்த்துக்கொண்டு இருந்தது புரிந்தது.

இதுவரை மௌனி ஒருவரை கூட தலை உயர்த்தி கூட பார்த்தது இல்லை என்பதோடு... புதிய ஆட்களை கண்டால் தன் ஓட்டுக்குள் தலையை சுருட்டிக்கொள்ளும் ஆமையை போல்... சுருண்டு கொள்பவள் நின்று தலையை உயர்த்தி பார்த்தாள்.

அவளே அவனை பார்ப்பதை வைத்து.. ரஃபிக் சொல்லுவதை ஒப்புக்கொள்ள தான் வேண்டி இருந்தது.. மெல்ல அவன் புறம் தலையை திருப்பியவள் "ஆனா.. அவர் எப்படி உங்களிடம் இப்படி பேசுகிறார்??" என்று ஆச்சரியமாக கேட்டாள்.

"இதுவே உனக்காக அவன் டீசன்டாக பேசியது... அவன் என்னோடு விளையாடும் போது கேட்கனும்..." என்றான் லேசாக சிரித்தப்படி.

"வாட்?? டீசன்டாகவா? உங்களுக்கு இப்படி ஒரு ப்ரெண்ட் இருப்பார்கள் என்று நான் கனவில் கூட எதிர்பார்க்கவில்லை..."

"அவன் என் ப்ரெண்ட் இல்லை.. என் போலோ க்ளப் மெம்பர்.. என்னுடைய டீம்மில் நேரம் இருக்கும்போது வந்து

விளையாடுவான்... அவனும் என்னை போல் ஒரு ராஜ குடும்பத்தை சேர்ந்தவன் என்ற முறையில் சின்ன வயதில் இருந்து பழக்கம்.." என்று ரஃபிக் விளக்கிக்கொண்டே போக..

அவனை ஒரு மாதிரி பார்த்த மேகி.. "இதற்கு பேர் தான் ப்ரெண்ட் ரஃபிக்" என்றாள் .

அதை காதிலே வாங்காது "இல்ல.." என்று ஒரே வார்த்தையில் முடித்தான் அவன்.. ஏதோ நினைத்துக்கொண்டது போல்.. "மனதில் இருப்பதை எல்லாம் வார்த்தையில் பேசும் அவனின் குணம் நான் பழகும் வட்டத்தில் ரொம்ப.. ரொம்ப.. குறைவு" என்றான் அமைதியாக.

அதில் எத்தனை உண்மை என்று அவள் பெரு மூச்சு விடும் போதே அடுத்த வி.ஐ.பி யாரோ வர... அவர்கள் பேச்சு அத்துடன் முடிந்தது.

சச்சிதேவ் கம்பெனி விழாக்களில் கூட நிறைய அரசியல் தலைவர்கள், சினிமா துறையினர், விளையாட்டு வீரர்கள் என்று பலரும் வந்து இருக்கிறார்கள் தான்... ஆனால்.. இப்படி சி.எம்மில் ஆரம்பித்து... எதிர் கட்சி தலைவர், கவர்னர் போன்ற தலைவர்கள் வந்ததோ... இல்லை.. மாஸ் ஹீரோக்களோ தங்கள் சொந்த பாடி காட்டுடன் வந்ததோ... இல்லை... விளையாட்டு துறையில் இருக்கும் மெகா ஸ்டார்கள் சார்ட்டட்

ப்ளைட்டில் இந்த விழாவிற்காக வந்ததோ பார்த்து இருக்கவில்லை என்பதால் அந்த

நட்தத்திரங்களை விட அவர்கள் வருவதற்கு முன்பு செய்யும் அலப்பறை தான் அவளால் தாங்க முடியவில்லை!!!

ரஃபிக் சொன்னது போல் சாப்பிட நேரம் என்ன மூச்சு விடுவதற்கு கூட

நேரம் இல்லாமல் அடுதடுத்து வந்த வண்ணம் இருக்க... தண்ணீர் கூட

குடிக்க முடியாதப்படி கூட்டம் வழிந்தது.

நவாப் வீட்டு விழாவிற்கு அழைப்பதையே பெருமையாக கருதி

வந்திருந்தவர்கள் பாதி என்றால்... அதை வேடிக்கை பார்க்க வந்தவர்கள் மீதியாக இருந்தார்கள்.

ரஃபிக் கணித்த இரண்டை தாண்டி.. விடியற்காலை நான்கு மணி வரை

ரீஷப்ஷன் இழுத்தடிக்கப்பட... ஒரு வழியாக அவர்களின் ஹோட்டலை

விட்டு வெளியே வர மணி ஐந்தாக... வீட்டிற்கு செல்ல காரில் அமர்ந்தவள் கார் நகர ஆரம்பித்த ஐந்தாவது நிமிடத்தில் ரஃபிக் தோளில் சரிந்து

தூக்கியவள் கார் நின்றவுடன் தான் விழித்தாள்!!!

அதே தூக்க கலக்கத்துடன் தன் அறைக்கு வந்து ஆடைகளை மாற்றிவிட்டு.. அவள் அணிந்த புடவையை அழகாக பத்திரப்படுத்தி விட்டு வேலை

ஆட்களை வெளியே அனுப்பியவள்... வேகமாக தன் விலை உயர்ந்த நகைகளையும் கழட்டி அவன் அறையில்

இருந்த லாக்கரில் வைக்க சொல்ல ரஃபிக்கின் அறை கதவை தட்டிவிட்டு உள்ளே சென்றாள்!!!

ஆனால் அவன் எதிர்பார்த்தப்படி அங்கே இல்லாது.. போக..

தன்னுடன் தானே இங்கே வந்தான் இப்ப எங்கே போனான்??

விலை உயர்ந்த இந்த நகைகளை அவன் கையில் தான் கொடுக்க

வேண்டும்.. என்று எரிச்சல்ப்பட்டப்படி அங்கே இருந்த நாற்காலியில்

உட்கார்ந்தவள் ஃபேன் கட ஓடாத அறையில் எப்படி குளிர்கிறது என்று

எண்ணியப்படி... கால்களை எடுத்து உடம்போடு கட்டிக்கொண்டு

முழங்காலில் தலையை வைத்தவளுக்கு குளிரிலும் கொட்டாவி விட்டு

சொக்கி விழ... இருக்கும் களைப்பில் இப்படி உட்கார்ந்திருந்தால் நிச்சயம் தூக்கி விடுவோம் என்று நினைத்தவள் வேகமாக நகைகளை அங்கே

இருந்த டிரஸ்சிங்க டெபிளில் வைத்து விட்டு.. எழுந்து சென்று அவர்களின் பொது பாத் ரூம் அறையின் கதவை தள்ளியவளுக்கு அது

திறந்துக்கொள்ள.. யோசனையுடன் உள்ளே சென்று முகம் மற்றும் கை

கால் கழுவிக்கொண்டு வெளியே வந்து வர... முன்னிலும் அதிகமாக

குளிரியது!!!

அந்த மெகா சைசிஸ் கட்டிலில் இருந்த போர்வையை ஆசையாக

பார்த்தவள் எதை பற்றியும் யோசிக்காது அப்படியே கட்டிலில் அமர்ந்து

அந்த போர்வை எடுத்து போர்த்திக்கொள்ள...

அடுத்த ஐந்தாவது நிமிஷம் அமர்ந்த நிலையிலேயே கண் அயர்ந்தாள்

மேக மித்ரா!!!.

அடுத்த அரை மணி நேரம் கழித்து... தன் அறை கதவை

திறந்துக்கொண்டு உள்ளே வந்தவன் அமர்ந்த நிலையில்

உறங்கிக்கொண்டு இருந்த மேகியை பார்க்க..

ஷாக் அடித்து நின்றவனுக்கு பின் மெல்ல.. சிரிப்பு வர...

"கிரேசி" என்று முணுமுணுத்தப்படி முன்னே வந்தவனின் கண்களில்

டிரஸ்சிங் டெபிள் மேல் இருந்த நகைகள் கண்ணில் பட...

எதற்கு வந்தாள் என்று யூகித்தவன் அவைகளை எடுத்து அங்கே இருந்த

லாக்கரில் பத்திரப்படுத்தி விட்டு.. விளக்கை நிறுத்தி விட்டு அவளை

நெருங்கியவன் "மேகி" என்றான் மென்மையாக.....

# அத்தியாயம் 32

"மேகி" என்றான் மென்மையாக....

அவன் அழைத்ததை உணர்ந்து.. கண்களை அசதியாக திறந்தவள்... எதுவும் பேசாது தன் கால்களை முட்டுக்கொடுத்து அதன் மேல் தன் முகத்தை வைத்து மீண்டும் நித்திரையில் முழுகினாள்!!!

வாரி அணைக்க துடித்த கைகளை தன் ஷாட்ஸ் பாக்கெட்டில் தினித்தவன்..

மீண்டும் "மேகி" என்றான் அதே மென்மை மாறாது.

தன் முழங் காலில் இன்னும் ஆழமாக முகத்தை புதைத்துக்கொண்டவள் "ரஃபிக்??" என்று கண்களை மூடிக்கொண்டே கேட்டாள்.

அவனை அழைத்த விதத்திலேயே மேகியின் மன நிலையை உணர்த்தி விட... பாக்கெட்டில் இருந்த தன் கைகளை எடுத்து மார்பின் குறுக்கே கட்டிக்கொண்டு விரிந்த தோள்களுடன் விரைப்பாக நின்றவன்...

"நானே தான்" என்றான் பெரு மூச்சு விட்டப்படி.

கண்களை திறக்காது.. "இந்த நேரத்தில் எங்கே போய் விட்டு வருகிறாய்??" தூக்கத்திலேயே கேட்டாள்.

ஒரு நிமிடம் கண்களை மூடி உள்ளே பொங்கிய உணர்வுகளை அடக்கியவன் பின் மெல்ல மூச்சு விட்டு தன்னை நிலைப்படுத்திக்கொண்டு உணர்ச்சியற்ற குரலில்...

"செத்கத்க்கிடம்.." என்ற போது அவன் முகத்தில் வந்து போன உணர்வுகளை அவள் காணவில்லை இல்லையேல் இன்நேரத்திற்கு அங்கே பூகம்பம் வெடித்திருக்கு!!!

"ஓ!!!" என்று ராகமாக இழுத்தவள் "என் நகைகளை கொடுக்க தான்... இங்கே காத்திருக்கிறேன்" என்றப்படி அவன் புறம் தன் தலையை திருப்புவது கூட பாரமாக உணர.. கைளை மட்டும் பிரித்து நகைகளை வைத்த இடத்தில் கைகளை உயர்த்தி காட்டினாள்.

"எடுத்து உள்ளே வைத்துவிட்டேன்..." என்று கூறியவனின் முகம் இளக அவளின் காது அருகே குனிந்து...

"கவலைப்படாதே.. என் மேல் காதல் மேவிட என் அறையில்.. என் மஞ்சத்தில் எனக்காக காத்திருக்கிறாய் என்று தவறாக நினைக்க மாட்டேன்!!!" என்றான் தெளிவாக.

அத்தனை நேரம் அவளை வாட்டிய அசதியும் சோர்வும் பின்னுக்கு தள்ளப்பட.... செவி அருகே கேட்ட அவனின் குரலும்... அவனுக்கே உரிய கதகதப்பும் அவளை திகைப்பில் ஆழ்த்த.. என்ன செய்கிறோம் என்று முழுமையாக உணரும்

முன்.. வாரி சுருட்டிக்கொண்டு நான்கு அடி புதையும் மென்மையான மெத்தையில் எழு முயற்ச்சிக்க..

"ஐய்யகோ" மேகி கட்டி இருந்த புடவையும்.. போர்த்தி இருந்த போர்வையும் அவள் கால்களை சுற்றிய பாம்பாக ஒரே இடத்தில் கட்டிப்போட.... கால்களை நகர்த்தவும் முடியாது... நிற்கவும் முடியாது அப்படியே மல்லாக்க பொத்தென்று மெத்தையில் விழுந்தவள்.. இரண்டு முறை பவுன்ஸ் ஆக... எதை பிடித்து நிற்க முடியாத சூழலில் பேலன்ஸ் இல்லாது உருண்டாள்!!!

அவள் அடிக்கும் ஸ்டன்டுகளை கண்களில் ஒளி பொங்க பார்த்தவனின் அழுத்தமான உதட்டில் சிரிப்பு வெடிக்க அவளை பார்த்தப்படி நின்றவன்.. ஒரு கட்டத்தில் அவள் பிடிமானம் அற்று உருண்டு மெத்தையின் விளிம்பு வரை நிற்காமல் உருண்டுக்கொண்டே போவதை கண்டு தன் சிரிப்பை நிறுத்திவிட்டு அவளை கீழே விழாது தடுக்கும் முயற்ச்சியில் இறங்கினான்.

பவுண்டரியை கடக்க விருக்கும் பாலை சரிந்து சென்று தடுக்கும் கிரிக்கெட் வீரனை போல் அப்படியே மெத்தையில் சரிந்து சென்று கட்டிலின் மறு புறத்தில் விழ போனவளை தடுத்து நிறுத்த முயற்ச்சிக்க.. ஆனால் நூல் இழையில் பவுண்டரியை தொடாமல் நிற்கும் பாலை சரிந்து செல்லும்

வீரனே பவுண்டரிக்குள் தள்ளி விடுவதை போல்.... ரஃபிக் சரிந்து போன வேகத்தில்... கட்டிலின் நுனியில் எப்படியோ சமாளித்து விழாது நின்றவளையும் சேர்த்து இழுந்துக்கொண்டு இருவரும் கீழே பொத்தென்று விழுந்தனர்!!!

இருவருக்கு சில நோடிகள் பிடித்தது அவர்கள் கீழே விழுந்ததை முழுமையாக உணர...

தரையில் கிடந்த ரஃபிக் வெடித்து சிரிக்க... அவன் மேல் பின்னி பிணைந்து விழுந்து கிடந்தவளுக்கு அவனின் உல்லாச சிரிப்பு அவளை உயிர்பித்து... பெரூம் கோபத்தை கிளர்ந்து எழ செய்தது!!!

அவன் மார்பில் கையை ஊன்றி... தலையை நிமிர்த்தியவளுக்கு அவிழ்ந்த கார் கூந்தல் அவன் முகத்தில் மட்டும் அல்ல மார்பிலும் உரிமையுடன் பரவி கிடக்க.. அவசரமாக அவற்றை ஒதுக்கி "உன்னால் தான் நான் கீழே விழுந்தேன்" என்று கீறிச்சிட்டாள்.

சிரிப்பை அடக்க பெரும் முயற்ச்சி செய்தப்படி... பொறுமையாக தன் கைகளை எடுத்து தலைக்கு பின்னால் வைத்தவன்... "கீழே விழுந்தேன் என்று சொல்லாதே.. என் மேல் விழுந்தேன் என்று சொல்" என்றான் கண்களால் சிரித்தப்படி.

அவன் மேல் தான் இன்னமும் படுத்து கிடக்கிறோம் என்பதையே முற்றிலும் மறந்தவளாய்...

"நான் விழ வில்லை.. கட்டிலின் விளிம்பில் சமாளித்து நின்று விட்டேன்.. ஆனால் நீ தான் உன்னுடன் என்னையும் சேர்த்துக்கொண்டு இழுத்து வந்து கீழே விழ வைத்தாய்" என்றாள் திடமாக.

"கீழே விழ போன என் சக தர்ம பத்தினியை காப்பாற்ற என் உயிரையும் துச்சமாக மதித்து உன்னை பிடிக்க பாய்ந்து வந்த என்னை.. கீழே தள்ளிவிட்டதோடு மட்டும் அல்லாது... என் மேல் சொகுசாக படுத்துக்கொண்டு என்னையே தப்பு சொல்வது எந்த விதத்தில் நியாயம் மேகி?"

அப்பொழுதுதான் அவன் மேல் தான் படுத்து இருப்பதையே நினைவிற்கு வந்தவளாய் அவசரமாக எழ முயற்ச்சி செய்ய...

அதை பற்றி சற்றும் அக்கரை அற்று தலைக்கு வைத்திருந்த கைகளை எடுத்து அவள் இடையோடு வளைத்து கட்டி அணைத்தான் ரஃபிக்!!

"கையை எடு ரஃபிக்" என்றாள் எரிச்சலாக.

"என் மேல் ஹாயாக படுத்திருக்க உனக்கு எத்தனை உரிமை இருக்கோ அதே உரிமை உன்னை கட்டி பிடிக்கவும் எனக்கு இருக்கு மை டியர் பொண்டாட்டி"

பதிலேதும் பேசாது அவனை முறைத்தப்படி எழ முயற்ச்சிக்க... ஆனால்.. அதற்கு வழியே கொடுக்காது அவனின் பிடியில் மேகியின் இடை சிக்கி இருக்க..

"விடு..." என்று அவள் எரிச்சலாக சொல்லிக்கொண்டு இருக்கும் போதே...

"ஷ்ஷ்.. விடறேன் ஆனால் பெட்டில் தோற்று போய் விட்டதால் அன்று செய்வதாக சொன்னதை செய்.. நான் விடுகிறேன்" என்றான் அமைதியாக.

"மிஸ்டர் ரஃபிக்... அன்று நீங்கள் கேட்டப்படி முத்தம் கொடுத்து பெட்டில் நான் ஜெயித்து விட்டேன்?!?" என்றாள் அலட்சியமாக.

"நோ... மிஸஸ் ரஃபிக்... நான் என்ன பெட் வைத்தேன்?? நீயே வந்து முத்தம் கொடுத்தால் ஒன்று... நானாக வந்தால் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் வட்டியுடன் வாங்கிக்கொள்வேன் என்று தானே சொன்னேன்??" என்றான் திடமாக.

"ஆமாம்.. ஆனால்?!?" என்றாள் நெஞ்சு துடிப்பு எகிற.. அவள் இழுக்கும் போதே..

"அன்று நீ வந்து எனக்கு கொடுக்கவில்லை.. தீவான் கட்டிலின் மேல் ஏறி நின்று கூவி கூவி என்னை உன் இடத்திற்கு அழைத்து முத்தம் கொடுத்தாய் என்பதால்.. நான் தான்

ஜெயித்தேன். அதனால்..." என்று அவன் நிறுத்திவிட்டு அவளை குறுகுறுப்பாக பார்க்க...

"அதனால்...??" என்றாள் காற்று போன குரலில்.

"அதனால் நான் உன்னை நோக்கி எடுத்து வைத்த இருபது அடிக்கும் நாற்பது முத்தம் கொடுக்க வேண்டி இருக்கும்" என்று அனாயாசமாக குண்டை வீசினான் அவன்!!!

"நோ..." என்று அலறியப்படி தன் தலையை ஆட்டியவள் "இது ஏமாற்று... வேலை.... சீட்டிங்..." என்றாள் அவன் சொல்வதை நம்ப முடியாது.

"பந்தயத்தில் நிபந்தனைகளை உனக்கு தெரிவித்து அதை நீ ஏற்றுக்கொண்ட பின் தானே நடந்தது?? அப்ப அது எப்படி சீட்டிங் ஆகும்?" என்றான் விளக்கமாக.

"அது.. வந்து... " என்று அவள் இழுக்க...

"வெற்றியை எப்படி கொண்டாடுகிறோமோ.. அதே மாதிரி தோல்வியை கூட கௌரவமாக ஏற்றுக்கொள்ள தெரிய வேண்டும் பேகம் மேக மித்ரா அல்வும் அலிகான்" என்றான் திருத்தமாக.

பெருமூச்சு ஒன்றை விட்டவள்.. "நான் தோற்று போனது என்பது உண்மை என்றாலும் கூட... இருபது அடி எடுத்து வைத்தேன் நாற்பது முத்தம் என்று கேட்பது டூ மச்" என்றாள் வெகுண்டு.

அவளின் குற்ற பத்திரிக்கையை சட்டயே செய்யாது.. அலட்சியமாக தோள்களை குலுக்கி விட்டு "ஜெயித்தவன் நான்.. அதனால் நாற்பது என்ன ஐம்பது கேட்டாலும் கொடுத்து தான் ஆக வேண்டும்!!!" என்றான் தெனாவட்டாக.

ஒரு முத்ததிற்கே தலை சுழலும் போது... நாற்பது என்றால் அவளின் நிலையை பற்றி சொல்லவும் வேண்டுமோ?!? என்று மனம் அடித்துக்கொண்டாலும் கூட.. அவன் ஐம்பது.. அறுபது என்று கூட்டிக்கொண்டே போகும் முன் இதை ஒரு முடிவிற்கு கொண்டு வரும் பொருட்டு..

ஒத்தக்கொண்டு ஆகவேண்டிய சூழ்நிலையில் அவளை தள்ள.. "இப்ப என்ன?? நான் உனக்கு முத்தம் கொடுக்கனும் அவ்வளவு தானே?" என்று மனதில் இல்லாத தைரியத்தை குரலில் காட்ட முயல..

"இல்லை.." என்று மறுத்து அவளை குழப்பினாள் அந்த நல்லவன்.

ரஃபிக்கை பற்றி நன்றாக தெரிந்தும் "அப்ப நான் முத்தம் கொடுக்க வேண்டாமா?" என்று குதூகலமாக கேட்டு வைத்தாள்.

"நீ கொடுக்க வேண்டாம்... நானே கொடுக்கிறேன்" என்று சொல்லி அவள் ஆசையை நிராசைக்க ஆக்க..

என்ன பதில் பேசலாம் என்று யோசித்திக்கொண்டு இருக்கும் வேலையிலேயே... அதற்கு மேல் பொருமை காக்காது

அவிழ்ந்த கூந்தலை வருடியவன் அப்படியே அவளின் கற்றை கூந்தலை பிடித்து முன்னே இழுக்க.. அந்த இழுப்புக்கு ஏற்றப்படி அவளின் முகம் அவன் மூச்சு விடும் தூரத்தில் நிற்க..

அத்தனை நெருக்கத்தில் அவளின் எண்ணங்களும் எங்கேங்கோ ஓடிய போதும்...

"யூ ஆர் நாட் ப்ளேயிங் ஃபேர்" என்று எழும்பாத குரலில் அவனை குற்றம் சாட்டினாள்.

"ஆல் இஸ் ஃபேர் இன் லவ் அண்ட் வார்..." என்று அர்த்தம் பொதிந்த வார்த்தைகளை மொழிந்தவன் அதற்கு மேல் பேச அவளுக்கு பேச கொடுக்காது... ஆழமாக முத்தமிட்டான்!!!

# அத்தியாயம் 33

"ஆல் இஸ் ஃபேர் இன் லவ் அண்ட் வார்..." என்று அர்த்தம் பொதிந்த வார்த்தைகளை மொழிந்தவன் அதற்கு மேல் பேச அவளுக்கு பேச கொடுக்காது... ஆழமாக முத்தமிட்டான்!!!

"ஓ!!" வென்று பெருத்த சப்தத்துடன் புரட்டி போடும் ஆவேச அலையாக அவனுடைய முத்ததின் தாக்கம் இருக்க போகிறது என்று தன்னை தயார் படுத்திக்கொண்டு எதிர் பார்த்தவளுக்கு நேர் எதிராக.. கால்களில் குழைந்து.. தழுவிக்கொண்டு மெல்ல உருண்டு ஓடும் அலையாக அவனின் முத்தம் அமைய....

பல நேரங்களின் ஆவேச அலையை விட மெல்ல குழைந்து ஓடும் அலை தான் கால்களின் அடியில் இருக்கும் மண்ணை அப்படியே அரித்துக்கொண்டு போக.. பிடிமானம் இல்லாமல் விழ வைக்கும் என்று தத்துவத்தை உணராதவள்... அவனின் மென்மையான முத்தத்தில் இருக்கி பிடித்திருந்த தன் வைராக்கியம் அரித்துக்கொண்டு போவது தெரியாது...

உடம்பின் ஒவ்வொரு அணுவிலும் இருந்த அசதியையும்... இத்தனை நேரம் கண்களை கட்டிய தூக்கத்தையும்... அவனின்

முத்தம் இருந்த இடம் தெரியாது துரத்த.. அவனிடம் உருகி கரைந்துக்கொண்டு இருக்கும் வேலையில் தான்...

பட்டென்று அவளை விடுவித்தவன்... அவன் மேல் படுத்து இருந்தவளை நெருப்பு சுட்டது போல் விலக்கிவிட்டு பாய்ந்து எழுந்தவன் தன் பாக்கெட்டில் இருந்து போனை எடுத்து அவசரமாக அதை காதில் வைத்தான்!!!

"ம்ம்.." என்று ஒரு வார்த்தையில் பதில் மொழிந்தவன்.. இரண்டு நிமிடம் அப்படியே காதில் வைத்தப்படி அமைதியாக கேட்டப்படி நின்றவன் கடைசியாக "ஓ.கே டாக்டர்" என்றப்படி இருக்கமான குரலில் மொழிந்துவிட்டு போனை வைத்தான்!!!

மற்ற சமயமாக இருந்திருந்தால் டாக்டரா?? யாருக்கு?? என்ன?? என்று விசாரித்து இருப்பாள்.. ஆனால் அவளோ.. ரஃபிக் தன்னை தூங்கி போட்டு விட்டு போன அதிர்ச்சியில் இருந்து இன்னும் மிள முடியாது திக் பிரம்பை பிடித்த மாதிரி அவன் விட்டு சென்ற இடத்திலேயே தரையில் அமர்ந்திருந்தாள்!!!

அடுத்த ஐந்து நிமிஷத்திற்கு யார் யாருக்கோ அரபிக்கில் போன் பேசி விட்டு கடைசியாக விரத்தியாக தலையை கொதியப்படி திரும்ப... அவள் இன்னும் கீழே உட்கார்ந்து இருப்பதை கண்டவன்... அவளை தோளை பற்றி எழுப்ப

இரண்டு அடி எடுத்து வைத்தவன்... பின் அவள் விரும்ப மாட்டாள் என்று உணர்ந்து அங்கேயே நின்று...

"மேகி..." என்று திடமாக அழைத்தான்.

ஏதோ கனவுலகில் இருந்து திடுக்கிட்டு விழித்து போல் அவனை பார்க்க...

"நான் படுக்க போகிறேன் மேகி..." என்றப்படி அந்த கட்டிலின் மறுபுறத்திற்கு சென்று படுத்தான்.

ஏதோ பேச வந்தவளை தடுத்து... "நீ இங்க படுப்பதும்.. இல்லை அங்கே..." என்றப்படி அவளின் அறையின் புறம் கையை காட்டி "படுப்பதும்.. உன் இஷ்டம்.. உன்னுடன் வாக்கு வாதம் பண்ண எனக்கு நேரம் இல்லை.. ஐயம் டயர்ட்" என்று கூறிவிட்டு கண்களை மூடிக்கொண்டான்!!!

இங்கே என்ன நடக்கிறது என்று அவளுக்கு சுத்தமாக புரியவில்லை... இத்தனை நேரம் அவளிடம் வம்பு இழுத்தது என்ன?? அவளை முத்தம் கொடுத்து என்ன.. ஆனால்.. இப்ப என்ன பேசுகிறான்??

அவனை ஒரு நிமிஷம் முறைத்து பார்த்தவளுக்கு ரோஷம் பொத்துக்கொண்டு வர.. மனதார அவனை திட்டியப்படி எழுந்தவள் வேகமாக அந்த அறையை விட்டு வெளியேறி வேண்டும் என்றே அறை கதவை சத்தமாக சாத்திவிட்டு மனதில் பொருமியப்படியே மெத்தையில் விழுந்தாள்.

சென்ற அரை மணி நேரம் நடந்த விஷயமே மனதில் சுழன்றப்படி இருக்க.. யாரிடம் இருந்து போன் வந்தது?? என்ன பேசினான் என்று தீவிரமாக யோசிக்க… ஏதோ டாக்டர் என்று சொன்னது போல் மசமசவென்று நினைவிற்கு வந்ததே தவிர நிச்சயமாக எதுவும் புரியவில்லை.. தங்கி இருக்கும் விருந்தினருக்கு யாருக்கோ உடம்பு சரியில்லையோ?? என்று மனதில் சஞ்சலம் சூழ அதை எல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு தூங்க முயல… ஏனோ மனதில் பிறந்த அந்த ஒரு சின்ன சஞ்சலம் உடம்பு முழுவதும் பரவ… ஜில்லிட தொடங்கியது!!!

நேரம் செல்ல.. அது அதிகரித்ததே தவிர குறையவில்லை.. அடுத்த பத்தாவது நிமிஷத்தில் புரிந்தது… அவளின் மனதில் இருந்த நடுக்கம் உடம்பில் பரவி ஜில்லிட வைக்கவில்லை… அவளது அறையே… அவன் அறையை விட பன்மடங்கு குளிர அதிகமாக இருந்தது!!!

மற்ற எண்ணங்கள் எல்லாம் பின்னுக்கு தள்ளப்பட… தன்னை குளிரில் இருந்து காப்பதே பெரிதாக தோன்ற…

மரவட்டையாக சுருண்டு படுத்து போர்வை போர்த்திய போதும் கூட… அந்த குளிரை என்வென்று கேட்க வில்லை… வேறு போர்வை எடுக்கலாம் என்று விளக்கை போட்டு பார்த்தால் அவற்றை எங்கே வைத்திருக்கிறார்கள் என்று தெரியுவில்லை.. நேரம் ஆக ஆக.. இன்னும் குளிர்

அதிகமாகியதே தவிர குறையவில்லை... இதற்கே அறையில் ஃபேனும் இல்லை.. ஏ.சி இருப்பதற்ககான அடையாளும் தெரியவில்லை.. ஒரு வேளை சென்டரலைஸ்டு ஏ.சி என்றாலும் அவன் அறையில் இவ்வளவு குளிர் தெரியவில்லை என்று மன குழம்ப... அவளின் ஒவ்வொரு அணுவிலும் துளைக்கும் குளிரும் அசதியும் வாட்டியது.

கை கால் எல்லாம் விரைக்க தொடங்க.. அதற்கும் மேலும் பொருக்க முடியாது உரைந்த கைகளை தேய்த்து விட்டுக்கொண்டு.. எழுந்து ரஃபிக்கின் அறைக்கு பூனை மாதிரி கதவை திறந்துக்கொண்டு சென்றவள்... அவன் அறையில் ஏதாவது ரீமோட் இருக்குமா என்று கண்களால் துவாழவினாள்!!!

"என்ன வேண்டும் மேகி?!?" என்று படுக்கையில் படுத்து இருந்தவனின் குரில் கேட்டது.

அவனின் குரில் கேட்டு திடுக்கிட்டு திரும்பி பார்த்தவள்... "என் அறை ரொம்ப ரொம்ப குளிருது.. ஏ.சியை குறைக்க ரீமோட்டை தேடுகிறேன்" என்றாள் கலைப்பாக.

"ஏ.சியும் இல்லை.. ரீமோட்டும் இல்லை" என்றான் ஒருகளித்து தலைக்கு முட்டு கொடுத்து அனந்த சயனத்தில் அவளுக்கு காட்சி கொடுத்தப்படி.

"ரஃபிக் இது விளையாடும் நேரம் இல்லை.. உனக்கும் மட்டும் இல்ல.. எனக்கு டயர்டாக இருக்கு... நான் தூக்கனும்.." என்றாள் ஆத்திரம் பொங்க.

"இந்த அறையில் ஏ.சியும் இல்லை.. ஃபேனும் இல்லை.." என்றான் குரலில் எந்த உணர்வையும் காட்டாது.

"பின்ன எப்படி??" என்றாள் அவன் சொல்லும் பதில் புரியாது.

"நம் அறை இருக்கும் பகுதி... எது தெரியுமா?"

"நார்த் விங்.." என்றாள் ஒரு கோட்டாவியை விட்டப்படி.

"ம்ம்... நாம் இருக்கும் இந்த சின்ன குன்றின் மிக மிக உயரமான பகுதி இதுதான்... அங்கே தெரியும் ஜன்னலை திறந்து வைத்து விடுவார்கள்.. அதனால் எப்போதும் இங்கே வீசுவது இயற்க்கையான காற்று மட்டுமே.." என்றான் மிக மிக சாதரணமாய்..

"என்னது??" என்று அவள் எல்லா பக்கமும் திரும்பி பார்த்து விட்டு.. "ஆனா..." என்று ஆச்சரியமாக கேட்க.

"மேகி.. நாம் இருப்பது வடக்கு.. வடக்கு பக்கமாக வீச்சும் காற்றிக்கு வாடை காற்று என்று பெயர்... சீசனுக்கு தகுத்த மாதிரி இங்கே ஜன்னலை மாற்றி திறந்து வைப்பார்கள்..."

"ஜன்னல் இருக்கும் மாதிரி கூட தெரியவில்லை..." என்றாள் நம்ப முடியாது.

"பார்த்தவுடன் தெரியாத மாதிரி மிக மிக நேர்த்தியாக வடிவைத்திருப்பார்கள்.. ஏன் எப்படி உன் அறைக்கும் மட்டும் அப்படி காற்று அடிக்குன்னு கேட்டு... இந்த வீட்டின் இன்ஜினிரிங்க மார்வலை பற்றி இப்ப கிலாஸ் எடுக்க வைக்காதே.. இப்ப இங்கே படு... மற்றதை.." என்று அவன் அலுப்பாக சொல்லிக்கொண்டு இருக்கும் போதே..

"இங்கேயா?" என்று அலறிக்கொண்டு நான்கு அடி பின் நகர்ந்தப்படி.

"மேகி... எனக்கு காலையில் பத்து மணிக்கு முக்கியமான மீட்டிங் இருக்கு... நீ இங்க தூங்கினாலும் சரி... உன் ரூமில் தூங்கினாலும் சரி.. ஐ ஐஸ்ட் டோன்ட் கேர்.. ஆனால்.. இப்ப என்னை தூங்க விடு" என்று சொன்னவன் மேற்க்கொண்டு எதுவும் பேசாது அப்படியே குப்புற படுத்து சொன்ன மாதிரி தூங்கவும் செய்தான்.

மீண்டும் அந்த அறையில் சென்று தூங்க வேண்டும் என்று நினைப்பே அவளுக்கு நடுக்கத்தை ஏற்படுத்த.. அதற்கு மேல் அசதியும்.. தூக்கமும் வேறு அவளை உலுக்க.. நிம்மதியாக மெத்தையில் பப்ரப்பா என்று படுத்திருந்தவனை முறைத்தப்படி... அல்லது முறைக்க முயன்றப்படி நகர மறுத்த கால்களை இழுத்துக்கொண்டு கட்டிலின் மறுபுறத்தின் ஓரத்தில்

ஒண்டிக்கொண்டு படுத்தவள் அங்கே இருந்த போர்வையால் போத்திக்கொண்டாள்!!!

உடம்பு எல்லாம் அடித்து போட்டப்பது போல் சொர்வாக இருந்தாலும் கண்களில் எலுமிச்சை சாறு பிழிந்து போல் எரிந்த போதிலும்.. அருகில் படுத்து இருந்தவனின் விளைவால் உறக்கம் பேச்சு கூட வராது இம்சை செய்ய... அடுத்த பத்து நிமிஷம்.. நொடிக்கு ஒரு தரம் மெத்தையில் புரண்டப்படி இருந்தாள்.

"மேகி..." என்று பல்லை கடித்தப்படி அவளை அழைத்தான்.

மெத்தையில் புரளுவதை தான் சொல்கிறான் என்று புரிய.. சட்டென்று அசையாது ஒருகளித்து அவனுக்கு முதுகு காட்டி படுத்தவள் "என்ன?" என்றாள் அமைதியாக.

எரிச்சலாக திட்ட போகிறான் என்று தன் காதுகளை பட்டை தீட்டிக்கொண்டு காத்திருந்தவளுக்கு... சட்டென்று மெத்தை அசையும் உணர்வு தோன்ற... என்ன என்று உணரும் முன்... அணக்கோண்டா தன் இரையை அப்படியே உடம்பிற்குள் முறுக்கி தன்னுள் இழுத்துக்கொள்வது போல்.. அவள் அருகில் வந்தவன் என்ன நடக்கிறது என்று உணரும் முன் அவளை இடையோடு வாரி சுருட்டி அணைத்து அப்படியே கட்டிலின் மைய பகுதிக்கு அவளையும் இழுத்து சென்று இருந்தான்.

"ரஃபிக்??" என்று அவள் கத்தியப்படி அவனின் கையை பிடுங்க முயல.. இரும்பாய் இருகிய அவன் பிடியில் இருந்து தப்ப முடியாது தினறியவள் "விடு ரஃபிக்" என்றாள் ஆத்திரமாக.

"இப்ப... உன்னை விட்டேன் என்றால் நீயும் தூக்காது... என்னையும் தூங்க விடாது இம்சை பண்ணுவாய்... அதனால்.. இப்படியே வாயை மூடிக்கொண்டு தூங்கு" என்றான் அவளின் கூந்தலில் நன்றாக முகத்தை புகைத்தப்படி.

"இல்ல நான் என் அறையிலேயே போய் படுக்கிறேன்" என்று அவள் கடுகடுக்க..

"அங்கே குளிருகிறது என்று தானே இங்கே வந்தாய்?? பேசாமல் அமைதியாக நீ தூக்கினாய் என்றால் நான் ஒன்றும் செய்ய மாட்டேன்.. இல்லை..."

"இல்ல??" என்று கேட்கும் போதும் அவள் குரலில் நடுக்கத்தை அவனால் நன்றாக உணர முடிந்தது.

"இருவரும் வெட்டியாக தூங்காமல் இருப்பதற்கு பதில் உருப்படியாக நம் முதல் இரவையாவது கொண்டாடலாம் எப்படி உன் வசதி?!?" என்று மிரட்டலாக கேட்டான் அந்த உத்தமன்.

"எந்த சந்தர்பம் கிடைத்தாலும் அதை எப்படி உனக்கு சாதகமாக பயன் படுத்திக்கொள்ள முடிகிறது ரஃபிக்??" என்றாள் காட்டமாக.

"அதை சொன்னால் நீ நவாப் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான் ஆகிவிடுவாய்" என்ற கிசுகிசுப்பாக அவளின் காது மடல் உரசியப்படி பதில் மொழிந்தான்.

குளிருக்காக அவன் அறைக்கு வந்தவளுக்கு அவனின் அணைப்பும்.. பேச்சும் குளிரை இருந்த இடம் தெரியாது துரத்தி வெண்தனலாய் தகிக்க செய்ய… மேற்கொண்டு எதையும் பேச விரும்பாது…

"குட் நயிட்" என்றாள் இதய துடிப்பு எகிறி துடிக்க.

அலுப்பாக "குட் நயிட்" என்று காதில் மொழிந்தவன் இன்னும் வசதியாக தன்னோடு அணைத்துக்கொண்டு அவனின் மூச்சு காற்றி அவளின் கழுத்தில் வீச அதை பற்றி அக்கரை அற்று அப்படியே தூக்கியும் போனான்.

இடுப்பை சுற்றி வளைத்திருந்த அவன் கையின் பாரம் அவளை எந்த பக்கமும் திரும்ப முடியாது ஒரே இடத்தில் இருத்தி வைக்க.. அப்படியே ஆடாமல் அசையாமல் அவனின் நெருக்கதில் அனுபவிக்கவும் முடியாது… விட்டு விலகவும் முடியாது… அடுத்த பத்து நிமிடம் யுகமாக நகர… மெல்ல அசதியும் சொர்வும் அவளை ஆட்கொள்ள அப்படியே அமைதியாக நித்திரையில் ஆழ்தாள்!!!

நன்றாக ஆழ்ந்து தூங்கியவளுக்கு அறையின் கதவை தட்டும் சத்தம் கேட்டு மெல்ல விழிப்பு தட்ட.. கண்களை திறக்க முன் யாரோ மெல்ல கதவை திறக்கும் சத்தம் காதில் விழந்தது!!!

அவசரமாக திரும்பி பார்க்க நினைத்தளுக்கு அப்போது தான் ரஃபிக்யுடன் ஒட்டிக்கொண்டு கட்டிலில் படுத்திருப்பது புரிய... கதவை திறந்துக்கொண்டு உள்ளே வந்தவர்கள் அவர்களை இப்படி பார்த்தால்?!? என்ற எண்ணமே அவளை கூசி சிலிர்க்க செய்ய... பதறிப்போய் வேகமாக தன்னை போர்வைக்குள் முழுமையாக புதைத்துக்கொண்டு அவன் மார்பில் பல்லியாக ஒண்டிக்கொண்டு...

"ரஃபிக்... யாரோ ரூம்மிற்குள்.. வந்திருக்கிறார்கள்" என்று அவன் தோளை உலுக்கியப்படி முணுமுணுத்தாள்.

"ம்ம்.. அதுக்கு ஏன்டி பூகம்பம் வந்த மாதிரி இப்படி உலுக்குற??" என்று சவாதானமாக கூறியப்படி தன் மார்பில் ஒட்டிக்கொண்டு இருந்தவளை மேலும் தன்னுடன் இருக்க கட்டிக்கொண்டதோடு மட்டுமல்லாது அவள் மேல் கால்களை சேர்த்து போட்டுக்கொண்டான் அந்த உத்தமன்.

அணிந்திருந்த சட்டையை தாண்டி வெளி வந்த கதகதப்பை உணர்ந்து அவளுக்கு உடம்பெல்லாம் சிலிர்த்த எழுந்து நின்ற போதும் "ரஃபிக்.. ரூம்மிற்குள்.. யாரோ.." என்று மீண்டும் அவள் ஆரம்பிக்க..

"தெரியும்.. தெரியும்... என் வேலை ஆள்தான்... ஒன்பது மணிக்கு என் அறைக்கு காபி எடுத்து வரச்சொல்லி இருந்தேன்" என்றான் அமைதியாக.

"ப்ளிஸ் முதலில் அவனை வெளியே போக சொல்லு" என்று அவன் பரந்த மார்பில் புதைத்திருந்த குரல் மண்றாடலுடன் வெளி வந்தது.

"மேகி.. ஏன் இப்படி பயப்படற?? என் அறையில் என் பீவிக்கு படுக்காது வேறு எங்க இருப்பாள்??" என்று அவன் வியாக்கானம் பேச..

"அப்படியே உன்னை.." என்று அவள் பற்களை நரநரவென்று கடித்தவப்படி இழுக்க...

"என்னை.... என்ன பண்ண போற??" என்று அவள் ஏதோ அவனை கொஞ்ச வந்தது போல் ஆவலாக கேட்டவன்.. அவள் பதில் பேச வாய் திறக்கும் முன்... "ஐயம் வெயிட்டிங்" என்றான் கிரக்கமாக.

எரிச்சலாக அவனை கிள்ள.. மிக சுவாதினமாக அவளின் கையை தன் கைக்குள் பிடித்து தடுக்க... ஏற்கனவே அவளின் மற்றொரு கை இருவருக்கும் மதியில் இருந்தப்படியால்... எதுவும் பண்ண முடியாத சூழலில் அவள் புதைந்திருந்த அவனின் மார்பை கடித்து வைத்தாள்!!!

"சைவம் என்று ஊருக்குள் தம்பட்டம் அடித்து விட்டு இப்ப என்ன ரத்தம் குடிக்கும் டிராகுளா ரேஜிற்கு கடித்து வைக்கிறாய்" என்று கூறியப்படி அவளின் கையை விட்டு விட்டு மேலும் கடிக்க முடியாதப்படி அவளின் முகத்தை அவன் மார்பில் இருக்க கட்டி பிடித்தவன்... சொடுக்கு போடும் நேரத்தில் எப்படி மாற்றினான் என்று தெரியாதப்படி அவளை கீழே தள்ளி விட்டு அவளுக்கு மேலே வந்தோடு மட்டும் அல்லாது அவள் கைளை அசைக்க முடியாதப்படி பிடித்திருக்க...

இந்த கலவரத்தில் அவர்களை அரணாக காத்து இருந்து போர்வை விலக... காலை வெயில் நன்றாக அடித்துக்கொண்டு கொண்டு இருந்ததை கண்டவள்...

"ஐய்யோ... உங்க வேலை ஆள்.." என்று அலறியப்படி தலையை திருப்பி பார்த்தவளுக்கு அதிர்ச்சியில் கண்கள் அப்படியே விரிந்தது..

காரணம் அங்கே வேலை ஆட்கள் மட்டும் அல்ல அவர்களை யாரும் பார்க்க முடியாதப்படி அந்த கட்டிலின் நான்கு தூண்களில் இருந்து வண்ணம் மிகு திரைசீலை மறைத்து தொங்க..

அப்போ... இத்தனை நேரம் அவள் வேலை மெனக்கட்டு கத்திக்கொண்டு இருந்திருக்க வேண்டிய அவசியமே இருந்திருக்கவில்லை!!!

அட பாவி.. எவ்வளவு எளிதாக அவளை ஏமாற்றி விட்டான்... இத்தனை நேரம் அவளின் மன உளைச்சலை எப்படி பயன்படுத்துக்கொண்டான் என்று கோபம் பற்றிக்கொண்டு வர..

அவர்கள் அண்ணன்கள் கற்றுக்கொடுத்த தற்காப்பு கலையை பயன்படுத்தலமா என்று அவள் தீவிரமாக திட்டமிடுகையிலேயே...

"மேகி... நீ கராத்தே.. மட்டும் இல்ல.. கும்ஃபூ.. டெக் ஒன் டோ என்று எதை என்னிடம் பிரயோக படுத்தினாலும் தப்ப முடியாது.." என்று அவன் தொனவட்டாக பதில் கூறினான்.

"அப்படியா?!?" என்று வந்தது அவளிடம் இருந்தது.

"ஆப் கோர்ஸ்..."

"ஓ!!!!" என்று அவள் இழுத்தவள் அதையும் தான் பார்க்கலாமே என்று கூறிப்படி கண்களில் அலட்சியத்துடன் அவனை பார்த்தவள்..

ஒரு முறையாவது... ஒரே ஒரு முறையாவது அவனை ஜெயிக்க வேண்டும் என்ற எண்ணம் திடீரென்று அவளுள் குமிழிட.... வெளியே இருந்து வந்த வெளிச்சம் அவனின் கலைந்த தலையிலும்.. ஷேவ் செய்யப்படாத ஒருநாள் தாடியிலும் நிலைத்து நிற்க... உள்ளே ஆர்பரித்தும் ஓடும் உணர்வுகளை அடக்கியவளுக்கு அவனை ஜெயிக்க ஒரு வழி தெளிவாக தெரிந்தது!!!

அவளின் கராத்தே மூவ்விற்காக காத்திருந்தவனை வீழ்த்தும் விதமாக தன் தலையை சற்றே உயர்த்தி ஒரு நாள் முள் தாடியுடன் இருந்த அவனின் கன்னத்தில் முத்தமிட... ரஃபிக் ஷாக்கிக் அவளை பார்க்க... அதை அலட்சிய படுத்தியவள்.. மேலும் நெற்றி.. புருவம்... என்று முகம் முழுக்க முத்தட....

அவள் கொடுக்கும் ஒவ்வொரு முத்திற்கும் அவனின் மூச்சு காற்று தத்தி தடுமாறி வெளி வருவதையும்... தன் உணர்வுகளை கட்டுபடுத்த அவன் படும் பாட்டை கண்டவளுக்கு... கராத்தே.. கும்பூ.. டெக் ஒன் டோ போன்ற தற்காப்பு கலையில் எல்லாம் வீழ்த்த முடியாதவனை ஒரு சின்ன முத்ததில் மேகி வீழ்த்த... முதல் முறையாக அவளிடம் வலிய சென்று சரண் அடைத்தான் நவாப் மிர் ரஃபிக் அலிவுமர் அலிகான்!!!

இதில் விசித்திரம் என்னவென்றால்... எவனை வீழ்த்த வேண்டும் என்று முத்தம் யுத்தத்தை தொடங்கினாளோ.. அவளே இதில் சிறை கைதியாகி அவன் அவளை விடுவித்த போதும் கூட கைகள் எடுக்க வேண்டும் நினைவே இல்லாது தான் விரித்த வலையில் தானே பலிகாக... அவள் ஆரம்பித்த போட்டி இப்போ அவனுடையாதாகி போக... இருவரும் தங்களை வேகமாக அதில் இழந்து.. ஒருவர் முத்ததில் மற்றொரு கரைந்துகொண்டு இருந்தனர்!!!

"மேகி...?!?" என்று கரகரத்த குரலில் அழைத்தப்படி தலையை உயர்த்தவனின் கண்களில் பொங்கிய உணர்வுகளை முன்பு ஒரு நாள் கண்டு இருக்கிறாள்...

அன்றையை நினைவுகள் முட்டி மோதிக்கொண்டு கண் முன்னே படை எடுக்க...

அவளையும் அறியாது உதடுகள் தானாக.. "பிருத்தீவி" என்று கிசுகிசுக்க....

அந்த பெயரை முழுமையாக அவள் முடிப்பதற்குள் அவனை முத்தமிட்டிருந்தான் அவளின் பிருத்தீவி!!!

எவ்வளவு பெரிய அணையாக இருந்தாலும் நீரை வெளியேற்ற சின்ன மதகு போதும்.. அது போல்.. இருவருக்குள் பொங்கி வழிந்துக்கொண்டு இருந்த உணர்வுகள் அவர்கள் முத்தம் ஒரு வடிகால அமைய... அதை அத்தொடு நிறுத்த இருவருக்கு கடைசி வரை தோன்றாது போக.. முதல் இரவு கொண்டாடலாம் என்று கேட்டவன் இப்போ இருவரும் சேர்ந்து முதல் பகல் கொண்டாடி முடிந்தனர்!!!

# அத்தியாயம் 34

மெல்ல கண்களை திறந்து பார்த்தவளுக்கு புது இடத்தில் படுத்து இருப்பது புரிய... கேம்ப் என்று நினைத்த நேரம் எல்லாம் ஊர் சுற்றியவளுக்கு இது ஒன்றும் புது உணர்வு இல்லை என்பதால் மெல்ல எழுந்து அமர்ந்து கண்களை சுழல விட்டவளுக்கு தன்னை சுற்றி போடப்பட்டிருந்தத் திரை சீலையை பார்த்த போது கூட எதுவும் தோன்ற மறுக்க...

சோம்பல் முறித்து... தூக்கக் கலக்கத்திலேயே திரையை விலக்கியப்படி மெத்தையை விட்டு கீழே இறங்கி மேலே மாட்டப்பட்டிருந்த மணிக் கூண்டில் நேரத்தை பார்த்தவளுக்கு மணி ஐந்து என்று சேவகன் ரூபத்தில் கையில் அம்புடன் இருந்த மணி முள் காட்ட... காலையா அல்லது மாலையா? என்று யோசித்தப்படி இரண்டு அடி எடுத்து வைத்தவளுக்கு சட்டென்று அங்கே இருந்த ரஃபிக்கின் உடையை பார்த்து ஷாக் அடித்து நின்றாள்!!!

அவனின் அறை என்று புரியத் தொடங்க.. அடுத்ததாக உருகி கரைந்து காதல் செய்ததும்... கடைசியாக அவன் ஏதோ பேச வந்ததை இவள் காது கொடுத்து கூடக் கேட்காது அவனின் பறந்த மார்பிலேயே தலை சாய்ந்து அயர்ந்து தூங்கியதும்.. பின்

அவனின் போன் அடித்து தூக்கம் கலைந்தவளின் காதில் அவன் ஏதோ கோபமாக பேசியது போல தோன்ற... "என்னாச்சு??" என்று கண்களை திறக்காது கேட்டவளிடம்

"அவசர வேலை இருக்கு... மேகி இதை அப்புறம் பேசலாம்" என்று அவளின் சென்னியில் முத்தம் கொடுத்து விட்டு எழுந்து போவது வரை எல்லாம் நிழல் படமாக படை எடுத்தது.

இப்போ எப்படி அவன் முகத்தில் விழிப்பாள்?? பார்க்கும் போது எல்லாம் அவனிடம் சண்டையிட்டு விட்டு இப்போ ஒரே முத்தத்தில் அதுவும் வீம்புக்காக அவனை ஜெயிக்க வேண்டுமே என்ற காரணத்திற்காக இவள் தொடுத்த பானத்தில் இவளே பலியாகுவாள் என்று அவளை அணுவளவு கூட யோசிக்கவில்லை.

அங்கே அமர்ந்திருந்த பத்து நிமிடமும் முன்காலை பொழுதில் நடந்த சம்பவங்களே அவளை சுழண்டு அடித்து நிலைக்கொள்ளாது தவிக்க செய்ய..

இங்கே இருந்தால் இந்த நினைவுகளை துறத்திக்கொண்டே தான் இருக்கும் என்று தீர்மானத்திற்கு வந்தவள் பேய் தன்னை துறத்துவது போல் விழுந்து அடித்துக்கொண்டு பாத் ரூம் ஓடி வேகமாக குளித்து விட்டு டிரஸ்சிங் ரூம் சென்று அங்கே

அடுக்கி வைக்கப்படிருந்த புடவையை மின்னல் வேகத்தில் உடுத்திக்கொண்டு வெளியேறினாள்.

மனதில் உள்ளே மாபெரும் பிரளயமே வெடித்துச் சிதறிக்கொண்டு இருக்க... சங்கியிடம் இருக்கும் சிம்பியை பார்க்க கால்கள் பரபரத்தது!!!

எதை பற்றியும் தோண்டித் துருவாமல் தன் அணைப்பிலேயே ஆறுதல் கொடுக்க கூடிய சிம்பியை துடித்த மனதை அடக்கிக்கொண்டு... சந்தர்ப்பமும் சூழ்நிலையும் அதற்கும் ஒத்து வராது என்பதால் அமைதியாக தன் விங்கை விட்டு வெளியே வந்தவளை பார்த்து ஓடி வந்த வேலைக்கார பெண்மணி..

"உங்களை அத்தை வந்து பார்க்க சொன்னார்கள்.. டைனிங் ரூம்மில் இருக்கிறார்கள்" என்றாள் சிரித்தப்படி.

தலை ஆட்டி விட்டு அங்கிருந்து நகர்ந்தவள் எந்த டைனிங் ரூம் என்பதை கேட்க மறக்க.. ஒவ்வொரு டைனிங் அறையாக தேடிக்கொண்டு வந்தவளுக்கு கல்யாணத்தின் போது அவள் மறைந்து இருந்த அந்த பல்லாக்கும் அதை தாங்கி இருந்த பிரம்மாண்ட ரதமும் கண்ணில் பட... மீண்டும் அவனை நோக்கி ஓடிய மனதை வெகு சிரமத்துடன் அடக்கியவள் வேகமாக அந்த இடத்தை கடந்து செல்ல விழைந்தவளை...

"நீ இங்கேயா இருக்கிறாய்??" என்று ஆச்சரியமாக மேக மித்ராவை விருந்தினராக்கி கேட்ட ஆமிராவின் குரலை கேட்ட மாத்திரத்தில் மனம் சலனப்பட... அமைதியாக குரல் வந்த திசைக்கு திரும்பியவளுக்கு அலங்கார பூஷதையாக நின்ற ஆமிராவை பார்த்து கண்கள் கூசச் செய்த போதும் அமைதியாக....

"ம்ம்.." என்று அமைதியாக கூறிய மேக மித்ரா நகர...

"ஆனால்.... இப்ப நீ இருக்க வேண்டிய இடம் இது இல்லையே..." என்று அவள் இழுக்க..

"பின்ன எது?" என்று அவளையே திருப்பிக் கேட்டாள் மேக மித்ரா.

"அதை அப்புறம் சொல்கிறேன்.. இப்ப இவ்வளவு அவசரமாக எங்கே போகிறாய் மேக மித்ரா??"

"அத்தையை பார்க்கப் போகிறேன்"

"ஓ!!!" என்று தலை முதல் பாதம் வரை எடை போடும் பார்வையை ஓட விட்டவள்..

"இப்ப புரியுது.. ஏன் இங்க இன்னும் இருக்கிறாய் என்று... ஹனி மூனை வீட்டிலேயே கொண்டாடுறீங்க... " என்று அசிங்கமாக பேச வாயை திறக்கும் போதே...

"உன் பற்கள் வரிசை மாறாது அப்படியே இருக்க வேண்டும் என்ற ஆசை இருந்தால் இதற்கு மேல் ஒரு வார்த்தை பேசாது வாயை மூடிக்கொள் ஆமிரா..." என்று முதல் முறையாக அவளை எதிர்த்து நின்றாள் மங்கி.

"என் வாயை மூடி விட்டால் இந்த ஊர் வாயை மூடி விட முடியுமா??" என்று வன்மமான புன்னகையுடன் கூறினாள் .

"ஊர் என்ன பேசுகிறது என்று தேவை படும் போது கேட்டு தெரிந்துக்கொள்கிறேன். விருந்தினராக இந்த வீட்டிற்கு வந்திருக்கிறாய் என்ற மரியாதையை காப்பாற்றிக்கொள்" என்றாள் ஆத்திரமாக.

"மரியாதையை பற்றி நீ எனக்கு கிலாஸ் எடுக்கிறாயா? போகிற போக்கை பார்த்தால்... நானாவது இந்த வீட்டில் வர போகும் மருமகள் என்ற பெயரில் இரண்டு வருடம் மரியாதையாக உலா வந்தேன்.. ஆனால் நீ இரண்டு நாள் கூட மருமகளாய் வாழ மாட்டாய் போல??".

"என்னை பற்றி இவ்வளவு அக்கரையுடன் நீங்க கவலைப்பட வேண்டாம் ஆமிரா" என்றாள் அழுத்தம் திருத்தமாக.

"வீணா அங்கே போய் உன்னை அசிங்கப் படுத்திக்கொள்ள கூடாதே என்ற கவலைதான்" என்றாள் ஆமிரா.

"நான் எதுக்கு அசிங்க படனும்??"

"ஓ!! அப்ப இன்னும் விஷயம் உனக்கு தெரியாதா??" என்ற போது அவள் முகத்தில் துள்ளி எழுந்த உணர்வுகளை பார்த்து ஒரு நிமிஷம் திகைத்தவள்.

"எனக்கு தெரிய வேண்டி விஷயமா இருந்தால் முன்னாடியே சொல்லி இருப்பார்கள்" என்றாள் திடமாக.

"உன் மன தைரியத்தை பாராட்ட வார்த்தைகளே இல்லை..." என்று சிலாகித்து உயர்வு நவிர்ச்சியாக பேசியவளை கண்டுக்கொள்ளாது இவள் திரும்ப..

என்ன என்று கேட்பாள் என்று எதிர்பார்த்தப்பது போல் அவள் இடைவேளை விட்டு நிறுத்த...

அவளிடம் கேட்க வேண்டும் என்ற எண்ணமே இல்லாத மேக மித்ரா தன் கடமை முடிந்தது என்பது போல் திரும்பி செல்ல.. அதை கண்டு இன்னும் கொதித்த ஆமிரா..

"கால் நடை மருந்தவராகத் தானே நீ இங்க நவாப்பை பார்த்து.... அவர் வேறு ஒருத்திக்கு நிச்சயிக்கப்பட்டு இருக்கும்போதே அவரை மயக்கினாய்??" என்று ஆமிரா கேட்ட கேள்வி அவளின் கால்களை கட்டி போட்டது.

மெல்ல திரும்பியவள் ""நான் டாக்டராக இருப்பதில் உனக்கு என்ன பிரச்சனை??"

"என் பிரச்சனையை எப்படித் தீர்ப்பது என்று நான் பார்த்து கொள்கிறேன் இப்ப உன் பிரச்சனையை தீர்க்க வழி கண்டு பிடி"

என்றாள் எகத்தாளமாக கூறியவள் தொடர்ந்து "நீ யாரை வைத்து நவாப்பை மயக்கினாயோ அது இப்ப சாக பிழைக்க கிடக்கிறது.." என்று உவப்பாக சொன்னாள் ஆமிரா.

ஒரு சாவை இத்தனை மகிழ்ச்சியாக சொல்லும் இவள் என்ன மனுஷி என்று அசூயை அடைந்த போதும்... "ஆமிரா நான் யாரையும் மயக்க வில்லை..." என்று வாய் பாட்டிற்கு பதில் சொல்லிக்கொண்டு இருக்கும் போதே... "நீ யாரை சொல்கிறாய்??" என்று இதயம் எகிறி துடிக்க கேட்டாள்.

"செத்தக்" என்றாள் குரூரமாக சிரித்தப்படி.

"வாட்??" என்று அலறியப்படி வழியில் இருந்து நாற்காலியைக் கூட பார்க்காது நேராக வந்து தன் காலில் இடித்துக்கொண்டு அதை பற்றிய நினைவு கூட இல்லாதவளாய் "என்ன சொல்ற ஆமிரா?" என்றாள் குரல் தொண்டைய அடைக்க.

"இந்த வீட்டு கடை நிலை வேலைக்காரனுக்கு தெரிந்தது கூட உனக்கு தெரியவில்லை என்னும் போது.. ஐ பிட்டி யூ" என்றாள் இல்லாத உணர்வுகளை குரலில் காட்டி.

"என்னாச்சு?? செத்தக்கிற்கு என்னாச்சு??" என்றாள் துடித்து துடித்துபோய்.

அலட்சியமாக அவளை பார்த்தவள் "உங்க கல்யாண ஏற்பாட்டில் செத்திற்கு உடம்பு சரியில்லை என்பதையே

கவனிக்க தவற... திடீரென்று உங்க ரீஷப்ஷன் அன்று கண்களை திறக்காது படுத்திருந்ததை பார்த்து விட்டு அவசரமாக மருத்தவரை அழைக்க... வந்தவர் இனியும் ஒன்னும் பண்ணவே முடியாது என்று கையை விரித்த நிலையில் வெளியூரில் இருந்து வந்த டாக்டர் ஆப்ரேஷன் பண்ணி இருக்கார்!! இருந்தாலும் போன கேஸ் என்று தான் பேச்சு இருக்கு" என்று குரூர திருப்தியுடன் மொழிந்தாள் ஆமிரா.

ஒரு நிமிஷம் இவள் சொல்வதில் பொய் இருக்குமோ என்று மனது சஞ்சலப்பட்ட போதும்... திருமண விருந்து அன்று ரஃபிக் போனும் கையுமாக திரிந்ததில் இருந்து... அடிக்கடி காணாமல் போனது... அவன் பேசியதில் புரிந்த வார்த்தைகள் என்று ஒவ்வொன்றாக கோர்த்து பார்த்த போதும் ஆமிரா பொய் கூற வாய்ப்பு இல்லை என்றே தோன்ற... அவள் கூறிய உண்மையின் தாக்கம்... கண்களை இருட்டிக்கொண்டு.. கால்கள் துவள... தன் பாரத்தை தாங்க முடியதவளாக அருகில் இருந்த நாற்காலியை பிடித்து உடைந்து போய் அமர்ந்தவள் அப்படியே தன் தலையை கைகளுக்கு முட்டுக்கொடுத்தாள்!!!

மூடிய கைகளுக்கு பின்னாடி இருந்து உயிர் வலியில் போராடும் ஜீவனின் குரலாய்...

"நான் செத்தக்கை சாக விட மாட்டேன்"

மேக மித்ரா உடைந்து போய் அமர்ந்ததை திருப்தியுடன் பார்த்த ஆமிரா... ஒரு வெற்றி புன்னகையுடன்...... "நீ வெறும் பேகம் மேக மித்ரா அல்வுமர் அலிகான் மட்டும் தான் கடவுள் இல்லை..."

"செத்தக்கை பிழைக்க வைக்க கடவுளாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை.."

"ஓ!! அப்ப கடவுள் அருளால் தான் செத்தக்கை இனி காப்பாற்ற முடியும் என்று டாக்டர் சொன்னாரே..."

"ப்ளிஸ் அப்படி சொல்லாதிங்க... செத்தக் பிழைத்துக்கொள்ளும்..." என்றாள் பீறி எழும் அழுகையை உள்ளே அடக்கிக்கொண்டு.

"பத்து சதவிகிதம் தான் பிழைக்க வாய்ப்பு இருக்கு என்று ஆப்ரேஷன் பண்ண டாக்டரே சொன்னதாக கேள்விப்பட்டேன்" என்று தோள்களை குலுக்கினாள்.

அதற்கு மேல் மூச்சு கூட சரியாக விட முடியாது மூடிய கைகளுக்குள் திணறிக்கொண்டு அமர்ந்திருந்தவள்.. "ஒரு சதவிதம் இருப்பதே என் நம்பிக்கைக்கு போதும் என்னும் போது... பத்து சதவிதம் இருக்கே என்று டாக்டரே கூறிவிட்டப்படியால் செத்தக் நிச்சயமாக பிழைத்துவிடும்"

"ப்பா... உன் பாசத்தை பார்த்து எனக்கு புல் அரிக்குது... என்ன பாசம்.. என்ன பாசம்" என்று சிலாகித்தவள்.. "இங்க

உள்ள பழக்கம் தெரியுமா?? சாகும் நிலையில் இருக்கும் குதிரைகளை வைத்திருக்க மாட்டார்கள்... அதை எடுத்துக்கொண்டு போய்..." என்று ஆமிரா ஆரம்பித்து அடி மாடுகளை போல் இந்த குதிரைகளையும் என்ன செய்வார்கள் என்று காட்சிப்படுத்த...

"போதும் நிறுத்து ஆமிரா" என்றாள் தன் காதுகளை மூடிய மேக மித்ரா.

"நான் ஒன்றும் இல்லாததை சொல்ல வில்லை.. வேண்டுமானால்.." என்று கேட்கும் போதே..

"அதை பற்றி நான் அறிவேன்"

"ஒ!! உனக்கும் தெரியுமா? இதே நிலை நீடித்தது என்றால் இன்றே அதை தூக்கிக்கொண்டு போவதாக ஒரு பேச்சு இருக்கு... உயிர் ஊசல் ஆடும் போதே நீயும் பார்த்து விட்டு வந்து விட்டால்..." என்று கொஞ்சம் கூட ஈவு இரக்கமே இல்லாது ஏற்கனவே வலியில் துடித்துக்கொண்டு இருந்தவளின் வலியில் விஷமாக கொட்டியபபடி.

"நான் செத்தகை எங்கேயும் அனுப்ப மாட்டேன்" என்றாள் வெகுண்டு.

"பேகம் மேக மித்ரா அவர்களே...இந்த கொள்கை சார்ந்த உங்களால் ஒன்றும் பண்ண முடியாது"

இதே பிரச்சனை அவளை முன்பு ஒரு முறை எதிர்க்கொண்டு இருக்கிறாள்.. ஆனால் அதன் தீர்வு தான் மிக மிக மோசமாக வந்தது... அன்றும் இதே போல் குதிரை விஷயத்தில் தோற்று அழுது ஓடியதும்... அதற்கு அடுத்து அவளை குதிரையில் தூக்கி முத்தமிட்டதும்.. பின் வரிசையாக அரங்கேறிய விபரிதமும் கண் முன்னால் படம் எடுக்க... அன்று செய்த தவறின் விளைவு இதோ இன்று வரை பின் தொடர்ந்துக்கொண்டு இருக்கிறது...

அன்று தான் அவளை தோற்று அழ வைத்தான் என்றால் இந்த முறையாவது அவளை ஜெயிக்க விடுவானா??

தெரியவில்லை.. ஜெயிப்பதில் அதுவும் அவளை ஜெயிப்பதில் தீராத வெறிக்கொண்ட ரஃபிக் இவள் கேட்டுக்கொண்டாள் என்பதற்காக செத்தக்கை விட்டு வைப்பானா?? என்று மனதில் கேள்விகளால் புழுங்க...

"நான் செத்தக்கை எங்கேயும் அனுப்ப மாட்டேன்" என்று மிக மிக திடமாக வந்தது அவளின் பதில்.

தீவிரமாக யோசனையுடன் அவளை பார்த்தவள்.. "இப்ப புரியுது... நீ இது மாதிரி எதாவது பண்ணுவாய் என்று தெரிந்துதான் உன்னிடம் சொல்லவில்லை போல.." என்றாள் விடையை கண்டு பிடித்த திருப்தியில்.

அவளின் யூகம் சரியே என்று மேகியின் மனதில் பட.. நெஞ்சில் தைத்துக்கொண்டு இருந்த வலி இன்னும் அதிகமாக... காற்றே இல்லாத அறையில் நிற்க வைத்தது போல் மூச்சு தினறிக்கொண்டு இருக்கும் போதே...

இவ்வளவு விஷயம் நடந்துக்கொண்டு இருக்கும் போதா எதுவும் சொல்லாது அவளிடம் அப்படி கொஞ்சி குலாவினான் என்று ரஃபிக்கின் செய்கையை நினைத்து ஒரு புறம் வெறுப்பு மண்டியது.

"ஊர் உலகத்திற்கு நீ கல்யாணம் பண்ணி காலடி எடுத்து வந்த இரண்டே நாளில் ரஃபிக் அப்பா பரிசு அளித்த செத்தக் இப்பவோ அப்பவோ என்று இழுத்துக்கொண்டு கிடைக்கிறது என்றால் உன்னை அதிர்ஷ்ட கட்டை என்று தலையில் தூக்கிக் கொண்டாடுவார்கள் என்றா எதிர்பார்க்கிறாய்?" எகத்தாளமும் நய்யாண்டியும் போட்டிப் போட...

"ஏன் நீங்க நிச்சயிக்கப்பட்ட பின்னாடி தானே ரஃபிக் அப்பா மறைந்தார் உங்களை அப்படிதான் இங்கே சொன்னர்களா?" என்று திருப்பி கேட்டாள் அவள்.

இந்த தாக்குதலை கொஞ்சமும் எதிர்பார்க்காத ஆமிரா... "செத்தக் மீது காட்டும் இதே பாசம் நவாப் மேல் உனக்கு இருந்திருந்தது என்றால் அவர் என்னை விட்டு உன்னை கல்யாணம் பண்ணியத்திற்கு ஒரு காரணம் இருந்திருக்கும்

ஆனால்.. உன்னை மாதிரி உணர்ச்சியே இல்லாதவளுக்காவா என்னை துறந்தார் என்பதை நான் என்னால் ஜீரணிக்க முடியவில்லை.."

செத்த்கை நினைத்து தவியாய் தவித்துக்கொண்டு இருக்கும் சூழலில் என்ன இவள் பேசும் பேச்சு என்ன என்று படம் எடுத்து ஆடும் நல்ல பாம்பை போல் விசுக்கென்று தலையை உயர்த்தியவள்..

"இது நீங்க அவரை கேட்க வேண்டிய கேள்வி..." என்றாள் ஆவேசமாக.

"அப்படி எளிதாக தப்பித்துக்கொள்ள முடியாது பேகம் மேக மித்ரா அவர்களே... ஏன் அன்று நவாப் படுத்த படுக்கையா கிடந்த போது ஒரு முறை ஒரே ஒரு முறை பார்க்க வேண்டும் என்றே தோன்றவில்லை.... அவ்வளவு கல் நெஞ்சக்காரியான உன்னிடம் எதை பார்த்து மயங்கினார்??" என்று கிட்டதட்ட கூவினாள்.

"அந்த விபத்தை ஏற்படுத்தியவரே நீங்கள் என்னும் போது அதை பற்றி கேட்க உங்களுக்கு எந்த வித உரிமையும் இல்லை" என்றாள் சூட்டோடு சூடாக.

"ம்ம்ம்.. அப்படியா?? அந்த விபத்திற்கு மூலக் காரணமே நான் அல்ல நீதான் என்று தெரியும் போது கூடவா??"

"இதை விட பேத்தலை நான் கேட்டதே இல்லை" என்றாள் ஆத்திரமாக.

"நான் ஒன்றும் மூளை குழப்பிப்போய் பிணாத்திக்கொண்டு இருக்கவில்லை மேக மித்ரா.. அன்று தான் நவாப் உன்னை பற்றி என்னிடம் சொல்லிய நாள்... அந்த அதிர்ச்சியை தாங்க முடியாது... கையில் ஓட்டிக்கொண்டு இருந்த கார் கன்ட்ரோல் இழக்க... வண்டி மூன்று முறை பல்ட்டி அடித்து கவிழ்ந்தது!!!"

"இதில் ரொம்ப ரொம்ப சோகத்திற்குரிய ஒரே விஷயம் யாருக்காக என்னுடன் பேசினாரோ... யாருக்காக அவர் கொடுத்த வாக்கை காப்பாற்ற தவறினாரோ அந்த பெண்... அவர் உயிர் பிழைப்பாரா மாட்டாரா என்று ஹாஸ்பிட்டலில் கிடக்கும் போதும் கூட ஒரு தடவை... ஒரே ஒரு தடவை கூட எட்டி பார்க்க வரவே இல்லை?!?" என்ற போது அவளின் கண்களில் காழ்புணர்ச்சியில் ஜொலித்தது.

அத்தனை நேரம் அடக்கி வைத்திருந்த நீர் தடுப்பை உடைத்துக்கொண்டு கன்னத்தின் வழியே வெளியே வர "எனக்கு தெரியாது... ரஃபிக் விபத்து நடத்தை பற்றி எதுவுமே தெரியாது.. என்னிடம் யாரும் சொல்வே இல்லை.. நான் ஊருக்கு திரும்பிய மறுநாளே காட்டிற்குள் போய் விட்டேன்... திரும்பி வர பத்து நாளுக்கு மேல் ஆகிவிட்டது அதற்குள்.. அதற்குள்..." என்று அவள் பேச முடிக்காமல் திணற..

அவளை ஒரு மார்க்கமாக பார்த்து "ஒரு இரவில் நவாப்பின் படுக்கையை பகிர்ந்து விட்டால் உடனே இந்த வீட்டின் மகாராணி அந்தஸ்து கிடைத்து விடுமா என்ன?" என்றாள் ஆமிரா கீழ் தரமாக.

"என்னை கொலை காரி ஆக்காதே ஆமிரா" என்றாள் பற்களை கடித்தப்படி.

"ஏம்மா உண்மையை சொன்னால் உடம்பு திகுதிகு வென்று பற்றிக்கொண்டு எரியுதா?? ஒன்று யோசித்து பார்த்தாயா பேகம் மேக மித்ரா.... எந்த வித உரிமை இல்லாத போதே உன்னுடன் நவாப் அப்படி இருந்தார் என்றால் கல்யாணத்திற்கு நிச்சயக்கப்பட்டிருந்த என்னுடன் அவர் எப்படி எல்லாம்..."

"ஸ்டாப் பிட்..." என்றப்படி ஆவேசமாக எழுந்து அவள் முன் பத்திர காளியாக நின்றவள் "இது மாட்டையும் மலை பாம்பையும் பிடித்த கை... ஒரு குள்ள நரியின் கழுத்தை நசுக்க வெகு நேரம் ஆகாது... இனி ஒரு தடவை.... நவாப் என்ற பெயர் உன் வாயில் வந்தது என்றால் அடுத்து மூச்சு விட கூட முடியாது... வேண்டும் என்றால் சோத்தித்து பார்.. பார்டீ" என்ற ரௌத்திரமாக ஆரம்பித்தவள் ...

"ஏமாற்றப் பட்டவரின் நியாமான கோபமும் வெறுப்பு தான் உனக்கு இருக்கும் என்று நான் இத்தனை நாளும் நினைத்து இருந்தேன்... ஆனால் இப்போ தான் தெரிகிறது... உன்னுடையது

வன்மம்... காழ்புணர்ச்சி... உன்னை ஏன் கல்யாணம் பண்ணிக்கொள்ள வில்லை என்ற காரணம் நான் சொல்லி தெரிய வேண்டியதில்லை... இரண்டு வருடம்.. இரண்டு வருடம் அவருக்கு நிச்சயிக்கப்பட்டேன் என்று தம்பட்டம் அடித்துக்கொள்கிறாயே.. பத்து நாள் பழகிய எனக்கு புரிந்த அவரின் குணம் கூட எப்படி உனக்கு புரியாது போகும்?!? நீ எல்லாம் ஒரு மனுஷி..." என்று அவள் முகத்தில் உமிழாத குறையாக பார்த்தவள் "உயிர் மேல் ஆசை இருந்தால் இனி என் முகத்திலேயே விழிக்காதே..." என்று கூறிவிட்டு திரும்பியவளின் கண்கள் கோபத்திற்கு பதிலாக அதிர்ச்சியும் அதை தொடர்ந்து பயமும் சூழந்தது.

காரணம் அங்கே சங்கி மயக்கம் போடாத குறையாக இவள் கூறியதை எல்லாம் கேட்டுக்கொண்டு நின்று இருந்தால் என்றால் கார்த்திக்கோ கண்களில் கொலை வெறி தாண்டவம் ஆட... குமுறும் எரிமலையாக நின்று இருந்தான்!!!

ரஃபிக்குடைய இந்த நாடகத்தை நினைத்து கோப்படுவதாக இல்லை செத்தக்கின் உடல் நிலையை நினைத்து அழுவதாக இல்ல ரஃபிக் கண்டாலும் கையாலே கழுத்தை நெறிக்க தயாராக நிற்கும் கார்த்திக்கை நினைத்து பயங்கொள்வதா என்று தெரியாது நின்றாள் மேக மித்ரா.

# அத்தியாயம் 35

**ச**ங்கி மயக்கம் போட குறையாக நின்று இருந்தால் என்றால் கார்த்திக்கோ கண்களில் கொலை வெறி தாண்டவம் ஆட... குமுறும் எரிமலையாக நின்று இருந்தான்!!!

"கார்த்திக்.." என்று மேகி முணுமுணுக்கும் போதுதான்.. அவளுக்கு பின் நின்று இருந்த ஆமிரா அவசரமாக திரும்பி பார்க்க.. அங்கே நின்று இருந்தவர்களைக் கண்டு அதீத பயத்தில் கால்கள் நடுங்கத் தொடங்கியது.

இவள் இரண்டு வருடம் நாவப்பின் ஒற்றைப் பார்வைக்காக காத்திருக்க.. ஆனால் இங்கு வந்த நாள் முதலாக அவளும் கவனித்துக்கொண்டு தான் இருக்கிறாள்... எத்தனை அழகி வந்து அவன் கண் முன் வந்து நின்றாலும் அவனின் பார்வை மேகியை சுற்றியே வட்டம் அடித்துக்கொண்டே இருக்க... அதை ஜிரணிக்கவே முடியாது அவள் சிரமப்பட்டாள் என்றால்...

மறுபக்கம் தான் வந்து உரிமையுடன் அமர்ந்து கோலோச்ச வேண்டிய அரண்மனையில் ஊர் பெயர் தெரியாத இன்னொருத்தி இவ்வளவு எளிதாக வந்து அமர்வதா?? என்ற அகங்காரம் கண்களை மறைக்க... உள்ளே பொங்கிக்கொண்டு இருந்த வேலையில் தான்...

என்ன காரணம் என்று தெளிவாக தெரியாத போதும் மேக மித்ராவிற்கும் நவாப்பிற்கும் மத்தியில் ஏதோ பிரச்சனை ஓடிக்கொண்டு இருக்கிறது என்ற சந்தேகம் தோன்ற ஆரம்பிக்க... அது எந்த அளவு உண்மை என்று அறிவதற்காக அங்கே வேலை செய்யும் ஆட்களிடம் பேச்சு கொடுத்து இருவரும் தனி அறையை பயன்படுத்துவதை வைத்து தன் யூகம் சரிதான் என்று துள்ளி குதித்து தன் திட்டத்தை செயல்பட தொடங்கினாள்.

இருவருக்கு மத்தியில் சண்டையை ஊதி வளர்க்க வேண்டும் எண்ணம் இருந்ததே தவிர இப்படி அவள் வீட்டு ஆட்கள் முன் போட்டு உடைக்கும் திட்டம் எல்லாம் இல்லை.. ஏன் என்றால் அது அவள் போட்டு வைத்திருந்த திட்டத்திற்கும் ஒத்து வராது!!!

அவர்களின் ரகசியம் வெளியே தெரியாத வரை தான் மேக மித்ராவை தன் இஷ்டத்திற்கு ஆட வைக்க முடியும்.. இந்த விஷயம் வெளியே தெரிந்து விட்டால் மேக மித்ராவின் மானம் போக போவதில்லை.. இரண்டு வருடம் அவனுக்காக காத்துக்கொண்டு இருந்தவளை பற்றி நினைவே இல்லாது இன்னொருத்தியை தேடி ரஃபிக் போய் இருப்பது அவளை அசிங்க படுத்துவதாகவே அமையும் என்ற கணக்கிடல் இருந்ததால் தான் அவளை தேளாக யாருக்கும் தெரியாது கொட்டிக்கொண்டு இருந்தாள்!!!

இப்படி அடுக்காக பல திட்டங்களுடன் மேகியை தாக்க நினைத்துக்கொண்டு இருந்தவளின் நினைப்பில் யானை தன் தலையிலேயே மண்ணை போடும் வகையில்.. எங்கே நிற்கிறோம் என்று கவனிக்காது தன் வாயாலே உலறி கொட்டி வைத்தாள்!!!

இன்னும் இங்கே நின்றால் அவளின் கழுத்தை நெறிக்கவும் தயங்கமாட்டான் என்று எரிமலையாய் நின்றுக்கொண்டு இருந்த கார்த்திக்கை கண்டவளுக்கு உள்ளே உதறல் எடுக்க.. பின்னங்கால் பிடறியில் அடிக்க வேகமாக பறந்தோடியவளை சச்சிதேவ் குடும்பத்தினர் யாரும் கண்டுக்கொள்ளவே இல்லை!!!

"ரஃபிக்கை மாப்பிள்ளையாக பேசி முடிங்கன்னு சொன்னதில் இருந்து இதில் ஏதோ சரியில்லை என்று சொன்னேனே யாராவது ஒருத்தர்.... ஒருத்தர்... காது கொடுத்து கேட்டிங்களா??" என்று சங்கியிடம் சீறினான் கார்த்திக்.

இன்னும் அதிர்ச்சியில் இருந்து மீளாத சங்கி பேசா மடந்தையாகி அப்படியே நிற்க..

நடுங்கும் கால்களுடன் அவர்கள் அருகில் வந்த மங்கி...

"கார்த்திக்" என்று தொண்டை அடைக்க அழைத்தாள்.

"நான் அன்று மாப்பிள்ளை மாற்றி கடத்தி வரவில்லை அப்படிதானே??" என்று சங்கியின் திருமணத்தின் போது

சித்திக்கை கடத்தி வர திட்டமிட்டு கடைசி நிமிஷத்தில் ரஃபிக்கை மாற்றி கடத்தி கொண்டு வந்திருந்தான்.

பேச வார்த்தைகள் வராது கார்த்திக்கை பார்த்தப்படியே மேகி நிற்க..

"இது முன்பே தெரிந்திருந்தால் அவன் கை காலை உடைத்து சரக்கு லாரியில் போட்டு வந்திருப்பேன்.. அனாவசியமாக ஏ.சி காரில் சொகுசாக கடத்தி வந்திருக்க மாட்டேன்" என்று ஒரு வித இளக்காரத்துடன் சொன்னவன்.. அவளிடம் ஒரு வார்த்தை கூட மேற்கொண்டு எதுவுமே கேட்காது பட்டென்று திரும்பி நடக்க ஆரம்பித்தான்.

"கார்த்திக்" என்று பரிதவிப்புடன் கூறியப்படி அவன் பின்னால் போனவளின் கையை பிடித்து தடுத்து நிறுத்தினாள் சங்கி.

"அவள்.. அவள் சொன்னது எல்லாம் உண்மையா?" என்று கேட்டாள் சங்கி.

யாருக்கு எந்த உண்மை தெரிய கூடாது என்று மூடி மறைத்து வைத்து தன்னுள்ளே புழுங்கினாளோ… அது இப்படி வெட்ட வெளிச்சமாகி விட.. இனி மறைப்பதில் என்ன இருக்கு என்று மன சஞ்சலத்துடன்..

பதில் பேச முடியாத வருத்துடன் "ம்ம்.." என்று தலையை மட்டும் அசைத்தாள்.

"நீ என்னோட உடன் பிறந்தவள் மட்டும் இல்லை என்னோட பெஸ்ட் பிரெண்ட் என்று நினைத்தேனே மங்கி.. இவ்வளவு நடந்திருக்கு.. என்னிடம்... என்னிடம் எப்படிடீ உனக்கு மறைக்க தோன்றியது??" என்று வெம்பலுடன் கேட்டவள் அப்படியே மங்கியின் தோளை பற்றி குலுக்கினாள்.

ஊறுகாய் ஜாடியை போல் மேக மித்ராவை குலுக்கிய விதத்தில் கோபம் இல்லை... ஆத்திரம் இல்லை ஏன் வருத்ததின் சாயல் கூட இல்லை ஆனால் மித மிஞ்சிய வலி... மங்கியின் வலியை தன் வலியாக உணரும் அபரீதமான பாசம் மேலீட உடைந்த குரலில் சங்க மித்ரா கேட்க... அவள் தொட்ட இடம் நெருப்பில் சூடுயிட்டது போல் காந்தியது மேக மித்ராவிற்கு.

"சொல்லும் சூழ்நிலை அமையவில்லை சங்கி" என்று எழும்பாத குரலில் சொல்வதை காதிலேயே வாங்காத சங்க மித்ரா...

"நான் பிச்சாவரம் போகும் முன்பு நீ சோகமாக இருந்த காரணம் இதுதான் இல்லையா??" என்றாள் அவளின் முகத்தை பார்த்தப்படி.

"ம்ம்"

"சித் பற்றிய பேச்சை எடுத்தாலோ இல்லை கல்யாணம் என்று பேச்சை எடுத்தாலோ அவசரமாக அதை மாற்றிய காரணமும் இது தான் இல்லையா?" என்றாள் யோசித்தப்படி.

"சங்கி... நான் சித்தை இப்ப மட்டும் இல்லை எப்போ உனக்கு அவர் மேல் விருப்பம் இருக்குமோன்னு சந்தேகம் வந்ததோ அப்பொழுது இருந்தே நான் கொஞ்சம் ஒதுங்கி தான் போனேன்" என்றாள் தொண்டையை அடைக்க.

"நான் முன்னாடி கேட்கவில்லை... குறிப்பாக அத்தானின் விபத்திற்கு பிறகு நீ ரொம்பவே எல்லோரையும் தவிர்த்து.. ஒரே சோகமே வடியவாய்.... முன்னிலும் அழுத்தமாக... எப்ப பார்த்தாலும் கேம்ப் கேம்ப் என்று மாசத்திற்கு மூன்று வாரம் ஊர் சுற்றிக்கொண்டு இருந்த காரணம் அத்தான் தான் இல்லையா?!?" என்று மடமடவென்று தன் யூகத்தை அடுக்கிக்கொண்டே போனவள்.. "ஆமிராவின் பேச்சை கேட்ட பிறகு.... என் மண்டையில் யாரோ சம்மட்டியால் அடித்த மாதிரி காதில் சம்பந்தம் இல்லாத படம் கண்ணு முன்னாடி மாறி மாறி வந்தப்படி இருக்கு...எதையோடு எதை கோர்த்து அர்த்தம் பண்ணிக்கொள்வது என்று புரியவில்லை.." என்று புலம்பியப்படி பற்றி இருந்த தோள்களை விரத்தியாக விடுவித்தவள் அவளை விட்டு இரண்டு அடி பின்னால் எடுத்து வைத்து அவளை விட்டு நகர்ந்து சென்றவள்...

"இவ்வளவு விஷயம் உன் வாழ்க்கையில் நடந்த இருக்கு எப்படிடீ இதை எல்லாம் உன்னுள் போட்டு மறைத்து வைக்க முடிந்தது?" என்றாள் ஆற்றாமையுடன் கண்கள் கலங்க.

அவள் தனக்காக படும் வேதனை சகிக்க முடியாது.. அவசரமாக அவளின் கைகளை பற்றியவள் "ப்ளீஸ்..." என்று தொண்டையை அடைக்க பேச்சு வராது தடுமாற... "உன்னுடைய வாழ்க்கை என்னால் எந்த விதத்திலும் பாதிக்க படக்கூடாது என்ற பயமும் ஒரு புறம் என்னை வாட்டியததால் சங்கி இதை பற்றி மூச்சு விடவில்லை" என்றாள் கண்கள் கலங்க.

"வாட்??" என்றாள் அவளை கையை வெடுக்கென்று விடு வித்துக்கொண்டு.

"இதை எப்படி சொல்வேன் என்று முதலில் தெரியவில்லை சங்கி... வேறு ஒருத்திக்கு நிச்சயப்பட்டிருப்பவனை காதலித்து நம்பி ஏமாந்து போனேன் என்று சொல்லி இருந்தால் என்ன பண்ணி இருப்ப?? கார்த்திக்கோடு நீயும் சேர்த்துக்கொண்டு ரஃபிக்கின் கை காலை உடைக்க வழி கண்டுபிடித்து இருப்பாய்.. அதை சித் எப்படி எடுத்துக்கொள்வார்?? அவருடைய அண்ணனுக்கு உன்னால் பிரச்சனை என்று தெரிந்தால்... இந்த ஜென்மத்தில் உன்னை அவர் மன்னிக்கவும் மாட்டார்.. எக்காரணத்தை கொண்டும் உன்னை கல்யாணமும் பண்ணி இருந்திருக்க மாட்டார்" என்றாள் வெம்பலோடு.

"இல்லை... நா" என்று சங்கி பேசும் போதே..

"என்னை பற்றி எந்தளவு தெரியுமோ அதை விட உன்னை பற்றியும் எனக்கு தெரியும் சங்கி... சித்திற்காக நீ ரஃபிக்குடன்

அடுத்தடிக்கு போகவில்லை என்றாலும் கூட எனக்கும் ரஃபிக்கும் மத்தியில் நடந்த விஷயத்தை அறிந்த பின் உன்னால் சந்தோஷமாக சித்தை கல்யாணம் பண்ணிக்கொண்டு இந்த வீட்டில் குற்ற உணர்வு இல்லாமல் வாழ முடியுமா??" என்று நேருக்கு நேராக கேட்டாள் அவள்.

அந்த கேள்விக்குள் இருந்த உண்மையை சங்கியை வாய் அடைக்க வைக்க.. "என்னிடம் சொல்வில்லை என்றால் என்ன?? பத்ரியிடம் சொல்லி இருக்கலாமே??" என்றாள் ஆக்ரோஷமாக சங்கி.

ஏன் என்றால் வீட்டிலேயே கொஞ்சம் நிறுத்தி நிதானமாக யோசிக்க கூடிய பத்ரி... பேச்சு சாதூர்யத்தால் எதையும் வெல்ல கூடிய சொல்லின் செல்வனாவான்.

"சித்... பத்ரி அண்ணாவுடைய பெஸ்ட் பிரெண்டு மட்டும் அல்ல பாபியின் ஒரே பிரண்டும் கூட... நீ எத்தனையோ முறை சொல்லி இருக்க.. இவர்கள் மூன்று பேரும் ஒன்றும் சேர்ந்தால் நமக்கு அங்க இடமே இல்லைன்னு.. இப்ப நீயே சொல்லு பத்ரி அண்ணாவிடம் நான் இந்த விஷயத்தை பற்றி சொன்னால்.. நிச்சயம் சித்திடம் கேட்பார்... தன் அண்ணனை பற்றி ஒரு வார்த்தை தப்பாக சொன்னால் சித் சும்மா இருப்பாரா?? வீணாக அவர்களுக்குள் உலக மகா யுத்தம் மூளும்... என்னால் அவர்களுடைய உறவு பாதிக்கப்பட கூடாது என்று தான்

சொல்லவில்லை..." என்ற போது அவளின் வேதனை கண்களில் அப்பட்டமாக தெரிந்தது.

"கார்த்திக்.." என்று கேட்கும் போதே..

விரத்தியாக சிரித்த மேக மித்ரா... "இப்போ துப்பாக்கியில் இருந்த வெளியே வந்த தோட்டா மாதிரி... எதற்காக ரஃபிக்கை பார்க்க இத்தனை வேகமாக போய்க்கொண்டு இருக்கிறானோ அதை நான்கு மாதம் முன்பே செய்து முடித்திருப்பான்... ரஃபிக்கை அடித்து கை காலை உடைப்பதினால் யாருக்கு என்ன லாபம்?? இந்த பக்கம் ஏற்கனவே உனக்கும் சித்திற்கும் ஹோட்டல் பிசினஸ் தொடர்பாக பிரச்சனை ஓடிக்கொண்டு இருக்க இது விஸ்வ ரூபம் எடுக்கும் என்றால்.. அந்த பக்கம் பத்ரிக்கும் சித்திற்கும் நட்பு சிதைந்ததோடு.. கார்த்திக்கும் சித்தும் பார்ட்னராக இருந்து சார்ட்டட் ஃபிளைட் பிசினஸ்சும் உடைத்து போய் இருக்கும்.. இப்படி எந்த பக்கம் போனாலும் முட்டு சுவராக இருக்கும் போது நான் எப்படி எங்கே போய் இதை சொல்ல முடியும்??"

"அம்மா... அப்பா.. தாத்தா.. ஆர்யா அண்ணன் என்று யாரிடம் சொன்னாலும் என்னால் நீ விரும்பிய சித்தோடு கல்யாணம் நடக்காது போய் விடும் என்ற பயம் தான் நான் இதை பற்றி மூச்சு விட வில்லை.." என்றவள்...

"பா..." என்று ஆரம்பிக்கும் போதே...

"உடனே பாட்டி என்று ஆரம்பிக்காதே... சங்கி.. உன் காதல் விவகாரத்தை அவர்களிடம் தானே சொன்ன?? என்ன ஆச்சு?? சித்தை கடத்தும் வரை திட்டம் போட்டு... ரொம்ப சரியாக ஆளை மாற்றி கடத்தி வந்து.. ஏற்கனவே எப்படா சந்தர்ப்பம் கிடைக்கும் என்று தேடிக்கொண்டு இருந்தவனை வெற்றிலை பாக்கும் வைத்து பூரணகும்ப மரியாதையோடு அழைத்து வராதது தான் மிச்சம்" என்று கண்கள் கலங்க மொழிந்தவள்

சித் அவனின் அண்ணனின் காதலுக்காக அவளின் காதலை தூக்கி எரிந்தவிட்டு சென்றான் என்றால் மங்கியோ தன் பிரச்சனை வெளியே சொன்னால் வீட்டில் உள்ள அனைவருக்கும் பாதிப்பு ஏற்படும் என்று எத்தனை மன கசப்பான விஷயத்தை வாயை திறந்து சொல்லாது தனக்குள்ளே புழுங்கி இருக்கிறாள் என்று இரட்டையரான சங்கிக்கு மெல்ல உரைக்க தொடங்க...

அவளின் அன்பையும் பாசத்தையும் வார்த்தைகளால் வெளிப்படையாக சொல்லாது தன் செயலால் காட்டிய மங்கியின் மேன்மையை நினைத்து கண்கள் கலங்க... அப்படியே அவளை இழுத்து கட்டிக்கொண்டவளின் கண்களில் இருந்து ஊற்று எடுத்த நீரை கட்டுப்படுத்த முடியாது ஒரு நிமிடம் நின்றவள்.. பின் மெல்ல விடுவித்து தன் சகோதரியை கண்கள் அகல பார்த்தவள்...

"கடவுளிடம் கேட்டு வரம் வாங்கி வந்தா கூட இப்படி ஒரு டிவின்ஸ் அமைய மாட்டாள் தெரியுமா??" என்றாள் தொண்டையை அடைக்க.

"ம்கூம்.." என்று தலையை அசைத்த மங்கி... "என் இடத்தில் நீ இருந்திருந்தாலும் இதையே தான் செய்திருப்பாய்" என்றாள் உணர்ச்சி பெருக்கில்.

"ஒருத்தருக்காக உயிரை கொடுப்பது கூட எளிது மங்கி.. ஆனால் ஒருத்தாருக்காக தன் வாழ்க்கையை தியாகம் பண்ணிவிட்டு அதை கண்கள் அகல பார்த்துக்கொண்டு இருப்பது எல்லோராலும் முடியாது" என்று நெகிழ்ச்சியுடன் கூறியவள்.

"எனக்கு ஒரு விஷயம் புரியவில்லை மங்கி... அப்போ சித் சண்டை போட்டதால் தான் ஆமிரா கல்யாணத்தை நிறுத்தி விட்டால் என்று கூறப்பட்டதே" என்று சங்கி பொருள் புரியாது கேட்டாள்...

"அதை பற்றி எனக்கும் ஒன்றும் புரியவில்லை... இப்ப ஆமிரா கார் விஷயம் சொல்லிய பிறகு தான் எங்கேயோ எதிலோ சம்பந்தம் இருக்கும் என்று தோன்றுகிறது..." என்று பெரு மூச்சுடன் மொழிந்தாள் மங்கி....

"கார் கன்ட்ரோல் இல்லாது ஓட ஆரம்பித்தவுடனே அவசரமாக பின்னால் திரும்பிய அத்தான் போனில்

பேசிக்கொண்டு இருந்த சித்திடம் சீட் பெல்ட்டை போட சொன்னதாகவும்... பின் அவனிடம் சாரி சொன்னதாகவும் சித் என்னிடம் சொன்னார் மங்கி... அப்புறம் சித்திற்கும் ஆமிராவிற்குமான வாய் தகராரில் கல்யாணம் நின்று விட.. சித் போய் ஆமிராவிடம் மன்னிப்பு கேட்க போகிறேன் என்று சொன்ன போது.. உன்னால் என் கல்யாணம் நிற்கவில்லை.. நீ எதுவும் அவளிடம் கேட்க கூடாது கண்டிப்பாக கூறிவிட்டு இனி தான் எழுந்து நடக்கும் வரை முகத்திலேயே விழிக்க வேண்டாம் என்று உத்தரவிட்டதாகவும் அத்தான் சொன்னார் மங்கி" என்றாள் அவள் கோர்வையாக...

இயலாமையான ஒரு மூச்சை விட்டவள் சங்கி... "ரஃபிக் ஏன் எதற்கு எப்படி செய்கிறார் என்று யாருக்கும் அவ்வளவு எளிதில் புரிந்துக்கொள்ள முடியாது தன்னை கடத்திக்கொண்டு போகிறார்கள் என்று ஒரு சின்ன சந்தேகப் பொறி வந்திருந்தாலும் கூட போதும் அவர் கையில் கட்டியிருக்கும் வாட்ச்சில் பட்டனை அழுத்தி இருந்தாலே போதும்... அவர் எங்க இருக்கிறார் என்பதோடு அவனின் இதய துடிப்பின் வேகத்தை குறிக்கும் டெக்னாலஜி வரைக்கு இருக்கும் அதை பயன் படுத்தி தப்பித்திருப்பார்.." என்றாள் அலுப்பாக.

"ஒரே ஒரு உண்மையை மட்டும் சொல்லு.. எனக்காக பத்ரிக்காக கார்த்திக்காக.. சித்திற்காக என்று யாரை பற்றியும்

நினைக்காது உனக்காக.. மட்டும் நினைத்து ஒரு உண்மையை சொல்லு மங்கி... என் கல்யாணம் நின்று விடுமோ என்ற ஒரே காரணத்திற்க தான் அத்தானை அன்று நம் ஊரில் மணந்தாயா??" என்று அவளின் முகத்தை கூர்ந்து பார்த்தப்படியே கேட்டாள் சங்கி.

ஒரு நிமிஷம் யோசித்தவள் "ம்கூம்" என்று மறுப்பாக தலையை ஆட்டி "ரஃபிக்கை பற்றி உனக்கு தெரிந்தது அவ்வளவு தான்.." என்று விரக்தியாக சிரித்தவள் "சென்னையில் நடக்கும் நம் மீட்டிங்கிற்கும் எப்பயும் சித் தானே வருவது வழக்கம் ஏன் அந்த முறை ரஃபிக் வந்தார் என்று நினைக்கிற?"என்று கேட்டாள் மேக மித்ரா.

"ம்ம்.. அப்போ பிச்சாவரத்தில் ஆமிராவுடனான அத்தானின் கல்யாணம் நின்று விட்டதால்... அவருக்கு முன்னாடி நான் மணக்க முடியாது.. அதனால் எனக்காக காத்திருக்காதே என்று கூறிவிட்டு சித் பிரிந்து சென்றதால்.. அவன் வராது அத்தானை அனுப்பி" என்று அவள் இழுக்கும் போதே..

ம்கூம்.. அவர் உங்கள் காதலை அறிந்த பின்.. மீட்டிங் என்ற பெயரில் வந்ததே அப்பா மற்றும் அண்ணன்களிடம் உங்கள் திருமணத்திற்காக நாள் குறிக்க தான்" என்று நம்ப முடியாத குண்டை தூக்கி போட்டாள் மேக மித்ரா.

"வாட்??? என்று அதிர்ந்து கூறவியவள் "சித் தன் காதலை பற்றி சொல்லி இருக்க வாய்ப்பில்லை என்னும் போது.. எங்கள் காதலை பற்றி அவருக்கு எப்படி தெரியும்... ??"

"அவருக்கு இத்தனை நாள் எப்படி தெரியாமல் போச்சு என்று ஆச்சரியப்படனுமே தவிர... தெரியுமா?? என்று ஆச்சரியப்பட என்ன இருக்கு??" என்று விரத்தியாக கூறியவள்... "கடத்தாமல் ஒழுங்காக விட்டு இருந்தால் தன் தம்பிக்காக அவரே பெண் கேட்டு இருப்பார் ஆனால் பாட்டியும் கார்த்திக்கும் ஒன்று சேர்ந்து அடிச்ச கூத்தில் சித்திற்கு பதில் அவரை கடத்தி வந்து பிரச்சனை வேறு மாதிரி திரும்பியது தான் மிச்சம்"

ஆச்சரியத்தில் கண்கள் அகல... "நீ சொல்வதை எல்லாம் நம்பவே முடியவில்லை மங்கி.." என்று கூறியவள் "எப்பயுமே பாதுகாப்பு விஷயத்தில் அத்தான் விட்டு கொடுத்தே இல்லை என்று சித் சொல்லி இருக்கிறார் அப்படிப்பட்டவரை எப்படி இவ்வளவு எளிதாக கடத்தினார்கள் என்று அப்பவே தோன்றியது" என்று தன் மனதில் ஒளிந்திருந்த கேள்வியை கேட்கும்போதே...

கசந்த சிரிப்பை வெளியிட்டவள்.. "விட்டு கொடுக்கவில்லை சங்கி.. விட்டு கொடுப்பது போல் நடித்திருக்கிறார்..."

"இது எல்லாம் அத்தான் உன்னிடம் சொன்னாரா??" என்றாள் சங்கி நம்ப முடியாது.

"ரஃபிக் பொய் சொல்ல மாட்டார் என்பதற்காக உண்மை எல்லாம் அப்படியே வாயை திறந்து கொட்டும் ரகம் இல்லை சங்கி" என்று அவனை பற்றி மிக மிக துல்லியமாக கூறியவள் "ரஃபிக் சொன்னதையும் சொல்லாமல் விட்டதையும் நானே கோர்த்துப் பார்த்து கண்டு பிடித்தவை" என்றாள் எங்கேயோ பார்த்தப்படி.

"வாட்?? நீ..நீ சரியாக கல்யாணத்திற்கு ஒரு நாள் முன்னாடிதானே வந்தாய்?? அப்படின்னா??" என்று சங்க மித்ரா இழுக்கும் போதே...

"ஒரு சின்ன விஷயத்தை கூட தனக்கு சாதகமாக திரும்பிக்கொள்ளும் குணம் அவருக்கு உண்டு... உங்களுக்கு கல்யாண நாள் குறிந்த உடனேயே என்னை அழைத்து வர சொல்லி காட்டில் கேம்ப்க்கு போய் இருந்த காரை அனுப்பிய பின்னும் கூட ஏன் நான் சரியாக கல்யாணத்திற்கு ஒரு நாள் முன்னாடி வந்தேன் தெரியுமா?? நான் கிளம்ப வேண்டும் என்றால் எனக்கு பதிலாக வந்து சேர வேண்டிய டாக்டர் வர தாமதம் ஆனது தான் பிரதான காரணம்... இது ஏதேச்சையாக நடந்ததாக நீ நினைக்கிறாயா?? இல்லை திட்டமிட்டு யாரேனும் செய்து இருப்பார்கள் என்று நினைக்கிறாய்??" என்று கேட்ட

போது அந்த கேள்வியில் ஒளிந்திருந்த பதில் சங்கியை வாய் அடைக்கச் செய்தது.

"என்ன சொல்ற மங்கி?? நீ கிளம்புவதை தாமதப்படுத்துவதற்காக அங்கே டாக்டர் வருவதை தடுத்தாரா??" என்றாள் தான் யூகித்தை வாய் வார்த்தைகளால் மொழிந்தப்படி.

"ம்ம்.. அவர் ஒன்றை செய்ய நினைத்து விட்டால் அதை தடுக்க யாரால் முடியும்??" என்றால் எரிச்சல் மண்ட.

"ஆனால் அவருக்கு அதில் என்ன லாபம்..??? நீ வந்தால் தானே உன்னை கல்யாணம் பண்ண முடியும்?" என்றாள் புரியாது குழம்பி போய்.

"என்னை கல்யாணமும் பண்ணனும்.. அதே சமயம் என்னால் எந்த குழப்பமும் வர கூடாது என்ற காரணம் தான்!!!" என்று தெளிவாக மொழிந்தவள்..மனதிற்குள் ஒரே கல்லில் மூன்றாவது மாங்காயாக அவன் வைத்த பெட்டில் ஜெயிக்கவும் தான் என்று கருவிக்கொண்டாள்.

"வீட்டிற்குள் வந்ததும் வராததுமாக உனக்கும் சித்திற்கும் கல்யாணம் அதுவும் ரஃபிக்கே முன்னே இருந்து நடத்துக்கிறார் என்று கேள்வி பட.. அப்படியே கண்களை இருட்டிக்கொண்டு வந்ததது... அம்மாவிடம் சென்று என்ன நடந்து என்று கேட்டால் அவர்கள் பிச்சாவரம் கதையை எல்லாம் சொல்லி விட்டு நீ பட்ட வேதனையும்.. பச்சை தண்ணீர் கூட குடிக்காமல் கிடந்த

விபரத்தையும் கூட சொன்னார்கள்... தன் அண்ணனின் கல்யாணம் முடியாமல் சித் உன் கழுத்தில் தாலி கட்ட மாட்டார் என்று எனக்கு தெரியும்... அதற்கு மேலும் கையை கட்டிக்கொண்டு இருக்க முடியாது ரஃபிக்கிற்கு போன் செய்தேன்.." என்றாள் பொறுமை அற்ற குரலில்.

"நீ சொல்வதை எல்லாம் என்னால் நம்ப கூட முடியவில்லை... மங்கி.. நம் கல்யாணத்தில் இவ்வளவு நடந்திருக்கு.. ஆனால் ஒன்றை கூட நான் அறியாத நிலையில் நான் இருந்திருக்கேனே!??" என்று சங்கி கிரகிக்க முடியாது திணறியப்படி.

"நீ மட்டும் இல்ல சங்கி.. வீட்டில் யாரும் அறிய விட கூடாது என்று நான் பிடிவாதமாக இருந்தேன்" என்றவள் ஒரு பெரு மூச்சுடன் ரஃபிக்கிடம் போன் பேசும் போது... அவர் சொன்ன ஒரு வார்த்தை நீயாக உன் வீட்டில் சொல்கிறாயா இல்லை நான் வந்து பேச வேண்டுமா என்று மட்டும் தான் கேட்டார்... ஏற்கனவே ரஃபிக்கும் கார்த்திக்கும் கட்டி பிடித்துக்கொண்டு புரளாத குறையாக திரிகிறார்கள் என்று தாத்தா புலம்புவதை கேட்ட நான் ரஃபிக் வந்து எது கேட்டாலும் கார்த்திக் ஒப்புக்க மாட்டான் என்று தெரியும் அது மட்டும் இல்லாமல் அவனை ஏத்தி விட வேண்டும் என்பதற்காக ரஃபிக் எதாவது செய்து வைப்பார்.... பின் கடைசியாக எனக்கும்

அவருக்குமான பழக்கத்தை சொல்ல வேண்டி வரும்... அப்புறம் அது வெட்டு குத்தில் தான் போய் முடியும் என்று நான் தெள்ள தெளிவாக அறிந்ததால்.. நானே வீட்டில் சொல்ல முடிவெடுத்தேன்" என்று மொழிந்து விட்டு தலை நிமிர்ந்தவள் பார்க்க சங்கியின் கண்கள் கலங்கியது.

"அத்தான் தேடி தேடி கண்டு பிடித்தாலும் உன்னை போல் ஒரு பேகம் அவரால் கண்டு பிடிக்க முடியாது.. எப்படி அந்த மாதிரி இக்கட்டான சூழ்நிலையில் கூட உன்னால் இவ்வளவு அமைதியாக எல்லாத்தையும் யோசித்து பார்த்து ஒரு முடிவு எடுக்க முடிகிறது?? நீ கிரேட்" என்று அவளை ஆர தழுவி விடுவித்த சங்க மித்ரா.

"ஒரு உண்மையை மட்டும் இன்னும் சொல்லவே இல்லை மங்கி.. என் கல்யாணம் நின்று விடும் என்ற காரணத்திற்காக மட்டுமே தான் நீ அவரை கல்யாணம் பண்ணிக்கொண்டாயா?? ப்ளிஸ் இந்த பதில் எனக்காகவோ இல்லை குடும்ப அங்கத்தினருக்காவோ பதில் சொல்லாது.. உனக்கா.. உன்னை மட்டும் யோசித்து பதில் சொல்லு அது போதும்" என்று மன்றாடலுடன் கேள்வி கேட்டாள் சங்கி.

ஒரு நிமிஷம் பனிச் சிலையாய் நின்றவள் பின் மெல்ல சங்கியை பார்த்து "அவரை தவிர வேறு யாரையும் கல்யாணம் முடிக்கவே முடியாது என்ற உண்மையை நான் உணர்ந்ததால்

மட்டுமே ஊர் அறிய அவரை மணந்தேன் சங்கி" என்றாள் திடமாக.

முதல் முறையாக ஒரு பிரகாசமான சிரிப்பு சங்கியின் முகத்தில் தோன்ற... இது போதும் மங்கி... "இந்த பதில் போதும் வேறு எதுவும் எனக்கு தெரிய வேண்டாம்" என்று தொண்டையை அடைக்க கூறியவள் "நான் போய் கார்த்திக்கை கொஞ்சம் தாமதப்படுத்துகிறேன். நீ அதுக்குள்ள அத்தானிடம் சென்று விடு.. உன்னால் மட்டும் தான் இந்த இக்கட்டான சூழ்நிலையை சாமளிக்க முடியும்.. நான் எதற்கும் ஃபஸ்ட் ஏய்ட் பாக்ஸ்சை எடுத்துக்கொண்டு வருகிறேன்" என்று கூறியப்படி வேகமாக அங்கிருந்து நகர்ந்தவள் தடுத்தாள் மங்கி.

"அத்தை என்னை அழைத்தார்கள் அவர்களை தேடிக்கொண்டு தான் இங்கே வந்தேன்.. நீ என்ன பண்ணு முதலில் அவர்களை பார்த்து நான் செத்தக்கிடம் போய் இருப்பதாக சொல்லிவிட்டு அப்புறம் பத்ரியை விட்டு கார்த்திக்கை சமாளிக்க சொல்லு உன்னால் மட்டும் அவனை சமாளிக்க முடியாது.." என்று மடமடவென்று ஒப்பிக்க..

அவளை பெரு மிதம் பொங்க பார்த்த சங்கி.. "பார்... எந்த சூழ்நிலையிலும் எப்படி யோசித்த செயல்படற.. இதனால் தான் அத்தான் இவ்வளவு பிரச்சனைக்கும் இடையில் கல்யாணம் பண்ணி இருக்கார்" என்று சொல்லிவிட்டு பறந்தாள்.

அவன் கல்யாணம் பண்ணிக்கொண்ட காரணமே வேறு என்ற விரத்தியாக மனதில் எண்ணம் எழ.. எதையும் சொல்லாது விரத்தியாக அவளிடம் சிரித்தவள் அடுத்து தான் என்ன செய்ய வேண்டும் என்று யோசிக்க தொடங்கினாள்...

ரத்த வெள்ளத்தில் கார்த்திக்கும் ரஃபிக்கும் மிதக்கும் மாறு தோன்றிய காட்சியை கண்டவளுக்கு கண்களை இருட்டிக்கொண்டு வந்தது.. எப்படி அவள் அண்ணனை சமாளிக்க போகிறாள் என்று ஒரு புறம் மலைப்பாக இருந்தது என்றால் மறுபுறம் ரஃபிக் எப்படி ரீயாக்ட் பண்ணுவான் என்று நினைக்கவே உள்ளே நடுங்கியது இதை எல்லாம் விட அங்கே உயிருக்கு போராடிக்கொண்டு இருக்கும் செத்தக்கை நினைத்த போது கண்களில் நீர் சுரக்க.. இப்போ யாரை பார்ப்பது என்று என்ன செய்வது என்று யோசித்தவள் ரஃபிக் எங்கே இருப்பான் என்று அவளால் யூகிக்க முடிந்தது.. ஆனால் கார்த்திக்க போகும் முன்பு தான் அங்கு போக முடியுமா என்று தெரியவில்லை அதை விட... அவளுக்கு செத்தக்கை பார்க்க உள்ளே துடிக்க நிற்க நேரமில்லாமல் தோட்டத்திற்கு வேகமாக பறந்தாள்!!!

ஆனால் அவள் நினைத்த மாதிரி எதுவும் நடக்கவில்லை... அவள் எதிர்பார்த்ததுக்கும் மேலாக கார்த்திக்கை தான் சமாளிக்க போகிறோம் என்று நினைத்தவளுக்கு அங்கே பத்ரி... ஆர்யா மற்றும் கார்த்திக் என்று சச்சிதேவ் சகோதர்கள் ரஃபிக்கை

சூழ்ந்து நிற்க... வாழ்க்கையில் முதல் முறையாக பழைய தமிழ் பட நாயகிகள் போல் அப்படியே வாயில் கையை வைத்து மயங்கி மங்கி சரிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று தோன்ற... ஆனால் அந்த மாதிரி தனக்கு நடிக்க வராது என்று தெரிந்த காரணத்தினால்... மூளை காலியாகிவிட்டது போல் எதை பற்றியும் யோசிக்கவே தோன்றாது... கண் முன்னாடி விரிந்த காட்சியை கண்டு வதிர் விதிர்த்து போய்.. எதை செய்யவும் முடியாது அப்படியே நின்றாள் மேக மித்ரா.

# அத்தியாயம் 36

**கா**ர்த்திக் போகும் முன்பு தான் ரஃபிக் இருக்கும் இடத்திற்கு போக முடியுமா என்று தெரியவில்லை அதை விட... அவளுக்கு செத்தக்கை பார்க்க உள்ளே துடிக்க நிற்க நேரமில்லாமல் தோட்டத்திற்கு வேகமாக பறந்தாள்!!!

மனதில் பெரும் புயல் அடிக்க.. எதை பற்றியும் நின்று யோசிக்காது தலை தெறிக்க ஓடியவளை அங்கே வந்திருந்த உறவினர்கள் ஆரம்பித்து வேலை செய்துக்கொண்டு இருந்தவர்கள் வரை விசித்திரமாக பார்க்க யாரை பற்றியும் அக்கரை அற்று தன் இலக்கை சென்று அடைந்தாள்.

காலை ரஃபிக் போன் பேசிய விதத்திலேயே எங்கே இருப்பான் என்று யூகித்து குதிரை கொட்டகை இருக்கும் இடத்தை கேட்டுக்கொண்டு பறந்தடித்து ஓடியவளின் கண்களுக்கு... ஏதோ பேசியப்படி ஒரு மருந்துவர் வருவது தெரிய.. ரஃபிக்கை பார்க்க வந்த காரியம் காற்றில் அடித்துக்கொண்டு பறந்து போக.. நேராக அவரிடம் சென்றவள் தன்னை கால் நடை மருத்தவர் என்று அறிமுகம் செய்துக்கொண்டாள்.

அவளை மருத்துவர் என்பதை விட... நவாப்பின் பேகம் என்பதை அவர்களின் திருமண வரவேற்பு விழாவிற்கு வந்திருந்தப்படியால் அறிந்திருந்த கால்நடை மருந்தவரோ.. அவளுக்கு சலாம் வைத்து விட்டு பயப்பக்தியுடன் நான்கு அடி இடைவேளை விட்டு தள்ளி நின்றவர்... அவள் செத்தக்கின் விபரம் கேட்டவுடன் மடமடவென்று ஒப்பிக்க ஆரம்பித்தார்.

"சரியாக சாப்பிடாமல் இருந்த செத்தக்கை இந்த கல்யாண வேலையில் யாரும் கவனிக்காமல் விட... இரண்டு நாள் முன்பு அப்படியே சுருண்டு விழுந்த செத்தக் கண்களை கூட திறக்காது கிடக்க அப்பொழுதுதான் உடம்பிற்கு முடியவில்லை என்பதை உணர்ந்தவர்கள்.. டாக்டர் அழைக்க.. டெஸ்ட் செய்து பார்க்கும் போது தான் வயிற்றில் கட்டி இருப்பது கண்டு... அடுத்த இருபத்தி நாலு மணி நேரத்தில் டெல்லியில் இருந்து பிரபல மருத்துவரை அவர்களின் விமானம் மூலமே அழைத்து வந்து சர்ஜரி செய்து நீக்கிய போதும் கூட குதிரை பச்சை தண்ணீர் கூட குடிக்காது... கண்களை திறக்காது வாழ பிடிக்கவில்லை என்பது போல் படுத்து கிடக்கிறது" என்று மூச்சு விடாது மொழிந்தார்.

மருத்தவரின் பேச்சை நின்று அமைதியாக கேட்டவள்.. பின் மருத்தவருக்கே உரிய மொழியில் என்ன மாதிரி சிகிச்சை அளிக்கப்பட்டது யார் வந்து அறுவை சிகிச்சை செய்தார்கள்

என்று எல்லா விளக்கமும் ஒன்று விடாது அடுக்க.. பேகத்தின் கேள்விகளுக்கு அவரும் பொருமையாக விளக்கினார்!!!

அவர் விவரித்த சூழ்நிலையும்.. செய்யப்பட்ட ஆப்ரேஷனையும் கேட்டு எத்தனை இக்கெட்டான சூழலில் செத்தக் இருக்கிறது என்று தெளிவாக புரிய... டாக்டரிடம் நன்றியை கூறிவிட்டு கால்கள் நடுங்க செத்தக் இருந்த இடத்தை நோக்கி சென்றாள்.

அவளை பார்த்தவுடன் அங்கே இருந்த வேலை ஆட்கள் பின்னால் நகர... தனக்கு நாலு அடிக்கு தூரத்தில் கூட யாரையும் வர விடாது கம்பீரமாகவும்.. திமிராகவும் தன் கனைப்பாலும்... அலட்சிய பார்வையாலுமே மிரட்டி தூர நிறுத்தி வைக்கும் செத்தக் இன்று கண்களை மூடி... கால்களை விரிந்து தன் மேல் ஈக்களும் எறும்புகளும் மொய்க்க அசைவற்று கிடந்த அவல நிலையை பார்த்தவளுக்கு... நெஞ்சை கசிக்கிப் பிழிய.. அந்த வலியை தாங்காது உடம்பு தள்ளாட... அப்படியே அந்த சுவற்றில் சாய்ந்து கண்கள் வலிக்க அந்த காட்சியை பார்த்தவளுக்கு... கைகளில் ஈரம் பட்டு திடுக்கிட்டவளுக்கு அப்போது தான் அது அவளின் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் என்பதையே உணர்ந்தாள்!!!

நீர் ஊற்றாக வழிந்த கண்ணீரை துடைக்க கூட மறந்தவளையாய்... நடுங்கிய கால்களை மெல்ல எடுத்து வைத்து

அதன் தலை பக்கம் சென்றவள்... அதன் முகம் அருகில் மண்டியிட்டு அமர்ந்தவளுக்கு அதன் மேல் மொய்த்த ஈக்களை அவசரமாக விரட்டி விட்டு... மூன்று நாள் முன்பு இரவு அவளை திரும்பி பார்த்த செத்தக்கின் கம்பீரம் கண்களில் நிழல் ஆடியது.

அவ்வளவு உடம்பு சரியில்லாத நிலையில் அதை இம்மி அளவு கூட வெளியே காட்டாது... இவளை கண்டவுடன் முகத்தை திருப்பி ஆசையாக பார்த்தது மட்டும் அல்லாது.. அவர்களை சுமந்துக்கொண்டு ஓடியது என்றால் அது ரஃபிக்கின் மேல் இருந்த பிரியத்தினால் மட்டுமே என்று உணர... கண்களில் பெருக்கெடுத்த நீர் கன்னத்தில் உருண்டோடி செத்தக்கின் நெற்றியில் விழுந்து தெறிக்க... தன் தலைமாட்டில் ஒருத்தி அமர்ந்து உயிர் உருக தனக்காக அழுகிறாள் என்பதை உணராத செத்தக்கோ எந்த பிரகஞ்சையும் அற்று அப்படியே கிடந்தது!!!

தன் உணர்வுகளை கட்டுப்படுத்த முடியாது... சில நிமிஷம் அப்படியே கண்ணீர் உகுத்தவள்.. பின் நடுங்கும் கைகளால்... வரண்டு.. உலர்ந்திருந்திருந்த அதன் தலையை மெல்ல வருடியப்படி...

"செத்தக்!!!" என்று தொண்டையை அடைக்க அழைத்தாள் மேகி.

அவள் அழைப்பை மட்டும் அல்ல அவளின் தொடுகையை கூட உணரும் நிலையில் இல்லாத செத்தக் அப்படியே கிடக்க....

"செத்தக்.. செத்தக்.. செத்தக்" என்று அழைத்தப்படி அதை வருடிக்கொண்டே இருக்க.. எந்த வித அசைவும் அற்று இருந்த இந்த செத்தக்கால் தான் ரஃபிக்கை அவள் முதன் முறையாக பார்த்தது.. என்று நினைவிற்கு வர... அதை தொடர்ந்து... "பிரித்தவி ராஜ்" என்று அவனை அழைத்தது... அதன் மேல் அவளை அநாயசமாக தூக்கி ஏறி அமர செய்தது... ரஃபிக்கிற்கு முத்தம் பதித்தது... ஏன் அவனை உயிருக்கு உயிராக காதலிக்கிறோம் என்று உணர்ந்தது கூட இந்த செத்தக்கின் மீது அமர்ந்திருந்த போதும் தான் என்று உணர. அப்படியே அதன் கழுத்தை வளைத்து பிடித்து தன் தலையை சாயத்தாள் மேக மித்ரா.

அன்று செத்திக்கின் மீது அமர்ந்து... தன் ஒவ்வொரு அணுவையும் தட்டி எழுப்பும் படியான மிக நீண்ட முத்தத்தை கொடுத்தவிட்டு நிமிர்ந்த போது... மேலே இருந்த நட்சத்திரங்கள் ஒளியில் எதுவுமே பேசாது மூச்சு வாங்க அவளை பார்த்துக்கொண்டு இருந்த ரஃபிக்கின் கண்கள் கதைத்தை உணர்ந்தவளுக்கு முத்தமிடும் போது கூட முட்டாத மூச்சு அப்போது முட்ட..

இவன் அருகில் வந்தாலே அவனின் வெம்மையும்.. அவனின் பேச்சும்.. அதை விட அவனின் கண்களில் தெரியும் பாவமும் எப்படி அவளின் ஒவ்வொரு நரம்பிலும் உணர

முடிகிறது என்று அவள் மிக தீவிரமாக யோசித்துக்கொண்டு இருக்கும் போது தான்... அவனின் முத்தம் தன்னை மட்டும் அல்ல இந்த உலகத்தையே மறக்க வைக்கும் சக்தி இருக்கிறது என்றால்..

காற்றை கிழித்துக்கொண்டு பறக்கும் குதிரையின் முதுகில் ஏறி நிற்பது போல் இருக்கும் இந்த உணர்விற்கு பெயர் காதல் என்று மின்னல் ஒளியாய் அவளுக்கு புரிய...

ஒவ்வொரு முறையும் அவன் அருகாமையில் ஏன் தன் உணர்வுகள் பேய் ஆட்டம் போட்டது... அவனிடம் விலகி இருக்கும் இந்த தருணம் ஏன் இப்படி வலிக்கிறது.. ரஃபிக் கை அணைப்பில் இருக்க.. அந்த உலகமே அவர்களுக்கு மட்டும் படைத்தது போல் ஒரு மாய தோற்றத்தை அது உருவாக்க...

அவனின் அருகில் அமர்ந்து அப்படியே செத்தக்கின் மேல் உலகின் எல்லை வரைக்கும் போக வேண்டும் என்ற எண்ணம் தோன்ற... முதல் முறையாக திடுக்கிட்டு தன் எண்ண ஓட்டத்தை திரும்பி பார்த்தவளுக்கு உள்ளங்கை நெல்லிக்கனியாக ரஃபிக்கை தான் காதலிப்பது புத்திக்கு உரைக்க.. அவளையும் அறியாது இடுப்பை சுற்றி இருந்த அவன் கையை பற்றி இருக்கினாள் மேக மித்ரா.

மீண்டும் முத்தம் மிட வேண்டும் என்று எண்ணம் பிரவாகம் எடுத்து தன்னுள் ஒடுகிறது என்ற உணர்ந்தவள் எதை பற்றி யோசிக்காது...

"பிருத்திவி.." என்று உயிர் உருக அழைத்தப்படி அவனை முத்தமிட்டாள் .

அந்த ஒற்றை சொல்லில் தன் மொத்த கட்டுப்பாட்டையும் இழந்தவன் அவளை அப்படியே வாரி சுருட்டி தன்னுள் புதைத்துக்கொண்டு மீண்டும் முத்தமிட்டவன்... கால்களை லேசாக உந்தினான்.

அத்தனை நேரம் அமைதியாக நின்று இருந்த செத்தக் அவனின் உத்தரவை ஏற்று.. காற்றை கிழித்துக்கொண்டு நாலு கால் பாயச்சலில் அங்கே இருந்த அடந்த வனப்பகுதிற்குள் பறக்க.. ஒரு நொடி கூட அவனை விட்டு பிரிந்து இருக்க முடியாது என்று உணர்ந்த மங்கியோ அவன் முத்தத்தில் முழ்கி ஊன் உருக.. உயிர் உருக அவனுடன் லயித்து போய் இருந்தவளை சிரமப்பட்டு விடுவித்தவன்... நடு காட்டிற்கு வந்தவுடன் களைத்து வந்து விட்டோம் வேறு வேலையில் கவனமாக இருந்த தன் எஜமானுக்கு தகவல் கொடுக்க... மெல்ல சுய உணர்வு பெற்றவன்.. அவனை இருக்கி அணைத்திருந்த அவளின் விரல்களில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்டு

அதன் மேல் இருந்து "பொத்" என்று இறங்கியதோடு அவளையும் இறக்கினான்.

இடையை பிடித்து இறங்கியவனின் கரம் அவளை விட்டு விலகாது அவளுடனே ஒட்டிக்கொண்டு நிற்க... பிரிய பிடிக்காதவளாய் அவனுடன் நேருக்கு நேராக ஒட்டி நின்றாள் மேக மித்ரா...

பெரிதாக வாயை விட்டு பேசிக்கொள்ளாது.. பேச விருப்பம் இல்லாத இரண்டு ஜீவன்களும் ஒருவர் மேல் ஒருவர் கொண்ட அன்பை மற்றொருவரின் கண்களை பார்த்து புரிந்துக்கொள்ள முயல... அவனிற்கே உரிய வெம்மை இடுப்பில் பதிந்திருந்த விரல்களின் வழியாக பரவ.. தானாக எழுந்த கைகள்.. அவனின் கழுத்தில் மாலையாக சுற்றி வலைக்க... அவளை தன் நெஞ்சோடு ஆரத்தழுவிக்கொண்டான்.

அவனின் பறந்த மார்ப்பில் முகத்தை புதைத்தவளுக்கு அவர்களை தவிர வெளியே உலகம் இருக்கிறது என்பதை மறந்தவளாய்.. அவனின் அணைப்பில் கண்டுண்டவளுக்கு உலகம் தட்டாமாலையாக சுற்ற.. அந்த சுழற்சியின் வேகம் தாங்காது இன்னும் அதிகமாக அவனுள் புதைந்தாள் அவள்!!!

இப்படி எத்தனை நேரம் இருந்தனரோ.. பொருத்து.. பொருத்து பார்த்த செத்தக்.. தன்னை கவனிக்கவே இல்லை என்னும் விதமாக மெல்ல கனைக்க... அந்த குரலின் பொருளை

புரிந்த ரஃபிக்.. மெல்ல அவளை விடுத்தவன் இவர்களை பார்த்து ஒரு மிதப்புடன் அங்கு நின்றுக்கொண்டு இருந்த செத்தக்கிடம் சென்றவன் ஏதோ கிசுகிசுத்து விட்டு தலையை வருடியவன் அதன்மேல் இருந்த ஒரு பையை எடுத்து விட்டு கழுத்தில் ஒரு தட்டு தட்ட... தன் நான்கு கால்களையும் தூக்கி வீராவேசமாக கனைத்து விட்டு நான்கு கால் பாயச்சலில் கும் இருட்டில் சென்று மறைந்தது.

அவன் விட்டு சென்ற முதல் ரஃபிக்கையும், செத்தக்கையும் நட்சத்திரங்களின் ஒளியில் கண்களை விரிந்து பார்த்தவளுக்கு.. அப்பொழுதுதான்.. அடர்ந்த காட்டு பகுதியின் மத்தியில் இருக்கிறோம் என்று புரிய தொடங்க... கண்களை சுழற்றியவளுக்கு ஈர காற்றின் ஜதியிற்கும் ஏற்ப.. இலைகள் ஆட... தூரத்தில் எங்கோ பெயர் தெரியாத பறவை கொஞ்சி குலவுவதும் அவளுள் ஒரு சிலிர்ப்பை ஏற்படுத்த...

"எப்படி இங்கே வந்தோம்?? எதற்காக நிற்கிறோம்??" என்று புரியாத நிலையில் அவனை பார்த்தாள்.

ராஜ கம்பீரத்துடன் தன் மார்ப்பின் குறுக்கே கைகளை கட்டிக்கொண்டு... கண்களில் தீவரம் மின்ன... அவளையே இமைக்காது பார்த்தப்படி நின்று இருந்தவனின் விழிகளை எதிர்க்கொண்டவளுக்கு.. "இவனை.. இந்த பிருத்திவி ராஜ்யா நாம்.. காதலிக்கிறோம்..??" என்று தன்னையே நம்ப முடியாது

கேள்வி கேட்க தொடங்க அந்த அதிர்ச்சியை தாங்காத அவளின் கால்கள் தள்ளாட அப்படியே கீழே இருந்த புல் தரையில் அமர்ந்தாள்.

காற்றில் பறப்பது போல் இருக்கும் இந்த காதல் உணர்வு.. அதை இன்னும் அதிகப்படுத்தும் படியான அவனின் பார்வையும் அவளை நடுங்க செய்ய.. தன்னை தானே அணைத்தப்படி ஒடுங்கி அமர்ந்தவளுக்கு எதை பற்றியும் பேச திராணி அற்று.. அவனை பார்ப்பதற்கும் கூட முடியாத சூழலில்... அப்படியே "கும்" இருட்டை வெறித்தப்படி அமர்ந்திருந்தாள்!!!

அப்படி தன்னுள் முழ்கி இருந்தவளின் முன் காய்ந்த கட்டைகளை வைத்து நெருப்பு மூட்டிய ரஃபிக்... மாய வித்தை செய்தது போல் அவளுக்கு அருகில் மெத்தென்று இருந்து ஒரு பெரிய விரிப்பை விரித்தவன்.. என்ன இது என்று கண்கள் அகல பார்த்தப்படி அசையாது அமர்ந்திருநவளை அப்படியே தூக்கி.. அந்த விரிப்பில் அமர வைத்தான்!!!

ஒரு வார்த்தை கூட பேசாது.. இருவரின் மத்தியிலும் கனத்த மௌனம் நிலவிய போதும்... ஏனோ அவனுடன் ஆண்டாண்டு பழகியது போல் உண்டான ஒரு எண்ணத்தை தவிர்க்க முடியாது... தன் பார்வையை தாழ்த்தியவள்.. தன் கவனத்தை திரும்பும் பொருட்டு.. குத்து கால் வைத்து அமர்ந்து அவன் இருக்கும் எதிர்புறத்திற்கு தன் கால் மேல் தலையை சாய்த்தாள்!!!

அவளின் செய்கையை கண்டவனுக்கு முகம் சிரிப்பில் விரிய.. அந்த தலை திருப்புதலை பற்றி சற்றும் அக்கறை அற்றவனாக அவள் அமர்ந்திருந்த விதத்திற்கு ஏற்றப்படி அவளுக்கு பின்னால் அவளை போல் இருபுறம் கால்களை வைத்து அமர்ந்த போதும் அவளை தொடாது அமர்ந்திருந்தான்!!

எதுவுமே கேட்காது.. தன்னை சுற்றி அரணாக அவன் அமர்ந்த விதம் அவளுள் ஒரு பெரும் புயலை ஏற்படுத்த... அவர்களுக்கு இடையே இருந்த மௌனம்... அன்னியர்கள் மத்தியில் எழும் தயக்க மௌனமாக அல்லாது.. பகைவர்களின் மத்தியில் நிலவும் வெறுப்பு மௌனமாக அல்லாது... உள்ளம் ஒருமித்தவர்கள் மத்தியில் நிகழும் ஆனந்த மௌனமாக இருந்தது. அவளுக்குள் பிரவாகம் எடுத்து ஓடும் எண்ண அலைகளை அவனால் புரிந்துக்கொள்ள கூடிய மௌனமாக அது அமைந்தது... இது எல்லாம் விட... அந்த மௌனத்தின் சுகத்தை இருவரும் மனமார ரசித்தப்படி அமர்ந்திருந்தனர்!!!

அந்த ஏகாந்தத்தை ரசித்தப்படி அமர்ந்திருந்தவளின் நாசியில் அவனிற்கே உரிய மணமும்.. கதகதப்பு அந்த சிறு இடைவேளையும் தாண்டி அவளை உரசி சீண்ட... அவளின் இதயத்துடிப்பு எகிறி துடித்த வேகத்தில் அவனுக்கே கேட்கு விடுமோ என்று சந்தேகித்தவள்... தன்னை திசை திருப்பும் பொருட்டு...

"இது எங்கிருந்து வந்தது??" என்றாள் அவர்கள் அமர்ந்திருந்த விரிப்பை பார்த்தப்படி.

"அதோ அந்த மரப்பொந்தில் இருந்து" என்றான் எதிர் தெரிந்த பெரிய மரத்தை காட்டி.

"அப்ப இது??" என்று அந்த இடத்தை பற்றி கேட்டாள்.

"எனக்கும் செத்தக்கிற்கு மட்டுமே தெரிந்த ரகசிய இடம்.." என்றான் அமைதியாக.

"இங்கே.. அடிக்கடி வருவிங்களா??" என்று அவள் இழுக்கும் போதே..

"தனிமை வேண்டும் என்று நினைத்தால்.." என்றான் அவளின் முதுகில் அவனின் மூச்சுக் காற்று வருட.

இந்த பதிலை ஓரளவு எதிர்ப்பார்த்தவள் ஏனோ அவனின் முகத்தை பார்க்க வேண்டும் என்று ஆசை பீறிட்டு எழ... வேறு புறம் வைத்திருந்த தன் தலையை திரும்பி பார்த்தவளுக்கு அங்கே குடிக்கொண்டு இருந்த சாந்தமும்...வார்த்தைகளால் சொல்ல முடியாத ஒரு உணர்வும் அவளை தடுமாற செய்ய..

"இதுக்கும் மேலேயும் தனிமையா??" என்றாள் அவனை விழிகளால் விழிங்கியப்படி.

"நான் நானாக இருக்கும் இடம்... ரொம்ப சொர்ப்பம்" என்று அர்த்தம் பொதிந்த வார்த்தைகளை உதிர்த்தான்.

"உங்களை நீங்களாக இருக்க விடாது யார் தடுப்பது?" என்றாள் ஆச்சரியமாக.

"என் பிறப்பு.."

அர்த்தம் புரியாது திகைத்தவள்.. "உங்கள் பிறப்பு தான் உங்களுக்கு எல்லாத்தையும் கொடுத்திருக்கிறதே??"

"என் பிறப்பு எந்த அளவு கொடுத்ததோ.. அதே அளவு என்னிடம் பறித்துக்கொண்டும் இருக்கிறது..."

"எதை?"

"என் சுதந்திரத்தை... என் நேரத்தை.."

இதை இப்படி ஒரு கோணத்தில் இதுவரை பார்த்தது இல்லை... என்று நினைத்தவள் மிகுந்த மன உளைச்சலுடன் தன்னையும் அறியாது அவன் கையை பற்ற...

அவள் பிடித்த கையின் மீது ஒரு நிமிஷம் பார்வை பதிந்து மீள.. ஒரு மென்னகை முகத்தில் பூக்க... "ம்கூம்.." என்று தலையை ஆட்டி அவளின் மூக்கின் மேல் சின்ன முத்தம் பதித்தவன்... "வானமே இடிந்து தலையில் விழுந்து விட்டது போல் முகத்தை வைத்துக்கொள்ளாதே.. சின்ன வயதில் இருந்து இதற்காகவே வளர்க்கப்பட்டவன்... சில நேரங்களின் மூச்சு முட்டுவது போல் தோன்றுவதை தவிர்க்க முடியாது.." என்று அதே இளநகை மாறாது மொழிந்தான்.

இந்த இளநகையை அவள் இதற்கு முன்பு பார்த்திருக்கிறாள்.. எங்கே.. எந்த இடத்தில் எப்போ என்று அதிதீவிரமாக அலசி ஆராய...

போலோ விளையாட்டில் கோல் அடிக்கும் போது... அவனின் அழுத்தமான முகத்தில் மிக எளிதாக இந்த புன்னைகை மலர்வதை அணிந்திருக்கும் ஹேல்மட்டையும் தாண்டி அவள் கண்ட ஞாபகம் பசுமையாக இருந்தது!!!

"நீங்க... நீங்களா இருக்கும் இன்னொரு இடம் போலோ கிரவுண்ட் இல்ல??" என்றாள் பளிச்சென்று.

அந்த பதிலை கேட்டு அவன் கண்களில் தோன்றிய ஒளி அந்த நெருப்பு ஜுவாலைக்கு இணையாக இருக்க...

"ஆமாம்" என்று தலையை மட்டும் ஆட்டினான்.

ஏன் என்று அவளும் கேட்கவில்லை அவனும் பதில் சொல்லவில்லை. அவன் அழுத்தக்காரணமாக இருக்கலாம்... மகா திமிர் பிடித்தவனாக இருக்கலாம்... ஆனால் குரூர மனம் படைத்தவன் அல்லன்.. என்று நிச்சயமாக அவளால் உணர முடிந்தது... பின்ன ஏன் அந்த நிலையில் குதிரைகள் கொடுத்தான் என்று மனது ஆராய...

எங்கோ.. மூளையில் மணி அடிக்க... "உயிருக்குப் போராடும் அந்த வின்டரை கொடுக்க பிடிக்கவில்லை என்றாலும்

உங்கள் கடமைக்காக கொடுக்க வேண்டி கட்டாயம் இல்லையா?" என்றாள் பரபரப்பாக.

பதில் எதுவும் சொல்லாமல் அவளை பார்க்க...

"இந்த நிலைமை செத்தக்கிற்கும் வந்தால் இப்படிதான் செய்விங்களா?" என்றாள் கண்கள் அகல.

ஒரு நிமிஷம் தாடை இருக.. அவளை பார்த்தவன் பின் எந்த உணர்ச்சியும் இல்லாது "வாக்கு தவறு பழக்கம் எனக்கு இல்லை".

"வாட்?? ஆனால்.." என்று ஆரம்பிக்கும் போதே...

"இதை பற்றி விடிய விடிய பேசினாலும் மாற மாட்டேன்..."

"குபுக்கென்று" அவள் கண்களில் நீர் நிறைய... "என்னால் இதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது" என்றாள் மனம் கலங்கி.

"நவாப்பாக நான் கற்ற முதல் பாடம்.. என்னில் இருந்து உணர்வுகள் வேறு படுத்த பார்க்க பழகிக்கொள்வது தான்... முதலில் ரொம்ப.. ரொம்ப.. கஷ்டமாக தான் இருக்கும் அப்புறம் பழகி விடும்" என்றான் அங்கே கொழுந்து விட்டு எரியும் நெருப்பை பார்த்தப்படி.

"அப்படி பிரிக்க முடியாத போது??"

"எனக்கும்.. என் கடமைக்கும் மத்தியில் யார் வந்தாலும்.. இல்ல எது வந்தாலும் நிறுத்த முடியாது" என்றான் அழுத்தமாக.

எதுவும் பேசாது இருந்தவளின் அகன்ற விழிகளை பார்த்து...

"நாம் நினைத்ததை எல்லாம் நிறைவேற்ற முடியாது..." என்று தத்துவம் பேசியவன்.

"அப்படி நீங்க நினைத்தது எது நடக்காமல் போய் இருக்கு?" என்றாள் குத்தலாக.

"நீ" என்றான் ஒற்றை சொல்லாக.

"நானா??"

"ஆமாம்.. நீயேதான்.. உன்னுடன் இத்தனை தூரத்தில் உட்கார வைத்து பேசுவது கொஞ்சம் கூட பிடிக்கவில்லை தான்.. என்ற போதும் செய்கிறேன் தானே?" என்றான் அலுப்பாக.

"பிருந்திவி ராஜ்" என்று மூச்சுப்புடன் கூறிய போதும்... அதை மறைத்து கோபமாக கூறுவது போல்.. மொழிய

பட்டென்று அவளின் முக வாயை பிடித்து அவன் புறம் இழுத்தவன்.. "இன்னும் ஒரு தரம் இந்த பெயரை நீ சொன்னால் அதன் பின் விளைவுகளுக்கு நான் பொறுப்பு இல்லை..." என்று கிசுகிசுப்பாக மொழிந்தவன் அவள் உணரும் முன் அவளின் குவிந்த செவ்விதழ்களில் முத்தம் பதித்து அவளை விடுவித்தான்.

எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் அஞ்சாது.. அசராது.. அலட்சியமாக பதில் பேசுபவன் அந்த மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான்... இன்று "பிருத்திவி ராஜ்" என்ற அழைப்பு அவனை

இந்தளவு பாதிக்கும் என்று அவள் கற்பனை கூட பண்ணி பார்க்க முடியாது அவள் பிரமித்து பார்க்க...

"என்ன அப்படி பார்க்கிறாய் மேகி?" என்றான் அவளின் பார்வையில் இருந்த வித்தியாசத்தை உணர்ந்து.

"மேகி??"

"ம்ம்.. நீ என்னை பிருத்திவி ராஜ் என்று யாரும் அழைக்காத பிரத்தியேகமாக பெயர் வைத்து அழைக்கும் போது நான் புதுசா அழைப்பதுதானே சரியாகும்??" என்றான் லேசாக தலையை சாய்த்து.

"நான் உங்களை பிருத்திவ் ராஜ் என்று அழைப்பது காரணப் பெயர்..."

"உனக்கு நான் பொருத்தமாக பெயர் வைக்க வேண்டும் என்றாலும் சம்யுத்தை என்று தான் அழைக்க வேண்டும்??" என்று அவனுக்கே உரிய தொனாவட்டாக மொழிந்தான்.

அவள் எதுவுமே புரியாது அவனை ஒரு பார்வை பார்க்க...

"ஓ... நீதான் படித்தில்லை என்றாயே... சரித்திரத்தில் பிருத்திவி ராஜ்.. சம்யூத்தையை குதிரையில் கடத்திக்கொண்டு போய் கல்யாணம் பண்ணிக்கொண்டாலும்... ஃபேரி டெய்லாக அவர்கள் வாழ்க்கை எல்லாம் இன்பமயமாக முடியவில்லை... மகளை கடத்தி சென்ற அவமானத்தை தாங்க முடியாத சம்யூத்தையின் தந்தை... பிருத்திவ் ராஜின் எதிரிகளுடன் கூட்டு

சேர்ந்துக்கொண்டு அவனுடன் போர் புரிந்து.. கடைசியில் அவனின் சாவிற்கே காரணம் ஆனதால் அந்த பெயர் உனக்கு பொருந்தாது... அதனால் மேகி.. பெட்டர் சாய்ஸ்" என்றான் திருத்தமாக.

அவன் பக்கம் முழுமையாக திரும்பியவள் "அந்த சம்யூத்தை மாதிரி எனக்கு பழி வாங்கும் அப்பா இல்லாமல் இருக்கலாம்.. ஆனால்... என்னை இப்படி நீங்க தூக்கிக்கொண்டு வந்தது தெரிந்தால்.. என் அண்ணன்கள்.. அதிலும் என் கடைசி அண்ணன் கார்த்திக்.. உங்கள் மூக்கை மட்டும் இல்ல.. உங்க கை காலை பார்ட்டாக கழட்டி வைத்து விட்டுதான் ஏன் செய்தாய் என்று கேள்வியே கேட்பான்??" என்று கண்கள் மின்ன.

"ஓ!!!.." என்று இழுத்தப்படி அவளின் முகத்திலேயே பார்வையை பதித்தவன்.. "அது அண்ணன்களுக்கே உரிய உணர்வை என்னால் புரிந்துக்கொள்ள முடிகிறது... ஆனால் நீ என்ன பண்ணுவ??" என்றான் முகத்தில் உணர்ச்சிகள் பொங்க.

"என்ன பண்ணுவேனா...?? உங்க கிட்ட மண்டி கிடக்கும் ஈகோவுக்கும்... திமிருக்கும் கார்த்திக் மட்டும் இல்ல... ஆரி அண்ணாவையும்.. பத்ரி அண்ணாவையும் சேர்த்து அடிக்க சொல்ல... போட்டு கொடுப்பேன்" என்றாள் துடுக்காக.

கண்களில் மின்னல் மின்ன அவளின் பதிலை கேட்டவன் பின் தலையை சரித்து வெடித்து சிரிக்க...

அவனின் முத்தத்தில் கூட மயங்கி பின் தெளிந்தவள்... கொழுந்து விட்டு எரியும் தீயின் ஒளிக்கு கொஞ்சம் குறையாது அவனின் சிரிப்பு வீசிய ஒளியில் மீள முடியாது விட்டில் பூச்சாய் அதில் விழுவது போல் ஒரு மாயை தோன்ற... என்ன செய்கிறோம் என்று உணரும் முன் தன் தலையை சரிந்து சிரித்துக்கொண்டு இருந்த அவன் உதட்டில் முத்தமிட்டாள்!!!

ஒரு நிமிடம் சட்டென்று உடல் விரைத்தவன்.. அடுத்த நிமிஷம் அப்படியே அவளின் இடையில் கையிட்டு தன்னோடு இருக்கக் கட்டி.. அவள் அளித்த முத்தத்தை அவனுடையதாக ஆக்கிக்கொண்டவன்.. மீண்டும் அவளை விடுவிக்கும் போது இருவருக்கும் மூச்சு வாங்கியது!!!

தான் செய்த செயலை நினைத்து அவளை வெட்கம் பிடுங்கி தின்ன... தன் தலையை திரும்பி தனக்கு முன்னால் இருந்த கொழுந்து விட்டு எரியும் தீ ஜுவாலையை பார்த்தப்படி தன்னுள் ஆர்ப்பரிக்கும் எண்ண அலைகளை அடக்க முடியாது அவள் தின்னாடிக்கொண்டு இருந்த வேலையில் தான்..

"இந்தா.. இதை சாப்பிடு" என்று அவனின் குரல் பின்னால் இருந்து கேட்க..

அவன் முகத்தை பார்க்காது கீழே பார்த்தப்படி திரும்பியவளுக்கு அங்கே வைக்கப்பட்டிருந்த கனிகளை பார்த்தவளுக்கு முகம் குழப்பத்தில் ஆழ... இது எங்கிருந்து வந்தது என்னும் கேள்வியுடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"நான் இங்கு வருவதற்காக தான் கிளம்பி வந்தேன்.." என்றான் அந்த பழங்களை கையை காட்டி.

"அப்பவே என்னையும் தூக்கி வர முடிவு செய்துவிட்டிங்களா என்ன?" என்றாள் ஆச்சரியமாக.

"ம்கூம்.. நீ இலவச இணைப்பு" என்றான் அவனக்கே உரிய தெனாட்டுடன்.

"வாட்?? இலவசமா??" என்று அவள் வெகுண்டு அவன் புறம் நன்றாக திரும்பு கேட்க நினைத்தவளை திரும்ப முடியாது அவனின் நீண்ட கால்கள் தடுக்க..

"இலவசம் என்றால் மட்டம் என்று அர்த்தம் இல்லை மேகி... உங்க ஊரில் இருக்கும் அரசியல் கட்சிகள் "இலவசம்" என்ற பெயரையே அசிங்க படுத்தி விட்டார்கள் என்றே தோன்றுகிறது... யோசித்துப்பார்... மனித வாழ்க்கைக்கு தேவையான நீர்... நெருப்பு.. காற்று.. பூமி.. ஏன் பெற்றவரின் அன்பு முதல் உடன் பிறந்தவரின் அன்பு எல்லாம் நமக்கு இலவசமாக தான் கிடைக்கிறது.. அதற்காக அதை மட்டம் என்று

கூறிவிட முடியுமா??" என்றான் அர்த்தம் பொதிந்த வாசகத்தோடு.

அவனிடம் பேசி வெல்ல முடியாது என்ற உண்மை உணர்ந்த தருணம் அதுதான்.. "ஏன் நீங்க லாயருக்கு படிக்க கூடாது?" என்றாள் அவன் அளித்த பழத்தை வாங்கி சாப்பிட்டபடி.

ஒரு நிமிடம் அவளை கூர்ந்து பார்த்தவன் "முன்னே சொன்னேனே எனக்கு எல்லாம் கொடுத்த இந்த நவாப் சிம்மாசனம்... என் சுதந்திரத்தை பறிந்துக்கொண்டது என்று.. அதில் இதுவும் ஒன்று" என்றான் அழுத்தமாக.

நூற்று எட்டு விதமான உணவு பதார்த்தங்களை தட்டில் பரிமாறிவிட்டு அதில் எதை தேர்ந்து எடுத்து சாப்பிட வேண்டும் என்ற சுதந்திரம் இல்லை என்றால் அத்தனை உணவு வைத்து என்ன பயனோ அதே மாதிரி தான் அவனின் நிலையும் என்று புரிந்துக்கொண்டவள்.. முதன் முறையாக அவன் புறம் இருக்கும் பிரச்சனைகளையும் புரிந்துக்கொள்ள தொடங்கினாள்.

குலத்தை காட்டி நீ தாழ்ந்தவன் என்று சொல்வது எத்தனை தகாத செயலோ.. அதே போல் குலத்தை காரணம் காட்டி தான் விரும்பும் தொழிலை செய்ய விடாது தடுப்பதும் தகாத செயலாகவே பட.. தங்கள் வீட்டு நிலவரம் கண்ணில் நிலாடியது...

முத்த அண்ணன் ஆரியா பரம்பரை தொழிலான டீ எஸ்டேட்டை பார்க்காது ஃபேஷன் டிசைனராக மாறி இருக்கா விட்டால்.. இந்த உலகிற்கு ஒரு பேஷன் டிசைனர் கிடைத்திருக்காதே.. அது போல் எத்தனை திறமைகள் வெறும் இவர்கள் பிறப்பை காட்டி தட்டி கழிக்கப்பட்டதோ என்று உள்ளம் கொதிக்க... அவன் விரும்பும் தனிமையின் பொருள் உணர்வு பூர்வமாக உணர... அது அவள் நெஞ்சின் அழத்தை சென்று இம்சித்தது.

"பிருத்திவி..." என்று அவள் தடுமாற்றத்துடன் அவனை ஏதோ கேட்க வரும் போதே...

அவசரமாக அவளின் வாயில் ஒரு நவால் பழத்தை தினித்தவன்... "இப்ப தானே சொன்னேன் இன்னும் ஒரு முறை அப்படி அழைத்தால் நான் என்ன பண்ணுவேன் என்று எனக்கே தெரியாது என்றுதானே சொன்னேன்.. இப்ப என்ன பண்ண போகிறேன் என்பதை சொல்கிறேன் கேள்..." அவளின் முகத்தின் அருகே குனிந்து கிசுகிசுத்தவன்... "இனி என்னிடம் இருந்து தப்பவே முடியாது" என்று தீர்க்கமாக மொழிந்தவன் அதன் பொருள் என்னவென்று ஆலோசனையை செய்யும் போதே...

தன் அருகே செல்வதை எல்லாம் தன்னுள் இழுத்துக்கொள்ளும் ப்ளாக் ஹோல் போல் இருக்கும் அவனின் கருவிழிகள் அவளை அப்படியே தன்னுள் இழுத்துக்கொள்ள

துடிக்க.. இவளும் விருப்பத்துடனே அவனுள் முழ்க.. அன்று தொடங்கிய அவர்களின் முத்தப் போராட்டம் பின் எல்லை கடந்து... அர்த்த ஜாமத்தில் கூவும் பறவைகளின் கூக்குரலும்... வானில் கண் விழித்து பார்க்கும் நட்சத்திரங்களுக்கு.. இரவில் மலரும் சுகந்த மலர்களுக்கு மத்தியில் இரு உள்ளங்கள் காதல் சங்கமத்தில் முழ்கி திளைத்தன!!!

அப்படியே உரிமையுடன் அவன் மார்பிலேயே தூங்கி வழிந்தவளை "தூங்காதே..." என்று அவசரமாக தட்டி எழுப்பி ஏதோ அவன் மிக முக்கியமான விஷயத்தை சொல்ல ஆரம்பிக்க... முதல் இரண்டு வார்த்தை வரை கேட்டவள் பின் அப்படியே கண் மூடி ஆழ்ந்த நித்திரையில் மூழ்கினாள்!!!

எப்பொழுதும் வெண்ணெயை திருடி தின்னும் கிருஷ்ணனை "சாப்பாட்டு கிருஷ்ணன்" என்று அழைப்பது இல்லை.. ஆனால் காட்டில் கனி வகைகளை உண்டு அளவாக சாப்பிட்டு சமர்தனாக வாழ்ந்த ராமனுக்கு "சாப்பாட்டு ராமன்" என்று பெயர்... வாழ்க்கையில் ஒரே ஒரு முறை அவர் நடந்துக்கொண்டதால் வந்த பெயர்...

பதினான்கு வருடம் வனவாசம் முடிந்தும் ராமன் அயோதிக்கு வரவில்லை என்றால் தீயில் குதித்துவிடுவேன் என்று வாக்கு அளித்திருந்த பரதன்... கால அவசாகம் முடிந்ததும் கொடுத்த வாக்கின் படி அயோத்தியில் தீ

வளர்த்துக்கொண்டு அதில் குதிக்க தயாராகிக்கொண்டு இருக்க... சீதையை மீட்டு எடுத்த ராமனோ நேராக தம்பி பரதனை பார்க்க வேண்டிய நேரத்தில் பரத்வாஜ முனிவரின் விருந்து உபச்சாரத்தில் கலந்துக்கொண்டார் என்பதனால் வந்த காரணப் பெயர் தான் "சாப்பாட்டு ராமன்".

அதுபோல் எப்பொழுதும் தூங்காது.. தூக்கம் வராது திரியும் மேக மித்ரா.. எப்போ தூக்க கூடாதோ.. எப்போ விழிப்புடன் இருக்க வேண்டுமோ அந்த நேரத்தில் தூங்கி சரிந்து ரஃபிக் சொல்ல வந்த விஷயத்தை கேட்காது தூங்கு மூச்சு மேக மித்ராவாக..

அதனால் எப்படி பட்ட செய்தி எல்லாம் தன்னை பெரும் புயலாக வந்து தாக்க போகிறது என்பதை அறியாதவள் மிக மிக.. நிம்மதியாய் அவன் மார்ப்பிலேயே உறங்கினாள். இருமுறை அவளை கண் விழிக்கும் படி எழுப்பி பார்த்த அவன் பின் காலையில் பார்த்துக்கொள்ளலாம் என்று அவளை தன்னோடு இருக்கி அணைத்தப்படி நித்திரையில் ஆழ்ந்தான்!!!

ஆனால் விடியல் தான் இருவருக்கும் நல்லது செய்வதாக அமையவில்லை!!!

அன்று நடந்தை நினைத்து மனது வெதும்பி.. இனி செத்தக்கின் நிலை என்ன ஆகுமோ என்னும் வேளையில் தான் யாரோ வரும் காலடி கேட்டு திடுக்கிட்டு தலையை

உயர்த்தியவளுக்கு அங்கே காவி நிறப்பற்களுடன் ஒருவனும்.. முண்டாசு கட்டியப்படி ஆறு வேலை ஆட்களும் நிற்க..

"என்ன??" என்று ஹிந்தியில் கேட்டப்படி எழுந்து நிற்கும் போதே வந்திருந்தவர்கள் எல்லோரும் அவளுக்கு குனிந்து சலாம் போட.. அந்த காவி நிற பற்கள் உடையவன் மட்டும் இவள் கேட்க கேள்விக்கு

"நவாய் சாப் வந்து இதை எடுத்துக்கொண்டு போக சொன்னதாக உத்திரவு போட்டாருன்னு மேனேஜர் சொன்னார்" என்றான் பயப் பக்தியோடு ஹிந்தியில் பதில் அளித்தான்.

ஹிந்தியில் சொன்னதால் இவள் தப்பாக புரிந்துக்கொண்டு இருக்கிறாளோ இல்லை நிஜமாகவே அப்படிதான் மேனேஜரிடம் சொன்னானா என்று ஆத்திரம் கண்களை மறைக்க ஆபிஸ் இருக்கும் இடத்திற்கு பறந்தாள் மேக மித்ரா!!!

அங்கே அவள் எதிர்பார்த்த மேனேஜருக்கு பதில் அவளின் மூன்று அண்ணன்கள் நிற்க... அவர்களுக்கு எதிரில் மிக மிக தெனவட்டாக நின்றான் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான்!!!

கார்த்திக் மட்டும் தான் வருவான்.. அதுவும் சங்கி எதாவது செய்து கொஞ்சம் நேரம் தடுத்து நிறுத்தி இருப்பாள் என்று எதிர்பார்த்தால்... சங்கி கார்த்திக்கு மட்டு அல்லாது... ஆரியா மட்டும் பத்ரிக்கு தெரியவும் செய்து விட்டு இருக்கிறாள் என்று புரிய.. கார்த்திக் மாதிரி இவர்களும் இப்படி நெஞ்சை

நிமிர்ததிக்கொண்டு விரைப்பாக புடை சூழ திரண்டு வருவார்கள் என்று கனவில் கூட நினைத்து பார்க்கவில்லை.

வாழ்க்கையில் முதல் முறையாக பழைய தமிழ் பட நாயகிகள் போல் அப்படியே வாயில் கையை வைத்து மயங்கி சரிந்தாள் எத்தனை நன்றாக் இருக்கும் என்று தோன்ற... ஆனால் அந்த மாதிரி தனக்கு நடிக்க வராது என்று தெரிந்த காரணத்தினால் எதை செய்யுவும் மூளை காலியாகிவிட்டது போல் விதிர்த்து போய் எதை செய்யவும் முடியாது அப்படியே நின்றாள் மேக மித்ரா.

நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு... கண்களில் கொலை வெறி தாண்டவம் ஆட... உக்கிரமாக வந்து நிற்கும் மேகியின் அண்ணன்கள் பார்த்து எந்த வித உணர்ச்சியும் வெளியே காட்டாது... அமைதியாக...

"வாங்க.. உட்காருங்க" என்று என்னவோ இப்போ தான் அவனுடன் சம்பந்தம் பேச வந்தது இருப்பது போல் அவர்களை உபசரித்தான் ரஃபிக்.

"உன்னுடன் உட்கார்ந்து கதை பேச வரவில்லை" என்றான் கார்த்திக் கடிந்த பற்கள் இடையே.

"சரி... உங்க இஷ்டம் அப்ப நின்றுக்கொண்டே பேசலாம்" என்றான் விடுக்கொடுத்து பேசுவது போல்.

அவனின் நக்கல் பேச்சை கண்டுக்கொண்ட கார்த்திக் "உன் படத்தை இனி இந்த தியேட்டரில் ஓட்ட முடியாது... ரஃபிக்..." என்று கர்ஜித்தான்.

"எந்த படத்தை?" என்று தன் நெஞ்சோடு கைகளை கட்டியப்படி.

"ம்ம்.. உன் உத்தம புத்திரன் படத்தை" என்றான் ஆரியா முதல் முறையாக வாயை திறந்து.

"என்னை உத்தம புத்திரனாக என்றுமே சொன்னது இல்லையே"

"பேச்சுகலையில் சகலகலா வல்லவன் இவன்.. அதனால்.." என்று முஷ்டியை இறுக்கொண்டு ஏதோ ஆவேசமாக வாயை திறந்த கார்த்திக்கை முந்திக்கொண்ட பத்ரி...

"நாங்கள் கேள்விப்பட்டது எல்லாம் உண்மையா?"

"எதை பற்றி??"

"எதுவுமே தெரியாத மாதிரி பேசுவதை பார்" என்று முன்னே ஒரு அடி எடுத்து வைத்த கார்த்திக்கின் கையை பிடித்து தடுத்து நிறுத்தினான் பத்ரி.

"எங்கள் தங்களை மேக மித்ராவை பற்றி கேட்டு அறிந்த விஷயங்கள்??" என்றான் அந்த "எங்கள் தங்கை" என்ற வாசத்தில் அழுத்தம் கொடுத்த பத்ரி.

பத்ரி குறிப்பால் உணர்த்திய விஷயத்தை புரிந்தது போல் ஒரு சின்ன கண் அசைவில் கூட காட்டிக்காத ரஃபிக் சொன்ன பதில்..

"ஓ!! என் பொண்டாட்டியை பற்றி உங்களுக்கு என்ன தெரிய வேண்டும்?" என்றான் மூவரையும் பார்த்தப்படி.

அத்தனை நேரம் பல்லை கடித்தப்படி நின்றுக்கொண்டு இருந்த கார்த்திற்கு அந்த பதில் அவனை சீண்ட போதுமானதனாக அமைய... பத்ரியின் கை பிடியில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்டு ரஃபிற்கும் சச்சிதேவ் சகோதர்களுக்கும் நடுவே இருந்த டெபிள் மேல் அப்படியே ஒரு கையை வைத்து தாவி ரஃபிக் இருக்கும் புறம் கண் இமைக்கு நேரத்தில் ம் குதித்தவன் தோள் விரைக்க.. முஷ்டி இருக... நேருக்கு நேராக ரஃபிக்கை முட்டிக்கொண்டு நின்றான்!!!

கண் இமைக்கும் நேரத்தில் நடந்த இந்த நிகழ்கை சகோதர்கள் அதிர்ச்சியுடன் பார்க்க.. ஆனால் ரஃபிக்கோ எந்த உணர்வும் இல்லாது வேட்டை ஆடும் புலியின் கவனத்தோடு ஆடாது அசையாது அப்படியே இருந்த இடத்திலேயே நின்றான் நவாப்.

அதற்குள் சற்று முன்னே வந்த பத்ரி.. "என்ன பண்ற கார்த்திக்?? கொஞ்சம் பொருமையா இரு.." என்றான் சீற்றத்துடன்.

"அந்த இடத்தில் நீ இல்லை பத்ரி.. நான் இருந்தேன்... என் தங்கை பற்றி தரம் கெட்ட வார்த்தைகளை நான் கேட்டேன்.. அவள் உதிர்த்த ஒவ்வொரு வார்த்தைக்கும் இவனின் ஒவ்வொரு எலும்பையும் பீஸ் பீஸ்சாக உடைத்து பிரியாணி பண்ணாமல் இன்னும் பொருமையாக இவனிடம் பேசிக்கொண்டு இருக்கிறேன் பத்ரி... இதற்கு மேல் என்னிடம் எந்த பெருமையையும் எதிர்பார்க்காதே... "

"எங்க வீட்டில் மட்டன் பிரியாணிதான் சாப்பிடுவாங்க.. மனுஷ பிரியாணி விரும்ப மாட்டாங்க" என்று ரணகளத்திலும் குதூகலமாக பதிலளித்தான் ரஃபிக்.

ஏற்கனவே உள்ளே புகையும் எரிமலையாக கொதித்துக்கொண்டு இருந்த கார்த்திற்க்கிற்கு ரஃபிக்கின் வார்த்தைகள் கெட்ட பின் அப்படியே வெடித்து சிதற பொதுமானதாக இருக்க... தலையால் அவனை நெட்டி தள்ள நினைத்தவனை மிக சுலபமாக சமாளித்து இரண்டு அடி துள்ளி குதித்து பின்னாடி போய் நின்றான் ரஃபிக். அடுத்த இரண்டு முறை வெவ்வேறு முயறையில் ரஃபிக்கை அடிக்க முடியாது தோற்று போன போதும் தன் தோல்விகளை கண்டு சற்று மனங்கலங்காது தன் இலக்கை நோக்கி போய்க்கொண்டே இருந்த கார்த்திக் இந்த முறை ரஃபிக் தப்பி ஓடாது இருக்க... அவனின் கால்களை குறி வைத்தான்!!!

கார்த்திக்கின் கண்களில் தோன்றிய பூரிப்பை கண்டு என்னவாக இருக்கும் என்று யோசித்தப்படி அவனின் அடுத்த தாக்குதலில் இருந்து தப்பிய ரஃபிக்கில் கால்களை இடையே தன் கால்களை வைக்க... அப்படியே கீழே விழாது தன்னை நிலைப்படுத்திக்கொண்டும் இருக்கும் போதே.. தன் ஜிம் பாடியை கொண்டு அவன் மேல் மோதி ரஃபிக்கை கீழே தள்ள... ஆபிஸ் அறையில் அடுக்கி வைத்திருந்த சாமான்களை எல்லாம் தட்டி விட்டுக்கொண்டே நெடுஞ்சான் கீழே விழ போன ரஃபிக்.. தன்னுடன் கார்த்திக்கையும் சேர்த்து பிடித்துக்கொண்டு கீழே விழந்தான்!!!

"பொத்" கார்பெட்டில் விழுந்த இருவரும் மேலே எழாது படுத்தப்படி மிக தீவிரமான கை கலப்பில் ஈடுப்பட... எப்படியோ அடித்து பிடித்து ரஃபிக்கின் கைகளை முறுக்கி பின்னால் அசைய முடியாது இருத்தியவன்.. பின் அவன் மேல் ஏறி அமர்ந்த கார்த்திக்...

"எவ்வளவு துணிவு இருந்தால் என் தங்கையை.." என்று கேட்டப்படி கார்த்திக் தன் கையை ஓங்கி குத்து விட மேலே உயர்த்த...

"உன் தங்கை... என் மனைவி" என்றான் அந்த சூழலிலும் ஒரு வரியில்.

"அது.. இப்போ ஆனால் அப்போ...??" என்று கேட்டான் ஆரியா அவர்கள் இருவரும் அடித்து பிடித்து சண்டையிட்டு கொள்வதை அசையாது நின்று பார்த்துக்கொண்டு இருந்தவன்.

கார்த்திக் தன் மேல் கையை வீச விடாது தப்பித்துக்கொண்டு இருந்தவன் "அப்பவும் என் மனைவிதான்" என்றான் தலையை ஆர்யாவின் புறம் திருப்பி.

# அத்தியாயம் 37

**கா**ர்த்திக் தன் மேல் கையை வீச விடாது தப்பித்துக்கொண்டு இருந்தவன் "அப்பவும் என் மனைவிதான்" என்றான் தலையை ஆர்யாவின் புறம் திருப்பி.

எதற்காக ஆமிரா தன்னை கீழ் தரமாக பேசும் போது கூட அவள் வாயை மூடிக்கொண்டு நின்றாலோ அந்த விஷயத்தை அவன் அண்ணன்கள் முன் போட்டு உடைக்க.. இத்தனை நேரம் உறைந்து இருந்தவள் உயிர் பெற்று ஆங்கார ரூம்பினியாக உருவம் எடுத்து இரண்டு அடி உள்ளே வைத்தவளின் கண்களில் அங்கே சுவற்றில் அழகிற்காக சொருகி இருந்த சின்ன வாளும் கேடையமும் கண்களில் பட... அதை எடுக்கலாம் என்று நினைத்தவளுக்கு... ஒரு வேளை தப்பி தவறி அது அவர்கள் கைக்கு போனால் அது இன்னும் ஆபத்தானது என்று அந்த எண்ணத்தை தவிர்த்து விட்டு முகத்தை திருப்பியவளின் கலை நயம் மிக்க பூ ஜாடியும் அதில் நிரம்பி வழிந்த ரோஜாக்களும் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டாள்.

வேறு எதை பற்றியும் யோசிக்காது பாய்ந்து சென்று கனத்த ஜாடியை எடுத்து அறையின் உள்ளே ஆவேசமாக பிரவேசிக்க..

ரஃபிக் சொன்ன பதிலை கேட்ட அவளின் சகோதரர்கள்...

"என்ன??" என்று ஆர்யா அதிர...

"அப்படி என்றால்?" என்ற பத்ரி புரியாது பார்க்க...

ரஃபிக் மொழிந்த பொருளை முழுமையாக உணர்ந்த கார்த்திக் மட்டும்...

"என்னடா சொன்ன?" என்று கேட்டதோடு மட்டும் அல்லாது அவன் கையை மேலே ஓங்கி முகத்தில் ஒரு குத்து விட ஆயுத்தமானவனின் தலையில் அந்த ஜாடியில் இருந்த தண்ணீரைக் கொட்டினாள் மேகி.

சமயம் சந்தர்ப்பம் தெரியாது யார் தன் மேல் இப்படி தண்ணீர் ஊற்றுகிறார்கள் என்று அதிர்ந்த கார்த்திக்.. ப்ரண்ச்சில் திட்டியப்படி துள்ளிக் குதித்து எழுந்து திரும்பியவன்... அங்கே தன் தங்கையை நின்று இருப்பதை பார்த்து.. அவசரமாக தன் வசை மொழியை நிறுத்தி...

"உனக்கு என்ன பைத்தியமாடீ??" என்று கூவிய கார்த்திக்கின் தலையில் மேக மித்ரா ஊற்றிய பூ ஜாடியில் இருந்து விழுந்த ரோஜா அவனின் குதிரை வாள்யிட்டிருந்த முடியில் மாட்டிக்கொள்ள... முன்னால் இருந்து பார்ப்பதற்கு உச்சந்தலையில் பதியம் போட்டு நட்டு வைத்தது போல் இருந்த அந்த மஞ்சள் நிற ரோஜா!!!

தன் அண்ணன் தலையில் இருந்த நட்டு வைத்த ரோஜாவை பற்றி எதையும் பேசாத அவனின் சகோதரி...

"கூல் டவுன்" என்று தன் அண்ணனுக்கு இணையாக கூவினாள்!!!

கார்த்திக் எழுந்த அடுத்த நிமிஷமே.. தனக்கு கிடைத்த விடுதலையை பயன் படுத்திக்கொண்டு எழுந்த நின்ற ரஃபிக்...

"நானும் உன் அண்ணனும் இங்கே கபடி ஆடிக்கொண்டு இருப்பதை எத்தனை நேரம்....ரசித்து...?" என்று ரஃபிக் கேட்டுக்கொண்டு இருக்கும் போதே..

பூ ஜாடியில் மீதிம் இருந்த தண்ணீரை அப்படியே அவன் முகத்திற்கு நேராக "பொளிச்சென்று" ஊற்றி... அவன் வாயை அடைத்தாள் ஆங்கார ரூபினியாக நின்றிருந்த மேக மித்ரா!!!

முகத்தில் தண்ணீர் வழிந்ததை துடைக்காது.... தன் நிற்கும் இடத்தை விட்டு இம்மி அசையாது.. ஏன் இன்னும் கேட்கப்போனால் தன் கண்களை கூட இமைக்காது அவளை வெறித்து பார்த்தவன்..

"நீ அனந்த சனயத்தில் இருக்கும் போதே நான் குளிந்துவிட்டேன்!!!" என்றான் தெனவாட்டாக.

"ரஃபிக் " என்று அவள் ஆத்திரமாக ஆரம்பிக்கும் போதே...

"என்னையும் கூல் டவுன் பண்ணதான் ஊற்றினாய் என்றால் முதலில் உன் தலையில் தான் ஊற்ற வேண்டும்.. எங்களை விட

நீதான் இப்ப குதிக்கிற" என்று அவன் கூறிக்கொண்டு இருக்கும் போதே...

ஏற்கனவே கொதித்துக்கொண்டு இருந்த மேகி அவனின் பதிலை கேட்டு கோபத்தின் உச்சிற்கே போனவள்... ஆவேசமாக தன் கையில் இருந்த பூ ஜாடியை "நச்சென்று" சத்தம் வர அங்கிருந்த டேபிளில் வைத்துவிட்டு சுவற்றில் தொங்கிய அந்த கத்தியை பாய்ந்து சென்று உறுவி.. அதே வேகத்தில் தன் கணவன் கழுத்தில் குறி பார்த்து வைத்தவள்..

"இனி ஒரு வார்த்தையை எங்களை தூண்டும் விதமாக பேசினீங்க..." என்று அவள் மொழிந்துக்கொண்டு இருக்கும் போதே..

"முதலில் கழுத்தில் இருக்கும் வாளை திருப்பி வை... மாற்றி பிடித்திருக்கிறாய்" என்றான் கார்த்திக் முறைப்பாக!!!

அவன் பக்கம் பார்வையை மட்டும் செலுத்திய ரஃபிக்.. "தெரியாமல் திருப்பி பிடித்திருக்கிறாள் என்று நினைக்கிறாயா கார்த்திக்?" என்ற போது அவன் குரலில் இருந்த எள்ளல் அங்கே இருந்த அனைவரையும் ஒரு முறை அசைக்க தான் செய்தது!!!

"வேண்டும் என்றே தூண்டாதேன்னு இப்பதானே சொன்னேன் ரஃபிக்??" என்றாள் கடித்த பற்கள் இடையே.

"உன்னையும்... உன் அண்ணனையும் உசுப்பேத்தறது அவ்வளவு ஒன்னும் கஷ்டமான வேலை இல்லை" என்றான் கழுத்தில் கத்தி இருக்கும் போது கூட அடங்காது.

இத்தனை நேரம் அவர்கள் அடித்த கூத்தை பார்த்துக்கொண்டு இருந்த பத்ரி... ஏற்கனவே கொழுந்து விட்டுக்கொண்டு எரியும் பிரச்சனை இன்னும் பெரிதாக்கும் தன் தங்கையை அடக்க நினைத்தவன்

"மங்கி.. முதலில் இப்படி வா" என்றான் பத்ரி முதல் முறையாக மேக மித்ராவை பார்த்து.

ஒரு நிமிஷம் அப்படியே உறைந்து நின்றவள் பின் பத்ரி சொன்னதிற்கு இணங்க கத்தியை எடுத்து விட்டு ரஃபிக்கை முறைத்தப்படி பின்னுக்கு நகர...

"மேகி" என்றப்படி அவள் புறம் கையை நீட்டினான்.

என்ன செய்கிறான் என்று அங்கே இருந்த அண்ணன்மார்கள் ஆள் ஆளுக்கு புரியாது விழிக்க...

ஆனால் என்னவென்று கூட கேட்காது அவன் நீட்டிய கையில் அந்த வாளை அமைதியாக வைத்த போதும் அதை விட்டு கைகளை எடுக்காமல் அவனை நிமிர்ந்து பார்த்தவளின் கண்களில் தெரிந்த கலக்கத்தை கண்ட ரஃபிக்...

"வீச மாட்டேன்" என்று அவள் கேட்காமலே வாக்கு அளித்தான் அந்த நவாப்!!!

அவனின் பதிலை கேட்டவளின் கண்களில் சொல்லோன்னாத நிம்மதி பரவ.. தன் கையை அந்த வாளில் இருந்து எடுத்தவள் எதுவும் பேசாமல் ஆரிக்கும் பத்ரிக்கும் நடுவில் போய் நின்றாள்.

அவர்களுக்குள் என்ன சம்பாஷனை நடக்கிறது என்று புரிவதற்கு இரண்டொரு நிமிடம் ஆனது அவளின் அண்ணன்களுக்கு.. மீண்டும் கார்த்திக்கும் ரஃபிக்கும் அடிதடியில் இறங்கும் முன் கொழுந்து விட்டு எரியும் பிரச்சனைக்கு வந்த ஆரி...

"அப்பவும் என் மனைவிதான் என்றால்...??"

"தமிழில் சொன்னதற்கு கூட விளக்கம் தர வேண்டுமா??" என்றான் விட்டேரியாக.

கோபத்தில் முஷ்டியை முறுக்கிய கார்திக்கை பார்த்து கண்களால் ஆர்யா அடக்க..

"மொழி விளக்கம் தர சொல்லவில்லை... சொன்ன பதத்திற்கு பின்னால் இருக்கும் செயல் விளக்கம் கேட்கிறோம்..." என்று தன் வாக்கு சாதுரியத்தை காட்டிய பத்ரி... "அதை கேட்கும் உரிமை கூட இல்லை என்றா சொல்றிங்க??" என்றான் பத்ரி முதல் முறையாக காட்டமாக.

"அந்த உரிமை இருப்பதாக நினைப்பதால் தான் நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு நின்று பதில் சொல்லிக்கொண்டு இருக்கிறேன்" என்றான் ரஃபிக் அழுத்தமாக.

"இதற்கு பேர் பதில் சொல்லும் விதமா??" என்று விரக்தியாக சிரித்த பத்ரி... "நீங்க பதில் சொல்லவில்லை.. விதண்டா வாதம் பண்ணிக்கொண்டு இருக்கிங்க..." என்று மொழிந்துக்கொண்டு இருக்கும் போதே..

"எங்கள் வீட்டு முறைப்படி நடந்த கல்யாணத்திற்கு முன்னாடியே உங்கள் இருவருக்கு திருமண நடந்துவிட்டது என்று சொன்னால்... அப்படியா? பரவாயில்லையே... இவ்வளவு அட்வான்ஸாக இருக்கிங்களே என்று வாழ்த்திவிட்டு வாயை மூடிக்கொண்டு போக சொல்றிங்களா?? நீங்க எங்க இடத்தில் இருந்தால் இதை தான் செய்விங்களா??" என்றான் கார்த்திக் மூச்சு இறைக்க.

"மற்றவர்கள் கல்யாண விஷயத்தில் இப்படி ரீயாகட் செய்தால் என்னால் புரிந்துக்கொள்ள முடியும்... ஆனால்.. சச்சிதேவ் இப்படி பண்ணுவது தான் விசித்திரமாக இருக்கு..." என்றான் தோள்களை குலுக்கியப்படி.

"என்ன விசித்திரம்??" என்றான் ஆர்யா.

"உங்க கல்யாணம்... பெண்ணிற்கு மட்டும் அல்ல உங்க வீட்டு மனிதர்களுக்கே தெரியாமல் கார்த்திக்கால் ஏற்பாடு

செய்யப்பட்டது... உங்க கல்யாணம் என்று பத்ரியின் பக்கம் பார்வையை செலுத்தியவன் மாப்பிள்ளை மணப்பெண் இருவருக்கும் தெரியாது ஏற்பாடு செய்யப்பட்டது.. அடுத்ததாக பெண் வீட்டிற்கு தெரியாது நடத்தப்பட்ட கல்யாணம் உன்னுடையது" என்று கார்த்திக் புறம் திரும்பி மொழிந்தவன்.. "ஆக உங்கள் நிலவரமே இப்படி இருக்க.. என்னமோ பத்திரிக்கை அடித்து ஊரை கூட்டி கல்யாணம் பண்ண மாதிரி பேசுவதுதான் கொஞ்சம் ஓவரா இருக்கிறது.." என்றான் அவர்களின் வீட்டு நிலவரத்தை நேரில் இருந்து பார்த்த மாதிரி.

"சோ வாட்?? குடும்பத்துக்குத் தெரியாமல் திருட்டு கல்யாணம் பண்ணிக்கொள்ள மாட்டோம் என்றான்" கார்த்திக் வெகுண்டு.

"எப்படி உங்கள் வீட்டில் இரவோடு இரவாக முடிவு செய்து திருமணம் செய்யும் வழக்கம் இருக்கிறதோ அதே போல் எங்கள் பரம்பரையில் குடும்பத்தை கூட அழைக்காது.. கல்யாணம் செய்யும் வழக்கம் இருக்கிறது... அது உங்களுக்கு என் கல்யாணத்தின் போதே என் முன்னோர்களின் கதையோடு சொல்லி இருப்பார்களே.. கேட்கவில்லை என்றால் என் கல்யாண கதையை முதல் பகுதியில் இருந்து புரட்டி பாருங்கள் அப்ப புரியும்.. இப்ப சொன்னா டைம் வேஸ்ட்"

"அப்படின்னா??"

"அப்படின்னா.. சுமார் ஐநூறு வருஷம் முன்னாடி என் பரம்பரையை சேர்ந்தவர் எப்படி மணம் முடித்துக்கொண்டாரோ அப்படி... நவாப் முறைப்படி நடந்தது..." என்றான் அதிசிரத்தையாக.

அவன் சொல்லும் உண்மையை நம்ப முடியாது.. நம்பாது இருக்கவும் முடியாது "நவாப் முறையப்படி அரங்கேறிய உங்கள் திருமணம் எப்ப நடந்தது??" என்றான் பத்ரி பதட்டமாக.

"ஐந்து மாதங்களுக்கு முன்பு... இங்கே மேக மித்ரா கேம்பிற்காக வந்திருந்த போது"

"அப்ப தான் நீங்கள் முதலில் சந்தித்ததும் இல்லை??" என்று கண்களை மூடிய பத்ரி... அந்த பதிலை கிரகிக்க பிரயத்தனப்பட்டப்படி.

"எக்ஸ்சாட்லி!!!"

"பார்த்த பத்தே நாட்களில் அவளை கல்யாணம் பண்ணிக்கொண்டாயா? என்றான் ஆரியா.

"என்னை பார்த்த முதல் முறையே மேகி ஐ லவ் யூ சொன்ன போதே அப்படியே கடத்திக்கொண்டு போய் கல்யாணம் பண்ண வேண்டும் என்று தான் தோன்றியது..." என்று அவன் சொல்லிக்கொண்டு இருக்கும் போதே அங்கே நின்று இருந்தவளின் கண்கள் அவனை கத்தி வீச அதை பற்றி அக்கரை அற்று தோள்களை குலுக்கியவன் "அத்தனை அவசரம்

கூடாது என்று எட்டு நாள் காத்திருந்து பண்ணிக்கொண்டேன்!!!" என்றான் பெருமிதமாக.

"இதை சொல்ல வெட்கமாக இல்லை" என்றான் கார்த்திக்...

"ஏன் வெட்கப்படனும்??" என்று அவனிடமே திரும்பி கேட்டான் ரஃபிக்.

"ஏன்னா.. அந்த சமயத்தில் நீ இன்னொரு பெண்ணுடன் நிச்சயக்கப் பட்டு இருந்தாய்" என்றான் கார்த்திக் சூடாக.

"நிச்சயப்படிருந்தாலும் கல்யாணம் பண்ணிக்கொண்டது மேக மித்ராவை தான்" என்றான் திடமாக.

"என்ன மாதிரி பதில்.. இது??" என்று ஆர்ப்பரித்தான் கார்த்திக்.

"உங்களுக்கு என்ன மாதிரி பதிலாக தோன்றுகிறது எனக்கு தெரியாது.. ஆனால் என்னை பொருத்த வரை உண்மையான பதில் என்று மட்டும் தான் சொல்ல முடியும்"

அவன் சொன்ன பதிலை ஜீரணிக்க முடியாத பத்ரி... "என் தங்கையை யாருக்கும் தெரியாது.. நவாப் முறைப்படி கல்யாணம் பண்ணிக்கொண்டிங்களா அதுவும் ஐந்து மாதம் முன்னாடி??" என்றான் தன் எண்ண அலைகளை ஒன்றாக கோர்த்தப்படி.

"ஆமாம்.. எத்தனை மாடூலேஷன்ல நீங்க கேள்வியை கேட்டாலும் அதன் பொருள் அதுதான்?" என்றான் அலுப்பாக ரஃபிக்...

"எங்களுக்கு தெரியாமல் எங்கள் தங்கை கல்யாணம் பண்ணி இருப்பவன் நீ... நூறு முறை நாங்க கேட்டாலும் பதில் சொல்ல வேண்டும்" என்றான் கார்த்திக் ஆர்பாட்டமாக.

அவனிடம் எதுவும் சொல்லாது.. மேகியின் புறம் திரும்பி.. "அதோ அங்கே இன்னும் ஒரு ஜாடி இருக்கு... உன் அண்ணன் சூடாகிக்கொண்டே போகிறான்..." என்றான் நக்கலாக.

"ஊரை கூட்டி பண்ணாலும்.. காட்டில் பண்ணாலும் என் தங்கை சந்தோஷமாக இருக்க வேண்டும்.. அவள் இந்த வீட்டு படி எடுத்து வைத்தில் இருந்து அப்படி ஒன்றும் சந்தோஷமாக இருப்பது போல் தெரியவில்லையே" என்றான் பத்ரி அடுத்த யுத்தத்தை கார்த்திக் தொடங்கும் முன்

"கடந்த ஐந்து மாசமாக உங்க வீட்டில் இருந்தாளே அப்போ ரொம்ப சந்தோஷமா இருந்ததாக நினைக்கிறிங்களா??" என்றான் ஒரு கனம் கூட யோசிக்காது.

முன்று பேரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள... அப்பொதுதான் ஏன் அவள் கடந்த ஐந்து மாதங்களாக சோகமே வடிவாய் இருந்தாள் என்ற காரணம் தெளிவாக புரிய தொடங்க... அவன் சொல்லும் உண்மை முழுமையாக சகோதர்களின் மனதின் ஆழத்தைத் தாக்க...

முதல் முறையாக தன் தங்கையின் புறம் திரும்பிய பத்ரி.. "நீ அழுத்தக்காரி என்று தெரியும்.. ஆனால் உனக்கு நடந்த

கல்யாணத்தையே மறைக்க நினைக்கும் அளவு அது இருக்கும் என்று தோன்றியது இல்லை... ஏன் மேக மித்ரா.. இந்த ஐந்து மாதங்களில் ஒரு முறை.. ஒரு நிமிடம்.. ஒரு நொடி கூட உனக்கு நடந்த கல்யாணத்தை வீட்டு ஆட்களிடம் சொல்ல வேண்டும் என்ற ஞாபகம் வரவே இல்லையா?" என்றான் வருத்தமும் ஆத்திரமும் அதை விட கோபமாக கேட்டான்.

கண்கள் கலங்க தலை குனிந்து பதில் பேச முடியாது தொண்டை அடைத்து நின்றாள்..

எப்படி சொல்லுவாள்?? என்னவென்று சொல்லுவாள்?? அவன் மேல் காதல் கொண்டதோடு மட்டும் அல்லாது.. அவனுடன் ஒன்று கூடி கலித்ததை தன் அண்ணன்களிடம் வாய் கூசாது எப்படி சொல்லுவாள்?? இல்லை தன் பெற்றவர்களிடம் தான் சொல்ல முடியுமா?? அதை விட மோசமாய்.. அவன் ஏற்கனவே நிச்சயப்படிருந்தான் என்று தெரியாது அவனை காதலித்து தொலைத்து விட்டேன்... என்னால் அந்த பெண்ணின் வாழ்க்கை அழிந்துவிட்டது என்று யார் முகத்தை பார்த்து எப்படி சொல்லுவாள்???

கண்கள் கலங்க தன் தலை குனிந்த பாத விரல்களை பார்த்தவளுக்கு... கண்கள் முன்னாடி சுழன்ற படங்கள் நிறுத்த வழி தெரியவில்லை..

அன்று... விடிந்ததும் விடியாத வேளையில் அவளை தங்கி இருக்கும் அறையில் விடுவித்து விட்டு மாலை வந்து பேசுகிறேன் என்று அவரசரமாக சென்றவனை கண் மறையும் வரை புன்னகையுடன் பார்த்து விட்டு உள்ளே போனவளுக்கு எந்த சந்தேகமும் வரவில்லை.. காரணம் அவளை காதல் பிசாசு ஆட்டிப்படைத்துக்கொண்டு இருந்ததால்... முன் தின இரவு நடந்த நிகழ்வு எல்லாம் அவளின் கண்களுக்கு தவறாக கூட படாது.. முகம் மலர.. இரண்டு அடி மேலே கால் படாது.. அப்படியே காற்றில் மிதந்துக்கொண்டு குதிரைகள் முகாமிற்கு சென்றாள்.

அதிசயமாக அவளுக்கு முன்னால் வந்திருந்த தோழி... மேனேஜரின் போனில் எதையோ காட்டி பேசிக்கொண்டு இருப்பதை கண்டவள்.. மனதில் நிறைந்திருந்த ஆனந்தம் காரணமாக... எதையும் காணாது தன் வேலையை பார்க்க முன்னே செல்ல...

தனக்கு காலை வணக்கம் கூட சொல்லாது செல்லும் மங்கியை பார்த்த சக டாக்டர் தோழி... "மங்கி.. எங்க அங்க போற..?? இப்படி வா.. அந்த இடம்.. ஒரு நவாப்புடையது என்று முன்பே நான் சொன்னேன் இல்லை?? அவரோட நிச்சயத்தார்த்த போட்டோஸ் பாரேன்... உன்மையாகவே இந்த நவாப் காஸ்டியூம் சூப்பர்டீ... அப்படியே ராஜ காலத்து

கெட்டப்போட.. அப்படியே சினிமாவில் பார்ப்பது போல் இருக்கு..." என்று ஆர்ப்பரித்து அழைத்தாள்.

வேறு எந்த பேச்சாக இருந்தாலும் வேலை இருக்கும் என்று அலட்சியப்படுத்தி விட்டு போய் இருக்கும் மங்கிக்கு நவாப் என்ற வார்த்தை அவளையும் அறியாது கால்களை அந்த போன் இருக்கும் இடத்திற்கு அழைத்துக்கொண்டு போக...

அவள் கண் முன் காட்டிய போட்டோவில்... ராஜ கலை சொட்ட... தலை பாகையுடன் நின்று இருந்தவன் மட்டும்தான் கண்ணில் பட்டான்!!!

இதே தோள்களில் தான் அன்று காலை அவள் காலை கண்விழித்ததே என்று தன் டாக்டர் தோழியிடம் சொன்னால் என்ன செய்வாள் என்ற எண்ணம் ஓட.. மனதில் எழுந்த காட்சியால் நினைவலைகள் எங்கேயோ இறக்கை கட்டி பறக்க.. உதட்டில் புன்னைகையும்... மனது நிறைய கனவுகளையும் வைத்துக்கொண்டு... போனில் தெரிந்த அவனின் முகத்தை இமைக்காமல் பார்த்துக்கொண்டு இருக்க...

கண்களை விரித்து வைத்துக்கொண்டே... மூச்சு விட மறந்து பார்த்துக்கொண்டு நின்றவளின் எண்ண ஓட்டத்தை அறியாத.. அந்த தோழியோ....

"நவாப் மட்டும் இல்லை... அவர் பக்கத்தில் இருக்கும் அந்த பெண்ணின் நகைகளை பாரேன்" என்று விவரிக்கும்

போது தான் விழிகளை பக்கத்தில் பதியவிட்டவளுக்கு முக்காடு அணிந்த பாதி முகத்தை மறைத்த நிலையில் யாருடனோ பேசிக்கொண்டு இருக்கும் ஒரு பெண்ணை கண்டவளுக்கு கண்கள் சுருங்க..

"யார் இது?" என்று சும்மா கேட்டு வைத்தாள்.

அந்த கேள்வி தன் வாழ்க்கை எப்படி புரட்டி போட போகிறது என்ற உண்மையை அறியாதவளாய்.

"நல்லா கேட்டப்போ... விடிய விடிய கதை கேட்டு சீதைக்கு ராமன் சித்தப்பானன்னு.. இத்தனை நேரம் நான் என்ன சொல்லிக்கொண்டு இருந்தேன் என்று நினைக்கிறாய்??" என்றாள் அலுத்த குரலில் அவள்.

"சாரி.. சளி பிடித்திருக்கிறதா அதனால் காது அடைத்திருக்கிறது" என்று வாய்க்கு வந்ததை மொழிந்தவள்.. மீண்டும் "யார் இது?" என்றாள் அந்த பெண்ணை காட்டி.

"அது நவாப்பின் நிச்சயதார்த்த போட்டோன்னு சொன்னேனே?? அவருக்கு பக்கத்தில் இருப்பது அவருக்கு நிச்சப்பட்ட பெண். அவள் கூட ரொம்ப அழகுதான் இல்ல??"

"இல்லை.. இருக்க.. முடியாதது.. நொ வே..." என்று அவள் அலற..

அதற்குள் அங்கே இருந்த அவளை ஒரு மாதிரியாக பார்த்த மேனேஜர் போனில் இருந்த மற்ற போட்டோக்களை

காட்டி... கிட்ட தட்ட இரண்டு வருட முன்பு நடந்த விழா.. எத்தனை சிறப்பாக நடைப்பெற்றது என்பதில் ஆரமித்து என்ன சாப்பாட்டு போட்டார்கள் என்று வானாலவ புகழ்ந்து தள்ளியவன்... முத்தாய்ப்பாக இந்த வருஷ முடிவிற்குள் கல்யாணம் இருக்கலாம் என்று ஆரூடமும் சேர்ந்து கூறினான்.

அந்த போனை கிட்ட தட்ட பிடுங்கி ஊற்று பார்த்தவளுக்கு கண்கள் கலங்கி.. பார்வை மங்க... அடுத்து கிட்ட தட்ட பத்து போட்டோவும் இதே போலவே இருக்க... தீ சுட்டது போல் தகித்த அந்த போனை அப்படியே கீழே போட்டவள்... இதே கைகள் தானே அவளை நேற்று தன்னை அனைத்தனை.. ஆரபித்து அடுத்து அவள் கண் முன்னே வந்து நின்ற காட்சிகைளை காண சகிக்காது... கண்களை இருக மூடி.. அப்படியே தன் வயிற்றை யாரோ முறுக்கி பிழிவதும் போல் ஒரு வலியும்.. கூடவே அப்படியே புரட்டிக்கொண்டு வெளியே வருவது போல் தோன்ற...

"எனக்கு வாந்தி.. வாந்தி வர மாதிரி இருக்கு..." என்று எதையோ சொல்லிவிட்டு.. பறந்தடித்துக்கொண்டு தன் அறைக்கு நுழைந்தவள் அப்படியே பாத்ரூம் சென்று கதவை சாற்றினாள்!!!

தோழி வந்து கதவை தட்டியதோ.. இல்ல போனுக்கு தொடர்புக் கொள்ள முயன்றதோ தெரியாது... பாத் ரூம்மின் ஷவருக்கு அடியில் மணி கணக்காக அமர்ந்து நெஞ்சு வெடித்து

சிதரும் மரண வலியை தாங்காது வாய் விட்டு ஓவென்று கதறி அழுதவள் நான்கு மணி நேரம் கழித்து அந்த அறையின் கதவை திறந்துக்கொண்டு வெளியே வந்தவள் தன் நனைந்த உடையை மாற்றி ஒரு அடி எடுத்து கூட வைக்க திராணி இல்லாது.. அந்த மெத்தையில் விழுந்தாள்!!!

எப்படி இப்படி பட்ட ஒரு நீச்சனை நேசித்தோம் என்று மனம் துடித்த போது... வற்றாத ஜீவ நிதியாக கண்களில் பெருக்கெடுத்து நீர் ஓட மட்டும்தான் செய்தது.. நாள்.. மணி... நேரம் என்று எதையும் உணர முடியாத.. நிலைக்கு சென்று இருந்தவளின் கண்களுக்கு முன்னால் நின்றது ஒன்றும் அற்ற சூனியமே...!!!

போன் அடிக்க.. சிரமப்பட்டு எழுந்து யார் என்று பார்த்தவளுக்கு.. தன் தோழிதான் உடல் நிலையை பற்றி விசாரிக்க பத்து முறைக்கு மேல் போன் செய்கிறாள் என்பதை உணர்ந்தவள்.. அவசரமாக தான் மாத்திரை போட்டுக்கொண்டு தூங்கியதினால் பார்க்கவில்லை.. இப்ப பரவாயில்லை என்று மேசேஜ் அனுப்பி வைத்து விட்டு.. பெருக்கெடுத்த கண்ணீரை துடைத்தப்படி மெத்தையில் மீண்டும் தலையை சாய்த்தாள்.

அன்று முழுவதும் தன் அறையை விட்டு வெளியே வராதவளின் அறை கதவை இரவு யாரோ தட்ட.. அதை பற்றி பிரகஞ்சையே இல்லாது.. அவள் எங்கோ சூனியத்தில்

நிலைத்திருந்த பார்வையை திரும்ப கூட இல்லாது அசையாது கிடக்க.... யாரோ கதவை திறந்துக்கொண்டு உள்ளே வரும் ஓசையை கூட உணராது உணர்வு தப்பிய நிலையில் அமர்ந்திருந்தவளைக் கண்டு..

"மேகி" என்று ரஃபிக் அழைத்த விதத்திலேயே இந்த உலக்கிற்கும் தனக்குமான உறவை புதுபித்தக்க..

பாய்ந்து சென்று அவன் பறந்த மார்ப்பில் அழ துடித்த தன் செயலை கண்டு அஞ்சு நடுங்கியவள்... கொத்த வரும் ஐந்து தலை பாம்பை கண்டதை போல் அவனை கண்டு துள்ளி குதித்து பின்னால் போக..

"என்னாச்சு?? மேகி...??" என்று கேட்டப்படி அவள் அருகில் வந்தவனை வெறுப்பும் துவேசமும் போட்டி போட நோக்கியவள்...

அவளை நெருங்கும் ஒவ்வொரு அடியும் அப்படியே வாரி சுழட்டி அடித்து தன்னுள் விழுங்கிக்கொள்ளும் சுனாமி அலையாக தோன்ற...

"நில்" என்றான் ஆக்ரோஷமாக.

அப்படியே பிரேக் போட்டு நின்றவனின் கண்கள் அவளின் அழுத கண்களும் வீங்கிய முகமும்... கலைந்த தலையும் சொன்ன செய்தியை புரிந்தவன்..

மௌனமாக அவன் நின்று அவளை உச்சந்தலை தலை முதல் உள்ளங்கால் வரை பார்த்த விதமே... அவளுக்கு மாபெரும் பிரளயத்தை ஏற்படுத்த...

"நீ எதற்காக இப்படி ரீயாக்ட் பண்ணுகிறாய் என்று தெரியவில்லை என்றாலும்... நீ நினைக்கும் அளவு எதுவும் மோசம் ஆகிவிட வில்லை" என்று நிறுத்தி நிதானமாக கூறிய போதும் அவன் கண்ணில் கூடி வந்த கவனம் பாயும் தன் இரையை பிடிக்க வரும் புலியை ஒத்து இருந்ததை அவள் கண்டாள்... இப்ப கவனித்தவள் இதற்கு முன்பு ஏன் பார்க்க தவறினாள்.. இனி பார்த்து என்ன பயன் என்று ஓ!!! கதறி அழ துடித்த மனதை வெகு சிரமப்பட்டு அடக்கிக்கொண்டு தன் கைகளை பிசைந்தப்படி நின்றவளுக்கு கை கொடுத்தது அவளின் கோபம் தான்.

தன்னுள் கிளர்ந்து எழுந்த இமாலய கோபத்தை அப்படியே அவன் மீது திசை திருப்பியவள்...

"எனக்கு நேர்ந்ததை மோசம் என்று ஒரு வார்த்தையில் அடக்கி விட முடியுமா என்று தெரியவில்லை பிருத்திவி" என்றாள் வார்த்தையில் வன்மம் வெடிக்க...

மூச்சு வாங்க.. கைகள் நடுங்க.. கசங்கிய உடையுடன்.. கொந்தப்பளிப்புடன் தன் முன் நின்று இருந்தவளை கண்டவன்....

"என்னாச்சு??" என்றான் அமைதியாக

அவனின் அந்த குரல் அமுதால் செய்தத நஞ்சை போல் தோன்ற..

"உங்களுக்கு ஒரு பெண்ணுடன் நிச்சயம்.." என்பதற்கு மேல் அவனை இன்னொரு பெண்ணுடன் சம்பந்தப்படுத்தி கூட பேச முடியாது என்றால் தொண்டையை அடைக்க..

அப்படியே நிறுத்திவிட்டு அவனை ஒரு பார்வை பார்த்தாள்...

அந்த பார்வையில் "ப்ளீஸ்.. அப்படி எதுவும் இல்லைன்னு சொல்லு... இல்லைன்னு சொல்லு.. நான் கேள்வி பட்டது உண்மை இல்லை என்று சொல் பிருத்திவி" என்ற கெஞ்சல்... இறைஞ்சல் அது எல்லாத்தையும் விட.. அந்த கண்களில் தெரிந்த மரண பயமும்... வார்த்தைகளால் அவள் சொல்லாத விஷயத்தை அவனுக்கு அப்பட்டமாக தெரிவிக்க...

அந்த பயத்தைத் தான் மரண வலியாக மாற்றப்போகிறோமே என்ற எண்ணத்தை அவனின் முகம் பிரபதிப்பளிக்க.....

வாயை திறந்து சொல்வதற்கும் முன் அவன் கண்ணில் தோன்றிய பதில் தான் கண்டது.. கேட்டது உண்மையை என்று பறை அடிக்க...

எங்கோ ஓரத்தில் ஒட்டிக்கொண்டு இருந்த நம்பிக்கையை அவன் இருந்த இடம் தெயாது அழித்து விட... அந்த

உண்மையை ஏற்றுக்கொள்ள முடியாதவளாய்... தடுமாறிய அவளின் கால்களை ஊன்றி நின்று... வலியின் கோர பிடியில் இருந்து தப்ப முடியாது அவளின் கண்களில் நீர் கோர்க்க...

"ஏன்.. ஏன் அவளையும் ஏமாற்றி.. என்னையும் ஏமாற்றினாய் பிருத்திவி?" என்றாள் உயிரை உருக வைக்கும் குரலில்

எந்த பதிலும் சொல்லாமல் கரையை உடைத்துக்கொண்டு வழியும் அவளின் கண்களை ஒரு வித செயலற்ற தன்மையுடன் பார்த்தவன்..

"மேகி நான் சொல்வதை கேள்... நான் உன்னை ஏமாற்றவில்லை..." என்று பொருமையாக விளக்கியவன்... "நேற்று.." என்று அவன் ஆரம்பிக்கும் போதே..

"தப்பாக சொல்லிவிட்டேன்... நேற்று நடந்ததற்குபெயர் ஏமாற்று இல்லை பிருத்திவி துரோகம்..." என்றாள் அழுகை பீறிட

"கொஞ்சம் அமைதியாக கேள்... நேற்று இரவு இதை பற்றிதான் உன்னிடம் பேச வந்தேன்.."

"எப்போ..??? என்னை குதிரையில் தூக்கிக்கொண்டு போகும் போதா ?? இல்லை என்னை உன் இடத்திற்கு அழைத்துக்கொண்டு போகும் போதா இல்ல முத்தம் கொடுத்த போதா??? எப்ப உனக்கு ஏற்கனவே நிச்சயமாகி இரண்டு

வருடமாக அந்த பெண் காத்திருக்கிறாள் என்று சொல்ல வந்தாய் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான்" என்றாள் அனல் பறக்க.

"நேற்று இரவு நடந்தது எதுவும் ப்ளான் பண்ணி நடந்தது கிடையாது... அதை முதலில் புரிந்துக்கொள்... அதுக்காக நடந்த விஷயங்களை நினைத்து என் மனதில் துளி கூட வருத்தம் இல்லை... மீண்டும் அதே போல் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் அதையே தான் செய்திருப்பேன் என்ன இன்னும் கொஞ்சம் பெட்டராக செய்திருக்கலாமோ என்று தோன்றியது அவ்வளவே!!! ஒன்றை புரிந்துக்கொள்.. நான் தப்பு பண்ண வில்லை என்று திடமாக நம்புகிறேன்.. கூடவே அங்கே நடத்ததிற்கு என்னை மட்டும் பொருப்பாளி ஆக்காதே... உன்னுடைய முழு சம்மதம் இல்லாது.. எதுவும் நடக்கவில்லை என்பதை நினைவில் வைத்துக்கொள்" என்றான் அழுத்தமாக.

"உனக்கு ஏன் நடந்த விஷயம் தப்பாக தெரிய போகிறது?? இதில் அசிங்கப்பட்டது நான் தானே??"

"நேற்று இரவு நடந்ததை தான் இப்படி சொல்கிறாய் என்றால்.... உன் எண்ணத்தை மாற்றிக்கொள் மேகி.. நீ என்னுடன் இரவு தங்கியதால் உன்னை லூஸ் கேரக்டர் என்றோ இல்ல தரக்குறைவாக நான் நினைக்கவில்லை..." என்றான்.

"என்னை பார்த்தால் எப்படி தெரிகிறது ரஃபிக்?? வேறு ஒரு பெண்ணுடன் நிச்சயம் ஆகி இருக்கு என்று தெரிந்தால் என்னை

தொட விட்டு இருப்பேன் என்று நினைக்கிறாயா??" என்றாள் கண்களில் தேங்கிய நீர்.... கரையை உடைத்துக்கொண்டு உருண்டு ஓடியது.

"ஸ்டாட் இட்... ஸ்டாப் இட்... மேகி" என்று அவள் கண்களில் வழிந்து வரும் கண்ணீரை கண்டு பதறி மொழிந்தவன்...

விரத்தியாக தன் கண்ணீரை துடைத்தவள்... "சரி உன் வாதப்படியே என்னை நீ கீழ்தரமாக நினைக்கவில்லை உயர்வாக தான் நினைக்கிறாய் என்றால்... அப்ப உன்னுடன் நிச்சயப்பட்ட பெண்ணுடன் நீ இப்படிதான் இருந்தாயா??" என்று அவனுக்கு செக் வைத்தாள் அவள்.

ஒரு நிமிடம் பதில் சொல்லாது அவளை வெறித்து பார்க்க...

"நான் மதிக்கிறேன்.... இதில் தப்பு இல்லை என்று வீர வசனம் பேசினாயே... இப்ப சொல்லு பிருத்திவி.. நீ மதிக்கும் பெண்ணிடம் இப்படி தான் நடந்துக்கொள்வாயா?? அப்ப இரண்டு வருடமாக உனக்காக காத்திருக்கும் பெண்ணிடம் கூட இப்படி தான் நடந்துக்கொண்டாயா??" என்றாள் காளி அவதாரம் எடுத்து.

அவள் ஆவேசமாக விடும் மூச்சு காற்று கூட.. புயல் காற்றை போல் அங்கு பெரும் சப்தத்தை ஏற்படுத்த....

"ஆமிராவுடன் நான் ஒரு நாளும் அப்படி இருந்ததில்லை என்பதால் அவளை உயர்த்தியாகவும் உன்னை தாழ்தியாகவும் நினைக்ககிறேன் என்பது பொருள் அல்ல.. நான் இதை இப்படி சொல்ல வேண்டி வரும் என்று நினைக்வில்லை ஆனால்...." என்று விரத்தியாக இழுத்தவன்... "உன்னுடன் அத்தனை உரிமை எடுத்துக்கொண்ட காரணம் நீ என் மனைவி என்பதால் மட்டுமே!!! என்றான் கைகளை விரித்து.

"இப்ப என்ன சொன்னீங்க??" என்று அவன் சொல்வது புரியாமல் அவள் மீண்டும் கேட்டாள்

"மேகி நான் சொல்வதை கொஞ்சம் கவனமாக கேள்... நவாப் முறைப்படி நமக்கு திருமணம் கூட முடிந்து விட்டது" என்றான் உணர்ச்சியே இல்லாத குரலில்.

"என்னது உங்களுக்கு கல்யாணம் கூட ஆகிவிட்டதா??" என்று கேட்டவளுக்கு தான் அந்த உண்மையின் தீவிரம் புரியாது கண்களை அப்படியே இருட்டிக்கொண்டு வர... அதிர்ச்சியை தாங்காது அப்படியே மயங்கி சரிய போனவள் தனக்கு பின்னால் இருந்த சுவரில் சாய்ந்து கண்களை மூடி சுவாசிக்க முடியாது மூச்சு தினறலாய் சிரமப்படும் அவளின் மூக்கு சிவந்து.. தலை முடி அலங்கோலமாக கலைந்து... கால்களை ஊன்றி நிற்க முடியாது சுவற்றை பிடித்துக்கொண்டு நிற்க முடியாது நிற்கும் அவளின் நிலையை பார்த்தால் கல்லும் கூட கரையும்...

"இடியட்.... எனக்கு என்று சொல்லவில்லை நமக்கு என்று சொன்னேன்... நமக்கு... காதில் நன்றாக வாங்கு நமக்கு..." என்றப்படி கண்களை கூட திறக்க முடியாத நிலையில் சுவற்றில் தலையை சரித்து நின்று இருந்தவளை பார்த்தவன் பட்டென்று அவளை தூங்கி அங்கிருந்த மெத்தையில் கிடத்தினான்.

தன்னை தூக்கியவன் தடுக்க கூட முடியாத சூழ் நிலையில் மரவட்டையாக சுருண்டு படுத்தவளை பார்த்தவனின் கண்கள் அன்று விடியற்காலையில் அவனின் மார்பில் அலங்கரித்த மங்கையாக இது என்று தெரியவில்லை... அவன் விட்டு சென்று ஆறே மணி நேரத்தில் உச்சி வெயிலில் பிடிங்கி எரியப்பட்ட இளம் செடியாய் அப்படியே காய்ந்து... உயிர் அற்று.. உணர்வு அற்று... ஜீவன் அற்று சுருண்டு கிடந்தவளை ஒரு வித பதைபதைப்புடன் பார்த்தான்.

கண்களை மூடிக்கொண்டு மெத்தையில் இரண்டு ஒரு நிமிடம் கிடந்தவளுக்கு அவன் சொன்ன பொருளின் பொருள் புரியத் தொடங்க..

"இப்ப என்ன சொன்ன பிருத்திவி?? நமக்கு கல்யாணம் ஆகிவிட்டதா??" என்று தன் கைகளை பிசைத்தப்படி கேட்டவள் பின் எழுந்து அமர்ந்தாள்.

தன் பறந்த மார்ப்பின் கைகளை கட்டிக்கொண்டு அவளை பார்த்தவன்..

ஆமோதிப்பாக தன் தலை மட்டும் ஆட்டினான்.

"நமக்கு... உனக்கும்.. எனக்கும்.. கல்யாணம் ஆகிவிட்டதா??" என்று இருவரையும் கையை காட்டி கேட்டாள்.

அவன் சொல்லும் பொருளின் பொருள் தன் மூளை ஏற்றுக்கொள்ள மறுத்த பொருளை பதிய வைக்க முயன்றப்படி.

"ம்ம்.."

"இன்னும் எனக்கு எத்தனை அதிர்ச்சி கொடுப்பாய் பிருத்திவி? இத்தனை அதிர்ச்சிக்கு பின்னும் என் இதயம் எப்படி இவ்வளவு ஸ்டாராங்காக துடிக்கிறது என்று கூட எனக்கு புரிய மாட்டேன் என்கிறது...."என்று துக்கத்தில் உடைந்த குரலில் மொழிந்தவள்..

"நான் கல்யாணம் பண்ணிக்கொண்டவள் அவ்வளவு கோழையாக இருக்க முடியாது என்பதனால்.." என்றான் அமைதியாக.

"எது உண்மை.. எது பொய்.. இது எல்லாம் கனவா நினைவா என்று புரியாத நிலையில் இருக்கிறேன்... பிருத்திவி.. என்னை குழப்பாது இங்கிருந்து போய் விடு பிருத்திவி நான் உன்னை பார்க்க விரும்பவில்லை..." என்றாள் சலித்த குரலில்.

எதையும் புரிந்துக்கொள்ள திராணி அற்று... "நேற்று இரவில் இருந்து நீ என் மனைவி என்பது சத்தியம்" என்றான் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான்.

பட்டென்று தன் கழுத்தில் கையை வைத்தவள் தான் எப்பயும் அணியும் ஒரு சின்ன தங்க சங்கலியை தவிர எதுவுமே கிடக்காதே கண்டு ஒன்றும் புரியாது அவனை கேள்வியாக பார்த்தாள்.

"எங்கள் முறைப்படி தாலியோ இல்ல மோதிரமோ.. எதுவும் அணிவிக்க வேண்டியது இல்லை" என்றான் அவளை அசையாது பார்த்தப்படி.

"எனக்கு தெரியாது.. என் சம்மதம் இல்லாது நான் எப்படி உனக்கு மனைவி ஆக முடியும் பிருத்திவி?? ஓ!! இப்படி ஒரு பொய்யை வாய் கூசாமல் சொன்னால் நேற்று இரவு நடந்தை ஏற்றுக்கொண்டு உன்னை மன்னித்து விடுவேன் என்று நினைக்கிறாயா?? ஒருகாலமும் இல்லை... வேறு ஒரு பெண்ணிற்கு நிச்சயப்பட்டு இருந்த ஒருத்தனாக இருந்த நீ என்னை பார்த்ததும் தப்பு.. தொட்டதும் தப்பு அதை விட எனக்கே தெரியாது கல்யாணம் பண்ணியது மகா தப்பு... " என்று ஆவேசமாக ஆரம்பித்தவள் அப்படி அழுகையில் முடிக்க..

"அது ஒரு பிரச்சனை இல்ல மேகி.. ஊர் அறிய மீண்டும் மணந்துக்கொள்ளலாம்" என்றான் திடமாக.

கண்களை வேகமாக துடைத்தவள் "யாரை??" என்றாள் வெடுக்கென்று நிமிர்ந்து.

"உன்னை" என்றான் பார்வையில் கூர்மை ஏற.

"என்னையா... ஏன் என்னை... அந்த நிச்சயப்பட்ட பெண் என்னாவது?? ஓ... இது நீ ஏமாற்றிய பெண்களிடம் சொல்லும் வாடிக்கை வசனமா?" என்றாள் மீண்டும் சினந்து எழுந்து.

"மேகி.. நான் யாரையும் இதுவரை ஏமாற்றியது இல்லை இனி ஏமாற்ற போவதும் இல்லை.."

"ஏமாற்றப்பட்டதற்கு சாட்சியாக நான் இருக்கேனே பிருத்திவி..."

ஆத்திரமாக பொரு மூச்சு விட்டவன்.. "மேகி.. நீ நம்பாவிட்டாலும் எனக்கும் உனக்கும் நேற்று திருமணம் நடந்து முடிந்து விட்டது.. அதை ஊர் அறிய நம் திருமணத்தை செய்ய தான் போகிறேன்.."

"ஆனால் அதில் மணப்பெண்ணாக நான் இருக்க மாட்டேன்..."

"ஓ.. எஸ்.. என் பக்கத்தில் நீ தான் இருக்க போகிறாய்.. அது உன் முழு சம்மதத்துடன்.. ஊரே திரண்டு வந்து நம் கல்யாணத்தை வாழ்த்தத்தான் போகிறது.. அதில் என்ன ப்யூட்டி தெரியுமா இந்த கல்யாணத்தை நீயே நடத்தும் படி வந்து என்னிடம் கேட்க போகிறாய்...பார்" என்று அசராமல் சூளுரைத்தான் மிர் நவாப் ரஃபிக் அல்வுமர் அலிகான்.

"ஒருகாலமும் நடக்காது.. நான் உன்னிடம் வந்து கேட்க மாட்டேன்.. பேச மாட்டேன்... ஏன் இனி உங்க முகத்தில் கூட

விழிக்க மாட்டேன்.. இதுதான் உங்களை நான் பார்க்கும் கடைசி முறை" என்று பதிலுக்கு ஆவேசமாக சூளுரைத்தாள் மேக மித்ரா.

"அதையும் தான் பார்க்கலாம் மேகி.. என்னை தேடி நிச்சயம் வருவாய்... வரவழைப்பேன்... இந்த இடைப்பட்ட காலத்தில் நீ பேகம் மேக மித்ரா அல்வுமர் அலிகான் என்பதை மறந்து விடாதே" என்று அழுத்தமாக கூறியவன் அந்த வார்த்தையை நிருபிக்கும் வண்ணம் அவள் எதிர்பார்க்கும் முன் குனிந்து அதே அழுத்தமான முத்தத்தை அவளுக்கு கொடுத்து விட்டு புயல் வேகத்தில் நகர்ந்தான்.

அன்று மாலையே உடம்பு சரியில்லாததை காரணம் காட்டி அங்கிருந்த ப்ளைட்டில் ஊருக்கு கிளம்பியவள்.. அடுத்த நாள் படுக்கை விட்டு எழாது படுத்திருக்க.. வீட்டில் இருக்கும் ஒவ்வொரு நொடியும் உண்மையை மறைக்கிறோமே என்ற குற்ற உணர்வும்... தன் தவற்றை நினைத்த வருத்தமும்... எல்லாத்தை விட கழிவிரக்கமும் அவளை வாட்டி வதைக்க.. மூச்சை முட்டியது... மறுநாளே ஏதோ முதுமலை கேம்ப்பிற்கு ஒரு ஆள் குறைவதாக செய்தி வர... எதை பற்றியும் யோசிக்காது போக வேண்டாம் என்று வீட்டு அங்கத்தினர் மறுத்தை மீறி வாரி சுருட்டிக்கொண்டு அங்கே சென்று ஒளிந்துக்கொண்டாள்!!!

அவள் பத்து நாள் கழித்து ஊர் திரும்பு போதுதான் ரஃபிக் மற்றும் சித்தின் விபரத்தை பற்றி தெரிய வர...

கடைசியாக அவன் முகத்திலேயே விழிக்க கூடாது என்று சபதமிட்டது ஞாபகத்திற்கு வந்தது எல்லாம் வரை சரி தான்..ஆனால் அதற்காக அவன் ஒரே வழியாக இந்த உலகத்தை விட்டே போய் சேர வேண்டும் என்று அவள் என்றுமே நினைக்கவில்லை...

அவள் அப்படி சொன்னதால் தான் இந்த விபத்தோ என்று மனம் அவனை காண ஏங்க... அது முடியாத சூழலில் தான் அவனுக்கு போன் செய்து அவன் குரல் கேட்டவுடன் லைனை கட் செய்துவிடுவாள்!!!

தான் அறியாது.. தனக்கு கல்யாணம் ஆகி விட்டது என்ற அதீத அதிர்ச்சியில் இருந்து மீளுவதற்குள்ளே... ஒரு பெண்ணின் வாழ்க்கையை தட்டி பறித்துவிட்டோம் என்ற குற்ற உணர்வு பேய் ஆட்டம்போட... அதுவும் இரண்டு வருடம் காத்திருந்த பெண்ணின் இடம் தான் அது என்று உண்மை அவள் முழுமையாக ஏற்கும் முன்பாகவே ஒரு மாதம் ஓடி போய் இருக்க...

"போன மாதம்... நான் ஹைத்திராபாத் சென்ற போது நானே தெரியாது கல்யாணம் பண்ணிக்கொண்டேன்" என்று எப்படி வீட்டில் சொல்ல முடியுமா?? அப்படியே சொன்னால் ஏற்கனவே

போராடி உயிர் பிழைத்த அவனை அண்ணன்கள் சும்மா விடுவார்களா...?? என்ற பயமும் அவளை வாயை திறக்க விடாது தடுக்க.. மாதங்கள் செல்ல... செல்ல.. அவள் உண்மையை சொல்லும் தருணமும் குறைந்துக்கொண்டே போனதுதான் மிச்சம்!!!

நடப்பிற்கு திரும்பியவள் எதுவும் பேசாது ஒருமுறை ரஃபிக்கை பார்த்தாள்.. அவளின் பார்வையை எதிர்க்கொண்டவனின் உடல் விரைத்தது.

இத்தனை நேரம் தெனவாட்டாக பேசிக்கொண்டு இருந்தவனின் கண்கள் முதன் முறையாக கோபம் தெறிக்க... "என் மனைவியிடம் கேள்வி கேட்க உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை" என்றான் முதல் முறையாக ரஃபிக்கின் வார்த்தைகளில் கோபம் வெளிப்பட்டது.

"உங்களுக்கு மனைவியாகி ஐந்து மாதம் ஆகலாம்.. அது கூட எங்களுக்கு இப்ப தான் தெரியும்.. ஆனால் கடந்த இருபத்தி நான்கு வருட காலமாக அவள் எங்களுக்கு தங்கை" என்றான் ஆர்யா அழுத்தமாக.

"உங்க தங்கை மேல் இருக்கும் அக்கரையை கண்டு புல் அரிக்கிறது.. இந்த அக்கரை கடந்த ஐந்து மாத காலமாக எங்கே போய் இருந்தது என்று சொன்னால் நல்லா இருக்கும்..."

"எங்கள் தங்கையை சரியா பார்த்துக்கொள்ளவில்லை என்று சொல்கிறிங்களா?" என்றான் ஆர்யா

"கடந்த ஐந்து மாசமாக அவள் சரி இல்லை என்று உங்களுக்கு தெரியாது??"என்றான் ஆவேசமாக

அவன் அப்படி எல்லாம் உணர்ச்சி வசப்பட்டு பார்த்திருக்காத சச்சிதேவ் அவனை முறைத்தப்படி

"தெரியும்" என்று தைலயை மட்டும் ஆட்டினர்.

"ஏதோ டிஸ்டப்பாக இருக்கிறாள் என்று தெரிந்த பின்னும் என்ன நடந்தது என்று விசாரிக்க வேண்டும் என்று சின்ன குறுகுறுப்பு கூட வராது இருந்ததை பார்த்து எனக்கு ஆச்சரியாமக இருக்கிறது?" என்று கேட்ட ஒவ்வொரு வார்த்தையில் நஞ்சு தோய்த்த அம்பு சச்சிதேவ் சகோதரர்கள் உள்ளத்தில் குறி தப்பாமல் தொய்த்தது.

அவன் பேசிய பேச்சு தன் அண்ணன்கள் எப்படி ஆழமாக காயப்படுத்தும் என்பதை அறிந்த மேக மித்ரா.. "என்ன பேசற ரஃபிக்??.." என்று அலறியப்படி கேட்டாள்.

"வாள் வீச மாட்டேன் என்று தான் வாக்கு கொடுத்தேன் வார்த்தை வீச மாட்டேன் என்று அல்ல..." என்று திடமாக பதில் வந்தது அவனிடம் இருந்து.

"காரணம் என்னவாக இருக்கும் என்று தெரிந்துக்கொள்ள முயல வில்லை என்று உங்களுக்கு தெரியுமா??" என்றான் கார்த்திக்.

"எடுத்த முயற்சி போதவில்லை என்கிறேன் நான்."

"ரொம்பவே தோண்டி துருவுவதை அவள் விரும்பி மாட்டாள் என்பதால்.." என்று பத்ரி இழுக்க...

"என் தம்பி.. ஒரு வார்த்தை கூட சொல்லாது... பிச்சாவரத்தில் இருந்து திரும்பிய இரண்டாவது நாள் காலை எனக்கு தெரியும் அங்கே என்ன நடந்தது.. ஏன் இப்படி உலகமே அழிந்த போன மாதிரி முகத்தை வைத்துக்கொண்டு வந்திருக்கிறான் என்று... அதை விட எதற்காக அவன் சங்க மித்ராவிடம் தன் காதலை துறந்தான் என்று தெரிந்த அடுத்த நாளே அவனை வர வேண்டாம் என்று சொல்லிவிட்டு நான் சங்க மித்ராவை பெண் கேட்க தான் சென்னை வந்தேனே.. தவிர மீட்டிங்கிற்காக அல்ல.." என்று அனாயசயமாக ஒரு குண்டை போட்டான் ரஃபிக்.

சித்திற்கு பதில் இவன் மீட்டிங்கிற்கு வந்ததிற்கான உண்மையான காரணம் அப்போ தான் அனைவருக்கும் புரிந்தது!!!

பெண் கேட்க வந்தவனையே கடத்திக்கொண்டு போனதை விட... மோசமான சமயம் இருக்கமுடியுமா?? என்று

தெரியவில்லை... இப்படியாக ஆளாக்கு தங்கள் எண்ணத்தில் முழ்கி இருக்க...

"சச்சிதேவ் யாரும் கோழை இல்லை.. பிரச்சனை என்றால் அவளே வருவாள்.." என்று கார்த்திக் மொழியும் போதே..

"அப்படி நம்பி உங்களை கடந்த ஐந்து மாதமாக... என்னை தேடி பிடித்து.. கதவை உடைத்துக்கொண்டு என் சட்டையை பிடித்து என் தங்கையை எப்படி எங்களுக்கு தெரியாமல் கல்யாணம் பண்ணிக்கொள்வாள் என்று அடிக்க வருவிங்கன்னு எதிர்பார்த்தேன்.. ஆனால் ஒருதர் கூட... அவள் மேல் அக்கரை எடுத்து என்னாச்சு என்று விசாரிக்காது.. உங்கள் வேலை உண்டு.. நீங்க உண்டு என்று அவளை கண்டுக்கொள்ளாது இருப்பிங்கன்னு நம்பவே இல்லை... என்றான் ஒரு மாதிரி குரலில்.

"இப்ப சரமாதிரியாக கேட்கும் கேள்விகளை ஐந்து மாதம் முன்பு கேட்டிருந்திங்கன்னா... நீங்க கேட்ட பதிலுக்கு மட்டும் அல்ல கேட்காத கேள்விக்கும் கூட பதில் சொல்லி இருப்பேன்.." என்றான் உஷ்ணமாக.

"எங்களை குற்றவாளி கூண்டில் நிற்க வைப்பது இருக்கட்டும்... உங்க முறைப்படி காட்டில் குதிரையில் மங்கியை கடத்திக்கொண்டு போய் ஒரு இரவு முழுவதும் வைத்திருந்தால் அவளுக்கு உங்களுக்கும் கல்யாணம் ஆகிவிட்டதாக ஆகி

விடுமா?" என்றான் கார்த்திக் அவனின் முன்னோர்கள் கதையையும் இவன் பேசிய விதத்திற்கும் முடிச்சிப்போட்டு.........

"அப்ப கழுத்தில் ஒரு மஞ்சல் கயிறு கட்டி விட்டால் கல்யாணம் முடிந்து விட்டதாக ஆகி விடுமா என்று கேட்பது போல் இருக்கு கார்த்திக்.. நீங்க கேட்கும் கேள்வி" என்று ஆரம்பித்த ரஃபிக்.. "முதலில் இருந்து திரும்பவும் ஆரம்பிக்கிறிங்க?? போலோ ப்ளே க்ரவுணட்டிற்கு பின்னால் இருக்கும் எங்கள் காட்டை ஏன் இவ்வளவு செலவு செய்து பாதுக்காக்கிறோம் என்று நினைக்கிறிங்க?? அங்கே தான் இந்த ஊர் பெயர் வர காரணமாக இருந்த நவாப்பும் பாகுமதியும் காதல் திருமண நடந்த இடம் அது எங்களை பொருத்த வரை மிகவும் புனிதமானது!! அந்த காட்டிற்குள் குடும்ப அங்கத்தினரை தவிர வேறு யாரும் அங்கே உள்ளே போக அனுமதிப்பதும் இல்லை... அதே போல்.. கண்டவர்களை என் குதிரையில் உட்கார வைத்து அழைத்து செல்லும் பழக்கமும் இல்லை.. நான் மேகியை கடத்திக்கொண்டு போகவில்லை.. முழு சம்மதத்துடன் தான் என்னுடன் வந்தாள்... இருந்தாள்.. எங்களுடைய சம்பரதாயப்படி நான் உணவு ஊட்டுவதோடு எங்கள் கல்யாணச் சடங்கு முழுமையாக நிறைவடைந்தது!!!"

அவன் பக்கம் இருக்கும் நியமான கோபத்தை புரிய ஆரம்பித்த கார்த்திக் ஒரு முறை கூர்ந்து நோக்கியவனின்

கண்கள் அவன் சொல்லும் விஷயத்தின் ஆழம் புரிய... முதல் முறையாக கோபம் முற்றிலும் தனிந்தவன்...... யாரும் எதிர்பார்க்காத நேரத்தில் நேராக ரஃபிக்கின் முன் சென்று நிற்க...

மீண்டும் அடித்துக்கொள்ள போகிறார்கள் என்று நினைத்து...

"கார்த்திக்" என்று பத்ரி கூவ..

அதை பற்றி காதில் வாங்காது.. யாரும் எதிர்பார்க்காது... தன் முன்னால் நின்று இருந்த தன் தங்கையின் கணவனை தோளோடு கட்டி அணைத்த கார்த்திக் ஏதோ காதில் முணுமுணுத்துவிட்டு தோள்களை லேசாக தட்டியவன் ரஃபிக் பதிலை வாங்கியவன் தலை ஆட்டியப்படி பின்னிற்கு நகர்ந்து..

"வாங்க போகலம்" என்றான் தன் இரு சகோதர்களையும் பார்த்து.

இப்ப என்ன நடக்கிறது?? என்ன நடந்தது?? என்று எதையும் புரிந்துக்கொள்ள முடியாது ஆச்சரியமும் குழப்பமும் போட்டி போட அவர்கள் அங்கேயே நிற்க...

லேசாக சிரித்த கார்த்திக்.. தன் சகோதர்களின் தோள்களை பற்றி இழுத்து "வாங்க போகலாம்" என்றான் அழுத்தமாக கூறியதோடு மட்டும் அல்லாது.. அப்படியே இழுத்துக்கொண்டு வெளியேறினான்.

இன்னும் முழுமையாக அதிர்ச்சியில் இருந்து விடுப்படாத ஆரியும்.. பத்ரியும்... அந்த அறையவிட்டு லாணில்

நடந்துக்கொண்டே இருக்க.. வெயில் சுள்ளேன்று முகத்தில் அறைய... மெல்ல சுய நினைவிற்கு திரும்பியர்கள்..

"நான் உள்ளே பார்த்து எல்லாம் உண்மை தானே?? இது ஒன்றும் கனவு இல்லையே??" என்றான் பத்ரி ஒன்றும் புரியாது.

தலையை சாய்த்து சிரித்த கார்த்திக்கின் முடியில் இருந்த ரோஜா கீழே விழ... எதை பற்றியும் தெரியாத அவன் முகத்தில் முதன் முறையாக நிஜ சந்தோஷம் குடிக்கொண்டதை கண்ட சகோதர்கள்..

"என்ன நடக்குது இங்க?? ஒரு நிமிஷம்.. அவன் கழுத்தை நெரிக்க போறியோன்னு நான் பயந்துக்கொண்டு நின்றேன் என்றால்.. அடுத்த நிமிஷம்... அவனை கட்டி பிடிக்கிறாய்.. எனக்கு ஒரு மண்ணாங்கட்டியும் புரியவில்லை" என்றான் பத்ரி விரக்தியாக.

"பத்ரி.. எப்பயும் ஆழ்ந்து கவனிக்கும் நீ ஒரு விஷயத்தை எப்படி கவனிக்க தவறினாய்?" என்றான் கார்த்திக்.

"என்ன விஷயத்தை தவறிவிட்டான்??" என்று அத்தனை நேரம் அமைதியாக நடந்து வந்த ஆர்யா கேட்டான்.

"அண்ணா... நான் துறத்தி துறத்தி மாப்பிள்ளையை அடிக்க... அவர் தலை தெறிக்க ஓடியதை நீங்க பார்த்திங்களா இல்லையா?" என்றான் கார்த்திக்.

அவன் சொன்ன விஷயம் காற்றோடு பறக்க.. "மாப்பிள்ளையா.. இப்ப நீ மாப்பிள்ளை என்றா சொன்ன?? யாருடா அது..??" என்றான் பத்ரி பதட்டத்தொடு.

"உன் டைமிங் காமெடி சகிக்கலைடா" என்ற கார்த்திக்.. "நான் ரஃபிக்க தான் சொல்கிறேன்" என்றான் அமைதியாக.

"டேய் ஆரி.. என்னை கிள்ளுடா.. இது எல்லாம் கனவு இல்லையே.. ப்ளிஸ்..." என்று பத்ரி கெஞ்ச..

ஆரியை முந்திக்கொண்ட கார்த்திக் தன் இரண்டாவது அண்ணனின் தோளில் ஓங்கி வைத்தான் ஒரு அடி.

"ஸ்ப்பா.. வலிக்கிறது.. ஆனால் ஏன் காதில் மாப்பிள்ளை.. என்று சொன்ன மாதிரி காதில் விழுந்ததே.." என்றான் பத்ரி தன் தோள்களை தடவிக்கொண்டப்படி.

"டேய்.. சும்மா வெறுப்பு ஏற்றாதடா... நான் சொன்ன விஷயத்தில் கவனத்தை செலுத்து..."

"நீ என் கவனத்தை சிதறடிக்க மாதிரி விஷயத்தை சொன்னா பின்ன என்ன பண்ண முடியும்" என்று புலம்பிய பத்ரி.. "என்ன சொல்ல?" என்றான் அவனை நேராக பார்த்து.

"சின்ன வயதிலேயே தற்காப்பு கலையை பயின்றவனுக்கு எதிராளியை விழுத்த தெரியாமல் இருக்காது... ஆனாலும் நான் அடிக்க முயன்ற போது.. அவன் மேல் அடிப்படாமல் இருக்க தடுக்க மட்டுமே செய்தானே தப்பி தவிறி ஒரு முறை கூட

என்னை அடிக்காதது மட்டும் இல்லை... அதற்கான முயற்சி கூட செய்யாதது.. தான் ஆச்சரியம்!!!" என்றான் கார்த்திக்.

"இதனால் என்ன சொல்ல வர...??"

"என்ன சொல்ல வரேன் என்பதை அப்புறம் சொல்றேன்.. இப்ப நான் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்.."

"நான் அவனை தவறுதலாக கடத்தி வந்த அன்று இரண்டு விஷயம் நடந்தது... முதலாவது.. நானும் நிரல்யாவும் டைவர்ஸ் லாயரை போய் பார்த்ததை அவன் எல்லோர் முன்னாடியும் சொன்னான்..

திவ்வியமாக நியாபகம் இருக்கு.. ஏற்கனவே அதிர்ச்சி தாங்காது நான் இருந்தால் இதில் நீ வேற.. டைவர்ஸ் பற்றி பேசி.. கதி கலங்க வைத்தாய்... என்றான் பத்ரி.

"நாங்க டைவர்ஸ் லாயரை பார்த்தது அவனுக்கு எப்படி தெரியும்??"

"அதுதான் உனக்கு அவன் மேல் உள்ள கோபமே.. இதை ஏன்டா என்னிடம் கேட்கிறாய்? என்று அவன் இழுக்கும் போதே.. டேய்.. அன்று நான் ரஃபிக்கை பார்த்து இங்கே எதற்கு வந்திங்கன்னு கேட்க போது.. என்ன சொன்னான்.. நீ கடத்தி வந்ததாக சொல்லாது பெண் கேட்க வந்தேன் என்று சொன்னானே.. அப்ப அது உண்மைதானா??" என்று கூறினான் பத்ரி.

"ரஃபிக் சொல்வதை பார்த்தால்... நாம் சும்மா இருந்திருதாலே சுபமாக கல்யாணம் முடிந்திருக்கும் போல.. தேவை இல்லாமல் நாமே வீராவேசமாக ரு கடத்தல் நாடகம் போட்டு அது படுதோல்வியில் முடிந்து... நினைத்து பார்.. அவனை காரில் கடத்திக்கொண்டு வரும் போது எப்படி சிரித்திருப்பான்??.." என்று தலையில் அடித்துக்கொண்டான் ஆரி.

ஆமோதிப்பாய் தலையை ஆட்டிய கார்த்திக்... "அவன் என்னை உளவு பார்ப்பதற்காக ஆள் வைக்கவில்லை... மங்கியின் பாடிகாட்டாக செயல்பட்ட அந்த ஆள் என்னையும் சேர்த்து கவனித்து இருக்கிறான்" என்றான் தெளிவாக.

"என்னது மேகிக்கு பாடிகாட்டா??" என்றான் ஆர்யா.

"ஓ!!! மங்கி தான் அவனின் பேகம் ஆயாச்சே... அப்ப இனி சங்கி கூட பாடி காட் இருப்பார்கள்" என்று பத்ரி அவர்கள் நண்பனின் வீட்டு பழக்கம் தெரிந்ததால் அதை எளிதாக ஏற்றுக்கொண்டவன் ஆரியாவிற்கு அதை ஞாபகப்படுத்தினான்.

அப்ப ஒரு வழியாக எப்படிடா எங்களுக்கே தெரியாத விஷயம் அவனுக்கு தெரிந்தது என்ற மண்டை குடைந்த கேள்விக்கு விடை கிடைத்தவிட்டது என்று நிம்மதி பெரு மூச்சு விட்டான் ஆரியா.

ஆமோதிப்பாக மற்ற சகோதரர்களும் தலையை ஆட்ட... அப்ப இரண்டாவது விஷயம் என்ன என்றான் ஆரி.

"ஞாபகம் இருக்கா பத்ரி... உன்னுடன் காரில் வருவான் என்று நினைத்தால் பிடிவாதமாக என் காரில் தான் வருவேன் என்று வந்தானே" என்று கார்த்திக் மீண்டும் அன்றைய தினத்தை நினைவிற்கு இழுக்க.

"ஒ!! ஞாபகம் இருக்கே.." என்றான் பத்ரி எங்க அவன் மூக்கை உடைத்து விடுவாயோ என்று பயத்தில் நானும் பாட்டியும் நடுங்கிக்கொண்டே வீடு வந்து சேர்ந்தோம்..

"அன்று.. காரை விட்டு இறக்கும் போது ஒரு வார்த்தை சொன்னான்... உயிருக்கு உயிராக காதலிக்கும் பெண்ணை பிரிந்து வாழ்வது நகரம் என்று சொன்னான்... அதற்கும் ரொம்பவே அனுபவித்து பேசுவது போல் இருக்கே என்று கோபம் பொங்கக் கேட்க.. அனுப்பவித்துக்கொண்டு இருக்கிறேன் என்று சொன்னான் டா அவன்" என்றான் கார்த்திக் பரப்பரப்பாக.

"ஆக.. உன்னை போலவே அவனும் கல்யாணம் பண்ணியும் பிரிந்து வாழ்ந்ததை தான் இந்த லட்சணத்தில் சொல்லி இருக்கிறான்" என்றான் ஆரி தாடையை தடவியப்படி.

"எக்ஸ்சாட்லி அண்ணா.. இப்ப அதை பற்றி நினைக்கும் போது இதற்காக தான் அப்படி சொல்லி இருக்கிறான் என்று புரிகிறது. இப்போ நம் மேல் கோபப்பட்டு பேசியதில் கூட தப்பு இருப்பதாக தோன்றவில்லை... அவன் இடத்தில் நான்

இருந்திருந்தாலும் அப்படிதான் நடந்திருப்பேன்" என்றான் யோசனையாக.

"ம்ம்.." என்று ஆமோதிப்பாக பத்ரி மட்டும் அல்ல ஆரியும் சேர்த்தே தலை அசைத்தான்.

ஏன் என்றால் கார்த்திக் நிரல்யாவை பதினெட்டாவது வயதில் மணம் புரிந்த காரணம் இது போல் ஒன்று என்பதால் அவர்களால் அவனின் எண்ணவோட்டத்தை புரிந்துக்கொள்ள முடிந்தது!!!

"அன்று சித்திடம் உன் அண்ணன் பேசுவதை என்னால் புரிந்துக்கொள்வே முடியவில்லை என்று நீ கேட்ட போது.. அவர் பேசுவதை வைத்து புரிந்துக்கொள்வதை விட.. அவர் நடப்பதை வைத்து புரிந்துக்கொள்ள முயல்வது ரொம்ப சுலபம் சொன்னான் என்று சொன்னாயே ஞாபகம் இருக்கா??" என்றான் கார்த்திக் பரப்பரப்பாக.

"திவ்வியமாக..."

"கல்யாணத்திற்கும் முந்தி... ஒரு நாள்.. தூக்கம் வராது நான் கீழே வந்துக்கொண்டு இருந்த போது.. படியில் மேகியும் ரஃபிக் கார சாரமாக சண்டை போட்டுக்கொண்டார்கள் என்ன என்று சரியாக காதில் விழுவில்லை.. ஆனால்... மேகி அழுகையுடன் ஏதோ கூறிவிட்டு சென்றாள் என்று மட்டும் புரிந்தது.. எனக்கு வந்த கோபத்திற்கு அவனை அப்படியே கிழித்து கூறு போட

வேண்டும் என்று போனால்.. தலைவர் அங்கே இருந்த கலை பொருள் தன் ஆவேசத்தை காட்டி அதை சுக்கல் சுகலாக... உடைக்க... கையில் வழிந்த ரத்தத்தை கூட உணராது அவன் நின்ற விதத்தை பார்த்து ஒரு நிமிஷம் விக்கித்து போய் நின்றேன்... ரஃபிக் அப்படியே எல்லாம் எமோஷனால் ஆக நடக்கும் ஆள் இல்லையே என்று நான் தீவிரமாக அவனை கண் காணிக்க தொடங்கியது அன்றிலிருந்து தான்!!!"

"இப்ப நான் வைத்த புள்ளி எல்லாம் ஒன்று சேர்... அதில் அழகான படம் கிடைக்கும் அது என்னவென்று சொல்லு பார்ப்போம்..." என்றான் கார்த்திக் பெருமிதமாக.

"அது என்ன படம்... யார் படம் என்று புரிந்து விட்டது ஆனால்... இப்ப ஒன்றும் அவர்களுக்குள் எதுவோ சரி என்பது போல் தோன்றுகிறதே" என்றான் ஆரி.

"உன்னையும் என்னையும் ஏன் கார்த்திக்கையும் கூட சமாளித்தவனுக்கு அவனுடைய மேகியை சமாளிக்க தெரியும்டா அரி." என்று பதிளித்த பத்ரி... ஏதோ ஞாபகம் வந்தவனாய் தன் தம்பியின் புறம் திரும்பியவன் "நீ என்னடா அவனிடம் காதில் ஓதினாய்?" என்றான் அவனை குறுகுறுப்பாக பார்த்தப்படி.

பதிலேது சொல்லாது விசில் அடித்தப்படி தலையை ஆட்டினான் கார்த்திக்...

"அட பாவி... இப்படி கட்சி மாறக் கூடாது.." என்று பத்ரி சிரித்தப்படி அவன் முதுகில் தட்ட.. ஆரியும் சேர்த்து அவனை அடிக்க.. அந்த சச்சிதேவ் சகோதரர்கள் ஏதோ பேசி சிரித்தப்படி அரண்மனை நோக்கி நடந்தனர்!!!

அண்ணன்கள் சந்தோஷமாக சென்றுக்கொண்டு இருப்பதை அறியாத மங்கியோ இங்கே அவர்களுக்காக வக்காலத்து வாங்கிக்கொண்டு இருந்தாள்...

"உண்மையை மறைத்தது என்னுடைய தப்பு.. அதற்கு அவர்களை குற்றம் சாட்டுவது எப்படி நியாயம் ஆகும்?" என்றாள் ஆத்திரமாக.

"இந்த அறிவுரையை பேகம் என்ற முறையில் போதிக்கிறாயா இல்லை அவர்களின் தங்கை என்ற முறையில் சொல்கிறாயா??"

"பேகம் என்றால் கேட்பிங்களா இல்ல தங்கை என்றால் கேட்பிங்களா?"

"எந்த முறை என்பதை பொருத்து என் பதில் வேறு படுமே தவிர நீ சொன்னதை எல்லாம் கேட்பேன் என்று நான் சொல்லவில்லையே"

"எப்படியும் மறுத்து பதில் சொல்வதற்கு நான் எந்த முறை சொன்னால் என்ன??" என்று ஆத்திரமாக மொழிந்தவள்.. "ஒன்றை ஞாபகம் வைத்துக்கொள் ரஃபிக்... அவர்கள் மேல்

வாள் வீசினால் மட்டும் அல்ல வார்த்தை வீசினால் கூட எனக்கு வலிக்கும்..."

"தெரியும்... ஆனால் சில சமயங்களில் தப்பை தப்பு என்று சொல்வதற்கு வார்த்தை வீச வேண்டி வருவதை தவிற்க முடியாது மேகி... அதை நீயும் புரிந்துக்கொள்.. அவர்கள் உன் விஷயத்தில் அலட்சியமாக இருந்தது தப்பு அதை சொன்னேன்.. அதே சித் விஷயத்தில் என்னை கடத்தியப்போது கூட சும்மாதானே இருந்தேன்??" என்று எதிர் கேள்வி கேட்டான்.

அதற்கு அவளிடம் பதில் இல்லை என்பதை அவனும் அறிவான் அவளும் அறிவாள்...

"இதற்கு ஒரு தீர்வு சொல்கிறேன் கேள்... இனி எனக்கு உன் அண்ணன்களுக்கு இடையே நீ வராதே.. இப்ப அவர்களை காக்க தான் பறந்தடித்துக்கொண்டு வந்தாய் என்றால் நீ வந்த காரியம் இனிதே நிறைவடைத்து.. நீ போகலாம்" என்று திரும்பி அவன் கையில் இருந்த கத்தியை சுவற்றில் மாட்டி இருந்த இடத்தில் மீண்டும் அங்கே வைக்க... அந்த நொடியில் தான் அவள் எதற்கு பறந்துக்கொண்டு வந்தாள் என்று ஞாபகத்திற்கு வர...

"கடவுளே.. நான்... அண்ணன்கள்.. வந்து அவர்கள் விஷயமாக இங்கே வரவில்லை" என்றாள் கைகளை பிசைத்தப்படி பதட்டமாக.

அவளின் குரலில் இருந்த வித்தியாசத்தை உணர்ந்து திரும்பியவன்.. "பின்ன?"

"செத்தக்... செத்தக்கை எடுத்த செல்ல ஆட்கள் வந்திருக்கிறார்கள்" என்றாள் கண்கள் கலங்க.

"தெரியும்... உத்திரவிட்டதே நான்தான்"

"ப்ளிஸ்.. ப்ளிஸ்.. ரஃபிக்.. செத்தக்கை இங்கே இருக்க விடு... உயிரோடு இருக்கும் நாள் வரையிலாவது என்னுடன் இருக்கட்டுமே..." என்ற குரலில் கெஞ்சல்... மன்றாடல்... மித மிஞ்சிய அழுகை என்று எல்லாம் கலவையாக இருந்தது.

"நோ" என்று நிர்தாட்சண்யமாக வந்தது அவனின் குரல்.

# அத்தியாயம் 38

**"நோ"** என்று நிர்தாட்சண்யமாக வந்தது அவனின் குரல்.

"நோ.. நோ... வா?? ஏன் ரஃபிக்.. நான் உன்னால் முடியாததை கேட்கவில்லையே... ஐ லவ் செத்தக்... விரும்புவதை விட்டு கொடுக்கும் வழக்கம் எனக்கு இல்லை" என்றாள் குரலில் வலி மிகுந்து.

இந்த பதத்தை அவள் முன்பே இதை சொல்லி கேட்டு இருக்கிறான்...

வாழ்க்கையில் முதல் முறையாக எங்கே திரும்பிய போதும் கண்ணிற்கு தெரியாத மாய திரையாக அவளின் நினைவுகளை இவனை கட்டிப்போட அவளின் ஆக்கிரமிப்பில் இருந்து விடுப்பட வேண்டும் என்பதற்காகவே செத்தக்கை நாடி வர... அங்கே அவனுக்கு முதுகைக் காட்டி... இடுப்பில் கையை வைத்துக்கொண்டு முகத்தை அலட்சியமாக நின்று இதே வார்த்தைகளை சொல்லி காலை பொழுது அவனை மிரட்டியது போல் அவனின் குதிரையும் மிரட்டிக்கொண்டு இருந்தவளை பார்த்து அவன் தன்னை மறந்து நிற்க... முதல் முறையாக மூளை எச்சரிக்கை செய்ததை கேட்க மறுத்தது அன்று தான்!!!

அது மட்டும் முதல் முறை அல்ல.. பல விஷயங்களுக்கு அன்று தான் முதல் முறையாக இருந்தது...

அந்த நினைவில் இருந்த மீண்டு..

"அவ்வளவு பாசமா?? என்று அலட்சியமாக கேட்டவன் "விரும்புவதை விட்டுக்கொடுக்கும் பழக்கம் இல்லை என்றாயே... அப்ப ஏன் என்னை மட்டும் விட்டுக்கொடுத்தாய் மேக மித்ரா?? ஒருவேளை போராடும் அளவு விரும்பவில்லையோ??" என்று பாயின்ட் ப்ளாக்கில் துப்பாக்கியை வைத்து கேட்பது போல் கேள்வி கேட்டான் ரஃபிக்.

"நான் விட்டுக்கொடுப்பதற்கும்.. போராடுவதற்கும் நீ எப்ப என்னுடையவனாக இருந்திருந்தாய்??" என்றாள் கண்ணில் வலி அப்பட்டமாக தெரிய...

ஆத்திரமாக ஏதோ அரபிக்கில் மொழிய...

"எனக்கு அரபிக் தெரியாது... தமிழ்" என்றாள் வேகமாக.

ஆர்ப்பரிக்கும் கோபத்துடன் அவளை பார்த்தவன்.. "உனக்கு புரியக்கூடாது என்பதற்காக தான் பேசுவதே" என்று மொழிந்தவன்.

"ஏன்??"

"தலையில் அடிப்பட்டு நீ கீழே விழுவதைப் பார்த்து உன்னை பிடிக்க பறந்து வந்தேன் பார்... அந்த நொடியில் இருந்து இந்த நொடியில் வரை நான் யாருடையவனாக

இருக்கிறேன் என்று நினைத்துக்கொண்டு இருக்கிறாய் பேகம் மேக மித்ரா அல்வுமர் அலிகான்?" என்றான் கண்கள் கோவைப் பழமாக சிவக்க.

அவன் கேட்க கேள்வியின் தன்மை பெரிதும் பாதிக்க... "நீ என்னுடைய பிருத்திவியா மட்டும் இருந்திருந்தால் எந்த போராட்டத்தையும் எதிர்க்கொண்டு இருந்திருப்பேன்... ஆனால்.. நீ என்னுடைய பிருத்திவியா இல்லாது.. ரஃபிக்காக தானே இருந்தாய்...??" என்றாள் அழுக்குரலில்.

அவளின் பதிலை கேட்டு முகம் இருகியவன் "நீ புரிந்துக்கொண்டது அவ்வளவு தானா?" என்றான் அழுத்தமாக.

கண்கள் அவனை நேராக சந்திக்க "புரிந்துக்கொள்ள சந்தர்ப்பமே கொடுக்கவில்லை ரஃபிக்?".

"கொடுத்த சந்தர்ப்பங்களில் புரிந்துக்கொள்ள தவறியது நீ..."

இந்த பேச்சு எதை நோக்கி போகிறது என்று நன்றாக புரிய... வீனா அடுத்த சண்டையை ஆரம்பிக்க விரும்பாது... "நழுவிய சந்தர்பங்களை பற்றி பேசி என்ன ஆக போகிறது ரஃபிக்... நான் என்ன சொன்னாலும்.. எது செய்தாலும்... செத்தக்கை விடுவிக்க மாட்டாயா?" என்றாள் வலியும் வேதையும் மிகுந்த குரலில்.

"உனக்காக நான் வாக்கு தவற மாட்டேன் மேக மித்ரா.."

"ரஃபிக்.. நான் உன்னை வாக்கு தவற சொல்லவில்லை... இருக்கும் வரை செத்தக் இங்கே இருக்கட்டும் என்று தான் மன்றாடுகிறேன்" என்று கதறலாக கேட்டவள்.. "ஏன் செத்தக்கின் உடல் நல குறைவை முன்பே என்னிடம் சொல்லவில்லை??" என்றாள் ஆற்றாமையோடு.

"சொல்லி இருந்தால் என்ன செய்திருப்பாய்?? கல்யாண ரீஷப்ஷனில் என்னை மட்டும் தனியாக மேடையில் நிற்க சொல்லிவிட்டு நீ மாஸ்கை போட்டுக்கொண்டு அங்கே சர்ஜரிக்கு துணை புரிய போய் நின்றிருப்பாய்..." என்றான் மிக தெளிவாக.

அவன் சொன்னதில் நூறு சதவிதம் உண்மை இருக்கிறது என்ற உணர்ந்த போதும் அதை ஏற்றுக்கொள்ள முடியாது "ஆனால்..."

"இல்லை.. மேகி... நீ ஒரு கால் நடை மருத்தவர் என்பதை அறிந்து தான் உன்னை மணம் செய்துக்கொண்டேன்.. அதற்காக எனக்கு மூக்கணாங்கயிறு போட்டு உன் இஷ்டத்திற்கு இழுக்கப் பார்க்காதே... செத்தக் உயிரோடு இருக்குமா இருக்காதா என்று தெரியாது. ஐந்து மாதத்திற்கு முன் பழக்கப்பட்ட குதிரைக்கே நீ என்னிடம் போராடுகிறாய் என்றால் எனக்கு அப்பா கொடுத்த குதிரையை நான் காப்பாற்ற எந்த எல்லைக்கு போய் இருப்பேன் என்று ஏன் புரியவில்லை...?? ஆனால் மரணத்தை வெல்ல

யாராலும் முடியாது என்று டாக்டராக இருக்கும் உனக்கு ஏன் புரியாமல் இருக்கிறது??".

"இங்க புரியுது..." என்று தன் மூளையைக் காட்டியவள் ஆனால் "இங்கு அதை ஏற்க முடியவில்லை ரஃபிக்... ஒருவேளை...." அதற்கு மேல் பேச முடியாது தொண்டைய அடைக்க.. நிறுத்தினாள்.

"குதிரைக்காக அழுது கரைந்து போராடும் நீ... காதலித்தாய்.. காதலித்தாய் என்று சொல்லும் என்னை.. எப்படி உன்னால் அவ்வளவு எளிதில் புறக்கணித்து விட்டு போக முடிந்தது??" என்றான் ஒரு மாதிரி குரலில்.

"எனக்கு வேற வழி என்ன இருந்தது ரஃபிக்?? என்று கேட்ட போது அந்த கதறல் அந்த அறை எங்கும் எதிரொலிக்க தான் செய்தது... "என் வீட்டிலேயே நான் தான் உணர்ச்சி வசப் படாது.. நிறுத்தி யோசித்து பேசும் ஆள்.. அப்படிப்பட்ட நான்..." என்று தன்னை சுட்டிக்காட்டியவள்...

"என் காதலை உணர்ந்த அந்த நொடி.... எதை பற்றியும் யோசிக்காது.. உன்னிடம் என்னை கொடுத்தேன்... அடுத்த நாள் என்ன நடக்கிறது என்று நிறுத்தி நிதானமாக யோசிக்கும் முன் பூகம்பமாய் உன் நிச்சயதார்த்தம் என் முகத்தில் வெடிக்க... காதலை உணர்ந்த இருபத்தி நான்கு மணி நேரத்தில் உன்னை விட்டு பிரிந்தேன்... அதுவும் எந்த மாதிரி சூழ்நிலையில்?? வேறு

ஒருத்திக்கு உரிமைபட்ட பொருளை திருடிக்கொண்ட குற்ற உணர்ச்சியில் என்னை கொன்று தின்றது என்றால்.. உன்னை காதலித்ததை நினைத்து வாய் விட்டு அழவும் முடியாது.. உன்னிடம் இழந்ததை பற்றி யோசிக்கவும் முடியாது... என் வீட்டினரிடம் சொல்ல முடியாது சூழ் நிலை.... அலக்நந்தா பாபிக்கு இரண்டு வருடம் கழித்து அப்போ தான் உண்டாகி இருக்கிறாள் என்ற செய்தி வந்து வீடே சந்தோஷ வெள்ளத்தில் மூழ்கி இருக்க... என் விஷயத்தை வெளியே சொன்னால் யாரை எப்படி பாதிக்கும் என்று நின்று நினைத்து... வாய் மூடி இருந்த அந்த நாட்களில் நான் அனுபவித்த நரக வேதனையை சொல்ல எனக்கு வார்த்தைகள் இல்லை ரஃபிக்... இந்த சூழ் நிலையில் உன்னை என் கணவனாக என்ன.. காதலனாகக் கூட ஏற்றக்கொள்ள முடியாது என்னை கொல்லும் மன புழுக்கத்தில் இருந்து விடுபட நான் ஊர் ஊராக சுற்றிக்கொண்டு இருந்தேன்.."

"என்னை நம்பி.. என்னுடன் இருந்திருக்கனும்" என்றான் அவனின் டிரேட் மார்க் ஒரு வரி பதில் வந்தது.

"நம்பிக்கையா?? உன்னிடமா?? எப்படி வரும்?? வரும் படி நீ என்னிடம் எப்ப நடந்துக்கொண்டு இருக்கிறாய்...?" என்று ஆற்றாமையுடன் கேட்டவள்... அவன் கண்களை நேராக பார்த்து.. "நம்பி உன்னிடம் நான் வரும் பிரதி முறையும்

உன்னால் ஏமாற்றப்பட்டேன்.. ஏமாற்றப்பட்டுகிறேன் ரஃபிக்...." என்றாள் ஆங்காரமாக.

அவன் கண்கள் இடுக்க அவளை கேள்வியாய் பார்க்க..

"என்னிடம் நிச்சயமாக உன்னை ஜெயித்துக்கொண்டு தான் இருப்பேன் என்று நீ திட்ட வட்டமாக சொன்ன போது... அதை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை... என்னிடம் நிச்சயத்தை மறைத்ததில் இருந்து.. இதோ இந்த நிமிஷம்.. செத்தக்கை எடுத்து செல்ல பணிக்கும் வரை... என்னை ஜெயித்துக்கொண்ட தான் இருக்கிறாய் ரஃபிக்... நான் உன்னிடம் தோற்றுக்கொண்டே இருக்கேன் ரஃபிக்..."

"தோல்வி என்றால் போட்டியிட்டு தோற்று போகும் தோல்வியை பற்றி நான் இங்கே குறிப்பிடவில்லை ரஃபிக்... நான் தோல்வி என்று குறிப்பிடுவது... நான் உன் மேல் வைக்கும் நம்பிக்கையில்... உன் மேல் வைத்திருக்கும் காதலில்.. உன் மேல் வைத்திருக்கும் அன்பில் தோற்றுக்கொண்டே இருக்கிறேன் ரஃபிக்... முப்பது வருடம் கழித்து என் வாழ்க்கை பயணத்தை திரும்பி பார்த்தால்... நீ கொடுத்த தோல்விகளும்.. மரண வலிகளும் மட்டுமே நிறைந்து கிடக்க போகிறதோ என்ற பயம் என் மனத்தை கவ்வுகிறது... தோல்வியை கண்டு அஞ்ச... இப்படி பேசவில்லை ரஃபிக்.. ஆனால்.. அந்த பயத்தின் காரணமாக எத்தனை நாள் மனம் தளராமல் காதலை மட்டுமே

உடும்பு பிடியாக பிடித்து தொங்கிக்கொண்டே மீண்டும்... மீண்டும் முயன்றுக்கொண்டு இருக்க முடியும் என்று தெரியவில்லை... என் பயம் எல்லாம் எங்கே என் முயற்சியையே விட்டுவிடுவேனோ என்பதுதான்.." என்று ஆற்றாமையில் கண்களில் குபுகுபுவென்று நீர் பெருகியது.

"கண்களை மூடிக்கொண்டு குதிக்கவா இல்லை கண்களை திறந்துககொண்டு குதிக்கவா? என்று கேட்க வேண்டும் என்னிடம் அன்று வியாக்கானம் படித்தாயே.. எனக்கு எந்தளவு நம்பிக்கை உன் மேல் இருந்திருந்தால் நீ என்னை காதலிக்கிறாயா என்று கூட கேட்காது... எப்ப கல்யாணம் என்ற பேச்சைப் பற்றி பிரகஞ்சை கூட இல்லாது உன்னிடம் என்னை முழுமையாக ஒப்படைத்திருப்பேன்... ரஃபிக்... ??" இதுக்குப் பேர் நம்பிக்கை இல்லாது வேறு அதற்கு பெயர் என்ன??"

அந்த வார்த்தை அவனுள் ஒரு பெரும் புயலை கிளம்ப.. கண்கள் தீ பிழம்பு எரிய அவளை பார்த்தவன்... ஒரு அடி எடுத்து அவளை நெருங்கி நின்று...

"அவ்வளவு அக்கரையும்.. காதலும்... நிஜமாகவே இருந்திருந்தால்... உன் கணவன் படுக்கையில் கிடந்த போது ஓடி போய் காட்டிற்குள் ஒளிந்துக்கொண்டது???"

"உண்மையை சொல்ல போனால் விபத்து நடந்து எனக்கு தெரியாது... நான் காட்டில்.." என்று அவள் ஆரம்பிக்கும் போதே..

"உனக்கு தெரியாத போது நான் கேட்கவில்லை மேகி.. தெரிந்த பிறகு நீ என்ன செய்து இருக்கனும் என்பது தான் என் கேள்வி."

"என்ன செய்யனும் என்று சொல்றிங்க ரஃபிக்?? கார்த்திக்கை அழைத்து ப்ளைட்டை ஒட்ட சொல்லி இங்கே பறந்து வந்து உங்க கால் அடியில் விழுந்து கதறி அழுது என் காதலை உலகிற்கு காட்ட சொல்றியா? இல்லை காட்டில் நடந்த நிகழ்ச்சியை எல்லோருக்கும் வெளிச்சம் போட்டு காட்ட சொல்லுறிங்களா?"

"காட்டில் நடந்த நிகழ்ச்சியை நான் யாரிடமும் மறைக்க நினைக்கவில்லை... அப்படி ஒன்று நடக்காது போல் நடந்துக்கொண்டது நீ தான்" என்று திருத்தமாக சொன்னவன்

"உனக்காக நான் வரவில்லை என்று தான் உன் கண்களுக்கு தோன்றுகிறதே தவிர... நான் வராமல் இருந்ததே உனக்காக தான் என்று புரியவில்லை இல்லை..?? என்றாள் மூச்சிரைக்க.

"ரீயலி??" என்று நம்பாத குரலில்கேட்டான் ரஃபிக்

"உன் நிச்சயத்தார்த்தம் நின்றது தெரியாத நிலை கூட நீ நன்றாக இருக்க வேண்டும் என்று வாயை மூடிக்கொண்டு

இருந்தவள் நான்... எவ்வளவு அழுத்தக்காரியாக இருந்தாலும் எனக்கும் பிரேகிங் பாயின்ட் என்று உண்டு ரஃபிக்.. என்னுடைய பிரேகிங் பாயின்ட் நீ. சச்சிதேவ் என்றாலும் கூட திருமணத்தையே வீட்டில் மறைக்க கூடிய ஆளா நான்??" என்று மூச்சு வாங்க கேட்டாள்.

"கேம்ப் போயிருந்த நான் திரும்பி வருவதற்குள் இங்கே சித்திற்கும் சங்கிக்கு நாள் குறிந்து... அதற்கு முன் என்னை ஊருக்கு வர விடாது தடுத்து.. சரியாக நாளை கல்யாணம் என்றால் இன்று வருவது போல் என்னை இங்கே வர செய்து... இந்த கல்யாணத்தை நடக்குமோ நடக்காதோன்னு நான் பயந்து நடுங்கி இரவோடு இரவாக உனக்கு போன் செய்தால் என்ன சொன்ன?!? என் தம்பி எனக்கு முன்னாடி கல்யாணம் பண்ணிக்கொள்ள மாட்டான் என்று சொல்லிவிட்டான்.. இந்த கல்யாணம் நடக்க வேண்டும் என்றால் இரண்டே வழிதான் இருக்கு.. ஒன்று நமக்கு அன்று திருமணமானதை ஊர் அறிய ஒப்புக்கொள்ள வேண்டும்.. அதை சொல்ல இஷ்டம் இல்லை என்றால் நாளைக்கு அதே முகூர்த்தத்தில் நமக்கும் கல்யாணம் நடக்க வேண்டும் இதில் எது செய்தாலும் எனக்கு சம்மதம் என்று சொன்னிங்களே... எனக்கு எப்படி இருக்கும் என்று நினைத்த பார்த்திங்களா??"

"எத்தனை மாடர்னாக வளர்க்கப்பட்டாலும்.. சரி.. இரவோடு இரவாக கல்யாணம் பண்ணிக்கொள்ளும் சச்சிதேவ்வாக இருந்தாலும் சரி ஒரு பெண் தன் குடும்பத்தினரிடம் நாளை நான் கல்யாணம் பண்ணிக்கொள் இஷ்டப்படுகிறேன்.. இவனை மாப்பிளை கேளுங்கள் என்று கேட்டதற்கு நீ ஒன்றும் சாக்லேட் இல்லை எனக்கு ஒன்று சேர்ந்து வாங்கி தாங்க என்று கேட்க... கல்யாணம் ரஃபிக்.. இதை என் பாட்டியிடன் கேட்க எத்தனை கூனி.. குறுகி.. அசிங்கப்பட்டிருப்பேன்" என்றாள் கையில் சூலாயுதம் இல்லாது.

"என்னை கல்யாணம் பண்ணி ஐந்து மாதமாய் நீ என்ன பண்ணிக்கொண்டு இருந்தாய்..?? என் நினைவில் இருந்து தப்பிக்க காடு காடுடாய் சுத்திக்கொண்டு இருந்ததை தவிர?? உன்னை எவ்வவளவு சீக்கிரம் கல்யாணம் பண்ணி இங்கே அழைத்து வருகிறேனோ அத்தனை தூரம் உன் பாதுகாப்பிற்கு நல்லது என்று நினைத்தேன்..... நீ இப்படி ஊர் ஊராக சுற்றுவதால் என் செக்கியூரிட்டி சீப் பீட்டருக்கு எத்தனை பிரச்சனை என்று உனக்கு சொன்னால் புரியாது...... என்ன அப்படி பார்க்கிறாய்... நீ என் பேகம்... அது ஊருக்கு தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் உன் பாதுகாப்பு என் பொருப்பு."

"நீ என்னை பாதுக்காக்கிறாயா?? ஏற்கனவே கட்டிலில் படுத்த உன்னை.. நிரந்தரமாக அங்கேயே படுக்க வைக்க கூடாது என்ற பயம் மட்டும் தான்.. நம் கந்தர்வ கல்யாணத்தை வெளியே சொல்ல விடாது தடுத்தது!!!" என்றாள் திருத்தமாக.

"யார் உன்னை அடித்து விடக் கூடாது என்று வாயை மூடிக்கொண்டு அமர்ந்திருந்தேனோ?? எந்த உண்மை தெரிந்தால் உனக்கு பிரச்சனை என்று உன் உறவினர்கள் சீண்டல்களை காது கேட்காதவள் போல் அமைதியாக கேட்டேனோ இன்று அவர்களை நீ சீண்டுகிறாய்?? அவர்கள் போல் என்னால் இருக்க முடியாது என்று அத்தையை பற்றி ஒரு வார்த்தை சொன்னதற்கே அவர்களை பற்றி பேசாதே என்று சொன்னாய்.. இன்று வரை அதை நான் கடை பிடிக்கிறேன்.. ஆனால் நீ.. என் கண் முன்னால் இதோ இந்த அறையை உன் பாக்ஸ்சிங் களமாக மாற்றி என் அண்ணன்களை வார்த்தைகளை கொண்டு குத்து சண்டையில் இறங்கிய போதும்... ஒரு வார்த்தை வாயை திறக்காது அமைதியாக நின்றுக்கொண்டு தானே இருந்தேன் ரஃபிக் இதற்கு மேல் என் காதலை எப்படி நிருப்பிக்க வேண்டும் என்று நினைக்கிறாய்...?? என் ரத்தத்தில் எழுதி அதை இந்த வீட்டின் உச்சியில் பறக்க விட வேண்டுமா?? என்றாள் குரல் உடைந்து.

"இத்தனை பேசுபவளுக்கு... பத்து தடவை போன் பண்ணி எதுவும் பேசாது வைத்தவளுக்கு அன்று ஒரு முறை கூட என்னிடம் பேச தைரியம் வரவில்லையா??"

"பத்து முறையும்... உங்க குரலை கேட்கும் போதே... அடுத்த ப்ளைட் பிடித்து அங்கே வந்து உங்களை பார்க்க வேண்டும் என்று அந்த குரல் என்னை தவிக்க வைப்பதால் அப்படி பண்ண வில்லை என்று சொன்னால் என்னை நம்புவிங்களா ரஃபிக்?"

பட்டென்று இத்தனை நேரம் இருந்த அலட்சியம் மாறி ஒரு இருக்கம் சுழவதை உணர்தாள் மேக மித்ரா!!!

எதுவும் பேசாது அவளை அவன் கண்கள் இடுங்க பார்க்க...

அந்த கூர்மையான விழிகளை தவிர்க்க எண்ணி.. வேகமாக தன் பார்வையை திருப்பியவள் கைகளை பிசைந்தப்படி "அந்த விபத்தால் ஏற்பட்ட உங்கள் நிச்சயதார்த்த முறிவை பற்றி எனக்கு தெரியாது..." என்றாள் சின்ன குரலில்.

தோள் விடைக்க முதல் முறையாக தன் பார்வையை அவள் புறம் திரும்பி ஏதோ கண்ணாடி ஐன்னல் வழியாக வெறித்து பார்த்தவன் "விபத்தால் நிச்சயத்தார்த்தம் முறியவில்லை" என்றான் அழுத்தமாக.

"என்ன??" என்று அலறியப்படி அவனின் புறம் பார்த்தவளுக்கு மொழிந்த பதிலின் அர்த்தம் புரியாது விழித்தாள்.

பரபரப்புடன் "பின்ன எப்ப முறிந்தது...??" என்றாள் அவன் புறம் ஒரு அடி எடுத்து வைத்து..

அசட்டையாக தோளை குலுக்கியவன்... "இந்த கேள்வியை இப்ப கேட்டிருக்க கூடாது.."

"அப்படின்னா??"

"இட்ஸ்.. டூ லேட்... ஐந்து மாதம்... ப்ளிடி டூ லேட்..."

அழுத்தம் கொடுத்த வார்த்தைகள் அவள் வந்து தாக்க.. அவளுக்கு ஏனோ வலித்தது.

"ரஃபிக்... அப்படின்னா ஐந்து மாதம்... ஐந்து மாதம் முன்னாடியே உங்க நிச்சயம்தார்த்தம் முறிந்துவிட்டதா? ஆனால்..."

"என்னிடம் நிறுத்தி நிதானமாக பேசாது ஊருக்கு ஓடி போனவளுக்காக நான் என் வேலையை விட்டு விட்டு பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.. கெட் லாஸ்ட்" என்று பல்லை கடித்தான்.

"போய் தொலை" என்று சொன்ன வார்த்தைகளை விட.. அவன் நிச்சயதார்த்தம் முறிந்த தகவலை பற்றி அவன் சொன்னது தான் அவள் மனதை நிறைக்க.. அவன் கோபத்தை சட்டையே செய்யாது...

"ரஃபிக்..." என்று அவன் புறம் அடி எடுத்து வைத்து அவன் கையை பிடிக்க..

ஒரு நிமிஷம் அவள் பிடித்த விரலை தலை குனிந்து பார்த்தவன்.. பின் மெல்ல நிமிர்ந்து.. அவள் யூகிக்கும் முன் இடையை பற்றி தூக்கி அங்கே இருந்த டேபிள் மேல் உட்கார வைத்தவன்...

"நான் போக சொல்லிய பிறகும் நீ இப்படியே நின்றால் பின்னால் நடப்பதற்கு நான் பொறுப்பு அல்ல" என்று மிதம் மிஞ்சிய கோபத்தில் பேசியப்படி .. அவளின் இடையை இருக பற்றியவன் "எனக்கு வர ஆத்திரத்திற்கு.... என்னை திசை திருப்ப இங்கேயே நம் ஹனி மூனை கொண்டாட வேண்டி வரும்.. இதில் உனக்கு எப்படி வசதி?" என்று விவகாரமாகக் கேட்டான்.

எங்கிருந்து இப்ப எங்கே தாவுகிறான் என்று ஆதியும் புரியாது.. அந்தமும் புரியாது.. ஒரு நிமிஷம்.. சுதாரித்தவள்..

இடையில் இருந்த அவனின் கையை பிய்த்து எடுத்துக்கொண்டு துள்ளி குதித்து இறங்கியவள்...

"நான் எவ்வளவு முக்கியமான விஷயம் கேட்டுக்கொண்டு இருக்கிறேன்.. நீங்க என்ன விஷயம் பேசறிங்க??" என்றாள் ஆக்ரோஷமாக.

"அப்படின்னா உனக்கு எது முக்கியமாக படுதோ அது எனக்கு முக்கியமில்லை என்று அர்த்தம்" என்று மீண்டும் அவளை பற்ற போனவனை எரிக்கும் பார்வை பார்த்தவள்...

"என்ன காரணத்திற்காக இப்படி நடந்துக்கொள்கிறாய் என்று புரியவில்லை ரஃபிக்.. ஆனால்... நான் வந்த விஷயம்.." என்று அவள் சொல்லிக்கொண்டு இருக்கும் போதே... யாரோ அவசரமாக அந்த அறையின் கதவை தட்டுவது கேட்டது.

உள்ளே வர அனுமதி அளித்தவுடன்... அங்கே மூச்சிரைக்க வந்த வேலை ஆள்.. இருவருக்கும் சலாம் வைத்தவன் அரபிக்கில் ஜெட் வேகத்தில் என்னவோ சொல்ல எதுவும் புரியாது இவள் விழித்துக்கொண்டு இருக்கும் போதே... அவளை பற்றி முற்றிலும் மறந்தவனாய் வந்தவனோடு பின்னே சென்றான் ரஃபிக்.

ரஃபிக் என்று அவனை அழைக்க வாய் திறந்தவள் இவ்வளவு அவசரமாக செல்கிறான் என்றால் ஏதோ அவசரப்பணியாக இருக்கும் என்று யூகித்தவள் இப்பொழுது இருக்கும் மன நிலையில் எதுவும் பேச வேண்டாம் என்று முடிவு எடுத்து அவளும் அங்கிருந்து வெளியேறினாள்!!!

மனது குமுட்டி அடுப்பாகக் குமைந்தது.. எதற்காக அப்படி சொன்னான்.. அர்த்தமற்ற வாரத்தைகளை விடாதவன் ரஃபிக்...

நிச்சயம் அதற்கு முன்னே முறிந்து விட்டது என்றால் என்ன அர்த்தம்..?? என்று மனது அவன் சொன்ன வார்த்தைகளை முட்டி மோதிக்கொண்டு அலையடிக்க... யார் முகத்திலும் விழிக்க பிடிக்காது.. மனது எதை எதையோ நினைத்து அலைப்பாய.. கால்கள் தானாக செத்தக் இருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தது!!!

மெல்ல அந்த கொட்டகைக்கு உள்ளே சென்றவளுக்கு கண்களுக்கு முதல் அதிர்ச்சியாக அங்கே செத்தக் இல்லை....

எங்கே? எங்கே?? அதற்குள்ளாகவே அதை தூக்கிக்கொண்டு போய் விட்டார்களா என்று நெஞ்சை அடைத்துக்கொண்டு துக்கம் பீறி எழ.. வெகு சிரமப்பட்டு அடக்கியவள் செத்தக் பற்றி கேட்கும் பொருட்டு வெளியே வந்து பார்க்க... தூரத்தில் பத்து பேர் அடித்து பிடித்துக்கொண்டு கூட்டமாக ஓட... ஏன் ஓடுகிறார்கள் என்று கூர்ந்து கவனித்தவளுக்கு அப்பொழுதுதான் அவர்களுக்கு முன்னாடி ஒரு வெண் நிற அரபியன் குதிரை... தன் நீண்ட வால் பறக்க... உற்சாகமாக காற்றை கிழித்துக்கொண்டு... நாலு கால் பாய்ச்சலில் பறந்தது!!!

அதை துறத்திக்கொண்டு ஓட முடியாது மூச்சு இறைக்க ஆட்கள் போவதை பார்த்தவளுக்கு... ஏன் இங்கே காலியா இருக்கிறது என்று புரிய... ரஃபிக்கிடம் அந்த ஆள் இதை தான் சொல்லி இருக்கிறான் என்றும் புரிந்தது.

அந்த குதிரையின் ஓட்டத்தை காணும் போதே.. செத்தகின் ஞாபகம் முட்டி மோதிக்கொண்டு வர... இனி நாம் செத்தக்கை பார்க்கவே முடியாது என்று உண்மை மின்னலாக வந்து அவள் கண்களை குருடாக்க... நெஞ்சில் ஆரம்பித்த வலி அலை அலையாக உடம்பு எல்லாம் பரவி... அவளின் கால்களை வலுவிழக்க செய்ய வேகமாக திரும்பி செத்தக் இருந்த கொட்டகைக்கு சென்றவள் அப்படியே சாய்ந்து அமர்ந்தவள்.. மடை திறந்த வெள்ளமாக கண்களில் நீர் நிறைந்தது.

கடவுளே!!! செத்தக்.. இப்ப அதை எங்கே போய் தேடுவாள்? கடைசியாக பை கூட சொல்ல முடியாது போய் விட்டதே.. என்று அப்படியே அது இருந்த இடத்தில் உட்கார்ந்து கதறியவள் எத்தனை நேரம் இருந்தாளோ தெரியாது.. ஆனால்.. யாரோ நடந்து வரும் கால் அடி கேட்க... அவசரமாக கண்களை துடைத்துக்கொண்டு எழுந்தவளுக்கு அங்கே இவளை கண்டதும் அதிர்ச்சியாக பார்த்தவன் பின் அவசரமாக சலாம் வைத்தான் வேலைக்காரன்!!!

மெல்ல தலை அசைத்து விட்டு நகர்ந்தவள் பின் ஏதோ நினைவிற்கு வந்தவளாய்..

"என்னாச்சு??" என்றாள் அவளுக்கு தெரிந்த ஹிந்தியில்.

அவளை ஒரு நொடி விசித்திரமாக பார்த்தவன் பின்.. "பேகம்ஜி... புதிதாக வந்த குதிரை தன் கொட்டகையில் இருந்து

தப்பித்துக்கொண்டு வெளியே ஓடியதால்.. . அது பிடிக்க போன குதிரைக்காரனை.. உதைத்து தள்ள... அதற்கு நம்ம நவாப்ஜிக்கு விவரம் சொல்லி அனுப்பபட.. அவரே நேராக வந்தார்.. ஆனால் குதிரை அவருக்கும் அடங்காது அவரையும் தள்ளிவிட.." என்று அவன் முடிக்கும் முன்..

"அவருக்கு என்ன??" என்றாள் பதட்டமாக.. வேகமாக வெளியே வந்தப்படி...

அவளுக்கு பின்னால் இரண்டு அடி இடைவேளை விட்டு நடந்தவன் "உதைத்தில் இங்கே அடி என்று நெஞ்சை காட்டியவன் பின் கையையும் காலையும் காட்டினான் ஏதோ சொல்ல அவன் சொல்லும் வார்த்தை எதுவும் அவள் காதில் விழாது.. பயத்தில் காதை அடைத்தது.

இப்பதானே காலில் ப்ளேட் வைத்து ஆப்ரேஷன் செய்தார்கள் அதற்குள் மீண்டும் அடியா?? கடவுளே.. இன்னும் எத்தனை மாசம் அந்த வேதனையை தாங்குவான்.. ஏற்கனவே தன் வேதனையை வெளியே சொல்லாத அழுத்தக்காரன் என்று மனம் அவனுக்காக அடித்துக்கொள்ள அதற்கு மேல் அவனிடம் அதற்கு மேலும் நின்று கேட்க பொருமை அற்று.. "இப்ப எங்க.. இருக்காங்க?" என்றாள் கையை காட்டி அழைத்தப்டி முன்னால் நடந்தாள்.

ஊரில் இருக்கும் அனைத்தும் தெய்வங்களையும் வணங்கியப்படி... கால்நடுங்க.. உள்ளம் பதறி துடிக்க பணி ஆட்கள் அழைத்து சென்ற திசையை ஓட்டமும் நடையுமாக கடந்தவளுக்கு கண் முன்னே விரிந்த காட்சி நெஞ்சை திகில் கவ்வ செய்வதாக இருக்க... அவன் அழைத்த சென்ற அறைக்கு உள்ளே புயல் வேகத்தில் சென்றாள் மேக மித்ரா.

நெஞ்சு பதற.. கால்கள் நடுங்க... கண்கள் கலங்க போய் நின்றவளின் முன் அறையில் ஆட்கள் குழுமி ஏதோ பேசியப்படி இருக்க.. யாருக்கு என்ன ஆச்சு என்று எதுவும் புரியவில்லை...!!!!

இதில் அவளுடைய பிருத்திவி ராஜ் எங்கே இருக்கிறான் என்று கண்ணும் மனமும் தேடி துளாவ... கண்கள் படம் பிடித்த காட்சியை மூளை மந்தித்த நிலையில் எதுவும் பதியாது.. அப்படி விக்கித்து போய்.. எந்த நிலையில் பிருத்திவியை காண போகிறோமோ என்ற பீதியில் நொடிக்கு நொடி அதிகரித்துக்கொண்டே போக... மூச்சு முட்ட... எழும்பாத குரலில்

"பிருத்திவி" என்றாள் கிசுகிசுப்பாக.. அங்கே இருந்த ஆட்களை பார்த்தப்படி.

அவளின் அந்த அழைப்பு இரண்டு அடி தூரத்தில் நின்றுக்கொண்டு இருந்தவனின் காதில் கூட விழாது போக...

ஆனால் அந்த விஸ்தாரமான அறையின் மைய பகுதியில்.. ஆண்களின் பேச்சு குரல் மத்தியில் இவளின் குரலை கேட்டவன்...

பட்டென்று அந்த கூட்டதில் இருந்து நகர்ந்து நின்று தலையை உயர்த்தி வாயிலின் புறம் இவள் நிற்பதை கண்டவன்....

ஏன் இங்கே வந்தாய்?? என்னும் ரீதியில் நோக்கினான் அவளின் பிருத்திவி ராஜ்!!!

இருபது அடி தூரத்தில் நின்றவனை பார்த்தது தான் தாமதம் இதோ அதோ என்று கண்களை துரத்திக்கொண்டு இருந்தவளின் கண்ணீர் திவளை கன்னத்தில் அப்படியே வழிய.. காரணம் அவன் சட்டை முழுவதும் ரத்த வெள்ளத்தில் நனைத்து கிடக்க... அவன் கையையும் வைத்திருந்த விதமும் அவளின் ஊகத்தை ஊர்ஜிதப்படுத்த.. அவசரமாக கால்களின் புறம் கவனத்தை திருப்பினாள்!!!

அவனின் கசங்காத ஆடை.... கசிங்கி... மண்ணும் புற்களும் பற்றாதற்கு கிழிந்து இருக்க.. அவளின் ஒரே ஆறுதல் கால்களுக்கு எதுவும் ஆக வில்லை என்பது தான்.. இல்லை என்றால் அவனால் நின்று இருக்கக் கூட முடியாதே!!!

அவள் பார்வை அலைபாய்வதை உணர்ந்தவன்.. "என்ன தேடுகிறாய்?" என்றான் அங்கேயே நன்றிப்படி.

"இல்ல அடிப்படாத பகுதி எதாவது இருந்தால் அதையும் அடித்து உடைக்கலாம் என்று தேடிக்கொண்டு இருந்தேன்" என்றாள் அகங்காரமாக.

"ம்ம்??" என்று அதையே கேள்வியாக கேட்டான் அவன்.

"உனக்கு சண்டி குதிரை பிடிக்கும் என்று தெரியும் பிருத்திவி.. ஆதனால் ஊரில் இருக்கு குதிரையிடம் எல்லாம் உன் வீர தீர பராக்கிரமத்தை காட்ட வேண்டும் என்று இல்லை" என்றாள் ஆத்திரமும் எரிச்சலும் போட்டி போட..

எதுவும் பேசாது அமைதியாக அவளை அந்த தூரத்தில் இருந்தும் மிக கூர்மையாக பார்த்தவனுக்கு ஏதோ புரிந்த மாதிரி தலையை லேசாக ஆட்டி...

"எனக்கு அடிப்பட்டால் உனக்கு வலிக்குதா?" என்றான் அவள் கண்களில் வெளி வர துடிக்கு நீரை காட்டியப்படி.

"எனக்கு ஏன் வலிக்க போகுது?? நீ திவ்வியமா அடிப்பட்டு கையை காலை உடைத்துக்கொண்டு படு.. டாக்டர் சர்ஜரி பண்ணும் போது... துரு பிடித்த ப்ளேட்டை வைத்து தைக்க சொல்கிறேனோ இல்லையான்னு பாரு.." என்று கேட்டுக்கொண்டே முன்னே வந்தவளின் கண்களில் இருந்து தேங்கிய கண்ணீர் வழியை மறைக்க.. கண்ணிற்கு முன்னால் இருந்த சின்ன முக்காலியில் இருந்த அந்த கால சைனா பொம்மையை இடித்து தள்ள அது விழுந்து உருண்டு

விழுந்ததைப் பற்றி கூட அறியாது அவனை வைத்த கண் வாங்காது நடந்தாள்!!!

ரத்தம் படிந்த அவனின் சட்டையும் அதில் தெரிந்த கிழிசலையும் ஒட்டி இருந்த அழுக்கையும் பார்த்தவள்

இல்லாத அமைதியை காட்டி கடைசியாக "எப்ப டி.டி போட்டீங்க?" என்றாள்

"ம்ம்.. நீதான் போட்ட என்று நினைக்கிறேன்" என்று சொன்னவனின் குரலில் இழையோடிய நையாண்டியை கேட்டவளுக்கு பொத்துக்கொண்டு வர...

"இப்ப எங்க அடிப்பட்டிருக்கு...??" என்று கூறியப்படி அவன் சட்டையை கழட்ட தொடங்கினாள்.

நிலையில் இல்லாத கைகளுடன் சட்டை பொத்தானை கழட்ட தடுமாறியவளை கூர்ந்து கவனித்தவன்..

"சொன்னால் என்னிடம் சண்டைக்கு வருவாய்" என்றான் ஒருமாதிரி குரலில்.

"சொல்ல விட்டாலும் சண்டைக்கு வருவேன் பிருத்திவி" என்று அவள் எச்சரித்துக்கொண்டே அவனின் சட்டை பட்டன்களை கழட்டி விட..

பட்டென்று அவளின் கையை பற்றி நிறுத்தியவன் "என் டாக்டர் நீ இல்லை" என்றான் சிரிப்பு இழையோட.

"உனக்கு பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும்... உன் குடும்ப டாக்டர்... நான் கஷ்டப்பட்ட கற்றுக்கொண்டது எல்லாம் உனக்காக விட முடியாது... ப்ரீ சர்வீஸ்..." என்றாள் அவன் என்னவோ அவளின் தொழிலையே விட சொன்னது போல.

"மேகி.. நீ கால் நடை மருத்தவர்.. நீ எப்படி குடும்ப டாக்டர் ஆக முடியும்??" என்றான் கண்கள் சிரிக்க

"இதை எல்லாம் என்னை கல்யாணம் பண்ணி இருக்க முன்னாடி யோசித்திருக்கனும்..."என்று ஆத்திரமாக கூறியப்படி அவன் சட்டை கழற்றும் பணியில் ஈடுப்பட..

"பட்ட பகலில்... யார் வேண்டுமானாலும் இந்த ஹாலுக்கு வரலாம்.. நீ இப்படி ஆர்வமாக என் சட்டை கழட்டுவதை பார்த்தால்.." என்று அவள் என்னவோ இவனை கொஞ்சி குலாவ செய்வது போல் சொல்லி வைத்தான்.

"என்னிடம் பேசி வைத்தது போல் தான் அந்த சண்டி குதிரையிடம் பேசி வைத்தாயா அதனால் தான் உன் ஈகோவை உடைக்க... அது கீழே தள்ளி விட்டு போய் இருக்கிறது" என்று கூறும் போதுதான்

அங்கே குழுமி இருந்தவர்கள் முன் தான் இப்படி பேசிக்கொண்டு நிற்கிறோம் என்று புரிய வர... அப்படியே துள்ளி குதித்து பின்னால் நகர்ந்து சுற்றி பார்த்தவர்களுக்கு அந்த அறை காலியாக இருப்பதை கண்டு ஆச்சரியத்தில் கண்கள் விரிய....

"நீ என்னுடன் பேச ஆரம்பித்தவுடனே அவர்கள் எல்லோரும் கிளம்பி விட்டார்கள்" என்றப்படி அவள் கையை பற்றியவன் எதுவும் சொல்லாது அப்படியே அந்த அறையை விட்டு வெளியேறி புது வழியாக ஐந்தே நிமிடத்தில் அவர்களின் நார்த் விங்க பகுதிக்கு அழைத்து வந்தான்.

" அது... எப்படி??" என்று அவள் அதிசயத்து கேட்கும்போதே...

"இதுவும் ஒரு வழி தான்" என்று அலுப்பாக கூறியவன்.

ஒட்டி நின்று "நீ உன் சோதனையை தொடரலாம் டாக்டர்" என்று அவளுக்கு அனுமதி கொடுத்தான்!!!..

வெடுக்கென்று அவன் கையில் இருந்து தன் விரல்களை பிடுங்கியவள் பின் எதையோ நினைத்து கண்களில் வலி மிக.. "உனக்கு என் மேல் கோபம் இருந்தால் சண்டை போடு... பேசாமல் போ... ஆனால் கோபத்தில் குதிரை ஓட்டாதே பிருத்திவி.. அவைகளுக்கு மனிதரின் பயம்.. கோபம் போன்ற உணர்வுகள் புரிந்துக்கொள்ளும் திறன் உண்டு.... உன்னுடைய மூட்டிற்கு தகுந்தாற் போல் தான் அவைகளும் ரீயாக்ட் ஆகும்.. ப்ளிஸ்... எனக்கு உன்னை கால் ஒடிந்து கட்டிலில் பார்க்கும் சக்தி இல்லை.." என்றாள் கசந்த குரலில்.

அவளின் நிஜமான பயத்தையும்.. இவனை பார்த்தவுடன் தலை முதல் கால் வரை அவள் பார்த்த விதத்தையும்

பார்த்தவனுக்கு.. அந்த உணர்வுகளை பரிபூரணமாக புரிந்துக்கொண்டவன்..

"பண்ண மாட்டேன்" என்று வாக்கு அளித்தான்...

"இப்ப உங்க ப்ரீ சேவையை தொடரலாமே.. டாக்டர்" என்று சும்மா நின்றவளின் கைகளை எடுத்து கழட்டாமல் இருந்த பட்டனில் வைத்தான்.

அவன் சட்டை தொட்டவுடன் தான் தன் வேலை ஞாபகத்திற்கு வந்தவளாய்.. அவனை முறைத்தப்படி சட்டையை கழற்றியவளுக்கு அவன் மார்பில் எந்த அடியும் படாது.. முன் தின இரவில் அவள் பார்த்த மாதிரியே சின்ன சிராப்பு கூட இல்லாமல் இருக்க..மெல்ல ஒரு நிமிடம் அவனை சுற்றி கூட வந்து பார்த்தவள்... எதுவும் புரியாது

"பிருத்திவி ??" என்றாள் அதன் அர்த்தம் புரியாது..

"என் ஈகோ தாங்காது "சம்மர்" கீழே தள்ளி விடவில்லை... முதலில் என்னை ஏற்றவே அனுமதிக்கவில்லை... மேகி அந்த சம்மர் உனக்கு பரிசாக கொடுக்க வாங்கப்பட்டதால் உன் குணத்தை கொண்டு இருக்குது போல.." என்றான் தலையை சாய்த்து யோசித்தப்படி.

"என்ன சம்மர்?? என்ன பரிசு??" என்றாள் குழப்பத்துடன்.

"தன் மேல் ஏறவே விடாது ஓடிய வெண் புரவியின் பெயர் சம்மர்.... அது உனக்கு பரிசாக கொடுப்பதற்காக வாங்கினேன்".

"ஏன்?"

"கல்யாணத்தின் போது மனைவிக்கு பரிசு அளிப்பது பாரம்பரியம்.. சித் அவன் விங்கிலேயே சங்க மித்ராவிற்கு மாடுலர் கிட்சன் கட்டியது போல்.. என் அம்மாவிற்கு என் அப்பா கொடுத்த பரிசு கல்யாணத்தின் போது நாம் வந்த சாரட்" என்று அவள் கேட்காதையும் சேர்த்து மொழிந்தான்.

அவன் சொல்லாமல் விட்ட பொருள்... அவரின் ஞாபகமாகவும்... அப்பாவின் ஆசியை பெற விரும்பியே அவரின் காதல் பரிசை பயன் படுத்தினான் என்று விளங்க... முகத்தில் கூட தன் உணர்வுகளை காட்டாதவன் அவரின் இழப்பு இன்னும் அவனுள் எத்தனை தூரம் ஆழமாக இருக்கு அந்த செயலால் உணர வைக்க... மனதை பிழியதான் செய்தது!!!

எதையும் வார்த்தைகளால் சொல்லாமலே புரியும் போது... அதை பற்றி வாய் விட்டு கேட்க தோன்றாது போக...

"பிருத்திவி... நமக்கு கல்யாணம் ஆகி மூன்று நாள் ஆயாச்சு..." என்றப்படி அவன் முன் மூன்று விரல்களை நீட்டியவள் "ஓ!!! இதற்கும் விழா வைத்து கொடுப்பிங்களா.." என்றாள் இளக்கரமாக.

அவளின் மூன்று விரல்களை அப்படி அழுத்தி பிடித்தவன்... "நான் சம்மரை உன்னிடம் கொடுக்க தான் அன்று இரவு உன்னை போன் செய்து வெளியே வா என்று சொன்னேன்..

ஆனால் நீதான்.. வாங்கும் மனநிலையில் இல்ல" என்றான் குற்றம் சாட்டும் பார்வையுடன்.

"ரீயலி...??? எனக்கு பிரசன்ட் கொடுக்க அழைத்தவர்.. என்னை கதற கதற அழவைத்து அனுப்பினிங்க?"என்று விரல்களை அவனிடம் இருந்து மீட்க போராடியபடி முறைத்தாள்.

"அந்த நாள் அப்படி மோசமாக முடியும் என்று நான் ப்ளான் பண்ணவில்லை மேகி" முதல் முறையாக அவன் குரலில் இருந்த வருத்தம் நன்றாகவே தெரிந்தது.

"நீ கட்டம் போட்டு திட்டம் போட்டு எதையும் செய்ய வேண்டாம்.. போகிற போக்கில் எது நடத்தாலும் அதை உனக்கு சாதமாக பயன்படுத்தி கொள்ளும் திறமை உண்டு" என்றாள் சற்றே காட்டமாக

"பிசினஸ் உலகில் அதை தான் திறமை என்று பத்தியாக பத்தியாக எழுதுகிறார்கள் ஆனால் அதை நீ இத்தனை அலட்சியமாக சொல்ல வேண்டியது இல்லை மேகி"

"அதை பிசினஸிசில் மட்டுமே பயன் படுத்தி இருந்திங்கன்னா எனக்கு எந்த பிரச்சனை இல்லை..." என்று பெரு மூச்சு விடும் போதே.. "உங்களுக்கு அடிப்படவில்லை என்றால் அப்ப ஏன் அத்தனை கூட்டம்?? யாருக்கு என்ன ஆச்சு??

"கீழே விழுந்து அடிப்பட்டது வேறு ஒரு ஆளுக்கு.. அவனை இங்கே அழைத்து வந்து முதல் உதவி செய்தார்கள்."

"சம்மரை வாங்கி..." என்று வாயை திறந்தவளுக்கு சட்டென்று ஏதோ புரிய.. "ரஃபிக்... எனக்கு ஏன் சம்மரை வாங்கி தர எப்ப முடிவு எடுத்தாய்??" என்று கேட்டவள் பின் கையை உயர்த்தி..

"எனக்கே தெரியும். நீ சொல்ல வேண்டாம்.." என்று குமுறலோடு ஆரம்பித்தவள்... "ஏன் என்னிடம் செத்தக்கை பிழைப்பது கஷ்டம் என்ற உண்மை அறிந்த பின் தான் சம்மரை வாங்க முடிவு செய்தாய் இல்ல??" என்றாள் அவனை முறைத்தப்படி.

"இல்ல நான் சம்மரை வாங்க ஆடர் கொடுத்து கிட்ட தட்ட மூன்று மாசம் ஆச்சு.. ஹரியானாவில் இருந்து வர அத்தனை நேரம் ஆச்சே தவிர... மற்றப்படி என்று செத்தக் உடல் நல குறைவிற்காக இல்லை."

"மூன்று மாசம் முன்னாடி?? அப்ப நீ இன்னும் எழுந்து கூட சரியாக நடக்காத சூழ்நிலையில்....??"

"நான் எழுந்து நடந்தாலும் படுத்திருந்தாலும் நம் திருமண பரிசு தந்து தானே ஆகனும்??" என்றான் அசட்டையாக.

அந்த பதிலை கேட்டவளின் முகம் இருள.. "பிருத்திவி... இது எத்தனை??" என்று அவன் கண் முன்னால் விரல்களை நீட்டினாள்

அவளின் விரல்களை மொத்தமாக பிடித்து அவன் கைக்குள் அடக்கியவன்... "விழுந்தது நான் என்றால் நீ ஏன்டீ பேத்துகிறாய்?" என்றான் அந்த புன்னியவான்.

"தெக் காட்... எங்கே சரியா பதில் சொல்லி விடுங்கிளோன்னு பயந்து விட்டேன்" என்று இத்தனை நேரம் பிடித்திருந்த மூச்சை விடுவித்தவள் அவனை ஒரு மார்க்கமாக பார்த்து... "கீழே ஆபிஸ் ரூம்மில் என்னை கண்ணாலே எரித்துக்கொண்டு இருந்தவர்... கெட் லாஸ்ட் என்று சொன்னவர்.. இப்ப நான் கேட்காத கேள்விக்கு கூட பதில் சொல்லுறீங்களே கீழே விழும் போது தலையில் ஒன்றும் அடிப்படவில்லை தானே?" என்றாள் சந்தேகமாக இழுத்து..

"உன் கேள்விக்காக அல்ல அது கேட்கப்பட்ட விதத்திற்காக"

என்ன சொல்ல வருகிறான் அவனை பார்க்க...

"நீ என்னை பிருத்திவி என்று அழைத்தாய் மேகி.." என்றான் என்னவோ அந்த பெயர் மட்டுமே சொல்லாத பல விஷயங்களை சொல்லி விடுவது போல்.

பற்றி இருந்த கையை திருப்பி உள்ளங்கயை பார்த்தவன் அதில் இன்னும் மறையாமல் மெஹந்தியில் இருந்த அவனின் பெயரை தொட்டு காட்டியவன்.....

"இந்த பெயரை நேற்று நீ அழைத்த போது நான் எத்தனை சந்தோஷப் பட்டேனோ.. கல்யாணத்தை நிறுத்தினாலும் சொல்ல மாட்டேன் என்று பல்லக்கில் உட்கார்ந்து சொன்ன பார்.. அப்பொழுது கூட அவ்வளவு சந்தோஷப்பட்டேன்...." என்றப்படி அவளை ஒரு நிமிஷம் கூர்ந்து பார்த்தவன்..

"வா" என்று அவர்களின் விஸ்தாரமான பாத் ரூம்மிற்குள் அழைத்து சென்றவன்......

"குளிந்து விட்டு வா..." என்று தூசியும் புல்லும் ஆடையில் இருந்தை காட்டியவன் அத்தொடு நிற்காது அங்கே கண்ணாடியில் தடுப்பிற்கு பின்னாடி சென்று அவள் நிறுத்தி விட்டு கதவை சாற்றி விட்டு வெளியே சென்று விட்டான்.

ஷவரை திறந்து விட்டு அவன் சொன்ன வார்த்தைகளை அசைப் போட்டப்படியே கண் மூடி நின்றவளுக்கு...

"பிருத்திவி" என்று அவனை இப்போ அழைத்தது கூட அவள் மனதில் பதியவே இல்லை...

அவளை காதலில் விழ வைத்து.. காதலை உணர வைத்த அந்த "பிருத்திவி" என்ற அழைப்பில் எத்தனை ஆழமான பொருள் பொதிந்தது என்று இருவரும் அறிவர். வார்த்தைகளை

விரல் விட்டு எண்ணி பேசும் நவாப் மிர் ரஃபிக் அல்வுமர் அலிகான் அவளிடமே "பிருத்திவி" என்று அழைக்க சொல்லி கேட்க கல்யாணத்தை நிறுத்தினாலும் கூட அழைக்க மாட்டேன் என்று சண்டி தனம் செய்தால் என்றாள்... அப்படி என்ன ரகசியம் அதில் இருக்க முடியும்??

அன்று பார்த்த முதல் சந்திப்பில் குதிரையில் ஏற்றி உட்கார வைத்தற்கான காரணப் பெயராக இல்ல... அந்த பிருத்திவி என்னும் பெயர்... பார்த்த முதல் முறையாக அழைத்ததில் இருந்து இன்றுவரை அந்த பெயர் வெறும் பெயராக இருவருக்குள்ளும் இருக்கவில்லை என்பதை அவள் அறிவாள்!!!

இதுவரை அவர்கள் இருவரும் வாயை திறந்து என்ன... கண்களால் கூட நான் உன்னை காதலிக்கிறேன் என்று தங்கள் காதலை வெளிப்படையாக பரிமாறியது இல்லை...

ஆனால்.. அவர்கள் வார்த்தையால் சொல்லாததை அவர்கள் அழைக்கும் விதமே ஒருவருக்குள் புதைத்திருக்கு அன்பை மற்றொருவருக்கு வெளிப்படுத்தும் கேடையமாக திகழ்ந்திருக்கிறது என்று மெல்ல அவளுக்கு புரிய தொடங்க... அப்படியே தன் முகத்தை அவன் பரந்த மார்பில் தலை வைத்துக்கொள்ள வேண்டும் என்று போல் ஒரு பரப்பரப்பு தோன்றியது.

காதலை வெளிப்படுதும் விதம் மொழியாக இருந்தால் இவர்களின் மொழி பெயராக இருந்தது. இதை அவள் அறியும் முன் அவன் அறிந்திருந்ததால் தான் மெகந்தி விழாவின் போது அந்த பெயரை அவள் கையில் எழுதியதும்... "பிருத்திவி" என்று பெயர் சொல்லி அழைக்கும் போதும் அவன் உணர்ச்சி படுவதும் என்று மிக தெளிவாக புரிந்தது..

அவசரமாக குளிந்து விட்டு வெளியே சற்று தயங்கியப்படியே டிரஸ் ரூம் வந்தவள் அவன் இருப்பதற்கான எந்த அறி குறியும் தெரியாததை கண்டு மின்னல் வேகத்தில் புடவையை கட்டிக்கொண்டு அவர்களின் அறைக்கு வரவும்.... அவர்கள் வீங்கில் இருந்த வேறு பாத் ரூம் சென்று குளிந்து வந்தற்கான அடையாளமாக தலை ஈரமாக இருக்க... ப்ளூ ஜீன்ஸ் அணிந்து.. வி நெக் வெள்ளை நிற டி சர்ட்டை தலையால் உடுத்தியப்படி வந்தவனை... கண்டு தொண்டை உளர...அவள் அப்படியே நிற்க...

"ஏன் சந்தோஷப்பட்டேன் என்று கண்டு பிடித்து விட்டாயா?? ஆபிஸ்சில் சொன்னியே.. எங்க முயற்ச்சி செய்யாமலே விட்டு விடுவியோ என்ற சந்தேகம் இருந்து... ஆனால் நெஞ்சு முட்ட கோபத்தோடு எப்ப பெயரை சொல்ல மாட்டேன் என்று மொழிந்த போது தெரியும் நீ இன்னும்

மாறவில்லை என்று கண்டு கொண்டேன்" என்று அர்த்தம் பொதிந்த வார்த்தைகளை உதிர்த்தான்.

அதை எப்படி அவள் இத்தனை நாள் உணராது இருந்தாள் என்று லேசாக யோசனையுடன் தலையை குனிய... அவளின் முகவாயில் கையை வைத்து தலையை நிமிர்த்தியவன்...

"என்னை பட்டப்பெயர் வைத்து அழைத்த முதலும் ஆளும் கடைசி ஆளும் நீதான்" என்றான் ஆழ்ந்த குரலில்.

அந்த குரலில் இருந்த பொருளும் அதை அவன் சொன்ன விதமும் பூ தென்றலில் வருடலாய் அவளை வருடி செல்ல.. மேனி சிலிர்த்தது.

இது மாதிரி உங்களுக்கு நிறைய பெயர் இருக்கு.." என்று அவள் சொல்லிக்கொண்டு இருக்கும் போதே மறுப்பாக தலையை அசைத்தவன்...

"அது என் பதவிக்காக வந்த பெயர்.. எனக்கு முன்னாடி இருந்தவர்களுக்கும் அந்த பெயர்கள் உண்டு.. எனக்கு அடுத்த தலைமுறையும் அப்படிதான் அழைப்பார்கள்... எனக்காக மட்டுமான பெயர் வைத்து அழைத்த ஆள் நீ ஒருத்தி மட்டுதான்" என்றான் ஆழமாக பொருள் படும்படி.

தூக்கம் வராத நடு இரவில் கேட்கும் குயில் ராகமாக அவனின் குரல் அவளின் காதில் தீண்டி அவளை அப்படியே லயிக்க வைத்தது.

அன்று இரவு இவனுடன் இந்த மார்பில் உரிமையுடன் தலை வைத்து படுத்திருந்த போது கூட இப்படி தான் எங்கோ ஒரு குயில் ரீங்காரத்துடன் கூவியதாக ஞாபகம் வந்து அவளை இம்சிக்க முகத்தில் சிகப்பு ஏற வேகமாக பார்வையை அகற்றினாள்.

அவளின் எண்ணவோட்டத்தை உணர்ந்தவன் போல் "என்னிடம் நடந்துக்கொண்டது போல் ஆமிராவிடமும் நடந்துக்கொண்டாயா என்று கேட்டாயே மேகி... இரண்டு வருடம் காத்துக்கொண்டு இருந்தவளுடன் பார்வையால் கூட கன்னியம் காத்தவன் ஏன் உன்னிடம் அப்படி நடந்துக்கொண்டேன் என்று யோசித்து பார்த்தாயா?" என்றான் அவளின் பார்வையில் தன் பார்வையை பதித்தப்படி.

பதிலேதும் சொல்லாது விழி விரித்து இமைக்காது பார்க்க...

"தலையில் பால் அடித்து நீ கீழே விழுந்தாய் என்றால் நான் பால் எதுவும் அடிக்காமலே தலை குப்புற கீழே விழுந்தேன் என்று சொன்னால் மகா கிறுக்கு தனமாக தான் இருக்கும் ஆனா... அதுதான் உண்மை என்பது அதை உணர்ந்தவர்களுக்கு மட்டுமே புரியும்" என்றான் அர்த்தம் பொதிந்த வார்த்தைகளைக்காட்டி.

"ஊர் பெயர் ஏன் மொழி தெரியாத பெண்ணிடம் பார்த்தவுடன் எப்படி ஒரு பார்வையில் ஐம்புலன்களும் பொங்கி

எழ முடியும் என்ற கேள்விகள் அலை மோத உன்னை மருத்துவ மனைக்கு அழைத்து சென்றால்.. அங்கே.. உன் வலிகளை மறைத்துக்கொண்டு நீ இருந்த விதம்... அந்த கம்பீரம் அந்த ஈர்ப்பை ஆயிரம் மடங்கு அதிகரிக்க செய்தது.. அந்த சீனின் ஹைலைட்டே என்னுள் கட்டுக்கடங்கா எண்ணங்கள் முட்டி மோதிக்கொண்டு இருக்க... லவ் யூ என்று கூறிவிட்டு மயங்கினாய் பார்.. அப்ப என்னுள் தட்டி கழிவித்த ஒரு பரபரப்பும்... உலகில் உச்சியில் நிற்கும் ஒரு பெருமிதமும் ஒன்று சேர வந்தது போல் தோன்றியது"

"அது எது மாதிரியான உணர்வு என்று தெரியவில்லை.. அதை பற்றி ஆராயிச்சியில் ஈடுப்படுவது நல்லதல்ல என்று மூளை எச்சரிக்கை செய்ய. உன்னை இங்கிருந்து அகற்றும் பொருட்டு எதை பற்றியும் யோசிக்காது விசிறி எறிந்தேன்"

"ஆனால் நான் எதிர்பார்க்காத ஆச்சரியம்.. மறுநாள் நீ அங்கே என்னுடைய விளையாட்டை பார்க்க வந்திருந்தாய்.. குறைந்த பட்சம் எழுநூறு பெயராவது இருக்கும் அந்த கூட்டதில் என் உணர்வுகள் எல்லாம் காந்தத்தை நோக்கி நகரும் இரும்பு துகள்கள் போல்... நீ இருந்த இடம் நோக்கி நகர.. என் பார்வையை திருப்பிய எனக்கு அதிர்ச்சி.. ஆச்சரியம்.. ஆனந்தம் ஒருசேர கலந்து என்னை அடித்து துவைக்க.. மூன்று

வயதில் இருந்து குதிரை ஏற்றம் பயின்ற நான் தலை குப்புற கீழே விழுந்தேன்!!!"

"அன்று இரவு உன்னை செத்தக்கிடம் இடுப்பில் கை வைத்துக்கொண்டு நின்று பேசிக்கொண்டு பார்த்த போது... மீண்டும் அதே ஈர்ப்பை உணர்ந்தேன்... வாழ்க்கையில் முதன் முறையாக என் வீக்னஸ்சை பார்த்து அதை தகர்த்து எரிய தோன்றாது... என்னுள் போத்தி வைத்துக்கொள்ள வேண்டும் என்று தோன்றியது..."

"அன்று தான்... நான் விழுந்தது குதிரையில் இருந்து தரையில் விழவில்லை... முடிவே இல்லாத பாதாளத்தில் சந்தோஷ அலரலுடன் விழுந்துக்கொண்டே இருந்தேன் என்று புரிந்தது!!!.. அப்பா ஏன் அம்மாவிற்காக அத்தனை வருஷம் காத்திருந்தார் என்று உணர்வு பூர்வமாக புரிந்த தருணம்..."

"அப்பவே தெரியுமா??"

"ம்ம்..." லேசாக தலையை அசைத்தவன்.. "மறுநாளே ஆமிராவிடம் கல்யாணத்தை நிறுத்துவதை பற்றி பேச போனேன்"

"காதலிப்பதை என்னிடம் கூட சொல்லாது அவளிடம் திருமணத்தை நிறுத்த சொன்னிங்களா? ஒரு வேலை நான் சம்மதிக்காமல் போயி இருந்தால்?"

"வாழ்க்கையில் ஒருமுறை செய்ய போகும் கல்யாணத்தை நான் நினைத்தப்படி செய்ய மாட்டேன் என்றா நினைக்கிறாய்?" என்று அவன் கேட்ட போது..

வேறு வழி இல்லாது அதில் இருந்த உண்மை அவளை தலையை அசைக்க செய்ய... "ஆமிரா என்ன சொன்னாங்க?"

"நான் உன்னை கல்யாணம் பண்ணிக்கொண்டால்... இறைவன் முன்னால் நான் கொடுக்கும் வாக்கிற்க்கு உண்மையாக இருக்க முடியாது என்று தோன்றுகிறது ஆமிரா.. ஏன்னா... நான் வேறு ஒரு பெண்ணை காதலிக்க தொடங்கி விட்டேன். நீ யாரை வேண்டும் என்றாலும் காதலி ஆனால் என்னை தான் கல்யாணம் செய்து கொடுத்த வாக்கை காபாற்றியே ஆக வேண்டும் என்று நீ சொன்னால் அதை செய்யவும் கடமை பட்டு இருக்கேன்.. நிச்சயம் உன்னை கல்யாணம் செய்துக்கொள்வேன்.. ஆனால் அந்த திருமணத்தில் நீ என் மனைவியாய் பேப்பரில் மட்டுமாக தான் இருப்பாய் நிஜத்தில் இருக்க முடியாது... நீ எந்த முடிவு எடுத்தாலும் எனக்கு சம்மதம்" என்று மிக தெளிவாக கூறிவிட்டேன்.

"வாட்??" என்று அவள் அலறியவள் "ஒருவேளை கல்யாணம் பண்ணிக்கொண்டு தான் ஆகனும் என்று அவள் சொல்லி இருந்தால்??" என்று அவள் கேட்கும் போதே... மனதில் சுறுக்கு என்று வலி எற்ப்படுவதை தவிர்க்க முடியவில்லை...

"பண்ணி இருந்திருப்பேன்... சித்தின் குழந்தை அடுத்த நவாப்பாகி இருப்பான்" என்றான் சிறு பிசுறு கூட இல்லாது... "ஆனால் அந்த மாதிரி வாழ்க்கையை ஆமிரவால் ஏற்றுக்கொள் முடியாது என்ற ஒரு நம்பிக்கை தான். அவள் நல்லவள் கெட்டவள் என்ற கேள்வி எல்லாம இங்கு அனாவசியம்... இரண்டு வருடம் அவளை காக்க வைத்திருக்கேன்.. அது என்னுடைய தப்பு..." என்றான் ஒரு நவாப்பாக.

சும்மா நவாப் எதையும் வாய் வார்த்தையாக தான் சொல்வதில்லை என்று அவள் அறிவாள்... அந்த சூழ்நிலையில் அவனிடத்தில் வேறு யாராக இருந்தாலும் இப்படி ஒரு முடிவை எடுக்க முடியுமா என்று புரியாது விக்கித்து அவன் பேச வராது பார்த்தாள்.

"என்ன அப்படி பார்க்கிறாய்?? என்று அமைதியாக கூறினான்.

"என்ன பேசுவது என்று தெரியவில்லை... பிருத்திவி..." என்று பெரு மூச்சு விட்டவள் கடைசியாக "அப்புறம் ஒத்துக்கொண்டாங்களா?"

"கொஞ்சம் நேரம் அழுதாள்.. புலம்பினாள்... கெஞ்சினாள்... கடைசியாக நான் எதிர்பார்த்த முடிவை எடுத்தவள் நம் கல்யாணம் வேண்டாம் என்று நான் தான் சொல்லுவேன்.. நீ நிறுத்தியதாக யாருக்கும் சொல்ல கூடாது என்று கூறினாள். நான்

நிறுத்துவதை விட ஆமிரா நிறுத்தினாள் குறைந்த பட்சம் அவளின் கௌரமாவது காக்க படும் என்று நானும் முழு மனத்துடன் சம்மதித்தேன்.... பிறகு எப்பயும் போல் அவளை பற்றி நான் மறந்து கூட போனேன்!!!"

அந்த நிகழ்வை ஆமிரா அவளிடம் வேறே விதமாக சொல்லி இருக்க... இதில் யார் சொல்வதில் உண்மை இருக்கும் என்று இவள் அலசி ஆராய தேவை இல்லை... ஆமிராவின் நிலையும் பாவம் தான் என்றாலும்... இந்த விஷயத்தில் இதற்கு மேல் செய்வதற்கு ஒன்றும் இல்லை.. சொல்ல போனால் ரஃபிக்.. யாரும் செய்ய துணியாத தூரத்திற்கும் கூட போய் அவளுக்காக இறங்கி இருக்கிறான்... என்பதை நினைக்கும் போதே உள்ளே ரணமாய் இருந்த வலிக்கு... அவனின் இந்த பேச்சு சற்றே சமாதானம் படுத்தியது!!!

அவளின் முகம் போன போக்கை பார்த்தவன்

"என்ன ஆச்சரியம் இதில்?? எங்களுடையது முழுக்க.. முழுக்க பெரியவர்கள் பார்த்து நிச்சயம் செய்யப்பட்ட மனம்.. என் பெற்றவர்கள் சொன்னார்களே என்று நானும்.. என் பேகமாக இருந்தால் அவளின் ஸ்டேட்டஸ் உயரும் என்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட திருமணம் இது. உணர்வுகளின் அடிப்படையில் அல்ல" என்று விளக்கம் கொடுத்தவன்...

"இரண்டு வருடம் காத்துக்கொண்டு இருந்தவள் ஞாபகம் கூட வரவில்லை.. ஆனால்.. உன்னை பார்த்த முதல் நிமிஷத்தில் இருந்து உன் முகத்தை மறக்க முடியவில்லை...நேற்றே இதை பற்றி பேச வேண்டும் என்றஉ நினைத்திருந்தேன் ஆனால்... செத்தக்கின் நிலை எதையும் சொல்ல முடியாது என்னை தடுத்து விட்டது" என்றான் வலி மிக.

"இனி செத்தக்..." என்று தொண்டை அடைத்து நிறுத்தி அவனை பார்க்க......

பட்டென்று அவளை இழுத்து தன் மார்பில் புதைத்துக்கொண்டவன்.. "நாம் செய்ய கூடியது என்று இனி ஒன்றும் இல்லை மேகி" என்றான் அவளின் தலையை வருடியவன்..

பின் மெல்ல அவள் தலையை நிமிர்த்தி அவளின் நீர் திரையிட்டிருந்த விழியை கண்ணுற்றவன்... "நான் அன்று ஒரு வார்த்தை செத்தக் மேல் அமர்ந்திருந்த போது உன் காதில் சொன்னேன் ஞாபகம் இருக்கா??" என்று அவளை ஆழ்ந்து நோக்கினான்.

அவனின் பார்வையில் முழுகிக்கொண்டே "சொன்னிங்களா??" என்று அவனையே திருப்பி கேட்டாள் அவளின் மனைவி.

"ம்ம்..."

"என்ன சொன்னிங்க??"

"யாவும் நினதன்றோ!!!"

சுழன்றுக்கொண்டு இருந்த உலகம் அப்படியே கீரீச்சிட்டு அவள் கால்அடியில் நின்றது போல் தோன்ற.. பேச முடியாது... அதிர்ச்சியை தாங்க முடியாது.. கண் இமைக்க முடியாது தன் முன்னால் கொஞ்சும் புன்னகையை தவழவிட்டுக்கொண்டு இருந்த கணவனை பார்த்தப்பபடி இருந்தாள்!!!

அவளின் முகத்தின் புறம் குனிந்து அவளின் பிளந்திருந்த உதட்டில் முத்தம் பதித்து அவளை அதிர்ச்சியில் இருந்து மீட்டான்!!!

ஒரு வழியாக அவனின் முத்தத்தில் இருந்து மீண்டவள் "ஏன்??" கேட்டாள்.

"யாருமே இல்லாது.. உலகமே உன் ஒருத்தியுடன் முடிவிற்கு வந்துவிட்டது போல்.. சோக பதுமையாக நீ நடந்து சென்றது பிடிக்கவில்லை... யாவும் நினதன்றோ.. என்று என்னையும் உன் உடைமையாக்கி சொன்னேன்.. உன்னை ஜெயித்துக்கொண்டே இருப்பேன் என்று ஏன் சொன்னேன் என்று இப்ப புரியுதா?? என்று கூறியப்படி அவளின் சென்னில் முத்தமிட்டவன்.. "ஏன் அப்படி சொன்னேன் என்று நினைக்கிறாய்?? யாவும் நினதன்றோ என்று அன்றே என்னை உன்னிடம் கொடுத்து விட்ட போது

நமக்குள் வீழ்ச்சி ஏது?? விஜயம் ஏது மேகி?? என்றான் பிருத்திவி ராஜ்.

அவன் சொல்லும் வார்த்தையின் ஆழம்.. அவளுள் பூகம்பத்தை ஏற்ப்படுத்த... தொண்டை அடைத்தது... "என..என்னால் பேச முடியவில்லை" என்று தடுமாற...

"நமக்குள் அவசியமில்லை.. அன்று செத்தக்கை விட்டு விட்டு நீயும் நானும் எதுவும் பேசாது நடந்து உன் அறையில் விட்டேனே... வாழ்க்கையில் மேஜிக்கை பார்த்த நிமிடங்கள்..."என்று கூறியப்படி அவள் இதழில் முத்தமிட்டான்.

"இந்த மாதிரி விஷயத்தை முதத்ம் கொடுத்துக்கொண்டே சொன்னால் மனதில் பதியுமா?"

"அப்போ எனக்கு தெரியாதே.. நான் உன்னை தொட்டால் இந்த உலகமே அழிந்தாலும் தெரியாது போய் நிற்பாய் என்றோ.. முத்தம் கொடுத்தால் சுனாமி அலை அடித்துக்கொண்டு போனாலும் உன்னால் உணர முடியாது என்றும்... என் சட்டை கழட்டினாள் உன்னால் பேச முடியாது.." என்று அவன் அடுக்கிக்கொண்டே போக.. அவசரமாக அவனின் உதட்டில் கையை வைத்து தடுத்து நிறுத்தியவள்

"பிருத்திவி.. நீ என்னுடைய வீக்னஸ்சை பட்டியல் இட வேண்டாம்.. அப்புறம் நானும் சொல்லுவேன்" என்றாள் அவள் கோபமாக.

உதட்டில் இருந்த அவளின் விரல்களுக்கு முத்தமிட்டபடி எடுத்தவன்... "மேகி"என்றான் அர்த்தமாக.

"என்ன??" என்றாள் அவனை கேள்வியாய் பார்த்து.

"உன்னை அழைக்கவில்லை.. கேள்விக்கு பதில் சொல்கிறேன்.. என் பலவீனத்தின் பெயர் மேகி மட்டும் அல்ல.. என் பலமும்... பலவீனமும் நீ தான்"

"யோசித்து பார்... ஒரு வார்த்தை பேசும் முன் ஆயிரம் முறை யோசிக்கும் நான்.. அந்த நொடி தோன்றிய யோசனையில் நான் உன்னை கல்யாணம் பண்ணிக்கொண்டேன் என்றால் இதற்கு மேல் நான் என்ன சொல்ல வேண்டும் என்று நினைக்கிறாய்??"என்று கேட்கும் போது அவளுக்கு மயக்கம் தான் வந்தது.

"ஆமிரா பற்றி அறிந்த அன்றே என்னிடம் சண்டை போட்டுக்கொண்டு நீ ஊருக்கு கிளம்பி சென்று விட.. மேட்ச் இருந்த காரணத்தினால் அவளை நான் க்ளப்பிற்கு வரசொல்லி என் செக்கட்டரியிடம் பணிக்க... நான் மொட்டையாக அப்படி சொன்னதை மனசு மாறி தான் அழைக்கிறேனோ என்று குதுகலமாக ஆமிரா இங்கே வந்து சேர்ந்தாள்."

"அவள் எதிர்பார்த்து வந்ததிற்கு எதிராக நான் அவளை சீக்கிரம் நம் கல்யாணம் நின்று விட்டது அறிவிக்கும்படி காரில் செல்லும் போதே நான் அவசரப்படுத்த... இரண்டு வருஷம்

அவளை காக்க வைத்திருக்க அவள் இரண்டு வாரம் காக்க முடியாதா என்று அலற அப்போதான் அவளிடம் நான் உண்மையை சொல்ல வேண்டி வந்தது... இந்த நேரத்தில்தான் அவளுக்கும் எனக்கும் இருந்த வாக்கு வாதம் முத்தி.. அதிவேகமாக சென்றுக்கொண்டு இருந்த கார் பேலன்ஸ் இழுக்க.. நான் எவ்வளவோ தடுக்க போராடியும் கடைசியில் கார் டைவ் அடித்து அடுத்த ரோட்டில் விழுந்தது!!!

அந்த விபத்தை நினைத்த மாத்திரத்திலேயே அவளின் உடம்பு நடுங்க தொடங்க.. அதை ரஃபிக் அவளை தன்னுள் புதைத்துக்கொண்டவன்... "எனக்கு இதை விட எத்தனை கொடுமையான விபத்து வந்திருந்தாலும் என்னால் முழு மனசுடன் ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால் என்னால் சித்திற்கு எதாவது ஆகி இருந்தால் தான் வாழும் வரை என்னால் நிம்மதியாக தூங்கி இருக்கவே முடியாது..."

அன்றைய கொர விபத்தின் போது பின்னால் அமர்ந்திருந்த சித்திடம் ரஃபிக் சாரி கேட்டது தான் சித் கடைசியாக கேட்டது என்று அத்தை சொன்னாது மனதில் பசுமையாக இன்னும் அப்படியே இருக்க தான் செய்தது!!!

"சித்திடம் கூட நம் கல்யாணத்தை பற்றியோ இல்ல ஆமிராவிடம் இருந்து விலகியதை பற்றியோ கூறவில்லையா??" என்றாள் மங்கி.

"ஆமராவிடம் அப்படி சொல்லி பிறகு சித்திடம் எப்படி சொல் முடியும்...??" என்று அவளையே திரும்பி கேட்டன் அவன்.

சித்திடம் கூட சொல்லாது கொடுத்த வாக்கை காப்பாற்றுக்கிறான் என்றால் அப்ப ஆமிராவிடம் கல்யாணம் பண்ணிக்கொள்கிறேன் என்று சொன்னதால் ஏற்பட்ட வலி மறைய... அவனின் வளர்ப்பை நினைத்து பூரித்து தான் போனாள். முதல் முறையாக இப்படிப்பட்ட குணத்தை அவனின் ரத்தில் ஏற்றிய அவனின் அப்பாவை பார்க்கவில்லையே என்று மனது ஏங்கியது.

"அவள் சொன்ன மாதிரி அவ்வளவு அவசரமாக ஏன்?? கொஞ்சம் டைம் கேட்டு இருக்க கூடாதா??"

"டைம்?? டைம் பற்றி நீ என்னிடம் சொல்லுறீயா?? யோசித்து பார்த்தாயா அன்றைய இரவின் பயனாக நீ கருத்தரித்திருந்தால் அது எவ்வளவு பெரிய பிரச்சனையில் விடும் தெரியுமா?" என்றான் நிறுத்தி நிதானமாக.

.இந்த நிமிஷம் வரை இதை பற்றி ஒரு சின்ன யோசனை கூட வாராதவளுக்கு முதல் முறையா அவன் சொன்ன கோணத்தில் எண்ணம் ஓட... "வாட்??" என்று துள்ளி குதித்து பின்னுக்கு நகர்ந்தாள்.

"இது பற்றி நீ யோசிக்கவே இல்லை இல்ல??" என்று ஒரு மாதிரி மொழிந்தவன்.. "அப்படி ஒரு சந்தர்ப்பம் எழுந்திருந்தால் நம்முடைய விவாகத்தை பற்றி அறிவிக்க வேண்டி இருந்திருக்கும்.. அதற்கு முன் இந்த முறிவு எல்லோருக்கும் தெரிய வேண்டிய கடமை தலைக்கு மேல தொங்கிய கத்தியாக தொங்கியது" என்று அவன் சொல்லும் விபரிதத்தின் தீவிரத்தை அவன் உடைத்து வைக்க...

கண் முன்னே சுழன்ற காட்சிகள் படு பயங்கரமாக இருந்ததது!!!

அவன் எவ்வளவு யோசித்திருக்கிறான்?? அவனால் ஏமாற்றப்பட்டதிலேயே நின்று விட... ஆனால் ரஃபிக்கோ படுக்கையில் கிடந்த போழுது கூட அவளுக்காக சம்மரை வாங்கி இருக்கிறான் என்றால்?? ஏன் அவன் பிசினஸ் இத்தனை தழைத்து ஓங்குகிறது என்று புரிந்தது.

"நீ இருக்கும் மனநிலையில் எப்படியும் இதை பற்ற எல்லாம் யோசிக்க மாட்டாய் என்று யூகித்தேன்..." என்று தோள்களை குலுக்கியவன். "உனக்கே தெரியும் செக்கியூரிட்டி விஷயத்தில் நான் எதையும் எளிதாக எடுத்தக்கொள்ள மாட்டேன்... உன்னை எப்படி நெருங்குவது என்று அலசி ஆலோசனை செய்துக்கொண்டு இருக்கும் சமயம் பார்த்து தான் சித் சங்க மித்ராவை காதலிப்பது தெரிய வந்தது....."

"இரண்டு கல்யாணத்தை ஒரு சமயத்தில் முடிப்பது எளிது அதை விட நீ திரும்பி வந்தால் அனாவசியமாக குழப்பம் வரும் என்று நினைத்தேன் அதனால் உன்னை கடைசி நிமிஷம் வரை காட்டிலேயே இருக்க வைத்தேன்... ஊருக்கு தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் நீ என் மனைவி... உன்னை காக்கும் கடமை என்னுடையது.. அதனால் உனக்கே தெரியாது உன்னை சுற்றி நிறைய பாதுகாப்பு ஏற்பாடு செய்தேன்... அந்த பாதுகாப்பு ஏற்பாட்டின் வழியாகதான் உன் அண்ணன் கார்த்திக்கும் நிரல்யாவுக்கும் டைவர்ஸ் லாயரை பார்க்க போனது தெரிந்தது.... அதை உன் வீட்டில் சொல்லி விட்டேன் என்று தான் என் மேல் பயங்கர கோபம்!!!"

"நீங்க அப்படி சொன்னதால் நம்முடைய கல்யாணத்தின் போது அவனுக்கு கல்யாணம் ஊர் அறிய நடந்ததாக பாட்டி சொன்னாங்கேளே..." என்றாள் ஏன் கார்த்திக் அவன் மேல் அத்தனை கோபமாக இருக்கிறான் என்ற காரணம் முழுமையாக அறிந்த பின்.

"ம்ம்ம்.. அதை உணர்ந்துவிட்டான் என்று நினைக்கிறேன்.." என்றான் யோசனையோடு.

"எப்படி சொல்றிங்க??"

"உன் அண்ணன் என் காதில் என்ன சொன்னான் என்று நினைக்கிறாய்??"

"என்ன சொன்னான்?" என்றாள் பரபரப்பாக.

"அவனுக்காக நன்றி சொல்லிவிட்டு.. என் திருமணத்திற்காக வாழ்த்து சொன்னான்... அப்புறம் உங்க விபத்து கதையை சொல்லுங்க.. அதை விட அவளை உருகி கரை வைக்கும் கதை எதுவும் இருக்காது.. என்று டிப் கொடுத்தான்" என்றான் லேசான புன்னைகயுடன்.

"வாட்?? சொந்த தங்கயை கவிழ்க்க கார்த்திக் டிப் கொடுத்தானா???" அவனை" என்று பற்களை சத்தமாக கடிக்க

"என்னதான் இருந்தாலும் கடைசியில் ஆண் வர்கம் இல்லையா?? அதனால் தான் நான் படும் துன்பத்தை பார்த்து தாங்க முடியாது... என் ஜென்மம் கடைத்தேற வழி சொல்லி விட்டிருக்கிறான்..." என்றான் இத்தனை நேரம் எலியும் பூனையுமாக கடித்துக்கொண்ட மாமன் மச்சான்கள்.

"காட்.. நூறு வருஷம் வாழ்ந்தாலும் இந்த ஆம்பளைங்களை புரிந்துக்கொள்ளவே முடியாது போல சாமி" என்றாள் தலையில் கையை வைத்துக்கொண்டு இருக்கும் போது... அவனின் போன் மணி அடிக்க... அந்த நம்பரை பார்த்துவிட்டு எழுடுத்தவன் அரபிக்கில் பேசிவிட்டு வைத்து விட்டு...

"மேகி.. நான் அவசரமாக வெளியே போக வேண்டி இருக்கு" என்று கூறியப்படி அவனின் முகம் தீவிர சிந்தனையில் முழுகியது.

கீழே விழுந்து அடிப்பட்டவனுக்கு ஏதும் ரொம்பவே முடியவில்லையோ என்று நினைத்தப்படி இருக்கும் போதுதான் புயல் வேகத்தில் "நான் போய்விட்டு எப்ப வருவேன் என்று தெரியாது.. முக்கியமான வேலை" என்று கூறி விட்டு இரண்டு அடி எடுத்து வைத்தவன் பின் ஏதோ நினைவிற்கு வந்தவனாக... மீண்டும் வந்து முத்தமிட்டு ஒரு சின்ன தலை அசைப்பில் விடைப்பெற்றவனை கண்களில் காதல் மின்ன பார்த்து வைத்தவளை...

"இப்ப நேரம் இல்லை..." என்று கிசுகிசுத்தவன் பிரியா விடை பெற்றான்!!!

அடுத்த வந்த இரண்டு வாரமும் கண் மூடி திறக்கும் மூன் அவரச கதியில் சுழல... பிச்சாவரத்திற்கு ஹனி மூனிற்கு சென்று இருந்த சங்கியும் சித்தும் நாளை திரும்புக்கின்றனர் என்று நினைவே உவப்பாகஇருந்தது... இங்கே இவளுக்கு நிற்க கூட நேரம் இல்லாது... விலங்கு நல சங்ககளில் இருந்து அழைப்புகளும்... மணமக்களை வாழ்த்த வீட்டில் விருந்தினர்கள்... இவை எல்லாம் போக.. மரியாதை நிமித்தமாக அவளின் மணாளனுடன் சேர்ந்து போக விழாக்கள் என்று மூச்சு விட நேரம் இல்லாது சுழன்றுக்கொண்டு இருந்தாள் மேக மித்ரா!!!

நாளை சங்க மித்ரா வந்தால் அவளும் இதில் சேர்ந்துக்கொண்டால் இவளுக்கு கொஞ்சம் நேரம் கிடைக்கும் என்று நிம்மதி பெருமூச்சு விடும் போதுதான் அவளின் போன் அழைப்பு ஒலியை வைத்தே ரஃபிக் என்பதை கண்டுக்கொண்டவள்... போனை எடுத்து காதில் வைக்கும் போதே..

"உடனே குதிரை கொட்டகைக்கு வா.." என்று அவனின் அழைப்பு உத்தரவாய் விழுந்தது.

"ஆபிஸ் போனவன் எப்ப வீட்டிற்கு வந்தான்??" என்று யோசனையாக அங்கே சென்றாள்.

வெள்ளை நிற சண்டி குதிரை சம்மர் இப்பதான் கொஞ்சம் பழக ஆரம்பித்து விட்டது என்பதால் இவளை பார்த்து மூக்கை திரும்பிக்கொள்ளாமல் அமைதியாக நிற்க.. அதையும் கடந்து எங்கே என்று ரஃபிக்கை தேடிக்கொண்டு போனவளின் கண்கள் அங்கே பார்த்த காட்சியை கண்டு நம்ப முடியாது திகைக்க கண்களில் நீர் வழிய... யார் பார்க்கிறார்கள் என்பதை மறந்து சந்தோஷத்தில் துள்ளி குதித்துக்கொண்டு அங்கே சற்றே இளைத்து இருந்தாலும் துடிப்பாக நின்று இவளின் வரவை அதே துள்ளலுடன் வரவேற்றது செத்தக்!!!

நாய் தன் எஜமானனை கண்டு குஷியில் கீழே புரண்டு துள்ளி குதித்து பார்த்திருக்கிறார்கள் ஆனால்.. சாவின் விளிப்பு

வரை போய் வந்த சண்டி குதிரை... அவளை பார்த்து கீழே விழுந்து புரண்டு கனைத்து தன் ஆனந்தத்தை தெரிவித்துக்கொள்ள.. அதன் மேல் விழுந்து புரண்டு கண்களில் நீர் வடிய செத்தக்கை அணைத்துக்கொண்டாள் மேகி.

கிட்ட தட்ட பதினைந்து நிமிடம் கழித்து படுத்திருந்த செத்தக்கின் கழுத்து பகுதியில் சாய்ந்து அமர்ந்து அதை மூக்கை தடவியப்படி அமர்ந்தவளுக்கு தன்னை சுற்றி உலகம் ஒன்று இருக்கிறது அதிலும் மனிதர்கள் இருக்கிறார் என்று புரிய வர.. அவசரமாக தலையை திருப்பி பார்க்க..

அங்கே ரஃபிக் தன் கைளை மார்பின் குறுக்கே கட்டிக்கொண்டு இவளை "உங்க வெல்கம் டான்ஸ் இவ்வளவு தானே இன்னும் இருக்கா??" என்னும் பார்வையோடு நின்று இருந்தான்!!!

செத்தக் உயிரோடு திரும்பி வந்ததிற்கு காரணம் இவன் அவன் அல்லவா ??என்று உணர்ச்சி பெருக்கில் கண்கள் நிறைய.. ஆனந்ததை மிகுதியில் எழுந்து வேகமாக அவனை கழுத்தை கட்டிக்கொண்டவள்...

"செத்தக்கை பற்றி நீ ஒன்றுமே சொல்லாதை பார்த்து நான் இறந்துவிட்டது என்று நினைத்தேன்... தெக்ஸ்.. பிருத்திவி... தெக்ஸ்.. பிருத்திவி.." என்று முணுமுணுத்துக்கொண்டே அவன் கழுத்தில் முகம் புதைத்தாள்.

பழைய மேகியாக இருந்தால் ஏன் சொல்வில்லை என்று கேட்டு இருப்பாள்... சண்டை பிடித்திருப்பாள்.. ஆனால்.. அவனை புரிய தொடங்கிய பிறகு... காரணம் கேட்க தோன்றவில்லை. கண் மூடி குதிப்பது என்வென்று புரிய தொடங்கியது. அவளுக்கு தேவை செத்தக்கை உயிருடன் அவளுடன் இருக்கிறது அதை தவிர வேறு எந்த தேவை இல்லை... என்று நினைத்துக்கொண்டு இருக்கும் போதே..

"செத்தக்கை எடுத்தும் செல்லும் வழிலேயே தலையை லேசாக தூக்கி பார்த்துவிட்டு மீண்டும் படுத்துக்கொண்டதாக அங்கிருந்து எனக்கு போன் வந்தது... அதனால் தான் அன்று அவ்வளவு அவசரமாக போனேன்.. பிறகு கடந்த இரண்டு வாரத்திற்கு தொடர்ந்து பார்த்து வந்த டாக்டர் இனி எந்த ஆபத்தும் இல்லை அழைத்து செல்லலாம் என்று சொன்ன பிறகுதான் நேராக இங்க அழைத்து வந்து விட்டேன்... நீ சொன்ன மாதிரி செத்தக்.. என்னை மாதிரி அவ்வளவு சீக்கிரத்தில் எதையும் விட்டுக்கொடுக்காது என்று சொல்லிக்கொண்டு இருக்கும் போதே.. செத்தக் அங்கே இருந்த அந்த வெள்ளை நிற குதிரையை அலட்சியாக ஒரு நோட்டம் விட்டப்படி தன் எஜமானிடம் சென்று தன் உரிமையை நிலை நாட்டிக்கொண்டது!!!

அதன் செய்கையை பார்த்த மேகி வாய் விட்டு சிரிக்க.. நவாப் கண்கள் மின்ன சிரிக்க.. எதற்கு சிரிக்கிறார்கள் என்று புரியாத போதும் செத்தக்கும் தன் அழுகு பற்களால் கனைத்தது!!!.

# முற்றும்